பக்தி யோகம்

மஹேச குமார சர்மா



ஸ்ரீ மஹேச குமார சர்மா

பக்தி யோகம்

(அசுவினீ குமார தத்தர் புரிந்த உபந்யாஸங்களின் ஸாராம்சம்)

தமிழாக்கியவர்

மஹேச குமார சர்மா

பதிப்பாசிரியர்

வெ. கா. ராமநாதன், பி. ஏ., பி. எல்.

சக்தி காரியாலயம்

சென்னை 14.

முதற் பதிப்பு, மே, 1949

விலை ரூ: ஐந்து
(தபால் செலவு தனி)

சென்னை ராயப்பேட்டை சக்தி பிரஸ் லிமிடெட், (சாந்தி பிரஸில்)
அச்சிடப்பெற்றது

பொருளடக்கம்

முன்னுரை

குருக்ஷேத்திரத்தில் பார்த்தன் வாயிலாக உலகுக்குக் கண்ணன் உபதேசித்த மார்க்கங்கள் கர்மயோகம், பக்தியோகம், ஞானயோகம் என மூவகைப்படும். அவற்றுள் கலியுகத்தில் தற்சமயம் மனிதன் இருக்கும் உளநிலையில் அவன் எளிதில் கடைப்பிடிக்கக் கூடியது பக்திமார்க்கமே. பக்தி யென்பது பரம்பொருளிடம் பாராட்டும் அன்பு. அந்த அன்பு எத்தகையதாக இருக்க வேண்டும்? ஸ்ரீ ஆதிசங்கரர் சிவானந்த லஹரியில் சொல்கிறார்.

'அழிஞ்சல் மரத்தின் விதை வெடித்து எங்கு சென்றிருந்தாலும் அவை தாமாகவே வந்து அந்த மரத்தையே திரும்ப அடையும் அவ்விதைகள் போலவும், அயக்காந்தத்தை அணுகும் இரும்பூசி போலவும், கணவனைப் பின்பற்றும் பதிவிரதை போலவும், மரத்தை ஆதாரவாகச் சுற்றிக்கொண்டு படரும் கொடி போலவும், கடலைத்தேடிக் கலக்கும் நதி போலவும், மனமானது ஈசனின் பாதாரவிந்தங்களை அடைவதுதான் பக்தி எனப்படும்.

'கண்ணப்ப நாயனுர் பல வழிகளிலும் அணிந்து செல்லப்பட்ட மிதியடியே பரமனுக்குப் பரிசுத்தமான கூர்ச்சம் போலாயிற்று. அவர் வாயிலிருந்து கொப்புளித்த ஜலமே கங்கைநீருக்குச் சமமாக இருந்தது. அவர் கொஞ்சம் கடித்து ருசிபார்த்த மாம்ஸமே உயர்ந்த ருசிகரமான ஆகாரமாயிற்று. பக்தியின் மகிமைதான்

என்னே! காட்டிலேயே சஞ்சரிக்கும் கண்ணப்பர் பக்தர்களுள் முதன்மையானவராகிறார்.'

இத்தகைய பக்தியின் தத்துவங்களை ஆராய்ந்து அதன் வழிகளைத் தெளிவுற எடுத்துக் கூறுவதாகும், "பக்தியோகம்" என்னும் இந்நூல்.

வங்க நாட்டுப் பெரியார் அசுவினீ குமார தத்தருடைய பிரஸங்கங்களின் ஸாராம்சமாகிய 'பக்தியோகம்' என்னும் வங்க முதனூலைத் தமிழில் அமைத்துக் கொடுத்த மஹேச குமார சர்மா என்ற மறு பெயர் வஹித்த ஸ்ரீயுத மாம்பாக்கம் குப்புஸ்வாமி அய்யரின் பெயர் தமிழ் நாட்டுக்குப் புதியதன்று. 'சுதேசமித்திரன்', 'விவேகபோதினி', 'லோகோபகாரி' முதலிய பல தமிழ்ப் பத்திரிகைகளுக்கு இந்நூற்றாண்டின் முதல் பத்து, இரண்டாவது பத்துப் பகுதிகளில் இவர் அடிக்கடி விஷயதானங்கள் செய்து, அக்காலத்துத் தமிழ் எழுத்தாளர்களில் முன்னணியில் நின்றவர். இன்னார் 'ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்,' 'ஸ்ரீ விவேகானந்த விஜயம்' எனும் முதனூல்களையும் 'ஆனந்த மடம்', 'சந்திரசேகரன்', 'நிர்மலா' முதலிய வழி நூல்களையும், 'ஸ்ரீ வால்மீகி விஜயம்' என்னும் இதிஹாஸ விமர்சனக் கட்டுரையையும், அவ்வப்போது மேற்கூறியபடி பத்திரிகைகளில் வியாஸங்கள், மொழியமைப்புக்கள் பலவற்றையும் இயற்றியுள்ளார். 'திருக்குறள்' செய்யுட்கள் பலவற்றையும் ஸம்ஸ்க்ருதத்தில் அமைத்திருக்கிறார். தமிழ், ஸம்ஸ்க்ருதம், தெலுங்கு, கன்னடம், வங்காளி, ஹிந்தி, ஹிந்துஸ்தானி, ஆங்கிலம் முதலிய பாஷைகளில் பாண்டித்யம் பெற்றவர்.

தமிழ் நாட்டினருக்கும், தமிழ் வளர்ச்சிக்கும் செயற்கரிய இத்தொண்டு செய்து போந்த இப்புலவர் பெருமான் ஆந்திர பாஷா மறுமலர்ச்சிக் காலமாகிய இந்தச் சகாப்த முத

விரண்டு பத்தாண்டுகளில் அடிக்கடி பெருமூச் செறிந்து, நமது தமிழகத்தில் இவ்வித மறுமலர்ச்சி ஏற்படும் நாள் என்னுளோ என்று ஏங்குவார். அன்புமிக்க ஆர்வத்துடன் அக்காலத்தினை அகக்கண்ணுல்,—ஆவல் கண்ணுல் என்றும் சொல்லலாம்—தீர்க்கதரிசனம் செய்த அவர் முகத்தில் நம்பிக்கைப் புன்முறுவல் அடிக்கடித் தோன்ருநிற்கும். இவ்வாண்டு, திரு மயிலைக் கபாலிக்கேணியில் நிறைந்து செறிந்து கிடக்கும் செந்தாமரை, வெண்டாமரை மலர்கள், இலைகளையொப்பப் புஸ்தகக் கடைகளில் கலைச்சித்திரங்களும், ஏனைய சித்திரங்களும் பலவித வர்ணங்களில் தீட்டப் பெற்ற கண்கவர் உறைகளுடன் சுமார் மூன்னூறு நானூறெனக் கூடிய கணக்கிலடங்காத தமிழ்ப் பத்திரிகைகளும், சஞ்சிகைகளும், மதம், கலை, அரசியல், உழவின் மேன்மை, தொழில் மாட்சி, பொருளாதார ஆராய்ச்சி, சமூகப் புரட்சி முதலிய துறைகளில் பிரசுரமாகும் நூற்களும் நிறைந்திருக்கும் கோலத்தினளாகிய தமிழ்த்தாயின் தற்போதைய மாட்சி நிலையைக் கண்டு அவர் களிநடம் புரிந்திருப்பார் என்று சிறிதும் ஐயமின்றித் திட்டமாய்க் கூறலாம்.

இவருடைய அத்யந்த நண்பர் மஹாகவி ஸ்ரீயுத திரு சுப்பிரமணிய பாரதி முதலாக எத்தனை தீந்தமிழ்க் கவிகள்! நாமக்கல் கவிஞரென்ன, ஸ்ரீயுத தேசிக விநாயகம் பிள்ளை முதலிய கவிகளென்ன! பாமரர் போற்றும் ஸ்ரீயுத கொத்தமங்கலம் சுப்புவென்ன? சிறுகதை பெருங்கதைகள் ஆசிரியைகள், ஆசிரியர்களென்ன! அரசியல் பெரியார்களென்ன! அரசியல், சமூகவியல், பொருளாதார விஷயங்கள், சுதந்திரத் தாகம், இத்யாதி சம்பந்தமாய்க் காவேரியாற்று மடை திறந்தாலென்னச் செந்தமிழ், பாமரர் வழங்கும் தமிழ் முதலிய தமிழ்நடைகளில் சொற்பொழிவுகளாற்றும் எண்ணிறந்த தலைவர்களும், தொண்டர்களும், புரட்சி வீரர்களும் அவர் அகக்கண் முன்

அன்றே காட்சி யளித்தனர் போலும்! இன்னும் தமிழ்ப் புலவர்கள், பேராசிரியர்கள், கவிகள், தமிழிலக்கிய வல்லுநர்கள் இவர்களுடைய ஆண்டு விழாக்கள், ஐம்பதாண்டு அறுபதாண்டு விழாக்கள், ஞாபகார்த்த மண்டபங்கள், நிலயங்கள், எழுத்தாளர்கள் மஹாநாடுகள் யாவும் அவர் புலன்களுக்கு அன்றே கோசரமாயின போலும்! அவர் புன்னகையின் உட்பொருள் இவையே போலும்!

இத்தகைய ஆசிரியருடைய ஜீவ்ய சரிதக் குறிப்புகள் இரண்டொன்றை இங்கு குறிப்பது மிகையாகாது. இவர் வட ஆற்காட்டு ஜில்லாவில் மாம்பாக்கம் என்னுமொரு சிறு கிராமத்தில் நல்ல சீலமும், அறிவும், பொருந்திய ஓர் ஏழைக் குடும்பத்தில் பிறந்தார். இவருக்கு முன் பிறந்த மகவுகள் அல்பாயுளால் இறந்தொழிந்தமையால், நமது வாசகர்கள் உணர்ந்திருக்கக் கூடிய பழமையானதொரு தமிழ்நாட்டு மரபை யொட்டி, இவருக்கு இவர் தாதைகள் குப்புஸ்வாமி யென நாமதேயமிட்டனர். இவர் நீடித்த ஆயுளுடன் வாழ்ந்திருக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் தம் ஆயுளை இவருக்கு அளித்ததுபோல, இவருடைய குழந்தைப் பருவத்திலேயே அவர்கள் இப் பூவுலகத்தினின்றும் நீங்கினர். இவருடைய சிறிய தந்தையார் ஸம்ஸ்க்ருத பாஷை வல்லுநர், ஸ்ரீயுத ஹநுமந்தய்யர் இவரைப் பரிவுடன் சீராய் எடுத்து வளர்த்துத் தமிழிலும், ஸம்ஸ்க்ருதத்திலும் அடிப்படைக் கல்விப் போதித்து, வேலூரில் கல்லூரியில் ஆங்கிலக் கல்வியும் பயிற்றுவித்தனர். இவர் மெற்றிக்யுலேஷன் பரீக்ஷையில் சிறப்புடன் தேறி உயர்தரக் காலேஜ் கல்விக்காகச் சென்னையை அடைந்தனர். சென்னைக்கு வந்தபின்னர் தமிழில் பாண்டித்யமும், தமிழினிடம் ஆர்வமும் இதர பாஷைகள் கற்பதில் ஊக்கமும் அதிகரித்து வந்தன. அந் நாட்களில்

சென்னையில் வேரூன்றப் பார்த்த பிரஹ்ம ஸமாஜம், ஆரிய ஸமாஜம் முதலிய இயக்கங்களிலும், ஸ்ரீ ராமகிருஷ்ண மடம் முதலிய சங்கங்களிலும், அம்மடத்தார், தியஸாபிகல் சங்கத்தார் இவர்களுடைய ஜாதிமத வேறுபாடற்ற சமபந்தி போஜனங்கள், விழாக்கள், ஹரிஜன முன்னேற்றம் இவ் வலுவல்களிலும் இவர் பாரமார்த்திகமாய் முழு மனதுடன் ஈடுபட்டு உத்ஸாஹத்துடன் சேவை புரியலானார்.

கல்லூரிப் படிப்பு முடிந்தபின்னர், இவர் சென்னைக் கடுத்த பொன்னேரியில் ஸப்ரெஜிஸ்ட்ரார் ஆபீஸில் மாதம் பதினைந்து ரூபாய்ச் சம்பளத்தில் வேலையை ஒத்துக்கொண்டார். அதற்கு முன்னரே விவாஹமாகி இவர் மனைவியுடன் இல்லறம் தொடங்கியிருந்தார்; மாத வரும்படி ஒரு பதினைந்து ரூபாயில், மனைவி, சிறிய தந்தையும் உள்ளிட்டுக் குடும்ப நிர்வாஹம் நடக்க வேண்டும். சம்பளம் குடும்பச் செலவுக்குப் போதாத காரணத்தால் இவர் சீக்கிரத்தில் அந்த ஆபீஸ் வேலையை ராஜிநாமா செய்ய வேண்டி வந்தது. ரெஜிஸ்ட்ரார் ஆபீஸ் உத்யோகத்துக்குப் பின்னர் இவர் சென்னை கவர்ன்மெண்ட் ட்ரான்ஸ்லேடர் ஆபீஸில் தமிழ், தெலுங்கு மொழிபெயர்ப்பாளர் வேலையிலமர்ந்தார்.

அந்நாட்கள் இந் நூற்றாண்டின் ஆரம்ப வருஷங்களாகும். சமூகச் சீர்திருத்தம், சுதேசியம், விதேச சாமான்கள் பஹிஷ்காரம், வங்கப்பிரிவினை எதிர்ப்பு முதலிய இயக்கங்களும், குழப்பங்களும் தலைதூக்கிய காலம். நாட்டினில் வங்காள மாகாணமும் வங்கப்பிரமுகர்களும் தலைதூக்கி நின்ற நாட்கள். ஏற்கனவே ஸ்ரீ ராமகிருஷ்ண, பிரஹ்மஸமாஜ கைங்கரியங்களில் அக்கறை கொண்டு, வங்க ஸாஹித்ய நண்பர்களின் உறவு கொண்ட நமது ஆசிரியர் மேற்கூறிய படி ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம், ஸ்ரீ விவேகானந்த விஜயம்

என்னும் மதநூல்களையும் ஆனந்தமடம், சந்திர சேகரன் என்னும் நாவல்களையும் எழுதியது அந்நாட்களில்தான் என்பதில் வியப்பொன்றுமில்லை.

மஹாகவி சுப்பிரமணிய பாரதியார்தான் இவர் தமிழில் ஆக்கிய ஆனந்த மடத்தில் வரும் வந்தேமாதர கீதத்தைத் தமிழ்ப் படுத்தியவர். சுப்பிரமணிய பாரதியாரும் இவரும் கூடி இலக்கியத் துறையில் பேச்சுத் துவக்கி விட்டால் இன்றைக்கெல்லாம் ஊண், உறக்கக் கவலையின்றி ரஸித்துக்கொண் டிருக்கலாம். இவர் ஹாஸ்யமாய்ப் பேசுவதில் சதுரர். இவர் சிங்கப்பூரிலிருந்து இங்கே தாய் நாட்டில் உள்ள உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் அவ்வப்போது எழுதிய கடிதம் ஒவ்வொன்றையும் ஸ்வாரஸ்யமான ஒரு கட்டுரை எனலாம். தமிழ்நாட்டு மெய்த் தொண்டரான 'சுதேசமித்திரன்' ஆதிப்பத்திரிகாசிரியர் ஸ்ரீயுத ஜி. சுப்பிரமணியய்யரும், தமிழன்னையின் தவப் புதல்வர்களான ஸ்ரீயுத வ. வே. சு. அய்யரும், ஸ்ரீயுத சுப்பிரமணிய சிவனும், ஸம்ஸ்க்ருதம், தமிழ், ஆங்கிலப் பாஷைகளில் நல்ல பாண்டித்யம்பெற்று 'போஜ சரித்ரம்', எனும் உயர்தர தமிழ் நாடகத்தையும், ஸமஸ்க்ருத நூல்கள் பலவற்றையும் இயற்றியவரும் சென்னை சுகுணவிலாச சபையின் ஸம்ஸ்க்ருதம், தமிழ் நாடகங்களில் இவருடன் பெரிதும் ஊக்கங் கொண்டவராயுமிருந்த ஸ்ரீயுத டி. எஸ். நாராயண சாஸ்த்ரியாரும் (தற்கால ஆசிரியர்கள், த. நா. குமாரஸ்வாமி, த. நா. ஸேநாபதி இவர்களின் தந்தையார்) இவருடைய அன்புமிக்க நண்பர்கள்.

எத்தகைய வறுமையும் கஷ்டங்களும் வந்தாலும் மனங் கலங்கியறியாத திடசித்தமும், மனோதீரமும், பதிபக்தியும், அந்யோந்ய தாம்பத்யத்துக்குரிய இலக்கணங்கள் யாவும் பொருந்திய இவரது இல்லக்கிழத்தியும், இல்லறக்கிழத்தியு

மான ஸ்ரீமதி லக்ஷ்மியம்மாள் ஒரு பெண் மகவு, இரண்டு ஆண் மக்களை விட்டு 1910-ம் ஆண்டில் உடல் நீத்தார். அந்த அம்மையாருடைய கூரிய மதியைக் கலக்காமல், அய்யர் ஒரு முக்கியமான காரியமும் செய்யார். அந்த அம்மாள் வியோகம் அவரைப் பெரிதும் வாட்டியது. சிறகொடிந்த பக்ஷியானேனே என்று பல காலமும் சொல்ல லானார்.

அந்த அம்மையார் மரித்தபின்னர் நமது ஆசிரியர், தமிழில் இலாகவமாய்க் கவி புனையும் ஆற்றலும், வசன நடையைக் கையாளுவதில் திறமையும் பொருந்திய பால ஸௌந்தரி தேவியை மணந்தார். மூத்த மனைவியின் மூன்று குழந்தைகள், இளைய தாரம் என்று குடும்பம் பெருகியதன் காரணமாக மாதவருவாய்க் காலக்ஷேபத்துக்குப் போதாமல் போக, வருவாயை அதிகரிக்கும் கருத்துடன், இவர் 1914-ம்ஆண்டில் சிங்கப்பூர் மேஜிஸ்ட்ரேட் கோர்ட்,(அப்புறம் ஸுப்ரீம் கோர்ட்) இவற்றில் பாரதபாஷா த்விபாஷியாக வேலை ஒப்புக்கொண்டார். சிங்கப்பூர் உத்யோகத்தில் வேலை அதிகமாயில்லா திருந்தமையால், இவர் தமது சுய தர்மமெனக் கருதிய கலை, தமிழ் நூற்கள், பாஷா ஞானம் இவற்றில் ஈடுபடப் போதுமான அவகாசம் இவருக்குக் கிடைத்தது. இந்த நாட்களில்தான் இவர் இந்த 'பக்தியோக' நூலைத் தமிழ்ப்படுத்தி 'லோகோபகாரி'யில் 1924ம்ஊ ஸெப்டம்பர்மீ தொடங்கி1926ம்ஊ டிஸம்பர்மீ வரைத் தொடர்ச்சியாய்ப் பிரசுரித்தார். பதினாலாண்டு சிங்கப்பூரில் வேலை பார்த்து நோய்வாய்ப் பட்டு உபகாரச்சம்பளம் பெறக்கூடிய காலவரையறைக்கு முன்னரே உபகாரச் சம்பளம் பெற்று வேலையினின்று நீங்கி, உத்யோகப் பற்று ஒழிந்த கொஞ்ச காலத்துக்குள்ளேயே, மலேயா நாட்டில் தம் இருபுதல்வர்கள் டாக்டர் நளிநாக்ஷ குமார சர்மா,

ஆசிரியர் ராஜீவாக்ஷ குமார சர்மா இவர்கள் நடுவில் 1929-ம் ஆண்டில் நற்கதி யெய்தினர்.

தற்போது, மலேயா நாட்டில் ஜோஹூர்பார் நகரில் ஜெனரல் ஆஸ்பத்திரியில் தலைமை வேலைபார்த்து வரும் இவருடைய மூத்த மகன் டாக்டர் நளிநாக்ஷ குமாரசர்மா, பத்திரிகைமூலம் பகுதி பகுதிகளாய் வெளிவந்த இந்த நூலைத் திரட்டித் தமது பிதாவின் ஞாபகார்த்தமாய்ப் புஸ்தக உருவமாக வெளியிட முன் வந்தது, நமது ஆசிரியர் 'அறிவறிந்த மக்கட்பேறு' பெற்றதன் சான்றாகும்.

நான் போய்ப் பிரார்த்தித்துக் கேட்டுக் கொண்டவுடன் மனமுகந்து இந்நூலுக்குப் பாராட்டுரை எழுதி யளித்த ப்ரஹ்மஸ்ரீ திவான்பஹதூர் கே. எஸ். ராவஸ்வாமி சாஸ்த்ரிக ளவர்களும், இந்நூலை அச்சிடுவதில் ஸ்ரீயுத க. ரா. சுப்பிர மணியன், பி. ஏ., (ஹானர்ஸ்) என்னும் இளைஞரும் செய் துள்ள உதவி 'பயன் தூக்கார் செய்த உதவி'யாகும்.

எனக்குத் தமிழ் அமுதை ஊட்டுவித்த அன்னையும், எனக்குத் தமிழ்க் கலையைப் போதித்து, 'மாதவீ கங்கணம்' எனும் நூலை எழுதும்படி என்னை ஊக்குவித்த ஆசானுமாம் இப்பெரியார், என் குருதேவராவர். இவர் நாமம் தண் தமிழைப்போல் என்றைக்கும் வாழ்வதாக!

விரோதி௵. வைகாசி௴,
கி.பி. 1949ம்௵ மே௴.
கபாலீசுவரர் மாடவீதி,
திருமயிலை, சென்னை

இப்படிக்கு

வே. கா. ராமநாதன், அட்வகேட்

பாராட்டுரை

இந்த அரிய சிறப்பு வாய்ந்த நூலுக்குப் பாராட்டுரை எழுதும் பாக்யத்தை நான் பெரும் பாக்யமாகக் கருதுகிறேன். நூலாசிரியர் மிகவும் பெருமை வாய்ந்த தேச பக்தி, தெய்வ பக்தி நிறைந்த அச்வினீ குமார தத்தர். தமிழுமைப்பாசிரியர் மஹேசகுமார சர்மாவைத் தமிழுலகில் அறியாதவர்கள், போற்றாதவர்கள் இல்லை.

அசுவினீ குமார தத்தர் அநேக ஆண்டுகளுக்கு முன் இறந்துவிட்டதால் அவருடைய தியாகத்தையும், தேசபக்தியையும் தேசத் தொண்டையும் இப்பொழுது பொது ஜனங்கள் மறந்திருக்கக்கூடும். ஆனால் அவர் வங்க தேசத்தின் பிளவைத் தவிர்க்கச் செய்த முயற்சியை அளவிட்டுக் கூற முடியாது. நம்முடைய ராஷ்டிரபதி பட்டாபி சீதாராமய்யா இயற்றிய "காங்கிரஸ் சரித்திர"த்தில் அவரைப் பற்றிப் பின்வருமாறு கூறுகிறார் :

"**Aswini Kumar Datta who was loved all over Bengal and whose memory is revered all over the country.**

(வங்க தேசம் முழுவதும் கொண்டாடும், பாரத நாடெல்லாம் வணங்கும், அசுவினீ குமார தத்தர்).

அவருக்குத் தாய்நாட்டில் இருந்த அளவுகடந்த அன்பைப்போலவே, கடவுளிடத்திலும் பரந்து ஆழ்ந்த பக்தி இருந்தது. அவருடைய பக்தி நூல்களில் "பக்தி

யோகம்'' "கிருஷ்ணர்'', என்ற இரண்டு நூல்கள் மிகவும் உயர்ந்த நூல்கள். "பக்தியோகம்'' இந்த என்ற நூலில் அச்வினீ குமார தத்தர் 1887, 1888 ஆண்டுகளில் செய்த சொற்பொழிவுகளின் சாரம் அடங்கியிருக்கின்றது.

"பக்தியோகம்'' என்ற இந்நூலில் மஹேச குமார சர்மா அவர்கள் கையாண்டிருக்கும் மொழிபெயர்ப்பு முறை மிகவும் நன்ருயிருக்கின்றது. மூல நூலில் உள்ள அருமையான விஷயங்களைக் கூட்டாமலும் குறைக்காமலும் உள்ளது உள்ளபடி கூறியிருக்கின்ருர். அந்த நூலில் உள்ள கருத்து கள் மேன்மையாகவும் நுட்பமாகவும் இருப்பதால் அதை மொழிபெயர்ப்பது மிக அரிய முயற்சி. சர்மா அவர்க ளுடைய தமிழ் நடை இனியதாகவும் எளியதாகவும் விறு விறுப்பாகவும் இருப்பது மிகவும் மெச்சத்தக்க விஷயம்.

பக்தியால் தான் சுலபமாக, விரைவாக கடவுளுடைய அருளை அடைய முடியும், கடவுளைக் காணமுடியும், கடவுளுடன் இரண்டறக் கலந்து நித்தியமான, அனந்தமான, சம்பூர்ணமான ஆனந்தத்தை அடையக்கூடும் என்ற உண்மையைத்தான் எல்லா உயர்ந்த சாஸ்திரங்களும் அறிவிக் கின்றன.

பக்த்யா நன்யயா லப்ய அஹமேவம் விதோர்ஜுன ।
ஞாதும் திரஷ்டுஞ்சதத்வேன பிரவேஷ்டுஞ்ச பரந்தப ॥

(பகவத் கீதை, XI, 54)

ஆனல் அடுத்த செய்யுளில் கண்ணன் என்ன கூறு கின்ருர்? அந்த பக்தனுடைய அடையாளங்களையும் செய்கை களையும் கூறுகின்ருர்.

மத் கர்ம கிருத் மத்ப்ர மோமத்பக்த: சங்கவர்ஜித: ।
நிர்வைர: சர்வபூதேஷு யஸ்ஸமா மேதிபாண்டவ ॥

எல்லா நற் செய்கைகளையும் கிருஷ்ணார்ப்பணமாகக் கர்ம யோக புத்தியுடன் செய்து, கடவுளே ஒப்புயர்வற்ற உண்மைப் பொருள் என்றுணர்ந்து வழிபட்டு உலகப்பற்று ஒழிந்து அஹிம்சை தர்மத்தை அவலம்பித்து வாழப்பட்டவன் தான் பக்தன், அவன் தான் கடவுளைக் கண்டவன். கீதை பன்னிரண்டாவது அத்யாயத்தில் பக்தனுடைய குணங்களை வெகு விரிவாகக் கண்ணன் கூறுகின்றார். (XII 13 — 20)

பக்தியின் உண்மை உருவம் விளக்கமாக நம்முடைய புண்ணிய நூல்களில் கூறப்பட்டிருக்கின்றது. உலகப் பொருள்களில் அறியாமையால் நாம் வைக்கும் அன்பைக் கடவுளிடத்தில் நாம் வைத்தால் அந்த அன்பு தான் பக்தி என்று பாகவதத்தில் குந்திதேவி கூறுகின்றாள். சிவானந்த லஹரியில் பக்தியின் படிகளைச் சங்காசாரியார் நன்கு கூறியிருக்கின்றார். எப்படி அங்கோல மரத்தின் விதைகள் அம்மரத்தையே சார்ந்திருக்குமோ, எப்படி இரும்பு ஊசி காந்தத்தில் ஒட்டிக்கொள்ளுமோ, எப்படி கற்புடைய மனைவி அன்புள்ள கணவனுடன் ஒன்றுபட்டிருப்பாளோ, கொடி எப்படி மரத்தைத் தழுவிக் கொள்ளுமோ, எப்படி ஆறு கடலுடன் கூடி தன்னுருவத்தை அதனிடம் சேர்பித்து அர்ப்பணம் செய்யுமோ, அப்படிக் கடவுளிடத்தில் நாம் வணங்கித் துதித்து நெருங்கி ஒன்றுபட்டிருத்தலே பக்தி என்று சங்கருடைய உபதேசம். நாரதபக்தி சூத்திரத்தில்—பக்தி "ஸாத்வஸ்மின் பரம பிரேம ரூபா". (மிகுந்த பிரேமை) என்று கூறப்பட்டிருக்கின்றது. சாண்டில்ய பக்தி சூத்திரத்தில் ஸாபரானு ரக்திரீச்

வரே (அது கடவுளிடத்தில் ஏற்படும் மிகுந்த அநுராகம்) என்று உபதேசிக்கப்பட்டிருக்கின்றது.

இந்த நித்தியமான உண்மைகள் இந்நூலில் முதல் மூன்று அத்ய்ாயங்களில் நன்கு விளங்குகின்றன. ஆனல் இந்நூலின் மிகச் சிறந்ததனவான தனிப்பட்ட குணங்கள் மூன்று. முதலாவது, மதவெறியால் போராட்டம் மேலிட்ட இக்காலத்தில் சமரசபுத்தியையும் தெய்வத்திற்குப் பல பெயர்களிருந்தாலும் தெய்வம் ஒன்றே என்ற தத்துவத்தை யும், பக்தி பல வகைப்பட்டிருந்தாலும் எல்லாவகைகளும் முத்தியை அளிக்கும் என்ற உண்மையையும் இந்த நூலில் தெளிவாகக் காணலாம். மஹேச குமார சர்மா இந்த உண்மைகளே அழகிய இனிய செந்தமிழில் பின் வருமாறு நன்கு அறிவிக்கின்ருர்:

"மதவாதங்கள் தலைதூக்கி நிற்கும் இக் காலத்திலே பற்பல மதத்தினரும் தம் தம் மதமே உயர்ந்ததென்று வாதாடுவதையே பெருந் தொழிலாகக் கொண்டிருக்கின்றனர். நம் மதத்தி னின்று வேறுபட்ட மதக் கொள்கையுடையவர் களைத் தூஷிப்பதே நமக்குப் பெரு மகிழ்ச்சி தருவதாக இருக்கிறது. வாக் சாதுரியமாகப் பேசக் கற்ற ஒருவர் பிரசங்க மேடையின்மேல் ஏறிப் பிற மதங்களை நிந்தித்து ஆர்ப்பரிக்குமளவில், சபையோர்கள் அவரைப் பரசமயக்கோளரி யென் றும், பிரதிவாதிபயங்கர குஞ்சர மென்றும் புகழ்ந்து ஆனந்த பரவசர்களாய்ச் சிரக்கம்பமும் கரதாளமும் செய்து ஆமோதிக்கிருர்கள். இப்படி நாம் மத வாதங்களில் சிக்குண்டு சமரசபுத்தி

யின்றி இடர்ப்படுவதால், மதத்தின் மூல தத்து வத்தை மறந்து விடுகிறோம். நீரிற் குமிழிபோல் நிலையற்றது இவ்வுலக வாழ்க்கை; அதிலும் நமது ஆயுள் இருப்பதோ அற்ப காலம். இந்த நிலைமை யில் நாம் உய்யும் வழி தேடாமல் கேவலம் பரஸ்பர கலகங்களினால் நம் வாழ் நாளை வீணு ளாக்குகின்றோம். ஆகவே அருமையான காலத்தை வீண் போக்காமல் சகல மதங்களிலும் ஒரே தன்மையாய் விளங்கும் பொதுவான உண்மைப் பொருளை அடைய முயல்வதே நமது கடமை யாகும்" (பக்கங்கள் 1—2).

இரண்டாவது உண்மை என்னவென்றால் நம்முடைய ஹிந்து மதத்தில் ஒன்பது விதமான பக்தியோகம், ஆறு அங்கங்களுடன் கூடின பிரபத்தியோகம் எல்லாம் மக்கள் கடவுளை அடைய பொதுவழியாகும். அதில் ஜாதிகளின் உயர்வு தாழ்வு, ஞான தாரதம்யம், வயதால் ஏற்படும் ஏற்றத் தாழ்வு, ஆண்பால் பெண்பால் என்ற வேற்றுமை முதலிய வித்தியாசங்களுக்கு இடமே இல்லை.

நாஸ்திதேஷு சாதி வித்யாரூபகுலதன
க்ரியாதி பேத:।

(நாரதபக்தி சூத்திரம் 71)

ஹிந்து மதத்திலும் சமூகத்திலும் பல வேற்றுமைகள் இருந்தாலும், பக்தியோகத்தால் அந்த மதமும் நாகரிகமும் ஒன்றுபட்டு நிற்பதால் தான் அவை பிற மதங்களாலும் பிற நாகரிகங்களாலும் பிற நாடுகளாலும் அழிவடையாமல் இப்

பொழுது பூர்ண சுதந்திரம், பூர்ண சுயராஜ்யம் பெற்று மேன்மையாக விளங்குகின்றன.

மூன்றுவது உண்மை மிகவும் முக்கியம். அதை நாம் அடிக்கடி மறந்துவிட நேரிடும். சில நூல்களில் பக்தியைப் புகழும்பொழுது, பக்தன் தவறு செய்தாலும் கடவுள் அதை மன்னித்து விடுவர் என்று கூறப்பட்டிருப் பதை நாம் காண்கிறோம். கீதையில் இந்த விஷயம் நன்கு ஆராய்ச்சி செய்து விளக்கப்பட்டிருக்கின்றது. பக்தியுள்ள வனுக்கு ஆசாரக்குறை விருந்தாலும் அவனைச் சாதுவாகக் கருதவேண்டும், அவன் விரைவில் தர்மாத்மா ஆய்விடுவான் என்று கண்ணனுடைய உபதேசம் (IX 30—34). இந்நூலில் எந்த எந்த எண்ணங்கள் சொற்கள் செயல்கள் அதர்ம மானவைகள், எவைகளைப் பக்தன் நீக்க வேண்டும் என்று அச்வினீ குமார தத்தர் நான்காவது அத்யாயத்தில் வெகு விரிவாகக் கூறியிருக்கின்றார். காமக் குரோத லோப மோஹ மதமாத்சரியங்களைத் தவிர்க்க வேண்டும். தூய்மையான வாழ்க்கை வேண்டும். அஷ்டாங்க யோகம் பக்தியோகத் திற்கு உகந்த சாதனம். புண்ணிய நதிகளில் ஸ்நானம் செய் தல், புண்ணிய க்ஷேத்திரங்களைத் தரிசனம் செய்தல், ஜபம், பாராயணம், பூஜை, தியானம், சாத்விகமான உணவு, பரோப காரம், முதலிய அருமையான சாதனங்களை விரிவாக ஐந்தா வது அத்யாயத்தில் ஆசிரியர் விவரித்திருக்கின்றார்.

இந்நூலுக்குச் சிகரம் போன்றன, ஆறு, ஏழு அத்யாயங் களும் முடிவுரையும். அவைகளில் நவவித பக்தி என்ன, சாந்ததாஸ்ய சக்ய வாத்ஸல்ய மாதுர்ய பக்திகளின் தன்மை என்ன, பக்தி எப்படிப் படிப்படியாக ஏறிப் பரமப் பிரேம பக்தியாகவும் உத்தம மாதுர்ய பக்தியாகவும் ஆனந்த ரஸமாக

வும் ஆகின்றன என்று வெகு அழகாக மோஹனமான முறையில் கூறப்பட்டுள்ளது.

மஹேச குமார சர்மா இந்தத் தமிழ்நூலில் நமக்கு ஒரு அரிய பெரிய உதவி செய்திருக்கின்றார். அச்ஶ்ரீ குமார தத்தர் மேற்கோள்களாகக் காட்டிய அரிய உபதேசங்களை ஒன்றுகூட விடாமல் அறிவித்திருப்பதுடன், தாயுமானவர், பட்டினத்தார் முதலியோரின் அமிழ்தினுமினிய தமிழ்ப் பாட்டுகளையும் சுட்டிக்காட்டி இருக்கின்றார்.

ஆகையால் நான் கூறியபடி இந்நூல் நமக்கு உய்யும் வழியைக் காட்டும் தெய்விகம் பொருந்திய தோழன். அதை நன்கு படித்துப் போற்றுவோமாக. மஹேச குமார சர்மா முடிவுரையில் கூறும் வெகு அழகு பொருந்திய சில வசனங்களை இங்கே முடிவில் கூற விரும்புகிறேன்.

> " அவன் (பக்தன்) அடிவைக்கும் நிலம் தங்கமாகும். அவன் தொடுவதெல்லாம் வயிரமாய் மாறும். அவன் பார்வை விழும் திக்குத் துருவ லோகத்தின் சோபை பெற்றுப் பூர்ண சந்திர ஜோதியுடன் திகழும். அவனுடைய அங்க சலனங்களால் நாற்றிசையும் ஸ்வர்க்கலோக பரிமளம் வீசும். அவனது வாக்கியம் ஒவ்வொன்றூம் ஆகாய கங்கையின் நீர்ப்பெருக்குப் பாரெங்கும் பாயும். அவனுடைய சிந்தை ஒவ்வொன்றூம் துயருழக்கும் இத் தரணியின் மீது அன்பு மலர் மழை பொழியும். வையகத்தே அவன் பெயரைக் கேட்டவளவில் ஆனந்த கோலாஹலம் ஆர்த்தெழும். விசும்பில் அவனுடைய விஜய துந்துபியொலி முழங்கும். மக்கள் உலகில்

மன்னர் மன்னரின் பொற்கிரீடம் அவனது அடியிணையில் புரளும். அமரருலகில் அவன் பக்கல் அமர்ந்திருக்கும் பேறு பெறுதலே பெரும் பாக்கியமென்று புத்தேளிர் கருதுவர். ஆதலால் நாமனைவரும் ஒன்று சேர்ந்து பகவானும் பக்தரும் கலந்திருக்கும் திருக் கோலத்தை ஞாலமெங்கணும் முழங்குவோம், வாரீர். எம்பெருமான் தேவரும் காணற்கரிய அத்தகையத் திருவோலக்கத்தின் உள்ளங்கவர்க் காட்சியைக் காட்டி நம்மை மயக்கி ஆட்கொள் வானாக!" (295—296)

சென்னை
1949ம் ஞு, எப்ரல் மீ, 13உ
விரோதி ஞு, சித்திரை மீ, 1உ

கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி

பக்தி யோகம்

அவதாரிகை

மாறுபடு தர்க்கம் தொடுக்க அறிவார்
    சாண் வயிற்றின் பொருட்டதாக
மண்டலமும் விண்டலமும் ஒன்றாகி
    மனதுமுல மாலாகி நிற்க அறிவார் ;
வேறுபடு வேடங்கள் கொள்ள அறிவார் ;
    ஒன்றை மௌனமெனென் றகம்வேறதாம்
வித்தை அறிவார் ; எமைப்போலவே
    சந்தைபோல் மெய்ந்நூல் விரிக்க அறிவார் ;
சிறுபுலிபோல் சீறி மூச்சைப்பிடித்து
    விழி செக்கச் சிவக்க அறிவார் ;
திரமென்று தந்தம் மதத்தையே தாமதச்
    செய்கை கொடும் உளற அறிவார் ;
ஆறுசமயங்கள் தோறும் வேறுவேறாகி
    விளையாடும் உனையாவர் அறிவார் ?
அண்டபகிரண்டமும் அடங்க ஒரு
    நிறைவாகி ஆனந்தம் ஆனபரமே.

என்று ஸ்ரீமத் தாயுமான சுவாமிகள் திருவாய்மலர்ந்தருளியபடி மதவாதங்கள் தலைதூக்கி நிற்கும் இக்காலத்திலே *பற்பல மதத்தினரும் தம்தம் மதமே உயர்ந்த தென்று வாதிடுவதையே பெருந் தொழிலாகக் கொண்டிருக்கின்றனர். நம் மதத்தினின்று வேறுபட்ட மதக் கொள்கை யுடையவர்களைத் தூஷிப்பதே நமக்குப் பெரு

* இந்தப் பிரசங்கங்கள் 1887-88-ம் வருஷத்திற் செய்யப்பட்டன

மகிழ்ச்சி தருவதாக இருக்கிறது. வாக் சாதுர்யமாகப் பேசக்கற்ற ஒருவர் பிரசங்க மேடையின் மேல் ஏறிப் பிற மதங்களை நிந்தித்து ஆர்ப்பரிக்குமளவில், சபையோர்கள் அவரைப் பரசமய கோளரியென்றும், பிரதிவாதி பயங்கர குஞ்சரமென்றும் புகழ்ந்து ஆனந்த பரவசர்களாய்ச் சிரக்கம்பமும் கரதாளமும் செய்து ஆமோதிக்கிறார்கள். இப்படி நாம் மதவாதங்களில் சிக்குண்டு சமரச புத்தியின்றி இடர்ப்படுவதால், மதத்தின் மூலதத்துவத்தை மறந்துவிடுகிறோம். நீரிற் குமிழிபோல் நிலையற்றது இவ்வுலக வாழ்க்கை; அதிலும் நமது ஆயுள் இருப்பதோ அற்பகாலம். இந்த நிலைமையில் நாம் உய்யும்வழி தேடாமல், கேவலம் பரஸ்பர கலகங்களினால் நம் வாழ்நாளை வீணாளாக்குகின்றோம். ஆகவே அருமையான காலத்தை வீண்போக்காமல் சகல மதங்களிலும் ஒரே தன்மையாய் விளங்கும் பொதுவான உண்மைப்பொருளை அடைய முயல்வதே நமது கடமையாகும். பிரதானமல்லாத புற விஷயங்களைப் பற்றியே எல்லா மத விவாதமும் நிகழ்கின்றமையால் தேங்காய்க்குள் இருக்கும் பருப்பை எடுத்துக்கொண்டு அதை மூடியிருக்கும் மேலோட்டை எப்படி எறிந்துவிடுகிறோமோ, அப்படியே மதத்தின் வெளிச் சடங்குகளைப்பற்றிய விவாதங்களை ஒழித்து, ஸாரதத்துவத்தைக் கிரஹிக்க முயல்வோம். "நிகழ்கின்ற சமயமும் அநந்தம்" என்று பெரியார் கூறியபடியே, இம் மாநிலத்திலுள்ள மதபேதங்கள் கடற்கரையிலுள்ள மணல்களைப்போல் கணக்கற்றனவாயும், மக்கள் தம்தம் ருசி பேதங்களுக்கும் பக்குவ வேறுபாட்டிற்கும் ஏற்றபடி வெவ்வேறு மதக்கொள்கைகளைத் தழுவினவர்களாயும் இருப்பினும் மானிடவர்க்கத்தார் அனைவரும் நாடிச் செல்லும் எல்லை நிலம் ஒன்றே என்பதை யாரே மறுப்பர்? அனைவராலும் முயன்று அடையத்தக்க வஸ்து ஒன்றான அந்தப் பரமபுருஷனே. அவனை உணர்வதற்கு அனைவரிடத்தும் விளங்கும் மூல சக்தியும் ஒன்றேயாம். இக் கருத்தையே ஒரு வங்கநாட்டுக் *கவி பின்வருமாறு அழகாய் விளக்கியிருக்கிறார்:—

---

*நவ விதான ப்ராஹ்ம ஸமாஜத்தைச் சேர்ந்த ஸ்ரீ த்ரைலோக்ய நாத ஸந்யால்.

"அடையக் கருதும் வஸ்து விஷயமாய் யாதொரு பேதமும் இல்லை; ஒன்றே தெய்வம்; வேதமும் ஒன்றே; யோகம், பக்தி, புண்ணியம் இவை யெல்லாம் எம்மதத்துக்கும் பொதுவேயாம் - அருளும் அன்பும் யாவர்க்கும் ஒன்றே; மனித தேகமெல்லாம் ஒரே அச்சில்தான் வார்க்கப்பட்டிருக்கிறது. சகல மனிதர்களின் நரம்புக்குழாய்களிலும் ஓடிக்கொண்டிருப்பது ஒரே சிவப்பு நிறமான இரத்தமே - மதங்களும், மார்க்கங்களும் வெவ்வேறாயிருப்பினும், அவைகளால் அடையப்படும் வஸ்துமாத்திரம் ஒன்றேயாம். ஆகவே ஸ்டீமரிலாயினும் சரி, ரெயிலிலாயினும் சரி, ஏறிப் போகவேண்டிய இடத்தைப் போய் அடைய எல்லோரும் முயலுங்கள்."

உண்மையான தத்துவ ஸாரம் இதுவே. இதை உணராமல் வீண் விதண்டாவாதம் செய்துகொண்டிருப்போமாகில், வாழ்க்கைப்பயனை இழந்துபோவதைவிட வேறு பயன் ஒன்றையும் அடையோம். 'சிவமஹிம்ந ஸ்தோத்ரம்' என்னும் வடமொழி நூலிலுள்ள அடியிற்கண்ட அருமையான (ஏழாம்) சுலோகத்தை அனைவருமே அறிந்திருக்கலாம்.

த்ரயீ, ஸாங்யம், யோக: பசுபதி மதம் வைஷ்ணவ மிதி,
ப்ரபிந்நே ப்ரஸ்நாநே பரம் இதம் அத; பத்யம் இதிச;
ருசீநாம் வைசித்ர்யாத் ருஜுகுடில நாநாபத ஜுஷாம்
ந்ருணாம் ஏகோகம்யஸ் த்வம் அஸிபயஸாம் அர்ணவ இவ.

இதன் பொருள்

வைதிகம், ஸாங்கியம், யோகம், பாசுபதம், வைஷ்ணவம் என்று பலவகைப்பட்ட மதங்களுக்குள்ளே ஒன்று சிறந்ததென்று சிலரும், இன்னொன்று சிறந்ததென்று மற்றுஞ் சிலரும் கூறுவர். ஆனால் நதிகள் நேராகவும் வளைந்தும் பற்பல வழிகளாக ஓடிக் கடைசியில் கடல் என்னும் ஒரே இடத்தில் சங்கமமாவதுபோலவே, மக்களும் அவரவர்களது ருசி பேதங்களுக்குத் தக்கபடி வெவ்வேறு நெறிகளைப் பின்பற்றினவர்களாய் இருப்பினும் அவர்கள் கடைசியில் அடையும் ஸ்தானமாயிருப்பது பரமசிவனாகிய நீயே.

ஆகையால் நமது கருத்தும் கருமமும் எம்பெருமான் பக்கலில் செல்லும்படி ஒழுகுவதே பயனுள்ளதாம்.

மணியை விட்டுவிட்டுப் பதருக்காகப் போராடுவோர் மூர்க்கரே யல்லவா?

"உரலைப்போன்ற ஒரு அசேதனப் பொருளைப் பூஜித்தாலும், துக்கமயமான இவ் வாழ்க்கைக் கடலை நீந்தி முக்திக் கரை சேரலாம் என்னும் திடமான நம்பிக்கை உனக்கு இருக்குமாயின், உலகத்தார் என்ன சொன்னாலும் கவனியாதே. நீ கண்டுகொண்ட வழியே நடந்துசெல்வாயாகில், முடிவில் அன்பின் ஆனந்தத்தை அனுபவிக்கலாம்."

என்று ஒரு வங்கநாட்டுக் கவி* கூறியிருப்பது முற்றிலும் உண்மையே.

பரிபூரண அன்போடும் பக்தி நிறைந்த இருதயத்தோடும் பகவானை எந்த ரூபமாக பாவித்துப் பிரார்த்தித்தாலும், அஞ்ஞானவிருள் நசித்து ஞானஜோதி பிரகாசிக்கும். அவனுடைய ஸாந்நித்தியம் கிடைக்கும். ஆகவே ஞானப் பிரகாசத்தை அடைய முயற்சி செய்க.

1. "கேவலம் வாதங்களினால் அந்தகாரம் அகலாது. முரட்டுத்தமனமாய்த் தோள்வலிகொண்டு மோதினாலும் அது தொலையாது. அதன்முன் ஒளிக்கதிர் சிறிது வீசுமிடத்தே அவ் அந்தகாரம் ஓசைப்படாமல் ஒழிந்துபோம்."

இந்த அந்தகாரம் ஒழியுமானால், நமது வாழ்க்கை ஞானவொளி பெற்றுத் திகழும். ஞான தேஜஸ்ஸால் பிரகாசிக்கும். உண்மையான பக்தர்கள் வீண்வாதம் செய்வதை யாரேனும் கண்டதுண்டோ? அவர்கள் சகலத்தையும் சமதிருஷ்டியுடன் நோக்குகிறார்கள். மலையின் உச்சியில் ஏறிச்சென்றவனுக்குக் கீழே இருக்கும் மரங்கள் ஒரே உயரமாகத்தான் தோன்றும்; தரையின் மேடு பள்ளங்கள் அவனுக்குத் தென்படா.

நவவிதாநப்ராஹ்ம ஸமாஜத்தின் பிரஸித்திபெற்ற பிரசாரகாகிய ஸ்ரீ பிரதாப சந்திர மஜூம்தார், ஆதி ப்ராஹ்ம ஸமாஜத்தின் பிரதான ஆசார்யராகிய ஸ்ரீமஹரிஷி தேவேந்திரநாத தாகூரை ஒருநாள் பார்க்கப் போயிருந்தபோது

* ஸ்ரீ த்ரைலோக்ய நாத ஸந்யால்.

1 கவீந்திரராகிய ஸ்ரீ ரவீந்திரநாத தாகூர் இயற்றிய மங்கல கீதி என்னும் பிரபந்தத்திலுள்ளது.

பிரஸித்தமான கிரிஸ்துமத நூல் ஒன்று மஹரிஷியின் மேஜையின் மீது இருப்பதைக் கண்டார். மஹரிஷிக்குக் கிரிஸ்து மதத்தில் விசேஷ வெறுப்பு உண்டென்பதை மஜூம்தார் அறிந்தவராதலால், அவருடைய மேஜையின் மேல் அந்தப் புஸ்தகத்தைக் கண்டு ஆச்சரியமுற்று, மஹ ரிஷியை நோக்கி, "தங்கள் மேஜையின்மேல் இந்தக் கிரிஸ்துமத நூல் இருப்பதேன்?" என்று கேட்க, அதற்கு மஹரிஷி சொல்லலானார்:—"நான் பள்ளத்திலுள்ள கழனி களில் முதலில் நடந்துபோனபோது, இந்த வரப்புக்குள் அடங்கிய நிலம் இன்னானுடையதென்றும், அதற்கடுத்த வரப்புக்குள் அடங்கிய நிலம் இன்னொருவனுடையதென் றும், இப்படியாக இந்த நிலங்களைப் பற்றி பேத ஞானமே எனக்கு உண்டாயிருந்தது. பிறகு சிறிது உயரச்சென்று மேட்டுநிலத்தின் மேல் ஏறிப் பார்த்தபோது, அந்தக் கழனிகள் தனித்தனியே இன்ன இன்ன பட்டாதார் களின் சொந்த நிலங்களென்னும் பேதபுத்தி ஒழிந்து, அவையெல்லாம் ஒரே அகன்ற நிலப்பரப்பாகவும், ஒரே பூஸ்திதிக்காரனுடையதாகவுமே தோற்றின" என்றார். ஞான பூமியின் உன்னத பீடத்தில் ஏறிவிட்ட அவருடைய விசால திருஷ்டிக்கு மத பேதங்கள் தோன்றாமல் மறைந்து விட்டன. அவ்வளவு தூரம் போவானேன்? ஸநாதன தர்மத்தை அவலம்பித்த மஹா ஞானியாகிய ஸ்ரீ ராம கிருஷ்ண பரமஹம்ஸரும் ப்ராஹ்ம ஸமாஜீயரான கேசவ சந்திர ஸேநரும் பரம மித்திரர்களாய் அளவளாவியிருக்க வில்லையா? உண்மையான பகவத் பக்தன் ஜாதி மத பேதங்களைப் பாராட்டாமல் எல்லோரையும் தாரதம்ய மின்றி; ஒரே தன்மையாய்க் கட்டித் தழுவிக்கொள்ளு கிறான்.

இவ்வுலகத்தில் ஆராய்ந்து பார்க்குமளவில், எல்லா மதத்தினரும் ஏதோ ஒரு மார்க்கத்தை அவலம்பித்து ஒரே பெரிய பொருளைத் தேடி அடைய முயன்றுகொண் டிருக் கிறார்களென்பது தெரியவரும். "ஹிந்து மதத்துக்கும் பிராஹ்ம மதத்துக்கும் பேதமென்ன?" என்று நான் ஒரு சமயம் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரைக் கேட்க, அவர், "இந்தக் கோவிலில் வாத்தியம் வாசிக்கையில், ஒரு

வன் எப்போதும் 'ஹும்' என்று ஒரே ஸ்வரமாய்ச் சுருதி வாசிக்கிறான். மற்றொருவன் பல ராகங்களை ஆலாபித்து அநேக கீர்த்தனங்களைக் கர்ணானந்தமாய் வாசிக்கிறான். இவ்விரண்டுக்குமுள்ள பேதமே ப்ராஹ்ம மதத்துக்கும் ஹிந்து மதத்துக்கும் உள்ளது. ப்ராஹ்ம மதஸ்தர்கள் கடவுளை ஒரே பாவனையில் தியானிக்கிறார்கள். ஹிந்துக்களோ அந்தக் கடவுளைப் பலவிதமாக பாவனைசெய்து நானா ரூபமாகக் கல்பித்து உபாஸனை செய்கிறார்கள். இதில் என்ன பேதம் இருக்கிறது? ஒரு பெரிய தடாகத்துக்கு நான்கு பக்கங்களிலும் தீர்த்துறைகள் உள. அந்த நான்கு துறைகளுக்கும் வெவ்வேறான நாலு பாஷைகள் பேசும் ஜனங்கள் தண்ணீர் கொண்டுபோக வருகிறார்கள். ஒரு தீர்த்துறை யண்டை போய் அங்கிருப்பவர்களை நோக்கி, "நீங்கள் எடுத்துக்கொண்டு போவதென்ன?" என்று கேட்டால், "ஜலம்" என்று சொல்வார்கள். அப்படியே இரண்டாவது துறைக்குப் போய்க் கேட்டால், "பாணி" என்றும், மூன்றாம் துறைக்குப் போய்க் கேட்டால், "வெள்ளம்" என்றும், நான்காம் துறைக்குப் போய்க் கேட்டால், "நீள்ளு" என்றும் சொல்வார்கள். ஒரே பொருளாகிய நீரை வெவ்வேறு பாஷை பேசுகிறவர்கள் வெவ்வேறு விதமாய்ப் பெயரிட்டு வழங்குகிறார்கள். அதுபோலவே ஒரே பரமபுருஷனுக்கு ஜனங்களின் ருசி பேதங்களுக்கும் ஏற்றபடி வெவ்வேறு மதங்களில் வெவ்வேறு பெயர்கள் இடப்பட்டிருக்கின்றன" என்றார். ஆகவே சகல மதங்களிலும் ஸாரமாயிருப்பது ஒன்றேயானால், மதவாதிகள் தமக்குள் பரஸ்பரம் சண்டையிட்டுக்கொண்டிருப்பதனால் என்ன பயன்? ஆகவே உத்தம புருஷார்த்தமும் சகல மதஸாரமும் ஆன பகவத் பக்தியை நாம் அனைவரும் அநுஷ்டிக்க முயல்வோமாக.

[குறிப்பு:—சுமார் தொண்ணூறு ஆண்டுகளுக்கு முன் ராஜா ராம் மோஹந ராயர் என்னும் மஹா புருஷனால் நிறுவப்பெற்ற ப்ராஹ்ம ஸமாஜம் அவருக்குப்பின் ஆதி, பாரத வர்ஷீப அல்லது நவவிதாந, ஸாதாரண ப்ராஹ்ம ஸமாஜங்களென மூன்று சாகைகளாகப் பிரிந்தது. ஆதி ஸமாஜத்துக்கு மஹரிஷி தேவேந்திரநாத தாகூர் என்பார்

தலைவராயிருந்தார். அவரது சர்வ கநிஷ்டகுமாரனே இப்பொழுது பிரஸித்திபெற்று விளங்கும் ரவீந்திரநாத தாகூர். நவவிதாந ஸமாஜத்தின் ஆசார்யரா யிருந்தவர் ஸ்ரீ கேசவ சந்திர ஸேநன். அவரது பிரியா நண்பனா யிருந்து அவரது வாழ்க்கைச் சரிதத்தையும் எழுதியவர் பிரதாப சந்திர மஜூம்தார். ஸாதாரண ப்ராஹ்ம ஸமாஜத்தின் தலைவருள் ஒருவராய் விளங்கியவர் பண்டித சிவநாத சாஸ்திரி என்பவர். ப்ராஹ்ம ஸமாஜம் ஸநாதந வைதிக தருமத்தின் உறுப்புக்களாகிய வர்ணாச்சிரம முறை, விக்கிரஹாராதனம் முதலிய அநுஷ்டானங்களை மறுப்பதாய், வைதிக ஹிந்து ஸமாஜத்தினின்று முற்றிலும் பிரிந்து நிற்கிறது.]

பக்தி என்பது யாது?

“ஸாகஸ்மை சித் பரமப்ரேம ரூபா”—“யாரிடத்திலே யாயினும் வைக்கும் ஆழ்ந்த அன்புவடிவமான உணர்ச்சியே அது,” என்று நாரத பக்தி சூத்திரத்திலும், “ஸாப ரானுரக்திரீச்வரே” — “இறைவனிடத்து கரை கடந்த காதலுடைமையே அது” என்று சாண்டில்ய சூத்திரத்திலும் பக்திக்கு லக்ஷணம் கூறப்பட்டிருக்கிறது.

இதுவே மெய்யன்பு என்றும் சொல்லப்படும். ஈசனது திருவடிகளிலே ஏகாந்தமாய்ச் செய்யப்படும் அன்புக்கே பக்தி யென்று பெயர்.

அது ராகாத்மிகா பக்தி, அஹைதுகீ பக்தி, முக்யா பக்தி என்றும் சொல்லப்படும்.

ராகாத்மிகா பக்தியின் லக்ஷணம் பக்திரஸாமிர்த ஸிந்து என்னும் நூலிலே இவ்வாறு கூறப்படுகிறது.

இஷ்டே ஸ்வாரஸிகோ ராக:
பரமா விஷ்ட்தா ப்ஹவேத்
தந்மயி யாப்ஹவேத் ப்ஹக்தி:
ஸாத்ர ராகாத் மிகோதிதா.

இதன் பொருள்: விரும்பிய பொருளினிடத்தே உள்ளம் கசிந்துருகித் ததும்பி யெழும் அன்புப் பெருக்கே ‘ராகம்’ என்று சொல்லப்படும். அத்தகைய அன்பு வடிவினதாகிய பக்திக்கே ‘ராகாத்மிகா பக்தி’ எனப் பெயர்.

“கடலை நோக்கிப் பிரவஹிப்பது எப்படி ஆற்றின் இயல்போ, நறுமணம் கமழ்வது எப்படி மலர்களின் சுபாவமோ, அப்படியே, ஈசனே, நின்னை நோக்கி உருகுவது உள்ளத்தின் இயல்பாம்.”

என்று ஒரு வங்கநாட்டு பக்தர் கீர்த்தனம் பாடியிருக்கிறார். எவ்வித முயற்சியுமின்றித் தன்னியல்பாகவே எம் பெருமான்மாட்டு உள்ளம் நைந்துருகி வாடி வருந்துவதற்கே ‘ராகாத்மிகா பக்தி’ என்று பெயர்.

இந்த ஆழ்ந்த அன்புக்கே 'அஹைதுகீ பக்தி' என்று இன்னொரு பெயரும் உண்டு. 'அஹைதுகீ' என்றால் ஹேது அல்லது வேறு விருப்பம் இல்லாதது என்று பொருள். ஆண்டவனைத் தவிர வேறெந்த வஸ்துவினிடத்தும் இச்சை வையாமல், 'புத்ரம் தேஹி, த்ஹநம் தேஹி, யசோ தேஹி,'' என்றபடி, மக்கள் வேண்டும், செல்வம் வேண்டும், புகழ் வேண்டும் என்னும் கோரிக்கைகள் இல்லாதிருப்பது மாத்திரமன்றிச் சிறந்த புருஷார்த்தமாகிய முக்தி வேண்டும் என்ற விருப்பங்கூட இல்லாமல், கேவலம் எம்பெருமானது திருவடிகளே தஞ்சம் என்று நம்பி அவனது குணானுபவத்தில் ஈடுபட்டிருப்பதே'அஹைதுகீ பக்தி,' என்பதாம்.

என்புருகி நெஞ்சம் இளகிக் கரைந்து கரைந்து
அன்புருவாய் நிற்க அலந்தேன் பராபரமே

என்றார் ஸ்ரீ தாயுமானாரும்.

ஸ்ரீ கிருஷ்ணன் சொல்லுகிறார் ஸ்ரீமத் பாகவதத்திலே,

ந பாரமேஷ்ட்ஹ்யம்,
ந மஹேந்த்ரத்ஹிஷ்ண்யம்
ந ஸார்வ ப்ஹௌமம்,
ந ரஸாத்ஹிபத்யம்,
ந யோக ஸித்த்ஹி,
ரபு நர்ப்ஹவம் வா,
மய்யர்ப்பிதாத் மேச்ச்ஹதி
மத்விநாந்யத்

11-ம் ஸ்கந்தம் 14-ம் சுலோகம்,

''என்னிடத்தில் ஆத்மாவை (தன்னை)ச் சமர்ப்பித்துவிட்டவன் சிருஷ்டிகர்த்தாவாகிய ப்ரஹ்ம தேவனது பதவியையும், த்ரிலோகாதிபதியாகிய தேவேந்திரனது ஸ்வர்க்க போகத்தையும், இவ்வுலகத்தை யெல்லாம ஒரு குடையின் கீழ் ஆள்வதாகிய ஸார்வ பௌம பதவியையும், பாதாள லோகாதிபத்தியத்தையும், அணிமாதி யோக சித்திகளையும், மீண்டும் பிறவா பேறாகிய முக்தி நிலையையுங்கூட விரும்பமாட்டான். என்னைத் தவிர வேறொன்றினிடத்தும் அவனுக்கு விருப்பம் உண்டாவதில்லை.''

பச்சை மா மலைபோல் மேனி பவளவாய்க் கமலச் செங்கண்
அச்சுதா அமர ரேற, ஆயர்தங் கொழுந்தே யென்னும்
இச்சுவை தவிர யான் போய் இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே

என்றார் ஆழ்வாரும்.

வானேயும் பெறில் வேண்டேன்
மண்ணாள்வான் மதித்தும் இரேன்,

என்றார் மாணிக்கவாசகரும்.

"பக்தி மஹா ராணியைப்போல் வீற்றிருக்க, முக்தியோ அதற்குக் கேவலம் பாங்கியைப்போல் பணிவிடை செய்கிறது."

என்று வங்க தேசத்து பக்த சிரோமணியாகிய ராமப்ரஸாதனார்* பாடியிருக்கிறார்.

யதி ப்ஹவதி முகுந்தே
ப்ஹக்திராநந்தஸாந்த்ரா,
விலுட்ஹதி சரணப்ஜே
மோக்ஷஸாம்ராஜ்ய ல்க்ஷ்மி.

"பகவானிடத்தில் ஆனந்த பரவசமான பக்தி எவனுக்கு உண்டாகிறதோ, அவனது திருவடித் தாமரைகளில் மோக்ஷ ஸாம்ராஜ்ய லக்ஷ்மி புரண்டு வந்து விழுந்து, 'என்னை எற்றுக் கொள், என்னை ஏற்றுக்கொள்' என்று ஓலமிடுகிறாள்."

உண்மையான பக்தன் முக்தியை லக்ஷ்யம் செய்வதில்லை. முக்தி தானாகவே வந்து அவனை அடைந்து அவனுடைய அநுக்கிரகம் எப்போது தனக்குக் கிடைக்குமோவென்று காத்துக் கிடக்கிறது. மோக்ஷத்தைக் கூடத் துச்சமாய் எண்ணுவதே 'அஹைதுகீ பக்தி' யின் சிறந்த தன்மையாம். ஈசன் நமக்கு இத்தனை போக்கிய வஸ்துக்களைக் கொடுத்திருக்கிறார். ஆகையால் அவனிடத்தில் பக்தி செய்யவேண்டுமென்னும் நன்றியறிதலுக்குக் கூட அஹைதுகீ பக்தியில் இடமில்லை. இந்த பக்தியிலே நன்றியறிதலுக்கு இடமே இருக்கும்பக்ஷத்தில், பெற்றுக்கொண்ட பொருள்களிடத்தில் இச்சை உண்டென்று

* இவர் ஒன்றரை நூற்றாண்டுகளுக்குமுன் இருந்தவர். இவரது கீர்த்தனங்கள் இன்றும் வங்கநாட்டில் சர்வ ஜனங்களாலும் மதித்துப் போற்றப்படுகின்றன.

ஏற்படும். அப்போது அந்த பக்தி, 'ஸஹேதுகீ பக்தி' யாகுமேயன்றி 'அஹேதுகீ பக்தி' யாகமாட்டாது. நாம் கூறிவரும் பக்தி விசேஷத்தில் ஸாக்ஷாத் பகவானைத் தவிர மற்றெந்த வஸ்துவினிடத்திலும் எள்ளளவாவது விருப்ப மென்பது கூடாதாகையால், இதுவரையில் பெற்றிருக்கிற அல்லது இனிப் பெறப்போகிற பிரயோஜனத்தை உத்தேசித்து அதற்காகச் செய்யும் பக்தி நிஷ்காமமான அஹைதுகீ பக்தியாக மாட்டாது. 'இந்தக் காரணத்தால்' 'ஆகையால்' முதலிய பதப்பிரயோகங்களுக்கு இந்த பக்தியில் இடமே யில்லை.

> "அன்புக்கென்றே நான் அன்பு செய்கிறேன்; பகவானு கிய நின்னைத் தவிர வேறெவரையும் நான் அறியேன். வேறெவரிடத்தும் அன்பும் செய்யேன்; இதுவே என் சுபாவம்."

என்று வங்கதேசத்துக் கவியொருவர் பாடியிருக்கிறார்.

> "ஆசை உன்மீதல்லால் அருளறிய வேறுமொன்றில்
> பாசம்வையேன் நின்கருணைப் பாங்கால் பராபரமே."

என்றார் தாயுமானரும்.

நிஷ்காம பக்தி அல்லது அஹைதுகீ பக்தியின் ஸாரதத்துவம் இதுவே. இந்த பக்திக்கே 'முக்ய பக்தி' யென்னும் இன்னொரு பெயர். இதைவிடச் சிறந்ததான பக்தி வேறொன்றுமில்லை. தேவரிஷியாகிய நாரதரும் மஹரிஷியாகிய சாண்டில்யரும் இந்த பக்தியையே பிரவசனம் செய்திருக்கிறார்கள்.

அதிகாரி பேதத்தை அநுசரித்துப்,பக்தியை இருவகையாகப் பிரிக்கலாம்.

முதல் வகை:—1. ராகாத்மிகா பக்தி, 2. அஹைதுகீ பக்தி, 3. முக்யா பக்தி.

இரண்டாம் வகை:—1. வைதீ (த்ஹீ) பக்தி, 2. ஸஹேதுகீ பக்தி, 3. கௌணீ பக்தி.

இரண்டாம் வகையில் காட்டி யிருக்கிற 'வைதீ பக்தி' முதலிய பெயர்களையுடைய கீழ்த்தரமான பக்திக்கு பக்தி என்ற பெயர் கேவலம் ஔபசாரிகமேயாயினும், உண்மை

யான பக்தியின் உன்னத நிலைக்கு ஏறிச்செல்லும் ஏணியில் ஒரு படியாயிருந்து நமக்கு உதவுகின்றமையால், மரியாதைக்காக அதையும் பக்தியெனக் கூறுவது மரபு. பக்தியின் லக்ஷ்யம் இவ்வளவு உயர்ந்ததாயும் கஷ்ட சாத்தியமாயும் இருக்கிறதே, இதைச் சாதிக்க நம்மால் ஆகுமாவென்று ஒருவரும் நிராசையடையக் கூடாது. மிகத் தாழ்ந்த படியிலிருந்து தொடங்கி இடைவிடாமல் ஸாதனம் செய்துகொண்டு வரும்பக்ஷத்தில், உச்சநிலைக்கு ஏறிச்செல்லலாம். குறைந்த சக்தியுள்ள மந்தாதிகாரிகள் தாழ்ந்த படியைச் சேர்ந்த பக்தியைச் சிரத்தையாய் ஸாதனம் பண்ணுவதனால், ஈசன் திருவருளால் அவர்களுக்கு உத்தம பக்தி கைகூடும். பக்தி ரஸாமிர்த ஸிந்து என்னும் நூலில் கூறியிருப்பதுபோல்,

"வைத்ஹ ப்ஹக்த்யத்ஹிகாரீது
ப்ஹாவாவிர் ப்ஹாவநாவத்ஹி,
தத்ர சாஸ்திரம் தத்ஹா தர்க்கம்
அநுகூலம் அபேக்ஷதே."

"பகவானிடத்தில் ஒருவனுக்கு இச்சை உண்டாகிறவரையில் 'வைதீ பக்தி'யை அப்பியாஸம் பண்ணவேண்டும். 'வைதீ பக்தி' யென்பது சாஸ்திரங்களை ஓதுவதனாலும் பக்தி உண்டாவதற்கு அநுகூலமான ஸம்பாஷணையினாலும் உண்டாகும்."

பகவானிடத்தில் இச்சை உண்டானால், ராகம் என்னும் ஆழ்ந்த அன்பும் உண்டாகும். முறை தவறாமல் சாஸ்திர அத்தியயனம் பண்ணுவதனாலும், சாஸ்திர சிரவணம் பண்ணுவதனாலும், பகவத் ஸ்வரூபத்தைப் பிரதிபாதிக்கும் தர்க்கங்கள் செய்வதனாலும் எம்பெருமானிடத்தில் இச்சை உண்டாகும். அதிலிருந்து பக்தி பாவனை உண்டாகும். இப்படிப்பட்ட இனிய விஷயங்களைப்பற்றி நினைக்குந்தோறும் உள்ள முருகிப் பரவசமடையும். பகவந் நாம ஸ்மரணத்தைக் கேட்டுக் கேட்டு எத்தனை கன்னெஞ்சராகிய நாஸ்திகர்கள் மஹா பக்தர்களாக மாறவில்லை?

இந்தத் தாழ்ந்த வகையைச் சேர்ந்த பக்தியானது ஏதோ ஒரு பிரயோஜனத்தை உத்தேசித்து உண்டாகிறதென்று சொன்னோமல்லவா? ஆகையால் இதற்கு

'ஹைதுகீ பக்தி' என்று பெயர். "கடவுள் எனக்கு இவ்வளவு சுகத்தையும் சம்பத்தையும் அருளியிருக்கிருர்; இன்னும் அதிகமாகவும் அநுக்கிரக்கப் போகிருர். எத்தனை தடவை அவர் என்னைக் கஷ்டத்திலிருந்தும் ஆபத்திலிருந்தும் காப்பாற்றியிருக்கிருர்! அவரைப்போல் கருணையுள்ளவர் எவர்?" என்று இவ்விதமான எண்ணத்துடன் உண்டாகும் பக்தியானது, இதுவரையில் கிடைத்துள்ள நன்மைக்காகவேனும், இனி உண்டாகவேண்டுமென்று பிரார்த்திக்கிற நன்மைக்காகவேனும் நன்றியறிதலாகச் செய்யும் பக்தியாகவும், செல்வம் வேண்டும், புகழ் வேண்டும் என்னும் இத்தகைய கோரிக்கைகளையுடையதாகவும் இருப்பதால் இது கீழ்த்தரமான பக்தியேயாம். ஆனல் இவ்விதமான தாழ்ந்த பக்தியை ஸாதனம் செய்து கொண்டே போனல், கடைசியில் 'அஹைதுகீ பக்தி' கைகூடும். பரம பாகவதனுகிய பிரஹ்லாதனிடத்தில் ஆதிமுதற்கொண்டே இந்த அஹைதுகீ பக்தி காணப்பட்டது. அவன் அல்லும் பகலும் ஹரிநாம ஸங்கீர்த்தனமே செய்து கொண்டிருந்தான்; அப்படிச் செய்வதற்குக் காரணம் என்னவென்று யாராவது கேட்டால், அவனுக்குச் சொல்லத் தெரியவில்லை. துருவனுடைய ஜீவிதத்தில் முதன்முதல் ஹைதுகீ பக்தியே உண்டாயிற்று. அதனல் பிறகு அவனுடைய உள்ளத்தில் அஹைதுகீ பக்தி சஞ்சரிக்கத் தொடங்கியது. முதலில் ராஜ்யாபேக்ஷையிஞலேயே அவன் தவஞ்செய்யத் தொடங்கினன். எம்பெருமான் அபீஷ்டவரதனென்றும், பக்தவாஞ்சா கல்பதருவென்றும், அதாவது கோரிய வரங்களைக் கொடுப்பவனென்றும், அடியார்களின் விருப்பங்களை நிறைவேற்றி வைக்கும் கற்பக விருக்ஷமென்றும் திட நிச்சயமுடையவனய், அவ்வெம்பெருமானுடைய கிருபையினல் தன் பிதாவின் ராஜ்யத்தைவிட உயர்ந்த ராஜ்ய பதவியை அடையவேண்டுமென்னும் ஆசையினல் அத்தியந்தமான பக்தியுடன் பகவானைப் பிரார்த்திக்கத் தொடங்கினன். அப்படிப் பிரார்த்திக்கவே அவனுடைய பக்தி வளர்ந்தது. அந்த பக்தி வர வர பலப்பட்டு, பகவத் குணுநுபவத்தில் அவனைச் சதா ஈடுபட்டிருக்குமாறு செய்துவிட்டபடியால், கடைசியில் எம்பெருமான் அவனுக்குப் பிரத்தியக்ஷமாகிக்

'ழுந்தாய், என்ன வரம் வேண்டும்? கேள்,' என்ற போது, அவன் திடுக்கிட்டெழுந்து 'என்ன வரம்?' என்று தானும் கேட்டான். பகவான், 'நீ எதற்காக என்னே அழைத்தாய்?' என்று வினவ, துருவன் தான் எதற்காகத் தவஞ்செய்யத் தொடங்கினனே அந்தக் காரியத்தை மறந்துவிட்டு பகவத் குணநுபவ வாரிதியில் ஆழ்ந்து, அதனல் உண்டாகிய ஆனந்தத்தை அடக்க லாற்ருதவனய் எம்பெருமானை வாய்விட்டுத் துதிக்கலானன். அத் துதியில் ததும்பிக் கரைபுரண்ட பக்தி ஞானங்களின் பரீவாஹத்தை அடியிற்கண்ட தாயுமானரின் பராபரக் கண்ணிகள் ஒருவாறு உணர்த்தும்:—

கன்ருரக் கண்டோர் கருப்பொருள் காணமல் அருள்
விண்ணு டிருந்த இன்ப வெற்பே! பராபரமே!
சிந்தித்த வெல்லாம் என் சிந்தை அறிந்தே உதவ
வந்த கருணை மழையே! பராபரமே!
ஆரா வமுதே! அரசே! ஆனந்த வெள்ளப்
பேராறே! மோனப் பெருக்கே! பராபரமே!
ஆர் அறிவார் என்ன அநந்த மறை ஓலமிடும்
பேர் அறிவே! இன்பப் பெருக்கே! பராபரமே!
எத்திக்கும் தானுகி, என் இதயத்தே யூறித்
தித்திக்கும் ஆனந்தத்-தேனே! பராபரமே!
முத்தே! பவளமே! மொய்த்த பசும் பொற்சுடரே!
சித்தே! என் உள்ளத் தெளிவே! பராபரமே!
கண்ணே! கருத்தே! என் கற்பகமே! கண் நிறைந்த
விண்ணே! ஆநந்த - வியப்பே! பராபரமே!
பார்த்த இடம் எல்லாம் பரவெளியாய்த் தோன்ற ஒரு
வார்த்தை சொல்ல வந்த மனுவே! பராபரமே!
அன்பைப் பெருக்கி என தாருயிரைக் காக்க வந்த
இன்பப் பெருக்கே! இறையே! பராபரமே!

அப்பொழுது பகவான், "நீ ராஜ்ய பதவிக்காகத் தவஞ்செய்யத் தொடங்கவில்லையா?" என்று ஞாபகப் படுத்த, துருவன் இவ்வாறு விடை கூறினன்:—

"ஸ்த்ஹா நாப்ஹிலாஷி
தபஸி ஸ்த்ஹிதோ' ஹம்
தவாம் ப்ராப்தவான்
தேவ முநீந்த்ர குஹ்யம்,

காசம் விசிநவந
ஸமவாப்ய ரத்நம்,
ஸ்வாமிந், க்ருர்த்ஹோ'ஸ்மி,
வரம் ந யாசே''
—ப்ஹத்தி ஸூத்ஹோதபம்.

"என் ஐயனே, நான் அரச பதவியைப் விரும்பித்தவஞ் செய்யத் தொடங்கியது உண்மையே. ஆனல் முனீந்திரர்களும் யோகிந்திரர்களும் கடுந்தவமியற்றியும் காணற்கரிய நின்னை யான் அடைந்தேன். கிளிஞ்சலைத் தேடிக்கொண்டிருந்த எனக்குத் திடீரென்று திவ்வியரத்தினமன்றே கிடைத்தது? ஓ ஸ்வாமி! நான் கிருதார்த்தனனேன். வேறு வரம் வேண்டேன்''

என்றான். இப்போது அவனுக்கு வேறு அபிலாஷை எதுவும் இல்லை. கேவலம் பகவானுகிய திவ்விய ரத்தினத்திலேயே அவன் மனம் லயித்துவிட்டது. கிளிஞ்சலிடம் வைத்திருந்த இச்சை போய்விட்டது. ஆஹா! என்ன அபூர்வமான பரிணாமம்! ஹைதுகீ பக்தி எங்கே பறந்தோடிப் போயிற்று? அந்த ஆழ்ந்த அன்புவடிவமான அஹைதுகீ பக்தியல்லவோ இப்பொழுது அந்த பால பாகவதனுடைய இருதயத்தில் நிறைந்து பொங்கி எழுகின்றது?

இன்னொரு பக்தனுக்கு ஜகன்மாதா பிரத்தியக்ஷமாகி—'உனக்கு என்ன வரம் வேண்டும்?' என்று கேட்டாள். உடனே அவன் பக்தி பரவசனாகி,

"மாத: கிம் வரம் அபரம் யாசே?
ஸர்வம் ஸம்பாதிதம் இதிஸத்யம்;
யத் த்வச்சரணாம்புஜம் அதிகுஹ்யம்
த்ருஷ்டம் வித்ஹிஹர மூரஹர ஜுஷ்டம்."
—ஸர்வாநந்த தரங்கிணி.

"தாயே! பிரமன், விஷ்ணு, உருத்திரன் என்னும் மும்மூர்த்திகளும் வணங்கும் நின் அரிய திருவடித் தாமரைகளைக் காணப்பெற்றபின் வேறென்ன வரத்தை நான் விரும்பப்போகிறேன்? தாயே, என் கோரிக்கைகளெல்லாம் நிறைவேறி விட்டன'' என்றான்.

நான் ஒருகால் ஹரித்வாரத்தில் பரமஹம்ஸ காமராஜ ஸ்வாமிகளைப் பார்த்து, 'தேவரீர் பகவானிடத்தில் பிரார்த்திக்கக் கூடியது ஏதாவதுண்டா?' என்று கேட்டபோது,

அவர், 'என் உள்ளம் எம்பெருமானிடத்தில் அல்லும் பகலும் பொருந்தியிருக்க வேண்டுமென்பதைவிட எனக்கு வேறு பிரார்த்தனை ஒன்றுமில்லை,' என்றார். உண்மையான பக்தன் தன் ஹ்ருதய நாதனைத் தரிசித்துக் கிருதார்த்தனாய்விட்டால், வேறென்ன வரம் விரும்புவான்? தேனீக்குத் தேன் கிடைத்துவிட்டால், தண்ணீரைப் பருக அது சிறிதேனும் ஆசைப்படுமா? மனிதன் மோஹாந்தகாரத்தில் இருக்கும்வரையில் தான் வைதகி பக்தியை அவலம்பித்து, உலகத்திலுள்ள இதர சுகங்கள் வேண்டுமென்று பகவானைப் பிரார்த்திப்பான். ஆனால் பகவத் பிரேமையின் பேரொளி அவன்மேல் வீசி, அந்தப் பிரேமையின் பரமானந்த ரஸத்தை அவன் அனுபவித்துவிட்டால், பகவானைத்தவிர வேறெதையாவது அவன் விரும்புவனோ? அப்போது கடவுளை ஏன் அவன் பிரேமிக்கிறனென்று எவரேனும் அவனைக் கேட்டால், அவன், 'என்னால் சொல்லமுடியாது; அன்புக்காகவே நான் அன்பு செய்கிறேன்,' என்றுதான் சொல்லக்கூடுமே தவிர வேறில்லை. ஆகவே, வைதகி பக்தி யென்றும், வைதீ பக்தி என்றும், கௌணீ பக்தி யென்றும் சொல்லப்பட்ட விருப்பத்துடன் கூடிய—தாழ்ந்த—பக்தியானது அவைதகீ பக்தி அல்லது நிஷ்காம பக்தியாக முதிர்ச்சியடைகிறபடியால், ராகாத்மிகா பக்தியென்னும் உயர்ந்த பக்திக்கு ஏறிச்செல்லும் ஸோபானம் அல்லது படிக்கட்டேயாகும்.

கௌணித்ரித்ஹா, குணப்ஹேதாத்,
ஆர்த்தாதி ப்ஹேதாத் வா.

கௌணீ பக்தி யென்பது குண பேதத்தினாலாவது ஆர்த்தாதி பேதத்தினாலாவது மூவகைப்படும். குண பேதத்தினால் என்பது ஸாத்விகீ, ராஜஸீ, தாமஸீ என்னும் மூவகையான பக்தியைச் சொன்னபடி, இவற்றுள் மிகக் கீழ்ப்பட்டதாகிய தாமஸீ பக்தியிலிருந்து ராஜஸீ பக்தியும், ராஜஸீ பக்தியிலிருந்து படிப்படியாக ஸாத்விகீ பக்தியும் உதயமாகும். கடைசியாக இந்த ஸாத்விகி பக்தியானது அவைதகீ அல்லது முக்ய பக்தியில் கொண்டுபோய்விடும். இதையே பகவான் கீதையிலும் சொல்லுகிறார்.

அபிசேத் ஸு-து ராசாரோ
ப்ஹஜதே மாம் அநந்யப்ஹாக்,
ஸாத்ஹுரேவ ஸ மந்தவ்ய:,
ஸம்யக் வ்யவஸிதோ ஹிஸ:
க்ஷிப்ரம் ப்ஹவதி த்ஹர்மாத்மா,
சச்வத் சாந்திம் நிகச்ச்ஹதி;
கௌந்தேய ப்ரதிஜாநீஹி
நமே ப்ஹக்த: ப்ரணச்யதி.

"அர்ஜுன, மிகுந்த துராசாரமுடையவனு யிருந்தாலும், ஒருவன் வேறு விஷயங்களில் மனத்தைச் செலுத்தாமல் என்னையே சரணமடைந்து பஜிப்பானுகில், அவனைச் சரியானபடி ஆத்ம தத்துவ மறிந்த சாது அல்லது ஞானி யென்றே கருதவேண்டும். இப்படி என்னை ஆராதிப்பவன் சிக்கிரத்தில் தர்மாத்மாவாகி நித்தியமான பரம சாந்தி நிலையை அடைகின்ருன். ஓ குந்தீ புத்திர, அப்படிப் பட்ட எனது பக்தன் என்றைக்கும் நாசமடையானென்று நிச்சயமாய் அறி."

இனி, மேற்சொல்லிய மூவகையான கௌணீ பக்தியைத் திருஷ்டாந்தவாயிலாக விவரிப்போம். பிறர் பொருளை அபஹரிக்கும் திருடர்கள் கொள்ளைக்காரர்கள் முதலிய துராத்மாக்கள் தங்கள் தீயசூழ்ச்சிகள் நிறைவேறும் பொருட்டுப் பகவானிடத்தில் செய்யும் பக்திக்குத் தாமஸீ பக்தியென்று பெயர். கொள்ளைக்காரர் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் கொள்ளையிடும் நோக்கத்துடன் புறப்படும் போது காளிபூஜை செய்வதுண்டு. இப்போதுங்கூடப் பலர் தவருன வியாஜ்யங்களில் தங்களுக்கு வெற்றி உண்டாக வேண்டு மென்னும் கருத்துடன் காளியின் நாமத்தை ஜபித்து அந்தத் தேவதையைப் பூஜிக்கிருர்கள். இவர்களே தாமஸ பக்தர்கள் அல்லது மோஹவிருளால் குருடரான பக்தர்கள் எனப்படுவர். போகாபேக்ஷையினுல் மக்கள், புகழ், செல்வம், அதிகாரம் முதலியவைகளை விரும்பியும், தங்களுக்குக் கெடுதி செய்த பகைவர்களுக்குப் பிரதியுபகாரம் செய்யக் கோரியும், கடவுளை வழிபடுகிறவர்கள் ராஜஸ பக்தர்கள் எனப்படுவர். பிரபஞ்ச போகங்களிற் சிறிதும் நாட்டமின்றிப் பரோபகார பராயணர்களாய்க் கேவலம் முக்தியை மாத்திரம் விரும்பி எம்பெருமானை ஆராதிருப்பவர்கள் ஸாத்வீக பக்தர்கள் எனப்படுவர்.

இந்த மூவகையான பக்தியும் காமம் அல்லது விருப் பத்துடன் கூடியது. முக்ய பக்தியோ நிஷ்காமமானது. இந்த முக்ய பக்தியில் முக்தி வேண்டுமென்னும் இச்சை கூடக் கிடையாது. இனி ஆர்த்தாதி பேதத்தின் பிரகார மாகவும் கௌணீ பக்தி மூவகைப்படும். இந்த பக்தியைச் செய்கிறவர்களுக்கு முறையே ஆர்த்த, ஜிஜ்ஞாஸு, அர்த் தார்த்தி என்ற பெயர்கள் வழங்கப்படும்.

ஆர்த்த பக்தி :—தாம் அகப்பட்டுக்கொண்ட விபத்தி லிருந்து தப்பித்துக்கொள்ளும் பொருட்டுக் கடவுளை நோக்கி ஓலமிட்டுக் கதறுகிறவர்களின் பக்தி ஆர்த்த பக்தி எனப்படும். நோய் வரும்பொழுதும், துக்கம் உண்டா கும்போதும், ஆபத்துக்கள் நேரிடும்காலையிலும், அவற்றி னின்றும் காப்பாற்றும்படி கடவுளைப் பிரார்த்திக்கிறோம். ஆற்றின் நடுவில் காற்று மழை அடித்துக் கப்பல் கவிழ்ந்து போகும் தறுவாயிலிருக்கும்போது நாம் எல்லோரும் நம்மை க்ஷேமமாய்க் கரை சேர்க்கும்படி கடவுளை நோக் கிக் கதறுவோம். அப்பொழுது நமக்கு ஆர்த்த பக்தர் என்று பெயர்.

ஜிஜ்ஞாஸு பக்தி :—பகவத் தத்துவத்தைப்பற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமென்னும் விருப்பத்துடன் அவ்விஷயத்தை ஆலோசித்துக்கொண்டிருப்பதற்கு ஜிஜ் ஞாஸு பக்தியென்று பெயர். அதாவது, ஆரம்பத்தில் பகவானிடத்தில் பிரேமை இல்லாவிட்டாலும், அவன் எப் படிப்பட்டவன், அவன் செய்யும் காரியங்கள் எவை என்று இவைகளைத் தெரிந்துகொள்ளும்பொருட்டு, பகவத் விஷயமாய்ப் பரிசீலனஞ் செய்வது ஜிஜ்ஞாஸு பக்தி எனப்படும். ஜிஜ்ஞாஸு, அறிய விரும்புகிறவன்.

அர்த்தார்த்தி பக்தி:—ஏதாகிலும் ஓர் அர்த்தம் அல் லது பொருளைப் பெறும்பொருட்டு பகவானைப் பிரார்த்திப்ப தற்கு அர்த்தார்த்தி பக்தி என்று பெயர். அதாவது, மக்கள் வேண்டும், செல்வம் வேண்டும், புகழ் வேண்டும் என்று பகவானைப் பிரார்த்திப்பது அர்த்தார்த்தி பக்தி எனப்படும்.

இந்த மூவகையான பக்தியும் நிகிருஷ்டம் அல்லது தாழ்ந்தபக்தியே யாகும். ஆனால் கிரமக் கிரமமாய்

ஸாதனை செய்துவரும்பக்ஷத்தில், உத்க்ருஷ்ட பக்தி அல்லது உயர்ந்த பக்தி கைகூடும். உதாரணமாக, கஷ்டங்களில் அகப்பட்டுக்கொண்டு அவற்றினின்றும் மீட்சி பெறக் கடவுளைப் பிரார்த்திக்கத் தெரிந்துகொண்டவர்கள், அந்தப் பயிற்சியை விடாமல் வைத்துக்கொண்டிருந்தால், அந்தக் கஷ்டங்கள் நீங்கின பிறகுங் கூட அவர்கள் கடவுளைச் சிந்தித்துக்கொண்டே யிருப்பார்கள். இந்தப் பழக்கம் அதிகம் ஆக ஆக, முக்கிய பக்தி யென்னும் உயர்ந்த பக்தி நிலைக்கு வருவார்கள். ஜிஜ்ஞாஸு பக்தன் ஈசுவர தத்துவத்தை விசாரிக்கத் தொடங்கி, சாஸ்திரங்களைப் படிப்பதனாலும் பிரபஞ்ச சிருஷ்டியை ஆராய்வதனாலும் கடவுளின் மகிமையை உணர்ந்து படிப்படியாய்த் தன்னை யறியாமலே அவனது கல்யாண குணாமிர்த ரஸத்தைச்சுவைப்பதில் ஈடுபட்டு, அதனால் பகவத் விஷயமான சிந்தையை விடமுடியாதவனாகி முக்கிய பக்தி நிலையை அடைவான். அதாவது, கௌணீ பக்தியானது முக்கிய பக்தியாய்ப் பரிணமிக்கும். இனி அர்த்தார்த்தி பக்தனுக்கு முக்கிய பக்தி எவ்வாறு கைகூடுமென்பதற்குத் துருவனே சிறந்த நிதர்சனம்.

முக்கிய பக்தியின் லக்ஷணத்தைத் தாயுமானார் இவ்வாறு உருக்கமாய் வர்ணித்திருக்கிறார் :—

உடல் குழைய, என்பெலாம் நெக்குருக, விழிநீர்கள்
　　ஊற்றென வெதும்பி யூற்ற,
ஊசி காந்தத்தினைக் கண்டணுகல் போலவே
　　ஓருறவும் உன்னி யுன்னிப்
படபடென நெஞ்சம் பதைத்து உள் நடுக்குறப்
　　பாடி ஆடிக் குதித்துப்
பனிமதி முகத்திலே நிலவனைய புன்னகை
　　பரப்பி, ஆர்த்தார்த் தெழுந்து
மடலவிழு மலரனைய கை விரித்துக் கூப்பி,
　　வானே! அவ்வானில் இன்ப
மழையே! மழைத்தாரை வெள்ளமே! நீடுழி
　　வாழி! என வாழ்த்தி ஏத்தும்
கடன்மடை திறந்தனைய அன்பர் அன் புக்கெளியை,
　　கன்னெஞ்ச னுக்கெளியையோ?
கருதரிய சிற்சபையில் ஆனந்த நிர்த்தமிடு
　　கருணாகரக் கடவுளே!

முதல் அத்யாயம்

முற்றிற்று

பக்தி செய்வதற்கு உரியவர் யார்?

ஸ்ரீமத் பாகவதம் பதினொருவது ஸ்கந்தத்தில் ஸ்ரீகிருஷ்ணன் சொல்லுகிறார்:—

யத்ரிச்ச்ஹயா மத்கத் ஹாதௌ
ஜாதச்ரத்த்ஹஸ்து ய: புமாந்,
ந நிர்விண்ணோ, நாதிஸக்தோ,
ப்ஹக்தியோகோ' ஸ்ய ஸித்த்ஹித.

"எவனொருவன் தற்செயலாய் எனது கதைகளைக் கேட்பதில் சிரத்தையுள்ளவனாயிருந்தும் உலக விஷயங்களில் வைராக்கியமற்றவனாகவும் அதிகப் பற்றில்லாதவனாகவும் இருக்கிறானோ, அவனே பக்தி செய்வதற்கு உரியவன். அவனுக்குப் பக்தி யோகம் கைகூடும்."

எவனுக்குக் கடவுளிடத்தில் சிரத்தை யென்பதே சிறிதும் இல்லையோ, எவனது மனம் முழுதும் ஸம்சயமென்னும் இருளால் மூடப்பட்டிருக்கிறதோ, அவன் எப்படி பக்தி ஸாதனம் செய்யமுடியும்? அப்படிப்பட்டவனுக்கு பக்தி யோகம் துர்லபமே. பக்தனாய் இருக்கவேண்டுமானால், ஒருவன் எப்போது மில்லாவிட்டாலும் சிற்சில சமயங்களிலாவது கடவுளைச் சிறிது ஸ்மரிக்கவேண்டும்.

பக்தியோகத்தில் ஜாதி, குலம், வயது முதலிய பேதங்களைப்பற்றி விசாரமே யில்லை. வயது முதிர்ந்த காலத்தில் பக்திசெய்ய வேண்டுமே யொழிய,வாலிபப் பருவத்திலாவது யௌவனப் பருவத்திலாவது கூடாதென்று சொல்வது முற்றிலும் தவறு. அப்படிக்கன்றி, வாலிபப் பருவமே பக்தி மார்க்கத்தில் பழகுவதற்கு மிகவும் தகுதியான காலம். "வாலிபப் பருவத்தில் இருதயமானது களிமண் போல் கோமளமா யிருப்பதால், பக்தியின் விதைகளை நடுவதற்கு அதுவே தகுந்த காலம். அப்பொழுது தவறிவிட்டால், முதிய வயதில் ஸம்ஸாரத்தில் மூழ்கி இருதயம் தடித்துப்போயிருக்கும்; அப்போது பக்தி விதை முளையெடுக்

காது'' என்று ராமகிருஷ்ண பரமஹம்ஸர் சொல்லுவதுண்டு. ''கிழப் பருவத்தில் கடவுளைப் பூசிக்கத் தொடங்குவது காமக்-குரோத-லோப-மோஹ-மத-மாத்ஸர்யங்களால் அனுபவித் தெறிந்துவிடப்பட்ட எச்சிற் பதார்த்தங்களைப் பகவானுக்குச் சமர்ப்பிப்பதுபோலாகும்'' என்று எனது நண்பர் ஒருவர் சொல்வதுண்டு. வாலிப காலத்தில் பக்தி செய்வது அநுசிதமென்றும், இளமையில் கல்வி கற்க வேண்டும், யௌவனத்தில் பொருள் சம்பாதிக்கவேண்டும், மூப்பில் பக்திசெய்யவேண்டு மென்றும் கிழவர்கள் பலர் சொல்லக் கேட்டிருக்கிறோம். ஆனால் பகவானுடைய கருத்து இதுவல்ல வென்பது நிச்சயம். பகவத் பக்தி செய்துகொண்டே கல்வியையும் செல்வத்தையும் சம்பாதிக்கவேண்டும். பகவத் பக்தியில்லாத கல்வியும் செல்வமும் இருந்தும் என்ன பயன்? மத விசுவாசமற்ற மனத்தில் அந்தக் கல்வியினாலும் செல்வத்தினாலும் துஷ்டத்தனத்தைத் தவிர வேறொன்றும்விருத்தி யாகாது; அதனால் கடைசிக் காலத்தில் ஐயோ! கெட்டேனே என்று பரதவிக்கவேண்டிவருமென்பதை அடியிற் கண்ட சுலோகம் நன்றாய் எடுத்துக் காட்டுகிறது:—

சிசௌ நாஸித் வாக்யம்,
ஜநநீ, தவ மந்த்ரம் ப்ரஜபிதும்,
கிசோரே வித்யாயாம்
விஷமவிஷயே திஷ்ட்ஹதி மந:
இதாநீம் ப்ஹிதோ' ஹம்
மஹிஷகள க்ஹண்டா க்ஹநாவாத்,
நிரா லம்போ லம்போ—
தர ஜனநி, கம்பாமி சரணம்?
—லம்போதர ஜநநீ ஸ்தவம்.

''விநாயகக் கடவுளை ஈன்றெடுத்த அன்னையே! எனக்குக் குழந்தைப் பருவத்தில் வார்த்தை சொல்வதற்கே சக்தியில்லாதிருந்தபடியால், உன் மந்திரத்தை ஜபிக்க முடியவில்லை. இளமையில் கல்வி கற்பதிலும், அதன் பிறகு விஷய சுகங்களை அனுபவிப்பதிலும் மனம் அழுந்தி யிருந்தபடியால், நான் எக்காலத்திலும் பக்தி செய்தேனில்லை. தாயே! இப்பொழுதோ கிழத்தனம் வந்துவிட்டபடியால், யமனேறிவரும் வாகனமாகிய எருமைக்கடாவின் கழுத்திற் கட்டிய மணிகள்

கணகணவென்று சதா சப்தித்துக்கொண் டிருப்பதைக் கேட்கக்கேட்க எனக்கு பீதி உண்டாகிறது. நிராதரவாயிருக்கிற நான் யாரைச் சரணமடைவேன் ?''

வயதுகாலத்தில் பக்தி செய்யாமல் பராமுகமா யிருந்துவிட்டுக் கிழப்பருவத்தில் மரணம் நெருங்குவதைச் சிந்தித்து நடுங்குகிறவர்களின் கதி இப்படிப்பட்டதே; வாலிபம் முதல் ஸந்மார்க்கத்தை அநுஸரித்துப் பக்தி செய்து வந்தவனோ,—'ஓ மிருத்யுவே, என்னைப் பயப்படுத்த உன்னால் முடியுமா? உன் கோர முகத்தைக் கண்டு என் மனம் சிறிதும் கலங்காது,'' என்று தைரியமா யிருப்பான்.

அல்லார்ந்த மேனியோடு குண்டுகண்
பிறையெயிற் ருபாச வடிவமான
அந்தகா, நீ ஒரு பகட்டால் பகட்டுவது
அடாதடா, காசு நம்பால் செல்லாதடா

என்றார் தாயுமானாரும். மரணமானது வாலிபர் வயோதிகர் என்ற பேதமில்லாமல் எல்லோர்க்கும் சமமாகவே சம்பவிக்கிறபடியால், நாம் எப்போதும் மரணத்துக்குச் சித்தமாயிருக்க வேண்டும்.

"யுவைவ த்ஹர்மசில: ஸ்யாத்,
அநித்யம் க்ஹலு ஜீவிதம்,
கோ ஹி ஜாநாதி கஸ்யாதய
ம்ரித்யு காலோ ப்ஹவிஷ்யதி?''

—மஹாபாரதம்.

"வாழ்க்கை சதமன்று. இன்றைக்கோ நாளைக்கோ எப்போது மரணம் சம்பவிக்குமோ யார் அறிவர்? இன்றைக்கிருப்பாரை நாளைக்கு இருப்பரென்று எண்ணவோ திடமில்லையே? வாலிபனா யிருந்தாலும் எமன் விடான்; ஆகையால் வாலிபப் பருவ முதற்கொண்டே தர்மசிலனாயிருக்க வேண்டும்.''

பக்த சூடாமணியாகிய பிரஹ்லாதன் இவ்வாறு கூறுகிறான்:—

"கௌமார ஆசரேத் ப்ராஜ்ஞோ
த்ஹர்மாந் ப்ஹாகவதாந் இஹ;
துர்லப்ஹம் மாநுஷம் ஜந்ம,
ததப்யத்ஹ்ருவம் அர்த்த்ஹதம்.

—பாகவதம்.

"மானிட ஜன்மமே துர்லபம். அப்படிப்பட்ட மானிட ஜன்மத்திலும் புருஷார்த்தத்தைப் பெறுவது இன்னமும் அரிது. ஆகையால் புத்திமான் வாலிபப் பருவத்திலேயே பாகவத தர்மங்களை ஆசரிக்கவேண்டும்."

இவ்வுலகத்தில் மஹா புருஷர்களென்று பேர்பெற்றவர்களில் ஏறக்குறைய எல்லோரும் வாலிபப் பருவத்திலேயே பகவத் பக்தி செய்தவர்கள். பாலியத்தில் பகவத் பக்தி செய்யாதொழிந்தால், பிற்காலத்தில் பரிதவிக்க வேண்டி வரும். ஆகையால் வாலிபர்கள் விருத்தர்களான பிறகு பக்தி செய்துகொள்ளலாமென்று உபேக்ஷியாயிராமல், காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளவேண்டும்.

பக்தி மார்க்கத்தில் ஜாதி குல பேதங்கள் இல்லையென்று முன்னமே சொல்லப்பட்டது.

ஆநிந்த்யயோந்ய்த்ஹிக்ரியதே

—சாண்டில்ய சூத்திரம்.

சண்டாளர் முதலிய இழி குலத்தாருக்கும் அதில் அதிகாரம் உண்டென்று கூறுகிறார் சாண்டில்ய ரிஷி. பக்தி ராஜ்யத்தில் ஜாதி குல பேதங்களைப்பற்றி விசாரிப்பதில்லை. சண்டாளனும் பகவானிடத்தில் தன் உடல் பொருளாவிகளைச் சமர்ப்பித்துவிட்டு உள்ளன்போடு உருகி அழைக்கும் பக்ஷத்தில், பகவான் அவனுக்கு இரங்காமல் இருக்க முடியுமா? பகவத் சந்நிதியில் எல்லோரும் ஸமானரே. ஜாதி பேதம் இல்லை அவ்விடத்தில். நீங்கள் எவ்வளவு உயர்ந்த குலத்தில் பிறந்தபோதிலும், உங்களை நேசிப்பதற்குச் செருப்புத் தைக்கும் பறையனுக்கு அதிகாரம் இல்லையா? அவன் உங்களை உள்ளன்புடன் நேசித்து வந்தால், நீங்கள் எத்தனை நாள் அந்த நேசத்தைத் தடுத்து நிற்க முடியும்? கங்கையாற்றில் ஓடம் விட்டுக்கொண்டிருந்த குகன் இழிகுலமாகிய வேடஜாதியில் பிறந்தவனல்லவா? அவன் ஸ்ரீ ராமரிடத்தில் அன்பு பூண்டு அவரை அடே அண்ணே, என்று நேசம் பாராட்டி அழைப்பதை இளைய பெருமாளாகிய லக்ஷ்மணன் கண்டு வெகுண்டு, ஒரு சமயம் அவன்மேல் விழுந்து அவனைக் கொல்லப் பார்த்தபோது, ஸ்ரீ ராமர் சொல்லுகிறார்—"தம்பீ, சற்றுப்

பொறு; நான் சொல்வதைக் கேள். நீ எவனைக் கொல்லப் பார்க்கிறுயோ, அவனிடத்திற் சிறிதும் தோஷமில்லை. அவன் எனக்குப் பரம மித்திரன். என்னிடத்தில் வைத்த ஆழ்ந்த அன்பினுல், அடே, அப்பா, என்று அழைக்கிறுன். அதனுல் எனக்கும் அவனிடத்தில் அத்தியந்தம் பிரியம் உண்டாகிறது. பக்தியினுல் சண்டாளனுக்கும் நான் வச மாகிறேன். பக்தியில்லாவிட்டால், பிராமணன் கூட எனக்கு வேண்டியவனுகான். பக்தியற்றவன் அமிர்தத் தைக் கொடுத்தாலும் அதை நான் ஏற்கமாட்டேன். பக்தி யோடுகூடினவன் விஷத்தைக் கொடுத்தாலும் அதை மனம் ஒப்பி அங்கீகரிப்பேன்.'' பஞ்ச வடியில் வேடஸ்திரீ யாகிய சபரி முன்னதாக ருசிபார்த்துச் சேகரித்து வைத் திருந்த எச்சிற் பழங்களை ஸ்ரீ ராமபிரான் எவ்வளவோ பிரீதியோடு புசித்தார். பக்தியினுல் சகலமும் பரிசுத்தமாய் விடுகிறது. கருட புராணம் பக்தியின் எண்வகைப் பேதங்களை எடுத்துச் சொல்லிய பிறகு இவ்வாறு கூறு கிறது:—

ப்ஹக்திர் அஷ்டவித்ஹா ஹ்யேஷா
யஸ்மிந் ம்லேச்ச்ஹோபி வர்த்ததே
ஸவிப்ரேந்த்ரோ, முநி:, ஸ்ரீமாந்,
ஸ யதி:, ஸ ச பண்டித:

"எட்டு விதமான இந்த பக்தியானது மிலேச்சனிடத்தில் காணப்பட்டாலும், அவனே சிறந்த பிராமணனும், முனி சிரேஷ்டனும், யதியும், ஞானியும் ஆய்விடுகிறுன்."

தனிகன், தரித்திரன் என்ற பேதமும் பக்தருக்குள் இல்லை. பகவான் தனவான்களின் வீடுகளுக்கு மாத்திரம் சென்று, ஏழைகளின் இல்லங்களை இகழ்வதா யிருந்தால், அவனுக்குத் 'தீனபந்து' 'பதிதபாவனன்', 'ஏழைபங்காளன்' என்னும் பெயர்கள் பொருந்துமோ? தனிகரைவிடத் தரித் திரருக்கே பக்தி ஸாதனம் செய்வது எளிதாம். தனிகரின் மனத்தைத் தீய வழிகளில் இழுக்கும் வஸ்துக்கள் நாற்புற மும் சூழ்ந்திருப்பதனுல், அவர்கள் அதர்ம வழிகளில் விழு வதற்கு அதிக இடம் இருக்கிறது. தரித்திரருக்கோ அப்ப டிப்பட்ட ஆபத்து இல்லாமையால், அவர்கள் அநாயாஸ மாய்த் தரும நெறியில் ஒழுகக்கூடும். மஹா பக்தராகிய

இயேசுகிறிஸ்து கூறுமாறு, "ஊசியின் காதில் ஒட்டகம் நுழைந்தாலும் நுழைவது எளிதாகுமேயொழியப் பணக்காரன் பரம பதத்துக்குள் பிரவேசிப்பது கஷ்டசாத்தியம்."

இது விஷயமாக நமது சாஸ்திரத்திலிருந்து ஓர் அழகிய கதையை உதாரணமாகக் கூறுகிறேன். கலிபுருஷன் பரீக்ஷித்து மஹாராஜனுடைய ராஜ்யத்தில் பிரவேசித்தபோது, அவ்வரசன் அவனைப் பார்த்து, "சர்வ அதர்மங்களுக்கும் உறைவிடமான கலிபுருஷனே, என்னுடைய ராஜ்யத்தில் இருப்பதற்கு உனக்குச் சிறிதும் இடமில்லை. ஆகையால் நீ உடனே இவ்விடத்தைவிட்டுப் போய்விட வேண்டும்" என்றான். அதைக் கேட்டுக் கலிபுருஷன் திடுக்கிட்டு, "மஹாராஜா, தாங்கள் எல்லோருக்கும் அரசனுதலால், எனக்கும் தங்கள் ராஜ்யத்தில் இருக்கத் தகுந்த பிரதேசம் கொடுத்தருளும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்," என—

அப்ஹ்ர்பர்த்த்ஹிதஸ் ததா தஸ்மை
ஸ்த்ஹாநாநி கலயே ததௌ:—
த்யூதம், பாநம், ஸ்த்ரிய: ஸூநா
யத்ர த்ஹர்மச் சதுர்வித்ஹ:.

"இவ்வாறு கேட்ட புருஷனுக்கு, 1 சூதாட்டம், 2 கள்ளுண்டல், 3 பெண்கள் கூட்டுறவு, 4 ஜீவஹிம்ஸை—ஆகிய இவைகள் நடக்கும் இடங்களில் நீ வசிக்கலாம்."

என்றான் அவ்வரசன். இதைக் கேட்ட கலிபுருஷன், இத்தனை இடங்களிலும் ஏககாலத்தில் வசிப்பது கஷ்டமென்று நினைத்து, "இந்த நால்வகைத் தீமைகளும் கூடியிருக்கும் ஒரே இடத்தை எனக்குக் காட்டவேண்டும்," என்று பிரார்த்தித்தான்.

புநச்ச யாசமாநாய
ஜாதரூபம் அதாத் ப்ரப்ஹு:,
ததோ ந்ரிதம், மதம், காமம்,
ரஜோ, வைரஞ்ச பஞ்சமம்.

இவ்வாறு கலிபுருஷன் பிரார்த்திக்க, அரசன் அந்தக் கலிபுருஷனுக்கு ஒரு பொன்னுண்டையைக் கொடுத்தான். பொன்னினிடத்தில், சூதாட்டத்தினுல் விளையும் பொய்

யுரையும், கள்ளுண்டலால் உண்டாகும் லாகிரியும், பெண்களின் கூட்டுறவால் ஏற்படும் காமமும், ஜீவஹிம்ஸையினால் ஜனிக்கும் ராஜஸ குணமும் ஆகிய இந்நான்கு துர்க்குணங்களும் ஒன்று சேர்ந்திருப்பதோடுகூடப் புதிதாகப் பகைமை அல்லது துவேஷம் என்னும் ஐந்தாவது தோஷமும் கூடியிருக்கிறது. ஆகையால் கலிபுருஷன் செல்வத்தையே தனக்கு இருப்பிடமாக்கிக் கொண்டான். சகல அனர்த்தங்களும் செல்வத்தினாலேயே சம்பவிக்கின்றனவென்பதற்குச் சிறிதும் ஐயமில்லை. எத்தனைபேர் தனிகர் சாது ஜனங்களுடன் ஸாங்கத்தியம் செய்கிறார்களோ யோசித்துப் பாருங்கள். செல்வச் செருக்குடையவர்களுக்கு ஸ்வர்க்கத்தில் ஸ்தானமில்லை. தனிகரின் படாடோபங்களினால் பகவானைப் பிரீதிசெய்விக்க முடியாது. ஆகையால் எவ்வளவு தனிகனாயினும் உள்ளம் நைந்து உருகினாலொழிய பகவானை அடைய முடியாது. தீனமாகிய இருதயத்துடன் பகவானைப் பிரார்த்திக்கிறவனே அவனுடைய திருவடித் தாமரைகளை அடைய முடியும். ஏழையின் உடையாகிய கந்தையைத் தரித்து, "தீனபந்து, நீ எங்கே இருக்கிறாய்?" என்று கதறுகிறவர்களுக்கே அவ் வேழைப் பங்காளன் பிரத்தியக்ஷமாவானேயொழிய, புறச் சடங்குகளாகிய யாக யஜ்ஞங்களால் அவனை அடைய முடியாது.

> உன்னுடைய பக்தர்களின் அன்புக்கே நீ வசமாவாய்.
> அன்பில்லாத யாக யஜ்ஞங்கள் உன்னை அறிவதற்குப் பயன்
> படா. பணம் கொடுத்து உன்னை எவன் வாங்கக்கூடும்?

என்று ஒரு வங்காளி கீர்த்தனம் கூறுகிறது.

விதுரன் பகவானுக்கு அளித்த கஞ்சி அமிர்தத்துக்குச் சமானமாயிருந்தது; ராஜாதிராஜன் அளிக்கும் அறுசுவையுண்டி அவருக்கு விஷத்துக்கு நிகராகும்.

கல்வி இல்லாமல் பகவத் பக்தி கைகூடுமாவென்று சிலருக்குச் சந்தேகம் உண்டாகலாம். கல்வியானது பக்தி யோகத்துக்குச் சாதகமென்பது வாஸ்தவமே. ஆனால் கல்வியறிவில்லாதவன் பக்தனாக முடியாதென்று சொல்வதற்கில்லை. இதற்கு ஸ்ரீராம கிருஷ்ண பரமஹம்ஸரே சிறந்த திருஷ்டாந்தம். அவருக்கு என்ன கல்வி

இருந்தது? ஆனல் அவரைப்போல் ஞானிகள் நமக்குள் எத்தனைபேர் இருந்தார்கள்? பெரிய பெரிய பண்டிதர்களெல்லாம் அவரிடம் ஞானேபதேசம் பெற்ருர்கள். பக்தியின் தீவிர வேகத்தினுல் அவருடைய இருதய கமலம் மலர்ந்தவளவில், அவருக்கு திவ்யஞானேதயம் உண்டாய் விட்டது. இவ்வாறே அநேக பக்தர்கள் எழுதப் படிக்கத் தெரியாதவர்களாயிருந்தும், பக்தர்களுக்குள் சிறந்தவர்களென்று பிரஸித்திபெற்றிருக்கிருர்கள். அவர்களெல்லோரும் பிரகிருதி விலாஸமாகிய பிரபஞ்சமென்னும் நூலைப் படித்துப் படித்து ஞானிகளானுர்கள். ராமகிருஷ்ண பரமஹம்ஸர் இந்தப் பிரபஞ்ச கிரந்தத்தை ஆராய்ந்துணர்ந்த விதமாக எந்த வித்வான்களாவது ஆராய்ந்தறிந்ததுண்டா? பக்தி உண்டாக உண்டாக ஞானமும் கூடவே உதயமாகும்.

கடவுள் எல்லோருக்கும் தாயும் தந்தையுமா யிருக்கிருர். தாய் தந்தைகளை அழைப்பதற்காக யாரேனும் கல்வி கற்கவேண்டுமா? அதற்காக எந்த சாஸ்திரம் பயில வேண்டும்? எழுத்தறிவில்லாத பக்தன் மெய்யன்பினுல் உள்ளங் குழைந்து ஜகதம்பிகையைக் கூவி யழைக்கும் போது, அவள் தன் ஸ்வரூபத்தின் சூக்ஷ்மதத்துவ ஞானத்தைப் படிப் படியாய் அவனுக்கு அநுக்கிரஹிக்கிருள். அவள் ஞான ஸ்வரூபிணியல்லவா? ஆகவே அவள் பிரத்தியக்ஷமாய்விட்டால், அந்தப் பாக்கியத்தைப்பெற்ற பக்தனுக்குச் சகல தத்துவங்களும் உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளங்குமல்லவோ? பக்தி ஒன்றிருந்தால், எதையும் சாதிக்கலா மென்பதை அடியிற்கண்ட சுலோகம் மிக அழகாய் எடுத்துக் காட்டுகிறது.

வ்யாத்ஹஸ்யாசரணம், த்ஹ்ருவஸ்ய
　　வித்யா கஜேந்த்ரஸ்ய கா? [சவயோ,
குப்ஜாயா: கிமு நாம ரூபம் அத்ஹிகம்?
　　கிம் தத் ஸுதாம்நோ த்ஹநம்?
வம்ச: கோ விதுரஸ்ய? யாதவபதேர்
　　உக்ரஸ்ய கிம் பௌருஷம்?
ப்ஹக்த்யா துஷ்யதி கேவலம். ந ச
　　ப்ஹக்திப்ரியோ மாத்ஹவ: [குணை:,

"ஒரு நொடிகூட உம்மைப் பிரிகிலேன்," என ஸ்ரீ ராமபிரானிடத்து அன்பு மேலிட்டு, 'பக்தியின் உயிர் ஈயும்

பரிவினன்' எனப் புகழ்பெற்ற குகனென்னும் வேட னுடைய (ஜாதி) ஒழுக்கம் எப்படிப்பட்டது? அழகிய தளிர் போன்ற சிறிய அடியிணைச் சிவக்கப் பசுமையான தளிர்களை யெல்லாம் குழையச் செய்கிற வெம்மையான கானகத்திற் சென்று தவம்புரிந்த இளங் குழந்தையாகிய துருவனுடைய வயதென்ன? முதலை வாயில் அகப்பட்டு, அதினின்றும் தன் னைக் காப்பாற்றுமாறு ஆதிமூலமே யென்று கதறி ஓலமிட்ட கஜேந்திரனுக்கு என்ன கல்வி இருந்தது? ஸ்ரீ கிருஷ்ணன் மதுராபுரியில் முதலில்பிரவேசித்தபோது அவருக்குச்சந்தனம் முதலிய பரிமள திரவியங்களைக் கொடுத்து உபசரித்து அவ ருடைய அருளைப்பெற்ற குப்ஜா என்னும் கூனியின் சௌந் தரியமென்ன? ஸ்ரீகிருஷ்ணனது பரம மித்திரரும் மகா பக் தருமான குசேலரென்னும் ஸுதாமாவுக்கு என்ன செல்வம் இருந்தது? மஹா தார்மிகனும் பரம பாகவதனுமான விதுர னுடைய வம்சமென்ன? கம்ஸனது பிதாவும் * யாதவபதியு மாகிய உக்ரஸேனனுக்கு என்ன பராக்கிரமம் இருந்தது? அப்படிக்கிருந்தும், எம்பெருமான் இவர்களிடத்தில் விசேஷ கிருபை காட்டினரல்லவா? பக்திப் பிரியனாகிய மாதவன் கேவலம் பக்தியினால் ஸந்துஷ்டியடைகிறானே யொழிய இதர குணங்களை அபேக்ஷிப்பதில்லை.

அவனை அடையும் வழி ஆழ்ந்த பக்தியே யன்றி தேகத்தை வாட்டும் கடுந் தவங்களல்ல. இதற்குத் திருஷ் டாந்தமாக ஒரு கதையை உதாஹரிக்கிறேன் :—

ஒருநாள் தேவ ரிஷியாகிய நாரதர் மகா விஷ்ணுவை தரிசிக்கும் பொருட்டுப் போய்க்கொண்டிருந்தார். வழி யில் ஒரு யோகி கடுந் தவம்புரிந்து, அதனால் அவருடைய தேகத்தில் பாதிப் பாகம் புற்றினால் மூடப்பட் டிருப்பதைக் கண்டார். அந்த யோகி நாரதரைக் கூவி யழைத்து, "ஸ்வாமி! நான் பகவானைக் குறித்துக் கோரமான தவம் செய்துகொண்டிருக்கிறேன். எனக்கு அவருடைய திரு

---

* 'யது' என்னும் சந்திரகுல க்ஷத்திரியனது வம்சத்திற் பிறந் தவர் யாதவர். ஆகவே ஸ்ரீகிருஷ்ணன் யாதவன். அவரை வளர்த்த நந்தகோபன் யாதவனல்ல; இடையனே. தென்னாட்டில் இடை யர்கள் தம்மை யாதவர்கள் என்று சொல்லிக்கொள்ளுவதற்கு ஆதாரப் பிரமாணம் விளங்கவில்லை. இடையர் என்பதில் இழிவும் இல்லை; ஜன சமூகத்தில் மத்தியம ஸ்தானம் வகிக்கிறவர்கள் என்று பொருள்படுகின்றமையால்.

வருள் கிடைக்க இன்னும் எவ்வளவு காலம் செல்லு மென்று கேட்டுக்கொண்டு வாரும்'' என்று சொல்லி யனுப்பினர். தேவ ரிஷியும் அப்படியே ஆகட்டுமென்று சொல்லிச் சிறிது தூரம் போவதற்குள், பேயனைப்போல் தோற்றிய சாங்கிராமன் என்பவன் ஓரிடத்தில் பிரஹ்மா னந்தமாய் உட்கார்ந்துகொண்டு கஞ்சா குடித்திருப்ப தைக் கண்டார். சாங்கிராமன் தேவரிஷியைப் பார்த்து, "எங்கே போகிறீர், ஸ்வாமி!" என்று கேட்டான். அதற்கு அவர் தாம் வைகுண்டம் போவதாகச் சொல்ல, சாங்கிராமன் மஹா ஆனந்தத்துடன், "நல்லது,

> ப்ஹஜந பூஜந ஸாத்ஹந விநா
> அமார் கஞ்ஜா ப்ஹிஜவே கிநா ?

> பஜனை, பூஜை, ஸாதனம் இவை ஒன்றும் இல்லாமல்
> என்னுடைய கஞ்சா வைகுண்டத்துக்கு வரமுடியுமா ?

என்று உன் சாமியைக் கேள்'' என்றான். நாரதர் அதற் கும் ஒப்புக்கொண்டு, வைகுண்டநாதன் சந்நிதிக்குச் சென்று, இருவருடைய பிரார்த்தனைகளையும் தெரிவித்தார். சாங்கிராமனுடைய பெயர் காதில் விழுந்தமாத்திரத்தில், வைகுண்ட நாதனது கண்களிலிருந்து தாரை தாரையாக நீர் பெருக, "வத்ஸா, நாரதா! சாங்கிராமனைப் போன்ற உண்மையான பக்தன் இவ்வுலகத்தில் வேறெங்கே இருக் கிறான்? இன்னொரு மனிதனைப் பற்றிச் சொன்னாயே; அந்த யோகி யாரோ எனக்குத் தெரியாதே'' என்றார் பகவான். இந்த வாக்கியங்களைக் கேட்டு நாரதர் திரும்பி வரும்போது, பகவான் சொன்னதை சாங்கிராமனிடம் சொல்ல, அவன் ஆனந்தக் கூத்தாடிப் பாடத் தொடங்கி னான்.

> சாந்திராம துஇ ப்கல பாஜா
> கோலோகே தோர
> ப்ஹிஜலோ கஞ்ஜா.

> "ஓ சாங்கிராமா, உன்னுடைய கஞ்சாவுக்கு வைகுண் டத்திலும் இடம் கிடைத்துவிட்டது. இனி நீ ஆனந்தமாய் இருக்கலாம்."

இவ்வாறுதான் உண்மையான பக்தி சித்திபெறும். ஏனெ னில் பக்திக்கு ஜாதி, குலம், வயது, செல்வம், கல்வி முத

-ஷிய எவையும் வேண்டப்படுவதில்லை. நாரத பக்தி சூத்திரமும்,

நாஸ்தி தேஷு ஜாதிவித்யாரூப
குலத்ஹந க்ரியாதி ப்ஹேத:

அதாவது, "பக்தர்களுக்குள் ஜாதி, கல்வி, அழகு, குலம், செல்வம், செய்கை முதலியவற்றின் பேதத்தைக் குறித்து விசாரிப்பதில்லை" என்று கூறுகிறது. ஆகவே பக்தர்களுக்குள், பிராமணனென்றும், சூத்திரனென்றும், சண்டாளனென்றும், மிலேச்சனென்றும் வேற்றுமை எப்படி ஏற்படும்? அவர்கள் சுரூபம், குரூபம், பண்டிதன், மூர்க்கன், தநிகன், தரித்திரன் என்னும் பேதங்களைப் பாராட்டும்பக்ஷத்தில், இவ்வுலகில் உபசாந்திக்கே இடமில்லை. பகவானுக்கு எல்லாரும் சமமாயிருப்பது போலவே பக்தர்களுக்கும் யாவரும் சமமானவர்களே.

ஸம்ஸாரத்தில் அழுந்தியிருப்பவர்கள் பக்தராவதற்கு மார்க்கமில்லையென்று சிலர் நினைக்கக்கூடும். ஆனால் ஸம ஸாரத்தில் இருந்துகொண்டே பக்தராயிருக்கக்கூடுமென்பதற்கு அநேக திருஷ்டாந்தங்கள் கூறலாம். ராமாநந்த ராய் என்பவன் ஒடிஸ்ஸா* நாட்டரசனுக்கு திவானாயிருந்தான். ஒரு பெருத்த ராஜ்யத்தின் பாரமெல்லாம் அவன் தலைமேல் சுமத்தப்பட்டிருந்தது. அப்படியிருந்தும் கௌரங்கர் என்னும் சைதந்ய ஸ்வாமி அவனைச் சிறந்த பக்தனென்று கருதிக் கௌரவித்தார். ஸ்ரீ சைதந்ய ஸ்வாமியின் மற்றொரு சிஷ்யனாகிய நித்யாநந்தன் என்பவன் கிருஹஸ்தாசிரமத்தைக் கைக்கொண்டான். புண்டரீக வித்யாநிதியைப் பார்க்கும்பொருட்டு ஒருநாள் முகுந்தன் என்னும் பக்தன் கதாதரன் என்பவனை அழைத்துக்

---

* இச் சொல் இங்கிலீஷில் 'ஓரிஸா' என்றிருப்பதைப் பார்த்துத் தமிழிலும் 'ஒரிஸ்ஸா' என்றெழுதுகிறார்கள். இது தப்பு. 'வட கன்னடம்' 'தென் கன்னடம்' என்றெழுதாது ஆங்கிலத்தில் போல 'வட கானரா' 'தென் கானரா' என்றெழுதினால் எப்படி தப்பாகுமோ அப்படி. ஒடிஸ்ஸாவுக்கு 'உத்கலம்' என்று வடமொழியில் பெயருண்டு. அது உட்கால் என்று இங்கிலீஷிலிருப்பதைத் தமிழ்ப் பத்திரிகைகளில் 'உதகால்' என்று அபத்தமாய் எழுதுகிறார்கள்.

கொண்டு போனான். இவர்கள் வித்யாநிதியிடம் போய்ப் பார்க்கும் சமயத்தில், அவன் அரை முழம் உயரமுள்ள பால்போல் வெண்ணிறமான மெத்தை விரித்து அதன் மேல் உல்லாஸமாய் உட்கார்ந்து தாம்பூலம் மென்று கொண்டிருந்தான். அந்த அறை முழுவதும் சுகந்தம் வீசிக்கொண்டு சகலவித போக்கிய வஸ்துக்களாலும் நிறைந்திருந்தது. அக்காலத்தில் புண்டரீக வித்யாநிதி மகா பக்தனென்று பிரஸித்திபெற்றிருந்தபடியால், அவனை இந்தக் கோலத்தில் பார்க்கவே, கதாதரனுக்குச் சிறிது அதிருப்தியும் மதிப்புக் குறைவும் உண்டாயின. முகுந்தன் இதை சூக்ஷ்மமாய்த் தெரிந்துகொண்டு, உடனே ஹரிநாம ஸங்கீர்த்தனம் செய்யத்தொடங்கினான். உடனே வித்யாநிதி உள்ளங் குழைந்து பகவத் குணநுப வத்தில் ஈடுபட்டுப் பரவசமடைந்து மெய்ம்மறந்து கீழே சாய்ந்துவிட்டான். ஹரிநாம கீர்த்தனம் முடிந்தபிறகு, அந்த மஹா பக்தனிடத்தில் கதாதரன் தான் செய்த அபசாரத்துக்காக மிகவும் வருந்தி, அவனிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு, அந்த அபசாரத்துக்குப் பிராயச்சித்த மாக அவனுக்குச் சிஷ்யனானான்.

லௌகிக காரியங்களைச் செய்துகொண்டு, ஸம்ஸாரத்திலுள்ளவர்கள் ஏன் பக்தர்களாகக்கூடாது? இந்த உலகம் கடவுளின் சிருஷ்டி யல்லவா? சயித்தானுடைய ராஜ்யமல்லவே. நமக்குத் தாய் தந்தைகளையும் மற்றுமுள்ள பந்து வர்க்கத்தையும் கடவுள் அருளியிருக்கிறபடியால், அவனது திருவடித் தாமரைகளில் நமது மனத்தை நிறுத்தி ஸம்ஸார காரியங்களைச் செய்யவேண்டும். ஸம்ஸார ஸம்பந்தமான சகல காரியங்களும் அவனுடையவைகளே யென்று கருதி அவைகளை அவனுடைய கைங்கரிய ரூபமாக நடத்திவந்தால், பாபமென்பது சிறிதும் அணுகாது. புத்தியும் சஞ்சலமுறாது; அப்படிப்பட்டவர்களுடைய இருதயம் சதா ஆனந்த பூர்த்தியாயிருக்கும். ஒருவன் லௌகிக காரியங்களில் எவ்வளவு ஸம்பந்தப்பட்டிருந்தபோதிலும், அவனுடைய நெஞ்சம் மாத்திரம் பகவானிடத்தே பொருந்தி யிருந்தால், எத்தகைய துன்பங்களும் அவனை அசைத்தல் முடியாது.

புங்க்ஹாநு புங்க்ஹ விஷயாந் உபப்ஹோ க மாநோ
த்ஸீரோ நமுஞ்சதி முகுந்த பதார விந்தம்
ஸங்கீத வாத்ய கதிதா நவசம் கதாபி
மௌலிஸ்த்ஹ கும்ப்ஹ பரிரக்ஷணத் ஸீர் நடீவ

"ஒரு நாட்டியப் பெண்ணானவள் பாட்டுக்கும் வாத்தியத்துக்கும் தாளத்துக்கும் பொருந்தும்படியாக நடனம் செய்துகொண்டிருக்கையிலும், தன் தலைமேலுள்ள குடத்தை விழவொட்டாமல் ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்வதுபோலவே, ஸ்திரமான பக்தியுள்ளவன் அளவற்ற போகங்களை அனுபவித்துக்கொண்டிருந்தாலும், எம்பெருமானது பாதாரவிந்தங்களை அவன் விடாமல் பற்றிக்கொண்டே யிருப்பான். அவன் மனது எப்பொழுதும் அந்தத் திருவடிக் கமலங்களிலேயே ஈடுபட்டிருக்கும்."

சுகப்பிரஹ்ம ரிஷி யோகாப்பியாஸம் கற்றுக்கொள்வதற்காக ஜநக மஹாராஜனிடம் சென்றபோது, அவ்வரசனுடைய ஐசுவரியத்தைக் கண்டு, இவ்வளவு ஸம்ஸாரத்தில் அழுந்தி யிருப்பவன் எப்படி யோகியாயிருக்க முடியும்? என்று சங்கிக்கலானார். ஜநக பூபதி சுகப்பிரஹ்மத்தின் கருத்தை அறிந்து, எண்ணெய் நிறைந்த ஒரு பாத்திரத்தை அவரிடம் கொடுத்து, 'நீர் இந்தப் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு என்னுடைய மிதிலைப் பட்டணம் முழுவதும் சுற்றிப்பார்த்து வரவேண்டும்; அதிலிருந்து ஒரு துளி எண்ணெயாவது தரையில் விழக் கூடாது. ஜாக்கிரதை" என்றான். சுகர் அப்படியே சென்று அந்தத் தைலப்பாத்திரத்துடன் ஜநகனிடம் திரும்பி வந்தார். அரசன் அவரைப் பார்த்து, "வழியில் நீர் பார்த்ததை யெல்லாம் சொல்லும்"—என்று கேட்க, சுகர் மிதிலையில் தாம் கண்டதையெல்லாம் ஒன்று விடாமல் ஸவிஸ்தாரமாய்க் கூறி, ஒரு துளி எண்ணெயாவது கீழே விழவில்லை யென்றார். "நீர் இந்தப் பாத்திரத்துடன் பட்டணத்தில் இத்தனை விநோதக் காட்சிகளையும் பார்த்துக்கொண்டு திரிகையிலும், ஒரு பொட்டு எண்ணெய் கூடக் கீழே விழாமல் இருந்ததெப்படி?" என்று மன்னன் கேட்க, சுகப் பிரஹ்ம ரிஷி, "நான் அங்குமிங்கும் பார்த்துக்கொண்டு திரிந்தாலும், என் மனதெல்லாம்

எண்ணெய்க் கிண்ணத்தின் மேலேயே இருந்தது. அதனால் ஒரு துளியாவது கீழே சிந்தவில்லை''—என்றார். அதன் மேல் ஜநக மகாராஜன்—''நானும் அவ்விதமாகவே லௌகிக காரியங்களை நடத்திவருகிறேன். நான் கிருஹஸ்தாசிரமத்தில் அமர்ந்து ராஜ்ய வியவஹாரங்களை நிர்வஹித்து வந்தபோதிலும், என் மனது எப்பொழுதும் எம்பெருமானுடைய செல்வத் திருவடிகளிலேயே பொருந்தி யிருக்கிறது''—என்றார்.

ஸம்ஸாரத்தில் இருப்பவன் இவ்விதமான பக்தனாய் இருப்பதற்கே முயலவேண்டும். ஸம்ஸார காரியங்களைச் செய்துகொண்டிருக்கையிலும் கடவுளை இடைவிடாமல் சிந்தித்துக்கொண்டிருப்பவனே பரம பக்தன். அவனுக்கு எவ்வித பயமுமில்லை. அவன் சம்பத்தைக் கண்டு சந்தோஷமாவது, விபத்தைக் கண்டு துக்கமாவது படமாட்டான். நம் தலைமேல் சிறிய ஒரு வஸ்து விழுந்தாலும் நாம் ஹா ஹா வென்று கதறுகிறோம். அப்படிப்பட்டவர்களின் தலைமேல் ஹிமாலய பர்வதமே பெயர்ந்து விழுந்தாலும் அவர்கள் சலிக்கமாட்டார்கள். ஜநக மகாராஜன் சொல்லுகிறார் :—

அநந்தம் பத மே வித்தம்
யஸ்ய மே நாஸ்தி கிஞ்சன ;
மித்ஹிலாயாம் ப்ரதக்தஹாயாம்
ந மே தஹ்யதி கிஞ்சன.

"அளவற்ற செல்வம் எனக்கிருந்தாலும், எனதென்று பாராட்டக்கூடியது எனக்கு ஒன்றுமில்லை. மிதிலைப் பட்டணம் முழுதும் எரிந்துபோனாலும், எனக்கு ஒரு நஷ்டமும் உண்டாகாது."

பகவத்கீதையில் சொல்லியபடி,

து : க்ஹேஷ் வநுத்விக்நமநா ;
ஸுக்ஹேஷு விகதஸ்ப்ரிஹ :.

அதாவது, துக்கங்களினால் மனச்சோர்வு அடையாமலும் சுகங்களுக்கு ஆசைகொள்ளாமலும் இருக்கிற சில தீர புருஷர்களை நானே நேரில் அறிவேன். எனக்குத் தெரிந்த ஒரு மஹா புருஷன் கிருஹஸ்தர். அவருடைய

மூத்த குமாரன் கல்கத்தா வைத்திய கல்லூரியில் உயர்ந்த வகுப்பில் படித்துக்கொண்டிருந்தான்; மஹா புத்தி சாலி, எல்லாப் பரீக்ஷைகளிலும் 'மெடல்'களும் வெகுமதி களும் வாங்கினவன். வயோதிகரான அவனுடைய பிதா அவனையே தன் தள்ளாத காலத்துக்குத் தக்க ஆதர வென்று நம்பியிருந்தார். அப்படிப்பட்டவன் இருபத் தைந்தாம் வயதில் இறந்துபோனான். அவன் இறந்து போன தினத்தில் அவர்களுடைய வீட்டில் எங்களுடைய சபையொன்று கூடவேண்டியதாயிருந்தது. என் னுடைய ஸஹபாடிகள் இருவர் ஸந்தியா காலத்துக்குச் சிறிது முன் அவர்கள் வீட்டுக்குப் போனபோது, கிழவர் வீட்டின் முற்றத்தில் உட்கார்ந்துகொண்டு சில சிநேகி தர்களுடன் பேசிக்கொண்டிருந்தார். என்னுடைய நண் பர்கள் சற்றுநேரம் அவர்களுடன் இருந்தபிறகு, அவர் களில் ஒருவன் சபை கூடவேண்டிய அறைக்கு வழக்கம் போலச் சென்றான். அப்போது அந்தக் கிழவர் ஏன் அங்கே போகிறாய் என்று கேட்க, அவன் சமாசாரப் பத்திரிகை கொண்டுவருவதற்காகப் போகிறேன் என்று சொல்லவே, அந்தப் பெரியவர்,—"தயவுசெய்து அந்த அறைக்குள் போகவேண்டாம்; அந்த அறையில் என் மகன் இன்று நாலு மணிக்கு இறந்துபோனான்"—என்று நிதானமாய்ச் சொன்னார். இவ்விதமாக வெளியிடப்பட்ட மரணச் செய்தியைக் கேட்டு என்னுடைய ஸஹபாடி "நயௌ ந தஸ்த்ஹௌ" போகவும்மாட்டாமல் நிற்கவும் மாட்டாமல் ஒன்றும் தோன்றாது ஆச்சரியத்தால் அசை வற்று நின்றான்.

"இது என்ன விந்தை! இப்படிப்பட்ட குணமணி யான புத்திரனைப் பறிகொடுத்தும், ஒரு துளி கண்ணீரே னும் விடாமல் இவ்வளவு ஸ்திர சித்தத்துடன் இருக்கும் காட்சியை இதற்குமுன் நான் என்றும் கண்டதில்லை"— என்று சொல்லிக்கொண்டே வியப்புடன் ஒன்றும் பேசாமல் திரும்பிவந்து உட்கார்ந்து கொண்டான் அவன். பெரியவரோ, தமக்கு யாதொன்றும் சம்பவி யாததுபோல் ஸாவதானமாக, "வாருங்கள், இன்றைய சபையை திவான் வீட்டில் நடத்திவருவோம்"—என்றார்.

இந்தப் பெரியவரைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? அவருடைய இருதயம் பக்தி ரஸத்தில் அநவரதமும் அமிழ்ந்திராவிட்டால், இவ்வளவு நடு நிலைமையோடிருக்க முடியுமா? இந்தப் பெரியவருடைய சரித்திரத்தில் நடந்த இன்னும் இரண்டு செய்திகள் சொல்லுகிறேன், கேளுங்கள். இவருடைய பிள்ளைகளில் இன்னொருவன் இதற்குச் சில காலத்துக்குப் பின்பு இறந்துபோக, அதற்கும் அவர் துயரப்படாமலிருப்பதைக் கண்டு, அவருடைய நண்பர்கள், "ஐயா, புத்திரன் இறந்ததற்காகச் சிறிதும் துக்கியாமலிருக்கும்படி இவ்வளவு திடசித்தம் தங்களுக்கு எப்படி உண்டாயிற்று?" என்று கேட்டபோது, அவர் "தானமாய்க் கிடைத்த பொருளின்மேல் எனக்கு என்ன அதிகாரம் இருக்கிறது?" என்றாராம். அத்தாவது, கடவுள் கொடுத்தார், அவரே திரும்பவும் வாங்கிக் கொண்டார், இதில் எனக்கு என்ன உரிமை இருக்கிறது? என்றார். அவருடைய மகள் பாகல்பூர் என்னும் ஊரில் இறந்துபோனாள். அவருடைய மனைவி அந்தச் செய்தியைக் கேள்வியுற்று அழுதுகொண்டிருந்தாள். அப்போது இந்தப் பெரியவர்,—'நீ ஏன் அழுகிறாய்? அவள் இன்னும் பாகல்பூரிலேயே இருப்பதாக எண்ணிக் கொள்ளுகிறதுதானே. அங்கே இருந்தால் வருஷத்துக்கொரு தடவையாகிலும் பார்த்துவரலாமே என்பையோ? இப்போதும் குற்றமில்லை. நீ சிலகாலம் பொறுத்துக் கொண்டிரு; உன் மகளைக் காணலாம். இந்தத் தடவை காணும்போது, இனி நீங்கள் எப்போதும் ஒருவரை விட்டொருவர் பிரியமாட்டீர்கள்"—என்று சொன்னாராம். இந்த மஹான் இன்னும் ஜீவித்திருக்கிறார். * இவர் நமது தேசத்துக்கு ஒரு பெரும் பூஷணமாய் விளங்குகிறார்.

---

* இவர் ராமதநு லாஹிடி என்பவர். இந்த நூல் முதன் முதல் பாங்ளா பாஷையில் எழுதப்பட்டபோது இருந்தவர்—இவருடைய சிறந்த பக்திக்காகவும் கபடற்ற குணத்திற்காகவும் யாவராலும் புகழப்பட்டவர் இவர். 1898-ம் ௵ ஆகஸ்ட் ௴ 18௳ இறந்துபோனார். இவரது விரிவான வாழ்க்கை வரலாறு "ராமதநு லாஹிடியும் அவர் காலமும்" என்ற பெயரால் சிவநாத சாஸ்திரியால் பாங்ளா பாஷையில் இயற்றப்பட்டு ஒரு துரை மகனால் இங்கிலீஷிலும் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.

இன்னொரு மஹா பக்தரின் குமாரன் மரணப் படுக்கையில் கிடக்கும்போது, பிள்ளையின் தாயார் தரையில் விழுந்து அழுதுகொண் டிருந்தாள். அப்போது அவர் தம் மனைவியைப் பார்த்து,—“மகன் இறந்துபோனதற்காக நான் அவ்வளவாகத் துக்கப்படவில்லை. ஆனால் பகவானிடத்தில் பக்தி விசுவாசமில்லாமல் நீ அழும் அழுகையைப் பார்த்தே நான் அதிக துக்கமடைகிறேன்”—என்றார். அப்பொழுது நான் அவர் பக்கத்திலேயே உட்கார்ந்து பார்த்துக்கொண்டிருந்தேன். இந்தத் திருஷ்டாந்தங்களைப் பார்க்கும்பக்ஷத்தில், உலக வியாபாரங்களில் இருப்பவர்கள் பக்திபண்ண முடியாதென்று சொல்வது பிசகென்று ஏற்படவில்லையா? பக்தி செய்ய முயலுகிறவனுக்கு பகவான் உதவிசெய்கிறார். அதனால் அவனுடைய விருப்பமும் நிறைவேறும். ஆகவே இந்த ஸம்ஸாரத்தில் இருந்துகொண்டே பக்தனுவதற்கு மார்க்கமில்லையென்று ஒருபோதும் கருதக்கூடாது. அப்படிக் கருதும்பக்ஷத்தில், பகவானிடத்தில் பெரிதும் அபசாரம் செய்தவர்களாவோம். இந்த ஸம்ஸாரத்துக்குக் கர்த்தா அவரே. அவரே ‘க்ரிஹிணும் க்ரிஹ தேவதா’ “இல்லறத்தாருக்கு இல்லக் கடவுளாய்” விளங்குகிறார்.

மிகத் தாழ்ந்த படியிலுள்ள தாமஸ பக்தன் கூடக் கிரமக் கிரமமாய் முக்கிய பக்தி யடையக் கூடுமென்று ஏற்கனவே சொல்லப்பட்டது. பரம துன்மார்க்கன்கூட எம்பெருமானை பஜிக்கத் தொடங்கும் பக்ஷத்தில், தர்மாத்மா ஆவனென்றும் சொன்னேன். இதற்காதாரமாக ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் வாக்கியங்களையும் உதாஹரித்தேன். அப்படி யிருக்க, இனி நிராசை கொள்வதற்கு என்ன நியாயம் இருக்கிறது? ஆகவே நண்பர்களே, நீங்கள் எல்லோரும் சோம்பலைவிட்டு எழுந்திருந்து சிரத்தையுடன் பாடுபடுங்கள். எம்பெருமானது திருவருளால் நீங்கள் கிருதார்த்தராவீர்கள். நம்மில் மஹா பாபிகளாய் இருப்பவர்கள் கூடக் கடவுளின் அநுக்கிரகத்துக்குப் பாத்திரமாவார்கள்.

கொந்தவிழ் மலர்ச்சோலை நன்னீழல் வைகினும்,
குளிர்நிம் புளைத்தை யள்ளிக்
கொள்ளுகினும், அந்நிரை டைத்தினைத் தாடினும்
குளிர் சந்த வாடை மடவார்
வந்துலவுகின்றதென முன்றிலிடை உலவவே
வசநிபெறு போதும், வெள்ளை
வட்டமதிப்பட்டப் பகற்போல் நிலவுநர
மகிழ்போதும், வேலையமுதம்
விந்தைபெற அறுசுவையில் வந்ததென அமுதுண்ணும்
வேளையிலும், மாலை சுந்தம்
வெள்ளிலை அடைக்காய் விரும்பி வேண்டிய வண்ணம்
விளையாடி விழி துயிலினும்,
சந்ததமும் நின் அருளை மறவாவரந்தந்து
நமியெனை ரக்ஷை புரிவாய்,
சர்வபரிபூரண அகண்ட தத்துவமான
சச்சிதானந்த சிவமே !

இரண்டாம் அத்யாயம்
முற்றிற்று

பக்தி கைகூடுவது எவ்விதம்?

பக்தியானது "மஹத் க்ரிபயாவா ப்ஹகவத் க்ரிபாலே சாத்வா" "மஹா புருஷர்களின் கிருபையினுலாவது எம்பெருமானது திருவருளின் ஒரு சிறிதினுலாவது (உண்டாகும்)"—என்று நாரத பக்தி சூத்திரம் கூறுகிறது. சாது ஜனங்களாகிய பெரியோர்களின் கிருபைகூட பகவத் கிருபாலேசத்துக்குள் அடங்கினதேயாம். பகவத் கிருபை எப்போது எவ்விதமாக உண்டாகுமென்பது மானிட புத்திக்கு எட்டாததா யிருக்கிறது. நேற்றுவரையில் துன்மார்க்கனுய்த் திரிந்துகொண் டிருந்தவன் இன்று பரம பாகவதனுகலாம். அப்படிப்பட்டவனுடைய பாத தூளியைத் தொட்டமாத்திரத்தில் நாம் கிருதார்த்தராய் விடுவோம். இது விஷயமாய் "பக்த மாலை" என்னும் நூலில் சில அழகான சரித்திரங்கள் காணப்படுகின்றன.

ஓர் அரசனுடைய வீடுகூட்டும் வேலைக்காரன் ஒருவன் ஒருநாள் ராஜாங்கத்தின் பொக்கிஷத்தைக் கொள்ளையடிக்கத் தீர்மானித்து, நடுநிசியில் வந்து, பணப் பெட்டிகள் வைக்கப்பட்டிருந்த அரசனுடைய பள்ளியறையில் கன்னம் வைக்கப் போகையில், ராணியானவள் அரசனை நோக்கி, "எவ்வளவு சொல்லியும் பெரிய பெண்ணின் விவாகத்தைப்பற்றி நீங்கள் யோசியாமலே இருக்கிறீர்கள்?"—என, அரசன் "தகுந்த வரன் கிடைக்கவில்லையே, நான் என்செய்வேன்?" என்றான். அரசி அந்த சமாதானத்தைக் கேட்டுத் திருப்தியடையாமல் மேலும் மேலும் தொந்தரவுபண்ணவே, அரசன் வெறுப்படைந்து, "நாளை விடியற்காலமே எழுந்து தபோவனத்திற்குப் போகிறேன். அப்பொழுது முதல் முதல் எந்த யோகி என் கண்ணுக்கு எதிர்ப்படுகிருனே, அவனுக்குப் பெண்ணைக் கட்டிக்கொடுத்து ராஜ்யத்திலும் பாதிப் பாகம் அவனுக்குக் கொடுத்துவிடுகிறேன்," என்றான். இந்த ஸம்பாஷணையைக் கேட்டுக்கொண்டிருந்த வீடுகூட்டியாகிய திருடன்

தனக்குள்ளே இவ்வாறு யோசிக்கலானுன்: "அப்படி யாஞல் நான் ஏன் இப்படி வீணே கஷ்டப்படவேண்டும்? நான் கன்னம் வைக்கையில் என்னை யாராவது கண்டு பிடித்துவிட்டால், என் தலை போய்விடும். அதைவிட யோகி வேஷம் பூண்டு, தபோவனத்தில் போய் உட்கார்ந்திருந் தால், அநாயாஸமாய் ராஜகுமாரத்தியையும் ராஜ்யத்தில் பாதியையும் அடையலாமே." இப்படித் தீர்மானஞ் செய்துகொண்டு அவன் வீட்டுக்குப் போய் யோகி வேஷந் தரித்துப் பொழுது விடிவதற்கு முன்னமே, தபோ வனத்தின் முன்பாகத்தில் போய் உட்கார்ந்துகொண்டு, யோகாஸனத்தில் அமர்ந்து தியான நிஷ்டையில் இருப்பது போல் பாசாங்கு பண்ணிக்கொண்டிருந்தான். அரசன் விடியற்காலையில் எழுந்து தபோவனத்துக்குச் சமீபமாய் வருகையில், வழியிலேயே கபடயோகி, தியானத்தில் கண் மூடி உட்கார்ந்திருந்தான். அரசன் சமீபமாய்ச் சென்று பார்க்கையில், யோகி ஆழ்ந்த சமாதியில் அமர்ந்திருந் தான். அவனுக்கு அரசன் ஸாஷ்டாங்கமாய் நமஸ்கரித்து வெகு நேரம் வரையில் கைகூப்பிக் காத்திருந்தும், மாய மஹாத்மாவின் சமாதி கலையவில்லை. கடைசியில் யோகி திருக்கண் மலர்ந்தருளியதை அரசன் கண்டு, அவன் காலில் விழுந்து தன் பட்டணத்துக்கு எழுந்தருளும்படி அவனை வேண்டிக்கொண்டான். யோகி எளிதில் உடன் படாமல், அரசன் அடிக்கடி மன்ருடியதன்மேல் ஒருவாறு ஒப்புக்கொண்டான். அரசன் எவ்வளவோ ஆதரவோடு அவனைத் தன் பட்டணத்துக்கு அழைத்துக்கொண்டு போனுன். அரண்மனை போய்ச்சேர்ந்தவுடன் ராஜா அந்தக் கள்ள யோகியை சிங்காசனத்தில் வீற்றிருக்கச் செய்து, அவன் பாதங்களைக் கழுவ, ராணி அவனுக்குச் சாமரம் போட்டாள். பிறகு ராஜ தம்பதிகள் அஞ்ஜலி ஹஸ்தராய் அந்த யோகியைப் பார்த்து—"அடிகளே! எங்களுக்குப் பரம சுந்தரியான ஒரு பெண் இருக்கிருள்; தேவரீர் திரு வுள்ளம் பற்றும்பக்ஷத்தில் அந்தக் கன்னிகையையும் என் ராஜ்யத்தில் பாதியையும் தேவரீர் திருவடிகளிலே சமர்ப் பிக்கிறேம்" என்ருர்கள். ராஜாவும் ராணியும் இப்படி ஸ்தோத்திரம் பண்ணுவதைக் கேட்டு, அந்த வேஷதாரி "நான் வெளித்தோற்றத்துக்கு யோகி வேஷம் போட்ட

மாத்திரத்திலேயே, இந்த ராஜ தம்பதிகள் என் காலில் வீழ்ந்து ராஜ கன்னிகையையும், ராஜ்யத்தில் பாதியையும் ஏற்றுக்கொள்ளும்படி என்னை வேண்டிக்கொள்ளுகிறார்களே, உண்மையான யோகியாகவே நான் ஆகும்பக்ஷத்தில், எத்தனை ராஜ தம்பதிகள் என் காலில்விழுந்து ராஜ கன்னிகைகளையும் ராஜ்யங்களையும் எனக்குச் சமர்ப்பிக்க மாட்டார்கள்?'' என்று சிந்திக்கலானான். சிந்திக்கச் சிந்திக்க, அவன் மனம் மாறலாயிற்று. அவன் ராஜ தம்பதிகளின் வேண்டுகோளுக்கு இணங்காமல், அந்த க்ஷணமே சிங்காசனத்தை விட்டிறங்கி மனங்கசிந்து பகவந் நாமத்தை இடைவிடாமல் உச்சரித்துக்கொண்டே வெளிக் கிளம்பினான். அதுமுதல் விஷய சுகங்கள் அவனை அண்டவும் முடியவல்லை. பகவத் கடாக்ஷத்தினால் அவனுக்குப் பக்தி மார்க்கம் கைகூடவே, அவனுடைய நீச ஜன்மம் ஸார்த்தகமாய்விட்டது. திருடவேண்டுமென்னும் எண்ணத்துடன் வந்தவன் தேவாநுக்கிரகம்பெற்று தங்கியனான். அமாவாசை நள்ளிருள் பௌர்ணிமையின் நிறை வெண்ணிலவாகப் பிரகாசிக்கலாயிற்று.

* * *

இதேமாதிரி இன்னொரு கதை உண்டு. ஒரு வேடன் பக்ஷிகளைப் பிடிக்கும்பொருட்டு ஓர் ஏரிக்கரைக்குச் சென்றான். வில்லும் அம்புமாய் வந்த அவனைக் கண்டு பக்ஷிகள் பறந்துபோகவே, அவன் ஒரு மரத்தின் பின்பக்கத்தில் ஒளிந்துகொண்டான். அப்போது ஒரு விஷ்ணு பக்தன் வந்து அந்த ஏரியில் ஸ்நானம் செய்ய, பக்ஷிகள் ஏரிக்குத் திரும்பி வந்து, விஷ்ணு பக்தனைக் கண்டு பயந்து பறந்தோடாமல் ஆனந்தமாய் விஹரிப்பதைவேடன் கண்டு, "நான் கூட வைஷ்ணவ வேஷம் போட்டுக்கொள்ளும் பக்ஷத்தில், என்னைப் பார்த்து ஒரு பக்ஷியாவது பறந்து போகாது. வில்லும் அம்பும் உபயோகியாமலே வேண்டிய பக்ஷிகளைப் பிடித்துக் கொள்ளலாம்,'' என்று சிந்தித்து, வீட்டுக்குப் போய், விஷ்ணு பக்தனைப்போல் வேஷம்பூண்டு திரும்பவும் ஏரிக்கரைக்கு வந்தான். அப்போது இக் கள்ள வைஷ்ணவனைக் கண்டு பக்ஷிகள் சிறிதேனும் அச்சப்படாமல் தங்கள் இஷ்டப்படி சஞ்சரித்துக்கொண்டிருந்தன. ஆனால்

இப்போது பக்ஷிகளை எளிதில் பிடித்துக்கொள்ள சாத்தியமாயிருந்தபோதிலும், வேடன் அவைகளைப் பிடிக்க முயலவில்லை. ஏனெனில், பகவானின் பிரேமாமிர்தம் அவன் இருதயத்தில் வருஷிக்கத் தொடங்கியது. அதனால் அவன் எண்ணங்களெல்லாம் மாறி, அவன் கண்களிலிருந்து தாரை தாரையாய் நீர் பெருகியது. கருணைப் பிரவாஹத்தால் கற்பாறைகளும் கரையுமல்லவா? எவர்களின் இருதயத்தில் அன்பெனும் ஆறு அலை வீசிக் கரைபுரளுகிறதோ, அவர்களுடைய ஜன்மமே நல்ல ஜன்மம். அவர்களே பாக்கியவான்கள். அந்த வேடன் "எவனுடைய அடியார்களின் கோலத்தைப் பூண்டமாத்திரத்தில் என்னைப் பார்த்துப் பக்ஷிகள் பயப்படாமல் நாலா பக்கத்திலும் சூழ்ந்துகொண்டு ஆனந்தமாய்ச் சஞ்சரிக்கின்றனவோ, அந்தப் பரம புருஷனுடைய திருநாமத்தை அல்லும் பகலும் ஸங்கீர்த்தனம் செய்து உண்மைப் பக்தனாகவே ஆய்விட்டால், எவ்வளவு பலன் உண்டாகாது! இந்தப் பக்ஷிகளே முதலில் என்னைக் கண்டு பறந்தோடின. என்னுடைய பழைய வேஷங்கள் மாறிப் புதிய புண்ணிய வேஷத்தைக் கண்டவளவில், அதே பக்ஷிகள் துள்ளிப் பறந்து என்னைச் சுற்றி உல்லாஸமாய் வட்டமிடுவதும் நிர்ப்பயமாய் என்மேல் வந்து விழுவதுமாய் இருக்கின்றன. ஆ! ஹா! இப்படிப்பட்ட இனிய கோலத்தை இனி எப்போதும் விடேன்" என்று தனக்குள் பேசிக்கொண்டு அந்த சுப முகூர்த்தத்திலேயே பக்தனாகிவிட்டான். இத்தகைய உதாரணங்கள் எத்தனையோ இருக்கின்றன. காட்டிலே கண்ட மனிதர்களை யெல்லாம் ஆறலைத்துக் கொலைபுரிந்து திரிந்துகொண்டிருந்த ரத்நாகரன் என்னும் கள்வனிடத்தில் நாரத முனிவர் கருணைகூர்ந்து "மரா-மரா" வென்று சொல்லும்படி உபதேசிக்க அவன் அந்த வார்த்தைகளை உச்சரிக்கும்போது, அவை "ராம, ராம" வென்றாகி, அதனால் திருவருள்பெற்று வால்மீகி முனிவராகி ஸ்ரீமத் ராமாயணத்தை இயற்றத்தக்க பெரும் பாக்கியம் அடைந்த கதையை இங்கு ஞாபகப் படுத்திக் கொள்வதே போதுமானது.

* *

கொஞ்ச காலத்துக்குமுன் ஒரு விசித்திரமான சம்பவம் நிகழ்ந்தது. அதைக் கேட்டால் அத்தியந்த ஆச்சரியமா

யிருக்கும். நீச குலத்தில் பிறந்தவன் ஒருவன்,—அவன் இப்பொழுதும் ஜீவந்தனுயிருக்கிருன்; அவன் செய்துவந்த பாப காரியங்கள் எட்டில் அடங்கா, எண்ணித் தொலேயா. கஞ்சா 'தம்' அடிப்பதிலும், கள் சாராயம் குடிப்பதிலும் கைதேர்ந்த நிபுணனென்று பேர்வாங்கியிருந்தான் அவன். பழி பாவங்களுக்கு அஞ்சாத கல்நெஞ்சனுன இந்தப் பாதகன் ஒருநாள் தனனுடைய சத்துருவைக் கொல்ல எண்ணி, அவன் படுக்கும் அறையில் விடுவதற்காக ஒரு கொடிய ப்ாம்பைப் பானேயில் அடைத்து எடுத்துப் போய்க்கொண்டிருந்தான். பகவான் சகல ஜீவகோடிகளேயும் ஸம்ரட்சிக்கிறவரல்லவா? இவன் போய்க்கொண்டிருக்கையில், நடுவழியில் மூங்கிலால் போடப்பட்டிருந்த ஒரு பாலத்தைக் கடக்கவேண்டி யிருந்தது. அந்தப் பாலத்தின்மேல் அவன் நடந்து போகையில், அது திடீரென்று முறிந்து தண்ணீரில் விழுந்தது. அந்தப் பாதகனும் பாலத்துடன் நீரில் விழுந்தும், மெல்லத் தப்பித்துக் கொண்டு கரைசேர்ந்தான். பாம்புமாத்திரம் ஓடிப்போய் விட்டது. கடைசியில் அவன் எண்ணம் நிறைவேறவில்லே. மற்ருெருநாள் அவன் குடித்து வெறிகொண்டு ஒரு வீட்டுக்கெதிரில் வந்து உட்கார்ந்தான். அப்பொழுது அந்த வீட்டுக்குள் யாரோ அடியிற்கண்டபடி பாடுவதைக் கேட்டான்.

"ஒஹே தீநநாத்ஹ,
கரோ ஆசிர்வாத,
எஇ தீந ஹீந
துர்பல ஸந்தாநே;
ஜேநொ ஏ ரஸநா
கரொ ஹேக் ஹோஷணு,
ஸத்யேர் மஹிமா
ஜீவநெ மரணெ."

"ஹே தீனரக்ஷகா! என்னே ஆசிர்வதிப்பாய். தீனனும், ஹீனனும், துர்ப்பலனுமாயிருக்கிற நின் பிள்ளேயாகிய நான் ஜீவித்திருக்கும்போதும் மரிக்கையிலும் இந்த நாவினுல் சத்தியத்தின் மகிமையைக் கோஷிக்கும்படி அருள்புரிவாய்." *

* ஸாதாரண ப்ராஹ்ம ஸமாஜத்தின் பிரார்த்தனு சங்கீதம்.

இந்தக் கீதத்வனி அவன் செவியில்விழுந்த சுப முகூர்த்தத்திலிருந்தே அவன் வாழ்க்கை முழுதும் ஆச்சரியகரமாய் மாறிவிட்டது. பகவத் கிருபை அவனுக்கு உண்டான அந்த க்ஷணத்திலேயே அவனுடைய குடிவெறி இருந்தவிடம் தெரியாமல் பறந்தோடி மறையவும், அவன் " இனி நான் எப்போதும் குடி முதலிய துர்வழக்கங்களுக்கு உட்படாமலிருப்பதோடு இந்த நிமிஷமுதல் சன்மார்க்கத்திலேயே நடப்பேன் " என்று பிரதிக்ஞை பண்ணிக்கொண்டான். உள்ளபடியே அந்த க்ஷணத்திலிருந்து அவனது வாழ்க்கை ஒரு நூதன ஒளியுடன் விளங்கத் தொடங்கியது. அவன் எவ்விதக் களங்கமுமின்றிப் பக்திமார்க்கத்தை அவலம்பித்துக் கிராம வைத்தியனாக ஜீவனம் செய்துவந்தான். ஒரு ரூபாய்க்கு அதிகமாக எவ்வளவு வரும்படி வந்தாலும் அதை அவன் ப்ராஹ்ம ஸமாஜத்துக்குக் கைங்கரியார்த்தம் அளித்துவிட்டு, ஒரு ரூபாய்க்குக் குறைவாக வரும் வரும்படியைக் கொண்டே ஜீவித்துவந்தான்.

இவ்விதமாகவே ஜாகாஇ மாதாஇ முதலிய எத்தனையோ மஹா பாதகர்கள் பகவத் கிருபையினால் ஒரு நிமிஷத்தில் கிருதார்த்தர்களாயிருக்கிறார்கள். ஜாகாஇ மாதாஇ என்பவர்கள் ஸ்ரீ சைதந்ய ஸ்வாமியின் காலத்தில் நவத்வீபத்தில் இருந்த பேர்போன இரு துஷ்டர்கள். அக்காலத்தில் அநுஷ்டிக்கப்பட்டுவந்த ஸாரமற்ற கர்மங்களை ஸ்ரீ சைதந்யர் கண்டித்து, பகவானிடத்தில் உள்ளன்புடன் பக்தி செய்தாலொழிய அவனை அடைய முடியாதென்றும், அவனை வழிபடுவதில் எல்லா ஜாதியார்களும் பேதமின்றி ஒன்று சேரவேண்டுமென்றும் பிரசங்கித்து வந்தார். ஆகையால் நவத்வீபத்திலுள்ளவர்கள் எல்லோரும் அவரையும் அவருடைய சிஷ்யர்களையும் தூஷித்து வந்தார்கள். அப்படி தூஷித்துப் பகைத்தவர்களில் முக்கியமானவர்கள் இந்த ஜாகாஇ மாதாஇ என்னும் துஷ்டர்கள். இவர்களை எப்படியாவது நல்வழிக்குத் திருப்பவேண்டுமென்று ஸ்ரீ சைதந்யர் கடைசியாகச் சங்கற்பித்துக் கொண்டு அந்த உத்தேசத்துடன் தம் இஷ்ட தெய்வமாகிய ஸ்ரீ கிருஷ்ணனுடைய நாம ஸங்கீர்த்தனம் செய்துகொண்டே சிஷ்யர் குழாத்துடன் புறப்பட்டார். ஸ்ரீ சைதந்-

யரின் சிஷ்யர்களுள் சிரேஷ்டரான நித்யானந்தன் என்பவரும் இந்த கோஷ்டியில் இருந்தார். இவர்கள் பாடிக் கொண்டேபோய் அந்தச் சகோதரர்களைச் சந்தித்தபோது, அவர்கள் தடிகளையும் கற்களையும் கொண்டு பாகவதர்களின்மேல் விழுந்தடித்தார்கள். அதன்மேல் பாகவதர்களும் அவர்களைத் தாக்கத் தொடங்கினார்களாயினும் நித்யானந்தன் மாத்திரம், அதிகமாய்க் காயப்பட்டும், அந்தத் துஷ்டர்களை எதிர்க்காமல் சாந்தமாய் அவர்களுக்கெதிரில் தம் இரு கரங்களையும் விரித்துப் பகவானிடத்தில் அவர்களுக்குப் பக்தி உண்டுபண்ணிவைக்கத் திருவுளங் கொண்டு பகவந் நாமத்தை கானம் பண்ணிக்கொண்டு நின்றார். இதைக் கண்டமாத்திரத்தில் அந்த துஷ்டர்கள் பக்தி பரவசராகிச் சாந்தமடைந்து, ஸ்ரீ சைதந்ய ஸ்வாமியின் பாகவத கோஷ்டியில் சேர்ந்து, கொஞ்ச காலத்துக்குள் பக்தி வைராக்கியங்களிற் சிறந்த பரம சாதுக்களெனப் பெயரெடுத்தார்கள்.

இவர்கள் கடைத்தேறுவதற்குக் காரணமா யிருந்தது நித்யானந்தன் அநுக்ரகமே யாயினும், அந்த அநுக்ரகமும் பகவத் கிருபையினாலேயே அவர்களுக்குக் கிடைத்தது. பகவத் கிருபை இல்லாவிடில், நித்யானந்தர் அவர்களிடம் சென்றிருப்பாரா? பக்தர்களின் பெருமையும் அவர்களின் கண்களுக்குக் கோசரமாயிருக்குமோ?

ஆனால் பகவத் கிருபையோ அஹோராத்ரமும் ஸந்தத தாரையாய்ப் பொழிந்துகொண்டே யிருக்கிறது. கண் படைத்தவர்களே அந்தக் கருணைமாரியைக் காணவல்லார். 'அவருடைய தயைக்கு ஓய்ச்சல் ஒழிவில்லை. அது மலையருவியைப்போல் பிரவஹித்துக்கொண்டிருக்கிறது,' என்று ஒரு வங்கதேசக் கவி பாடியிருக்கிறார். கன்றைத் தொடர்ந்து திரியும் பசுவைப்போல் பகவான் நம்மைத் தொடர்ந்து திரிகிறார். நாம்தான் வழிக்கு வராமல் மனம் போனபடி திரிந்துகொண் டிருக்கிறோம். யானை தன் தலைமேல் தானே மண்ணைவாரிப் போட்டுக்கொள்வதுபோல் நாமாகவே நம் மனம்போன வழியெல்லாம்சென்று பாவத் திரளையிட்டுகின்றோம். பகவத் கிருபையை அடைய ஆவல் கொண்டவனே ஆயிரம் தாரையாய் வருஷிக்கும் கிருபா

வருஷத்தைக் காணமுடியும். ஆகவே நாமும் பகவத் பக்தியின்பொருட்டுக் காதலாகிக் கதறும்பக்ஷத்தில், பாவங்கள் பறந்தோடிப் போவதோடு, இருதயம் பக்திப் பேரொளியினுல் பிரகாசிக்கும். ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் சொல்லுகிறுர்—“காந்தம் இரும்பை இழுப்பதைப் போல் பகவான் நம்மை ஆகர்ஷிக்கிறுர். இரும்பு சேற்றில் அமிழ்ந்திருந்தால், அதைக் காந்தம் ஆகர்ஷிக்க முடியாதல்லவா? அப்படியே நம் இருதயம் மலச்சேற்றினுல் மூடப்பட்டிருப்பதால்,கடவுளின் ஆகர்ஷணத்துக்கு வயப்படாமலிருக்கிறது. ஆகையால் நாம் அஞ்சலி செய்யும் கையும், அருவி நீர் விழியுமாகக் கதறி அவனுடைய அருளைப் பிரார்த்தித்தால், நம் மனத்தை மூடியிருக்கும் மலச் சேறு கழுவப்பட்டாற்போல் நீங்கி, நாம் அவனுடைய ஆகர்ஷணத்துக் குள்ளாவோம்.” ஆகையால் நாம் அநுதினமும் அவனைப் பிரார்த்தித்து நம் பாவங்களுக்காகப் பரிதபிக்க வேண்டும். இப்படிச் செய்துவரும்பக்ஷத்தில் பகவானுக்கு நம்மேல் அருள் சுரக்குமென்பது நிச்சயம். அவனுடைய கிருபையை அனுபவிக்கிறவர்களுக்கு அவனுடைய ஸ்வரூபத்தைப் பார்க்கமுடியும். பக்தனுவதற்குக் கல்வி, பதவி, செல்வம் இவைகள் வேண்டியதில்லை. சுருதி கூறுகின்றது.

“நாயம் ஆத்மா ப்ரவசநேந லப்ஹ்ய:,
ந மேத்ஹயா ந பஹுநா ச்ருதேந;
யம் ஏவைஷ வ்ரிணுதே, தேந லப்ஹ்யஸ்,
தஸ்யைஷ ஆத்மா வ்ரிணுதே தநூம் ஸ்வாம்.
—கட்ஹோபநிஷத்

“வேதம் ஓதலினுலாவது, புத்திக் கூர்மையினுலாவது, விரிந்த கல்வியினுலாவது பரமாத்மா அடையத்தக்கவனல்லன்; அவன் அருள் பெற்றவரே அவனை அடையக்கூடியவர். அவர்களுக்கே அவன் தன் ஸ்வரூபத்தை வெளியிடுகிறுன்.”

மூன்ரும் அத்யாயம்
முற்றிற்று

பக்தி மார்க்கத்தில் உண்டாகும் தடைகளும் அவற்றை நீக்கும் விதமும்

பகவானைத் தியானித்து அவனுடைய அருளைப் பெறுவதற்கும் அவனுக்கு உடல் - பொருள் ஆவிகளைச் சமர்ப்பிப்பதற்கும் வழியில் பல தடைகள் இருக்கின்றன. அவைகளை ஒழிப்பது அத்தியாவசியம். பக்திமார்க்கத்தில் உண்டாகும் தடைகளை ஒழித்தாலன்றி, அந்த வழியில் நடந்து முன்செல்வது கஷ்டம். இவைகளில் சில புறத் தடைகள், சில அகத் தடைகள். புறத் தடைகளில் முதன்மையானது துஸ்ஸாங்கத்தியம் அல்லது கெட்ட சகவாசம்.

"துஸ்ஸங்க: ஸர்வத்தைவ த்யாஜ்ய:"

அதாவது, "கெட்ட சகவாசத்தை எவ்விதத்தாலும் ஒழிக்க வேண்டும்" என்று பக்தி சூத்திரத்தில் நாரதர் கூறுகிறார். தீயாருடன் கூடுவது, தீயாருடன் பேசுவது முதலியவை மாத்திரமே கெட்ட சகவாசமென்று கருதக்கூடாது. கெட்ட நூல்களைப் படிப்பது, கெட்ட சித்திரங்களைப் பார்ப்பது, கெட்ட வார்த்தைகளையும் கெட்ட பாட்டுக்களையும் கேட்பது,—இவைகளெல்லாம் கெட்ட சகவாசமேயாகும். ஜந்துக்களின் புணர்ச்சியைப் பார்ப்பது கூட தோஷமென்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. ஆகவே நம்முடைய மனத்தில் கெட்ட எண்ணங்களை உண்டாக்குமவற்றைப் பார்க்கக்கூடாது, கேட்கக்கூடாது, உச்சரிக்கக்கூடாது, சிந்திக்கவும் கூடாது மனிதர்களாவது, ஜந்துக்களாவது; அசங்கியமான காரியங்களைச் செய்வதைப் பார்ப்பதனால் அநேகருக்கு மனது கெட்டுப்போகிறது. அசங்கியமான சித்திரங்களைப் பார்ப்பதனாலும், அசங்கியமான பாடல்களைக் கேட்பதனாலும், அவ்வித கிரந்தங்களைப் படிப்பதனாலும், பெரும்பாலும் மனத்தில் தீய எண்ணங்கள் உண்டாகின்றன. நீதி புகட்டும் நன்னூல்களைப் படிப்

பதனால் மனத்தில் நல்ல எண்ணங்கள் உதிக்குமாயின், அநீதிக் களஞ்சியங்களாகிய நூல்களைப் படிப்பதனால் மனம் தீய நெறியில் செல்லாதிருக்குமா? நல்ல சித்திரத்தைப் பார்ப்பதனால் மனம் பரிசுத்தமடையுமாயின், கெட்ட சித்திரத்தைப் பார்க்கும்போது, துஷ்ட எண்ணங்கள் உண்டாகாதிருக்குமா? புண்ணியப் பாட்டுக்களையும், நற்காவியங்களையும் சிரவணம் செய்வதனால் உள்ளம் பூரித்துப் பரவசமாகும்போது, காமாதுரமான பாட்டுக்களையும் சிற்றின்பக் காவியங்களையும் கேட்பதனால் மனமானது குற்சித எண்ணங்களால் மயங்காமல் இருக்க முடியுமா? எனக்குத் தெரிந்த நல்ல குணமுள்ள ஒரு மாணுக்கன் கலாசாலையில் படித்துக்கொண் டிருக்கும்போது, அவன் வாசிக்கும் ஸம்ஸ்கிருதபாடப் புஸ்தகத்தில் இருந்த சிற்றின்ப விஷயமான சில சுலோகங்களால் அவன் மனம் மோக பரவசமாகி, தூங்கும்போதெல்லாம் கெட்ட கனவுகள் கண்டுகொண்டிருந்தான். நான் அறிந்தவரையில், இவனைப்போல் சுத்தமான ஒழுக்கத்தில் சிரத்தையுள்ள பேர்கள் வெகு அபூர்வம். அப்படி யிருந்தும், அந்தக் கெட்ட சுலோகங்களால் இவன் மனம் தத்தளித்தது. இதைவிடக் காமாதுரமான பாட்டுக்களால் உண்டாகும் விளைவு இன்னும் கொடியது. கெட்ட பாட்டுக்களைப் படிப்பதையும் காட்டிலும், அவைகளைக் கேட்பது இன்னும் மனத்தை அதிகமாய்த் துன்பப்படுத்துமென்பதை எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள்.

கெட்ட சகவாசத்தைப்போல் சர்வ நாசத்தை உண்டாக்கக்கூடியது வேறொன்றில்லை. கெட்டுப்போனவர்களில் எவரைக் கேட்டபோதிலும், கெட்ட சகவாசமே தாங்கள் கெட்டதற்கு மூலகாரணம் என்பார்கள். கெட்ட வழியில் கொண்டுபோகக்கூடியவர்கள் கணக்கற்றவர்களா யிருந்தாலும், நல் வழியில் நடத்தும் நண்பர்கள் வெகு சொற்பமாகவே இருப்பார்கள். "ச்ரேயாம்ஸி பஹூ விக்ஹ்நாநி" என்றவாறு ஒருவன் நல்ல காரியங்கள் செய்ய முயன்றால் அதற்குப் பல இடையூறுகள் உண்டாகின்றன. நூற்றுக்கணக்கான நேசர்கள் வந்து அவனைத் தடுத்துக் கேலிசெய்து பரிகசித்து அவனுடைய

உற்சாகத்தைக் குலைப்பார்கள். இவ்வுலகத்தில் கெட்ட உபதேசம் செய்யும் ஆசாரியர்களுக்கே சிஷ்யர்கள் அதிக மாய்ச் சேர்கிறார்கள். கெட்ட வார்த்தை சொல்லியும், கெட்ட காட்சிகளைக் காட்டியும், கெட்ட காரியங்களைச் செய்தும் ஜனங்களை வஞ்சித்து, துன்மார்க்கத்தில் வீழ்த்த முயல்பவர்களின் செய்கைகளை முற்றிலும் விவரித்துச் சொல்வது கஷ்டம். தாய் தந்தையர்கூடத் தம் மக்களைத் தீய வழிகளிற் செலுத்தப் பலவகை உபாயங்களைக் கைக் கொள்வதுண்டென்றால், அதைவிட வெட்கக்கேடானது வேறென்ன இருக்கிறது? இவ்வுலகத்தில் ஹிரண்ய கசிபு வைப்போன்ற பிதாக்கள் அநந்தமா யிருக்கிறார்கள். பகவானிடத்தில் எள்ளளவாகிலும் ஒரு சிறுவனுக்கு பக்தி இருப்பதாகக் காணப்பட்டால், உடனே அவனுடைய தாய் தந்தையர் அவனுடைய புத்தியை அந்த வழியி லிருந்து எப்படித் திருப்பலாம், துர்க்கந்தம் வீசும் விஷய சுகங்களில் அவனுடைய மனத்தை எப்படி அழுந்தச் செய்யலாம் என்று அதற்காக பகீரதப் பிரயத்னங்கள் செய்வார்கள். இப்படிப்பட்ட திருஷ்டாந்தங்களை ஆயிரக் கணக்காக எடுத்துக் காட்டலாம். ஐயையோ! நாம எல் லோரும் ஒரே தடவையாய்ப் படுகுழியில் விழுந்துவிடு கிறோமே! எவ்விடத்தில் தாய் தந்தைகள்கூட தரும மார்க் கத்துக்குச் சத்துருக்களாய் நிற்கிறார்களோ அவ்விடத்தின் பெயரை நினைப்பதுகூட மஹா பாதகமென்று எண்ணு கிறேன்.

சாத்தியமானமட்டிலும் கெட்ட சகவாசத்திலிருந்து விலகி யிருக்கவேண்டும். கெட்ட சகவாசத்தைப்போல் பக்திக்கு விரோதமானது வேறொன்றும் கிடையாது. இதி லிருந்தே சகல பாபங்களும் உண்டாகின்றன. ஆகையால் "துஸ்ஸங்க: ஸர்வத்தைஹவ த்யாஜ்ய:" கெட்ட சக வாசம் எல்லாவிதத்திலும் ஒழிக்கத்தக்கதாம்.

நாரதபக்தி சூத்திரத்திலே, "காம க்ரோத்ஹ மோஹ ஸம்ரிதி ப்ஹரம்ச புத்த்ஹி நாச சர்வ நாசகாரணத்வாத்" —"காமம் - குரோதம் - மோஹம் - ஞாபக மறதி - புத்தி நாசம் இவைகளெல்லாவற்றுக்கும் சர்வ நாசம் கெட்ட சகவாசமே காரணம்" என்று தேவரிஷி கூறுகிறார். தீயா

ரோடு கூடுவதனுலும், அவர்கள் செய்வதைப் பார்த்தும், அவர்களுடைய தூண்டுதலினுலும், தீய பாட்டுகளைக் கேட்பதனுலும், தீய நூல்களைப் படிப்பதனுலும் மனத்தில் காமம் உண்டாகின்றது. காமத்தினுல் போக விருப்பம் அதிகரிக்கின்றது. போக விருப்பத்தைத் திருப்தி செய்து கொள்வதற்கு எவ்விதத் தடை யுண்டானுலும், குரோதம் பொங்கியெழும்.

"த்ஹ்யாயதோ விஷயாந் பும்ஸ
ஸங்கஸ்தேஷூப ஜாயதே ;
ஸங்காத் ஸஞ்ஜாயதே காம:,
காமாத் க்ரோத்ஹோப்'ஹிஜாயதே."

"மனிதன் இந்திரிய விஷயங்களைப்பற்றிச் சிந்திப்பதனுல் அவற்றில் அவனுக்குப் பற்றுதல் உண்டாகிறது. அந்தப் பற்றுதலிலிருந்து காமம் உண்டாகிறது. காமத்திலிருந்து குரோதம் உண்டாகிறது."

—பகவத் கீதை, 2-ம் அத்: 62-ம் சுலோ.

விஷய சுகங்களைப்பற்றிச் சிந்திப்பதனுல், அவற்றில் பற்றுதல் உண்டாகிறபடியால், விஷய சுகங்களைக் குறித்துச் சிந்திப்பதை ஒழிப்பதுமல்லாமல், விஷயலோலரின் கூட்டுறவையும்விட்டு விலகவேண்டும். கடவுளின் ஆஞ்ஞையினுல் நான் இக் காரியங்களைச் செய்கிறேன் என்னும் எண்ணத்துடன் உலக காரியங்களைச் செய்யவேண்டும். "எதைத் தின்போம்? எங்கே செல்வம் கிடைக்கும்? இந்திரிய சுகம் எவ்விதம் கிடைக்கும்?" என்னும் சிந்தையினுல் கடவுளை மறந்து உலக காரியங்களைச் செய்வது ஒருகாலும் கூடாது. பகவந் நாமத்தை ஸ்மரியாமல் ஸம்ஸார சக்கரத்தில் சிக்குண்டு திரிபவரின் கூட்டுறவை மறந்தும் வைத்துக்கொள்ளலாகாது. அப்படிப்பட்டவர்களின் கூட்டுறவினுலும், அவர்களைப்போல் விஷயபோகங்களை அனுபவிப்பதனுலும், விஷய சுகங்களில் பற்றுதல் உண்டாகும். அந்தப் பற்றுதலினுல் போகங்களில் பிரவேசிக்க நேரிடும். அதனுல் குரோதம் உண்டாகும். போக விருப்பம் நிறைவேறுவதற்குத் தடையுண்டாகும்போது, குரோதம் உதயமாகும்.

க்ரோத்ஹாத் ப்ஹவதி ஸம்மோஹ,
ஸம்மோஹாத் ஸ்ம்ரிதி விப்ஹரம:
ஸ்ம்ரிதிப்ஹ்ரம்சாத் புத்த்ஹி நாசோ,
புத்த்ஹி நாசா ப்ர்ணச்யதி."

"குரோதத்திலிருந்து மோஹம் உண்டாகிறது; மோஹத்தி லிருந்து நினைவு தடுமாற்றம் உண்டாகிறது; நினைவு தடுமாற் றத்தினால் மதி யழிவு உண்டாகிறது. மதியழிவினால் நாச மடைகிறான்.''

—பகவத்கிதை 2-ம் அத்: 63-ம் சுலோ:

மதிமயக்கத்தினால் மனத்தெளிவு மங்கலுறுகின்றது. அதிலிருந்து நன்மை தீமைகளைப் பகுத்தறியும் சக்தி ஒழி கின்றது; ஏற்கனவே சம்பாதித்த ஞானமும் சன்மார்க் கத்தில் ஒழுகவேண்டுமென்னும் விருப்பமும் அழிந்து போகின்றன. இப்படி, எல்லாம் தலைகீழாகி, சுக்கா னில்லாத மரக்கலம்போல் தாறுமாறாகி சர்வ நாச முண்டாகிறது. இவ்வுலகத்தில் நடக்கும் கோரமான கொலைகளும், கோர்ட்டுகளில் விசாரணைக்கு வரும் பெருங் குற்றங்களும் இந்த புத்திநாசத்தின் பலிதங்களேயல் லவா? முதலில் காமத்தினால் குரோதம் உண்டாகிறது. சில விடங்களில் பொருளாசையும், சில விடங்களில் இந் திரிய சுக விருப்பமும் குரோதத்துக்குக் காரணங்க ளாகின்றன. குரோதம் சித்தத்தை மோஹ பரவசமாக்கு கிறது. அப்பொழுது இன்னது செய்தால் இன்னது உண்டாகும், இன்ன காரியம் இந்தப் பலனை விளைவிக்கும் என்னும் அறிவு அழிகிறபடியால், புத்திநாசம் உண்டா கிறது. நன்மை தீமைகளின் பகுத்தறிவு குறைவதனால், கொலை செய்வதற்கும் மனம் துணிகின்றது. ஆகவே போக விருப்பத்தினால் மனிதனுக்கு இவ்வளவு துர்க்கதி உண்டா கிறது. கெட்ட சகவாசத்தினால் போக விருப்பம் விருத்தி யாகிறது. ஆகையினால் இவ்வளவு சர்வ நாசத்துக்கும் ஹேதுவாகிய இந்த துர்வழக்கத்தைச் சமீபத்திலும் சேர வொட்டக்கூடாது. "யௌவன காலத்தில் அருகில் வேறொருவரும் இல்லாவிட்டாலும், மனச்சஞ்சலம் உண் டாகிறது'' என்று பிரபஞ்ச இயற்கையைப் பளிங்குபோல் எடுத்துக்காட்டும் கவிச்சக்கரவர்த்தியாகிய ஷேக்ஸ்பியர் கூறுகிறார்.

எனவே, மனிதன் தனக்குத்தானே காமக் குரோதங்களின் வயப்பட்டுச் சீரழியும் நிலைமைக்குட்பட்டவனுயிருக்கிறுன். அப்படியிருக்க, அதற்குத் துணையாய்க் கெட்ட சகவாசமும் சேர்ந்துகொண்டால், காற்றும் தீயும் கலந்துகொண்டாற்போல, விபரீதமாய் முடியுமேயல்லது, வகையறிந்து உய்யும்வழி எது? ஆகையினுற்றுன் நாரதரும் பக்தி சூத்திரத்திலே, "தரங்காயிதா அபி இமே ஸங்காத் ஸமுத்ராயந்தே" என்கிறுர். அதாவது, இந்தத் தன்மைகள் முதலில் நீர்க்குமிழிகள்போலச் சிறியவைகளாய் இருந்தாலும் கெட்ட சகவாச பலத்தினுல் சமுத்திரம்போல் ஸ்தூலாகாரம் அடைகின்றன. இருதயத்தில காமக் குரோதங்களென்னும் அலைகள் கொந்தளித்து மோதுவதை உணராதார் யாரே? ஒருவேளை இல்லாவிட்டால் ஒருவேளை எல்லோரும் காமக் குரோதங்களுக்கு வசப்படக்கூடியவர்களே. ஆனுல் முதலில் சொற்பமாய் எழும் இந்த அலைகள் துஷ்ட சகவாசமெனும் காற்றினுல் மோதப்படும்போது கடல் முழுவதும் பரவுகின்றன. சிறிய அலைகள் எழும்போது, அவைகளை எளிதில் அடக்குவது அவ்வளவு கஷ்டமன்று; சமுத்திரம்போற் பொங்கியெழுமானுல், அவைகளை அடக்குவது எவ்வளவு கஷ்ட சாத்தியமாகும்?

ஆனுல், சிலர் சொல்லலாம், பாபத்தை எதிர்த்து வெல்லும் தைரியம் நமக்குண்டென்பதைக் காட்டும்பொருட்டு, ஆபத்துக்கிடமான கெட்ட சகவாசத்துக்கு அஞ்சாமல் நேர் நின்று கம்பீரமாய் நடக்கவேண்டுமென்று: அதற்குப் பிரமாணமாக, 'விகார ஹேதௌஸதி விக்ரியந்தே யேஷாம் நசேதாம்ஸி த எவதஹீரா:'—என்றும் கூறுவார்கள். அதாவது, மனத்தைக் கலக்கும் ஆபத்து உண்டாகும் காலத்தில்கூட எவர்கள் மனங்கலங்காமல் இருக்கிறுர்களோ அவர்களே தீரர்கள். ஆகையால் பாபத்தைக் கண்டமாத்திரத்தில் ஏன் பயந்தோடவேண்டும்? தன்னைச் சுற்றிலுமுள்ள பாபங்களை ஜயிக்கிறவனே மஹா வீரன் என்பார்கள். ஆனுல் அப்படிப்பட்ட சூரர்களாவதற்கு எவரும் பிரயத்தனப்படாமலிருப்பார்களாக. மஹா பக்தனுகிய கிரிஸ்துகூடச் சாத்தானுல் சோதிக்கப்

பட்டார். மஹா புருஷனாகிய சாக்கியசிம்மனென்னும் புத்தபிரானும் தவஞ்செய்யும்போது காமக் குரோதாதி ரூபமான மாரனுடன் போராடவேண்டிவந்தது. மஹா யோகியாகிய பரமசிவன் ஸமாதி நிஷ்டையில் அமர்ந்திருந்த போது, மன்மதன் அவர்மீது மலர்க்கணை எய்தான். ஆகையால் இத்தகைய மஹான்களது அடியார்க் கடியார் களின் அடிப்பொடியையேனும் தொடுவதற்கும் தகுதி யற்றவர்களும், புழுவுக்குச் சமானர்களுமான நாம் பாபத் தில் பிரவேசித்துப் பாபத்தை நாசஞ்செய்ய வல்லோமா? மேற் சொல்லிய மஹா புருஷர்களிலும் நாம் அதிக வல் லமை யுள்ளவர்களா? ஆகவே நாம் இவ்விதமான சௌரி யத்தைக் காட்ட வல்லோமென்று கனவிலும் நினையா திருப்போமாக. கிரிஸ்தவும், "எங்களைக் காமம் குரோ தம் முதலியவற்றின் சோதனைக்குள் சிக்கவைக்க வேண் டாம்; ஆனால் தீமையினின்று எங்களை மீட்டருளும்," என்று பிரார்த்திக்கும்படித் தம் சிஷ்யர்களுக்கு உப தேசித்தார். ஆகையால் துர்ப்பலமாயிருக்கிறவர்கள் எல்லோரும் பாபத்திலிருந்து நெடுந் தூரம் விலகி யிருக்க வேண்டும்; பாபத்தருகேயும் அண்டக்கூடாது. காமம் - குரோதம் - லோபம் - மோஹம் இவைகளைக் கொழுந்துவிட்டெரியச் செய்தால், நம்மை நாம் பாது காத்துக்கொள்ளச் சக்தியற்றவர்களாய் விடுவோம். ஆகையினாலே மஹரிஷியாகிய நாரதரும் பக்தர்கள் துஷ்ட சகவாசத்தை ஒழிக்க வேண்டுமென்று கூறுகிறார். சர்வ நாசத்தை உண்டாக்குவதான துஷ்ட சகவாசத்தினின்று விலகி யிருப்பதற்கு,

> 'ஸ்திரீ த்ஹநி நாஸ்திக வைரி சரித்திரம்
> ந ச்ரவணீயம்,'

> "ஸ்திரீகள், தநிகர், நாஸ்திகர், பகைவர் இவர்களது சரித்திரத்தைக் கேட்கக்கூடாது"

என்று விதித்திருக்கிறார்.

1. ஸ்திரீகள் சரித்திரம்:—ஸ்திரீகளின் ரூப யௌவனங்களைப்பற்றியதும் நடை நொடி பாவனைகளைப் பற்றியதுமான வர்ணனைகளைக் கேட்கக்கூடாது. அத னால் மனம் கலக்க மடைவதற்கு இடமுண்டு. இப்படிப்

பட்ட வர்ணனைகளைக் கேட்டு மனோவிகாரம் அடையாத வர்களின் தொகை வெகு சொற்பத்திலும் சொற்பமே. அநேகர் பாஷை விற்பத்திக்காகவென்று சிங்கார காவியங் களையும் இங்கிலீஷில் "லண்டன் அரண்மனையின் இரகசி யங்கள்'' என்னும் கதைப் புத்தகங்களையும் படிக்கிறார்கள். இந்த நூல்களைப் படித்து மனோவிகாரம் அடையாதவர்கள் எத்தனைபேரென்று சொல்லமுடியாது. ஆகையால் துஷ்ட சுபாவமுள்ள ஸ்திரீகளின் சரித்திரங்களைக் கேட்பதனால் கெட்ட எண்ணங்கள் விருத்தியாகுமாகையால், அவை களைக் கேட்கக்கூடாது.

2. தனிகர் சரித்திரம்:—தனிகர் சரித்திரத்தைக் கேட் கக்கூடாது. தனிகர் தனம் சம்பாதிக்கும் வழியையும், அவர்கள் போகம் அனுபவிக்கும் விதத்தையும், தேவேந் திரன் மாளிகையையொத்த அவர்கள் வீடுகளையும், அவற் றிலுள்ள விலை ஏறிய போகவஸ்துக்களையும், அவர்களைப் புலவர் புகழ்ந்து பாடுவதையும் பற்றிய வர்ணனைகளைக் கேட்டமாத்திரத்தில், தாமும் தனம் சம்பாதிக்க வேண்டு மென்னும் புத்தி பிறக்கும். அதனால் பொருளாசை உண் டாகி மனத்தில் பரபரப்பும் குழப்பமும் உண்டாகும். அப் பொழுது நன்மை தீமைகளை அறியும் பகுத்தறிவுக்கு இட மில்லாமற் போகும். தம்மை உலகத்தார் தனிகரென்றும் கீர்த்திமான்களென்றும் சொல்லிப் புலவர் புகழவேண்டு மென்று ஆசைகொண்டு அநேகர் அதர்மமாய் நடந்து, பிறருக்கு எவ்விதக் கஷ்டங்களை உண்டாக்கியாயினும் தனம் சம்பாதிக்க முயல்வார்கள். அப்படிப்பட்டவர்கள் கடைசியில் விட்டிற் பூச்சியைப்போல் தம் தேகத்தையும் புத்தியையும் ஆசையெனும் தீயில் அழியவிடுவார்கள். இப்படிச் சொல்வதால், நியாயமான வழியில் நின்று பொருள் சம்பாதிப்பவர்களின் சரித்திரத்தைக் கேட்கக் கூடாதென்று எண்ணலாகாது.

3. நாஸ்திகர் சரித்திரம்:—நாஸ்திகர் சரித்திரத்தைக் கேட்கக்கூடாது. அவர்கள் சரித்திரத்தைக் கேட்பதனால், கடவுளைப்பற்றிப் பலவகையான ஸம்சயங்கள் உண்டா வதுமன்றி, மனங்கலங்கி, மோஹத்துக்குள்ளாகும். ப்ராட்லா - இங்கர்ஸால் முதலிய நாஸ்திகர்களின் சரித்திரத்

தைக் கேட்டும், அவர்களது நூல்களை வாசித்தும், தாமும் நாஸ்திகரென்று வெளிப்படுத்திக் கொண்டால், புத்திமான்களென்று எண்ணப்படுவோமென்று அறிவிலிகள் பலர் தம்மை நாஸ்திகரென்று சொல்லிக்கொண்டு திரிவர்.

4. பகைவர் சரித்திரம் :—பகைவரின் சரித்திரத்தைக் கேட்ட மாத்திரத்தில் குரோத மென்னும் தீ எரியத் தொடங்கும். அதனால் ராக்ஷஸத் தன்மையை மேற்கொண்டு, அபகாரம் செய்வதற்கும் மனம் பரபரப்புக் கொள்ளும். ஆகையால் பக்திக்கு இதைப்போன்ற தடை வேறெதுவுமில்லை. பிரேமைக்குப் பலத்த விரோதி அப்ரேமை. காமக்குரோத லோபங்களை விருத்தி பண்ணுகின்றவைகளை எப்போதும் பார்க்கக்கூடாது, கேட்கக்கூடாது. தொடவுங்கூடாது. கெட்ட எண்ணங்களை யுண்டாக்கும் நாடகங்களையும், நாவல்களையும் படித்தல் கூடாது. கெட்ட காட்சிகளையும், கெட்ட கருத்துக்களையும் உண்டாக்கும் சித்திரங்களையும் பார்க்கக்கூடாது. கெட்டபேச்சுக்களையும், கெட்ட பாட்டுக்களையும் கேட்கக்கூடாது. ஆகையினாலே பிராசீன ரிஷிகள் சிஷ்யருக்குப் பாடஞ் சொல்லத் தொடங்குமுன் பின்வருமாறு அவர்களுடன் சாந்தி பாடமென்னும் பிரார்த்தனை செய்திருக்கிறார்கள்.

ஓம் ப்ஹத்ரம் கர்ணேப்ஹி: ச்ருணுயாம தேவா :,
ப்ஹத்ரம் பச்யாம அக்ஷப்ஹிர் யஜத்ரா:,
ஸ்த்ஹிரை அங்கைஸ் துஷ்டுவாம்ஸஸ் தநூப்ஹி:,
வ்யசேம தேவஹிதம் யதாயு :''

"தேவர்களே! நாங்கள் எப்போதும் மங்களகரமான மொழிகளையே கேட்போமாக. மங்களமான காட்சியையே காண்போமாக. குறைவற்ற அங்கங்களுடன் கூடிய தேகங்களைக் கொண்டு உங்களைத் துதித்து, தேவர்க்குரிய ஆயுளை அடைவோமாக.''

எனவே அசுபமான தெதுவும் செவிகளுக்காவது கண்களுக்காவது விஷயமாகாதிருக்குமிடத்து, இந்திரிய விகாரங்கள் உண்டாகா. அதனால் ஒருவன் ஜிதேந்திரியனாவான். ஜிதேந்திரியனானால், அங்கங்கள் உறுதிப்படும். அதனால் தீர்க்காயுசு உண்டாகும்.

இனி அகத்தடைகளையும் அவற்றை யொழிக்கும் வழிகளையும் பற்றி ஆராய்வோம். அகத்தடைகள் அழிந்தால், புறத்தடைகள் எவ்வித நஷ்டத்தையும் விளைவிக்க வொல்லா. ஆனால் இந்த நெறியில் காரிய சித்தியடைவது எளிதன்று. அதற்கு அதிகமாக ஸாதனம் செய்யவேண்டும். அகத்தடைகளில் முக்கியமானவை எவையென்றால் :- 1. காமம், 2. குரோதம், 3. லோபம், 4. மோஹம், 5. மதம், 6. மாற்சரியம், அதையொட்டியவை, 7. தான் தோன்றித்தனம், 8. லௌகிக சுயஞானம், 9. மனக் கள்ளம், 10. வீண் பேச்சு, 11. குதர்க்கம், 12. போலி மதாநுஸரணம்.

மனத்தைத் தத்தளிக்கச் செய்யும் காமத்தினால் உண்டாகும் பத்து வகையான தோஷங்களை மநுஸம்ஹிதை பின் வருமாறு எடுத்துரைக்கிறது :—

ப்ரிகபாக்ஷோ, திவாஸ்வப்ந:,
பரீவாத:, ஸ்த்ரியோ, மத:,
தௌர்யத்திரிகம், வ்ரித்ஹாட்யாச,
காமஜோ தசகோ குண :.

"வேட்டையாடுதல், சூதாடுதல், பகலில் நித்திரை செய்தல், புறங்கூறல், கூடா மகளிரின் கூட்டுறவு, கள்ளுண்ணல், கூத்து, பாட்டு, வாத்தியம், காரியமின்றித்திரிவது—இவை பத்தும் காமதித்னல் உண்டாகும் தோஷங்கள்."

சித்தத்தைக் கெடுக்கும் குரோதத்தினால் உண்டாகும் எண் வகைத் தோஷங்களாவன :—

பைசுந்யம் ஸாஹஸம், த்ரோஹம்,
ஈர்ஷா ஸூபார்த்த்ஹ தூஷணம்,
வாக்தண்டஞ்சைவ, பாருஷ்யம்,
க்ரோத்ஹஜோ'பி குணோஷ்டக:.

"பொல்லாங்கு, சாகசம், துரோகம், பொறாமை, பிறர் குற்றங் கூறல், பிறருக்குக் கொடுக்கவேண்டிய பொருளைக் கொடாது வஞ்சித்தல், தானமாகக் கொடுத்த பொருளை அபஹரித்தல், கடுமையாய்ப் பேசுதல், குரூரத்தன்மை இவை எட்டும் குரோதத்தினால் உண்டாகும் தோஷங்கள்."

காமக் குரோதங்களால் உண்டாகும் தோஷங்களை நம்மிடம் சேரவொட்டாமல் தடுக்கவும், சேரும் பக்ஷத்தில்

உடனே அவற்றைத் துரத்தி யொழிக்கவும் முயலவேண்டும். உலகத்திலுள்ள சகல தோஷங்களையும் தூரத்தில் வைக்கவும், அவைகளைச் சமீபத்தில் வரவொட்டாமல் தடுக்கவும் சில ஸாதாரண உபாயங்களும், விசேஷ தோஷங்களின் பொருட்டு விசேஷ உபாயங்களும் இருக்கின்றன. ஆகையால் சகல தோஷங்களின் சம்பந்தமாகவும் ஸாதாரண உபாயங்களைக் கவனித்தும், எந்த தோஷத்தைத் தொலைப்பதற்கு எந்த உபாயம் சகாயமென்று தோற்றுகிறதோ அதை உறுதியாகக் கைப்பற்றியும் வருவது அவசியமாகும்.

ஸாதாரணோபாயங்கள்

முதலில் ஸாதாரணோபாயங்களைப் பற்றி பேசுவோம்.

1. இயல்பாய் உள்ளத்தில் உதியாமல் புறக் காரணங்களால் உண்டாகும் பாபங்களைச் சிறிதும் கிட்ட வரவொட்டாமல் தடுக்கவேண்டும். பீஷ்மர் யுதிஷ்டிரனுக்குப் பின் வருமாறு உபதேசிக்கிறார் :—

ந க்ஹல்வப் யரஸஜ்ஞஸ்ய
காம: க்வசந ஜாயதே;
ஸம் ஸ்பர்சாத் தர்சநாத் வாபி,
ச்ரவணாத் வாபி ஜாயதே
அப்ராசநம், அஸம் ஸ்பர்சம்,
அஸந்த்ர்சந மேவச;
புருஸஸ்யைஷ நியமோ,
மந்யே, ச்ரேயோ நஸம்சய :

"எந்த விஷயத்தின் தன்மை இன்னதென்று ஒருவன் அறியாமல் இருக்கிறானோ, அதில், அவனுக்கு விருப்பம் உண்டாவதில்லை. காண்பதனாலும், தொடுவதனாலும், கேட்பதனாலுமே விருப்பம் உண்டாகின்றது; ஆகவே மனத்தில் களங்கமான எண்ணங்களைக் உண்டாக்கக் கூடியவற்றைப் பாராமலும், தொடாமலும், உண்ணாமலும் இருத்தலே ஒவ்வொருவருக்கும் உத்தமமான நியமம் என்பதில் சந்தேகமில்லை."

மனோ விகாரத்தை உண்டாக்கும் விஷயத்தில் புத்தியையாவது அவ்விஷயத்தை நுகரக்கூடிய இந்திரியத்தையாவது செல்ல விடக்கூடாது. சகல விதமான

துர்விஷயங்களினின்றும் மனத்தைத் தூரமாக வைக்க வேண்டும்.

2. நாம் எந்தப் பாவத்துக்கு உட்பட்டிருக்கிறோமோ, அதனால் உண்டான கேடுகளைக் குறித்துச் சிந்திக்க வேண்டும். காமத்தினால் விளையும் கேடு, குரோதத்தினால் விளையும் கேடு, காமக் குரோதங்களிலிருந்து ஜனிக்கும் தோஷங்களில் ஒவ்வொன்றினாலும் விளையும் கேடு இன்னின்னதென்றும், மொத்தத்தில் சகல தோஷங்களினாலும் விளையும் தீமைகள் இவையெனவும் சிந்தித்து, ஒவ்வொரு பாபத்துக்கும் 'இம்மையிலாவது மறுமையிலாவது பலத்தை அநுபவியாமல் தப்ப முடியாதென்னும் பகவந் நியமனத்தைச் சிரத்தையாய் ஆலோசிக்குமளவில், அந்தப் பாபங்களைச் செய்ய மனம் ஒருப்படாது. காமம்-குரோதம்-மோஹம் முதலிய உத்கட பாபங்களின் பலனை இம்மையிலேயே அநுபவிக்க வேண்டியதாகும்.

த்ரிப்ஹிர் வர்ஷைஸ், த்ரிப்ஹிர்மாஸைஸ்,
த்ரிப்ஹி: பக்ஷைஸ், த்ரிப்ஹிர் திநை:,
அத்யுத்கடை பாபபுண்யர்,
இஹைவ ப்ஹலம் அச்நுதே."
—ஹிதோப தேசம்

"அதி யுத்கடங்களாகிய பாப புண்ணியங்களால் உண்டாகும் பலனை மூன்று தினங்கள், மூன்று பக்ஷங்கள், மூன்று மாஸங்கள் அல்லது மூன்று வருஷங்களுக்குள் எப்போதாவது இந்தப் பிறவியில் அநுபவித்தே தீரவேண்டும்."

இந்த விஷயத்தை மனத்தில் வைத்துக்கொள்ளும் பக்ஷத்தில் காமம் குரோதம் முதலியவைகளிலிருந்து சகஜமாகவே மனம் விலகியிருக்கும். நன்னூல்களைப் படித்தாவது, நல்லோரின் உபதேசத்தைக் கேட்டாவது, உத்தமர்களின் ஒழுக்கத்தை உற்று நோக்கியாவது அல்லது தனக்குள்ளாகவே சிந்தித்தாவது,—எவன் விஷய லோலனாயிருக்கிறானோ அவனுக்கு பயங்கரமான பல வகை நோய்கள் உண்டாகுமென்றும், அவனது மூளை வலி குன்றுமென்றும், நரம்புகள் தளர்ந்து போகுமென்றும், ஞாபக சக்தி குறையுமென்றும், அழகு குலையு

மென்றும், ஜீவகளை முற்றிலும் க்ஷீணித்துப் போகு மென்றும், அதனல் அகால மரணமும் உண்டாகு மென்றும்; ஆகையால் அப்படிப்பட்டவர்களுக்கு இகத்தி லும் துர்க்கதி, பரத்திலும் துர்க்கதியே சம்பவிக்கு மென்றும் தெரியலாகும். அன்றியும் காமத்தை வென்ருல் காயம ஸ்திரம், காமத்தின் வழி சென்ருல் மரணம் திண்ணம் என்பதையும், "மரணம் பிந்து பாதேந, ஜீவநம் பிந்து த்ஹாரணத்," என்றபடி, வீரிய வீழ்ச்சி யினல் மரணமும் வீரிய தாரணத்தினல் ஆயுள் விருத்தியும் உண்டாகுமென்பதையும் உறுதியாய் உணர்ந்து, இந்திரிய வேட்கையைத் திருப்தி செய்விக்க சாகசியாம விருப்பது நமது கடனும். மற்றப் பாபங்களின் விஷயமாகவும் இவ்வாறே யோசித்துப் பார்த்தால், அந்தப் பாபங்களைச் செய்ய அஞ்சுவோம். காமக் குரோதங்களினல் விளையும் கேடுகளைப் பற்றிப் பின்னர் விரிவாய்க் கூறப்படும்.

3. பாபிகள் அடையும் துக்கத்தையும் புண்ணியாத் மாக்கள் அநுபவிக்கும் சுகத்தையும் பரியாலோசிக்க வேண்டும். பாபிகள் முதலில் இனிமையாய்த் தோற்றும் பாபங்களைச் செய்யத் தொடங்கிக் கடைசியில் கிலேச முறுவதையும், புண்ணியாத்மாக்கள் படிப்படியாய் ஆனந்தம் அநுபவித்துவருவதையும்காட்டும்திருஷ்டாந்தங் கள் பலவற்றை இதிஹாஸத்திலும் ஜீவித சரிதத்திலும் காணலாம். ஒவ்வொருவரும் தம் தம் சென்ற காலச் சரித்திரத்தை யோசித்துப் பார்த்தால், பாப விருத்தி யினல் விளைந்த நஷ்டங்களைப் பற்றியும் புண்ணிய இச்சையி ஞல் உண்டான அமிர்த மயமான சுப பலன்களைப் பற்றியும் தெரிந்து கொள்ளலாம். சிறிது அந்தர் முகப் பார்வையால் இருதயத்தின் உட்புறத்தை நோக்கினல், பாபத்தினல் உள்ளம் வெந்து போவதையும், பவித்திரத் தன்மையினல் ததும்பி யெழும் பரமானந்த வெள்ளத்தை யும் அனுபவ பூர்வமாய் அறியலாம். சாமானியனுன ஒருவன் தன் பரிசுத்தமான ஒழுக்கத்தினல் தெய்வத் தன்மை பொருந்தியவனு யிருந்தால், எத்தனையோ ராஜாதி ராஜர்களின் மகுடங்கள் அவனது திருவடிகளில் தாழ் வதையும், மஹா ஸாம் ராஜ்யாதிபதி யொருவன் பாபம்

பிரவாகத்தில் விழுந்து அடித்துக்கொண்டு போகப் பட்டால், சகல ஜனங்களின் பழிச் சொல்லுக்கும் பாத்திரமாவதையும் உணர்த்தும் ஜாஜ்வல்யமான பிரமாணங்களை இதிஹாஸத்தின் பிரதி பங்க்தியிலும் பரக்கக் காணலாம். பாபத்தின் பலன் துக்கம், புண்ணியத் தின் பலன் சுகம் என்னும் இவ்வுண்மையானது எந்த ஜாதியின் விருத்தி க்ஷயங்களை உற்று நோக்கினும் வெளிப் படையாகும். புண்ணியத்தின் பிரபாவத்தினால் ஒரு காலத்தில் நமது பாரத வர்ஷம் ஜகத்துக்கெல்லாம் சிரோ மணியாய் விளங்கியதென்றும், ஏதோ ஒரு பாபத்தினால் இன்று சகல நாகரிக தேசத்தாரின் பாதங்களின் கீழும் விழுந்திருக்கும்படியான சிறுமையை அடைந்திருக்கிற தென்றும் அறியாதார் எவர்! எந்த ஒரு தனி மனிதனின் அல்லது ஜாதியின் சென்ற கால நிலைமையையும் நிகழ் கால நிலைமையையும் ஆலோசித்துப் பார்த்தாலும் இவ்விஷயம் ஸ்பஷ்டமாய் விளங்கும்.

துர்ப்ஹிக்ஷாத் ஏவ துர்ப் ஹிக்ஷம்,
க்லேசாத் க்லேசம் ப்ஹயாத்ப்ஹயம்
ம்ரிதேப்ஸ்ய: ப்ரம்ரிதம் யாந்தி
தரித்ரா: பாப காரிண:
உத்ஸவாத் உத்ஸவம் யாந்தி
ஸ்வர்க்காத் ஸ்வர்க்கம்
ஸுக்ஹாத் ஸுக்ஹம்,
ச்ரத்தத்ஹாநாச்ச தாந்தாச்ச
த்ஹநாட்ஸ்யா: சுப்ஹகாரிண:

மஹா பாரதம், சாந்தி பர்வம், 181-அத், 3-4-ம் சுலோகம்.

"தீவினை செய்கிறவர்களே தரித்திரர், ஏனெனில் அவர் கள் துர்ப்பிக்ஷத்திலிருந்து துர்ப்பிக்ஷத்திலும், கிலேசத்தி லிருந்து கிலேசத்திலும், சாக்காட்டிலிருந்து சாக்காட்டிலும் விழுந்து மாள்கிறார்கள். சிரத்தாவான்களாகவும் ஜிதேந் திரியராகவும் நல்வினை புரிகிறவர்களே தனிகர்; ஏனெனில், அவர்கள் ஆனந்தத்திலிருந்து ஆனந்தத்தையும், ஸ்வர்க்கத்தி லிருந்து ஸ்வர்க்கத்தையும், சுகத்திலிருந்து சுகத்தையும் அடைகிறார்கள்."

பீஷ்மாசாரியார் பாபாத்மாக்களைத் தரித்திரரென்றும் புண்ணியாத்மாக்களைத் தனிகரென்றும் கூறுகின்றார். உள்ளபடியே பாபியைப்போல் தரித்திரனும் துர்ப்

பாக்கியனும் வேறொருவரில்லை. அவன் மனத்தில் தீவிர யாதனைக்கும், வெளியே உலகத்தில் பழிப்புக்கும் ஆளாகி இம்மையும் மறுமையும் இழந்தவனாகிறான். பாப காரியங்களைச் செய்துகொண்டு சுகம் அனுபவிக்கும் பலரைப் பார்த்திருக்கிறோமென்று சிலர் கூறலாம். ஆனால், இவ்வுலகத்தில் எவர்களைப் பார்த்துச் சுகமாய் இருப்பவர்களென்று கருதுகிறார்களோ, அப்படிப்பட்டவர்களின் உள்ளத்தில் சாந்தி குடி கொண்டிருக்கிறதா இல்லையா வென்று விசாரித்துப் பார்த்தால், பாபம் செய்து மனச்சாந்தியோடிருக்கும் ஒரு பிராணியையாவது காண்ப தரிதாகும். புண்ணியாத்மாவே உண்மையில் பாக்கியவான் என்பதற்கு என்ன சந்தேகம்? போகங்களில் இச்சையற்றுப் புண்ணிய காரியங்களில் மனத்தைச் செலுத்தி யுள்ளவர் திரிலோகாதிபத்தியத்தையும் லக்ஷ்யம் பண்ணமாட்டார்கள். ஆகையினாலேயே ஒரு துறவி ஓர் அரசனை நோக்கி இவ்வாறு கூறி யிருக்கிறான் :—

வயம் இஹ பரிதுஷ்டா
    வல்கலைஸ், த்வம் துகூலை:,
ஸம இஹ பரிதோஷோ,
    நிர்விசேஷோ விசேஷ:
ஸ து ப்ஹவது தரித்ரோ
    யஸ்ய த்ரிஷ்ணா விசாலா,
மநஸி ச பரிதுஷ்டே,
    கோ'ர்த்ஹவாந் கோ தரித்ர:

—வைராக்கிய சதகம்.

"யாம் சாமானியமாகிய மரவுரி யுடுத்து மகிழ்கிறோம். நீயோ விலை யேறிய பீதாம்பரம் அணிந்து களிக்கிறாய், எமக்கும் உனக்கும் உள்ள பேதம் என்னவெனில், எமக்கு மரவுரி பீதாம்பரம் இவை இரண்டும் ஒன்றே, உனக்கோ போக விருப்ப மிகுதியினால் மரவுரி உடுப்பது கஷ்டமாயிருக்கும். உலக சுகங்களில் தணிக்கமுடியாத அளவற்ற ஆசை வைத்தவனே தரித்திரன். மனம் சந்துஷ்டி யடைந்துவிட்டால், தநிகன் யார்; தரித்திரன் யார்?"

ஆகையால் மனத் திருப்தியுடையவர்களே மஹா பாக்கியசாலிகள். புண்ணிய புருஷனது உள்ளத்தில் எப்போதும் சந்தோஷம் நிறைந்திருப்பதனால், அவனே உண்மையில் தநிகன். பாபியானவன் பேராசையால்

துன்பப் படுகின்றமையால் அவன் ஸாம்ராஜ்யாதிபதியா யிருப்பினும் மஹா தரித்திரனே யென்க. எனவே, எவ் விஷயத்திலும் எப்போதும் எவர்களுக்குக் குறை இருந்து கொண்டே இருக்கிறதோ, அவர்களே தரித்திரர்; எதிலும் குறை எவர்களுக்கு இல்லையோ அவர்களே தனிகர். எவர்களுக்கு எதில் எதில் ஆசை உளதோ, அவர் களுக்கு அவ் விஷயத்தில் எப்போதும் குறைதான். குறை இல்லாவிடில் ஆசை இராது. எதில் எவர்களுக்குக் குறை இல்லையோ, அவர்களுக்கு அவ்விஷயத்தில் ஆசையும் உண்டாகாது. போகங்களை அநுபவிப்பதனால் ஆசை-நிவிருத்தியாகுமென்று எண்ணக்கூடும், ஆனால்,...

"ந ஜாது காம: காமாநாம்
உபப்ஹோகேந சாம்யதி;
ஹவிஷா க்ரிஷ்ணவர்த்மேவ
ப்ஹூய ஏவாப்ஹிவர்த்ஹதே."

"விஷயங்களை அனுபவித்தலால் காம நிவிருத்தி ஒரு போதும் உண்டாகாது; மற்று நெருப்பானது நெய் ஆகுதி செய்யச் செய்ய இன்னும் அதிகமாய்த் தக தகவென்று பற்றி யெரிவதுபோல், காமமும் போகானுபவத்தினால் விருத்தி யடைகின்றது."

4. மரண சிந்தனை: மரண சிந்தனை பாப நிவார ணத்துக்கு மேலான ஸாதனமாம். நீ ஒரு பாப காரியம் செய்ய விரும்பும் சமயத்தில் உனக்கு ஆப்த மித்திரனாயுள்ளவன் வந்து, நீ இன்னும் சில நாழிகைக்குள் சாகப்போகிறாய் என்று சொல்லும் பக்ஷத்தில், அதைக் கேட்ட பிறகு உனக்குக் கை கால் கள் ஆடுமா? நீ செய்யக் கருதிய பாபச் செயலில் உன் புத்தி செல்லுமா? ஆகையால், இந்த க்ஷணத்திலோ உத்தர க்ஷணத்திலோ மரணம் நேரிடுவது திண்ணமென்று எவன் நினைக்கிறானோ அவனுக்குப் பாபத்தில் இச்சை உண்டா காது. மிருத்யு என்னும் பெயரை நினைத்த மாத்திரத்தில் காமம் முதலிய சத்துருவர்க்கத்துக்கு நடுக்க முண்டாகும். இதற்குத் திருஷ்டாந்தமாக ஓர் அழகிய கதை உண்டு: ஓர் அரசன் கோரமான வியாதியால் பீடிக்கப்பட்டு உயிர்ப் பிணம்போல் விழுந்துகிடந்தான். அவனிடத்தில்

ஒரு யோகி வந்து, ஓர் பச்சிலேயின் ரஸத்தைக் குடித்தால் அந்த நோய் நிவிருத்தியாகுமென்று சொல்ல, அரசன் அந்த முறைப்படி தினந்தோறும் அந்தப் பச்சிலேயின் ரஸத்தை உட்கொண்டு வந்தான். யோகியும் அரசனுக்கு எதிரிலேயே உட்கார்ந்து அவனேவிட இரு மடங்கு மூம மடங்காகவும் சில தினங்களில் நாலு மடங்காகவும் அந்த ரஸத்தைப் பானம் பண்ணிவந்தான். சீக்கிரத்தில் அரச னுக்கு வியாதி நீங்கிப் பலன் உண்டானவளவில் தேக காந்தி விருத்தியாகத் தொடங்கியது. உடம்பில் வன்மை ஏற ஏற அரசனது மனத்தில் அசுத்தமான எண்ணங்கள் தலே காட்டத் தொடங்கின. அரசனும் அவ் வெண்ணங் களுக்கு வசமாகிப் பிரதி தினமும் அந்த ரஸத்தை எவ்வள வுக் கெவ்வளவு பானம் செய்துவந்தானே அவ்வளவுக் கல்வளவு அவனது மனம் துஷ்ப்பிரவிர்த்திகளால் தூண் டப்பட்டு நிலே கொள்ளாமல் அலேந்து தத்தளிக்கலாயிற்று. இப்படி யிருக்கையில் ஒருநாள் அரசன் யோகியைப் பார்த்து, "ஸ்வாமி, நான் தேவரீர் உபதேசித்தபடியே பச்சிலே ரஸத்தை உட்கொண்டு வந்ததில், வியாதி நீங்கி தேகத்தில் வன்மை அதிகப்படவும், நாளுக்கு நாள் நீச மான எண்ணங்கள் தோன்றி விருத்தியாகி என் மனத்தை வாட்டுகின்றன. அவற்றை அடக்க முடியாமல் பாபச் சேற்றில் அழுந்தப்போகிறேன். தேவரீர் என்னேவிட எத்தனேயோ மடங்கு அதிகமாய் அந்த ரஸத்தை உட் கொண்டிருந்தும், தேவரீரது பிரம்மசரியம் சிறிதும் சலிக்காமல் ஸ்திரமாய் இருப்பதற்குக் காரணம் என்ன?" என்று கேட்க, யோகி சொல்லலுற்ருர். "மஹாராஜ, இந்தக் கேள்விக்கு உத்தரம் பிறகு சொல்லுகிறேன். இப் பொழுது வேருெரு முக்கியமான செய்தியை உனக்கு அறிவிப்பது அவசியமாக இருக்கிறது. அஃதென்ன வெனில், இன்றுமுதல் முப்பதாம் தினத்தில் உனக்கு மரணம் சம்பவிக்கப்போகிறது. இந்த ரஸத்தை இதுவரை யில் உட்கொண்ட அளவுக்கு எழு மடங்காக இந்தச் சில தினங்கள்வரையில் நீ பானம் செய்துவர வேண்டும்," என்ருர். அன்றுமுதல் அரசன் அவ்வாறே ரஸபானம் செய்துவரவும், அவனது ஆரோக்கியமும் தேக காந்தியும் அற்புதமாய் விருத்தியடைந்தன. ஆனல் முன்னிருந்த

கெட்ட எண்ணங்கள் இப்பொழுது எங்கே? மரண சிந்தனையால் அவை இருந்தவிடம் தெரியாமல் முற்றிலும் மறைந்துபோயின. சில நாட்களுக்குப் பிறகு யோகி அரசனிடம் வந்து "பாப எண்ணங்கள் இப்பொழுது உன்னை எப்படிப் பாதிக்கின்றன?" என்று கேட்க, "ஸ்வாமீ, என் உள்ளத்தில் மரண சிந்தை பிரவேசித்திருக்கையில் அந்த துஷ்ப்பிரவிருத்திகள் எப்படித் தலைகாட்ட முடியும்" என்றான், அரசன். அப்பொழுது யோகி, "வேந்தே, உனக்கு மரணம் சம்பவிக்க இன்னும் ஏறக்குறைய ஒரு மாதம் இருக்கிறது. அப்படியிருந்தும், மரண பயம் பாப சிந்தைகளையெல்லாம் உன் உள்ளத்திலிருந்து ஓட்டிவிட்டன. ஆகவே நீ எப்பொழுதும் மரணத்தைக் குறித்துச் சிந்தித்துக்கொண்டிருந்தால், துஷ்ட நினைவுகள் எப்பொழுதும் நீ இருக்கும் இடத்தையும் எட்டிப்பாரா. நான் எக் காலத்திலும் மிருத்யுவை என் எதிரிலேயே பார்த்துக்கொண்டிருக்கிறேன். ஆகையால் என் இருதயத்தில் பாபப் பிரவிருத்திக்கு இடமேயில்லை" என்றார். ஆகவே பாப நாசத்துக்கு மரண சிந்தையே பரம ஔஷதம். மரணத்தின் பெயரைக் கேட்டமாத்திரத்தில், பாபங்கள் பறந்தோடிவிடும்.

5. பாபத்தை வென்ற பெரியாரின் திவ்விய சரித்திரங்களைப் படிப்பதும், சிரவணம் செய்வதும், பாப நிவிருத்திக்கு அவர்கள் அவலம்பித்த வழிகளைப் பின்பற்றுவதும், ஸாதகர்களுடன் சகவாசம் செய்வதும் முக்கியமாம். அக்கினியைப்போல் அமலமான ஒழுக்கமுடையாருடன் எவ்விதத்திலாவது கூட்டுறவு கிட்டினால், நம்முள் நீறு பூத்த நெருப்புப்போல் அடங்கிக்கிடக்கும் தேஜஸ்ஸானது அந்த ஸம்பர்க்கத்தினால் உத்தீபனம்பெற்று ஜ்வலிக்கும். சைத்தான் என்னும் துராத்மாவினால் இயேசுகிரிஸ்து பரீக்ஷிக்கப்பட்டபோது, அவர் "விலகிப்போ என்னைவிட்டு, சைத்தானே," என்று கடிந்துரைத்த வாக்கியத்தைப் படிக்கிறவன் தான்கூட அவ்வாறு சைத்தானைத் துரத்திவிட வல்லவனாயிருக்க வேண்டுமென்று வைராக்கியத்துடன் விரும்பாதிருப்பானோ? பாப சிந்தனைகளின் அவதாரமாகிய மாரனோடு சாக்கிய சிம்மனென்னும் புத்தபிரான்

போர் புரிகையில் அவர் காட்டிய அடக்கவொண்ணுத தேஜோமயத் திகழ்ச்சியையும், தடுக்கக்கூடாத தீரத்தைதையும், சிம்ம கர்ஜனத்தை கிகர்த்த ஹுங்கார த்வனியையும் நினைத்துக்கொள்வோரின் நெஞ்சத்தில் அபூர்வமும் அற்புதமுமான சக்தி தலை தூக்கி நிற்குமன்றே! தம்மை யோகப் பிரஷ்டனுக்கும் பொருட்டுத் தம்மண்டை வந்த மாரனைப் வார்த்து, தர்ம வீரனுகிய சாக்கிய சிம்மனூர் இடி முழங்கியதுபோல் கம்பீர ஸ்வரத்துடன் இவ்வாறு கூறலுற்றுன் :

மேரு : பர்வதராஜ
ராஜ ஸ்த்ஹாநநு
சலேக், ஸர்வம் ஜகத்
ரோ ப்ஹவேத்,
ஸர்வே தாரக ஸங்க்ஹ
ப்ஹுமி ப்ரபதேத்

ஸஜ்யோதிஷேந்த்ரோ நப்ஹாத்,
ஸாவே ஸ்த்வகரேய ஏகமத்ய :,
சுஷ்யேந் மஹாஸாகரோ,
நத்வேவ த்ருமராஜ மூலோபகதச்
சால்யதே அஸமத் வித்ஹ :

—லலித விஸ்தரம்

"மேருவென்னும் மலையரசு இடம் பெயர்ந்தாலும் பெயரும், ஸமஸ்த ஜகத்தும் சூந்யமாய்ப் போயினும் போகலாம். ஆகாயத்திலிருந்து சூரிய சந்திர நக்ஷத்திரங்கள் துண்டு துண்டாய் அறுந்து விழுந்தாலும் விழலாம். இந்தப் பிரபஞ்சத்திலுள்ள உயிர்களெல்லாம் ஏகத் தன்மை யடைந்தாலும் அடையலாம், மஹா சமுத்திரங்கூட வற்றிப் போயினும் போகலாம், ஆனல் யான் நிலைகொண்ட இந்த மரத்தடியிலிருந்து என்னைக் கொஞ்சமேனும் அசைக்க உன்னல் ஆகாது."

மரவன் வாளை உறையிலிருந்து உருவிக்கொண்டு எம்மனோர்களை எதிர்ப்பதுபோல் அவரையும் எதிர்க்க முனைந்த காலையில், அவர் ஸிம் ஹநாதம் செய்து திக் மண்டலம் நடுக்குறுமாறு சொல்லலுற்றுர் :

ஸர்வேயம் த்ரிஸஹஸ்யா மேதிநீ
யதி மாரை: ப்ரபூர்ண ப்ஹவே,த்
ஸர்வேஷாம் யத்ஹ மேருபர்வதவா
மரணிஷு க்ஹட்கோ ப்ஹவேத்,

தே மஹ்யம் ந ஸமர்த்ஹ லோம
சலிதும் ப்ராகேவ மாம்க்ஹாதிதும்
குர் பாச்சாபிஹி விக்ரஹேஸ்ம
வர்மிதேந த்ரிட்ஹம். *

—லலித விஸ்தரம். அத்: 21.

இந்த மூவாயிர வுலகங்களும் மாரர்களால் நிறைந்து ஒவ்வொரு மாரனும் மலைகளிற் சிறந்த மஹா மேருவைப் போன்ற பிரஹ்மாண்டமான வாளைக்கையிலேந்தி பயங்கர மாய்ச் சமர் புரியவரினும், தர்மமெனும் திடமான கவசம் பூண்ட என்னை இம்மியளவும் அசைக்கவே முடியாதென்றால் என்னை அடிக்க அவர்கள் தரமா ?

இந்த அற்புதமான தர்ம பராக்கிரமத்தையும் திட சித்ததையும் கண்டு மாரன் புறங்காட்டி யோடாது மற்றென் செய்வன் ?

நாம் அனைவரும் மாரனது தாஸாநுதாஸர்களாய் இருக்கிறோம். இத்தகைய தேஜோ மயமான சக்தியுடன் பிரகாசிக்கும் மஹா புருஷர்களின் புண்ணிய சரிதங்களைப் பலமுறை சிரத்தையாய் ஆராய்வதனாலும், உத்தமமான பிரமசரிய விரதத்தை அநுஷ்டித்துத் தம் ஒப்பற்ற ஸத்திய தர்ம பராக்கிரமத்தைக் காட்டியுள்ள தீரர்களின் பாத தூளியைச் சென்னிமேற் கொள்ளலாலும் நமக்கும் ஸத் காரியங்களைச் செய்வதில் உறுதியும் தைரியமும் உண்டாகும்; பாவத்தின் தளைகளைத் தகர்ப்பதில் துணிவும் உண்டாகும்.

நன்னெறியில் ஒழுகும் தார்மிகருடன் சகவாசம் செய்து அவர்களுடன் தர்மவிஷயமாய் ஆலோசனை புரிவதும், அத்தகைய புண்ணிய சீலரை ஸ்மரிப்பதும், பாப

* இவ்விரண்டு சுலோகங்களும் வடமொழி யாப்பிலக்கணத்துக்கு மாறாகவும் ஏனைய பிழைகள் நிரம்பியும் இருந்தும், மூலத்தில் கண்டபடி காட்டியிருக்கிறோம். பௌத்த மத வடமொழி நூல்களிற் சில இவ்வாறே வழுக்கள் நிறைந்த அழகு குன்றிய நடையில் இருக்கின்றன. —மொழிபெயர்ப்பாசிரியன்

மார்க்கத்தினின்று விலகுவதற்கு விசேஷ சகாயமாகும். இளமைதொட்டே தார்மிகரான தாய் தந்தையரால் நல் வழியில் பயிற்சி பெற்றவர்கள் பரம பாக்கியசாலிகள். அத்தகைய பாக்கியம் பெறக் கொடுத்து வைக்காதவர்கள் கூட தெய்வ பக்தியும் நல்லொழுக்கமும் வாய்ந்த மித்திரரின் சகவாசத்தால் எவ்வளவோ நன்மை யடைய லாம். தெய்வபக்தியுள்ள மித்திரர்கள் ஒரே மத சம்பிரதா யத்தைச் சேர்ந்திருக்க வேண்டு மென்கிற ஆவசியக மில்லை. வெவ்வேறு மதச்சார்பினரோடுகூட உண்மை யான நேசம் உண்டாவது முற்றிலும் சாத்தியமானதே யாம்.

பரிசுத்தமான அன்பு பாராட்டுதல் பாபமார்க்கத்தில் செல்லாதிருப்பதற்குச்சிறந்த மாற்று மருந்துபோல்வதாம். இந்த வாக்கியத்தின் உண்மையை அநேகர் அனுபவத்தில் அறிந்திருப்பார்கள். ஒருவன் ஒரு பாப காரியத்தைச் செய்யத் தொடங்கும் சமயத்தில் அவனுக்கு உயிர்த் தோழனு யிருப்பவன் அவனுக் கெதிரில் வந்து தோன்றும் பக்ஷத்தில், அந்தப் பாபத்தைச் செய்ய அவனுக்கு மனம் வருமா? வரவே வராது. எவனொருவன் மற்றொருவனைப் பாரமார்த்திகபுத்தியுடன் உள்ளன்போடு என்று தொட்டு நேசிக்கத் தொடங்குகிறானோ, அன்று முதல் அந்த நேச னது சகவாசத்தால்அவனது பாபப்பற்று படிப்படியாய்க் குறைந்து போய்விடுமென்பது திண்ணம். இதற்கு மூன்று காரணங்கள் உள்ளன.

க. ஒருவனது குணாதிசயங்களில் நமக்கு விசேஷ மாய்க்கவர்ச்சியுண்டானாலன்றி அவனோடு உண்மை நட்பு உண்டாகாது. அவ்வகைக் கவர்ச்சி உண்டாகவேண்டு மானால், சிரத்தை இருக்க வேண்டும். எவனுடைய ஒழுக்கம் நமது ஒழுக்கத்தைவிட உத்கிருஷ்டமாயும் பாப மற்றதாயும் உள்ள தென்று நமக்கு எண்ணம் உண்டாவ தில்லையோ, அல்லது எவனுடைய ஒழுக்கத்தில் விசேஷ மான இனிமையும் தூய்மையும் நமக்குத் தோற்றுவதில் லையோ, அத்தகையவனிடத்தில் நமக்கு எப்போதும் சிரத்தை உண்டாக முடியாது; அவனும் தன் குணச் சிறப்பால் நம் உள்ளத்தைக் கவர முடியாது. கவர்ச்சி

உண்டானால்தான் அவனது ஒழுக்கத்தைப் பின்பற்ற வேண்டுமென்னும் விருப்பம் பிறக்கும். அப்படிப் பின் பற்றுமிடத்துப் புண்ணியமும் தூய்மையும் நிநே நிநே வளர்ச்சியுறும். நமது உள்ளத்தைக் கவரும் நண்பனுடைய இனிய குணங்களைக் கருதக் கருத, நமது தீய குணங்களில் நமக்கு அதிக வெறுப்பு உண்டாகத் தலைப் படும். அதன்மேல் அத் தீய குணங்களை ஒழித்து நண்பனது உத்தம குணங்களை அடைய வேண்டுமென்னும் பலமான இச்சை உண்டாகும்.

உ. தர்ம நிஷ்டரான நண்பர்களோடு கூடியிருக்கையில் எப்போதும் ஸத் விஷயங்களைப் பற்றியே ஸம்பாஷணை நடந்து கொண்டிருக்குமேயன்றி அஸத் விஷயங்கள் அங்கே தலை காட்டா. அத்தகைய ஸத் ஸம்பாஷணையினால் எவ்வளவு நன்மைகள் உண்டாகுமென்பதை எல்லோருமே அறிந்திருக்கிறார்கள்.

ங. ஸத் விஷயங்களைப் பற்றியும் சாது சிந்தைகளைப் பற்றியும் ஒருவரோடொருவர் கலந்து ஸம்பாஷிப்பதனால் உள்ளத்தில் உரம் நிலை பெறுகின்றது. அப்பொழுது, 'என்னுடைய உயிர்த் தோழன் எதை இழிந்ததெனக் கருதுகின்றானோ அக் காரியத்தை நான் எவ்வாறு செய்யத் துணிவேன்; அப்படிச் செய்தால், அவன் என்னை நேசிப்பானா?' என்னும் எண்ணங்கள் உதிக்கும். இதுவேயுமன்றி, நண்பர்களின்முன் ஒன்றையும் மறையாமல் நம் குற்றங்களையெல்லாம் மனம் விட்டு எவ்வளவுக்கெவ்வளவு வெளியிடுகிறோமோ, அவ்வளவுக் கவ்வளவு அவர்களுடைய ஒற்றுணர்ச்சியையும் உதவியையும் பெறுவோம். பாதகங்களையும் அசுர சுபாவத்தின் ஆகர்ஷணத்தையும் எதிர்த்துத் தன்னந்தனியாய்த் துர்ப்பல சித்தத்துடன் போராடுகையில் ஸன்மார்க்கத்தில் ஒழுகும் சிநேகிதர்களின் உள்ளன்போடுகூடிய உதவி கிடைக்குமாகில், எவ்வளவு மட்டிலும் தர்ம சக்தி விருத்தியடைந்து பாதகத்தின் அபஜயம் சுலபமாகுமென்பது அனைவரும் அறிந்துகொள்ளக் கூடியதேயாம்.

உண்மை நட்பினால் உண்டாகும் இத்தகைய அமிர்த மயமான பலத்துக்கு உதாரணமாக ஒரு சாமானிய நிகழ்ச்

தியைக் கூறுகின்றேன். ஒரு சிறுவன் பதினான்கு வயதும் பிராயத்திலேயே தன் தாய் தந்தைகளை விட்டுப் பிரிந்து வேறோர் இடத்தில் வசித்துவர நேர்ந்தது. அச்சிறுவன் போய் வசித்துவந்த குடும்பத்தில் ஏறக்குறைய எல்லோரும் சிற்றின்பப் பிரியர்களாயும் சுராபானம் செய்கின்றவர்களாயும் இருந்தனர். அவர்களில் சிலர் அடிக்கடி அவன் எதிரிலேயே உட்கார்ந்து மதுபானம் செய்து அவனைக் கெடுக்க முயன்றனர். குடும்பத் தலைவனே தன் வீட்டுக்கு வேசைகளைக் கூசாமல் வரவழைப்பது வழக்கமாயிருந்தது. ஒரு நாள் அவர்களில் சிலர் அந்தச் சிறுவனுக்கு முன்பாக மதுபானம் செய்து மதுபான மகிமையையும் அதனால் உண்டாவதாக அவர்கள் எண்ணிய இன்பத்தையும் அவனுக்கு எடுத்துரைத்து அவனையும் கொஞ்சம் குடிக்கும்படி வற்புறுத்தினர்கள். பாலகன் அவர்களுடைய துர்ப்போதனைக்கு இணங்க மனமற்றவனாயிருந்தும், அவர்கள் சொல்லும் மயக்க வசனங்களைக் கேட்கக் கேட்க, மனங் கலங்கி, கடைசியில் மதுபானஞ் செய்ய விருப்பங் கொண்டு, அம் மதுபான பாத்திரத்தை வாங்கக் கை நீட்டிய வளவில், வெளி நாட்டிலுள்ள தனது உயிர்த் தோழன் ஒருவனது வடிவம் அவன் மனத்தில் தோற்றியது. தோற்றவும், அவனிடத்தில் தான் வைத்திருந்த அளவு கடந்த அன்பும், இருவரும் பலமுறை மதுபானத்துக்கு விரோதமாயத் தம்மில் பேசிக்கொண்ட பேச்சுக்களும் இப்பொழுது அவனுடைய நினைவுக்கு வரவே, அவன் இவ்வாறு யோசிக்கலாயினன். "நான் என்ன காரியம் செய்ய இருக்கிறேன்? நான் இன்று சுராபானம் செய்து அதை என் சிநேகிதனுக்குத் தெரியாமல் மறைத்து வைக்க முடியுமோ? மறைத்து வைப்பேனாகில், என்னிலும் பார்க்க விசுவாச காதகன் வேறொருவன் உண்டோ? எவனிடத்திலே எனக்கு இவ்வளவு அன்பு உண்டாயிருக்கிறதோ, எவனிடத்தினின்று எதையும் மறைப்பது நியாயமன்றோ, அவனிடம் இதை வெளியிடாமல் ஒளிப்பது எப்படி கூடும்? வெளியிட்டால் அவன் மறுபடியும் என்னிடம் அன்பு செய்வானா? அவனோடிருந்து எத்தனை நாள் மதுபானத்துக்கு விரோதமாய்ப் பேசியிருக்கிறேன்? ஆகவே அவன் ஒருகாலும் என்னை நேசிக்கமாட்டான்.

ஆதலால், இப்பொழுது சுராபானம் செய்வேனு, அல்லது என் உயிர்த்தோழனிடம் என் மரியாதையைக் காப்பாற்றிக் கொள்வேனு?" என்று இவ்வாறு சிந்தித்துச் சிந்தித்து அந்தச் சிறுவனது மனம் தத்தளித்தது. ஒருபக்கம் மதுவின் மோஹந சக்தி புத்தியை பலமாய் மயக்கவும், மற்றொருபக்கம் பரிசுத்தமாகிய அன்புபரிந்து பற்றிழுக்கவும், சிறிதுநேரம் இவ்விரண்டுக்கும் போராட்டம் நடந்தபின், கடைசியில் அன்பே வெற்றி கொண்டது. பரிசுத்தமான நட்பினுல் உண்டாகும் உபகாரத்தை எடுத்துக் காட்ட இவ்விதமான திருஷ்டாந்தங்கள் எத்தனையோ இருக்கின்றன. ஆகையால் நல்லொழுக்கமுடைய நேசர்கள் நம்மால் எப்போதும் ஆதரவுடன் போற்றத் தக்கவர்கள்; பாவச்செய்கைகளை அடக்குவதில் அவர்கள் செய்யும் உதவி விசேஷமானது.

(6) பகவானுடைய ஸ்வரூப சிந்தனையும் பகவத் பிரார்த்தனையும் செய்தல் வேண்டும். தினந்தோறும் குறைந்தது ஒரு தடவையாவது எம்பெருமானிடத்தில் தன் விசேஷமான பாவங்களை எடுத்துரைத்து அவைகளை அகற்றுமாறு பிரார்த்தித்து அந்தப் பாவங்களுக்கு எதிர் மறையான பகவத் குணங்களைத் தியானித்தால், அவனது திருவருளாலும், தன்னுடைய அந்தர் திருஷ்டியின் வன்மையினுலும அந்தப பாவங்களின் வலிமை படிப் படியாய்க் குறைந்து, கடைசியில் முற்றிலும் அழிந்து போம். இந்த உபாயமே அதி சகஜமும், அதி மதுரமும். அதி உபகாரியுமாம். ஒவ்வொரு பாவத்தையும் தனித் தனியே எடுத்து நினைந்து எமபெருமானிடத்தில் அது தொலையும்படி பிரார்த்திக்க வேண்டும். பொதுவாக எல்லாப் பாபங்களும் தொலையும்படி—ஸமஸ்த பாப க்ஷயார்த்தம்—' கும்பலிலே கோவிந்தம் போட்டுப் பிரார்த்திப்பதனுல், அவ்வளவு நன்மை உண்டாகாது. "நான் பிசாசம்; பைசாசிகப் பிரவிருத்தி எனக்குள் புகுந்து எவ்வளவு சர்வநாசம் பண்ணுகிறது பார்த்தருளாய். அன்று என்னென்ன கெட்ட எண்ணமெல்லாம் எண்ணினேன்! நிர்மல ஸ்வரூபா, என்னைப் புனிதமாக்கி யருள்வாய், ஐயனே," என்றும், "நான் அசுரன், குரோதம்,

என் ஜீவிதத்தை எவ்வளவு விகாரப் படுத்துகின்றது! இன்னின்ன காரியங்களிலே நான் எவ்வளவு இழிந்த தன்மை காட்டியிருக்கிறேன்! ஹே, சாந்த ஸ்வரூபா, என்னுடைய க்ரோத குணத்தை விலக்கியருள்வாய்,'' என்றும் இவ்வாறு எம்பெருமானிடத்தில் ஒவ்வொன்றாகத் தன்னுடைய விசேஷமான பாவங்களை விண்ணப்பித்து, அவற்றினின்றும் காப்பாற்றியருளும்படி பிரார்த்தனையும், அந்தந்தப் பாபங்களுக்கு விரோதமான பகவத் குணத் தியானமும் செய்தால், அந்தப் பாபங்களினின்றும் நிவிருத்தி பெறலாம். இவ்விஷயத்தைக் குறித்து, அநேகர் தம்தம் வாழ்க்கை யனுபவங்களி லிருந்து சாக்ஷ்யம் சொல்லக்கூடும். பகவத் ஸ்வரூபத் தியானத்தினாலும் பகவத் பிரார்த்தனையினாலும் ஆயிரக்கணக்கான பாபிகள் பரித்திராணம் அடைந்திருக்கிறார்கள்.

(7) ஸாதாரணோபாயங்கள்: எம்பெருமானுடைய சர்வ வியாபகதத்துவத்தை ஸம்பூர்ணமாய் உணர வேண்டும். அவர் விச்வதச் சக்ஷு:—எங்கும் கண்ணுடையவர், அவருடைய கண் புகாத இடமே யில்லை. புற வுலகத்திலாகட்டும், அக வுலகத்திலாகட்டும், எங்கும் அவர் இல்லாத இடமே இல்லை. நெடுந்தூரத்தில் நடப்பதையும் அதி சமீபத்தில் நடப்பதையும் அவர் ஒரே தன்மையாய்க் கண்டறிகிறார். மனிதர் திருஷ்டியிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியும். ஆனால் அவருடைய திருஷ்டியினின்றும் தப்புவது எவருக்கும் எவ்விதத்திலும் சாத்தியமில்லை. புற வுலகத்தின் காரியங்களைத் தான் பார்த்துக் கொண்டிருக்கிறாரே; அக வுலகத்தின் காரியங்களையும் இருதயத்தின் ஆழ்ந்த அடித்தலத்தில் உதிக்கும் ஒவ்வொரு எண்ணத்தையும் மனிதனால் அறிய முடியா விட்டாலும், அவர் வெகு நுட்பமாய்க் கண்டறிகிறார். பாபத்துக்குத் தண்டனை விதிப்பவர் அவரே யாகையால், அவரே பிரத்தியக்ஷமாய்க் கண்டதற்கு வேறு சாக்ஷிகளினால் என்ன பிரயோஜனம்? அந்தர்யாமியாகிய எம்பெருமான் சகலத்தையும் அறிகிறார், ஒவ்வொரு பாப சிந்தையையும், பாப வாக்கையும், பாப காரியத்தையும் அவர் மயிரிழையும் பிசகாது மஹா சூக்ஷ்மமாய் அறிகிறார். அவர்

தர்மம் கோணுமல் நியாயம் தீர்க்கின்றவர், தீயவர்களைக் காய்கின்றவர். பாபஞ் செய்தால் தப்ப வழியில்லை. பாபிகளை அவர் தண்டித்தே தீர்ப்பார். எங்கே ஓடிப்போக முடியும்? எங்கே சென்ருலும் அங்கெல்லாம் அவரே விச்வதச் சக்ஷுவாய் இருக்கிருர். நிர்ஜனமான கானகமென்ன, கிரிகுகைகளென்ன, ஆழமான சாகர கர்ப்பமென்ன எங்கே போனுலும் அந்த விச்வதச் சக்ஷுவான அநந்த நேத்திரனை பகவானே இருக்கிருர். எங்கே ஓடியொளிய முடியும்? எங்கே தலையை மறைத்துக்கொள்ள முடியும்? வெளியிலும் விச்வதச் சக்ஷு, உள்ளிலும் விச்வதச்சக்ஷு, அந்த சக்ஷுக்களின்—கண்களின் பார்வைக்குப் புறமே செல்ல யாரே வல்லவர்? ஏ பாபீ, ஒருவரும் பாராதபடி தனித்த அறையிலே தாளிட்டுக் கொண்டு பாப கிருத்தியஞ்செய்ய எத்தனிக்கிருயே! ஒரு முறை மேல் நோக்கிப் பார். தலைக்கு மேலே கூரையையும் கீழே தரையையும் கவிந்து கொண்டிருப்பது எது? எவருடைய திருஷ்டி பாணம் உன் உள்ளுணர்வை ஊடுருவிச் செல்கின்றது? இதோ பார். உன்னைச் சூழ்ந்துள்ள இந்தச் சுவர்களின் ஒவ்வொரு பரமாணுவினின்றும் நெருப்புப் பொறிபோல் எவருடைய பார்வை உன்னை நோக்கித் தாவி வருகின்றது? எங்கும் சூழ்ந்துள்ள அப் பார்வையின் வலைக் கண்களுக்குள்ளே நீ சிறைப்பட்டிருக்கிருயன்ருே! கடவுளின் பார்வை செல்லாத இடமும் உண்டோ? மேலே நோக்கினுலும் விச்வதச் சக்ஷு, கீழே நோக்கினுலும் விச்வதச் சக்ஷு, முன்னும் பின்னும் விச்வதச் சக்ஷு, வலது பக்கத்திலும் இடது பக்கத்திலும் விச்வதச் சக்ஷு, அவ்வளவு மாத்திரமா? உன் தேகத்தின் ஒவ்வொரு மயிர்க்காலிலும் தசையிலும் எலும்பிலும் அதைவிட இன்னும் ஆழத்திலுள்ளதாய் ஒருவரும் உட்செல்ல முடியாத இரகசியமான இருதய குகையின் அடித்தலங்களிலும் அந்தப் பார்வை வியாபித்திருக்கிறதே. நீ எப்படித் தப்புவாய்? உள்ளத்தில் எண்ணம் தோன்றியும் தோன்ருமலும் இருக்கையிலேயே அதையெல்லாம் கண்டறியும் பார்வை யன்ருே அது? எல்லாப் பாபிகளையும் தண்டியாநின்ற உத்தமோத்தம நியாயாதிபதியும், உன் பாஷண்ட இருதயத்தைக் கண்டம் கண்டமாய்த் துண்

டிக்க வல்ல செங்கோலைத் தாங்கிய அறக் கடவுளும் ஆகிய அப்பரம புருஷன் எல்லாவற்றையும் கவனித்து உன் செய்கைகளை யெல்லாம் உற்று நோக்கிய வண்ணமா யிருக்கிறார்.

> "ஏகோ ஹமஸ்மீதி ச மந்யஸே த்வம்
> ந ஹ்ரிச்சயம் வேத்ஸி முநிம் புராணம்
> யோ வேதிதா கர்மண: பாபகஸ்ய
> தஸ்யாந்திகே த்வம் வ்ரிஜிநம் கரோஷி."
> "மந்யதே பாபகம் க்ரித்வா
> ந கச்சித்வேத்தி மாமிதி,
> விதந்தி சைவம் தேவாச்ச
> யச்சை வாந்த்ர பூருஷ:"

—மஹாபாரதம் ஆதி: அத் 74, சுலோ 28, 29

"நீ ஒருவனே தனித்திருப்பதாய் எண்ணிக் கொண்டிருக்கிறாய்; ஆனால் உன் உள்ளத்தில் அமர்ந்து நல்வினை தீவினைகளை நோக்கிக் கொண்டிருக்கும் புராண புருஷனை அறிகின்றாயில்லை. நீ செய்யும் தீவினைகள் ஒவ்வொன்றையும் உற்று நோக்கும் அப்பரம புருஷனது சந்நிதியிலேயே நீ தீவினை புரிகிறாய்."

"தான் இரகசியமாய்ச் செய்யும் தீவினைகளை ஒருவரும் அறிய மாட்டார்களென்று மனிதன் எண்ணிக் கொள்ளுகிறான். ஆனால் தேவர்களும் உள்ளத்தில் உறையும் இறைவனும் அவற்றை அறிகிறார்கள்." —(மஹாபாரதம், ஆதி பர்வம்.)

இவ்வாறு சிந்தித்துக் கடவுளின் அந்தர்—தர்சித்துவத்தை (உண்ணோக்கும திறனை) யும் சர்வ வியாபகத்துவத்தையும் உணர்ந்து எப்பொழுதும் விழிப்புடன் இருப்பவர்கள் ஒருகாலும் பாபஞ் செய்யக் சாகசிக்க மாட்டார்கள்.

8. எம்பெருமானால் அருளப்பட்டு நம்முள் நீறுபூத்த நெருப்புப் போல் அடங்கி யிருக்கும் அற்புதமான சக்தி சாமர்த்தியங்களை உணர்ந்து, அவைகளைப் பாபத்துடன் நாம் நிகழ்த்தும் போராட்டத்தில் பிரயோகிக்க வேண்டும். நாம் எல்லோரும் சர்வசக்திமானாகிய சர்வேசுவரனுடைய சந்ததியென்றும், அவன் நமக்கும் பரமசகாயன்

என்றும் கருதிவரும்பக்ஷத்தில், நடைப்பிணமாய்ப் விழுந்து கிடப்பவன் உள்ளத்திற் கூட பிரம்மதேஜஸ் பூர்ணமாய் ஜ்வலிக்கும். 'நான் தெய்வ சகாயமாகிய அபேத்திய கவசம் பூண்டிருக்கிறேன். அப்படிப்பட்ட என்னைப் பராபவப்படுத்தக் காமக் குரோதாதிகளால் ஆகுமா? பிரம்ம துர்க்கத்தைத் தகர்க்கும் ஆற்றல் பாப சக்தியின் மூலபலங்களுக்கு உண்டோ? நான் என்ன, ஜீவனற்ற சவமா? மஹா சக்தியினின்று உற்பவித்தவனல்லவா? நான் அறபமாகிய பாபத்தைக் கண்டு ஏன் அஞ்ச வேண்டும்? சண்டமாருதத்தின் முன் சிறு துரும்பு பறந்தோடிப் போவது போல், என்னுடைய ஒரு ஹுங்காரத்துக்கு முன் நிற்க மாட்டாது பாபமும் பறந்தோடிப் போய் விடுமே. சிங்கக்குட்டி குள்ள நரிக்கு முன் பதுங்குமோ?' உள்ளத்தில் இவ்வாறு அடிக்கடி சிந்தனை செய்து வந்தால் அநாயாசமாய்ப் பாவத்தை வெல்லலாம். இராமப் பிரசாதன் என்னும் வங்க நாட்டுச் சாக்த அடியார் இதே பாவனையில் இவ்வாறு பாடியிருக்கிறார்.

"தாயை இழந்த சேய் போல் ஏன் துயரப்படுகிறாய்? தவளையைக் கண்டு பாம்பு அஞ்சுவது ஆச்சரியமல்லவா? எல்லாம் வல்ல இறைவியின் பிள்ளையாயிருந்தும் நீ ஏன் மரண பாதைகளுக்குப் பயப்படுகிறாய்?"

பெருந்தகையாகிய கார்லைல் எனும் ஆங்கிலப் புலவர் இத்தகைய பாவனையில் நிலை பெற்றிருந்தமையாலேயே தம்மை வருத்திய பல இடுக்கண்களையும் தைரியமாய் எதிர்த்துப் போராடினார். அவற்றைத் துரும்புக்குச் சமானமாகவும் அவர் கருதாது உபேக்ஷையாயிருந்துவிட்டார். பாபப் பிரவிருத்தியின் சோதனைகளுக்கு அவர் இம்மியளவும் அசையவில்லை. இல்லாமையென்னும் கோரமாகிய ஆபத்துக்கு அவர் இரையாயிருந்தார்; ஈட்டிய பொருளையெல்லாம் இழந்தார்; பல தடவைகளிலும் அன்றன்றைய வயிற்றுப்பாட்டுக்கே கஷ்டமாயிருந்தது. வாய்மை நெறியினின்று சிறிது தவறியொழுக இசைந்திருப்பாரானால், அவருக்குத் திரண்ட செல்வம் சேர்ந்திருக்கும். ஆயினும் அவர் உள்ளத்திடையொளிரும் பகவத் சகாயத்தையே உறுதியாகக் கடைப் பிடித்து

உண்மை நெறியைத் தைரியமாய்க் காத்து நின்றார். உள்ளுணர்வில் இடை விடாமல் எரிந்து கொண்டிருக்கும் தெய்வச் சோதியைக் காணப் பெற்றவர்களை எவ்வகைப் பாபமும் எவ்விதத்திலும் துன்புறுத்த வொண்ணாது.

பொதுப்படையாகப் பாபத்தைத் தடுப்பதற்குக் கையாளக் கூடிய சில ஸாதனங்களை இதுகாறும் கூறி வந்தோம். இனி பக்தி மார்க்கத்தில் முக்கியமான தடைகளெனக் கீழே கூறப்பட்டவற்றுள் ஒவ்வொன்றையும் ஒழிப்பதற் கேற்ற விசேஷோபாயங்களை விளக்குவோம்.

1. காமம்

1. காமத்தினால் விளையும் பெருந் துன்பங்களைப்பற்றி அடிக்கடி நினைக்க வேண்டும். இரத்தத்தின முக்கிய ஸாரமே சுக்கிலம் என்னும் வீரிய ரூபமாய்ப் பரிணமிக்கிறதென்று தேக தத்துவ விற்பன்னர்கள் ஒரே மனதாய் ஒப்புககொண் டிருக்கிறார்கள். வைத்திய நிபுணராகிய டாக்டர் லூயிஸ் என்பார் இவ்வாறு கூறுகிறார்: தீய எண்ணங்களோடு தீச் செயல்களால் காம நுகர்ச்சி செய்கிறவர்களின் சுக்கிலம் நஷ்டமாகும். இரத்தத்தின் பரமோத்கிருஷ்ட ஸாரமாகிய சுக்கிலம் வீணே நஷ்டமாவதைவிட தேகாரோக்கியத்துக்கு அதிகக் கேடு விளைப்பது வேறு யாதுளது? பிரமசரியத்தை அநுஷ்டித்து இந்த வீரியத்தைப் பாதுகாத்துக் கொள்ளுகிறவர்களின் உடலும் உள்ளமும் பூர்ண சக்தியுடன் வளரும்.''

டாக்டர் நிக்கோலிஸ் இவ்வாறு எழுதுகிறார்.' 'சரீரத்திலுள்ள சிறந்த இரத்தமே ஆண்பெண் இருபாலாரினுடைய பிரஜோத்பத்திக்குரிய அம்சங்களாய்ப் போய் அமைகிறதென்பது வைத்திய நூலிலும் சரீர விஞ்ஞான நூலிலும் பெறப்பட்ட முடிபாகும். சுத்தமாயும் நேர்மையாயும் வாழ்கின்றவர்களின் சரீரத்தில் இப் பதார்த்தம் கலந்துபோய் மீண்டும் இரத்த வோட்டத்தில் புகுந்து சஞ்சரித்துக்கொண்டு மிகச சிறந்த மூளையையும் நரம்புகளையும் மாம்சபேசிகளையும் அமைக்கிறது. பிறகு மனிதனது இந்த ஜீவ சக்தியானது இரத்தத்தில் திரும்பிப் புகுந்து சரீர முழுதும் பரவி அவனை ஆண்மையும், உரமும், ஊக்க

மும், துணிவும், வீரமும் கொண்டவனுகச் செய்துவிடு கிறது. இப் பதார்த்தத்தை வீணுக்கினல், மனிதன் ஆண்மை குன்றி, மேலிந்து, மனேதிடனற்றுப் போவ தன்றி, அவனுடைய சரீர சக்திகளும் மானஸ சக்திகளும் தளர்ந்து போய்விடும். இம்மட்டோ, அவன் காமாதுர அழற்சிக்கு இரையாகிவிடுவான். சரீர யந்திரத்தின் கிரியை கள் கிரமமாய் நடைபெரு, இந்திரிய விர்த்திகள் விகிர்த மாகும், மாம்சபேசிகளின் இயக்கங்கள் தாறுமாருகும், நரம்பு மண்டலம் நிலே குலேந்து தூர்க்கதியுறும்; கடைசி யில் மூர்ச்சை, உன்மததம், மரணம், இவற்றில் வந்து முடியும்.'' இந்திரிய சுகத்துக்கு அடிமைப்படுவதனல் மரணமும் பிரம்மசர்யத்தினல் ஆயுள் விருத்தியும் உண் டாம்.''

சிவஸம்ஹிதையும் இந்த உண்மையையே இவ்வாறு அறிவுறுத்துகின்றது:

"மரணம் பிந்து பாதேந
ஜீவநம் பிந்துத்ஹாரணுத்"

"வீரிய ஸ்கலிதத்தினல் மரணமும் வீரிய தாரணத்தினல் ஆயுள் விருத்தியும் உண்டாம்."

மஹர்ஷி பதஞ்சலியார் யோக சூத்திரத்தில் கூறு கிருர்:

"ப்ரஹ்மசர்ய ப்ரதிஷ்ட்ஹாயாம்
வீர்ய லாப்ஹ:"

"பிரம்மசரியத்தில் நிலேத்திருப்பதனல் வீரியப் பேறு உண்டாம்."

டாக்டர் நிக்கோலிஸ் இன்னேரிடத்தில் இவ்வாறு எழுதுகிருர்:

"ஜனனேந்திரிய வியாபாரங்களே நிறுத்திவைப்பதி லிருந்து உத்தமமான சரீர சௌஷ்டவமும், சித்தஸ்தைரிய மும் ஆத்தியாத்மிக வாழ்வும் வாய்க்கும்." நித்திய பிரம்ம சரியத்தை அவலம்பித்தவர்களின் விஷயமாய் ஸந்து பௌல், ஸர் ஈசாக்கு நியூத்தன் என்பவர்களின் திருஷ் டாந்தங்களே எடுத்துக் காட்டி டாக்டர் லூயிஸ், அவர்க ளது உடல்களின் பரம பரிசுத்தமான இரத்த பிந்துக்கள்

தேஜோ ரூபமாய்ப் பரிணமிக்கின்றன வென்றும், பிரகிருதியே அவைகளை உத்தமமான வழியில் உபயோகிக்கிறதென்றும் கூறிவிட்டு, பின்னும் அதாவது, "பிரகிருதி தேவி அதே இரத்த பிந்துக்களைக்கொண்டு மூளையை இன்னும் கூர்மையுள்ளதாகவும், நரம்புகளையும் தசைகளையும் இன்னும் அதிகமான ஜீவசக்தியும் திடனும் உள்ளவைகளாகவும் அமைத்து வைக்கிருள்" என்கிருர்.

பிரம்மசரியத்தின் சிறப்பைக் குறித்து ஞானஸங்கலனி தந்திரத்தில் ஸ்ரீசதாசிவன் இவ்வாறு உரைக்கிருர்:

"ந தபஸ்தப இத்யாஹுர்
ப்ரஹ்மசர்யம் தபோத்தமம்,
ஊர்த்வரேதா ப்ஹவேத்
யஸ்து ஸ தேவோ நது மானுஷ:"

"அறிஞர் (சாமானியமாகிய) தவத்தைத் தவமெனப் போற்ருர். அவர் பிரம்மசரியத்தையே சிறந்த தவமென்பார். ஊர்த்துவ ரேதஸ்ஸா யிருப்பவன் (இந்திரியத்தைக் கட்டினவன்) தேவனேயன்றி மனிதனல்லன்."

பிரம்மசரியம் வளர வளர, இருதயம் மலர்ச்சியுறும். மூளை திடப்படும், உடல் வலிமை பெறும், உள்ளம் உறுதியடையும், முகம் திரு அழகுடன் திகழும். பிரம்மசரியம் குறையக் குறைய, உள்ளம் சோர்வடையும், மூளை திடங்குன்றும், உடல் வலி குறையும், முகம் அழகழிந்து ஒளியற்றுப்போம். தீயொழுக்க முடையார் சிலர் பலவகைப் புஷ்டிதரும் உணவுகளை உண்டு சரீரத்தைக் கொழுக்கச் செய்ய முயல்கின்றனர். ஆனல் அப்படிப்பட்டவர்கள் ஆயிரம் முயற்சி செய்தாலும் தம் தேகாரோக்கியம் படிப்படியாய் க்ஷீணித்துப் போவதைத் தடுக்க முடியாது. மனோ தௌர்ப்பல்லியத்தைப்பற்றி டாக்டர் பால்ரெட் இவ்வாறு கூறுகிருர்: "புத்தி க்ஷயமும் விசேஷித்த ஞாபக சக்திக் குறைவுமே காமாதுரர்களின் சித்தப் பிரமையின் லக்ஷணமாம்." இந்திரியங்களை அடக்காது விடுவதனல் அநேக யௌவனர்கள் மூளையின் பலக் குறைவு, மந்த புத்தி, ஞாபக மறதி, சினம், அமைதியின்மை, பசி தீபனமின்மை, குன்மம, அரோசிகம், நரம்புத் தளர்ச்சி, நெஞ்

சிடிப்பு, தலைவலி முதலிய பலவகையான தீராநோய்களுக் கிரையாகி வருந்து வதைப் பார்க்கிறோம்.

ஆகையால் மயக்கத்தை உண்டாக்கும் மாதர் முத லிய விஷயங்களிலிருந்து விலகியிருக்க வேண்டும். காமத்தை அடக்க வேண்டுமானால், தீய எண்ணங்களைத் கத்தியும் கையுமாய் எதிர்த்து ஒடுக்க வேண்டும். தீய எண்ணங்களுக்கு இடங்கொடுத்தால், பாபத்துக்குக் கொண்டாட்டம். ஏனெனில் தீய எண்ணங்களே பாபத் துக்கு ஆணிவேர். ஆகையால் தீய எண்ணங்களைத் தள்ளி வைத்தால், அறநெறி தெளிவாய்த் துலங்கும். சிலர் தீவினை ஒன்றும் செய்யாதிருந்தும், எப்போதும் தீய எண்ணங் களிலேயே முழுகியிருப்பர். அவர்கள் தம் உள்ளத்தி லிருந்து தீய எண்ணங்களை ஒழித்துவிட விரும்பினாலும், அப்படிச் செய்யத் திறனற்றவர்களா யிருக்கிறார்கள். இவ்வாறு தீய எண்ணங்களால் வருந்திய ஒருவன் டாக் டர் லூயிஸினிடம் வைத்தியம் செய்துகொள்ளப் போயிருந்தபோது, டாக்டர் அடியிற்கண்டபடி அவ னுக்குப் போதித்தார்:

"தீய எண்ணம் கொடியதென்றும், அனர்த்தங்களுக் கெல்லாம் அடிப்படையென்றும் நெஞ்சத்தில் உறுதியாய் உணர வேண்டும். அப்படி உணர்ந்தால், தீய எண்ணங் கள் உதிக்கும்போது ஜாக்கிரதையா யிருப்பாய். அவ் வெண்ணங்கள் தோன்றும்போதே, வேறு விஷயத்தில் மனதைச் செலுத்த முயல்வாய். தீய எண்ணங்களைத் தொலைக்க வேண்டுமென்ற சிரத்தை வாஸ்தவத்தில் உன்னிடமிருந்தால், நீ ஜாக்கிரதையா இருப்பாய்; அவ் வெண்ணங்கள் நித்திரையில் தோன்றினாலும், நீ உடனே விழித்துக்கொள்வாய். இவ்வாறு நிகழ்வதுண்டென்ப தற்கு அநேகர் சான்று கூறி யிருக்கின்றனர். அப்படி யிருக்க, ஜாக்கிராவஸ்தையிலேயே இந்தச் சத்துரு தோன்றினால், நீ மட்டும் சாவதானமா யிருக்கும் பக்ஷத் தில் அதிக கஷ்டமின்றியே அவனைத் துரத்த வல்லவ னாவாய். ஆனால் தீய எண்ணத்தை ஒழிக்க முடியுமா வென்று ஒரு நிமிஷமாவது உனக்கு ஐயம் உண்டானால், உடனே எழுந்து உடலுக்கு உழைப்புத் தரத்தக்க ஏதே

னும் ஒரு காரியத்தைச் செய்யத் தொடங்கு. ஒன்றுக்குப்பின் ஒன்ருகப் பலமுறை இப்படி முயன்று வந்தால், இரண்டொரு வாரத்தில் உன் எண்ணங்கள் முற்றிலும் உன் வசமாய்விடும். இதைத் தவிர ஆரோக்ய விதிகளை விசேஷமாய்க் கவனிக்க வேண்டும். சோம்பித் திரிவோரும், மிதூண் விரும்புவோரும் காம விகாரத்துக்கு எளிதில் இரையாகிருர்கள். ஆகையால் ஒவ்வொரு நாளும் இரண்டு மூன்று தடவை வியர்க்கும்படி நன்ருய் உழைக்க வேண்டும், தேகப் பயிற்சி செய்ய வேண்டும், அல்லது உலாவப் போக வேணடும். புஷ்டியானதும் சுலபமாய் ஜீர்ணமாகக்கூடியதும், காமத்தை எழுப்புந் தன்மையற்றதுமான உணவையே அருந்த வேண்டும். இரவு நெடும் பொழுதாவதற்கு முன் துயில்கொண்டு வைகறையுல் துயிலெழ வேண்டும். நல்ல காற்று வாட்டமான இடத்தில் நித்திரை செய்ய வேண்டும். படுக்கப்போகு முன்னும் படுக்கையிலிருந்து எழுந்த பின்னும் போதுமான அளவு குளிர்ந்த நீர் பருக வேண்டும்.''

இவ் வுபதேசத்தை அனுசரித்து நடந்த அம் மனிதனும் மற்றும் பல யுவ ஜனங்களும் இந்தப் பாபத்தினின்றும் விடுதலை யடைந்தார்கள்.

2. காமத்தின் கட்டிலிருந்து விடுபட்டு அறநெறியில் ஒழுக முயல்வோர் அநுஷ்டிக்கவேண்டிய நியமங்கள் இன்னின்னவை யென்று இனிச் சுருக்கமாய்க் கூறுவோம். உணவு சம்பந்தமாய்ச் சில நியமங்களைக் கவனிக்கவேண்டும். காமம் ரஜோ குணத்தினின்று உண்டாகிறது:

> "காம ஏஷ க்ரோத்ஹ ஏஷ
> ரஜோகுண ஸமுத்ப்ஹவ:"

"இந்தக் காமம், இந்தக் குரோதம், ரஜோ குணத்தினின்று உண்டாகிறது."

பகவத்கீதை, 3-ம் அத், 37-ம் சுலோ.

ஆகவே காமத்தை, குரோதத்தை எழுப்பத் தக்கதாகிய ராஜஸ ஆகாரத்தை விலக்கவேண்டும்.

" கட்வாம்ல லவணாத்யுஷ்ண
தீக்ஷ்ண ரூக்ஷ விதாஹிந:
ஆஹாரா ராஜஸஸ்யேஷ்ட
து:க்ஹ சோகாமயபரதா:"

"மிக மிகக் கைப்பு, உப்பு, புளிப்பு கலந்த காரமான சூடுள்ள ஆகாரங்கள் துக்கத்தை, சோகத்தை, ரோகத்தை, உண்டாக்குபவை, ராஜஸ குணமுள்ளவனுக்கு இஷ்டமானவை."

கீதை, ௧௭-ம் அத், ௯-ம் சுலோ.

ஆகவே இத்தன்மை கொண்ட ஆஹாரத்தை உண்ணலாகாது. மச்சம், மாம்ஸம், முட்டை, நண்டு, வெங்காயம், கடுகு, மிளகாய், உப்பு, அதிமதுரமான பதார்த்தங்கள், அதிக மசாலா சேர்த்துச் செய்த உணவுகள், அரிதில் ஜீர்ணிக்கிற பதார்த்தங்கள் இவை ஜிதேந்திரியத் தன்மையைச் சாதிப்பதற்குப் பிரதிகூல மானவை யென்று டாக்டர் லூயிஸ் கருதுகிறார். நம் தேசத்தில் விதந்துக்கள் உண்ணக் கூடாதென்று நிஷேதிக்கப் பட்டிருக்கிற பதார்த்தங்கள் காமத்தை அடக்குவதற்கு அநுகூலமானவை. பிரஹமசாரிணிகளாகிய விதந்துக்களின் பொருட்டு இருஷிகள் ஏற்படுத்தியிருக்கிற நியமங்களே தூய்மையான வாழ்வுக்கு அநுகூலமானவை. ஆகையால் விதந்துக்கள் புசிக்கக்கூடிய பதார்த்தங்களைப் புசித்தலே உத்தமம்.

" ஸைந்த்ஹவம் கதளி த்ஹாத்ரி
பநஸாம்ரஹரிதகி
கோக்ஷீரம் கோக்ஹ்ரிதஞ் சைவ
த்ஹாந்யமுத்க திலா யவா:"

"கல்லுப்பு, வாழை, நெல்லி, பலா, மா, கடுக்காய், ஆவின் பால், ஆவின் நெய், அரிசி, பயறு, எள்ளு, யவம்—இவை மிகப் பிரசஸ்தமானவை. போஜனம் பண்ணின பிறகு கடுக்காய் தின்பது நல்லது. தாம்பூல சர்வணம்—வெற்றிலை மெல்வது—நிஷித்தம், காமோத்தேஜகமான படியால். தானியங்களுக்குள்ளே கொள்ளும் பயறும் நல்லவை. படுக்கப்போகு முன்னும் அதிகாலையில் எழுந்த பிறகும் குளிர்ந்த நீர் பருகுவது நல்லதென்கிறார், டாக்டர் லூயிஸ். ஆனல் அந்த நீர் வடிக்கட்டிய—சுத்த ஜலமாயிருக்கவேண்டும்.

குடல் அசுத்தமா யிருப்பது தேகத்துக்கு மிக்க கெடுதி செய்யுமென்பதும் அவரது அபிப்பிராயம். மேலே சொல்லியபடி நீர் பருகுவது குடலைச் சுத்தப்படுத்துவதில் பயன்படும்.

கடினமான படுக்கையையும் கடினமான தலையணைகளையும் உபயோகிக்கவேண்டும். பஞ்சணை மெத்தைகள் கெடுதி செய்யும். ஆடையாபரணாதிகளில் போக விருப்பம் கூடாது.

இராத்திரி வெகு நேரம் வரையில் கண் விழித்திருக்கலாகாது. படுக்கப்போகுமுன் ஒரு நன்னூல் (ஸத்கிரந்தம்) படித்து ஈசுவரத் தியானம் செய்க.

இடைக்கிடையே உபவாஸம் இருப்பது நல்லது. ஏகாதசி உபவாஸம் போன்ற விரதாநுஷ்டானத்தால் தேகத்துக்கும் மனத்துக்கும் மிக்க அநுகூல முண்டாகும். அமாவாசை பூர்ணிமை இராத்திரிகளில் அன்னம் உண்ணா திருப்பது நல்லது.

தினந்தோறும் வியாயாமம் என்னும் சரீரப் பயிற்சியை ஜாக்கிரதையாகக் கவனிக்கவேண்டும். சிலம்பம் பழகுவதும் நன்றாய்க் காற்று வீசும் திறந்த வெளிகளில் வேகமாய் நடப்பதும் காமத்தை அடக்குவதற்குச் சகாயமாகும். ஒவ்வொரு நாளும் இரண்டு மூன்று தடவை உடம்பு வியர்க்கும்படி உழைப்பது மிக்க நன்மை பயக்கும். யோகிகள் அவலம்பிக்கும் ஆஸநம், முத்திரை, பிராணாயாமம் முதலியவை காமத்தைக் கடிவதற்குச் சிறந்த சாதனங்களாம். ஜிதேந்திரியத்துவத்தைச் சாதிக்கும் பொருட்டே ஆரிய ரிஷிகள் ஆஸநம் முதலியவற்றை ஏற்படுத்தி யிருக்கிறார்கள். பத்மாஸநத்திலோ ஸித்தாஸநத்திலோ அமர்ந்து பிராணாயாமம் செய்வதால் விளையும் பயன்களைச் சில நாளைய அப்பியாஸத்தினாலேயே எல்லாரும் அறிந்துகொள்ளலாம். இவ்விரண்டு ஆஸநங்களும் இந்திரிய விகாரங்களை அடக்குவதற்கு விசேஷ உபாயங்களாகும். இவற்றின்படி உட்காரும் முறையினாலேயே இந்திரிய விகாரங்கள் அடங்கும். பிராணாயாமத்தினால் மனத்தை ஸ்தூலத்திலிருந்து சூக்ஷ்மத்தில் ஏகாக்ரமாய்

நிறுத்த வல்லதாகும்; ஆகவே காமோத் தாபத்துக்குத் கொடிய சத்துருவாகும். உள்ளத்தில் தீய எண்ணம் தலை காட்டுமளவில் பத்மாஸனத்திலோ ஸித்தாஸனத்திலோ அமர்ந்து பிராணாயாமம் செய்தால் பிரத்யக்ஷ பலனைப் பெறலாம். எனவே, தீய எண்ணம் உடனே விலகிப் போம். இவ்வுபாயம் அயுக்தமென்றோ அசாத்திய மென்றோ எண்ணுகிறவர்கள் தீய எண்ணம் உதித்த வுடனே ஏதாவதொரு சரீர பரிசிரமத்தைச் செய்தால் அத் தீய வெண்ணத்தைத் துரத்திவிடலாம். இப்படிப்பட்ட சமயங்களில் உரத்த குரலில் பகவந் நாம ஸ்மரணம் செய் வதும் ஸங்கீர்த்தனம பண்ணுவதும் பெரும் பயனளிக் கும். இந்திரிய நிக்ரஹத்துக்குக் கௌபீன தாரணம் பரமப் பிரயோஜனமாம்.

அநாதுர: ஸ்வாநி க்ஹாநி
ந ஸ்ப்ரிசேத் அநிமித்தத:
ரோமாணிச ரகஸ்யாநி
ஸர்வாண்யேவ விவர்ஜயேத்:

மநுஸம்ஹிதை, 4-ம் அத், 144-ம் சுலோ

"வியாதியால் வருந்தாத காலத்தும், காரணமில்லா மலும், தன்னுடைய இந்திரியத் துவாரங்களையும் இரகசிய பாகங்களிலுள்ள கேசங்களையும் தொடக்கூடாது."

மனதைச் சுத்தமாய் வைத்திருக்க வேண்டுமென்னும் சிரத்தையும் ஆவலும் இல்லாவிட்டால் சரீர சம்பந்தமான எத்தனை நியமங்களை அநுஷ்டித்தாலும் பிரயோஜன மில்லை. பரிசுத்தமா யிருக்க வேண்டுமென்னும் எண்ணத்தோடு இத்த நியமங்களைக் கடைப்பிடித்து ஒழுகுகிறவனே காரிய சித்தி யடைவான்.

3. எப்போதும் ஏதோ ஒரு காரியத்தில் புத்தியைச் செலுத்தி யிருப்பது காம நிவிருத்திக்குச் சிறந்த உபாய மாகும். சதா காலமும் காரியங்களில் மூழ்கி யிருப்பவ னுக்கு இந்திரிய விகாரங்கள் உண்டாவது வெகு அரி தாகவே யிருக்கும். ஸ்வாமி தயானந்த சரஸ்வதியை ஒருவன், "ஸ்வாமி, தேவரீருக்கு இந்திரிய விகாரம் எப்போதாவது உண்டாவதுண்டா?" என்று கேட்டதற்கு அவர், "நான் எப்போதும் காரியத்திலேயே பிரவர்த்தித்

திருக்கிறேன். இந்திரிய விகாரங்கள் என்னை எப்படி அணுகும்?" என்றாராம்.

4. உன் வாழ்க்கையிலேயே சிற்சில சமயங்களில் சில நிகழ்ச்சிகளை முன்னிட்டு ஆண்டவனிடத்து பயபக்தியினாலோ பிரேமையினாலோ உன் உள்ளம் பூரித்திருக்கும். வாழ்க்கை சதமல்லவென்னும் திடமான உணர்ச்சியைச் சில நிகழ்ச்சிகள் உன் உள்ளத்தில் உண்டாக்கி யிருக்கலாம். சில சந்தர்ப்பங்களில் உன்னைப் போன்ற ஜீவப் பிராணியினிடத்து நீ அன்போ இரக்கமோ காட்டி யிருக்கலாம். இப்படிப்பட்ட முக்கியமான அனுபவங்களில் சிலவற்றைக் குறித்துவைதது்க்கொள். அவற்றை ஒரு காகிதத்தில் எழுதி வைத்துக்கொண்டு, தீய எண்ணம் மனத்தில் உதிக்கும் போது உடனே அதைப் பார். அப்பொழுது அந் நிகழ்ச்சிகளின் நினைவு உன் உள்ளத்தில் வெள்ளமிட்டுப் பொங்கி யெழுந்து அத் தீயஎண்ணத்தை முற்றிலும் அமிழ்த்தி ஒழித்துவிடும். இந்த முறையைக் கையாண்டு பலர் பயனடைந்திருக்கின்றனர்.

5. இன்னொரு உபாயம். ஸர்வதா 'பவித்திரத்துவம்', 'பவித்திரத்துவம்' (தூய்மை) என்று ஜபம் பண்ணுவது. உள்ளத்தில் இப்படி தியானிப்பதன்றி, வாயாலும் இடைவிடாமல் 'பவித்திரத்துவம்', 'பவித்திரத்துவம்' என்று உச்சரித்துக் கொண்டே யிருப்பது. காகிதத்தில் இந்த நாமத்தைப் பல தடவை எழுதி, அசுத்த எண்ணம் உள்ளத்தில் தோன்றும்போதெல்லாம் அதை மனனம் செய்வது. உண்ணும் போதும், உலாவும் போதும், நடை வழியிலும், நீர்த் துறையிலும் எக்காலமும் இந்தச் சொற்பொருளைச் சிந்தனை செய்வது. பரிசுத்த வாழ்க்கையால் விளையும் பயனை, எனவே அது ஆத்மாவை எவ்வாறு உயர்த்துகிறதென்பதையும் அதோடு தேக காந்தியையும் சௌந்தரியத்தையும் எப்படி விருத்திசெய்கிறதென்பதையும் கருதுவது. பவித்திரத் தன்மையால் உண்டாகும் தெய்வத் தன்மையினின்று மனித சரீரம் சௌந்தரியமடைகிறதென்பதற்கு யோக வாசிஷ்ட ராமாயணத்தில் ஓர் உதாரணம் காணப்படுகிறது. சிகித்துவஜமன்னனது மஹிஷியாகிய சூடாலை யென்பவள் முதிய வயதில்,

ஸ்வவிவேக க்ஹ தாபஹ்யாஸ வசாத்
ஆத்மோதயே ந ஸா!
சுகப்ஹே சோப்ஹ நா
புஷ்பலதேவாபஹி நவோத்கதா:

நிர்வாணப் பிரகரணம், 79-அ, 9-ம் சு.

"தன் சுய விவேகத்தைக் கொண்டு இடைவிடாத திடமான தியானப் பயிற்சியினின்று விளைந்த ஆத்மோதயத்தினால் புதிதாய் அரும்பிய புஷ்பங்களுடன் கூடிய இளங் கொடியை நிகர்த்து சௌந்தரிய சோபை வாய்ந்து விளங்கினாள்."

காசியிலும் ஹரித்வாரத்திலும் வாழும் விருத்த சந்நியாசிகளைப் பார்த்தால், பவித்திரத் தன்மையினால் மூப்பிலும் மக்களின் முக காந்தி எவ்வளவு சுந்தரமாய்ப் பொலியுமென்பது கோசரமாகும்.

6. 'இந்த உடம்பு இறைவன் உறையும் திருக்கோயில்' என்று எப்பொழுதும் சிந்தித்துக் கொண்டிருந்தால், உள்ளத்தில் காமம் புகாது. புறவுலகத்துத் திருக்கோயிலை எப்படி நாம் சுத்தமாய் வைத்துக் கொள்ளுகிறோமோ, அப்படியே இவ்வுடம்பு ஆண்டவன் எழுந்தருளி யிருக்கும் ஆலயம் என்னும் எண்ணம் உண்டானால் அதைப் பரிசுத்தமாய் வைத்துக் கொள்ள வேண்டுமென்று தானாகவே சிரத்தை பிறக்கும். இந்தச் சரீரமும், இந்த மனமும் எம்பெருமானது அதிஷ்டானமா யிருத்தலால் பரிசுத்தமானவை என்று கருதி அவற்றுள் எவ்வகை அசுத்தமும் இடம் பெறாதிருக்கும் வண்ணம் ஜாக்கிரதையா யிருத்தல் வேண்டும். நமது அறிவு நூல்களும் ஷட் சக்கரம் (ஆறாதாரம்) முதலியவற்றை உணர்த்தி, ஆண்டவன் சரீர மெங்கும் வியாபித் திருக்கிறான் என்னும் உண்மையை அறிவுறுத்தி எல்லோரையும் விழிப்புடன் இருக்கும்படி செய்கின்றன. விவிலியத்திலும் பவுல் நாயனார் பாபாத்மாக்களை விளித்து இவ் வுண்மையையே இவ்வாறு வற்புறுத்துகிறார்.

"நீங்கள் ஈசனுடைய திருக்கோயிலா யிருக்கிறீர்களென்றும், ஈசனுடைய சக்தி உங்களில் உறைகிறதென்றும் அறிவீர்களா? எவனாகிலும் ஈசனுடைய

திருக்கோயிலை அசுசியாக்கினால், அவனை "ஈசன் அழிப்பான்; ஏனெனில், ஈசனது திருக்கோயில் புனிதமானது, அத்திருக்கோயிலே நீங்கள்,".

—கொரிந்தியர், 3-ம் அதி. 16, 17.

இப்படிப்பட்ட வாக்கியங்களைக் கேட்ட பிறகு எவரே அபரிசுத்தத்தை வருந்தி யழைக்கத் துணிவர்? ஆகையால் இந்த பாவனையானது உள்ளத்தில் எப்போதும் குடிகொண்டிருந்தால் காமம் முதலிய பேய்கள் கிட்டவும் நெருங்கா.

7. பக்தி சாதனத்துக்கு ஏகாந்த வாஸம் பெருந் துணையேயாயினும். காம சிந்தைகளால் பீடிக்கப்படுகிற ஆரம்ப சாதகனுக்கு அவ் ஏகாந்த வாஸம் பெரும்பாலும் தடையாய் ஏற்படலாம். அப்படிப்பட்டவன் நிர்ஜன வாஸம் செய்யாமல் ஜன சங்கத்தில் கலந்து வாழ்வதே உத்தமம்.

8. ஆழ்ந்த வைஞ்ஞானிக அல்லது தத்துவ ஆராய்ச்சிகளில் அமர்ந்திருப்பதும பாப சிந்தைகளைத் தடுப்பதற்கு உத்தமமான உபாயமாகும். ஆழமான விஷயங்களைச் சிந்திக்கச் சிந்திக்கச் சித்தமானது உயர்நிலையை நாடி நிற்குமே யன்றிக் கீழ் நோக்கிச் செல்ல விரும்பாது. தாவர நூல் விற்பன்னனாகிய ஓர் அறிஞனை எனக்குத் தெரியும், அவன் அல்லும் பகலும் அநேகமாய் அந்நூலாராய்ச்சியிலேயே ஆழ்ந்திருப்பான். அவன், "என் வாழ் நாளில் மாதரைப்பற்றி நினைக்க இன்னும் எனக்கு நேரம் கிடைக்கவே யில்லை" என்று ஒருகால் சொன்னான். பஞ்சதசி என்னும் வேதாந்த நூலில் இவ்விஷயமாய் அடியிற்கண்ட உத்தமோபதேசம் காணப்படுகிறது.

" ஆஸுப்தேர் ஆம்ருதே: காலம்
நயேத் வேதாந்த சிந்தயா!
தத்யாந் நாவஸரம் கிஞ்சித
காமாதீநாம் மநாகபி."॥

"நித்திரை வருகிற வரையிலும், மரணம் சம்பவிக்கிற வரையிலும் வேதாந்த விசாரத்தில் காலத்தைக் கழிக்க வேண்டும். காமம் முதலியவைகளுக்குச் சிறிதாயினும் இடந்தரலாகாது."

வேதாந்த விசாரத்தில் 'நான் யார்? ஜகத்து எத்தன்மையது? ஜகத்துக்கும் எனக்குமுள்ள சம்பந்தம் யாது? பரமாத்ம ஸ்வரூபம் எப்படிப்பட்டது?' என்னும் சூக்ஷ்ம விஷயங்களைப் பற்றிய ஆராய்ச்சியில் மனம் அழுந்திப் போகிறபடியால், காமம் முதலியவை தூரத்திலிருந்தே ஓடிப்போய் விடுகின்றன.

ஊன் விருப்பங்களைக் கவனிக்க வேண்டியிருப்பது ஆழ்ந்த விசாரத்துக்கும் தியானத்துக்கும் பெருந் தடையாயிருக்கிறது. ஆகையால் சரீரத்தை மிகத் துச்ச பதார்த்தமென்றும், ஆத்ம விசாரத்துக்குச் சத்துரு வென்றும் கருதுகிறவர்கள் தேகத்தின் போகாபிலாஷைகளைத் திருப்தி செய்விக்க முயலார். கிரேக்க ஞானியாகிய ஸாக்ரடீஸை அவர் மரணத்துக்கு முன் ஒருவன், "நீங்கள் எப்படி மரணத்துக்குச் சிறிதும் அஞ்சாமலிருக்கிறீர்கள்?" என்று கேட்க, அவர், 'இன்று இந்த தேகத்திலிருந்து ஆத்மா பிரிந்து போகப் போகிறதைப்பற்றி எனக்கு ஆநந்தமாயிருக்கிறது. என்னுடைய தத்துவ விசாரத்துக்கு எப்பொழுதும் பலவித உபாதைகளை உண்டாக்கி வந்ததும், இந்திரிய விகாரங்களால் மனதை ஸ்திரப்படவொட்டாமல் பிரதிகூலமாயிருந்து வந்ததுமான இந்த தேகம் இனி என் ஆத்மாவை எவ்விதத்திலும் தொடவும் வல்லதாகாது. ஆகையால் மரணம் எனக்குப் பரமாநந்தமாயிருக்கிறது,'' என்றார். விவேகிகள் சரீரத்திலிருந்து ஆத்மாவைச் சாத்தியமான மட்டிலும் தூரமாய் வைத்திருக்க முயல்வர். ஆழ்ந்த விஷய விசாரம் செய்ய முயலும்போது இந்திரிய விகாரங்கள் அந்த விசாரத்துக்குப் பலவகைத் தடைகளை உண்டுபண்ணுகின்றன. ஆகையால் தேகத்தை முற்றிலும் மறந்தாலன்றி, எந்த ஸத் விஷயத்திலும் மனத்தைப் பூர்ணமாய்ச் செலுத்த முடியாது. தேக உணர்ச்சி எப்பொழுது அற்றுப்போகிறதோ அப்பொழுதே பகவத் சிந்தையில் ஸமாதி கைகூடும். நான் கூறிய தாவர சாஸ்திர அறிஞனிடம் நம் தேசத்து லெப்டினெண்ட் கவர்னர் ஒருவர் தாவர நூலில் பாடங்கேட்க வருவதுண்டு. சிற்சில சமயங்களில் கவர்னர் துரை வந்திருக்கிறாரென்று செய்தி சொல்லியும்,

அவர் தாவர நூலாராச்சியில் அவ்வளவு ஸமாதி நிஷ்டராய் இருந்தமையால், யாராவது வந்து இவர் தேகத்தைப் பிடித்து இரண்டு மூன்று தடவை பலமாய்க் குலுக்கின லொழிய, இவருக்குப் புற உணர்ச்சி உண்டாகாது. கவர்னருக்கு இவருடைய தரிசனம் கிடைக்காது. இப்படிப் பட்டவர்கள் மீது காமத்தின் ஆதிபத்யம் எப்படிச் செல்லும்? ஸர் ஈசாக்கு நியூத்தன் என்னும் விஞ்ஞானி இத் தூர்க்குணத்தின் உபத்திரவத்துக் குட்படாதிருந்தாரென்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம்.

9. அன்னையை நினைவு கூர்வது காமத்தைக் கடிவதற்குப் பரமாநுகூலமானது. இவ்வுலகத்தில் தாயைப்போல் இனிமையும் தூய்மையும் பொருந்திய பொருள் வேறொன்றில்லை. நாம் இவ்வளவு அன்புடன் பூஜித்து நேசித்து வரும் அந்தத் தாய் என்னும் பெயரைச் சொன்ன வளவிலேயே நம் உள்ளத்தில் எவ்வளவு பரிசுத்த உணர்ச்சி உண்டாகின்றது! தாயைப்பற்றி நினைத்த மாத்திரத்தில் அசுத்தமான எண்ணம் அகன்று விடுகிறது. தாய் என்ற பெயர் இவ்வளவு பரிசுத்தமா யிருப்பதினாலேயே ஆண்டவனைத் தாயே என்று அழைக்கும்போது எவ்வளவு ஆனந்தம் உண்டாகிறதோ அவ்வளவும் மற்ற எந்தப் பெயரைச் சொல்லி அழைத்தாலும் உண்டாவதில்லை. ஆண்டவன் நமக்குத் தாயும் ஆனவர் என்ற எண்ணம் எவருடைய உணர்வில் இடைவிடாது சுடர்விட் டொளிர்கின்றதோ, அவர்களுடைய உயிர் எப்போதும் பூரித்திருக்கும்; எவ்வகைக் களங்கத்தாலும் களங்கமுறாது. அகில ஜகத்திலும் ஆண்டவன் அன்னையாய் விளங்கும் தன்மையை—பகவானது மாத்ரு பாவத்தை—உணர்ந்து அநுபவித்தால், உன்னைச் சூழ இருக்கும் ஒவ்வொரு வஸ்துவும் அவளுடைய திருமுக மண்டலத்தைப் பிரதிபலித்துக் காட்டும். மாதர்களைப் பார்த்த மாத்திரத்தில் மாதாவின் நினைவு எவர்க்கு வருகிறதோ, அவர்களுடைய உள்ளத்தில் அசுத்த பாவம் எவ்வண்ணம் புகும்? ஞானதிருஷ்டி யுள்ளவர்களுக்கு எல்லா மாதர்களும் மாதரு ஸ்வரூபமாய்த் தோன்றுவர். அப்படிப்பட்டவரின் இருதயத்தில் பரிசுத்த பாவம் பொங்கித் ததும்பும். அப்படிப்பட்ட இருதயத்திலே காமத்துக்கு

அதிகாரம் ஏது? ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸருக்கும் அவருடைய பத்தினிக்கும் யாதொரு அங்க ஸம்ஸர்க்கமும் இருந்ததில்லை யென்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். அவரே தம்மைப்பற்றிப் பின்வரும் விருத்தாந்தத்தைக் கூறியிருக்கிறார்:—ஒருநாள் அவருடைய பத்தினி அவருடன் ஓர் இரவு கழிக்க விரும்புவதாகத் தன் கருத்தை வெளியிட்டாள். பரமஹம்ஸர் அதற்கு இசைந்தார். அன்றிரவு அந்த அம்மாள் அப்படியே வந்து அவருடைய பாதங்களை வருடத் தொடங்கவும், பரமஹம்ஸர் தாம் வழிபடும் தெய்வத்தை விளித்து: "தாயே, நீ தந்திரமாக என் மனைவியின் வடிவம் தாங்கி என்னிடம் வந்தாயாக்கும்! சரி, வா, வா, பெற்றதாயிடத்தில் பயமென்ன?" என்றாராம். இரவு கழிந்தது; ஆனால் யாதொரு சிற்றின்பக் கருத்தும் கணப்பொழுதேனும் அவர் உள்ளத்தில் ஏற்படவில்லை.

10. அநேகர் மானுட யாக்கையின் அவலக்ஷணத்தை நினைந்து நினைந்து விசேஷ நன்மை அடைந்திருக்கிறார்கள். யாக்கையின் அருவருக்கத்தக்க தன்மையை நினைத்துக் கொள்ளும்போது சுக போகத்தில் மனஞ் செல்வதரிது.

அமேத்ய பூர்ணே க்ரிமிஜாலஸங்குலே
ஸ்வப்ஹாவ துர்க்கந்த்ஹ விநிந்தி தாந்தரே!
களேபரே மூத்ரபுரிஷ பூரிதே
ரமந்திமூட்ஹாவிரமந்திபண்டிதா:!

யோகோபநிஷத்து.

"அசுத்தம் நிறைந்ததும், புழுக் கூட்டங்கள் அடர்ந்ததும், இயற்கையாகவே துர்க்கந்தம் வீசுவதும், மல மூத்திரங்கள் நிரம்பியதும், இகழத்தக்க உட்புறம் வாய்ந்ததுமாகிய இந்தச் சடலத்தில் மூர்க்கரே (போக விருப்பத்தால்) இன்புறுவர்; அறிஞர் அதினின்று விலகுவர்;"

இந்த யாக்கையின் † ஒன்பது வாசல்களி லிருந்தும் வெளி யாகும் மலத்தை நினைத்துக்கொள்ளும் பக்ஷத்தில், யாக்கை எவ்வளவு அருவருப்பான தென்பது புலப்படும்.

† ஒன்பது வாசல்களாவன:—இரு கண்கள், இரு செவிகள், இரு நாசித்துளைகள், வாய், இரு மல மூத்திரத் துவாரங்கள்.

அதோடு மனித சரீரம் அஸஹ்யமாயும் நிலையற்றதாயு மிருப்பதையும், மரணத்திற்கு பின் அது அடை யும் கதியையும் கருதினல் அதில் அழகு எங்கிருந்து வரும்?

யோக வாசிஷ்டத்தில் ஸ்ரீ இராமபிரான் கூறுகிருர்.

த்வங்மாம்ஸ ரக்த பாஷ்பாம்பு
ப்ரித்ஹக் க்ரித்வா விலோசநம்!
ஸமாலோகய ரம்யஞ்சேத்
கிம் வ்ரித்ஹா பரிமுஹ்யஸி !!

வைராக்கியப் பிரகரணம், 21-அ,2-சு.

"(எந்த யுவதியின்) தோல், சதை, இரத்தம், கண்ணிர் இவைகளேத் தனித்தனியே பகுத்துப் பார்த்து அந்தக் காட்சி இன்பமா யிருந்தால் பார்த்துக்கொண்டே இரு; இல்லாவிடில் ஏன் வீணே மையல் கொள்ளுகிருய்?"

இதோ மாம்ஸம் இதோ ரக்தம்
இதோ'ஸ்த்ஹிநீதி வாஸரை:!
ப்ரஹ்மந் கதிபயைரேவ யாதி
ஸ்த்ரீ விஷ. சாருதா !!

வைராக்கியப் பிரகரணம், 21-அ, 25.சு.

"ஒ வேதியனே, பெண்ணெனும் நஞ்சின் எழில் சிலநாட் களுக்குள்ளாகவே ஓரிடத்தில் இரத்தமாகவும், ஓரிடத்தில் என்புகளாகவும் சிதறுண்டு போய் விடுகிறது."

யோகோபநிஷத்தில் சுகப் பிரஹ்மரிஷி இவ்வாறு கூறுகிருர்:—

வ்ரணமுக்ஹமிவ தேஹம்
பூதிசர்மாவநத்ஹம்
க்ரிமிகுல சதபூர்ணம்
மூத்ரவிஷ்ட்ஹாநுலேபம்!
விகத பஹுல ரூபம்
ஸர்வ ப்ஹோகாத்ஹிவாஸம்
த்ஹ்ருவ மரண நிமித்தம்
கிந்து மோஹ ப்ரஸக்த்யா !!
இதமேவ க்ஷயத்வாரம்
ந பச்யஸி கதாசந!
க்ஷீயந்தே யத்ர ஸர்வாணி
யௌவநாநி த்ஹநாநிச !!

"இந்தத் தேகம் புண்ணின் வாய்போல துர்நாற்ற மடிக்கும் தோலால் மூடப்பட்டதாய், நூற்றுக் கணக்கான புழுக் கூட்டங்கள் நிறைந்ததாய், மல மூத்திரங்கள் தோய்ந்ததாய், வயது தோறும் மாறி மாறி வரும் உருவ முடையதாய், ஸர்வ காம போகங்களுக்கும் உறைவிடமாய் மோஹத்தை உண்டாக்கி மரணத்திற்குநிச்சயமானகாரணமாய்விளங்குகிறது."

"இதுவே அழிவு பாட்டின் நுழை வாயில். இதன் வழியாகவே யௌவனம், செல்வம் முதலிய எல்லாம் அழிந்து போகின்றன."

இதே கருத்தை அமிழ்தினும் இனிய நம் தமிழ் நூல்களும் அழகாய் எடுத் தோதுகின்றன.

தாயுமானவர்

காகமொடு கழுகலகை நாய்நரிகள்
சுற்று சோறிடு துருத்தியைக்
காலிரண்டு நவவாசல் பெற்றுவளர்
காமவேள் நடன சாலையை
மோகவாசை முறியிட்ட பெட்டியை
மும்மல மிகுந்தொழுகு கேணியை
மொய்த்துவெங் கிருமி தத்துகும்பியை
முடங்கலார் கிடைச் சரக்கினை
மாக விந்த்ர தநு மின்னையொத் திலக
வேத மோதிய குலாலனார்
வனைய வெய்ய தடிகாரனா
யமன் வந்தடிக்கும் ஒரு மட்கலத்
தேகமான பொய்யை மெய்யெனக் கருதி
ஐய வையமிசை வாடவோ!
தெரிவதற் கரிய பிரமமே!
அமல சிற்சுகோதய விலாசமே!

நாற்றச் சடலத்தை ஒன்பது வாசல்
நடை மனையைச்
சோற்றுப் பசையினை, மும்மலபாண்டத்
தொடக்கறையை
ஆற்றுப்பெருக்கன்ன கன்மப் பெருக்கை
அடர் கிருமிச்
சேற்றை துணையென்ற நாய்க்கு முண்டோ
கதி சேர்வதுவே?

பட்டினத்தார்

ஊற்றைச் சரீரத்தை ஆபாசக்கொட்டிலை
ஊன் பொதிந்த
பீற்றல் துருத்தியைச் சோறிடும் தோற்
பையைப் பேசரிய

காற்றில் பொதிந்த நிலையற்ற பாண்டத்தைக்
　　காதல் செய்தே
எற்றுத் திரிந்து விட்டேன் இறைவா
　　கச்சியே கம்பனே

எரி எனக்கென்னும், புழுவோ எனக்
　　கென்னும் இந்த மண்ணும்
சரி எனக்கென்னும், பருந்தோ எனக்
　　கென்னும், தான் புசிக்க
நரி எனக்கென்னும், புன்னாய் நமக்
　　கென்னும் இந்நாறுடலைப்
பிரியமுடன் வளர்த்தேன் இதனால்என்ன
　　பேறெனக்கே ?

ஆங்காரப்பொக்கிசம் கோபக்களஞ்சியம்
　　ஆணவத்தால்
நீங்கா வரண்மனை பொய்வைத்த கூடம்
　　விண்ணடி வளர்
தேங்கார் பெருமதில் காமவிலாசம் இந்
　　தேகம்; கந்தல்
பாங்காய் உனை பணிந்து எப்படிஞானம்
　　பலிப்பதுவே.

இப்படிப்பட்ட யாக்கையினிடம் அன்பு பாராட்டலும் தகுமா ? இந்த அருவருக்கத் தக்க யாக்கையை அழகியதெனக் கருதி அதில் மோஹிக்கிறவர்கள் இழிந்த அறிவிலிகளே யாவர். இரத்தம மாம்ஸம் சீழ் முதலியவற்றின் பிண்டமாகிய தேகத்தில் பற்று வைப்பவர்களின் விருப்பம் மிகவும் இழிந்ததே யாகும். இதையே ஆதாரத்துக்குரிய பொருளாக மதித்து மல மூத்திராதிகளினிடையே இன்புறுகிறவர்கள் சேற்றுக் குழியைச் சந்திர புஷ்கரணியெனக் கொள்பவரை நிகர்ப்பர். அன்னவரைப் பேய்களென்றால் தவருகாது. எந்தப் பொருளினிடம் இவ்வளவு பற்று வைக்கப் படுகிறதோ அதன் இறுதி எப்படியாகுமென்பதைச் சில்ஹண மிசிரன் இவ்வாறு வருணித்திருக்கிறான் :—

க்வைதத் வக்த்ராரவிந்தம்
க்வ ததத்ஹர மத்ஹு
க்வாயதாஸ் தே கடாக்ஷா:
க்வாலாபா : கோமலாஸ் தே
க்வ ச மதநத்ஹநுர்
ப்ஹங்குரோ ப்ஹ்ருவிலாஸ :

இத்ஹம் க்ஹட்வாங்க
கோடி ப்ரகடிததசநம்
மஞ்ஜு குஞ்ஜத்ஸமீரம்
ராகாந்த்ஹாநாம் இவோச்சைர்
உபஹஸதி மஹா
மோஹஜாலம் கபாலம்.

சாந்தி சதகம், உகம் சுலோகம்.

"மயானத்தில் ஓர் ஒடிந்து போன டோலியின் மூலையில் ஒரு ஸ்திரியின் எலும்புக் கூடு விழுந்து கிடந்தது. தொளை போல் திறந்த அதன் வாயினின்று பற்கள் வெளிக்கு வந்திருந்தன. காற்று அந்தத் தொளையிற் புகுந்து இனிமையாய்ச் சிழ்க்கையிட்டுக் கொண்டு, காமத்தாற் கண்ணிழந்து தவிப்போரின் மஹா லோக ஜாலத்தைப் பார்த்துப் பரிகசிப்பது போல் இவ்வாறு கூறுகிறதாம்: "அந்த முக கமலம் இப்பொழுதெங்கே? அந்த இதழ்த்தேன் எங்கே? அவ்வகன்ற கடைக்கண் பார்வைகளெங்கே? அந்தக் கோமளமான குரலோசைகளெங்கே? மதனவேளின் வில்லைப் போல் வளைந்திருந்த அந்தப் புருவ விலாசமெங்கே?"

சாக்கிய சிம்மனுகிய புத்தபிரான் மஹா பிநிஷ்கிரமணம் என்னும் பெருந் துறவு கொள்வதற்கு முன் அவரை உலக சுகபோகங்களில் மயக்கி யிழுக்கும் பொருட்டுச் சில சுந்தரமணிகள் அவருடைய இன்ப மாளிகையில் நியோகிக்கப் பட்டிருந்தனர். ஓர் இரவு இந்த இள மங்கையர் நித்திரை செய்து கொண்டிருக்கையில் அவர்களைச் சாக்கிய சிம்மன் கண்ணுற்ற போது அவர்கள் பல வ்கையான விகார நிலைமைகளில் படுத்திருந்தார்கள். சிலரது கழுத்துகள் வளைந்திருந்தன. சிலரின் கடை வாய் வழியாய்ச் 'சொள்ளு' பெருகிக்கொண்டிருந்தது. சிலர் பற்களை நறநற வென்று கடித்தார்கள். சிலர் கனவில் விகாரமாயும் பயங்கரமாயும் சிரித்தார்கள். இந்தக் காட்சியைக் கண்டு சாக்கிய சிம்மன்—"இதெல்லாம் மயானம்போல் இருக்கிறதே—இந்த ஜனங்களுடனு நான் கூடிக் களிக்க வேண்டும்?" என்று நினைத்துக் கொண்டார். அந்த க்ஷணமே அவரது மனம் என்றும் அழியாத பேரழகின் மூலஸ்தானத்தை தாவி உயர எழுந்தது.

11. காமத்தை ஒழிப்பதற்குச் சிறந்த வழி அன்பின் வழி நிற்றலாம். ஒரு வகை லாகிரிப் பொருளால் இழுக்கப் படுகிறவர்களை வேறொரு லாகிரிப் பொருளைக்கொண்டு திருப்பி வழிப்படுத்தலாம். அவ்வாறே சிற்றின்பத்தில் சிக்கிக் கெட்டுப் போகிறவர்களுக்குப் பேரின்ப ஆசையை யூட்டி அவர்களை நல் வழிக்குக் கொண்டுவரவேண்டும். சிங்கார ரஸத்தில் பிரிய முள்ளவன் அதையே தேடித் திரிவான். அவன் உள்ளத்தைக் கவர்ந்து வசீகரிக்கும்படியான உயரிய சிறப்பு வாய்ந்த மதுர ரஸச் சுவையை அவனுக்கு ஊட்டினாலன்றி, அவன் இழிந்த இன்பங்களிலே அழுந்தி யழிவது திண்ணம். ஆகையால் இழிந்த இன்ப ரஸத்தில் இச்சை வைத்தவனுக்கு வேறோர் இன்ப ரஸம் கிடையாவிடில், அவனால் அந்த இழிந்த ரஸச்சுவையை விட்டு விலக முடியாது. இழிந்த இன்பச்சுவைக்கு மாறாக உயர்ந்த பரிசுத்தமான ரஸச்சுவையின் நுகர்ச்சி வாய்த்தால், இழிந்த ரஸத்தில உள்ள விருப்பம் படிப்படியாய்க் குறைந்துபோம். பகவத் பக்திரஸத்தைச் சுவைத்தவன் அந்த பக்தி ரஸத்தை அனுபவிப்பதற்கு அடிக்கடி முயன்று கொண்டிருப்பான். பக்தி ரஸத்தைச் சுவைத்தமாத்திரத்தில் தீய எண்ணங்களும் பழக்கங்களும் தாமாகவே விடைகொண்டேகும். ஸர்வதா ஸத் கதாமிர்த ரஸத்தைப் பருகிப் பரவச மடைகிறவனுடைய ஆனந்தத்துக்கு எல்லையே இல்லை. அப்படிப்பட்டவனுடைய இருதயத்தில் குற்றிதச் சிந்தை புகுவதற்கு இடமில்லை. பக்தியின் பேரின்ப ரஸத்தைச் சுவைத்தவனுக்குச் குஜிலிக் கடைச் சிற்றின்ப சிங்கார ரஸம் எப்படி இனிக்கும்? சிற்றின்பத்தில் உழல்கின்றவர் செய்யும் சுரா பானத்துக்குப் பின் அங்கங்கள் தளர்ந்து சோர்வுறும். பேரின்பமாகிய சுராபானத்தில் ஆனந்தக்களிப்பு அலை அலையாய்ப் பொங்கியெழும்; அந்த ஆனந்தக்களிப்புக்கு ஒழிவில்லை. முடிவில்லை பருகப் பருக அவ்வளவுக்கவ்வளவு ஆனந்தம்; அவ்வானந்தம் அனந்த காலமும் சம்போகிக்கத் தக்க தாகும; ஒரு க்ஷணமாவது தளர்ச்சி உண்டாகாது, தெவிட்டாது. பாமர சுராபானத்தினால் சரீரம் க்ஷீணிக்கும். பேரின்ப சுரா பானத்தினால் சரீரத்துக்குத் தேஜஸும், வீர்யமும், அபூர்வ காந்தியும் உண்டாகும். பாமர சுரா பானம் துன்பத்தையும் மனோ

வேதனையையும் உண்டாக்கும்; பரமார்த்த சுரா பானத்தினால் ஆத்மப் பிரஸாதத்தின் அமுத வெண்ணிலா உதித்து உடலையும் உள்ளத்தையும் களிபிக்கின்றது. இந்தக் காமம் இரண்டு நாளைக்குள் பூங்காவனத்தைச் சுடுகாடாக்கி விடுகிறது. அந்த அன்போ முகூர்த்த காலத்துக்குள் மயானத்தைப் பூஞ்சோலை யாக்கிவிடுகிறது. இந்தக் காமம் தேவதையைப் பசுவாக்கி விடுகிறது; அந்த அன்போ பசுவைப் புத்தேளாக்கி விடுகிறது. இந்தக் காமம் சரீரத்தைக் களங்கப்படுத்திக் காலன் கையில் ஒப்புவித்து விடுகிறது; அந்த அன்போ சரீரத்தையும் மனத்தையும் தேவ போக்கியமாகிய அமிர்த ஸம்போகத்துக்கு நம்மை அதிகாரி யாக்கும். இந்தக் காமத்தில் எப்போதும் 'ஆ கெட்டேன்' என்ற ஓலமே தொனித்துக் கொண்டிருக்கும்; அந்த அன்பிலோ நித்தமும் நவநவமான உத்ஸவானந்தம் ஜயஜய த்வனி சகிதமாய் அனுபவிக்கப்படும்.

"ததேவ ரம்யம் ருசிரம் நவம் நவம்
ததேவ சச்வந் மநஸோமஹோத்சவம்
ததேவ சோகார்ணவ சோஷணம் ந்ருணாம்
யதுத்தமச்லோக யசோ' நுகீயதே"

ஸ்ரீ பாகவதம். ஸ்கா. 12: அத். 12: சுலோ. 50.

"உத்தம சுலோகனுகிய எம்பெருமானுடைய புகழைப் பாடுவதே இனிமையானது; அதுவே மகிழ்ச்சியளிப்பது. நவநவமாயும் நித்திய நூதனமாயும் விளங்குவது. அதுவே சதா காலமும் மனதுக்கு மஹோத்ஸவமாய்ப் பலிப்பது; அதுவே மக்களின் துக்கக் கடலை வற்றச் செய்வதுமாகும்." ஆகா! அதற்கொப்பிடக்கூடியதும் வேறொன்றுண்டோ? ஆண்டவனிடத்துச் செய்யப்படும் அன்பை ஒரு முறை சுவைத்தவன், காமத்தினால் பெறப்படும் பேய்ச் சுகங்களை வருந்தி யழைப்பனோ? காமமானது எவ்வளவுதான் மோஹங் காட்டி அவனை மயக்கினாலும், அதில் அணுவளவேனும் ஆகர்ஷிக்கக் கூடிய அம்சம் அவனுக்குத் தோன்றாது.

கிரேக்க புராணத்திலுள்ள ஜேஸன் யுலிஸிஸ்களின் வரலாறுகளை இவ் விஷயத்தில் தக்க உதாரணமாய் எடுத்துக் காட்டலாம். மத்திய தரைக்கடலில் இருந்த ஒரு

தீவிலே சகோதரிகளான மூவர் சைரென்கள் எனும் மோஹினிகள் வாஸம் செய்து கொண்டிருந்தனர். அவர்கள் வேணு கானத்தினுல் மக்களை மயக்கி அப்படி மயங்கினவர்களை நாசம் செய்து வந்தார்கள். கிரேக்க மஹாவீரனுகிய யுலிஸிஸ் அந்தத் தீவின் பக்கமாய்க் கப்பல் யாத்திரை போய்க் கொண்டிருக்கும்போது, தன் கப்பற்காரர்கள் அந்த வேணுநாதத்தைக் கேட்டு மயங்காதிருக்கும் பொருட்டு அவர்களது செவிகளை அரக்கிட்டடைத்து, தானும் மயங்காமலிருக்கும்பொருட்டுத் தன்னைக் கயிற்றினுல் கெட்டியாய்க் கப்பலோடு சேர்த்துக் கட்டிக் கொண்டான். ஆனல் அத் தீவின் சமீபத்தில் வந்தவுடனே அம் மோஹினியின் வேணுநாதம் கேட்கத் தொடங்கிய போது, அவன் தன்னைக் காத்துக் கொள்வது கஷ்ட சாத்தியமாய் விட்டது. வேணுநாதத்தைக் கேட்கவே அவன் மனத்திட மிழந்து எப்படியாவது அத் தீவில் போய் இறங்கவேண்டுமென்று தன்னுலான மட்டும் முயன்று பார்த்தான். நல்ல வேளையாய்த் தன்னைத் தான் கயிற்றுல் கெட்டியாய்க் கட்டிக் கொண்டபடியால், பிராணன் திக்குத்திக்கென்று அடித்துக்கொள்ள எவ்வளவோ கஷ்டத்தின் பேரில்ஏதோ ஒரு விதமாகத் தப்பினது தம்பிரான் புண்ணியமென்று க்ஷேமமாய் ஊர்போய்ச் சேர்ந்தான். இது இப்படியாக ஜேஸன் என்வபனே ஆர்க்கோநாதிகம் என்னும் பெரும் படையெழுச்சியை முன்னிட்டுப் புறப்படுமபோது இந்த ஆபத்தினின்றும் தப்ப வேறு உபாயஞ் செய்தான். தனனிட மிருந்த காயகசிகாமணியாகிய ஓர்பியுஸ் என்பவனை நோக்கி "நீயும் எங்களுடன் வா; அந்தத் தீவுக்குச் சமீபமாய்ப் போகும் போது நீ பாடத் தொடங்கு. அப்பொழுது அந்த மோஹினிகளின் வேணுநாதம் நமமை எப்படி மயக்குகிறதோ பார்ப்போம்" என்ருன். ஓர்பியுஸின அற்புதமான பாட்டைக் கேட்டால் கல்லும் கரையும். ஆற்று நீரும் பொங்கி பெருக் கெடுக்கும். பசு பக்ஷிகள் சித்திரப் பாவைகளென. அசைவற்று நிற்கும். அப்படிப்பட்ட மஹா பாடகனைக்கூட அழைத்துக்கொண்டு ஜேஸன் யாத்திரைக்குப் புறப்பட்டான். சிறிது தூரம் சென்ற பிறகு அந்தத் தீவு சமீபிப்பதைக் கண்டு ஓர்பியுஸைப் பாடச்

சொன்னன். ஓர்பியுஸ் பாடத் தொடங்கினன். எல்லாருடைய உயிரிலும் உணர்விலும் ஆனந்த வெள்ளம் விரைந்து பாய்ந்தது. கப்பற்காரர் சங்கீதத்தால் மெய்ம் மறந்து அதன் தாளத்துக் கொத்துக் கப்பலை ஜய கோலாஹலத்துடன் செலுத்தினர். மோஹினிகளின் வேணுநாதம் அவர்களது செவிகளில் புகுந்தபோது ஓர்பியுஸின் குயிலோசைக்கு முன் அது தவளைக் கத்தல்போல் கர்ண கடூரமாயும் விரஸமாயும் தொனித்தது. ஆகவே அவர்கள் உள்ளம் பூரித்து மார்தட்டிக் கொண்டு அந்தத் தீவைக் கடந்து சென்றார்கள். மோஹினி மங்கையரின் மோஹன சக்தி பராபவமுற்றது.

யுலிஸிஸைப் படாத பாடு படுத்திக் குற்றுயிராய்ச் செய்த மோஹன சக்தியை ஜேஸன் மிகத் துச்சமாய்க் கருதியதற்குக் காரணம் ஓர்பியுஸின் இன்னிசைப் பாட்டேயல்லவா? இத்தகைய ஓர்பியுஸின் சங்கீதத்தை அனவரதமும் செவி மடுப்பவர்களிடம் காமாதிகளின் கவர்ச்சி மிக நிகிருஷ்டமாய்ப் பலிக்கும். தம் சக்தியையே நம்பிக் காமத்தை ஒடுக்க நானா விதமான உபாயங்களை அவலம்பிப்பவர் யுலிஸிஸைப்போல் வருந்துவர்.

க்வ நிரோதோ விமூட்ஹஸ்ய
யோ நிர்ப் ந்த்ஹம் கரோதி வை?
ஸ்வாராமஸ்யைவ த்ஹீரஸ்ய
ஸர்வதா ஸாவக்ரிதரிம

அஷ்டாவக்ர கீதை.

"ஆண்டவன் அருளைத் தேடாது பிடிவாதமாய் நம்பி யிருப்பவனல் புலன்களை எவ்வாறு அடக்கக்கூடும்? ஆத்ம ஸ்வரூபானந்தத்தில் ஈடுபட்டிருக்கும் தீர புருஷனிடத்தி லேயே இந்திரிய நிக்கிரகம் சகஜமாய்க் காணப்படும்."

ஆண்டவனிடத்திலும் அடியாரிடத்திலும் அன்புப் பாசத்தினல் கட்டுண்டு அல்லும் பகலும் அவ்வன்பில் இன்பமுற்றிருப்பவனைக் காம சிந்தை என்றும் அணுகாது. பாரஸீக மஹா கவியும் பரமபக்தனுமாகிய ஹபீஸ் என்பவன் அவ்வன்புக்கடலில் ஆழ்ந்திருந்தான். அவனிடத்தே புன்மையாகிய சிற்றின்ப வேட்கை எப்படி உண்டாகும்? பகவானுடைய வேணுநாதத்தை இருதயத்தினகத்தே

கேட்டுப் பேரின்பத்தில் திளைத்திருப்பவனைப் பாபத்தின் குழலோசை கவர்ந்து மயக்க முடியுமோ? அன்புருவாகிய ஆண்டவனுடனேயே நிருத்திய கீதலீலா விநோதங்கள் புரிந்து அன்புக்கடலில் நீஞ்சியும் மிதந்தும் முழுகியும் களிப்பவர்களைச் சிற்றின்பம் தீண்டுவ தெப்படி? பரிசுத்தமாகிய அமுத ரஸத்தைப் பருகிக் கொண்டிருப்பவன் கானல் நீரைக் கண்டு மயங்குவனோ?

சிலர் ஈசுவரோபாஸனை செய்யும்போது ஆந்தைகளைப்போல் உட்கார்ந் திருப்பதைப் பார்த்தால், தங்களுக்கு ஆண்டவன் அடுத்த க்ஷணத்தில் தூக்குத்தண்டனை விதித்து விடுவானென்று நெஞ்சம் பதைத்து நடுநடுங்குபவர்களைப்போலத் தோன்றும். ஐயோ, இஃதென்ன பேதமை! ஆண்டவனைப்போல் ஆனந்த ஸ்வரூபியும் லீலா விநோதியும் வேறொருவனுண்டோ? பரிபூரணானந்தக் களஞ்சிய மல்லவா அவன்? 'ஆனந்தமான பர'மாகிய அவனோடு கூடி இன்பம் நுகராமல் பின் யாருடன் கூடி அதை நுகர முடியும்? அவனைக் காட்டிலும் அதிக இனிமையாயுள்ளதெதுவுமில்லையே. அவனுடைய சகவாச சுகத்துக்கு ஒப்பிடக் கூடிய பிறிதொரு சுகம் இந்தப் பாரினில் உண்டோ? அந்தச் சுகத்தை லவலேசமாகிலும் அனுபவிக்கப் பெற்றவன்கூட வங்காளக் கவியைப் போல் இவ்வாறு பாடாமலிரான். "இம் மனம் விஷய சுகத்தில் திருப்தியடையுமா? நின் சரணாமிர்தத்தைப் பருகவே நான் தாகங் கொண்டிருக்கிறேன். செல்வம் வேண்டேன்; சுற்றம் வேண்டேன்; சீர் சிறப்பு வேண்டேன். மதுகரம் மதுவை விட்டு நீரைப் பருகச் செல்லுமோ? கட் குடியன்மேல் ஒரு தரம் இந்த சுகத்தின் தென்றல் வீசினால், அவன் அந்த க்ஷணமே கட் குடியை விட்டுவிடுவான். விஷயலோலன் ஒரு நிமிஷமாவது இந்தச் சுகத்தின் நிழலை அனுபவித்தால், அப்பொழுதே அவனுடைய அசுத்தமான கருத்துக்களெல்லாம் பறந்து போம். இவ்வளவு சுகமும் ஆனந்தமும் வேறொன்றினாலும் உண்டாகாது. உண்டாகவும் முடியாது. இதை ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் நன்கு அறிந்திருந்தபடியினாலேயே, கள் குடிக்கும் பழக்க முள்ளவன் எவ

ஞவது அவரிடம் வந்துகொண்டிருப்பதைப் பார்த்து எவரேனும் 'இவன் குடியன்' என்று அவரிடத்தில் சொன்னால், அவர் அதற்கு உத்தரமாக "அது கிடக்கட்டும் என்கிறேன். இம்மாதிரி அவன் எத்தனை நாள் குடித்துக்கொண்டிருக்கப் போகிறான்?'' என்று கூறுவர். எனவே, அவனுக்கு நான் இங்கே கொடுக்கும் பேரின்பக் கள்ளின் சுவையை அவன் அனுபவிக்கத்தொடங்கின பிறகு இந்தக் கள்ளை எத்தனைநாள் குடிக்கப்போகிறான்? அதை அவன் விட்டுவிடுவது திண்ணம் என்பது கருத்து.

நாரதர் தம் தாயார் மரித்துப் போன பிறகு ஆண்டவனைத் தேடியடையும் பொருட்டு வீட்டைவிட்டு வெளிப்பட்டுப் பற்பல இடங்களில் திரிந்து ஒரு நாள் ஒரு காட்டுக்குள்ளே ஓர் அத்தி மரத்தின் அடியில் உட்கார்ந்து தியானம் செய்யத் தொடங்கினர். அவர் வெகு காலம் இப்படி தியான நிஷ்டையில் அமர்ந்திருக்கையில், திடீரென்று ஆண்டவனுடைய பேரொளிப் பிழம்பு அவர் முன் திவ்ய தேஜோமயமாய்த் தோன்றி அந்த க்ஷணமே மறைந்தது. அப்பொழுது ஆண்டவன் அவனை நோக்கி,

ஹந்தாஸ்மிந் ஜந்மநி ப்ஹவாந்
நமாம் த்ரஷ்டும் இஹார்ஹதி
அவிபக்வ கஷாயாணம் துர்த்தர்
சோ'ஹம் குயோகி நாம்.

ஸ்ரீ பாகவதம்.

"இந்தப் பிறவியில் என்னைப் பார்க்கும் அருகதை உனக்கு உண்டாகவில்லை. காமம் முதலியவற்றை நிக்கிரஹம் செய்யாத குயோகிகளால் என்னைப் பார்க்க வொண்ணாது."

ஆனல் ஒரு தரம் மின்னற் பிழம்பு போல் காட்சியளித்ததற்குக் காரணம் என்னையோ வெனில்:

ஸக்ரித் யத்தர்சிதம் ரூபம்
ஏதத் காமாயதே' நக்ஹ
மத்காம: சநகை: ஸாத்ஹு:
ஸர்வாந்முஞ்சதி ஹ்ரிச்ச்ஹயாத்!!

ஷை ஷை 23-ம் சுலோ.

"ஒரு தடவை உனக்குக் காட்சியளித்ததற்குக் காரணம் என்னிடத்தில் உனக்குக் காதல் உண்டாகும் பொருட்டே

யாம். என்னிடம் காதல் கொண்ட நல்லோன் தன் இருத யத்திலுள்ள(பிற)அவாக்களை யெல்லாம் படிப்படியாய் விட்டு விடுவன்."

அவனுடைய திவ்ய மங்கள சௌந்தரியத்தால் ஆகர்ஷிக்கப்பட்ட பிறகு வேறு விருப்பங்கள் இருக்கமுடியுமோ? சகல ஹ்ருதய ஸம்மோஹன ரூபனும், மன்மத மன்மதனும் ஆகிய அவனுடைய நித்திய சௌந்தரியத்தின் நிழல் பட்ட இடங்கூட எவ்வளவு மனோஹரமாய் விளங்குகின்றது! அவன் பொருட்டு சாது ஜனங்கள் அனைத்தையும் துறந்து பித்தராகிறார்கள். ஆகையால் நம்முடைய காதலெல்லாம் அந்த விசுவ சௌந்தரியத்தின் அநாதி நித்தியமான நன்னீரூற்றின் திக்கு நோக்கித் தாவிச் செல்வதாக. பேய்கள் கூத்தாடும் இடங்கள் நமக்கெப்பொழுதும் லக்ஷ்யமாகாதொழிவனவாக. இங்கு கூறிய விசேஷோபாயங்களை மட்டும் கைப்பற்றிச் சாமானிய உபாயங்களை எவரும் மறந்து போகக்கூடாது. பாபத்தை மாய்ப்பதற்கு விசேஷோபாயங்கள் எப்படி பிரயோஜனகரமோ, அப்படியே சாமானிய உபாயங்களுமென்க. இவை அவ்விசேஷ உபாயங்களுக்கு எவ்விதத்திலும் குறைந்தனவல்ல.

மேற்கூறியபடி காமத்தினின்றும் உண்டாகும் பத்து வகைக் குற்றங்களிலிருந்து விடுதலை யடைவதற்கு எப்போதும் முயன்று வரவேண்டும். அவற்றின் பக்கல் மறந்தும் புத்தியைச் செலுத்தல் கூடாது.

எப்படிப்பட்ட குற்றமாயிருந்தாலும், ஒரேவகைக் குற்றத்தினால் சமமாய்ப் பாதிக்கப்பட்டிருக்கிற இரண்டு நண்பர்கள் அக் குற்றத்தைக் களையும் பொருட்டு ஒருவரோடொருவர் போட்டி போடுவதனால் மிக்க உபகாரம் உண்டாகும். நம்மில் யார் எவ்வளவு வரையில் தீய எண்ணத்தை அகற்றித் தூய்மையைக் காப்பாற்றிக் கொள்வோமோ பார்ப்போம் என்று இவ்விதமாய் அவர்கள் ஒருவரோடொருவர் போட்டா போட்டி பண்ணினால் அது அவர்களுடைய சக்திகளை எழுப்பிவிட்டு, அவர்கள் தனித் தனியே அவனவன் வழி சென்றுமுயன்றால் எவ்வளவு சாதிப்பார்களோ அதைவிட மேலான விதமாய் அக்

குற்றத்தைக் கடிவதற்கு வேண்டிய ஆற்றலை அவர்களுக்கு அளிக்கும்.

மற்றவர்களைத் தூய்மை யுள்ளவர்களாகச் செய்ய முயல்வதிலிருந்து கூட மிக்க லாபம் கைகூடும். எப்படியெனில், பிறருடைய குற்றங்களைக் கூறி அவற்றினின்றும் அவர்களை விடுவிக்க முயல்கிறவன் தன் விஷயத்திலேயே முதலில் திருஷ்டியைச செலுத்த வேண்டியது அவசியமாய் ஏற்படும்; ஏற்படவே, தன்னிடத்தும் அவ்விதமான களங்கம் இருந்தால், அதை ஒழிக்க அந்தரங்க சுத்தியுடன் விரும்புவான். "பிறர் எந்தக் குற்றத்திலிருந்து விலக வேண்டுமென்று சொல்லுகிறேனே, அந்தக் குற்றம் என்னிடத்திலேயே இருந்தால் உலகத்தார் என்ன நினைப்பார்கள்?" என்ற மட்டிலாவது குறைந்த பக்ஷம் அவனுக்குத் தோன்றித் தன்னிடத்திலிருந்து அக் குற்றத்தை அகற்ற வேண்டுமென்னும் புத்தி அவனுக்குப் பிறக்கும். அன்றியும் பிறர் நலத்தின் பொருட்டு ஏதேனும் ஒரு பாபத்தினால் விளையும் தீமைகளைப் பற்றி எப்போதும் சிந்தித்து அவற்றைக் கடிந்து பேசுவதிலிருந்து அதை இன்னும் அதிகமாய் வெறுப்பது அவனுக்குச் சகஜமாகி, அதன் பலனும் அவனுடைய வாழ்க்கையில் ஸ்பஷ்டமாய்க் காணப்படும். எதற்கு விருத்தமாய் எப்போதும் பேசி வருகிறோமோ அது விஷயமாய் அவசியம் விரக்தி ஏற்படும். விரக்தி ஏற்பட்டால் அந்தப் பாபத்தை எளிதில் ஒழித்து விடலாம். ஆனால் இதில் ஆபத்துக்களும் உண்டு. பிறரைத் தூயவர்களாக்கப் போய் இறுதியில் தாமே அழிந்தவர் அநேகர் உளர். இந்த ஆபத்தில் விழுந்து அதோகதியடைந்த நல்லொழுக்கமுள்ள ஓர் இளங் குமரனை எனக்குத் தெரியும். அவன் வேசைகளை நல்வழிக்குத் தூக்கிவிட்டுக் கடைத்தேறுவிக்கப் போய்க் கடைசியில் தானே மஹா தூர்த்தனாய் விட்டான். ஆகையால் கெட்ட நடத்தை யுடையவர்களின் கூட்டுறவு மிக்க ஆபத்துக்கிடமானது. நிறைவான மனோ பலம் ஏற்படுகிற வரையில் தீயொழுக்கமுள்ளாரிடம் அணுகாதிருப்பதே உத்தமம். ஆனால் நம்மைப் பார்க்கிலும் அதிகமான குற்றங்களில்லாதவருடன் கலந்து பழகி நன்னெறியில் ஒழுகும் முயற்சியில் பரஸ்பரம் சகாயமாயிருப்பதில் தோஷமில்லை.

இல்லறத்தான் புலன்களை வென்ருல், எனவே, கிருஹஸ்தன் ஜிதேந்திரியனுய் விட்டால், ஸம்ஸார வாழ்க்கை எப்படி நடைபெறும் என்று சிலர் கேட்கலாம். அவர்கள் இப்படிக் கேட்பதைப் பார்த்தால், இல்லறத்தை நல்லறமாய் நடத்துவதற்குப் புலன்களை வெல்லாமையை ஓர் இன்றியமையாத லக்ஷணமாகக் கொண்டிருப்பதுபோல் தோன்றும். அந்தோ! முற்றுந் துறந்த முனிவர்கள் எந்தத் தேசத்திலே இல்லறத்துக்குரிய தருமங்களை வகுத்தார்களோ, அந்தத் தேசத்தில் இன்று இப்படிப்பட்ட பிரமை அரசு புரிகிறதே! இதைவிடப் பரிதாபகரமானது வேறென்ன இருக்க முடியும்? 'ஜிதேந்திரியனுன பின்னரே விவாகம் செய்துகொண்டு இல்லறத்தான் ஆக வேண்டும்' என்பதே மஹரிஷிகள் வகுத்த சட்டமாகும். நால்வகை ஆசிரமங்களுக்குள்ளேயும் முதலில் பிரம்மசரியத்தையும் அதன் பிறகு கிருஹஸ்தாசிரமத்தையும் அல்லவா ஓதியிருக்கிறது! குழந்தைப் பருவம் கடந்தவுடனே பிரம்மசரியத்தை அநுஷ்டிக்கத் தொடங்கவேண்டும். பிரம்மசரியத்தால் வாழ்க்கையானது தூய்மை யடைந்த பின்னரே கிருஹஸ்தாசிரமத்தில் பிரவேசிக்கும்படி விதிக்கப்பட்டிருக்கிறது.

ஏவம் ப்ரிஹத் வ்ரதத்ஹரோ
ப்ராஹமணோ' க்நிரிவ ஜ்வலந்
மத்ப்ஹக்தஸ் தீவ்ர தபஸா
தக்த்ஹ கர்மா-ச-யோ'மல:!!
அத்ஹா நந்தரம் ஆவேக்ஷந்
யத்ஹா ஜிஜ்ஞாஸிதாகம:—
குரவே தக்ஷிணம் தத்வா
ஸ்நாயாத் குர்வநு மோதித:!!
க்ரிஹம் வநம் வோபவிசேத்
ப்ரவ்ரஜேத் வாத்விஜோத்தம:!
ஆச்ரமாத் ஆச்ரமங் கச்ச்ஹேத்
நாந்யத்ஹா மத்பரச் சரேத்:!!
க்ரிஹார்த்த்ஹி ஸத்ரிசீம்
ப்ஹார்யாம் உத்வஹேத் அஜுகுப்ஸிதாம்.

ஸ்ரீ பாகவதம் 11-ம் ஸ்கந்தம், 17-ம். அத்.,3639-சுலோ.,

பகவான் பிரம்மசரியத்தை இவ்வாறு வர்ணிக்கிருர்.

"இவ்வாறு என் பக்தனாகிய பிராஹ்மணன் பிரம்மசரிய மென்னும் பெருமை தங்கிய விரதத்தை மேற்கொண்டு கடுந் தவத்தினால் கன்மத்தின் விஷய வாஸனைகளை எரித்து, முற்றிலும் மாசற்றவனாய்ப் பிரம்மதேஜஸினால் அக்கினியைப் போல் ஜ்வலித்துக் கொண்டிருப்பான். அப்பொழுது அவன் வேறு ஆசிரமத்தில் பிரவேசிக்க விரும்பினால், வேத பரீக்ஷை கொடுத்து அதில் தேறிக் குருதக்ஷிணை யளித்து, அவருடைய ஆணைப்படி ஸ்நானம் செய்யக் கடவன். அப்புறம் இந்த பிராஹ்மணோத்தமன் இச்சாநுஸாரமாய்க் கிருஹாஸ்தாசிரமத்தையோ, வானப்ரஸ்தாசிரமத்தையோ, ஸந்நியாஸாசிரமத்தையோ ஏற்றுக் கொள்ளலாம். இஷ்டமிருந்தால் ஓர் ஆசிரமத்திலிருந்து மற்றோர் ஆசிரமத்துக்குப் போகலாம். எவ்வாசிரமத்தில் ஒழுகினாலும் அவன் இருதயம் என்னை விட்டு வேறுவிதமாக வர்த்தித்தல் கூடாது. அவன் கிருஹஸ்தனாக விரும்பினால், தனக்கொத்த குற்றமற்ற வொழுக்கமுள்ள ஒருத்தியை இல்லாளாக மணக்கக் கடவன்."

விஷய வாஸனைகளை எரிக்கத் தெரிந்துகொண்ட பிறகே விஷய போகங்களை அனுபவிக்கத் தொடங்க வேண்டும்; ஜிதேந்திரியனான பிறகே ஸ்திரீயைக் கிரஹிக்க வேண்டும். இதுவே இல்லறத்தின் ஆதர்சமே யன்றி, விலங்குகளைப் போல் காம திருப்தியின் பொருட்டு மஹர்ஷிகள் இல்லற வொழுக்கங்களை வகுத்துவைக்கவில்லை. மஹா பாரதத்திலே வன பர்வத்தில் கூறியபடி ஸாவித்ரியின் பிதா,

"அபத்யோத்பாத நார்த்ஹஞ்ச
தீவ்ரம் நியமமாஸ்த்ஹித:
காலே நியமிதாஹாரோ
ப்ரஹ்மசாரீ ஜிதேந்த்ரிய:"

"மக்களைப் பெறும்பொருட்டுக் கடுமையான நியமங்களை அநுஷ்டித்து, உரிய காலத்தில் மிதமாக உண்டு, பிரஹ்மசாரியாய் ஜிதேந்திரியனாய் ஒழுகினான்."

உண்மையான இல்லற வொழுக்கம் இன்னதென்பதை இதிலிருந்து உணரலாம். மக்களைப் பெறுவதிலுள்ள பொறுப்புக்களை நன்கு ஆராய்ந்து பாருங்கள். அவைகளை லேசாய் மதித்து ஜிதேந்திரியனல்லாத நிலைமையில் அந்தப் பெருமை தங்கிய காரியத்தில் பிரவர்த்திப்பதால் விளையக் கூடிய பெருங் கேடுகளையும் பரியாலோசியுங்கள். ஜிதேந்

திரியனல்லாத இல்லறத்தான் இல்லறத்தானே யல்லன். ஜிதேந்திரிய னல்லாதவனுக்கும் விலங்குக்கும் உள்ள வேற்றுமைதானென்ன?

நாம் எப்போதும் காமத்தை வெல்லும் பொருட்டுப் பலவகை உபாயங்களைக் கைக்கொண்டு முயன்று நம் நண்பர்களையும் அவ்வாறே செய்யச் சொல்லித் தூய்மை யான நன்னெறியில் ஒழுகுமாறு வேண்டிக்கொண்டு, எப்போதும் ஒருவருக் கொருவர் சகாயமா யிருப்போமாக. அதனால் நாம் காமத்தை வென்று, ஒரு கூட்டமாய்க் கைகோத்துக் கொண்டு அறநெறியில் முன்னேறி ஆண்டவனிடத்து அன்பு பூண்பதாகிய பகவத் பக்தி யென்றும் பெரும் பேறு பெற்று உய்ய வல்லவாவோமாக.

"காடுங் கரையும் மனக்குரங்கு
  கால்விட்டோட, அதன் பிறகே
ஓடுந் தொழிலால் பயனுளதோ?
  ஒன்றாய்ப், பலவாய், உயிர்க்குயிராய்
ஆடுங் கருணைப் பரஞ்சோதி
  அருளைப் பெறுதற் கன்புநிலை
தேடும் பருவம் இது கண்டீர்!
  சேர வாரும் செகத்தீரே!
காக முறவு கலந்துண்ணக்
  கண்டீர்; அகண்டா காரசிவ
போகமெனும் பேரின்ப வெள்ளம்
  பொங்கித் ததும்பிப் பூரணமாய்
ஏக உருவாய்க் கிடக்குதையோ!
  இன்புற்றிட நாம் இனி எடுத்த
தேகம் விழுமுன் புசிப்பதற்குச்
  சேர வாரும், செகத்தீரே!"

2. குரோதம்

1. குரோதத்தினால் இன்ன இன்ன தீமைகள் விளைகின்றன, குரோதத்தை ஒழிப்பதனால் இன்னஇன்ன நன்மைகள் உண்டாகின்றன வென்பதை அடிக்கடி உள்ளுக்குள்ளே ஆலோசித்து, இனி ஒருபோதும் குரோதத்துக்கு வயப்படமாட்டேனென்று திடப்பிரதிஞ்ஞை செய்து

கொள்ள வேண்டும். குரோதத்தினுல் எவ்வெவ் மனிதர், எவ்வெவ் சாதியார் எவ்வாறு அழிந்து போயிருக்கிருர்க ளென்பதையும் கருதவேண்டும். மஹா பாரதத்திலே யுதிஷ்டிரர் திரௌபதியை நோக்கி இவ்வாறு கூறுகிருர்:—

"இவ்வுலகில் மக்கள் அழிவதற்குக் குரோதமே மூலகார ணம். குரோதத்துக்கு வயப்பட்டவன் பாப காரியங்களைச் செய்வான், பெரியோர்களைக் கொல்வான், கடுஞ் சொற்க ளால் நல்லோரையும் அவமதிப்பான். கோபமுற்றவன் இன்னது சொல்லலாம், இன்னது சொல்லக்கூடாதென்ற யுக்தாயுக்த விவேகமற்றவனுய்விடுகிருன். அவன் செய்யக் கூடாத காரியமாவது சொல்லக் கூடாத வார்த்தையாவது இல்லை. குரோதத்தினுல் கொல்லத்தகாதவர்களைக் கொல் வான், கொல்லத்தக்கவர்களைக் கௌரவிப்பான். கோப மூண்டவன் தன்னைத்தானே யமபுரத்துக்குக்கொண்டு செலுத்துவான். குரோதத்தினுல் மதியிழந்த மனிதனுக்கு இவ்விவ்வினையின் விளைவு இன்னதென்றுவிளங்குவதில்லை; நல்ல காரியங்கள் தெரியா; மரியாதையைக் காப்பாற்றிக் கொளளும் விதமும் அவன் அறிந்துகொள்ள மாட்டான்."

குரோதம் மக்களுக்குப் பரம சத்துரு. குரோதம் மக்களது மக்கட்டன்மையை மாய்த்து விடுகிறது. இந்தப் பூலோகத்தை நரக மாக்கிவிடும் கோர கிருத்தியங்களுக்கு மூல காரணமா யிருப்பது குரோதமே. குரோதத்தினுல் அதி சுந்தர ரூபங்களும் மஹா விகாரத் தோற்றத்தை யடையும்,—கண்கள் பெருத்துச் சிவக்க, உதடுகள் துடி துடிக்க, நாசித் துவாரங்கள் விரிய, ஸ்வாஸ கதி தீவிரப் பட, உலக விகற்பமான ஓர் விகார நிறம் முக வொளியை முற்றிலும் மூடிக்கொள்ள, முகத்தில் மாறி மாறி நிகழும் குறிப்பு வேறுபாடு ஒவ்வொன்றிலும் ஆசுரப் பிரகிருதி வியாபிக்க, மனிதன் மிருகத் தன்மையை அடைகிருன். கோபம்கொண்டிருப்பவன் உனக்கு ஆருயிர் நேசனு யிருப்பினும் அவனருகே செல்ல வெறுப்பாய். சுந்தர வஸ்துவைக் கணப் பொழுதில் விகாரப்படுத்தவல்லது குரோதத்தைப் போல் பிறிதொன்றில்லை.

குரோதத்தினுல் சில சமயம் மநுஷ்ய தேகத்தில் உண்டாகும் வியாதிகளை நினைத்துக்கொண்டால் நெஞ்சு

கிடுகிடுக்கும். அபஸ்மாரம் (காக்காய் வலி) வெறி, மூர்ச்சை, கருப்ப வாயு, இரத்த வொழுக்கு, இரத்த வாந்தி முதலிய ரோகங்கள் பலகாலும் குரோதத்திலிருந்தே உண்டாகின்றன வென்று சுதேசிய விதேசிய சிகிச்சை நூல் விற்பன்னர்கள் கூறியிருக்கிறார்கள். ஒவ்வொரு வேளையில் மிதமிஞ்சின குரோதத்தினால் மரணங்கூடச் சம்பவிப்பதுண்டு. நான் கேள்விப்பட்ட ஒரு விருத்தாந்தத்தை இங்கு உதாரணமாகக் கூறுகிறேன். (வங்காளத்தில்) இந்த பாக்கர்கஞ்ஜ் ஜில்லாவைச் சேர்ந்த ஒரு பிரஸித்தமான கிராமத்தில் கொஞ்ச நாளைக்குமுன் இரண்டு ஸ்திரீகள் கடுமையாய் வாதாடிக் கொண்டிருந்தார்கள். அவர்களுள் ஒருத்தி மற்றவளை அடிக்கக் கம்பும் கையுமாய்த் துரத்திக்கொண் டோடினாள். துரத்தப்பட்டவள் தன் குடிசைக்குள் நுழைந்து கதவைத் தாளிட்டுக்கொண்டாள். துரத்திக்கொண்டு போனவள் கதவு தாளிடப் பட்டதைக் கண்டு கதவை மேன் மேலும் இடிக்கலானாள். இப்படி இடித்துக் கொஞ்ச நேரத்துக்கெல்லாம் களைத்துக் கீழே விழுந்துவிட்டாள். சரீரம் குரோதத்தினால் வெட வெட வென்று நடுங்கத் தொடங்கியது. க்ஷணப்பொழுதில் மூர்ச்சையும் அதன் மேல் மரணமும் சம்பவித்தன. ஆஹா! என்ன பயங்கரமான முடிவு! குரோதமானது வெறியின் பிரபல காரணங்களுள் ஒன்றென வெறியர் அடைக்கலச் சாலை (பைத்தியக்கார ஆஸ்பத்திரி) அறிக்கைகளிலிருந்து தெரிகிறதென்று ஒரு இயூரோப்பிய டோக்தர் சொல்லுகிறார். உக்கிரமான கோபாவேசம் உண்டான பின் புசிக்க இஷ்டமில்லாமற் போவதும், பசி மந்தித்துப் போவதும் நம்முள் அநேகருக்கு அநுபவமா யிருக்கலாம். கோபாவேசத்தினால் சரீரத்தின் பற்பல பாகங்களிலும் இரத்த ஓட்டத்தின் வேகம் துரிதமுறுகிறது. அதனால் பெருங் கெடுதி விளைகிறது. குரோதமானது மூளையின் மத்திய ஸ்தானங்களைக் கடுமையாய்த் தாக்கி ஜீர்ண சக்தியையும் குறைத்துவிடுகிறது.

குரோதத்தின் வயப்படுகிறவனுக்கு அதனால் தன்னளவில் விளையும் தீமைகளைப்பற்றி இதுவரையில் ஆராய்ந்தோம். இனிக் கடுஞ் சொல்லால் பிறர் மேல் கோபம்

வெளிப்படும்போது அன்னார் உள்ளத்தில் எவ்வகை வருத்தம் உண்டாகிறதென்பதை ஆலோசிப்போம்.

"அம்புகளினால் துளைக்கப்பட்ட அல்லது கோடரியினால் வெட்டப்பட்ட மரம்கூடத் துளிர்க்கும். கடும் சொல்லால் புண்பட்ட நெஞ்சமோ மீண்டும் தழைக்காது."

மஹா பாரதம்.

குரோதம் துர்ப்பலத்தின் சூசகம். மனவுறுதியுடையவன் ஒருபோதும் குரோதத்துக்கு வசப்பட மாட்டான்.

"தீர்க்கதரிசிகளான ஞானிகள், எவனை, உரங்கொண்டவன் தேஜஸ்வி என்பரோ, அவனுள்ளத்தில் குரோதம் ஒருபோதும் உண்டாவதில்லை என்பது திண்ணம்."

"உண்டாகிய கோபத்தை அறிவினால் அடக்கி வைக்கிறவனையே தத்துவதரிசிகளாகிய ஞானிகள் உரங்கொண்டவன்—தேஜஸ்வி" என்பர்.

குரோதத்தினால் விளையும் தீங்குகளையும் குரோதத்தை வெல்வதால் உண்டாகும் பெருமையையும் அடிக்கடி சிந்தித்து, "இனி நான் ஒருநாளும் குரோதத்துக்கு வசமாக மாட்டேன்," என்று திடப் பிரதிஞ்ஞை செய்து கொண்டு, அந்தப் பிரதிஞ்ஞையைப் பலகாலும் உள்ளத்தில் உருவேற்றிவந்தால், எப்பொழுதாகிலும் கோபம் மூள்வதாயிருந்தாலும் அப்பொழுதே இந்தப் பிரதிஞ்ஞை ஞாபகத்துக்கு வந்துவிடும். எவனொருவன் 'நான் இன்ன காரியத்தைச் செய்யமாட்டேன்' என்று அடிக்கடி மனத்திலே உறுதி செய்து கொள்ளுகிறானோ, அந்தக் காரியத்தைச் செய்ய வேண்டியதாய் நேருங்கால் பெரும்பாலும் அவனுடைய பிரதிஞ்ஞை தனக்குத்தானே மனத்தில் எழுந்து அக் காரியத்தைச் செய்யவொட்டாமல் தடுத்துவிடும்.

குரோதத்துக்குக் காரணமாய்ப் பவிக்கக்கூடிய வியக்தி(ஆள்)யையோ விஷயத்தையோ எப்போதும் தூரத்தில் வைக்க வேண்டும். நீ எவனைப் பார்த்தால் குரோதம் உண்டாகுமோ அப்படிப்பட்டவனைத் தூரத்திலேயே வைத்திருக்க முயல வேண்டும். எந்த விஷயத்தைப் பற்றி நினைத்

தால் குரோதம் மூளுமோ, அவ் விஷயத்துடன் எவ்விதத்திலும் சம்பந்தம் வைத்துக்கொள்ளக்கூடாது. மனம் அமைதியடைந்தவுடனே குரோதம் புறங்காட்டியோடும். பிறகு அந்த வியக்தியையாவது விஷயத்தையாவது நெருங்குவதில் யாதொரு தோஷமும் இல்லை. ஆகையால் மனவமைதி உண்டாகிற வரையில் தூரத்தில் இருப்பது நலம்.

2. குரோதத்தை அடக்குகையில் முதலிற் செய்ய வேண்டியது, கூடிய வரையில் அதை அற்பாயுளுள்ளதாகச் செய்துவிட முயல்வதாகும். நிலைத்திருக்க இடமில்லை யென்று கண்டால் குரோதம் படிப்படியாய்க் குறைந்தொழியும். * பைபிலில் "உங்கள் கோபம் தணியுமுன் சூரியன் அஸ்தமியாமலிருக்கட்டும்" என்று ஓர் அழகிய வாக்கியம் உண்டு. எனவே "சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னரே உங்கள் கோபம் தணியக்கடவது" என்றபடி. இவ் வாக்கியத்தால் விளையும் நன்மையை மேல் உதாஹரிக்கப்போகும் கதை நன்கு விளக்கும். இரு ஆங்கிலேயருக்குள் ஏதோ காரணத்தால் விவாதம் உண்டாயிற்று. அவர்களுக்குப் பிரமாதமாய்க் கோபம் மூண்டது. மிகுந்த கோபாவேசமான நிலையில் இருவரும் பிரிந்து சென்றனர். சில நாழிகை கழித்து பொழுது சாயும் வேளையாயிற்று. சூரியன் அஸ்தமிக்கிற சமயம். அப்பொழுது அவர்களில் ஒருவன் மற்றவன் வீட்டுக்குச் சென்று கதவை இடித்தான். மற்றவன் உடனே வந்து கதவைத் திறக்கவும், அவனைத் தேடி வந்தவன் இவ்வாறு கூறினன். "தம்பி, சூரியன் அஸ்தமிக்கப் போகிறது. இன்னும் எவ்வளவு நேரம் நாம் இப்படியே இருப்பது?" எனவே இருவரும் ஒருவரை யொருவர் தழுவிக் கைகுலுக்கினர். கோபம் எங்கேயோ பறந்து போய்விட்டது. இதைப் பார்க்கிலும் இனிமையான காட்சி இன்னென்று காணக்கிடைக்குமா? பாருங்கள். இந்த மஹா வாக்கியம் எவ்வளவு அருமையாகச் சிற்றுயிர்க்குற்ற துணையாய் உதவியது! ஆகவே இத்தகைய சிற்சில மஹா வாக்கியங்களை அனவரதமும் மனனம் செய்து வந்தால் விசேஷ பிரயோஜனம் உண்டாகும்.

இயேசு கிறிஸ்துபிரான் ஓரிடத்தில் பின் வருமாறு உபதேசித்தார். † "நீ பலிபீடத்தில் உன் காணிக்கையைச் செலுத்த வருகையில், உன்பேரில் உன் சகோதரனுக்கு மனக்கடுப்பு இருப்பதாக உனக்கு நினைவு வந்தால், அங்கே தானே பலிபீடத்தின்முன் காணிக்கையை வைத்துவிட்டுப் போய், முன்பு உன் சகோதரனோடே ஒப்புரவாகி, பின்பு வந்து உன் காணிக்கையைச் செலுத்து.'' இந்த உபதேசத்தினால் உபகாரம்பெற்ற ஓர் இளங் குமாரனுடைய வரலாற்றை இங்கே எடுத்துக் காட்டுகிறேன் :—

ஒரு பட்டணத்தில் இரண்டு இளங் குமாரர்கள் நட்புப் பூண்டிருந்தனர். அவர்களுள் ஒருவன் ஸ்கூலில் படிப்பவன், மற்றவன் காலெஜ் மாணவன். ஒருநாள் ஏதோ காரணத்தால் இரு பிள்ளைகளும் சண்டை போட்டுக்கொண்டார்கள். மறுநாள் தலைமை உபாத்தியாயருக்கு இச் செய்தித் தெரியவரவும், அவர் ஸ்கூல் பையனைக் காலெஜ் மாணவனிடம் சென்று மன்னிப்புக் கேட்டுக்கொள்ளுமாறு பணித்தார். அதைக் கேட்ட பையன், நான் ஒரு தப்பும் செய்யவில்லை. செய்திருந்தால் மன்னிக்கும்படி பிரார்த்திப்பேன் என்றான். இப்படிச் சொல்லிவிட்டு அந்தப் பையன் இந் நிகழ்ச்சியைத் தன் பெருமைக்குக் குறைவென்றுணர்ந்து கரையலாயினன். இந்தப் பையன் அநேகமாய்த் தினந்தோறும் மற்றவனை வீட்டுக்குப் போய்ப் பார்ப்பது வழக்கம். ஆனால் சண்டை போட்டுக்கொண்டதிலிருந்து அப்படிச் செய்வதை நிறுத்திவிட்டான். ஆகையால் அவனைக் காணமற்போனது மற்றவன் மனத்தை மிகவும் வருத்தியது. ஈசுவரோபாஸனைக்கு அவன் உட்காரும்போதெல்லாம் இயேசு கிறிஸ்துவின் அந்த மஹா வாக்கியம் அவன் மனத்துக்கு வரும். தன் நண்பனுடன் ஒப்புரவாகாதிருக்கும் வரையிலும் ஆண்டவன் தன் பிரார்த்தனைகளுக்கும் துதிகளுக்கும் செவி சாய்த்தருள மாட்டாரென்று அவனுக்குத் தோற்றியது. ஆண்டவன் அன்புருவானமையால், அடியானுள்ளத்தில் எள்ளளவு தீய எண்ணமேனும் இருக்கும்வரையில் அவன் சந்நிதியை அண்டுவதற்கு அதிகாரமில்லை யென்று

† மத்தேயு, 5-ம் அத் : 23, 24 வாக்கியம்

நினைத்து அவ்விளங் குமரன் அதைரியங் கொள்ளலாயி னன். இந்த நிலைமையில் அவனுக்கு ஜ்வரமும் வந்து விட்டது. ஆகையால் அவன் தன் நண்பனிடம செல்லக் கூடவில்லை. ஜ்வரம் விட்டவுடனே அவன் அந்தப் பைய னிடம் சென்று—"தம்பி, நமக்குள் நாம் சிநேகமாயிருப் பதே நலம்; விரோதம் பாராட்டுவதில் என்ன பிரயோ ஜனம்?" என, மற்றவன் அதைக் கேட்டு முகத்தைச் சுளித் துக்கொண்டு "அது முடியாது; உடைந்துபோன கண் ணாடியை இணைக்க முடியுமா? என்று விடை யளித்தான். அதன்மேல் அந்தக் காலெஜ் மாணவன் மனந்தளர்ந்து புறப்படுகையில் மற்றப் பையனை நோக்கி, "நான் மறுபடி யும் நாளைக்கு வருவேன்; நமக்குள் நட்பு ஏற்படுகிற வரையில் தினந்தோறும் வந்து கொண்டிருப்பேன்," என்று சொல்லிவிட்டு வந்தான். அப்படியே மறுதினம் அவன் வீட்டுக்குப் போனன்; ஆனல் அந்தப்பையன் வீட்டிலில்லை. அடுத்த நாள் அந்தப் பையன் படித்துக் கொண்டிருந்த ஸ்கூலில் ஒரு சபை நடந்தது. அதற்கு வித்தியார்த்திகளால் அழைக்கப்பட்டு மற்ற இளங் குமர னும் போயிருந்தான். அந்தக் கூட்டத்தில் ஒரு வித்தி யார்த்தி ஒரு கட்டுரை எழுதி வாசித்தான். வாசித்து முடிந்தவுடனே, அக் கட்டுரையை மதித்துரைக்க வேண்டு மென்று சபையோர் காலெஜ் மாணவனைக் கேட்டுக் கொள்ள, அவன் எழுந்து, 'நான் இங்கே கட்டுரையைக் கேட்க வந்தேனே யன்றி, மதிப்புரை கூற வரவில்லை. என் நண்பனெருவன் வற்புறுத்தியதன் மேல் வந்தேன். ஆகையால் நான் பேச வேண்டியதென்ன இருக்கிறது?" என்று சொல்லி உட்கார்ந்தான். அப்பொழுது நமது ஸ்கூல்பையன் எழுந்து,"என் வேண்டுகோளுக்கு இசைந்து நீங்களெல்லோரும் வந்திருக்கிறீர்கள். உங்களில் சிலர் நான் அந்த பாபுவை மன்னிப்புக் கேட்டுக்கொள்வே னென்று நினைக்கிறீர்கள். நான் இப்பொழுதாவது இனி எப்பொழுதாவது மன்னிப்புக் கேட்டுக்கொள்ள வேண்டிய அவசியமில்லை," என்று சொல்லிக் காலெஜ் மாணவனைத் தூற்றத் தொடங்கினன். தலைமை உபாத்தி யாயர் இதைப் பார்த்து வெகுண்டு அந்த ஸ்கூல் பையனைத் தண்டிக்க முயன்றும் அந்தக் காலெஜ் மாணவன் அவரை

அப்படிச் செய்ய வேண்டாமென்று பலவாறு வேண்டிக் கொள்ளவே, அவர் சும்மா இருந்துவிட்டார். இன்று எப்படியாவது ஒப்புரவு செய்தே தீருகிறதென்று அவன் திடசங்கற்பம் செய்துகொண்டான். ஒப்புரவாகாவிட்டால் ஆண்டவன் தன் பிரார்த்தனையை ஏற்கமாட்டார். அன்புருவாகிய ஆண்டவன் அன்பில்லாதவன் கூறும் எந்த வார்த்தையையும் கேட்கமாட்டான் எனும் இத்தகைய உணர்ச்சி அவன் உள்ளத்தில் வியாபித்தபோது, அவன் இனி ஒப்புரவை நாடாமல் வாளா இருக்கமாட்டுவனோ? ஸ்கூல் பையன் எவ்வளவு கடுஞ்சொல் கூறினும், அவன் ஆத்திரங் கொள்ளவில்லை, எக் காரணத்தாலும் அவன் சித்தம் சலிக்கவில்லை. ஸ்கூல்பையன் உட்கார்ந்திருந்த இடத்துக்கு அவன் எழுந்து சென்று ஒப்புரவாகும்படி மீண்டும் வேண்டிக்கொண்டான். ஸ்கூல் பையன் சுடச் சுடப் பெருமூச்சு விட்டுக்கொண்டு "ஒப்புரவா! ஒப்புரவுக்கு வழியில்லை" என்று கர்ஜித்தான். இந்த கர்ஜனையால் காலெஜ் மாணவன் சற்றேனும் கலக்கமுறாமல் அன்பின் அருமை பெருமைகளை வியந்துகொண்டாடி, மீண்டும் அந்தப் பையனிடம் மன்னிப்புப் பிச்சை இரந்தான். அவன் சொல்லிய உருக்கமான வார்த்தைகள் எல்லோர் மனத்தையும் கரைக்கலாயின. கேட்போர் எல்லோருடைய கண்களிலும் நீர் நிறைந்தது. ஸ்கூல் பையன் மெல்ல எழுந்து மேஜையிலிருந்து தன் புஸ்தகங்களை எடுக்கப் போனான். அப்பொழுது காலெஜ் மாணவன் இன்னும் அதிகமாய் மனம் வருந்தி, "தம்பி, சற்றுப் பொறு; இப்பொழுதே போக வேண்டாம். நான் சொல்லும் இரண்டொரு வார்த்தைகளைக் கேட்டு விட்டுப் போ. என்னை மன்னித்துவிடு. இரக்கமற்றவனாயிராதே," என்று பரிதாபமாய்ப் பல தடவை கெஞ்சிக் கேட்டுக் கொள்ளலானான். தன் வார்த்தைகளைக் கேட்க விருப்பமில்லாமல் ஸ்கூல்பையன் எழுந்து சபையை விட்டுச் செல்கிறானென்று அவன் நினைத்தானாயினும், வாஸ்தவத்தில் நடந்தது அதுவல்ல. அன்பு அனைத்தையும் வெல்ல வல்லதாகையால் காலெஜ் மாணவன் ஒப்புரவை நாடியுரைத்த இனிய வுரைகளால் ஸ்கூல் பையனுடைய உள்ளம் நெக்குருக, அவன் இனித் தரித்திருக்கமாட்டாதவ

ஞய் எழுந்து காலெஜ் மாணவனிடம் வந்து, அவனது இரு கரங்களையும் பற்றி அழுதழுது 'என்னை மன்னித்தருளவும்' எனக் கதறி வேண்டிக் கொண்டான். அந்தக் காட்சி ஸ்வர்க்கலோகக் காட்சியாயிருந்தது. அதன் அழகை என்னென்று வர்ணிப்போம்? காலெஜ் மாணவன் அந்தக் கணமே அந்த ஸ்கூலிலிருந்து புறப்பட்டுப் போய் விட்டான். அன்றைய தினம் பிற்பகல் அவன் வீட்டுக்கு மீண்டும் பழையபடியே அந்த ஸ்கூல் பையன் வந்தான். அப்பொழுது காலெஜ் மாணவன் சிரித்துக் கொண்டே 'உடைந்த கண்ணாடியை இணைக்க முடியாதா? ஒப்புரவுக்கு வழியில்லையா?' என்று கேட்டான். பாருங்கள். இயேசு கிறிஸ்துபிரானின் இந்த மஹாவாக்கியம் எவ்வளவு தூரம் இந்த மாணவனது உயிரில் புகுந்து வேலைசெய்தது!

3. எவன் மீது குரோதம் உண்டாயிற்ருே, அவனிடம் குரோதம் அடங்கினவுடனே தன் குற்றத்தை ஒப்புக்கொண்டு மன்னிக்கும்படி கேட்டுக் கொள்வது குரோதத்தை அடக்குவதற்குச் சிறந்த உபாயமாகும். அடிக்கடி இப்படி தன் குற்றத்தை ஒப்புக்கொண்டு மன்னிப்புக் கேட்டுக்கொள்வதென்ருல், தன் மீதே அதிக வெறுப்புண்டாகும்; அதிலிருந்து இனி குரோதம் கொள்ள இச்சை உண்டாகாது. வேலைக்காரன்மீது குரோதம் உண்டானுல்கூட, அவனிடத்திலும் குற்றத்தை ஒப்புக்கொண்டு மன்னிக்கும்படி வேண்டிக்கொள்ள வேண்டும். அநேகர் தம் வேலைக்காரரை மனித ஜன்மமென்றே கருதுவதில்லை. ஆனுல் ஆண்டவன் பார்வையில், பிரபு எவ்வளவு மனிதனே, வேலைக்காரனும் அவ்வளவு மனிதனேயாவன். இன்று எவன் உன் காலைப் பிடித்துக் கொண்டு அதி நீசமாய்க் காலங் கழிக்கிருனே, காலாந்தரத்தில் அவன் பாதத்தைத் தொடக்கிடைத்தால் பரம பாக்கியமென்று நீயே நினைக்கக்கூடும். ஆகையால் தரணியில் எவனையும் தாழ்ந்தவனென்று கருதாமல், எல்லோரிடத்திலும் உன் குறையை ஒப்புக்கொண்டு புண்ணிய நெறியில் முன்னேறிச் செல்ல வேண்டும்.

4. தன்னுடைய துர்ப்பலத்தை நினைவூட்டும் ஏதோ ஒரு வார்த்தையை எழுதி எதிரில் வைத்துக் கொள்வதால்

மிக்க நன்மை உண்டாகும். வங்க நாட்டு ஜில்லாக்களுள் ஒன்றில் ஒரு பிரஸித்தி பெற்ற வக்கீல் அதிக கோபாவேச முள்ளவராயிருந்தார். ஒரு நாள் அவர் சினங்கொண்டு சீறி ஒரு கிழப் பிராஹ்மணனை வாயில் வந்தபடி வைதார், பிறகு அதற்காக அவர் மனம் வருந்தி மீண்டும் இம் மாதிரி நடக்காமல் தன்னைக் காத்துக் கொள்ளும் பொருட் டுச் சில காகிதத் துண்டுகளில் 'மறுபடியும்' என்ற வார்த் தையை எழுதி அவற்றைத் தன் அறையின் சுவர்களில் ஒட்டி வைத்தார். அதன் பிறகு அவருக்குக் கோபம் வரும்போதெல்லாம், அந்த வார்த்தை கண்ணில் படவும். தலையிறக்க முண்டாகும்.

கோபாவேசம் உண்டாகும்போதெல்லாம் உன் னுடைய துர்ப்பலத்தின் அநுசிதத்தன்மையைச் சாந்த மாய் ஞாபக மூட்ட ஒருவன் பக்கத்திலிருந்தால், கோபத் தின் ஆதிக்கம் படிப்படியாய்க் குறைந்துபோம். கோபம் வந்து விட்டால், எவனும் தன்னை மறந்து விடுவதால், அப் படிப்பட்ட சமயத்தில் அவனுடைய தோஷத்தை அவ னுக்கு மெத்தென நினைப்பூட்டினால்தான், அவன் மனோ விகாரம் தணிந்து யதாஸ்திதிக்கு வருவான். ஆனால் இப்படி நினைப்பூட்டுகிறவன் வெடுவெடுப்புள்ளவனா யிருந்துவிட்டால், உபகாரத்துக்கு மாறாக அபகாரமே விளையும், கோபாவேசவேளையில் எவனாவது கடுமையான மொழிகளால் ஒருவனுடைய கோபமாகிய குற்றத்தை எடுத்துக் காட்டினால், கோபம் தணிவதுபோய் அது வளரவே செய்யும்.

கோபத்தால் கலங்கிய முகத்தைக் கண்ணாடியில் பார்த்துக் கொண்டால், தன் விகார வடிவம் தனக்கே அருவருப்பாய்த் தோற்றுவதனால், வெட்கமும் வருத்தமும் தோன்றி, அதனால் கோபத்தினின்றும் விடுதலை பிறக்க லாம்.

5. கோபம் வரும்பொழுது பேசாமலிருத்தல் கோபத்தை அடக்குவதற்கு இன்னொரு உபாயமாகும். பிலாத்தோ என்கிற கிரேக்க தத்தவஞ்ஞன் இந்த உபா யத்தை அவலம்பித்துக் கோபத்தை நிக்கிரகம் செய்திருந் தான். அவனுக்குக் கோபாவேசம் உண்டாகும்போது

மௌனமாய் உட்கார்ந்திருப்பான். அவ்வாவேசம் தணிகிற வரையில் குற்றவாளியை ஒருகாலும் தண்டியான். ஒருநாள் அவன் அப்படிப்பட்ட கோபாவேசத்துக்குள்ளாகி மௌனமாய் உட்கார்ந்து கொண்டிருக்கையில், ஒரு சிநேகிதன் வந்து என்ன செய்துகொண்டிருக்கிறு யென்று கேட்டான். அதற்கு பிலாத்தோ, 'நான் ஒரு கோபிஷ்டியைத் தண்டித்துக்கொண்டிருக்கிறேன்.' என்று உத்தரமுரைத்தான். கோபாவேசத்தில் ஒருவனைத் தண்டிக்கப் போனல், அளவுக்கு மிஞ்சித் தண்டித்து விடக்கூடும். ஆகையால் அக்கோபாவேசம் தணிகிறவரையில் காத்திருந்தால், அவன் விஷயத்தில் நியாயமாய் நடந்துகொள்வது சாத்தியமாகும். கோபாவேசம் வரும் பொழுது இடத்தை மாற்றிக் கொள்வது நல்லது. இதனல் ஆவேசம் தணியும்.

கோபம் வரும்பொழுது நூறுவரையில் எண்ணின பிறகே கோபத்தை வெளிப்படுத்தவேண்டுமென்னும் ஒரு புத்திமதி நம் நாட்டில் வழங்கிவருகிறது. ஒன்று முதல் நூறுவரையில் எண்ணுவதற்குள் கோபத்தின் வேகம் குறைந்து போம். உரத்த குரலில் பகவந்நாமத்தை ஸ்மரிப்பதாலும் இதே பலன் உண்டாம். எவ்விதத்திலாவது மனத்தைக் கோபத்துக்கு விஷயமாயுள்ள பொருளினின்றும் திருப்பினல், நற்பயன் விளைவது திண்ணம்.

6. உபேக்ஷை, குரோதத்துக்குக் கொடிய சத்துரு. அவமதிப்புகளையும் அவதூறுகளையும் அலக்ஷியம் செய்யப் பழக வேண்டும். உபேக்ஷாபாவத்தைச் சாதனம் பண்ணினவனுடைய உள்ளுயிரில் குரோதத்தின் அலைகள் எழ முடியா. 'இவன் என்னை நிந்தித்ததனல் எனக்கு என்ன நஷ்டம் உண்டாய் விடும்'; இன்னொருவன் என்னை அவமதித்ததனல்தானும் என்ன பிரமாதம்?' என்று மனத்தைத் தேற்றிக் கொள்ளவேண்டும்.

"அவமதிக்கப்பட்டவன் சுகமாய்த் தூங்குகிறுன, சுகமாய் விழித்தெழுகிறுன், சுகமாய் உலாவுகிறுன். அவமதித்தவனே இவ்வுலகில் அழிந்து போகிறுன்."

மநுஸம்ஹிதை. 11-ம் அத். 143-ம் சுலோ

'அநியாயம் பண்ணுகிறவன், அதன் பலனைச் சீக்கிரமாகவோ, பொறுத்தோ, அனுபவித்தே தீரவேண்டும். ஒருவன் அநியாயம் செய்து விட்டதனாலேயே நானும் அவனுக்கு அநியாயம் பண்ணவேண்டுமோ? இறைவனாணையை அனுசரித்து நான் செய்ய வேண்டுவதைக் கலங்கா மனத்துடன் செய்யக் கடவேன்,' என்று சிந்திக்குமிடத்தே, சித்தம் திடப்பட்டு அமைதியுறும்; அமைதியுற்றால், குரோதம் ஓடிப்போம்.

7. காமம், லோபம், அகங்காரம், பிறர் குற்றங் கூறல் முதலியவை குறையும் அளவுக்குக் குரோதமும் குறைந்து போம். காமமும் லோபமும் திருப்தியடையாமற் போகுமிடத்தும், தற்பெருமை தாக்கப் படுமிடத்தும், பிறர் குற்றங்களைக் காணு மிடத்துமே பெரும்பாலும் குரோதம் உண்டாகிறது.

பீஷ்மர் யுதிஷ்டிரனுக்கு இவ்வாறு போதிக்கிறார்:

> "லோபத்திலிருந்து குரோதம் பிறக்கிறது. அது பிறர் குற்றங்களை எடுத்துப் பேசுவதனால் கொழுந்து விட்டெரிகிறது. அதைப் பொறுமையினாலேயே நிறுத்தி அடக்கலாகும்"—(மஹா பாரதம் சாந்தி பர்வம், 163-ம் அத், 7,8-ம் சுலோகம்.)

பொறுமையும், அமைதியும், இரக்கமும், தத்துவ ஞானமும் எவ்வளவுக் கெவ்வளவு வளர்ச்சியடைகின்றனவோ, அவ்வளவுக் கவ்வளவு குரோதம் தணிவுறும். பிறர் குணங்களைப் புகழ்ந்து பாராட்டுதலினால் உண்டாகும் விமலமாகிய ஆனந்த ரஸத்தை எவ்வளவுக் கெவ்வளவு அனுபவிக்கிறோமோ, அவ்வளவுக்கவ்வளவு குரோதத்தின் அக்கி ஜ்வாலை ஆறிவிடும்.

> "குரோத லோபங்களிலிருந்து அசூயை உண்டாகிறது. எல்லா உயிர்களிடத்தும் தயை வைப்பதனால் அவ்வசூயை அடங்கும். நீசமும் பழிக்கத்தக்கதுமானதைப் பார்த்தலினாலும் அசூயை உண்டாகும்; அது தத்துவ ஞானத்தினால் நிவிர்த்தியாகும்." மஹா பாரதம், சாந்தி பர்வம், 163-ம் அத்தியாயம், 9-ம் சுலோகம்.

தீமையாயுள்ள தெதுவும் சொற்ப காலத்தில் அழியும், ஸத்தாயுள்ளதே நிலைத்து நிற்கும். இவ்வாய்மையை

எப்பொழுதும் உள்ளத்தில் வைத்துக்கொண்டால், அசூயை முதலியவை தொலைந்துபோம்.

"பலசாலியாகிய பகைவன் செய்த அபகாரத்துக்குப் பிரதியுபகாரம் செய்யும் திறனற்றவர்களுக்கே தீவிரமான அசூயை உண்டாகிறது. அது சாருண்யத்தாலேயே நிவிர்த்தியாகும்." மஹா பாரதம், சாந்தி பர்வம், 163-ம் அத்தியாயம், 19-ம். சுலோகம்.

ஆண்டவன் அருளிய சக்தியைத் துஷ்பிரயோகம் பண்ணும் பகைவன் அத்தியந்தம் பரிதபிக்கப்படுதற்குரியவன் என்று சிந்திக்கச் சிந்திக்க, அசூயை அகலும்.

தயையும் அன்பும் கொண்டொழுக வேண்டுமென்று இதுவரையில் சொல்லி வந்ததிலிருந்து அநியாயத்தையும் அசத்தியத்தையும் அதர்மத்தையும் எதிர்த்துப் போராடக் கூடாதென்று நான் சொல்வதாக ஒருவரும் எண்ணிக் கொள்ளக்கூடாது. இவற்றை எதிர்த்துச் செய்யும் போராட்டம் கைகூடாமற் போயினும், அதனால் உபயோகமுண்டு. அநியாயமோ, அசத்தியமோ, அதர்மமோ எவ்வளவாவது எங்கு காணப்பட்டாலும், அவ்விடத்திலேயே அதற்கு விரோதமாக இடியேறுபோல் கூக்குரலிட்டு, அதை ஒழிக்கும் பொருட்டு உயிரை விட்டேனும் உழைக்கவேண்டும். அசத்தியத்துக்கும் அக்கிரமத்துக்கும் அதர்மத்துக்கும் விரோதமாக ஆகாயமும் பூமியும் கிடுகிடுக்கும்படி ஆர்ப்பரித்து அவற்றை ஒழித்துவிட முயல வேண்டும். ஆனால் நிதான புத்தியை மட்டும் கைவிடாமல் மனத்தைத் தடஸ்த நிலையில் வைத்திருப்பதில் அதி ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும். சாந்த பாவத்துடன் அற வாளேந்திப் பாபத்தை எதிர்த்துப் போர்முனையில் முன்னேறிச் செல்லவேண்டும். ஸ்ரீ கிருஷ்ணன் எந்த பாவத்தில் குரு க்ஷேத்திரத்தில் யுத்தம் புரியும்படி அர்ஜுனனுக்கு உபதேசித்தாரோ, அந்த பாவத்தில் பாபத்துடன் போர் புரிய வேண்டும். கடமையைச் செலுத்தும் புத்தியுடன் சத்தியத்தை நிலைநிறுத்திப் பகவதாஞ்ஞையை அநுவர்த்திக்கவேண்டி, அசத்தியத்தையும் அநியாயத்தையும் அதர்மத்தையும் எதிர்க்கக் கச்சை கட்டிக்கொண்டு போர்க்களத்தில் பிரவர்த்திக்கவேண்

டுமே யன்றி, மனத்தில் குரோத மென்பது அணுவளவும் இருத்தல் கூடாது. இவ்வாறு பாபத்தை எதிர்த்துப் போராடாதவன் அசுரனுடைய மகனே யன்றி அசுர மர்த்தனியாகிய பகவத் சக்தி அம்பிகையின் மகனல்லன். அவன் பகவத் விரோதி. ஜோஸெப் மாஜினி என்னும் இத்தாலிய தேசபக்தன் "உன்னருகில் தீமையைக் காணும்போதெல்லாம் நீ அதை எதிர்த்துப் போராடா திருந்தால், நீ உன் கடமையைச் செலுத்தத் தவறிய விசுவாச காதகனவாய்," என்று கூறி யிருக்கிறான். பாபத்தை எதிர்த்து நிற்காதவன் பகவத் ஸந்நிதானத்தில் துரோகியே யாவன், விசுவாச காதகனே யாவன். மஹா பாரதத்தில் கசியபன் பிரஹ்லாதனுக்கு இவ்வாறு உப தேசிக்கிறான். :—

> "தர்மமானது அதர்மத்தினால் குத்தப்பட்டு அதனின்றும் பரிஹாரத்தைப் பிரார்த்தித்து ஜன சமூகத்தை அடைகிறது. சமூகத்தார் தர்மத்தைக் குத்தின அதர்மமாகிய பாணத்தைப் பிடுங்கி யெறிவதற்கு உதவி செய்ய மறுத்தால், அந்தப் பாபத்திற் பாதி சமூகத் தலைவனைச் சாரும்; காற்பங்கு அவ் வதர்மத்தைப் பழியாது வாளா விருப்போரை அடையும்; எஞ்சிய காற்பங்கு மட்டுமே குற்றவாளியைச் சுற்றிக்கொள் ளும் குற்றவாளி தண்டிக்கப்படுகிற வரையில் அந்தப் பாபம் சமூகத்தின் தலையிலிருந்து குற்றவாளியின் தலையில் இறங்காது" சபாபர்வம்' 68-ம் அத்., 77-79-ம் சுலோ.

சமூகத்தின் பாபத்தை ஒழிக்கும் விஷயத்தில் நாம் எவ்வளவு தூரம் உத்தரவாதிகளா யிருக்கிறோ மென்பதை நாம் சரிவர உணர்கிறோமா?

8. குரோதத்தை அடக்கும்பொருட்டுச் சில சரீர நியமங்களை அநுஷ்டிக்க வேண்டியதும அவசியமாகும். எந்தப் பதார்த்தங்களை உண்டால் குரோதம் வளருமோ, அவைகளை முற்றிலும் தள்ளிவிடவேண்டும். குரோதம் ரஜோ குணத்தினின்று உற்பத்தியாகிற தென்று ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன் ஆகவே ராஜஸ பதார்த்தங் களை விலக்கவேண்டும். குரோத சுபாவமுடையவர்கள் சரீரத்தைக் குளிர்ச்சியாக வைத்துக்கொண்டு, பித்த விருத்தியாக வொட்டாமல் ஜாக்கிரதையாய்ப் பார்த்துக் கொள்ளவேண்டும். பிரதிதினமும் கால்களை முழந்தாள்

வரையிலும், முகத்தைக் கழுத்துவரையிலும் நன்ருய் ஜலத்தினுல் சுத்தி செய்து வந்தால், சுபாவத்தின் உக்கிரத் தன்மை படிப்படியாய்க் குறைந்துபோம். நமது முஸ்லீம் சகோதரர்கள் நமாஜ் ஓதுவதற்குமுன் இவ்வாறே கை கால் முகங்களை அலம்பிக்கொள்வது பிரஸித்தம். மனத்தைச் சாந்தப் படுத்திக்கொள்வதே இதன் உத்தேசமென்பது வெளிப்படை.

குரோதத்தினின்று உண்டாவதாகக் கீழ்க்கூறிவந்த எண்வித தோஷங்களிலிருந்து நம்மை நாம் காப்பாற்றிக் கொள்ளவேண்டும். குரோதத்தை அடக்கவேண்டுமென்று சொல்வதை எதிர்த்துச் சிலர் இவ்வாறு கேட்கிருர்கள்: "குரோதத்தை ஒழித்தால், அப்பால் நடப்பதெப்படி? இவ்வுலகத்தில் குரோதம் எவ்வளவோ உபயோகமாயிருக்கிறது; அதை அடக்கிவிட்டால், உலக விவகாரங்களை எப்படி நடத்திக்கொண்டு போகமுடியும்?" இப்படிக் கேட்பவர்கள் குரோதத்தைவிடச் சாந்த சுபாவத்தினின்று அதிக பலன் உண்டாகின்றதென்பதை அறியார் போலும். எந்தப் பையனையாவது கெட்ட வழியிலிருந்து நல்ல வழிக்குத் திருப்பவேண்டுமானுல், நயமான வார்த்தைகள் பயன் படுவதுபோல் குரோதத்தோடு கூடிய கடுஞ்சொற்கள் பயன்படா வென்பதைப்பற்றி எல்லாப் பள்ளிக்கூட உபாத்தியார்களும் சாக்ஷியம் சொல்லக்கூடும். கடூர தண்டனையினுல் ஏதேனும் பலன் உண்டாகுமானுல், அதைவிட ஆயிரமடங்கு அதிகமான பலன் மென்மையான தண்டனையினுல் உண்டாகுமென்பதில் யாதொரு சந்தேகமும் இல்லை. ஆகவே கோபாவேசங் கொண்ட எவனுவது உன்னை அடிக்க வந்தால், அவனிடம் நகை முகத்துடன் இன்சொல் கூறுமிடத்தே, அவனது கோபாவேசம் உன் இனிய ஒழுக்கத்தின்முன்னே முதுகு காட்டியோடுமென்பதைக் கண்கூடாய்ப் பார்க்கலாம்.

"இனிமையினுல் கடுமை இனிமை இரண்டையும் வசப்படுத்தலாம். இனிமையினுல் பெறக்கூடாதது ஒன்றுமில்லை ஆகவே இனிமையே கடுமையையும் விட மிகத் தீவிரமானதாகும்" மஹாபாரதம், வனபர்வம், 28-ம் அத், 31-ம் சுலோகம்.

இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்குவது. திருக்குறள் : அதி 10

ஆகவே இனிமையையே கைக்கொள்ள வேண்டும். எப்பொழுதாவது இனிமையால் காரியமாகாதென்று தோன்றினால், அப்பொழுது ஸாதுக்களைப் போல் கோபவுணர்ச்சியின்றிக் கோப பாவத்தைக் காட்டலாம்.

"சாது புருஷன் சினமுறுங் காலையிலும், அவன் மனம் விகிர்தி யடையாது. கடல் நீரைத் துரும்புக் கொள்ளியினால் காய்ச்ச முடியுமா?" ஹிதோபதேசம், மித்திரலாபம், 87-ம் சுலோகம்.

சாது புருஷர் காட்டும் குரோத பாவம் குரோதமன்று. அது புறத்திலுள்ள அநியாயத்தைக் கடிவதன் பொருட்டு அவர்கள் காட்டும் குரோத நடிப்பேயாகும். மற்றும் அதனால் அவர்கள் மனத்தில் எவ்வகை விபரீத விகாரங்களும் உண்டாகா.

ஆவசியகம் நேர்ந்தால், சாது புருஷர்களைப் போலவே நாமும் மாசற்ற மனத்துடன் கோபத்தைக் காட்டலாம். புஸ்ஸென்று சீறலாமேயன்றி கடிக்கக்கூடாது. ஒருநாள் தேவரிஷியாகிய நாரதர் வீணாபாணியாய் ஹரி நாமத்தைப் பாடிக்கொண்டு வைகுண்டத்துக்குப் போய்க்கொண்டிருந்தார். வழியில் ஒரு ஸர்ப்பம் அவரைப்பார்த்து, "தேவ ரிஷியே, மோக்ஷத்துக்கு வழி எது?" என்று விநயமாய்க் கேட்டது. "நீ ஒருவரையும் கடிக்காமலிருந்தால், மோக்ஷமடைவாய்," என்று உத்தரம் கூறிவிட்டு நாரதர் வைகுண்டம் சென்றார். ஸர்ப்பம் அதுமுதல் அவ்வுபதேசத்தை அநுசரித்து ஒருவருக்கும் தீங்கு செய்யாமல் மிகச் சாந்தமாய்க் காலத்தைக் கழிக்க ஆரம்பித்தது. இடைப்பிள்ளைகள் இதை எப்படியோ தெரிந்து கொண்டு ஸர்ப்பத்தைக் கல்லால் அடிக்கத் தொடங்கினார்கள். அப்பொழுதும் அது படத்தை எடுக்கவில்லை. அவர்கள் செய்த உபத்திரவத்தினால் அது தேகமுழுதும் ரணமாகிச் சொல்லமுடியாத வேதனைக்குள்ளாகியும், அதையெல்லாம் சாந்தமாய்ச் சகித்துக்கொண்டு, அவர்கள்மீது எள்ளளவேனும் கோபத்தைக் காட்டாமல் மிகுந்த கஷ்டத்துடன் காலத்தைக் கழித்துவந்தது. தவளைகள்கூட

அதைக் கேலி செய்யலாயின. இப்படியிருக்கையில் ஒரு நாள் நாதரிஷி மறுபடியும் அதே வழியாய்ப் போய்க் கொண்டிருந்தார். அவர் அந்த ஸர்ப்பத்தைப் பார்த்து, "ஏ ஸர்ப்பமே, எப்படி இருக்கிருய்?" என்று கேட்க, ஸர்ப்பம் இவ்வாறு உத்தரம் சொல்லியது. "ஸ்வாமி, என் விதியை என்னென்று சொல்வேன்! தேவரீர் உபதேசத்தின்படி நடந்து வந்ததில், என் சரீரம் என்ன கதியை அடைந்தது பாருங்கள். இடைப்பிள்ளைகள் பண்ணும் சித்திரவதையினுல் என் உயிருக்கே உலைவைத்து விட்டார்கள். தவளைகள்கூட என்னைப் பார்த்துப் பரிகசிக்கின்றன. இந்த நிலைமையில் நான் எப்படி வாழ்நாளைக் கழிப்பேன்? நான் செத்த பிணம் மாதிரி விழுந்து கிடக்கிறேன்; இவர்களோ என்னைத் தங்கள் மனம்போனபடி வருத்துகிருர்கள். இனி நான் என்ன செய்ய?" நாரதர் கூறினுர்: "ஏன்? நான் உன்னைச் செய்யச் சொன்னதென்ன? நான் உன்னைச் சீறவேண்டாமென்று தடுக்கவில்லையே, கடிக்க வேண்டாமென்றுதானே தடுத்திருந்தேன்." அன்றுமுதல் அந்த ஸர்ப்பமானது படத்தை விரித்துப் புஸ்ஸென்று சீறத்தொடங்கவும், பிள்ளைகள் அனைவரும் பயந்து ஓட்டமெடுக்கலாயினர். உலகத்திலே சிற்சில சமயங்களில் இப்படிச் சீறுவதற்கு ஆவசியகம் ஏற்படலாம்; ஆனுல் கடிப்பதுமட்டும் ஒருபோதும் அவசியமாயிராது.

ஆகவே நாம் ஒருபோதும் எவரையும் கடிக்கவேண்டாம். ஆண்டவனுடைய அருளால் நம் இருதயங்களிலிருந்து குரோதத்தைத் துரத்தியோட்டும் ஆற்றல் நமக்கு உண்டாவதாக.

காமம் வெகுளி மயக்கம் இவை மூன்றன்
நாமம் கெடக் கெடுநோய். திருக்குறள்: அதி 36

லோபம் (பேராசை)

1. "என்னுடைய லோபத்துக்கு விஷயமாயிருப்பவை எவை? லோபத்தை ஈடேற்றிக் கொண்டால், அதனுல் உண்டாகும் சுகம் எவ்வளவு காலம் நீடித்திருக்கும்? கடைசியில் அதனுல் விளையும் பயன்தான் என்ன?" என்று இவ்வாறு சிந்தித்துக்கொண்டேயிருந்தால்,

லோபம் படிப்படியாய்க் குறைந்துபோம். உலக போகங்களின் நிலையாமையை அநுபவத்தில் உணர்ந்தவளவில், லோபம் பறந்துபோம். மஹாபாரதத்தில் பீஷ்மன் யுதிஷ்டிரனுக்கு இவ்வாறு அறிவுறுத்துகின்றார் :—

"லோபம் அல்லது பேராசை அஞ்ஞானத்தினின்று உண்டாகிறது. அதனால் தேடப்படும் போகங்களை நிலையற்றவையென்பதைக் கண்டறிந்தால், அப் பேராசை தணிந்துபோம்."

சாதாரணமாய்க் கண், காது, மூக்கு, நாக்கு முதலிய புலன்களின் இன்ப நுகர்ச்சிப் பொருள்கள் மட்டுமேயன்றிச் செலவம், மானம், புகழ் முதலியவைகூடப் பேராசைக்கு விஷயமாகின்றன. சற்று ஸ்திர சித்தத்துடன் சிந்தித்துப் பார்த்தால், இந்த லோப விஷயங்கள் மிகவும் நிலையற்றவை யென்றும் பயனற்றவை யென்றும் அறியப்படும். இந்திரிய போக்கிய விஷயங்கள் ஒருபுறமிருக்க, புகழ், மானம், செல்வம் முதலியவை தாமும், என்ன, எத்தனை நாளைய வாழ்வு? இவற்றின் ஸாரமின்மையையும நிலையாமையையும நன்குணர்ந்தே புத்தபிரான் சந்தகனை நோக்கி இவ்வாறு உரைக்கிறார் :—

"ஓ சந்தகா, இந்த போக்கிய விஷயங்களெல்லாம் நிலை யற்றவை. அநித்தியமானவை; இவற்றின் இறுதி விளைவு துக்ககரமானது. இவை உறுதியற்றவை; இயற்கையாகவே மாறுந்தன்மை கொண்டவை; மலைபருவியைப் போல் விரைந்து போய்விடுகின்றவை; பனித் திவலைகளைப் போல் சொற்ப நேரமே இருக்கின்றவை; ஆழ்ந்த சோகத்தை உற்பத்தி செய்கின்றவை; வெறுமையான கை முட்டியைப் போல் சூநியமானவை; வாழையின் அடிமரத்தைப் போல் உரமற்றவை, வேகாத பதார்த்தங்களைப் போல் வேதனையை உண்டு பண்ணுகின்றவை; சரத்கால மேகம் போல் தோன்றியவுடன் சிதறிப்போகின்றவை; ஆகாயத்தில் பளிச்சிடும் மின்னலைப் போல் சஞ்சலமானவை; விஷபோஜனத்தைப்போல் இறுதியில் அநர்த்தம் விளைவிப்பவை; 'மாருத'க் கொடியைப் போல் துன்பம் அளிப்பவை; சிறு பிள்ளைகள் கிறிய சித்திரம் போல் பயனற்றவை; நீர்க் குமிழிகளுக்கு ஒப்பானவை; அதிசொற்ப காலத்துக்குள் அழியத்தக்கவை; மாயமாகிய கானனீர்போல் இந்திரிய விகாரத்தினாலும சித்த விகாரத்தினாலும் உண்டாகின்றவை; மாயையைப் போல்

சித்தத்தை மயக்குகின்றவை; விகற்பமான பார்வையுடைய வர்களுக்கு இன்பந்தரும் சொப்பனங்களுக்கு ஒப்பிடக் கூடியவை; கடலைப் போல் அல்லலெனும் அலைகள் நிறைந் தவை; உப்பு நீரைப் போல் விடாயை மிகைப்படுத்து கின்றவை; ஸர்ப்பத்தின் தலையைப் போல் தொடுவதற்கு அபாயகரமானவை; பயங்கரமான நீர் வீழ்ச்சியைப் போல் புலவர்களால் தவிர்க்கப்பட்டவை; அச்சம், பூசல், வீண் பெருமை முதலிய தீக்குணங்கள் நிரம்பியிருத்தலால் அறிஞர்களால் அகற்றப்பட்டவை; ஆன்றோரால்பழிக்கப் பட்டவை; கற்றோரால் கடியப்பட்டவை; விவேகிகளால் வெறுக்கப்பட்டவை; புத்தியீனர்களால் போற்றப்பட்டவை; சழக்கர்களால் சீராட்டப்பட்டவை; பாம்பின் தலையைப் போல் புத்திமான்களால் புறக்கணிக்கப் பட்டவையும், மூத்திர பாண்டத்தைப் போல் அசுத்த மென்று இகழப்பட்ட வையும், சர்வ சுகங்களையும் அழிப்பவையுமாய் உள்ளவை யென்றறிந்து, காம விஷயங்களில் நான் விருப்பங்கொள்வ தில்லை.''

லலித விஸ்தரம், 105—ம் அத்.

சாக்கிய ஸிம்ஹனால் இவ்வாறு விரித்துரைக்கப்பட்ட இழிந்தவையும் மக்களை அடியோடு அழிப்பவையுமாகிய விஷய போகங்களை அனுபவிக்க நாம் ஏன் ஆலாய்ப் பறக்கவேண்டும்? அப்படி அனுபவிப்பதனால் வரும் சுகந் தானும் எவ்வளவு காலம் நிலைத்திருக்கப்போகிறது? மஹா கவியாகிய பாரவி கூறுகிறான்.

"இன்று அனுபவிக்கப்பட்ட சுகச் செல்வம் நாளைக்குப் பழங்கதையாகி, அதன் நினைவு மட்டுமே எஞ்சி நிற்கிறது. ஆகையால் விஷயபோக நுகர்ச்சியைக் கனவுக் கொப்பாகக் கருதி, அதற்கு ஒருபோதும் உட்படாதிருக்கவேண்டும்.''

கிராதார்ஜுனீயம்.

இனி, இந்தக் கண நேரத்திய சுகமும் ஒரு சுக மாகுமோ? தற்போதைக்கு இனிமையா யிருந்தாலும், முடிவில் இந்தச் சுகம் விஷத் தன்மை கொண்டதாகும்.

லோப விஷயங்களைக் குறித்துப் புத்ததேவன், 'விஷப் ஹோஜாமிவ விபரிணும தஃக்ஹா':— 'நச்சுணவைப் போல் துக்கமே இவற்றின் இறுதி விளைவு' என்று கூறி யிருக்கிறார். பின்னும் பாரவி கவி கூறுகிறார்:—

"அவை ஆசை காட்டி மோசம் செய்கின்றன; சிறிது நேரத்துக்கு இன்பமளித்து நாளாவட்டத்தில் தீங்கிழைக்கின்றன. இவை நம்மை விட்டுவிட்டன வென்று நாம் நினைத்துக் கொண்டாலும், அவற்றை விட்டொழிப்பது மிக அரிது. நம்முடைய இந்திரிய விருப்பங்களே நமக்குக் கொடிய சத்ருக்கள்."

கிராதார்ஜுநீயம்.

'பேராசையால் வருவது பாபம், பாபத்தால் வருவது சாவு' என்று வங்க நாட்டில் வழங்கும் பழமொழியில் ஆழ்ந்த உண்மை அடங்கியிருக்கிறது.

"லோபத்திலிருந்து குரோதம் உண்டாகிறது; லோபத்திலிருந்தே காமம் ஜநிக்கிறது; பின்னும் லோபத்திலிருந்தே மோஹமும் நாசமும் உற்பத்தியாகின்றன. ஆதலால் லோபமே பாபத்துக்கு மூலம்." —ஹிதோபதேசம்

லோபம் ஈடேறுவதற்கு எவ்வகை இடையூறு உண்டானாலும், கோபாவேசம உண்டாகும். லோபம் உண்டான மாத்திரத்தில் அது எப்பொருளினிடம் செலுத்தப் படுகிறதோ அவ்விஷயத்தில் மனம் பலமாய் ஈர்க்கப் படுகிறது. அவ்வீர்ப்பினால் மனிதன் மோஹாந்தகாரத்தில் ஆழ்த்தப் படுகிறான். அப்பொருளை எவ்விதத்தில் கைப் பற்றலாம் என்பதைப் பற்றி எண்ணி எண்ணி நன்மை தீமைகளின் பகுத்தறிவு இல்லாமற் போய்விடுகிறது. போகவே, அழிவுபாடு அவசியம் வந்துறுகிறது. செல்வத்தில் ஆசை, மானத்தில் ஆசை, புகழில் ஆசை இவற்றால் மனிதன் தன்னையே மறந்து புத்தி மாறாட்டமுற்றுப் பலவகையான தீய வழிகளைப் பின்பற்றித் தன் ஆசையை நிறைவேற்றிக் கொள்ள முயல்கிறான்.

"லோபம் விவேகத்தை அழித்துவிடுகிறது. விவேகம் அழியவே, லஜ்ஜை அழியும். லஜ்ஜை அழிய, தர்மம் அழியும். தர்மம் அழிய, திருவுடையதா யிருப்பதெல்லாம் அழிந்துபடும்." மஹா பாரதம்.

"லோபம் புத்தியைக் கலக்கி, உலக விஷயங்களில் அவாவை உண்டு பண்ணுகிறது. அவ் அவாவினால் மனிதன் இம்மையிலும் மறுமையிலும் துக்கத்தை அடைகிறான்."

ஹிதோபதேசம்.

லோபத்துக்கு விஷயமான பொருள்கள், எனவே, ஆசைப்பட்டுத் தேடும் பொருள்கள் கிட்டினவுடன் திருப்தி உண்டானலாவது, ஆசையைத் தீர்த்துக்கொள் வதன் சார்பில் சிறிது நியாயம் இருப்பதாக ஒருகால் தோன்றலாம். உலக அநுபவமோ அதற்கு நேர் மாருக இருக்கிறது. போகத்தினுல் ஆசையைப் பூர்த்தி செய்யச் செய்ய, ஆசைத் தீய்க்கு விறகிட்டது போல் ஆய்விடு கிறது. ஆசைகள் இன்னும் அதிகமாய்க் கொழுந்து விட்டெரியத் தொடங்குகின்றன. யயாதி மஹாராஜன் மூப்படைந்த பிறகு ஆசைகளை அடக்குவதற்கு மாருகத் தனக்கு இளமை திரும்பி வந்தால் அவ் ஆசைகளைத் திருப்தி செய்வது வாயிலாகச் சாந்தப்படுத்தலாமென் றெண்ணித் தன் மக்களை நோக்கி அவர்களின் இளமை யைத் தனக்கு அளிக்கும்படி வேண்டினன். அவர்களில் ஒருவனாகிய புரு என்பவன் தன் இளமையைத் தந்தைக்கு அளித்துத் தந்தையின் மூப்பைத் தான் வாங்கிக்கொண் டான். இவ்வாறு புனர் யௌவனப் பிராப்தியுற்ற யயாதி ஒருநாளல்ல, இரண்டுநாளல்ல, ஒரு வருஷம் நூறு வருஷம் கூடவல்ல, சரியாய் ஓராயிரம் வருஷம் சகல விதமான சுகபோகங்களையும் யதேஷ்டமாய் அனுபவித்தான். ஆனல் கடைசியில் என்ன கண்டான்? ஆசைக்கோர் அளவில்லை என்பதை ஆயிரமாண்டு சுகபோகங்களை அனுபவித்தபின் கண்டுணர்ந்தான். அப்பொழுது தன் மகன் புருவை வரவழைத்து இவ்வாறு கூறினன்.

"பகைவரை வெல்லும் புதல்வனே, ஆசை கொண்ட மட்டும், உற்சாகம் கொண்ட மட்டும், மனங் கொண்ட கால மட்டும், உன் யௌவனத்தைக் கொண்டு விஷய போகங்களை அனுபவித்தேன். காமபோகத்தினுல் காம நிவிர்த்தி ஒரு காலும் உண்டாவதில்லை; மற்று அவி சொரியப் பெற்ற அக்கினியைப் போலக் காமம் இன்னும் அதிகமாய் மூண்டெ ரியும். இந்தப் புவியில் எத்துணை நெல்லும், யவையும் பொன்னும், பசுவும், பெண்ணும் உண்டோ, அவற்றை யெல்லாம் ஒரு சேரத் திரட்டினுலும் ஒருவனுடைய ஆசை யைக்கூடத் தணிக்கப் போதியதாகமாட்டா. ஆகையால் அவ்வாசையை ஒழிக்க வேண்டும். பிராணபாயகரமான நோய் போன்றதும், தூர்மதிகளால் விடற்கரியதும், தேகமுழுதும் வயதினுல் தளர்ச்சியுற்றாலும் வலிமை குன்றாதது

மாகிய இந்த ஆசையை விட்டுவிடுகிறவனே பாக்கியவான். இன்னும் சரியாய் ஆயிரம் ஆண்டுகளாக நான் விஷய போகங்களில் அழுந்திபிருந்த போதிலும் நாளுக்கு நாள் அவற்றில் எனக்குள்ள ஆசை விரைவாய் வளர்ந்து கொண்டே வருகிறது. ஆகையால் இதை நான் துறந்து பரம்பொருளில் உள்ளத்தை நிறுத்திச் சுகதுக்க வுணர்ச்சிகளைப் பாராட்டாது, எதையும் எனதெனக் கருதாமல் வனத்தில் மான்களுடன் சஞ்சரிப்பேன்.'' ஸ்ரீமத் பாகவதம், நவமஸ்கந்தம், 19-ம் அத்.

ஆசையைப் போன்ற மகோவியாதி மற்றென்றில்லை. அது எவனிடத்தில் விருத்தி யடைகிறதோ, அவனுக்கு மனச்சாந்தி எது? மனத்தில் எவ்வகை ஆசையுமின்றி விஷயபோகங்களை அனுபவித்தால் மட்டுமே சாந்தி உண்டாகும். இல்லாவிட்டால், சாந்தி யென்பது முயற் கொம்பே.

''நாலா பக்கங்களி லிருந்தும் ஆற்று நீர் கடலில் வந்து விழுந்தாலும், கடலானது அத்தனை நீர்த்திரளாலும் நிறையப் பெற்றும், எப்படி அசைவின்றி யிருக்கிறதோ, அப்படியே ஸமஸ்த விஷய போகங்களையும் அனுபவித்தும் சித்தவிகாரம் அடையாமலிருப்பவனே சாந்தியை அடைவானன்றி, விஷய சுகங்களை விரும்புகிறவனுக்கு என்றும் சாந்தியில்லை.

கீதை.'' 2-ம் அத்.

லோபம். (பேராசை)

2. ஆசையைக் கிளப்பும் பொருளினின்று மனத்தைத் திருப்ப வேண்டும் ஸ்ரீ கிருஷ்ண பகவான் அடியில் வருமாறு அர்ஜுனனுக்கு உபதேசிக்கிறார்:—

''சஞ்சலமாயும் ஸ்திர மில்லாததாயும் உள்ளதாகிய மனம் எந்த எந்த விஷயங்களில் சென்று திரிகிறதோ, அந்த அந்த விஷயங்களிலிருந்து அதைக் திருப்பி ஆத்மாவின் வசத்திலேயே இருக்கும்படி செய்துகொள்ள வேண்டும்.''

கீதை, 4-ம் அத்., 26-ம் சுலோ.

எதொரு விஷய பதார்த்தத்தின் பொருட்டாவது மனமானது கலங்குமிடத்தே அப்பொழுதே அவ் விஷயத்தை நோக்கிச் செல்லவிடாது அதைத் தடுத்து, அதன் ஆவல் நிறைவேறாமற் போம்படி செய்துவிட்டால், ஆசையானது பெரும்பாலும் குறைந்துபோம். யாதொரு இனிப்பான

ஆகாரத்தை உண்ண வேண்டுமென்ருவது, யாதொரு நேர்த்தியான ஆடையை உடுத்த வேண்டுமென்ருவது, இதுபோன்ற வேறே யாதொரு கவர்ச்சியான பொருளை அடைய வேண்டுமென்ருவது ஒரு விருப்பம் தலைகாட்டும் பொழுது, அந்த விருப்பத்தை நிறைவேற்றுவதில்லை யென்று திட சங்கற்பம் செய்துகொள்ளவேண்டும். இந்த நியமத்தை எப்போதும் பின்பற்றி நடந்தால், சீக்கிரத்தில் எல்லா ஆசைகளையும் அடக்கி, அவைகளுக்கு ஒருகாலும் அடிமையாகாதிருக்கலாம் உலக வாழ்க்கைக்கு வேண்டிய சில வஸ்துக்களை உபயோகிப்பதிலும், ஒழுங்கான ஆடைகளைத் தரிப்பதிலும் தோஷமில்லை. ஆனால் யாதொரு அருமையான வஸ்துவைப் பார்த்த மாத்திரத்தில் அதை வாங்கி வைத்துக் கொள்ள வேண்டுமென்றும், பகட்டான வஸ்திரங்களைத் தரிக்க வேண்டுமென்றும் மனம் அலைகிறதென்று தெரிந்தால், உடனே மனத்தை அடக்கவேண்டும். இன்றைக்குச் சதிர்க் கச்சேரி பார்க்க வேண்டுமென்று மிக்க ஆவல் உண்டானல், எவ்விதத்திலும் அதைப் பார்க்கவே கூடாது; அல்லது நாவுக்கு ருசியான பதார்த்தங்களைப் புசிக்க வேண்டுமென்று விருப்பம் உண்டானல் அந்தப் பதார்த்தங்களை உண்ணவே கூடாது. புகழ், மானம் முதலியவற்றின் சம்பந்தமாகவும் இருதயத்தில் எவ்வகையான கவலையாவது உண்டாகுங்கால், அதைப் பாராட்டாமலே இருந்துவிட வேண்டும். யோக வாஸிஷ்ட ராமாயணத்தில் வஸிஷ்டர் ஸ்ரீராமசந்திரனுக்கு இவ்வாறு உபதேசிக்கிருர்.

"தீமையை உண்டாக்கும் இச்சை இம்மியளவேனும் உள்ளத்தில் தோன்றினல், அப்பொழுதே—அதை அனுபவியாமை என்னும் ஆயுதங் கொண்டு விஷ விருக்ஷத்தின் முளையைப் போல் வெட்டியெறிய வேண்டும். (அவ் விச்சையை நிறைவேற வொட்டாது அகற்றிவிட வேண்டும்.)" நிர்வாணப் பிரகரணம், 77-ம் அத்., 81-ம் சுலோ.

"இந்திரிய நிக்ரஹம் என்னும் தூண்டிலைக்கொண்டு இச்சையென்னும் மீனைப் பிடித்து அடக்க வேண்டும்." ஷை 77-ம் அத்., 83-ம் சுலோ.

இச்சையானது எப்பொழுது எந்தத் திசையில் ஓடுகிறதோ, அப்பொழுதே அந்தத் திசையிலிருந்து அதை

இழுத்துத் திருப்பிக் கொண்டு வரவேண்டும். நம்மை ஈர்க்கும் பொருளினின்று எவ்வளவு தூரம் கூடுமோ அவ்வளவு தூரம் விலகி யிருப்பது நலம். விரும்பப்படும் பொருள் உன் கைவசமாகாவிட்டால், அதைப் பெற வழி தேடாதே. அது ஏற்கெனவே உன் வசமாய்விட்டிருந்தால், அதன் ஈர்ப்புக்கு நீ உட்படுவதாக எப்பொழுது உனக்கு உணர்ச்சி உண்டாகிறதோ, அப்பொழுதே அதை விட்டு விலகியிருக்க முயல வேண்டும். ஆசை காட்டி ஈர்க்கும் பொருளினின்றும் எவ்வளவுக் கெவ்வளவு விலகியிருக்க முடியுமோ அவ்வளவுக்கவ்வளவு நலமாம்.

ஒரு லோபி தன் செல்வத்தை யெல்லாம் தரையின் கீழ்ப் புதைத்து வைத்திருந்தான். அவன் தினந்தோறும் மூன்று நாலு தடவையாவது அதைப் போய்ப் பார்ப்பது வழக்கம். அப்படிப் பார்க்கும்போதெல்லாம் அவன் உள்ளம் உவகையால் துள்ளிப் பூரிக்கும். எக்காரணத்தினாலாவது அதை ஒரு நாள் பார்க்கத் தவறினும் அவனுக்குச் சொல்லொணாத் துயரம் உண்டாகும். அவ்வளவு மோஹம் உண்டாயிருந்தது அவனுக்குத் தன் திரண்ட செல்வத்தில். அவன் தன் பொருளாசையாகிய செந்தீயில் அவி சொரிய அவ்வளவு செல்வமும் ஈட்டும் பொருட்டுப் புரிந்த தீச்செயல்கள் எட்டிலடங்கா, எண்ணித் தொலையா. அவன் ஒருகால் ஏதோ அலுவலின் மேல் அயலூருக்குப் போகவேண்டி வந்தது. அவன் வீட்டில் இல்லாத அச்சமயத்தில் அவனது நண்பர்கள் அவன் செல்வத்தை யெல்லாம் அப்புறப்படுத்திவிட்டார்கள். லோபி வீட்டுக்குத் திரும்பி வந்து பார்க்கையில், ஒரு செப்புக் காசுகூட இன்றி வெறுங் குழியே காணப்பட்டது. அப்பொழுது அவன் நெஞ்சம் எவ்வளவு பதைபதைத்திருக்குமோ எளிதில் பாவித்துக் கொள்ளலாம். தலையில் அடித்துக் கொண்டு கதறியழத் தொடங்கினான். அந்தச் சமயத்தில் நண்பர்கள் வந்து அவன் வீட்டிலுள்ள பண்டங்கள் அனைத்தையும் வலிந்து கொண்டு போய்விட்டார்கள். இறுதியில் அவன் உடுக்கும் துணிகளைக்கூட விடாமல் எடுத்துக் கொண்டு போய்விட்டார்கள். தன் கண் முன்னேயே தன் உடைமைகளெல்லாம் இவ்வாறு கொள்ளை போவதைப்

பார்த்துப் பொறுக்க மாட்டாது, அந்த லோபி தன்னைப் புடைத்துக் கொண்டும் மோதிக் கொண்டும் ஓல மிட்டு அழுதழுது புலம்பிப் புலம்பி அலுத்துப் போகவும், கடைசியில் அவனுக்கு வைராக்கிய வுணர்ச்சி உண்டாயிற்று. "போகிறதெல்லாம் போகட்டும். அதனால் எனக்கு நன்மையே தவிர வேறில்லை. இந்தச் செல்வமும் மற்றுமுள்ள உடைமைகளும் என்னுடையவையேயானால், என்னிடமே தங்கியிராவா? இனி எனக்குச் சொந்தமானது தான் எது? உண்மையில் என்னுடையதாயிருப்பது எக்காலத்திலும் என்னிடமே இருக்கும்' இந்தச் செல்வக் குவியலும் பண்டத்திரளும் நான் சாகும்போது என்னுடன் வரப் போகிறதில்லையே! இது காறும் லோபததினால் வஞ்சிக்கப்பட்டவனாய் இவ்வுலக பாசத்தில் கட்டுண்டு வறிதேஉழன்றேன் இவ்வளவு ஆசைக்கும் இடமாயிருந்த பொருள்களை விட்டுபபோகவேண்டுமே யென்று மரண காலத்தில் பொறுக்கமுடியாத வேதனையையே அனுபவிக்க வேண்டிவரும். அன்றியும் 'நிலைபேறில்லா இவற்றில் பற்று வைத்துப் 'பொன்றுங்கால் பொன்றாத் துணை'யாகிய நித்திய நிதியத்தையன்றோ இழந்துவிட்டேன! ஆ! கெட்டேன்! ஐயகோ! எனககு என்ன வந்துறுமோ? என் கதி என்னாகுமோ?" என்று சிந்தித்துப் பெரிதும் வருந்திக்கொண்டிருந்த அவனுடைய உள்ளத்தில் வைராக்கியம் வேரூன்றி ஒளி வீசத் தலைப்பட்டது. அன்று முதல் அவன் எல்லாக் கட்டுக்களையும் அறுத்தெறிந்து அக மகிழ்ச்சியுடன் வைராக்கியத்தின் வெற்றியைப் பறைசாற்றலாயினான். அப்பொழுது அவனது நண்பர்கள் அவன் ஆதரத்துடன் போற்றிப் பாதுகாத்து வந்த செல்வத்தையும் மற்றைப் பொருள்களையும் அவனுக்குத் திருப்பிவிட முன் வந்தும், அவை ஒரு சிறிதும் இனித் தனக்கு வேண்டாமென்று அவன் அவைகளை மறுத்துவிட்டான். அவனைப் பாசக்கட்டுக்குள் அழுத்தும் பொருள்களை யெல்லாம் அவனிடத்திலிருந்து அகற்றிய நண்பர்களாலேயே அவனுக்கு இந்த நன்மை விளைந்தது. இல்லாவிடில் அவன் பேராசைப் பெருங் கடலினின்றும் கரையேற மாட்டாதவனாய் முழுகியே போயிருப்பான்.

மனத்தைத் தீய வழியில் ஈர்த்துச் சோதிக்கும் விஷயங்களினின்றும் கூடுமான மட்டிலும் தூர விலகியிருக்க வேண்டுமென்றதினால் உலக ஸம்பந்தமான காரியங்களில் பிரவேசிக்கக் கூடாதென்றும், உலகத்தை அடியோடு வெறுக்க வேண்டுமென்றும் கருத்தல்ல. உலக வாழ்க்கைக்குரிய கடமைகளை ஆற்றுகையில், அவ்வப்பொழுது செல்வம், மானம், புகழ் முதலியவைகளின் தொடர்பு ஏற்படலாம்; வேறு போக்கிய வஸ்துக்களும் வந்து சேரலாம். அப்படி நேருங்கால், எல்லாம் ஈசன் செயலென்று கருதி ஆண்டவன் திருவருளை முன்னிட்டுச் செய்கடனைச் செய்து வரவேண்டும். நான் ஆண்டவனுக்கு அடிமை; அவனது பணி செய்வதே என் கடன். புகழ் வேண்டேன், பெருமை வேண்டேன், அவசியத்துக்கு மேற்பட்ட பொருளும் வேண்டேன். அப்படியிருந்தும், புகழும் பெருமையும் அவசியத்துக்கு மேற்பட்ட பொருளும் வந்துற்றால் என் செய்வேன்? ஆண்டவனே, நான் இறுமாப்புக் கொள்ளாமலும், பந்தத்துக்குட்படாமலும், என் நெஞ்சத்தில் எவ்வகை விகற்பமும் உண்டாகாமலும் இருக்குமாறு அருள்புரிவாய்,' என்று இத்தன்மையாக ஆண்டவனிடப் குறையிரந்து அவனது திருப்பணியில் மனத்தைச் செலுத்தி, லோபம என்னும் பேராசையை உண்டாக்கும் விஷயங்களில் அழுந்தாமல் உதாஸீனத் தன்மை கொண்டு, தன்னுடைய உயர்நலத்தின் பொருட்டும், தன்னைச் சேர்ந்தவர்களின் உயர் நலத்தின் பொருட்டும், வையகத்தின் உயர் நலத்தின் பொருட்டும் முயல வேண்டும்.

3. நாம் நமக்காகச் சில கற்பிதமான தேவைகளை உண்டாக்கிக்கொண்டு, ஆசையை ஓங்கி வளரப் பண்ணுகிறோம். சற்றுநேரம் மனத்தை ஸ்திரப் படுத்திக்கொண்டு, "நமக்கு உண்மையாகவே தேவையாயிருக்கிற பொருள்கள் எவை? எவை இன்றியமையாதவை?" என்று யோசித்துப் பார்த்தால், அவை வெகு சொற்பமானவை என்றறிந்து நமக்கே ஆச்சரியமுண்டாகும். தம்பீ, உன் கலத்தில் நாளும் இடப்படும் அறுசுவையோடு கூடிய பலவகை இன்னுணவுகளும் உள்ளபடியே உனக்கு

வேண்டியவைதாமோ? அதோ, அந்தக் குடியானவனைப் பார். உன்னைப்போல் அதிக விலையேறிய உண்டிகளை அவன் உண்பதில்லை. அப்படியிருந்தும் உடல் வலியில் அவன் உன்னையும்விடக் குறைந்திருக்கிருனு? பால் நுரைபோல் வெளுத்த பஞ்சணை மெத்தையும், விலையுயர்ந்த கொசு வலைகளும் உன் சயனத்துக்கு வேண்டியிருக்கின்றனவே! இவையின்றி உனக்கு நித்திரை வாராதோ? அந்தப் பரதேசியைப் பார். உனக்குள்ளதைவிட அதிகமான அமைதி அவன் இருதயத்தில் குடிகொண்டிருக்கிறதே. அவனோ மரத்தடியிலே புழுதி படிந்த தரையிலே உன்னைவிட ஆயிர மடங்கு அதிக சுகமாய் அயர்ந்து நித்திரை செய்கிருனே. உனக்கு இரண்டடுக்கு, மூன்றடுக்கு மாடமாளிகை யல்லது மற்றெதுவும் வாஸ யோக்கியமாவதில்லை. ஆனல் எவருடைய பாத தூளியைத் தொடுவதற்கும் உனக்குத் தகுதியில்லையோ, அத்தகைய கிருஹஸ்தர் சாமானியமான கூரைக் குடிசைகளில் வசித்துத் தமது சுவர்க்கானந்த சூசகமான மந்தஹாஸத்தினல் அக்குடிசைகளை ஒளி செய்துகொண்டு உன்னிலும் பார்க்க எவ்வளவோ சுகமாய்ப் பரமானந்தமாய்க் காலங் கழிப்பதை நான் கண்டிருக்கிறேன். ஒருவேளை நீ "நான் செல்வன்; பெரிய மனிதன்; இப்படியே எனக்கு வழக்கமாய் விட்டது. இதை இப்பொழுது எப்படி ஒழிக்க முடியும்?" என்று சொல்லலாம். அப்படியானல், ஏ வழக்கத்துக்கு அடிமையாய் விட்டவனே, உன்னைவிடப் பன்மடங்கு அதிகமாய் ராஜபோகங்களை அனுபவித்த பர்த்திருஹரி கூறுவதைக் கேள்.

ப்ஹூ: பர்யங்கோ, நிஜப்ஹுஜ
லதா கந்துக: க்ஹம் விதாநம்,
தீபச் சந்த்ரோ, விரதி வநிதா
லப்த்ஹ ஸங்க ப்ரமோத:,
திக்காந்தாப்ஹி: பவநசமரைர்
விஜ்யமாந: ஸமந்தாத்,
ப்ஹிக்ஷு: சேதே ந்ரிபஇவப்ஹுவி
த்யக்த ஸர்வ ஸ்ப்ரிஹோ, பி."

"இரந்துண்ணும் துறவி மண்ணுலகத்து எல்லா ஆசைகளையும் நீத்தவனுயிருந்தும், அரசனைப்போல் அமளியில்

அமர்ந்து சுக நித்திரை செய்கிறான். அவனுக்குத் தரையே சிறந்த மஞ்சம்; தன் கைகளே தலையணை; விசும்பே விதானம்; திங்களே திருவிளக்கு; வைராக்கியமென்னும் வஞ்சியே இன்பந்தரும் வாழ்க்கைத் துணை; திசைகளாகிற வனிதையரே சூழ நின்று காற்றாகிய சாமரை வீசாநிற்பவர்.''

வைராக்கிய சதகம், 85-ம் சுலோ.

இத் துறவி தரையில் படுத்துத் தரணிபதியைப்போல் சுகபோகம் அனுபவிக்கிறான். நீயோ, 'இந்தப் பொருள் இல்லாவிட்டால் எப்படி சாயும்? அந்தப் பொருள் இல்லாவிட்டால் எப்படிப் பிழைப்பேன்?' என்று புலம்பிக்கொண்டு உன்மத்தனைப்போல் இங்குமங்கும் ஓடியலைகிறாய். பெரியோர் புகல்வதைக் கேள்.

"வனத்தில் செழிப்பாய் விளையும் காய் கிழங்குகளே பசியைத் தீர்க்கப் போதியனவாயிருக்க, இந்தப் பாழ் வயிற்றை நிரப்புவதற்காக எவன் பெரும் பாதகங்களைச் செய்வன்?" ஹிதோபதேசம்.

அப்படியிருந்தும், ஆடு மாடு முதலிய பிராணிகளைக் கொன்று தின்றாலன்றி உன் பசி ஆறுவதில்லை. புலாலை ஒழித்து, காட்டில் விளையும் காய் கனி கிழங்குகளை உண்டால், உன் வயிறு நிரம்பாதா? அவசியம் நிரம்பும். என்றாலும், நீயே சில போலித்தேவைகளைக் கற்பித்துக் கொண்டு, இது இல்லாவிட்டால் நடவாது, அது இல்லாவிட்டால் நடவாது என்று கதறிக்கொண்டிருக்கிறாய். நீ மட்டும் போக விருப்பத்தைவிட்டு, அநாயாசமாய்க் கிடைப்பதும் ஆரோக்கியம் அளிப்பதுமான உணவுகளையே உண்டு, ஆரோக்கியகரமான படுக்கையில் படுத்து, ஆரோக்கியம் நிறைந்த வீட்டில் வசித்து வருவாயானால், இந்த லோபம் என்னும் அவா எவ்வளவு எளிதில் சுருங்கிப்போய் விடுமென்பதை அறிந்துகொள்வாய். உள்ளத்தையும் உயிரையும் உடலையும் சுக நிலையில் வைத்துக்கொண்டு குடும்ப காரியங்களையும் உலக காரியங்களையும் செவ்வனே நடத்தும் பொருட்டு நமக்கு வேண்டியவை மிகச் சாமானியமானவையே; அவற்றைச் சம்பாதிப்பதில் அவாவுக்கு அதிக இடங் கொடுக்கவேண்டிய அவசியமேயில்லை.

நீ கற்பித்துக்கொண்ட போலித் தேவைகளே உன் அழிவைச் சூழ்கின்றன. எந்த எந்தப் பொருள்கள் உனக்கில்லை யென்று மனக் குறைகொண்டு நீ வருந்துகிறுயோ அவை யெல்லாம் உனக்குக் கிடைத்தாலும், நீ எவ்வளவு காலம் அவற்றை அனுபவிக்கப் போகிருய்? உள்ளபடியே,

"அற்பமே மனிதனுக் கவசியமானது. அவ்வற்பமும் நெடு நாள் அவசியமில்லை."

என்று கோல்த்ஸ்மித் என்னும் ஆங்கிலக் கவி கூறுகிருர்.

இந்த வாய்மையைக் கருத்தில் வைத்து, இது வேண்டும், அது வேண்டும், இன்னென்று வேண்டும் என்றும், இப்படி வேண்டும் வேண்டும் என்றும் கதறிக் காலத்தை வீணில் கழிக்காமல், கிடைத்தது அற்பமாயினும அதைக் கொண்டே திருப்தியடைய வேண்டும்.

"ஸந்தோஷாம்ரித த்ரிப்தா நாம்,
யத் ஸுக்ஹம் சாந்தசேதஸாம்
குதஸ் தத் த்ஹந லுப்த்ஹாநாம்
இதச்சேதச்ச த்ஹாவதாம்."

—ஹிதோபதேசம்.

"ஸந்துஷ்டி யென்னும் அமுதத்தைத் தெவிட்டப் பருகியவர்களாய்ச் சாந்த சித்தத்தோடிருப்பவர்கள் அனுபவிக்கும் சுகமானது பொருளாசை கொண்டு, இது வேண்டும், அது வேண்டுமென்று நிலைகொள்ளாது ஓடி யலைகிறவர்சளுக்கு எங்கிருந்து கிடைக்கும்?"

மோஹம்

மோஹம் அல்லது மாணு உவகை எல்லாத் தீவினைக ளுக்கும் தோற்றுவாய். மோஹம் என்ருலும் அஞ்ஞானம் என்ருலும் ஒக்கும். அதற்கு அவிச்சையென்றும் பெய ருண்டு. மோஹ மென்ருல் அநாத்ம வஸ்துவினிடத்தே ஆத்மபுத்தி பண்ணுவதாம்; எனவே பொருளல்லவற் றைப் பொருளெனக் கொள்ளுதலாம். அதனுல் அறிவ ழிந்தவன் நிலையற்றதாய், உறுதியற்றதாய், துன்பத்துக் கும் சோகத்துக்கும் தாபத்துக்கும் காரணமாய் உள்ள தெதுவோ அதை நிலையானதாய், உறுதியுள்ளதாய், பரமா னந்த நிலையமாய் இருப்பதெனக் கருதி, ஒருபொழுதும் தன தல்லாததும், ஒரு சிறிதும் தன் அதிகாரததுக்கு உரியதல் லாததுமான பொருளைத் தனதெனக் கொண்டு, அது கிடைக்காவிட்டால் தவித்துத் தத்தளிக்கிருன். இந்த உடம்பு என்னுடையதுதானு? என்னுடையதேயானுல், இதன் நரை மயிர் ஒன்றையேனும் கரியதாக்க வல்லேனு? இவ் வீடு என்னுடையதுதானு? என்னுடையதே யாயின் நானே இதில் என் நீடூழி வாழக் கூடாதவனு யிருக்கி றேன்? இஃதொன்றும் என்னுடையதே யன்று. என் முற்றததில் படிந்துள்ள புழுதியின் ஒரு தூசியைக் கூட எனதென்று சொல்லிக்கொள்ள இயலாது. அப்படி யிருந்தும், கண்டதை யெல்லாம் எனதென்றே அல்லும் பகலும் கூறிக்கொண்டவண்ணமா யிருக்கிறேன். என் தந்தை, என் தாயார், என் மனைவி, என் மக்கள் இவர்க ளில் எவரும் எம்மவர் அல்லர். அப்படியிருந்தும் என் உள்ளுயிரிலிருந்து எப்போதும் 'எனது', 'எனது' என்று கத் திக் கொண்டிருப்பது எது? இத்தகைய மயக்கத்தை உண் டாக்குவது எதுவோ அதன் பெயர்தான் மோஹம் என்பது;

மம பிதா, மம மாதா,
மமேயம் க்ரிஹிணி, க்ரிஹம்;

ஏவம் வித்ஹம் மமத்வம் யத்,
ஸமோஹ இதி கீர்த்தித:

என் தந்தை, என் தாய், என் மனைவி, என் வீடு என்றிவ்வாறு உண்டாகும் 'எனது' 'எனது' என்னும் உணர்ச்சியே மோஹம் எனப்படும்.

—பத்மபுராணம்

மோஹமே சகல பாபங்களையும் பிறப்பிப்பது. மோஹமென்பதொன்று இல்லாவிட்டால், அஸாரமு (சாரமற்றது)ம் அநித்யமுமான விஷயங்களிலே எவருக்கும் ஆசை உண்டாகாது; இவ் வையகத்தின் பொருளையும் பெருமையையும் முன்னிட்டு எவரும் இறுமாப்புக்கொள்ள மாட்டார்கள்; பிறர் செல்வத்தைக் கண்டு பொருமைப்படுவதாகிய குற்றம் நம் வாழ்க்கையைக் கறைப்படுத்தாது; காமம் தானுமே மிக இழிந்ததும் பழிப்புக்கிடமானதுமாகிய பேய்க் கூத்தின் அரங்கத்தைப் பொன் வண்ணத்தினுல் தீட்டிச் சித்திரிக்க வல்லதாகாது. ஆகவே தீவினையனைத்தும் இந்த மோஹம் எனும் அஞ்ஞானத்தினின்றே உற்பத்தி யாகின்றன.

(1) அஞ்ஞானத்தை அழிப்பதற்கு ஞானமே பிரஹ்மாஸ்திரம். ஞானம் பிறக்குமிடத்தே அஞ்ஞானம் தானுகவே தொலைந்து போம். சூரியோதயமான வளவில் அந்தகாரத்தைப் பார்த்து, 'நீ இப்பொழுது புறப்பட்டுப் போ,' என்று எவரும் சொல்ல வேண்டியதில்லை. அது தானுகவே விடைபெற்றுக்கொண்டு போய்விடும். அது போலவே ஞான சூரியன் உதயமானுல் மோஹாந்தகாரம் தானே விடைபெற்றுக் கொள்ளும். ஞானத்தைச் சம்பாதிப்பதற்கு தத்துவ சிந்தையும் சாஸ்திராலோசனையும் ஆவசியகமாம். நான் யார்? எனதெனக் கூடியது யாது? பந்தமாவது யாது? மோக்ஷமாவது யாது? என்றிவ்வாறு விஷய விசாரம் செய்யச் செய்ய மோஹம் எட்டிப் போகும். 'என் சரீரம் நானல்ல; நான் கட்டுண்டிருக்கும் இச் சரீரம் மாயாவிகாரமே என்றிவ்வாறு தத்துவ விசாரம் செய்து கொண்டேபோனுல் மோஹத்தை அழிக்க வல்லவனுவாய். வஸிஷ்டமஹர்ஷி ஸ்ரீராமசந்திரனுக்குப் பின்வருமாறு உபதேசிக்கிறுர்.

"நான் மெலிந்தவன், மிகுந்த துக்கம் அனுபவிக்கின்றவன், கட்டுண்டவன், கை கால்களுடன் கூடிய ஜீவன்"—என்றெண்ணி அவ் வெண்ணத்தின்படி நடப்பதனுல் மனிதன் மோஹ பாசத்தினுல் கட்டுண்டவனுகிருன், 'நான் துக்கப்படுகிறவனல்லேன். 'எனக்குத் தேகமில்லை, என்னிடத்தே கட்டு (பந்தம்) எவ்வாறு இருத்தல் கூடும்?' என்று பாவித்து அவ்வாறே நடப்பதனுல் விடுபடுகிருன். 'நான் ஊன் அல்லேன், என்புகள் அல்லேன், நான் தேகத்தினின்றும் வேருனவன், நான் ஆன்மா'—என்று இத்தகைய நிச்சய ஞானத்தினுல் அவிச்சை நீங்கப் பெற்றவன் விடுதலை அடைகிருன். ஏ, ராகவா! அநாத்ம வஸ்துவில் ஆத்ம பாவனை செய்யும் வாயிலாக விழிப்பற்றவர் (அஞ்ஞானிகள்) அவிச்சையைக் கற்பித்துக் கொள்ளுகின்றனர்; (விழிப்புள்ளவர்களோ) (ஞானிகளோ) அவ்வாறு செய்யார்"—யோக வாசிஷ்டம். சங்கராசாரியர் கூறுகிருர்:—

கா தவ காந்தா? கஸ்தே புத்ர?
ஸ்ம்ஸாரோ'யம் அதீவ விசித்ர:।
கஸ்ய த்வம் வா? குத ஆயாத:?
தத்த்வம்சிந்தய ததிதம்ப்ஹ்ராத:

"யார் உன் காதலி? யார் உன் மைந்தன்? இச் சம்சாரம் சாலவும் விசித்திரம். நீயுமே எவருக்குரியன்? எங்கிருந்து வந்தாய்? இதன் உண்மையைச் சிந்தனை செய், தம்பி"

—மோஹ முத்கரம்.

இவ்விதமாகச் சிந்திக்கச் சிந்திக்க, ஞானம் உதயமாகும், அப்பொழுது மோஹம் நிற்கமாட்டாது. மோஹம் நீங்கின வளவில் பரமானந்த ஹேதுவாகிய பிரஹ்மநிஷ்டை கைகூடும். இந்த பிரஹ்ம நிஷ்டை கைகூடும் கிரமத்தை வஸிஷ்ட மஹரிஷி இவ்வாறு விளக்குகிருர்:—

"பாபமற்றவனே, இவ்வேழு ஞான பூமிகளையும் சொல்லுகிறேன், கேள். இவற்றை அறிந்தால் இனி மோகச் சேற்றில் அழுந்தி யிருக்க வேண்டியதில்லை."

"முதல் ஞான பூமி 'சுபேச்சை' எனப்படும். 'விசாரணை' என்பது இரண்டாம் ஞான பூமி. மூன்ருவது 'தநுமாநஸா' என்பது; 'ஸத்தா பத்தி' என்பது நான்காவதாம். அதன்

பின்னது 'அநாஸக்தி' யென்பது. 'பதார்த்த பாவனை' ஆறுவது. ஏழாவது 'துர்யகா கதி' என்பதாம்.

"நான் ஏன் மூடனாயிருக்கிறேன்? வைராக்கியம் பூண்டு சாஸ்திராலோசனையும் சாது சகவாசமும் செய்வேன்—என்று இவ்வாறு உண்டாகும் இச்சையை அறிஞர் 'சுபேச்சை' என்பர். ('சுபேச்சை' என்பது 'வேதாந்த சூளாமணி' முதலிய தமிழ் வேதாந்தநூல்களிலே 'சுவேச்சை' எனப்படுகிறது.)

"சாஸ்திரப்பயிற்சியாலும் சாதுசங்கத்தினாலும் வைராக்கியத்தை அப்பியஸித்து, சத்தியமாவதெது, அசத்தியமாவதெது, நிலையானதெது, நிலையற்றதெது. ஆத்மா எது, அநாத்மா எது, செய்யத்தக்கது யாது, செய்யத் தகாதது யாது, பந்தம் எது, மோக்ஷம் எது, என்று ஆராய்ந்து ஸதாசாரத்தில் பிரவர்த்திக்கும் நிலைக்கு 'விசாரணை' என்று பெயர்.

"சுபேச்சையினாலும் விசாரணையினாலும் இந்திரிய விஷய போகங்களில் உண்டாகும் பற்றின்மைக்குத் 'தநுமாநஸா' என்று பெயர். தநு—நுண்ணிய; மாநஸா—மனதுக்குரிய நிலை. இந்த நிலையில் ஸ்தூலமாகிய மனது சூக்குமமாகச் சுருங்குவதால், இந்நிலைக்கு இந்தப் பெயர் உண்டாயிற்று.

"சுபேச்சை, விசாரணை, தநுமாநஸா என்னும் மூன்று ஞான பூமிகளையும் அப்பியஸிப்பதனால் மனமானது விஷயாநுபவங்களில் விரக்தியுற்று நிர்மலமாகிய ஸத்தா மாத்திரமாகிய பிரஹ்மத்தில் நிலைத்திருக்கும் நிலையே 'ஸத்தாபத்தி' எனப்படும்.

"சுபேச்சை, விசாரணை, தநுமாநஸா, ஸத்தாபத்தி என்னும் இந் நான்கு ஞான பூமிகளையும் அப்பியஸித்த பின், மனத்திற்கு அற்புதமான சாத்துவிகத் தன்மை உண்டாகும். இதனால் உலக விஷயப் பற்று முற்றிலும் நீங்கும். இந்த நிலைக்கே 'அஸம் ஸக்தி' என்று பெயர். 'அஸம் ஸக்தி'—பற்று நீங்கிய தன்மை.

"கீழ்ச் சொன்ன ஐந்து ஞான பூமிகளையும் அப்பியஸிப்பதனால் அகத்தும் புறத்தும் உள்ள எப் பொருள்களையும் கருதாமல், தன்னில் தானே இன்புற்றுப் பர வஸ்து போதத்தை முயன்றடையும் நிலைக்குப் 'பதார்த்த பாவனை' என்று பெயர்.

"இவ் ஆறு ஞானபூமிகளையும் நெடுங்காலம் அப்பியஸித்ததனால் பேத பாவனை நீங்க, அப்பொழுது உண்டாகும்

ஸ்வாபாவிகமான பிரஹ்மநிஷ்டை நிலைக்குத் 'தூர்யகா கதி' என்று பெயர். (இத்தொடரில் 'தூர்ய' என்பதை தனித் தமிழன்பர் ஓசை நயங்கருதி 'துரியம்' என்று எழுதியும் உச்சரித்துக் கொள்ளலாம்.)

"ஓ ராமா! ஏழாவது நிலையாகிய 'துரிய கதி'யை அடைந்த மஹானுபாவர்கள் பரம்பொருளில் இன்புறும் ஆத்மா ராமர்களென்றும் உத்தம பதத்தை எய்திய மஹாத் மாக்களென்றும் கூறப் பெறுவர்."

இதைவிட உயர்தரப் பதவி ஒருவனுக்கு யாதுளது? ஹிருதயத்தில் மோஹத்தினல் உண்டாகும் இச்சைகள் ஞான பரிபாகத்தினல் நீங்கப் பெற்றவனுடைய ஆனந்தத் துக்கும் ஓர் எல்லை உண்டோ?

ஸங்கல்ப ஸங்க்ஷயவசாத்
கலிதேது சித்தே,
ஸம்ஸார மோஹமிஹிகா
கலிதா ப்ஹவந்தி.
த்ரிஷ்டம் விப்ஹாதி சரதிவ
க்ஹ மாகதாயாம்,
சிந்மாத்ரம் ஏகம் அஜம்
ஆத்யம் அநந்தம் அந்த:

"உலக விச்சைகள் க்ஷயமடையவும், ஸம்ஸார மாயை யென்னும் மூடு பனி நீங்கிவிடும் பொழுது, சரற் காலத்தில் விளங்கும் மாசற்ற விசும்பு போல், சித் சொரூபமாய், ஒன் ருய்ப்,பிறப்பற்றதாய்,முழுமுதற் பொருளாய், முடிவற்றதாய் உள்ள பிரஹ்மம் உள்ளே பிரகாசிக்கும்"—யோக வாஸிஷ் டம்.

எனவே மேகம் நீங்கிய சரற் காலத்து மாசற்ற விசும்பில் உவாமதி விளங்குவது போல், மோஹம் நீங்கிய நிர்மல மான ஹிருதயத்திலே தனக்கு உவமை யில்லாத தனிப் பரம்பொருள் திகழும் என்றபடி; இந்த நிலையிலே உலகப் பிரவிர்த்திகளை யெல்லாம் நிறுத்திவிட வேண்டுமென்று நான் சொல்லுவதாக எவரும் எண்ண வேண்டாம். மாயை ஒழிந்த பிறகு உலகப் பணிகளைச் செய்வதனல் என்ன பய னென்று ஒருவரும் கருதுதல் கூடாது. கீதையில் பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் அர்ஜுனனுக்கு இவ்வாறு அறிவுறுத்து கின்ருர்:

"பாரதா, ஞானம் கைவரப் பெருதவர் கருமத்தில் பற்றுள்ளவராய் எவ்வண்ணம் வினைகளைச் செய்கிருர்களோ, அவ்வண்ணமே ஞானியானவன் பற்றற்றவனுய் வையக நலத்தை நாடி வினைகளைச் செய்ய வேண்டும்."

நாம் இவ்வுலகத்துக்கு அனுப்பப்பட்டிருப்பதனுல் உலகத்துக்கான காரியங்களை அவசியம் செய்ய வேண்டும் ஆனுல் வஸிஷ்டர் ஸ்ரீராமபிரானுக்கு உலகத்தில் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்று உபதேசித்தாரோ, அவ்வாறே நாமும் நடந்துகொள்ள வேண்டும். அவ்வுபதேசம் வருமாறு:—

"ஓ ராகவா, அகத்தே எல்லா ஆசைகளையும், பற்றுக்களையும், இச்சைகளையும் அறுத்து நீக்கிப் புறத்தே உலகத்தின் எல்லா வினைகளையும் செய்துகொண்டிரு.

"ஓ ராகவா, வெளிக்கு அமைதியற்றவன் போலவும் உள்ளே உபசாந்தியுள்ளவனுகவும், வெளிக்கு வினை செய்கிறவன் போலவும் உள்ளே செயலற்றவனுகவும் உலகத்தில் உலவிக்கொண்டிரு.

"ஓ ராகவா, (வினைகளை) நான் செய்கிறேன் என்னும் அபிமானத்தை விடுத்து வினைகளின் பலாபலன்கள் விஷயத்தில் பற்றின்றிச் சாந்த சித்தனுய், ஆகாயம் எங்கும் பரவியிருந்தும் களங்கமற்றிருப்பது போல், நீ சகலமான உலக வியாபாரங்களிலும் பிரவர்த்தித் திருந்தும் களங்கமற்றவனுய் நடந்துகொள்."

—யோக வாசிஷ்டம்.

"இவன் எம்மவன், இவன் பிறன், என்றெண்ணுவர் அற்பப் புத்தியுடையவர். உதார புத்தி யுடையவரோ வையகம் அனைத்தும் சுற்றமெனப் பாராட்டுவர்."

—ஹிதோபதேசம்.

எவ்வளவு பெருமை வாய்ந்த உபதேசம்! ஞாலத்திலுள்ளவரை யெல்லாம் சுற்றமெனக் கருதி, நான் செய்கிறேன் என்னும் கர்த்ருத்துவ அபிமானத்தை ஒழித்து பகவதாஜ்ஞையை நிறைவேற்றும் பொருட்டே வையகத்தின் பணிகளைச் செய்யவேண்டும். வெளிக்குப் பகைவனுய் இருப்பவனைக்கூட நண்பனுக நோக்க வேண்டும். ஆனுல் மறத்தைக் கடிந்து அறத்தை நிலை நிறுத்தும் நிமித்

தமே அவனை எதிர்க்கலாகும். அப்படியே வெளிக்கு நண்பனு யிருப்பவனும் தீமை புரிந்தால், அவனையும் அவசியம் எதிர்க்கவே வேண்டும். நமக்குப் பகையாயிருப்பது பாபமும் தீயொழுக்கமுமே யன்றிக் குறிப்பிட்ட தனி மக்களல்லர்.

(2) மேற்கூறிய இவன் எம்மவன், இவன் பிறன், இத் தொடக்கத்து மூதுரையின் மர்மத்தைக் கிரகித்து வையகக் காதலைப் பயில்வது மோஹத்தை அடக்குவதற்கு மற்றொரு வழியாகும். மெய்யறிவினுல் மோஹவிருள் எவ்வாறு நீக்குமோ அவ்வாறே ஸார்வஜநிகப் பிரேமையாகிய வையகக் காதலினுல் மோஹ மென்னும் காளகூட விஷம் நிர்வீர்யமாகிவிடும.

குறுகிய மனப்பான்மையே மோஹத்துக்கு நாற்றங்காலாகும். அக் குறுகிய தன்மை மாய்ந்தால், மோஹத்துக்கு இடமே இராது. ஒருவன் ஒரே ஆண் அல்லது பெண்ணிடம் மோஹங்கொண்டிருப்பது அவ்வாண் அல்லது பெண்ணுக்கு ஒப்பான வேறெவரும் கிடையாமலிருக்கும் வரையிலேயாகும். எனவே, குறுகிய காதலிலேயே மோஹம் பிறக்கும். ஒரே ஆளையன்றி வேறெவரையும் காதலியா திருக்குமிடததே அவ்வாளின் பொருட்டு என் மனம் மோஹத்தினுல் வருந்தும். அப்படிக்கன்றி அக் காதலை எல்லா உயிரிடத்தும் உள்ளங் கொள்ளச் செலுத்தினுல் மோஹம் உண்டாகாது.

ஸாதாரணமாகத் தாய்மாருக்குத் தம் மக்களிடத்து உண்டாகும் அன்பிலும் மோஹம் நிறைந்திருக்கிறது. தம் வயிற்றில் பிறந்த, மக்களையும் அண்டை அயலார் மக்களையும் சமமாகப் பாராட்டும் தாய்மார்எத்தனைபேரைக் காணலாகும்? ‘என் மகன், என் மகன்’ என்று எந்தத் தாய் தந்தையர் தன்னயப்பற்றினுல் உள்ளங் குழையாதிருப்பர்? ஆனுல் ஜாதி மத நிற வேற்றுமைகளைப் பாராது, எதிர்ப்படும் எக் குழந்தைகளையும் வாரிக் கட்டியணைத்துச், சீராட்டி, உச்சி மோந்து, உவகையால் முத்தமிட்டுத் தன் குழந்தைக் கொப்பாகப் பாராட்டும் அன்னையும் பிதாவுமே மக்கட் பற்றினுல் உண்டாகும் மோஹத்தினின்று விடுபட்டவராவர். உறவினரா யிராத நண்பர்களி

னிடத்தும் மோஹம் உண்டாகலாம். நாம் ஒருவனிடம் மிகுதியாக நேசம் பாராட்டுகிறோம். அவனை விட்டுப் பிரிந்தால், நமக்குச் சொல்லமுடியாத வருத்தம் உண்டாகிறது; மனவமைதியும் அகன்றுவிடுகிறது. சித்தம் சஞ்சலமடைகிறது; அதனால் நியதமாய்ச் செய்யவேண்டிய பணிகளைச் செய்வதில் தடை உண்டாகிறது. இவையெல்லாம் மோஹத்தின் விளைவுகளேயாம். இந்நோயைத் தீர்க்கும் நன்மருந்து வையக மளாவிய அன்பே யாகும்.

நண்பர்களின் தொகை பெருகப் பெருக பரிசுத்தமாகிய அன்பும் வளர்ச்சிபெறும். பரிசுத்தமான அன்பு வளர வளர மோஹம் குறைந்துபோம். 'நண்பர்களின் தொகை பெருகுவதெப்படி? அன்பு விரிவாய் வளர்வதெவ்வாறு?' என்று சிலர் கேட்கலாம்?

பரிசுத்தமான அன்பைப் பயிலப் பயில, அது விரிந்து வளரும். அவ்வன்பு வளர வளர இருதயம் மேன்மேலும் இனிமை கொண்டதாகும். இனிய இருதயத்துடன் பார்க்கும் அன்புக் கண்களுக்கு அவலக்ஷணமான வஸ்துக்கள் கூட சௌந்தரியம் வாய்ந்து தோன்றும். மண்ணில் வளரும் அற்பமான செடியையும் அன்புடையான் எந்தப் பார்வையுடன் நோக்குகின்றானோ, அந்தப் பார்வையுடன் நாம் நோக்க முடியாதவர்களாயிருக்கிறோம். முற்றிலும் ரஸமற்ற பொருள்கள் கூட அவனுக்கு உளளங்கவர் வனப்பினவாயிருக்கின்றன. நமக்கோ மிக மனோஹரமான வஸ்துக்களும் ரஸமற்றவைகளாய்த் தோன்றுகின்றன. உன் உள்ளத்தில் அன்பு வளர வளர, உலகோர் உன்னிடம் ஆகர்ஷிக்கப் பெறுவர். நீயும் பிறரிடத்தில் ஆகர்ஷிக்கப் பெறுவாய். பிறரிடத்தில் நீ எவ்வளவுக்கெவ்வளவு அன்பு செய்ய ஆவல் கொள்ளுகிறாயோ அவ்வளவுக்கவ்வளவு பிறரும் உன்னிடம் அன்பு செய்ய ஆவல் கொள்வர். இதுவே எம்பெருமானுடைய நியமமென்றுணர்ந்து உன்னைச் சூழ ஓர் அன்புலகத்தைப் படைத்துக் கொள்வாய். தேன் நுகரும் வண்டைப் போல் நீ எல்லா பூக்களிலும் தேனைத் தேடுவாய். இவ்வுலகத்திலே தேன் நிரம்பிய மலர்களுக்குப் பஞ்சமா? நீ கண்ணைத் திறந்து பார்க்க வேண்டுவதே குறை. அன்புருவாகிய

எம்பிரான் எல்லாப் பொருள்களிலும் மஹா பாபிகளின் உள்ளங்களிலும் கூடக் கொஞ்சமாகவேனும் அத் தேனைப் பொழிந்து வைத்திருக்கிறான். சிரத்தையுடன் தேடினால், அதைக் கண்டடைவது திண்ணம். இருதயத்தில் அன்புத்தேன் சேரச் சேர, மனிதன் அதை இன்னும் அதிகமாய்ச் சேர்த்து வைக்க விரும்புகிறான்; எனவே நாலா பக்கங்களினின்றும் அத் தேனைத் தேடித் திரட்டுகிறான்.

இருதயத்திலே அன்பெனும் அமுத ஊற்று சுரக்கச் சுரக்க, மோஹம் அல்லது மயக்கத்தினால் உண்டாகும் பற்று குறையுமென்பது நிச்சயம். யாதொரு விஷயத்தின் மீதுள்ள மோஹத்தால் மனம் குறுகிய தன்மையடைகிறது. ஆகையால் அத்தகைய விஷயங்களில் விரிந்த மனப்பான்மை உண்டாகுந்தோறும் மோஹமும் அழியும். மத விஷயங்களில் குறுகியபுத்தியுடையவர்கள் மோஹத்தினால் கலங்கி விவாதங்களில் தலையிடுவர். ஆனால் அவர்களின் உள்ளத்தில் சார்வபௌமிக உதாரத்துவம் அல்லது வையகம் அளாவிய விரிந்த நோக்கம் குடிகொண்டால், அப்பொழுதே அன்னார் எல்லா மதத்தினரையும் தழுவிக் கொள்வர். அப்பொழுதே மோஹம் நசிக்கும். சாக்கிய ஸிம்ஹனாகிய ஸித்தார்த்தனாரது இருதயத்தில் இந்த வையகமளாவிய அன்பு—விசுவப் பிரேமை—என்னும் அமுத வெள்ளம் பொங்கிப் புரண்டதனாலேயே, அவர் தமது உயிரினும் இனியவளான இல்லாளையும் துறந்து வையகஉய்வின் பொருட்டு ஸர்வஸங்க பரித்தியாகியானார். அவர் பேரன்பில் அமிழ்ந்து திளைத்ததனாலேயே மோஹத்தை மிதித்துத்தள்ள வல்லவரானார். எட்வின் ஆர்னால்ட் என்னும் ஆங்கிலக் கவியின் 'ஆசிய சோதி' (லைட் அவ் ஏஷ்யா) என்னும் பெருங் காப்பியத்தில் சாக்கியஸிம்ஹன் இல்லத்தைத் துறக்குமுன்னர் நள்ளிரவில் தன் மனையாளை நோக்கி நவின்ற மொழிகளை ஓது மிடத்தே, மோஹத்தை அடக்குவதில் விசுவப் பிரேமைக்குள்ள பேராற்றல் நன்கு விளங்கும். புத்தபிரான் முதலில் இவ்வாறு கூறினார்:—

"நான் ஞாலத்திலுள்ள அனைத்துயிரையும் அத்துணை நனி காதலித்தேன்; ஆதலினாலேயே நின்னையும் மிகுதியாய்க் காதலித்தேன்."

ஞாலத்திலுள்ள அனைத்துயிரையும் காதலியாத காதல் காதலன்று; மோஹமே யாகும். புத்தபிரானது காதல் தூய்மைகொண்ட அன்பேயன்றி மோஹமன்று. மோஹ மென்பது ஒரு தனி ஆளிடமோ பொருளிடமோ கட்டுண் டிருப்பதாகும். மற்று அன்பென்பதோ ஞால முழுதும் பரவியதா யிருக்கும். இத்தகைய அன்பினால் மானிடனது உள்ளத்தில் தோன்றும் பாவகங்களை அறிய வேண்டு மாயின், அமளியில் இனிதமர்ந்து கண் வளரும் இல்லாளை விளித்துப் புத்தபிரான் மீண்டும் மொழிந்த வார்த்தைகளைப் படிக்க வேண்டும். அவை வருமாறு :—

"கண்வளரும் காதலியே! மஹாபிநிஷ்க்ரமண (பெருந் துறவு) சமயம் வந்துவிட்டது. நான் புறப்பட்டுப் போகிறேன். நமக்குள் பிரிவை உண்டாக்குவதாயினும், இந்த ஞாலத்தை உய்விப்பதாகிய அப் பெரும் பணியை ஆற்றுமாறு நின் கொவ்வை யிதழ்கள் என்னைக் கூவியழைக்கின்றன."

எனவே நின்மீது எனக்குள்ள காதல் என்னை நோக் கிக் கூறுவதென்னவெனில்—என் பெயர் காதலேயாயின் நின் உள்ளத்தைக் களிப்பிக்கும் இன்பவல்லியும் இணை பிரியாத வாழ்க்கைத் துணையுமாகிய இவளையுமே துறந்து இந்தப் பாவச் சேற்றில் அழுந்தித் துயருழக்கும் தரணியை மோஹ பாசத்திலிருந்து உய்விக்க முற்படுவாய். இவளிடத்தே வைத்த ஆசையால் மயங்கி இந்த ஞாலத்தின் நலமாற்றும் பணியை நீ கைக்கொள்ளாவிடில், என் பெயர் காதலன்று, மோஹமே யாம்,—என்றபடி.

"நீ ஞாலத்திடை வைத்த காதலினால் பித்துற்றிருக்கி றாய். ஆனால் நீ வீட்டை விட்டு வெளியேறினால், நின் தந்தையின் நெஞ்சம் எவ்வாறு தவிக்கு மென்பதைச் சற்று யோசித்துப்பார். அவருக்கும் குடும்பத்திலுள்ள ஏனையோருக்கும் இவ்வளவு வருத்தத்தை விளைவிக்க நீ துணிவாயாகில் அவர்கள்மாட்டு உனக்குள்ள காதல் இருந்தவாறென்னே" என்று (சித்தார்த்தனாரின் தேர்ப் பாகன்) சந்தகன் வினவியதற்குச் சித்தார்த்தன் கூறுவார்:

"நண்பனே! தன்னயமே கருதி, காதலினால் விளையும் இன்பங்களுக்காகவே பாராட்டப்படும் காதலானது மெய்க் காதலாகாது. என் உள்ளம் மகிழ்வதினும் மேலாக, இவர்க

ளுக்கே உண்டாகும் உவகையினும் மேலாக, இவர்கள் மீது நான் காதல் கொண்டிருப்பதால் தான், இவர்களது நிலைத்த நன்மையையே நாடி, இவர்களையும் பிறரையும் காப்பாற்றும் வழியைத் தேடப் போகிறேன்.''*

மோஹத்தைக் கடிந்து அன்பின்வாயிலாக ஞாலத்தை உய்விக்க வேண்டி அன்பின் அவதாரமாகிய சாக்கிய ஸிம்ஹனர் இவ்வற்ப ஸம்ஸாரமாகிய இல்லத்தைத் துறந்து மஹா ஸம்ஸாரமாகிய ஞாலத்தின் திருப்பணியில் இறங்கலாயினர்.

நாமும் ஞானவொளியினல் உள்ளத் தெளிவெய்தி, அன்பெனும், அமுதவாரியினல் உச்சி முதல் உள்ளங்கால் வரை அபிஷேகம் செய்யப் பெற்று, மோஹத்தைப் புநராவிர்த்தி (மறு பிறப்பு) இன்றி ஒழியும்படி வழியனுப்பி விட்டு, ஸம்ஸாரத்திலும் சமுதாயத்திலும் மற்றும் அகில ஜகத்திலும் அவன் திருவுள்ளத்துக்குகந்த பணிகளை ஆற்றிக்கொண்டே வாழுமாறு எம்பெருமான் திருவருள் புரிவாராக.

---

*ஸ்ரீயுத அ.மாதவையரின் 'சித்தார்த்த'னிலிருந்து அமைத்துக் கொள்ளப்பட்டது.

மதம்

தன்னைத்தானே சோதித்துக் கொள்ளலாகிய ஆத்ம பரீக்ஷைக்குமுன் மதம் என்பது சிறந்ததல்லதன்று. 'ஆத்ம பரீக்ஷை' என்னும் வட சொற்றொடரைத் 'தன் ஆராய்வு' என்று தமிழில் மொழிபெயர்த்துக் கொள்க. 'நான் யார்? என் அறிவு எத்துணைத்து? என் ஆற்றல் எவ்வளவினது?' என்று உறுதி கோணாது ஆராய்கின்றவன் ஒருகாலும் அஹங்காரத்தினால் தருக்குறான். தன்கல்வியறிவு பற்றித் தருக்குற்றிருப்பவனை நோக்கி—'உன்னைப் பற்றியே உனக்கென்ன தெரியும்? இவ் அங்கங்களின் தன்மை என்ன? அவை எவ்வாறு உண்டானவை? நாம் கைகளால் பற்றக் கூடியவர்களாகவும், கண்களால் காணக் கூடியவர்களாகவும், மனதால் நினைக்கக் கூடியவர்களாகவும் இருப்பதேன்? இக் கேள்விகளுக்கு விடையளிக்க உன்னால் ஆகாமற்போனால், உன் ஆற்றலைப்பற்றி என் பெருமை பாராட்டுகிறாய்? அறிவின் இன்ன குறிப்பிட்ட துறையில் நீ வல்லவன் என்கிறாயே? அத் துறையில் உன் சுயமான முயற்சியால் நீ என்ன சாதித்துவிட்டாய்? இவ் விஷயங்களைப்பற்றிச் சிறிது சிந்தனை செய்து பார்த்து, அதன் பிறகு நீ பெருமை பாராட்டிக் கொள்ளக் கூடியது ஏதேனும் உண்டா என்று சொல்லு,' என்று கேட்பேன்.

புலவனே, உன் புலமையைப்பற்றிப் பெருமை பாராட்டுகிறாயா? உன்னை ஒரே கேள்வி கேட்கிறேன்—'நான்' 'நான்' என்று சொல்லிக்கொண்டு திரிகிறாயே. அந்த 'நான்' என்னவென்று அறிவாயோ? உள்ளே இருக்கும் ஆத்மாவின் விஷயம் கிடக்க, உன் உடம்பின் இரத்தத் துளி இன்ன தென்றேனும் நீ சொல்லவல்லையோ? ஏ, பொருள்திற (பதார்த்த விஞ்ஞான) நூற் புலவோய், உன் பொருள்திற நூற் புலமையைப் பற்றி இவ்வளவு பெருமையடித்துக் கொள்ளுகிறாயே, ஓர் மணலணுவின் தோற்று

வாயைப் பற்றியேனும், அது எந்த மூலப் பொருளால் ஆக்கப்பட்டிருக்கிற தென்பதைப் பற்றியேனும், நீ கூற வல்லையோ? இரும்பைக் காந்தம் கவர்வதேன், கூறத் தரமோ? நம்மைச் சூழ்ந்துள்ள இந்தப் பிரபஞ்சத்தின் ஓர் அணுசி அல்லது நீர்த் திவலையின் மிக மிக நுண்ணிய சிற்றணுவைப் பற்றிய உண்மையையேனும் எனக்குக் கூறு மாறு உன்னை அறை கூவி யழைக்கின்றேன். அதைக் கூறுவையேல், நீ உண்மையான விஞ்ஞானியே யாவாய்.

தமக்குள்ள ஆற்றல்களைப் பற்றிப் பெருமை பாராட்டு கிறார்களே, அவர்களில் ஒவ்வொருவரையும் நோக்கி, 'உமக்குள்ள ஆற்றல்தான் என்னை? நீர் என்ன ஆற்ற வல்லீர்?' என்பேன். வன்மை பெறச் சொற் பொழிவு நிகழ்த்த வல்லான் ஒருவன், 'என் நாவன்மையால் இவ் வுலகத்தை வசிகரிக்க வல்லேன்,' என்று ஒரு வேளை உரைக்கலாம். என் நண்பனே, அந் நாவன்மையை ஆக் கியோன் நீதானோ? அது கிடக்கட்டும், அதை எப்போதும் ஆளும் ஆற்றலேனும் உனக்குண்டோ? நேற்றுத்தானே நீ ஆயிரக்கணக்கானவர்களின் உள்ளங்களை மயக்கி எழுச்சி கொள்விப்பதான சொற்பொழிவு நிகழ்த்துவதைக் கண்டேன். அவ்வண்ண மிருந்தும் இன்று உனக்குற்ற துர்க்கதி என்னே! இன்று அதே இடத்தில் அதேவிஷயத் தைப்பற்றிப் பேச நீ பகீரதப் பிரயத்தனஞ் செய்தும், ஒரு பிராணியின் உள்ளமேனும் இளகவில்லையே!

இவ்வண்ணமே கவிஞனைப் பற்றியும், கணித நூலறி ஞனைப் பற்றியும், போர்வீரனைப் பற்றியும் கூறலாம். கவி ஞருட் சிறந்தோனாய்க் கவீந்திர னென்றும் கவிராஜ னென்றும் விருது பெற்றிருக்கும் ஓர் பாவலன்—என் பாட்டைக் கேட்டு எவனே உள்ள முருகாதவன்?' என்று பெருமை பேசினால், அவனை நோக்கி—' இப் பாட்டுக் கட் டும் ஆற்றல் நீயாகவே படைத்துக் கொண்டதா, அல்லது யாரேனும் உனக்கு அருளியதா? அது போகட்டும், நினைத்தபோது பாட வல்ல திறமையேனும் உனக் குண்டோ? அன்றொரு நாள், ஒரு நிமிஷமேனும் சிந்தியா மலே சோனமாரி போல் இடைவிடாமல் இன்சுவை வாய்ந்த பாட்டுக்களைப் பொழிந்தாய். இன்றோ நீ எவ்

வளவோ மூளையைக் குடைந்து கொள்ளுகிறாய், ஒரு கருத்தாயினும் தோன்ற வேண்டுமென்று நூறு தரம் மேனோக்கி அண்ணாந்து பார்க்கிறாய், ஒவ்வொரு பொழுது புருவத்தை நெறித்துக்கொண்டு ஆழ்ந்த சிந்தையில் அமிழ்ந்து விடுகிறாய். இவ்வளவும் செய்தும், ஒரு பாட்டேனும் சொல்ல வழியின்றி நீ விழிப்ப தென்னே! இதுவோ உன் பாட்டியற்றும் ஆற்றல் இருந்தவாறு?' என்று கேட்டுவிட்டாற் போதும், அவன் பாடு திண்டாட்டமே. கணித நூல் கரை கண்டான் ஒருவன்: 'என் நூலில் எத்தகைய சிக்கலான கேள்விக்கும முயற்சியின்றி விடை யிறுக்க வல்ல இயற்கை யாற்றல் படைத்துள்ளேன்,' என்று கூறுமிடத்தே, 'ஆற்றலிருப்பின், அதை ஆக்கியது யார்? நீயோ? அவ்வாற்றல் தானும் உன் கைவசமா யுள்ளதோ? ஒரோரு வேளையில் உன் மாணாக்கரின் மாணாக்கரும் உன்னைத் தோற்பித்திருப்பதை நான் கண்டிருக்கிறேனே!' என்று கேட்டால் வெளிப்படும் அவன் பெருமை இருந்தவாறு.

போரில் வென்று வாகை சூடிய வீர சேனாபதி ஒருவன் வெற்றிக்கொடி உயர்த்தி, ''போர்த் திறத்தில் யாரே எனக்கு நிகராவார்' என்று வீறு கூறுகின்றான். அவனை —'சரி, அப் போர்த்திறம் கற்கும் ஆற்றல் நீயே உண்டாக்கிக் கொண்டதோ? அல்லது யாரேனும் உனக்குக் கற்பித்ததோ? அவ்வாற்றல் தானும் எபபோதும் உன் ஆட்சிக்கடங்கி யுள்ளதா? அஃது உன் வயப்பட்டிருந்தால், ஒவ்வொரு சமரிலும் உனக்கு வெற்றி கிடைக்கிறதா? நேற்று நீ லக்ஷத்துக் கதிகமான சைநியத்தை வென்று வந்தாய்; இன்றோ நூற்றுவரேயான படைஞர் உன்னையும் உன் அக்குரோணிப் படைகளையும் முறியடித்திருப்பதென்னே!' என்று கேட்டால், வெளிப்படும் அவன் வீரப் பிரதாபம்! இவ்வாறு நாம் ஒவ்வொரு விஷயத்தைப் பற்றியும் உன்னிப் பாத்தால், நம் ஆற்றல்களையே அடக்கி யாளும் திறமை நமக்கில்லை யென்றேற்படும். அப்படியாயின், நாம் பெருமை பாராட்ட என்ன இருக்கிறது? அவ்வளவேன்? இந்த உடம்பையே எடுத்துக் கொள்வோம். இதன் மேலும் நம் அதிகாரம் சிறிதும்

செல்வதில்லை. எதிரிலிருக்கும் ஒரு பொருளை எடுக்க இந்தக் கையை நீட்டுமிடத்தே, திடீரென்று திமிர் வாதத்தினால் கை விறைத்துப் போய்விட்டால், அப்பொருளை எடுக்க முடியாமற் போய்விடுகிறது. இந்த நாவினால் இத்துணைச் சொற்களைப் பொழிந்து கொண்டிருக்கிறேன். அடுத்த வாக்கியம் உச்சரிப்பதற்கு முன்னரே இந்த நாக்கு விறைத்துக் கொண்டால், அப்புறம் என் கட்டளையை அது மதியாதே. இந்த பாரிஸாவிலே ஒரு கிழவன்—'நானே எனக்குச் சொந்தமில்லை. நான் ஒன்று நினைக்கிறேன், நடப்பதோ வேறாயிருக்கிறது,' என்று சொல்வதுண்டு. ['ஒன்றை நினைக்கின், அது ஒழிந்திட்டொன்றாகும்' என்று தமிழிலும் இருக்கிறது.] இது முற்றிலும் உண்மை. நான் என்னுடையவனாகவே இருந்தால், என் சக்திக்குட்பட்ட எதைச் செய்ய வேண்டுமென்று எண்ணுகிறேனோ அதைச் செய்தே முடிக்கக் கூடியவனாயிருப்பேன்; அநேக சமயங்களில் செய்ய வேண்டுமென்று சங்கற்பிக்கிற காரியங்கள் எதிர்பாராத நிகழ்ச்சிகளின் சுழற்சியால் தடையுண்டு நிறைவேறாமற் போகின்றன.

நாம் ஏதோ சிறிது செய்வதும் நினைப்பதுமாகியவெல்லாம் எம்பெருமானது அருளாலேயாம். 'அவனன்றி ஓரணுவும் அசையாது' என்பது ஆப்தர் மொழி. நமக்கென யாதொரு சக்தியும் இல்லை. நமக்கு அவன் அருளிய சக்தியைத் திரும்ப வாங்கிக்கொண்டு விட்டால், நமக்கு எதைச் செய்யவும் ஆற்றலிராது. நாம் வகையற்றவர்களாய் விழிப்போம். அவன் துணை நிற்காவிட்டால், ஒரு துரும்பை அசைக்கவும் நம்மால் ஆகாது. இந்த உண்மையைக் கேநோபநிஷத்திலுள்ள ஓர் உபாக்கியானம் வெகு அழகாய் விளக்குகிறது.

'ஒரு காலத்தில் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் பெரும் போர் மூண்டது. அதில் ஞாலத்தின் நலங்கருதித் தேவர்களுக்கு வெற்றி யுண்டாகும் படியும் அசுரர்களுக்குத் தோல்வி யுண்டாகும் படியும் ஆண்டவன் திருவுளம் பற்றினான். அவ்வெற்றி தம்முடைய ஆற்றலினாலேயே உண்டாயிற்றென்று தேவர்கள் இறுமாந்து, அதற்குக்

காரணமாகிய ஆண்டவன் திருவருளை மறந்திருந்தனர். அந்தர்யாமியாகிய ஆண்டவன் தேவர்களின் வீண் பெருமையை அறிந்து அதை அகற்றத் திருவுள்ளங் கொண்டு, அவர்களுக் கெதிரில் அற்புத ரூபத்துடன் தோன்றினான். அவர்கள் அவனை அறியாது, இது யாராயிருக்கக்கூடு மென்று வியப்புற்றனர். அதன் மேல் அவர்கள் அக்கியை நோக்கி 'ஓ ஜாதவேதாவே, இவ்வற்புத வடிவம் யாதோ வென்றறிந்து வா' என்றனுப்ப, அக்கி, 'அப்படியே ஆகுக,' என்று சொல்லிப் போந்தான்.

ஆண்டவன் அவனை நோக்கி—"நீ யார்?" என்று கேட்க, அவன்—"நான் அக்கி, ஜாதவேதா," என்றான். "உனக்குள்ள ஆற்றல் என்ன?" "பூமியிலுள்ளதை யெல்லாம் எரித்து விடுவேன்." அப்பொழுது ஆண்டவன் அக்கியின் முன் ஒரு துரும்பை வைத்து, "இதை எரி," என்றான். அக்கி தன் ஆற்றலை எல்லாம் செலுத்தி முயன்றும், அத் துரும்பை எரிக்க முடியவில்லை. ஆகவே அவன் தோல்வியுற்றுத் தேவர்களிடம் திரும்பிச் சென்று, "நண்பர்களே, அவ்வற்புத வஸ்து யாதோ, என்னால் அறியக்கூடவில்லை" என்றான்.

பிறகு அவர்கள் வாயுவை நோக்கி—"நீ சென்று, அப்பெரும்பொருள் யாதோ, அறிந்துவா," என்றனுப்ப, அவன் அதற்கிணங்கச் சென்றான். ஆண்டவன் அவனை நோக்கி—"நீ யார்?" எனவும், அவன், "நான் வாயு மாதரிசுவா," என்றான். "உன் ஆற்றல் என்ன சொல்லு?" "பூதலத்தில் உள்ளவற்றை யெல்லாம் அடித்துக் கொண்டு போய் விடுவேன்." அப்பொழுது ஆண்டவன் அவன் முன் ஒரு துரும்பை வைத்து, "இதை அடித்துக் கொண்டுபோ. பார்ப்போம்," என, வாயு தன் சக்தி கொண்டமட்டும் முயன்றும் அதை அசைக்கமுடியவில்லை. அதன்மேல் அவன் கர்வபங்கமுற்று தேவர்களிடம் திரும்பிவந்து, "இப்பெரிய பொருள் யாதோ, என்னால் அறியக்கூடவில்லை," என்றான்.

பிறகு தேவர்கள் இந்திரனை நோக்கி—"ஹே மகவன், இம்மஹநீய வஸ்து யாதோ, நீ அறிந்துவா," என, இந்திரனும் "அப்படியே," என்று சொன்னான். அவன் அத

னருகே வந்தவுடனே, அவ்வஸ்து மறைந்து விட்டது. இந்திரன் இஃதென்ன ஆச்சரிய மென்று திகைத்து நிற்கையில், பேரழகுவாய்ந்து பொன்பணி பூண்டு வித்தியா ரூபிணியாய் (அறிவு வடிவினளாய்) உமாதேவியார் வானில் திகழ்வதைக் கண்டு, "இப்பொழுதே மறைந்து போன இந்த மஹா புருஷன் யார்?" என்று வினவினன். "இவனே பரம்பொருளாகிய ஆண்டவன். இவனுடைய அருளாலேயே உங்களுக்கு வெற்றி உண்டாயிருந்தும், உங்களுடைய ஆற்றலாலேயே அவ்வெற்றி கிடைத்து விட்டதாக நீங்கள் தருக்கியிருந்தீர்கள். உங்களுடைய செருக்கை அடக்கித் தன்னுடைய அருளின்றி உங்களால் எதுவும் செய்ய இயலாதென்பதை உங்களுக்கு உணர்த்த வேண்டியே அவன் இங்கே இவ்வாறு தோன்றினன்," என்றார் உமாதேவியார்.

அப்பொழுதுதான் அறிந்தான் ஆண்டவன் பெருமையை இந்திரன். ஆகவே நாம் வீண்பெருமை பாராட்டிக் கொள்ளத் தக்கதாக ஒன்றுமேயில்லை. அந்தப் பிரஹ்ம சக்தியின் உதவியினலன்றி இக்கைகள் அசைந்து எதையும் பற்ற முடியா, இக் கண்கள் காணமுடியா, இச்செவிகள் கேட்க முடியா, நாக்கு சுவைக்க முடியாது, மனம் நினைக்க முடியாது, புத்தியும் தன் வேலையைச் செய்யத் திறமையற்றதாகும். அந்தச் சக்தியே.

ச்ரோத்ரஸ்ய ச்ரோத்ரம்,
மநஸோ மநோ,
யத் வாசோ ஹ வாசம்;
ஸ உ ப்ராணஸ்ய ப்ராண:
சக்ஷுஷச் சக்ஷு:

"செவிகளுக்குச் செவியாய், மனதுக்கு மனதாய், வாக்குக்கு வாக்காய், உயிருக்குஉயிராய், கண்களுக்கு கண்ணாய்" மிளிர்கின்றது. அந்தப் பிரஹ்ம சக்தி இல்லையெனில், பிராணனும் மனமும் புற இந்திரியங்கள் முதலிய அனைத்தும் சக்தி யற்றவைகளாய் விடுகின்றன.

கோஹ்யேவாந்யாத், க: ப்ராண்யாத்
யதேஷ ஆகாச ஆநந்தோ நஸ்யாத்?

"ஆனந்த ஸ்வரூபமாய் ஆகாய வடிவமாய் விளங்கும் இந்தப் பிரஹ்மம் இல்லையெனின், யாரே அசைவர், யாரே உயிர்ப்பர்?"

இப்படி எல்லாமே அந்த ஈச சக்தியின் ஆதீனமாயிருக்கையில் நீ அகங்காரமுறுவதற்கு என்ன மிகுத்திருக்கிறது? கடன் வாங்கின சரக்குகளைக் கொண்டு வாணிபஞ் செய்யும் உனக்குக் கர்வப்படுவதற்கு என்ன வைத்திருக்கிறது? கடன்காரன் தன் சரக்குகளைத் திரும்ப வாங்கிக் கொண்டுவிட்டால், உன்னிடம் இருப்பதென்ன? அப்பொழுது உன்னிலும் கேடுகெட்ட பிச்சைக்காரன் உண்டோ? திரும்ப வாங்கிக் கொள்வது இருக்கட்டும். அவன் உன்னிடம் கொடுத்து வைத்தது என்னென்ன உண்டோ, அதற்கெல்லாம் தக்க கணக்கு சொல்லும்படி கேட்டால், உன்னால் சொல்ல முடியுமாவென்று சற்று யோசித்துப்பார். ஏராளமான துர்விநியோகமே உன் கணக்கில் காணப்படுமென்பதில் சந்தேகமென்ன? கணக்கு என்ற பெயரைக் கேட்ட மாத்திரத்தில் உயிர் நடுக்கமுறாதா? நெஞ்சில் ரத்தம் சுண்டிப்போகாதா? ஆண்டவன்முன் தன் சரியான கணக்கை ஒப்பிக்க வல்லேன் என்று நிர்ப்பயமாய் நிமிர்ந்து நின்று சொல்லக் கூடியவன் நம்மில் ஒருவனாவது உண்டோ? இதை நன்குணர்ந்தே கவீர (கபீர்) தாஸன் இவ்வாறு சொன்னார்—

"இந்தப் பிரஹ்மாண்டமாகிற அரைக்கும் எந்திரத்தைக் காணுமளவில், கண்ணீர் பொங்கித் ததும்பி விடுகிறது. ஒரு பிராணியாவது இவ்வெந்திரத்தின் இருதிரிகை வடங்களினிடையே விழுந்து அபாயமின்றி வெளிப்படுவதைக் காணோம்."

உலகத்தில் எல்லாருமே இப்படித் தத்தளிக்கையில், நான் இன்னானைப் போல் அவ்வளவு துன்புறவில்லை, ஆகையால் நான் கர்வப்படுவதற்குத் தக்கநியாயமுண்டு—என்று சொல்லுவையேல், அப்படிச் சொல்ல உனக்கு அதிகாரமில்லை, ஆற்றலில்லை. ஏனெனில் எவனுடன் உன்னை ஒப்பிட்டுப்பார்த்து நீ கர்வப்படுகிறாயோ, அவனுள்ளத்தில் நீ புகுந்து பார்த்தாயோ? அவன் உள்ளம் இருக்கட்டும், உன் உள்ளத்தையே துருவிப் பார்க்கத்தானும்

உன்னலாகுமா?—என்பேன். தன்னாராய்வு இன்மையாலேயே நாம் பலகாலும் நம்முடைய பாபங்களை அறியாமல் கண்மூடித்தனமாய் இருக்கிறோம். ஆராய்ந்து பார்த்தால், கணக்கில்லாத பாபங்களை நாம் செய்திருக்கிறோமென்று தெரியவரும். நாம் கர்வங்கொள்வதற்கு விஷயமா யிருப்பவை எவை, அவற்றினுக்கு மூல காரணம் யாது என்று நிதானமாய்ச் சிந்தித்துப்பார்த்தால் எவற்றின் நிமித்தம் நாம் அஹங்கரிக்கிறோமோ, அவை நாம் அஹங்காரம் கொள்வதற்கு விஷயமல்ல, மற்று, வெட்கப்படுவதற்கே காரணமாகுமென்று பெரும்பாலும் விளங்கும்.

ஒரு முஸ்லிம் ஸாதகனுக்குத் தன் பக்தி சிரத்தைகளைப் பற்றி மிக்க அஹங்காரம் உண்டாயிருந்தது. ஒவ்வொரு நாளிரவிலும் ஒரு ஒட்டகம் தன்னிடம் வந்து தன்னை ஸ்வர்க்கலோகத்துக்குக் கொண்டுபோவதாக அவன் எண்ணிக்கொண்டான். இரவு முழுதும் ஸ்வர்க்க போகத்தை அநுபவித்துவிட்டுக் காலையில் எழுந்து பார்க்கையில் மறுபடியும் தன்னுடைய சொந்த குடிசையிலே இருப்பதாகத் தெரிந்தது. 'ஜ்வநித்' என்கிற மற்றொரு சாது அவனிடம் ஒரு நாள் வந்து அவனுடைய யோக க்ஷேமங்களைப்பற்றி விசாரித்தான். அதற்கு அவன் தான் ஒவ்வோர் இரவிலும் ஸ்வர்க்கத்துக்குப்போய்ச் சுகபோகம் அநுபவிக்கிற விதத்தை மிக்க பெருமையோடு எடுத்துக் கூறலானான். அப்பொழுது ஜ்வநித் குர் ஆனிலிருந்து ஒரு வசனத்தை எடுத்தோதி, 'இன்று நீ மறுபடியும் ஸ்வர்க்கத்துக்குப் போகும்போது, இந்த வசனத்தை மூன்று தடவை உச்சரிக்கவேண்டும்' என்று சொன்னான். அவன் அப்படியே செய்வதாகச் சம்மதித்தான். அன்றிரவு அவன் வழக்கம்போல் ஸ்வர்க்கத்திற்குப் போனதும், அவ் வசனத்தை மும்முறை உச்சரித்தான். அதைக் கேட்ட அளவில், அரம்பையர், பாடுவோர், வாத்தியம் வாசிப்போர், சேவகர் முதலிய எவரெவர் அவனுக்கு இன்பம் அளிக்க அங்கு வந்திருக்கிறார்களோ அவர்களெல்லோரும் நடுக்கமுற்று அவனை அங்கேயே தனிமையாய் விட்டுவிட்டு வெருண்டோடிவிட்டனர். அவனுடைய சுகாநுபவத்துக்

காக வைக்கப்பட்டிருந்த போக்கிய பதார்த்தங்களெல்லாம் சின்னபின்னமாய்விட்டன. அஹங்காரங்கொண்ட ஸாதகன் தனியே விழுந்துகிடந்தான். நாற்புறமும் பார்வையைச் செலுத்தி நோக்கியபொழுது, தான் மிகக் குற்சிதமான ஓரிடத்தில் இருப்பதாகவும், தன்னைச் சூழப் பிரேதங்களின் எலும்புகள் ராசி ராசியாய்க் குவிந்திருப்பதாகவும் கண்டான்.

நம்முள் அநேகர் மனோராஜ்யத்தில் இப்படி ஸ்வர்க்க போகம் அநுபவிப்பதில்லையாவென்று யோசித்துப் பாருங்கள். இந்த வெளிப் பகட்டான வைபவம், படாடோபம் பெரும் பெயர், ஓங்கிய புகழ்—இவற்றையெல்லாம் தாண்டி உள்ளுக்குள்ளே என்ன இருக்கிறதென்று பார்த்தால், மாண்டுபோனவர்களின் எலும்புகளைத் தவிர வேறொன்றும் காணப்படாது. ஓய், ஆசாரிய புருஷரே, குண்டல தீக்ஷிதரே, படிநீற்றுப்பண்டாரத் தம்பிரானே, ஸத் ஸம்பிரதாயமென்றும், சிஷ்டாசாரமென்றும், சமய வொழுக்கமென்றும் என்னென்னவோ சொல்லிப் பெருமை பாராட்டுகிறீர்களே; அளவற்ற சிஷ்யர்களும் தொண்டர்களும் உங்களைச் சூழ்ந்து உங்களை ஈடும் எடுப்பு மற்ற மஹான்களென்று ஆகாசம் வரையில் தூக்கி வைத்துப் போற்றிப் பாடுகிறார்களே. உங்களையே சிறிது உள் நோக்காய் ஆராய்ந்து பாருங்கள்; உங்கள் ஸமஸ்தமான ஆசாரங்களும், தியானங்களும், உபதேசங்களும் பகல் வேஷமென்றும், உயிர் நீங்கிய உடம்பின் வெற்றெலும்புகளென்றும், வெட்டவெளிச்சமாகும்! ஹைகோர்ட் ஜட்ஜியாரே, ஏதோ சுக்கிர தசையினால் கிடைத்துவிட்ட இந்த உயர் பதவியை முன்னிட்டு நீர் கர்வங்கொண்டிருக்கிறீர். சற்றுத் திருஷ்டியைச் சுற்றிலும் செலுத்திப் பாரும். உமக்குத் தாழ்ந்தவர்களென்று நீர் இழித்து நோக்கும் எத்தனையோ பேர் பலவகைகளிலும் உம்மைவிட மேலானவர்களாயிருக்கிறார்கள். நாடோறும் அத்தனை பேரையும் உம் எதிரே நிறுத்தி நியாயம் விசாரிக்கிறீர். ஆனால் நான் உமக்கு ஒன்று கூறுவேன்: அதாவது—உம்முடைய அந்தரங்கமான அறையில்போய் உட்கார்ந்து கொண்டு பகவந் நாம ஸ்மரண பூர்வகமாய், உமக்குள்ள

புத்தி எவ்வளவு, விவேகம் எவ்வளவு, யோக்கியதை எவ்வளவு என்று நிஷ்பக்ஷபாதமாய் ஆராய்ந்து, நீர் எந்த அளவுக்குத் தகுதியுள்ளவரென்று மனப்பால் குடித்துக் கொண்டிருந்தீரோ அவ்வளவுக்கு உமக்கே அநுகூலமாய் நீர் தீர்ப்பு (டிக்கிரி) அளித்துக்கொள்ள முடியுமா என்று சிறிது யோசித்துப்பாரும். 'அட, இதற்காகவா இவ்வளவு கர்வம். நான் சலவைக் கற் சுவர் சூழ்ந்த சாம்பர்க் குவியலும், பிணத்தெலும்புகளுமன்றி மற்றேது மல்லேனே" என்று நீர் அவசியம் கதறியெழுவீரென்று நான் தைரியமாகச் சொல்வேன். நம்மில் ஒவ்வொருவரும் சில நிர்ஜீவமான எலும்புகளை உடம்புக்குள் வைத்துக்கொண்டு அவற்றையே ஸ்வர்க்கபோகத்துககுரிய சாதனத் திரவியமென்று எண்ணி மோசம் போகிறோம். பார்க்கப்போனல், நம்முடைய அஹங்காரத்துக்கு விஷயமாயிருப்பது இந்த நிர்ஜீவப் பிணத்தெலும்புகளே!

ஆத்ம பரீக்ஷை என்னும் தன்ஞாயின் வாயிலாக நம்முடைய குற்றங்களை எப்போதும் நம் அகக் கண்ணின் முன் நிறுத்தி வைத்துக்கொண் டிருந்தால், அஹங்காரம் பொடிப் பொடியாய்ப் போய்விடும். நாம் நம்முடைய குற்றங்களை நோக்காமல் ஸர்வதா குணங்களையே பாராட்டிக்கொண்டிருப்பதனுல்தான் அஹங்காரிகள் ஆகின்றேம். அப்படிக்கின்றி ஆத்மதிருஷ்டியைக்கொண்டு குற்றங்களை ஒவ்வொன்ருய்க் கண்டுபிடித்தல் வேண்டும். எந்தக் குற்றங்களைக் குணமென்று எண்ணி யிருந்தோமோ, அவற்றை நுட்பமாய் ஆராய்ந்து இழுத்து வெளிக்குக் கொண்டுவந்து, அவற்றுள் மிகத் தடித்துள்ளவைகளை அட்டவணையிட வேண்டும். நம்மிடத்திலுள்ள குற்றங்களைப் பற்றியே சதா சிந்தித்துக்கொண் டிருந்தால், அஹங்காரம் அணுகுவதற்கு இடமிராது. தன்னுடைய குற்றங்களை உணர்ந்து எப்போதும் விழிப்புள்ளவனு யிருப்பவன் பணிவுள்ளவனுகியே தீர்வான். அத்தகையவன் பக்கீர் போயஜித் என்னும் மஹாத்மாவைப்போல்; "ஒரு தூசியின் பரமாணுவைக் கேட்டாலும், அது தன்னைவிட 'போயஜித்' எவ்வகையிலும் மேலானவனில்லை யென்று கூறும்," என்று கூறுவான். ஒரு நாள் ஒரு சாது பாதை

யூடே போய்க்கொண்டிருக்கையில், ஒருவன் மாடியின் மேலிருந்து சாதுவின் தலையில் விழும்படி அடுப்புக் கரியைக் கொட்டினன். சாதுவுடன் கூடவிருந்தவர்கள் வெகுண்டு அவனை அடிக்கப் போனர்கள். சாதுவானவர் அவர்களைத் தடுத்து மலர்ந்த முகத்துடன், "இது என்ன நீங்கள் செய்யப்போவது? எவனுடைய தலையில் எரியும் நெருப்புத் தணலை வாரிக் கொட்டவேண்டுவது தகுதியோ அப்படிப்பட்டவனது தலையில் குளிர்ந்த கரிதானே விழுந்தது? இதுவே அவனது நல் அதிர்ஷ்டமல்லவா?" என்ருர். தன் குற்றங்களை எப்போதும் ஆராய்ந்துபார்க்கிறவன் இந்த சாதுவைப்போலவே தீநாத்மாவாவது திண்ணம். அவனுடைய உள்ளத்தில் அஹங்காரம் எள்ளளவும் இடம் பெருது. ஒவ்வொருவரும் பல நூற்றுக் கணக்கான குற்றங்கள் எத்தனை எத்தனை தம்மிடத்தே உண்டோ, அவற்றிற்கு ஒரு முறை பட்டிகைபோட்டுப் பார்த்தால், அஹங்காரமென்பது ஒருகாலும் உள்ளே நுழையவொண்ணுது. இங்கு எடுத்துக்காட்டிய விதமாய் ஆத்ம பரீக்ஷை செய்வது அஹங்கார நாசத்துக்குப் பிரதான உபாயமாகும்.

2. அஹங்காரத்தினல் விளையும் தீமைகளை உன்னுமளவில், ஆவி கூசும். மஹா பாரதத்து உத்தியோக பர்வத்தில் கௌமாரப் பிரஹ்மசாரியாகிய ஸநத்ஸுஜாத முனிவர் திருதாஷ்ட்ரனுக்கு மதத்தினல் உண்டாகும் பதினெண் குற்றங்களையும் இவ்வாறு அறிவுறுத்தியிருக்கிருர்—

"மதத்தினின்று உண்டாகும் பதினெண் குற்றங்களையும் முன்னமே நான் எடுத்துக் கூறவில்லை. அவை யாவன: மக்களிடம் பகைமை பாராட்டல், அவர்களுக்குத் தீங்கிழைத்தல், குற்றங் காணுதல், பொய்யுரைத்தல், காமம், வெகுளி, கீழ்மை, புறங்கூறல், குறும்பு, பொருளழிவு, சண்டையிடுந்தன்மை, பொருமை, ஜீவஹிம்ஸை வன்மம், மயக்கம், மட்டுமீறி மொழிதல், மதிமோசம், மனக் கொதிப்பு என்பவையாம். ஆதலால் விவேகியானவன் மதத்திற்குட்படலாகாது; அஃது எப்போதும் கடியத்தக்கதென்க."

மதோன்மத்தனு யுள்ளவன் மக்களின் பகைமைக் காளாவான்,—அஹங்காரங் கொண்டவனை எவரும் பார்க்க விரும்பார். அவன்தான் பெருமைக்குக் குறை வுண்டாய்விட்டது அல்லது உண்டாகக் கூடும் என்று கருதிப் பலவகையில் பிறருக்குத் தீமை செய்வான். பிறர் குணங்களின் புகழ்ச்சியைக் கேட்கச் சகியான். நல்லோர் மீது தோஷாரோபணம் செய்ய ஆக்கிரப்படுவான். தன்னை உச்சஸ்தானத்தில் உயர்த்தி வைததுக்கொள்ள வேண்டிப் பிறர் எவரும் தனக்குச் சமமாக ஆதரிக்கப்படாமலி ருக்கும் பொருட்டுப் பொய் புகலக் கூசமாட்டான், எதை முன்னிட்டுத் தான் அஹங்காரம் கொள்ளுகிருனே, அதனிடத்தே அவனுக்கு மிகுதியான பற்றுண்டாகும். அதற்கு விரோதமாக எவரேனும் பேசுமிடத்தே, அவர் மேல் வெகுண்டு எரிந்து விழுவான். தன் பெருமைத் தீயை விறகிட்டெரியச் செய்பவருக்கு அடிமையா யிருப்பான். பிறர் குற்றங்களை எடுத்தோதுவதில் அஹங்காரியின் நாவு ஆனந்தக் கூத்தாடாநிற்கும், பல வகைத் தீய நெறிகளைக் கடைப்பிடித்தலே அவனுக்குப் பெரும் பேறு. அவன் அஹங்கார விஷயங்களை அசையாமல் காப்பாற்றி வைத் துக்கொள்ளும் பொருட்டு அனர்த்தம் விளைப்பதாகிய அர்த் தத்தை (பொருளை)ச் செலவழிப்பான். பிறருடன் அவன் இடைவிடாது வாது புரிவான். பிறர் செல்வததைக் கண்டு பொருமைகொள்ளும் குணம் அஹங்காரியின் உள்ளத் தில் தனியரசு புரியும். ஜீவ ஹிம்ஸை செய்வதே அவ னது பரம கர்த்தவ்வியமாய் நிற்கும். வன்மத்தால் அவன் உயிர் துடிதுடிக்கும். அவன் சித்தப் பிரமை யடைவான். உலக மரியாதையை மீறிய வாக்கியங்களை வழங்குவது அஹங்காரியின் ஒரு முக்கிய லக்ஷணமாகும். அஹங்கா ரத்தால் தருக்குற்றிருப்பவனுக்குக் காரியாகாரிய விவேகம் இராது. அன்றியும் அசூயை, எனவே, பிறர் ஆக்கத்தைக் கண்டு பொருது அன்னுருக்குத் துரோஹம் சூழும் தன்மை அவனிடம் குடிகொணடிருக்கும். எந்த அஹங்காரியின் வாழ்க்கையை ஆராய்ந்து பார்த்தாலும் அதில் இப் பதினெண் வகைக் குற்றங்களும் இருப்பதை பிரத்தியக்ஷமாய்க் காணலாம், இத்துணைக் குற்றங்களும் சேர்ந்து ஒருவனைப் பிடர் பிடித்துந்தினுல், அவனிடம்

ஆண்மையேனும் மக்கட்டன்மையேனும் எள்ளளவாவது இருக்க முடியுமா? அஹங்காரியைப் போல் பரிதாப பாத்திரமானவன் வேறொருவனும் இல்லை. அவன் தான் மேல் நோக்கிச் செல்வதாக எண்ணிக் கொள்ளுகிறான்; ஆனால் உள்ளபடியே அவன் கீழ் நோக்கியே விழுந்து கொண்டிருக்கிறான். அவனைப் போல் துயருழப்பவர் இவ்வுலகில் வேறு யாருளர்? அவனது நிலைமை மிகவும் வருந்தற்குரியது.

அஹங்காரத்தின் தடுக்கவொண்ணாத பயன் வீழ்ச்சியே யாகும். அஹங்காரியாயுள்ளவன் எவ்வகையாலும் மேலோங்கி எழ முடியாது. "தீனாத்மாக்கள் தந்யர்கள், சுவர்க்க ராஜ்யம் அவர்களதாதலால்,"* என்று திருவாய் மலர்ந்தருளினர் இயேசு பிரான். தீனாத்மாக்களாகாவிட்டால், ஸ்வர்க்க ராஜ்யத்தில் பிரவேசிக்க ஒருவருக்கும் அதிகாரமில்லை. ஒரு வங்காளி கீர்த்தனத்தில் எம்பெருமான் கூறுவதாவது:—

'அஹங்காரீ ப்பாபீ ஜாரா
ஆமார் தேக்ஹா பாய் நா தாரா
தீந ஜநேர் ப்ந்த்ஹு
ஆமி ஸகலே ஜாநே.'

(இ-ள்.) 'அஹங்காரிகளாகிய பாபிகளால் என்னைப் பார்க்க முடியாது. நான் தீந ஜந பாந்தவன்—ஏழை பங்காளன்—என்று எல்லோரும் அறிவர்.' உள்ளபடியே எம்பெருமான் ஏழை பங்காளனான படியால், அஹங்காரிகளுக்கு அவனுடைய தரிசன பாக்கியம் ஒருகாலும் கிட்டாது. எவ்வகையான அஹங்காரமாவது இருதயத்தில் இருக்கும் வரையில் அதில் எம்பெருமானது ஸாந்நித்தியம் நிகழாது. ஒரு முஸ்லீம் ஸாதகன் (பகீர்) இவ்வாறு கூறுவது வழக்கம்: "இறைவன் உள்ளே எழுந்தருளியிருக்கும் போது, 'நான்' (தற்போதம்) புறத்தே யிருக்

---

*'ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்; பரலோக ராஜ்யம் அவர்களுடையது,' என்பது சென்னப்பட்டணத்து சத்திய வேத சங்கத்தார் வெளியிட்டுள்ள தமிழ் விவிலியத்தில் (மத்தேயு 5. 3.) காணப்படும் மொழி பெயர்ப்பு.

கும். 'நான்' உள்ளே இருக்கும்போது, இறைவன் புறத்தே அகன்றிடுவன். என்னுடைய பிரகாசமில்லாத போதே அவனது பிரகாசம் திகழ்கிறது; 'நான்' பிரகாசிக்கும் போது அவனது பிரகாசம் திகழ்வதில்லை; இவ்வாருகச் சென்ற முப்பது ஆண்டுகளாய் நடந்து வருகிறது. நான் ஓலமிட்டுக் கதறக் கதற 'அவன் நம் இருவருக்கும் சேர்ந்திருக்க இடமில்லை. நம்மில் ஒருவன், நீயோ நானே, நீங்கிப்போக வேண்டும்' என்பான். 'நான் நீங்காவிட்டால், அவன்' வாரான். இந்த 'நான்' எனும் தற்போதம் போகாதிருக்கும் வரையில், எவ்வளவு தர்ம சாதனம் செய்தாலும் ஸ்வர்க்க வாசல் சாத்தப்பட்டே யிருக்கும். மஹாபாரதத்து மஹாப்பிரஸ்தாகிக பர்வத்திலே யுள்ள பஞ்ச பாண்டவர்களின் ஸ்வர்க்காரோஹண உபாக்கியானம் இதற்குப் பிரமாணம். யுதிஷ்டிரன், வீமன், அர்ஜுனன், நகுலன், ஸஹதேவன்—இவ்வைவரும் ஸ்வர்க்கத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்தார்கள். முதலில் ஸஹதேவன் பூதலத்தில் விழுந்தான். அப்படி அவன் விழுந்ததற்குக் காரணம் என்னவென்று யுதிஷ்டிரனை வீமன் வினவ, தர்மபுத்திரன் இவ்வாறு சொல்லலுற்றான்:—

"இவ் அரசிளங் குமரன் தனக்கு நிகரான பிராஜ்ஞன் எவனுமில்லையென்று நினைத்துக் கொண்டிருந்தான். அக் குற்றத்தினலேயே அவன் விழுந்து விட்டான்."

இப்படிச் சொல்லிவிட்டு, மிகுந்த மூன்று சகோதரர்களுடனும் தர்மபுத்திரன் போய்க்கொண்டிருந்தான். சற்று தூரம் போனதும் நகுலன் விழுந்தான். இதற்குக் காரணம என்னவெனறு வீமன் கேட்க, தர்மபுத்திரன் இவ்வாறு கூறலானன்—

"வடிவழகில் தனக்கு நிகரானவன் எவனுமில்லையென்றும், தான் ஒருவனே எல்லாரையும் பார்க்க மிரம்ப அழகியனென்றும் இவன் எண்ணி யிருந்தபடியால் விழுந்துவிட்டான். ஆகையால் விருகோதரா நீ நடந்து வா."

நகுலனுக்குப் பிறகு அர்ஜுனன் விழுந்து போக, அதற்குக் காரணம் என்னவென்று வினவிய வீமனை நோக்கித் தர்மபுத்திரன் இவ்வாறு கூறுகின்றன்—

"சௌரியச் செருக்குற்றிருந்த இவ் வர்ஜுனன், நான் ஒரே நாளில் பகைவரை யெல்லாம் அழித்துவிடு வேன் என்று கூறினவன், அந்தப்படி செய்தானில்லை. அன்றியும் எல்லா வில்லாளிகளுக்குள்ளும் தலை சிறந்து விளங்கிய இவன் பிற வில்லாளிகளை அலக்ஷ்யமாய்க் கருதினான். ஆகையால் இவன் வீழ்ச்சியுற்றான். தன் க்ஷேமத்தை விரும்புகிற எவனும் இவ்வாறு தற்பெருமை பாராட்டுதல் தகாது."

அப்பொழுது பாண்டவரில் எஞ்சியிருந்த யுதிஷ்டிரனும் வீமனும் சில அடி தூரம் நடந்து போகு முன்னர் வீமன் விழுந்துவிட்டான். விழுந்த வீமன் தன வீழ்ச்சிக்குக் காரணம் என்னவென்று கேட்க, யுதிஷ்டிரன் இவ்வாறு சொல்லலுற்றான்—

"நீ மட்டுக்கு மிஞ்சித் தின்று பிறர் வலிமையைப் பொருட்படுத்தாமல் உன் வலிமையையே புகழ்ந்து பெருமை பாராட்டி வந்தாய். அதுதான் நீ கீழே விழுந்து விட்டதற்குக் காரணம்."

நிரஹங்காரனாகிய யுதிஷ்டிரன் ஒருவனே அவ்வை வருள ஸ்வர்க்கஞ் செல்லத் தகுதியுடையவனா யிருந்தான். பீமார்ஜுன நகுல ஸஹதேவர்கள் விழுந்து போவதற்கு அவர்களது கர்வமே காரணமாயிற்று. இவர்களில் ஒவ்வொருவனும் பலவகை நற்குணங்கள் வாய்க்கப்பெற்றவனா யிருந்தும், இருதயத்தில் அஹங்காரத்திற்கு இடங் கொடுத்திருந்தபடியால், ஸ்வர்க்கஞ் செல்வதற்கு இடையூறு ஏற்பட்டது. இதுவே அஹங்காரத்தினால் விளையும் தவிர்க்கவொண்ணாத பயனாகும். எத்தகைய நல்வினைகளையும் எரித்துவிடும்.

அஹங்காரியின் இருதயத்தில் உண்டாகும் வேதனைக்குக் கணக்கு வழக்கில்லை. அஹங்காரம் சுகத்துக்கு விஷம் என்றொரு வசனமுண்டு. அஹங்காரத்துக்கு இடங் கொடுக்கிறவர்களின் வாழ்க்கையில் சுகம் நிலைத்திருக்க முடியாது. இதை மூன்று வகையாக விளக்கிக் காட்டலாம்.

முதலாவது :—தன்னைத்தான் உயர்ந்தவன் என்றெண்ணிக் கொண்டிருக்கிறவன் மற்றவர் எல்லோரும் தன்

அடியிணைகளில் சென்னி சாய்த்துப் பணியவேண்டியவர் என்று நினைக்கிறான். ஆனால் இவ்வுலகத்தில் ஒருவன் எவ்வளவுக் கெவ்வளவு அஹங்காரம் நிரம்பியவனா யிருக்கிறானோ, அவ்வளவுக்கவ்வளவு அவனை மற்றெல்லோரும் அவமதிக்கத் தொடங்குகிறார்கள் ஆகையால் அஹங்காரியா யுள்ளவன் தான் எதிர்பார்த்த வளவுக்குச் சிறப்படையாமல் உள்ளுக்குள்ளேயே வேதனையினால் வெதும்பிக் கொண்டிருப்பது பிரத்தியக்ஷம்.

இரண்டாவது:—அஹங்காரியானவன் பிறர் அனுபவிக்கும் ஆதர ஸம்மானங்களைக் கண்டு, தனக்குக் கிடைக்க வேண்டிய ஆதரத்துக்கும் ஸம்மானத்துக்கும் அதனால் குறைவு உண்டாகிறதென்று கருதிப் பொறாமையால் வயிறு வெடித்து, அவர்களுடைய பிரதிஷ்டையை அழிக்க விஷ நஞ்சு தோய்ந்த நெஞ்சுடன் சூழ்ச்சிகள் செய்வான்.

மூன்றாவது:—எவன் என்னுடைய பெருமையைத் தக்கபடி நன்கு மதிக்கவில்லை, எவன் என்னுடைய வீண் பிரதாப விருத்தாந்த வர்ணனைகளைக் கேட்பதில் பராமுகமாய் இருக்கிறான், எவன் எனக்கு விரோதமாய் என்ன சொல்லுகிறான், எவன் என்னை நோக்கத் தனக்குள்ள சிறுமையை ஏற்றுக்கொள்ளவில்லை, எவன் என் எதிரில் எவ்வளவு தூரம் விலகி வணங்கியிருக்கவேண்டுவதாகுதியோ அவ்வளவு தூரம் இருக்கவில்லை. இத்தியாதி சிந்தைகளால் அஹங்காரிக்கு நித்திரை வருவதில்லை. மனச்சாந்தியும் பங்கமுறுகிறது.

இத்தகைய துக்கம் நிறைந்த வாழ்க்கைக்கு இம்மண்ணுலகில் எவரே உள்ளாவர்? ஆகையால் அஹங்காரத்தினால் விளையும் இவ்வகைத் தீமைகளைக் குறித்து ஒவ்வொருவரும் சிந்தித்துத் தம்மை அதன் பிடியினின்றும் காத்துக் கொள்ளவேண்டும்.

3. ஊர்த்துவ திருஷ்டி என்னும் மேலோங்கிய நோக்கும், அதாவது, நம்மினும் உயர்ந்தோரது செய்கைகளின் பால் திருஷ்டியைச் செலுத்தி அவர்களின் சுகுணங்கள் இன்னவென்று கண்டறிதலும், மருள் நீங்கிய மனத்துடன், அவர்களோடு நம்மைச் சீர்தூக்கிப் பார்த்துக்கொள்ளு

தலும் அஹங்காரத்தை அடக்குவதற்குச் சிறப்பான சாதனங்களாகும்.

எவன் எவ் விஷயத்தைப்பற்றி அஹங்காரம் கொண்டவனுயிருந்தாலுஞ்சரி, அவன் ஊர்த்துவ மூகமாய்த் திருஷ்டியைச் செலுத்தி ஆராய்ந்தால், தன்னைவிட அவ் விஷயத்தில் உயர்ந்திருக்கிற பலர் இருப்பதைக் காணலாம். செல்வம், கல்வி, மானம், அறம், ஆண்மை முதலியவற்றில் எதை எடுத்துக்கொண்டாலும, "இதில் என்னைவிடச் சிறந்தவர் இல்லை" என்று இவ்வுலகில் ஒருவனுவது பாரமார்த்திகமாய்ச் சொல்ல முடியுமா? ஏதோ ஒரு விஷயத்தில் எவனுவது உலகத்திலுள்ள மற்றெல்லாரையும் பார்க்கச் சிறந்தவனு யிருக்கக்கூடும்; ஆனுல் எஞ்சிய பலப்பல விஷயங்களில் இன்னும் பலரைவிட அவன் குறைந்தவனென்பதை எவரே மறுக்கத் துணியக்கூடும்? உதாரணமாக, உலகத்திலுள்ள எல்லோரையும் பார்க்க நீயே மஹா தனிகன் அல்லது மஹா வித்வான் என்று வைத்துக்கொள்வோம். அப்படியிருந்தாலுமே மற்ற யோக்கியதைகளைப்பற்றி என்ன? மற்றப் பல அம்சங்களில் உன்னிலும் மிக மிக உயர்வுற்ருேர் ஆயிரம் ஆயிரமாக இருப்பதாகக் காண்பாய். ஆனுல் தன்னைக் குறித்து, "இதோ பார், நானே சகலவிதத்திலும் ஸர்வோத்தமன்" என்று எவனே சொல்ல வல்லான்? உன் வீட்டின் ஒரு மூலையில் உட்கார்ந்துகொண்டு உன்னிலும் உயர்ந்தவன் இல்லையென்று நீ நினைத்துக்கொள்ளலாம். ஆனுல் அந்த மூலையைவிட்டு வெளியேவந்து எங்கும் அகண்டாகாரமாய்ப் பரந்திருக்கும் 'விரிநீர் வியனுலக'த்தைப் பார். அப்பொழுது உன்னுடைய சிறுமை எவ்வளவென்பதை உணர்ந்து வெள்குவாய். ஒரு கிராமாதிபதி பட்டணத்துக்கு வருவானுயின் அவன் பெருமை பறந்துபோம். பட்டணவாசியான ஒரு பெருமகன் ராஜதானிக்கு வருவானுயின், அதன் வைபவ ஜோதி அவனை விழுங்கிவிடும்.

நாம் அண்டை அயலாரின் சுகுணங்களைக்கூட நன்கறியாமலிருத்தலால், பலகாலும் நம்மையே உயர்ந்தோர் என்றெண்ணிக் கொள்ளுகிருேம். மிக இழிந்தவரென்று நம்மால் அலக்ஷ்யம் செய்யப்படுபவர் பால் என்னென்ன

குணங்கள் உள்ளனவென்று ஆராயத் தலைப்பட்டால் நம் மிடத்தே இல்லாத அவர்களிடமட்டுமே உள்ளவை யான அத்தனை அரிய குண நலன்களைக் கண்டுழி, அவர் களை முன் இழிந்தோரெனக் கருதியதற்காகப் பச்சா தாபப்படவேண்டியும் வரலாம். எவர்களைத் தீண்டுதல் தானும் பாபமென்று பண்டு பலகால் கருதினேமோ, அவர்களிடத்தே விளங்கும் சுகுண சம்பத்தைக் கண்டு மோஹித்து அன்னவரின் தாளிணைகளைத் தொடும் பேறு பெறினுமே பிறவி ஈடேறுமெனக் கருத வேண்டியும் வர லாம். பார்க்கப்போனால் குற்றங் குறைகள் எவரிடத்தில் தான் இல்லை? இந் நிலவுலகில் எல்லாரிடத்தும் குற்றங் குறைகளும் இருக்கின்றன. குணங்களும் இருக்கின்றன. அப்படியிருக்கும்பொழுது எவர் எவருக்குக் கீழானவ ரென்று சொல்லத்தகும? என்னிடத்தே இராத குற்றங் குறைகள் உன்னிடத்தே இருக்கலாம்; அப்படியே உன னிடத்தேயுள்ள குண நலன்கள் என்னிடம் இராமலிருக்க லாம். இவ் வுலகத்து ஒவ்வொருவருடைய சரித் திரத்தையும் பரியாலோசித்துப் பார்த்தால், எவரையும் நம்மைவிடக் குறைந்தவரென்று நிச்சயிக்க முடியாது. ஒவ்வொருவரும் சில அம்சங்களில் உன்னிலும் உயர்ந்த வரா யிருக்கலாம்; மற்றுஞ் சில அம்சங்களில் உனக்குக் குறைந்து மிருக்கலாம். சிருஷ்டி வர்க்கத்தில் தன்னைப் போல் உயிர் வாழும் இன்னொருவனைப் பார்த்து, 'நீ எனக்குத் தாழ்ந்தவன்' என்று சொல்லக்கூடிய அதி காரத்தை ஆண்டவன் எவருக்கும் அளிக்கவில்லை.

நாம் பல சமயங்களிலும் பிறர் செய்கைகளை ஆராய்ந் தறியாமல் அவரிடம் தப்புக் கண்டுபிடித்து அவரைவிட நாமே சிறந்தவர் என்றெண்ணிக் கொள்ளுகிறோம். எவர் எக் காரியத்தை எந்த எண்ணத்துடன் செய்தார் என் பதை உள்ளபடியே உணர முடியாது. அன்னாரது குற்றங் குறைகளை உரத்த குரலில் தூற்றித் தூற்றி அம்பலத்தில் வைக்க மட்டும் நாம் தவறுவதில்லை. உண்மையை விசாரித் தறியாமல் குற்றங்களைத் தூற்றித் திரிவது நம்மைப் பிடித்திருக்கும் ஒரு கெட்ட வியாதி. நாம் ஒவ்வொரு வருமே பல்லாயிரம் தடவை பிறர் குற்றங்களைக் காட்டி

நம் சாமர்த்தியத்தைப் பறை சாற்றுகிறோம். ஆனால் கடைசியில் உண்மை வெளிப்படும்பொழுது, வீண் பழி சுமத்தித் தூற்றினேமேயென வெட்கி வருந்தவேண்டி வருகின்றது. ஒருவன் இன்னொருவனைக் கொல்வதை நீ தூரத்திலிருந்து பார்த்தாலும் அல்லது அவ்வாறு நிகழ்ந்ததாகக் கேள்வியுற்றாலும், அந்த க்ஷணமே அவசரப்பட்டு அவனைக் கொலை பாதகனென்றும சண்டாளனென்றும் தீர்மானித்துவிடுவது பெரும் பிழையாகும். நீ எவனைக் கொலைபாதகனென்றும் சண்டாளனென்றும கருதினையோ, அவன் வானுறையும தெய்வத்தன்மை வாய்ந்த சுத்த வீரனாய் இருக்கக்கூடும். திக்கற்ற ஒரு பதிவிரதையை ஒரு ஈராதமன் கற்பழிக்க முயன்றிருக்கலாம. அப்பொழுது அவ் வுத்தமியைக் காப்பாற்ற வேறு வழியின்றி, இவன் இறுதியில் அந் ஈர பிசாசத்தை எமனுலகு செலுத்த வேண்டியதாய் நேரிட்டிருக்கலாம். அக் கற்பரசியின் மான ஸம்ரக்ஷணத்தின் பொருட்டு அவ்வீரச் செயலைப் புரியத் துணிந்தவன் கொலைபாதகனா, சண்டாளனா, அல்லது தேவதுல்லியனா? நீயோ பிரமை வயப்பட்டவனாய் அவனைக் கொலைபாதகன், சண்டாளன் என்று சொல்லத் துணிந்தாய். ஒருவனுடைய நடத்தையைப்பற்றி நாம் தீர விசாரித்தறியும் முன்னமே ஒருவிதமாயத் தீர்மானிக்க நமக்கு உரிமையில்லை யென்றும், ஒவ்வொரு விஷயத்திலும், அப்படி விசாரித்தறியும் வரையில் எவர் எவருக்குத் தாழ்ந்தவரென்று கூறுவது மிகக் கஷ்டமானதென்றும் இதனால் பெறப்படுகிறது. இவ் விஷயத்தைக் குறித்துத் 'தாபஸ மாலை' என்னும் கிரந்தத்தில் ஒரு மனோஹரமான கதை உண்டு. அதை இங்கே உதாஹரிக்கிறேன்.

ஹுஸேன் பஸோரி என்னும் தாபஸன் (தவசி) ஒருகால் தஜ்லா ஆற்றங்கரை வழியாய்ப் போய்க்கொண்டிருக்கையில், ஒரு காபிரி (நிகிரோவன்) ஒரு ஸ்திரீயுடன் உட்கார்ந்து ஒரு சீசாவிலிருந்து எதையோ குடிப்பதைக் கண்டான். உடனே அந்தத் தாபஸன், இவன் ஒரு கெட்ட ஸ்திரீயுடன் சேர்ந்து சுராபானம் செய்துகொண்டிருப்பதாகத் தீர்மானித்துத் தான் ஸ்திரீ ஸஹிதமாய் ஒரு

போதும் சுராபானம் செய்ததில்லாமையால் அவனைவிடத் தான் உயர்ந்தவனென்று தனக்குள்ளே எண்ணிக்கொண்டான். இவ்வெண்ணத்தால் மனம் குழம்பிக் கொண்டிருக்கையில், ஆற்றில் வந்து கொண்டிருந்த ஒரு படகு கொந்தளிக்கும் அலைகளால் மோதப்பட்டுக் கவிழ்ந்துபோவதை அத் தாபஸன் கண்டான்; காபிரியும் கண்டான். காபிரி அதைப் பார்த்ததும் உடனே ஆற்றில் குதித்து, முழுகிப் போகிறவர்களில் அறுவரைக் காப்பாற்றிக் கரையேற்றினான். தாபஸன் அதைக் கண்டு பிரமித்து, அந்தக் காபிரியின் தெய்வத் தன்மையைக் கொண்டாடி அவனை வாய் கொண்டமட்டும் வாழ்த்தினான். பிறகு அவ் விருவரும் பேசிக்கொண் டிருக்கையில் காபிரியின்கூட இருப்பவள் அவனுடைய தாயாரேயன்றி வேறொருத்தியும் அல்லளென்றும், சீசாவிலிருந்து பருகியது தெள்ளிய நீரே யன்றிக் கள் அல்லவென்றும் தெரியவந்தது. கடைசியில் காபிரியானவன் ஹுஸேனை நோக்கி "நீ கண் படைத்தவனா அல்லது குருடனாவென்று பார்த்துக் கொண்டிருந்தேன். குருடனே என்று தெரிந்துவிட்டது" என்றான். ஹுஸேன் வெட்கமுற்று அவன் காலில் விழுந்து, "என்னை மன்னிக்கவேணும், உள்ளபடியே நான் குருடன்தான். அண்ணா, சீற்றங்கொண்ட ஆற்றிலிருந்து நீ அறுவரைக் காப்பாற்றிக் கரை யேற்றினாய். இப்பொழுது என்னையும் அகங்காரமென்னும் ஆற்றின் சுழலிலிருந்து காப்பாற்றியருள்வாய்" என்று அக் காபிரியை வேண்டிக்கொண்டான். அது நிகழ்ந்த பிறகு ஹுஸேன் ஒருகாலும் தன்னைப் பிறரைக் காட்டிலும் உயர்ந்தவனாகக் கனவிலும் கருதி யறியான். ஒரு நாள் யாரோ சிலர் ஒரு நாயை அவனுக்குக் காட்டி, "நீ உயர்ந்தவனா, அல்லது இந்த நாய் உயர்ந்ததா?" என்று கேட்க, அவன், "நான் நன்னெறி கடைப்பிடித்து ஒழுகிக்கொண் டிருக்கும்வரையில் நான் நாயைவிட உயர்ந்தவனே; அப்படிக்கில்லாவிட்டால், என்னைப்போன்ற நூறு ஹுஸேன்களையும் பார்க்கிலும் இந்த நாயே உயர்ந்தது" என்றான். நமக்குள் ஒருவனாவது எழுந்து நின்று, "நான் குற்றமற்ற அறவொழுக்கமுடையவன்" என்று சொல்லக்கூடியவன் உண்டோ?

4. வையகத்திடம் நமக்குள்ள ஸம்பந்தத்தையும், அதனால் ஏற்படும் கடமைகளையும் பொறுப்புகளையும் பற்றி நாம் சிந்திக்குமிடத்தே, நமது ஆற்றலின்மை நன்கு உணரப்படும். இவ்வுணர்ச்சி நம்முடைய அகங்காரத்தை அடக்குவதற்கு உற்ற துணையாகும். இனி நாம் செலுத்த வேண்டிய கடமைகளுமே அற்ப சொற்பமா? நமது சொந்த சரீரத்துக்கும் மனத்துக்கும், நம் குடும்பத்துக்கும் சமூகத்துக்கும், சுதேசத்துக்கும் இவ் விரிந்த வையகத்துக்கும் என நாம் செலுத்த வேண்டிய எத்தனை கடமைகளில்லை? இவற்றையெல்லாம் திறம்படச் செலுத்த வேண்டுமெனில் நாம் முறை தவறாமல் அநுஷ்டித்து வர வேண்டிய தர்ம சீலங்கள் எத்துணை ஏராளமாயிருக்கின்றன! அவற்றைக் குறித்து நினைக்கும் க்ஷணமே நெஞ்சம் துடிதுடிக்க, மனம் தடுமாறித் தத்தளிக்கின்றதே. இந்த நிலைமையில் வல்லாண்மை பேசவும் நமக்கு வாயுண்டோ? நாம் மாநுஷ ஜன்மம் எடுத்த போதே, மாநுஷத்துவத்தை ஸாதிப்பதற்காக ஆண்டவன் சில சக்திகளை நமக்கு அருளியிருக்கிறபடியால், நாம் அம் மாநுஷ நாமத்துக்கு உபயுக்தமான காரியங்களைச் செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம். அவற்றை எம்மட்டுக்குச் செய்திருக்கிறோம், எம்மட்டுக்குச் செய்ய வல்லோம் என்பதை ஸ்திர சித்தத்துடன் யோசித்துப் பார்த்தால், நமது சிறுமை நம் கண் முன் வந்து நிற்கும். அப்பொழுது அகங்காரம் நம்மை அணுகவும் இயலாது. எத்தனையோ வரப்பிரஸாதம் பெற்றவர்கள், கடல் போல் பரந்த ஞானமும் பிரேமையும் பிரதாபமும் படைத்த எத்தனையோ மஹாநுபாவர்கள் தமக்கு அளிக்கப்பட்டிருந்த சக்திகளைத் தாம் அவற்றைப் பிரயோகித்த விதத்தோடும், தாம் செய்து முடித்த காரியங்களைத் தாம் செய்யாதுவிட்ட காரியங்களின் தன்மையோடும் அளவோடும் ஒப்பிட்டுப் பார்த்து, அவர்களில் ஒவ்வொருவரும், "ஐயோ! நான் ஒன்றுக்கும் உதவாதவன், என்னால் ஒன்றுமே ஆகவில்லை. நான் ஒன்றுமே செய்யவில்லையே," என்று இவ்வாறு எவ்வளவோ வருத்தத்துடன் ஏங்கிப் புலம்பியிருக்க, நிறைந்தவனையாகிய உன்னால் எந்த முகத்தைக் கொண்டு உன் அற்ப ஞானத்தையும், அற்ப பிரேமையையும்,

அற்பபிரதாபத்தையும் பற்றிப் பெருமை பேச முடியும்?

உன்னுடைய கடமைகளையெல்லாம் நீ நேர்மையோடு செலுத்தி விட்டதாகவே வைத்துக்கொள்வோம். அப்பொழுதுகூட நீ அகங்கரிக்கக்கூடிய விசேஷம் அதில் என்ன இருக்கிறது? ஒருவன் செலுத்தித்தீர வேண்டிய கடமைகளைச் செய்து முடித்து விட்டதில் பௌருஷம் என்ன இருக்கிறது? அவற்றைச் செய்யாதிருந்தால்தான் சவுக்கடி யாயிற்றே. மகனை வளர்த்துப் போஷிக்க வேண்டுவது தந்தைக்குற்ற கடமை. அந்தக் கடமையைச் செய்து விட்டேனென்று எந்தத் தந்தையாவது எப்போதாகிலும் அகங்காரப் பட்டிருக்கின்றானோ? மனைவி கணவனுக்கு பய பக்தியோடு அமைந்து அன்புடன் பணிவிடை புரிந்ததற்காக அவள் அகங்காரம் கொள்ளலாகுமோ? அல்லது தந்தையைத் தள்ளாத வயதில் அன்னமிட்டுக் காப்பாற்றிய மகன் தான் கனகாரியம் செய்துவிட்டதாகக் கர்வங் கொள்வது பொருந்துமா? செய்ய வேண்டியதைச் செய்யாமலிருப்பது அதர்மமேயொழிய, அதைச் செய்ததற்காகக் கர்வங் கொள்ள என்ன இருக்கிறது? ஞானத்தையும் பிரேமையையும் எவ்வளவு மட்டும் உயர்வுறச் செய்ய வேண்டுவது கடமையோ, அவ்வளவு மட்டும் செய்ய இயலாமற் போய் விட்டதேயென்று வருந்துவதற்கு ஒருகால் இடமிருக்குமேயன்றி, விதிப்படி நீ செய்யக் கடமைப்பட்டிருப்பதைவிட அதிகமான தொன்றையும் நீ செய்யாதிருக்கையில், பெருமை பாராட்டிக்கொள்ள என்ன வைத்திருக்கிறது? நமக்கு ஆண்டவன் என்னென்ன சக்திகளை அளித்திருக்கிறானோ அவற்றைப் பிரயோஜனகரமாய் உபயோகியாத விடத்தே தண்டிக்கப்பட உரியராவதற்கு இடமுண்டேயன்றி, அவற்றைச் சரியான வழியில் உபயோகித்தால், நம் கடமையை நிறைவேற்றினதாக மாத்திரமே ஏற்படுமாதலால், அதைப்பற்றி அகங்காரம் கொள்வதற்குச் சிறிதும் நியாயமில்லை.

கடந்து போன காலத்தில் நம் வாழ்க்கையில் நிகழ்ந்த தவறுகளைப் பற்றியும் வீழ்ச்சிகளைப் பற்றியும் சிந்தித்துப்

பார்த்தல் வேண்டும். அப்படிப் பார்த்தால் கர்வ பங்கமுறாதவர் எவருமே இரார். சென்ற காலத்தில் தான் நிகழ்த்திய வாழ்க்கையை ஆராய்ந்து பார்த்த பிறகும் கர்வத்துடன் நிமிர்ந்து எதிர் காலத்தை நோக்கி முன் செல்லக்கூடிய எவனையும் காண்பதரிது.

5. அகங்காரத்துக்கு விஷயமாயுள்ள பொருளின் நிலையாமையைப் பற்றிச் சிந்திக்குமிடத்தே அவ் அகங்காரம் குறைந்து போம். இந் நிலவுலகில் எவர் எவ்விஷயத்தைப் பற்றி எவ்வளவுதான் அகங்கரித்தபோதிலும், அவ் அகங்காரமனைத்தையும் மரணம் ஒரு நாளில் ஒழித்துவிடும். மரணத்தின் பெயரை எடுப்பானேன்? மரணத்துக்கு முன்னமும் கர்வபங்கமுற்றவர்களை நாம் பார்க்கலாம். எத்தனை பேர் அறிஞர் மூர்க்கராகவில்லை எத்தனை பேர் தனிகர் பிச்சைக்காரர் ஆகவில்லை? எத்தனை மானியர் அவமானமடையவில்லை? எத்தனை பேர் பிரதாபசீலர் பிறர் காலில் விழுந்து வணங்கவில்லை? பிரதாபத்தில் ஈடும் எடுப்புமற்றவனாய் விளங்கிய நப்போலியன் போனபார்த்—* நயபால புவந ப்ரதாபன் ஸாந்த ஹெலெனா எனும் தீவில் சிறைப்பட்டிறக்கவில்லையா? அதிகாரச் செருக்குற்றிருந்த கார்டினல் வூல்ஸி கிழப் பருவத்தில் எவ்வளவோ அவமானங்களைச் சகிக்க வேண்டி வரவில்லையா? அறிஞருள் தலை சிறந்த அகஸ்த் கோம்தெ என்பவன் மூளை கலங்கி வெறியனாகவில்லையா? சுரூபம் இரண்டு நாளையில் குரூபமாய் விடுகிறது. அகங்காரத்துக்கு விஷயமாகக் கூடிய எதையும் நிலையானதென்று நம்ப முடியாதிருக்கையில் வேறெதைக் கொண்டு நாம் அகங்கரித்தலாகும்?

6. எவ்விடத்தில் நம்முடைய குணங்களைப் புகழ்ந்து கொண்டாடுகிறார்களோ அவ்விடத்திலிருந்து அகன்று போய் விடுவதே சர்வோத்தமம். நம்முடைய குணங்

---

* சுமார் 42-வருஷத்துக்கு முன் காலஞ் சென்ற மஹா கவி ராமஸ்வாமி ராஜு என்கிற பாரிஸடர் ஸம்ஸ்கிருதத்தில் இயற்றிய சிறந்த மஹேதிஹாஸமாகிய ராஜாங்கல மஹோத்யானத்திலே இந்த ப்ரெஞ்சு மஹா வீரனுடைய பெயரை இவ்வாறு ஸம்ஸ்கிருதமாக்கியிருக்கிறார்.

களின் புகழ்ச்சிப் பாட்டைக் கேட்டல் அகங்காரத்துக்குப் பிரதான போஷகமாகும். ஆகையால் சாதுக்கள் தங்கள் குணங்கள் புகழ்ந்து போற்றப்படும் இடங்களில் தங்கியிரார்.

அப்படிக்கன்றி, நம்முடைய குற்றங் குறைகளை நாமே பஹிரங்கமாய் எடுத்துரைப்பது நமக்கே பேருபகாரமாகும். நமக்கு இன்ன இன்ன விஷயங்களில் அகங்காரம் இருக்கிறதென்று பிறரிடம் எவ்வளவு பஹிரங்கமாய்ச் சொல்லுகிறோமோ அவ்வளவுக்கு அகங்காரம் தலைகாட்டாதிருக்கப் பார்க்கும். தாழ்மையுடன் சான்றோர் முன் நம் அகங்கார விஷயங்களை வெளிப்படையாக விண்ணப்பித்து அன்னாரிடமிருந்து உரிய தண்டனையைப் பிரார்த்திப்பது அகங்காரத்தை அடக்குவதற்கு மஹௌஷதமாகும், ஒரு நாள் ஒரு சாதகன் போயஜித் என்னும் முஸ்லிம் தாபஸனிடம் வந்து " நான் முப்பது வருஷ காலமாய் பிரதி தினமும் 'ரம்ஜான்' விரதம் அநுஷ்டித்து வருவதன்றி இரவில் கண் விழித்துத் தவங் கிடக்கிறேன். இவ்வளவெல்லாம் செய்தும் அத்யாத்ம தத்துவ ஞானம் எனக்கு உண்டாகமலிருக்கிறதே, இதற்குக் காரணம் என்ன?" என்று கேட்கப் போயஜித்து—"முப்பது வருஷமல்ல, முப்பது நூறாண்டு இந்தப்படி ஸாதனம் செய்து வந்தாலும் யாதொரு பலனும் உண்டாகாது," என்று விடையளித்தான். "ஏன்?" என்று அவன் கேட்கவும், போயஜித்து 'ஏன் என்றால் நீ உன் வாழ் நாளை ஒரு வகையான போர்வையால் மூடிவிட்டிருக்கிறாய்;' என்று சொல்லவே அந்த ஸாதகன்-"இதற்குப் பரிஹாரமென்ன?" என்று கேட்டான். அதற்குப் போயஜித்து இவ்வாறு பிரதி யுத்தரம் அளித்தான். "இப்பொழுது புறப்பட்டுப் போய்த் தலையை மொட்டையடித்துக்கொள். சௌந்தரியோத் தீபகமான-அழகுணர்ச்சியை மூட்டத்தக்க-அலைத்தையும் அங்கத்தினின்று களைந்துவிடு. இப்பொழுது நீ அணிந்திருக்கும் ஆடையை எடுத்தெறிந்து விட்டுக் கம்பளியைக் கட்டிக்கொள். பிறகு இந்த நகரில் உன்னை எல்லோரும் அறிந்திருக்கும் படியான ஒரு பேட்டைக்குச் சில விளையாட்டுப் பொருள்

களை எடுத்துக் கொண்டுபோ. போனதும் அங்குள்ள பிள்ளைகளை அழைத்து, "எவன் என்னைக் கழுத்தைப் பிடித்து ஒரு தரம் தள்ளுகிறானோ, அவனுக்கு ஒரு விளையாட்டுச் சாமான் தருவேன். இரண்டு தரம் தள்ளுகிறவனுக்கு இரண்டு விளையாட்டுச் சாமான்" என்று இப்படிச் சொல்லிச் சில பிள்ளைகளால் அர்த்த சந்திரப் பிரயோகம் அளிக்கப் பெற்றுக்கொண்டு பட்டணத்தின் பேட்டை ஒவ்வொன்றிலும் இப்படியே அலைந்துதிரி, எந்தப் பேட்டையில் உனக்கு அதிகமான அவமானம் செய்யப்படுகிறதோ, அதில் ஸ்திர வாஸம் வைத்துக்கொள். இதுவே உன் விஷயத்தில் மஹௌஷதமாய் உதவும்," என்றான். உள்ளபடியே அகங்காரத்தை ஒழிப்பதற்கு இதைப் பார்க்கிலும் மேலான மருந்தில்லை. கர்வமாகிற போர்வையை எடுத்தெறிந்துவிட்டு, முன் எவரெவரிடம் நம் பெருமைகளை எடுத்துரைத்து அகங்கரித்தோமோ, நம்மை வியந்து பணியும்படி எவரெவருக்கு உபதேசித்தோமோ, அவ்வெல்லாரிடத்துமே நம் குற்றங்களைத் தீனத் தன்மையுடன் வெளிப்படுத்தி, அவர்களிடமிருந்தே அலட்சிய பாவத்தையும் அவமானத்தையும் நாடித் தேடினால் அப்போது அகங்காரம் எப்படிப் பறந்துபோய்விடும். ஆனால் எல்லாரிடத்திலும் தன் குற்றங்களை நேர்மையுடன் சொல்லிக் கொள்வதனாலேயே, 'நான் எவ்வளவு நேர்மையுள்ளவன்! எவரெவரிடத்தில் என் குற்றங்களை எடுத்துச் சொல்லுகிறேனோ, அவர்களெல்லோரும் என்னை எவ்வளவு நேர்மை யுள்ளவனென்று நினைக்கிறார்கள்!' என்று மீண்டும் அகம்பாவம் உண்டாகலாம். அத்தகைய எண்ணம் உதித்தவுடனே அதையும் அவர்களிடம் வெளிப்படையாய்த் தெரிவித்துவிட வேண்டும். இப்படியே இடைவிடாமல் செய்து வந்தால் அகங்காரம் நம் உள்ளத்தில் குடிகொள்ள இடமில்லாதுபோம். போகவே இருதயம் தூய்மை யடையும், வாழ்க்கையும் விழுப்பமுடையதாகும்.

இதுகாறும் கூறி வந்தவை அகங்காரத்தை ஒடுக்குவதற்கும் ஒழிப்பதற்குமான சில விசேஷோபாயங்களாம். ஆனால் சகல விதமான பாபங்களையும் பரிஹரிக்கும்

பொருட்டு எற்கனவே சொல்லப்பட்ட ஸாதோரணோபாயங்களை மறந்து போகக்கூடாது, அகங்காரத்தை அழிப்பதற்கு அந்த ஸாதாரணோபாயங்களையும் கருத்தில் வைக்க வேண்டும்.

6. மாத்ஸர்யம்

1. 'மாத்ஸர்யம்' அல்லது 'மாச்சரியம்' என்றால் பொறாமை என்பதாம். அழுக்காறெனப்படுவதும் அது. மாத்ஸர்யத்தை ஒழிப்பதற்கு மேலான மருந்து பிரேமை யேயாம். தன் நண்பனைப்பிரேமிக்கிற ஒருவன் அந் நண்ப னது செல்வத்தைக் கண்டு ஒருகாலும் பொறாமை கொள் ளான்;மற்றுத் தன் பிரேமைக்குப் பாத்திரமானவனுடைய செல்வப் பெருக்கு அவனுக்கு மகிழ்ச்சியையே தரும். ஆகையால் எவனுடைய செல்வத்தைக் கண்டு உனக்குப் பொறாமை உண்டாகிறதோ, அவனுடைய சத்குணங்களைக் குறித்து நீ ஆலோசிக்கும் பக்ஷத்தில், அவை உன் உள்ளத் தைக் கவர்ந்து அவன்பால் உன் பிரேமையைத் தூண்டி விடும். அதனால் உன் பொறாமை அகலும். அவ்வாறே எவ்வ ளவுக்கெவ்வளவு நீ பிறர்பால் உன் பிரேமையை விரியச் செய்கிறாயோ, அவ்வளவுக் கவ்வளவு உன் பொறாமையும் குறுகும். ஆகையால் எவர்பால் உன் உள்ளத்தில் எவ வகையான பொறாமை யுணர்ச்சியாகிலும் ஜனிக்கிறதோ, அவரிடத்தில் எல்லா விதத்திலும் நட்புரிமை விளைக்கச் செய்ய முயல வேண்டும்.

2. குறுகிய நெஞ்சம் பொறாமையை வளர்க்கும் நாற்றங்காலாகும். உலகத்தில் கிடைக்கக்கூடிய சுகம், சம்மானம், சம்பத்து அனைத்தையும் இவன் அநுபவித்து விடுகிறானே, என்பொருட்டு ஒன்றுமில்லையே என்று எண்ணுகிறவன் பிறர் ஆக்கத்தைக் கண்டு உள்ளபடியே வருந்தவே செய்வான். ஆனால் எவன் விரிந்த நோக்குடன் இவ்வகன்ற பிரபஞ்சத்திலே அகத்திலும் புறத்திலும் மக்கள் இன்பமும் பெருமையும் செல்வமும் அடைவதற் கேற்ற வழிகள் அளவற்றனவா யிருக்கின்றன வென்றும், ஒவ்வொருவனுக்கும் உலகத்தில் ஏதோ ஒரு வகையில் உயர்வடைவதற்கு அதிகாரமும் ஆற்றலும் உண்டென் றும் உணர்கிறானோ, அவனுடைய நெஞ்சத்தில் பொறாமை அரசு செலுத்த முடியாது. உதார இயற்கைவளர வளர, மாத்ஸர்யம் ஒழிந்தேபோம்.

3. பரநிந்தை மாத்ஸர்யத்துக்குத் தலைமையான கூட்டாளி. நெஞ்சகத்தே எவ்வளவுக்கெவ்வளவு மாத்ஸர்யத்தின் அதிகாரம் வளர்கிறதோ, அவ்வளக் கவ்வளவு பரநிந்தை நாவின் நுனியில் கொண்டான் அடித்துக் கூத்தாடும். பரநிந்தையின பயிற்சியும் பிரவிர்த்தியும் குறையக் குறைய, மாத்ஸர்யமும் அந்த அளவுக்குச் சிதைவுறும். இத் தீய வழக்கத்தை அடக்குவதற்கு இரண்டு வழிகள் சிறப்பாய்ப் பயனளிப்பனவாகும். முதலாவது, சிந்திக்கிறவன் தன் குற்றங்களை மறவாமல் எப்போதும் நினைவில் இருத்த வேண்டும். தன் குற்றங்களிடத்து எப்பொழுதும் விழிப்பாயிருப்பவன் பிறரைப் பழிப்பதற்கு ஒருகாலும் ஆக்ரஹம் கொள்ள மாட்டான். ஏனெனில், தன் குற்றங்களை உணர்ந்தபோதே அவன் முகம் கரிந்துபோகுமாகையால், பிறர் குற்றங்களை எடுத்துப் பேச அவனுக்கு வாய் ஏது? இரண்டாவது, பிறருடைய குற்றங்களைத் தேடுவதை விடுத்து, அன்னாருடைய குணங்களைத் தேடித் தேடி அக் குண கீர்த்தனத்தில் பிரவிர்த்தியும் பயிற்சியும் வளர வளர, அந்த அளவுக்குப் பரநிந்தைப் பிரவிர்த்தி குறைந்து போம். பரகுண கீர்த்தனம் செய்வோருடன் சகவாசம் வைத்துக் கொள்வது இவ் விஷயத்தில் மிகப் பிரயோஜனகாமாகும். மிக இழிந்த பாதகனுடைய வாழ்க்கையையும் ஆராய்ந்து பார்த்து, அவனுடைய நற்குணங்களைக் கொண்டாடுவதனாற்கூட நம் உயிருக்கு ஓர் ஆனந்தப் பூரிப்பு உண்டாகும். குறிப்பாக எவனையாவது பழித்துப் பேச வேண்டுமென்று உனக்கு ஆவல் உண்டாகுமிடத்தே அவனுடைய இயற்கையில் என்ன குணங்கள் இருக்கின்றனவென்று ஆழ்ந்து ஆராய்ந்து கொண்டேயிரு; சில நற்குணங்கள் தவறாமல் காணப்படும். உறவினருடனும் நண்பர்களுடனும் அவனைப் பற்றிப் பேசும்படி நேரும்போதெல்லாம், அந் நற்குணங்களைச் சிறப்பாய்க் குறிப்பிட்டு அவற்றின் பெருமையைப் பறைசாற்று. இவ்வாறு செய்து கொண்டே வந்தால், பரநிந்தை செய்ய வேண்டுமென்கிற இச்சை படிப்படியாய் அகன்று போய்விடும். அதோடு பிறரின் நற்குணங்களைக் கருதுவதால் உண்டாகும் அபூர்வ ஆனந்தத்தை அநுபவிக்கவும் வல்லவனாவாய்.

4. தூய வாழ்வு வாழ வேண்டுமென்னும் தீவிரமான ஆவல் உயிரில் வேகமாய்ப் பாயுமாறு முயன்று வர வேண்டும். தூய்மையும் சுகுண சுசீலங்களும் பயில வேண்டுமென்னும் தீவிர இச்சையுடையவனது நெஞ்சத்தில் பொறாமை நுழைய இயலாது. ஏனெனில் எவ்வகையான முன்னேற்றத்துக்கும் நன்மையைக் கடைப்பிடித்தலும் பொறாமையை ஒறுத்தலும் இன்றியமையாதனவாம். முன்னேற்றத்தை முனைந்து நாடுகிறவன் சுகுண சுசீலங்கள் எங்கு காணப்பட்டாலும், அவற்றை உற்று நோக்கிக் கிரஹிக்க வேண்டியவனாகையாலே, குதிருஷ்டியுடன் பிறரது குற்றங் குறைகளில் தலையிட்டுத் துருவிப் பார்க்க அவனுக்கு நேரமில்லை. பொறாமை கொண்டு தப்பு கண்டு பிடிக்கிறவனே அன்னாருக்குத் தீமை இழைக்கும்பொருட்டே தவித்துக் கொண்டிருப்பானாகையால், அப்படிப்பட்டவன் நன்னிலைக்கு வர அவகாசமேது?

நன்னிலைக்கு உயர வேண்டுமென்னும் விருப்பம் எவனது நெஞ்சத்தில் தீவிரமாய் உண்டாகிறதோ, அவன் பிறரது நன்னிலையைக் கண்டவளவில் அந் நன்னிலையைத் தன் வாழ்க்கையிலும் கொண்டு வரவே முயல்வான். அவன் பிறரைத் தாழ்த்தித் தனக்குச் சரிசமானராக்கிக் கொள்ளாது, தானே உயர்நிலையடைந்து அன்னாருக்குச் சமானனாவதற்கே முயல்வான். பொறாமைக்கு அடிமை பூண்டிருப்பவன் தான் அடைய வேண்டிய மேல் நிலையை மறந்து, பிறரைத் தாழ் நிலைக்குக் கொண்டு வரவே விரும்புவான். பொறாமைக் கிடங் கொடாதவனோ, பிறரைத் தாழ்த்தி எனக்குச் சமானராக்கிக் கொள்வதைவிட நானே மேல் நிலைக்கேறி அவர்களுக்குச் சமானமாக ஏன் ஆகக்கூடாது?'' என்றே எண்ணுவான். அன்னவன் பொறாமை என்னும் பெயரைக் கேட்கவும் வெள்குவன்.

5. இனிப் பொறாமையினால் விளையும் தீமைகளைப் பற்றிச் சிந்தித்தலும் அப் பொறாமையை அடக்குவதற்கு ஒரு சிறந்த வழியாகும். பொறாமைத் தீயில் தன் ஆவியை அவியாய்ச் சொரிகிறவனது நிலை மிகவும் விசனிக்கத் தக்கதே, இவ்வுலகில் மக்களின் இருதயத்துக்கு ஆனந்த

மளிப்பதெல்லாம் பொறாமை கொண்டவனது மனத்துக்கு அத்தியந்த வேதனையையே உண்டாக்குகிறது. அழகு, இன்பம், பேராண்மை, நற்குணம் இவற்றைக் கண்ட வளவில் எவருக்கே ஆனந்தமுண்டாகாது? ஆனால் அவை களே பொறாமைக் குணமுள்ளவனது உள்ளத்தில் நரகத் தீயை மூட்டுவனவாயிருக்கின்றன. நன்மை எவனுக்குத் தீமையோ, அமிர்தம் எவனுக்கு விஷமோ, ஸ்வர்க்கம் எவனுக்கு நரகமோ, பூர்ண சந்திரோதயம் எவனுக்கு அமாவாசை யிருட்டோ அவனுடைய துக்ககரமான நிலைமையை யாரே வர்ணிக்க வல்லார்? ஒரு மஹா புருஷனுடைய பெருமைகளை ஆயிரம் பேர் புகழ்ந்து கொண்டாடி, அப்படிச் செய்வதால் தங்களை பாக்கிய வான்களென நினைத்துக் கொள்கிறார்கள். பொறாமை கொண்டவனோ அப் புகழ்ச்சிகளைக் கேட்ட மாத்திரத்தில், அவனுடைய பிராணன் பொறுக்க முடியாத வேதனையால் துடிதுடிக்கிறது. இவனைவிடத் துர்ப்பாக்கியனாக ஒருவன் இருக்க முடியுமா? யோசித்துப் பாருங்கள்.

குற்றங் கருதுவதையும் குற்றங் காண்பதையுமே தொழிலாய்க் கொண்ட ஒருவன் எவ்வளவு துர்ப்பாக்கிய னாய் இருக்க வேண்டுமென்பதை நினைக்கும்போதே மனம் திடுக்கிட்டுப் போகிறது. சந்திரனிடத்துக் களங்கத்தை தவிர வேறு ஒன்றும் காண முடியாதவனையும், புஷ்பத்தில் புழுவையன்றிப் பிறிதொன்றையும் பாவிக்க முடியாத வனையும், தாமரைத் தண்டில் முள்ளைத் தவிர மற்றொன்றை யும் அறிய முடியாதவனையும் போன்ற துக்க வாழ்க்கை யுடையவன் இவ்வுலகில் வேறு எவரேனும் உண்டோ? பொறாமை கொண்டவனுடைய நெஞ்சம் எப்போதும் மேகத்தால் மூடப்பட்டதாய், முட்கள் அடர்ந்ததாய், துயரம் நிரம்பியதாய் இருக்கிறது. ஆண்டவன் நம் எல்லோரையும் பொறாமையின் மோஹத்திலிருந்து காத் தருள்வானாக.

பொறாமையானது ஆலால விஷத்தைப்போல் எலும்பு வரையில் பாய்ந்து நெஞ்சத்தை அல்லற் படுத்துகின்றது. பொறாமை கொண்டவனுக்கு அல்லும் பகலும் துக்கானு பவமே கதி. அவன் பாடு எப்போதும் கஷ்டமே. அவனது

தேகாரோக்கியம் சிதையும்; மனம் துர்ப்பலமாய் விடும், செய்ய வேண்டிய காரியங்களைச் செய்ய அவனுக்கு இச்சை யுண்டாகாது, சித்த ஸ்வாதீனமும் தப்பிப்போம்.

இவ்வுலகத்திலுள்ள வாத விவாதங்களெல்லாம் பெரும்பாலும் பொருமை மூலமாகவே உண்டாவதைக் காணலாம். எத்தனையோ வியக்திகள் (தனி யாட்கள்) எத்தனையோ ஜாதிகள் பொருமைத் தீயில் நீருய் போயிருக்கின்றனர்.

6. இன்னும் ஒரு செய்தியை மனத்தில் வைத்துக் கொண்டால், பொருமைக் கிடம் கொடுக்க வெள்ளு வோம். பேர்போன ஆங்கில அறிஞராகிய பேக்கன் பிரபு இவ்வாறு கூறுகிருர்-“ எவனுக்குச் சுயமாய் யாதொரு நற்குணமும் இல்லையோ, அவன் பிறருடைய குண நலங்களைக் கண்டு பொருமை கொள்வான். மக்க ளின் மனம் தம் சுய நலத்தையோ அல்லது பிறர் தீமை யையோ உணவாகக் கொண்டிருக்கும். எவனுக்கு இவற்றில் ஒன்றில்லையோ, அவன் மற்றதின்மேல் பாய் வான். எவனுக்கு இன்னொருவனுடைய குண நலத்தை அடைய முடியுமென்ற நம்பிக்கை யில்லையோ, அவன் மற்றவனை இழுத்து வீழ்த்தித் தனக்குச் சமானனுகப் பண்ணிவிடவே முயல்வான்.” உள்ளபடியே மிகவும் இழிந்துள்ளவனைவிட வேறெவனும் பொருமைக்கு இடங் கொடான். தானும் உயர்நிலை யடையச் சக்தியற்றவ னைப் பிறரது உயர்வையுங் கண்டு சகிக்கமாட்டாதவனுய் இருப்பவனே பொருமை கொள்வான். உயர்நிலை அடை யக்கூடிய ஆற்றல் படைத்தவன் பிறரது உயர்வைக் கண்டு தானும் உயர்ந்து அவர்களுக்குச் சமானனுக முயல்வான்? அவன் ஒருபோதும் பிறருக்குக் கேடு சூழ விரும்பான். தான் உயர்ந்து பிறருக்குச் சமானனுகக் கூடிய சக்தி யற்றவனே அப்பிறர் காலக்கிரமத்தில் தாழ்வடைந்து தனக்குச் சமானராய் விடவேண்டுமென்று விரும்புவான். இழிந்த வலியற்ற இருதயமே பொருமைக்கு உறைவிடம் என்பதை உணருமிடத்தே, பொருமைக்கு வசப்படாமல் தப்பலாம்.

7. யதேச்சாப் பிரவிர்த்தி

1. மனத்தை அடக்காமல் விட்டு விடுவதிலிருந்து யதேச்சாப் பிரவிர்த்தி உண்டாகின்றது. மனம் அடங்கினால், யதேச்சாப் பிரவிர்த்தியும் ஒடுங்கும். தினசரி வாழ்க்கையில் சில விதி நியமங்களை ஏற்படுத்திக் கொண்டு அவற்றைத் தவறாமல் அநுஷ்டித்து வருவதே மனத்தை அடக்குவதற்குச் சிறந்த வழியாம். பிரதிதினமும் இன்ன வேளையில் இன்ன காரியம் இன்ன விதமாய்ச் செய்வதென்று ஸ்திரப்படுத்திக் கொண்டு அப்படியே நிறைவேற்றி வந்தால், மனம் அடங்கும், யதேச்சாப் பிரவிர்த்தியும் அகலும். மனத்துக்கு எப்பொழுது எது தோற்றுகிறதோ அப்பொழுது அதைச் செய்வதும், குறித்த ஒரு நேரத்தில் ஒரு காரியம் செய்வதென்று நிர்ணயித்திருக்க, மற்றொரு காரியத்தை முன்னிட்டு அதை உபேக்ஷை செய்வதும், இன்ன வேளையில் இன்ன காரியம் செய்ய வேண்டுமென்ற நிர்ணயமில்லா திருத்தலும், ஆக இவ்வாறு வாழ்நாளைக் கழிப்பவர் யதேச்சாப் பிரவிர்த்தியை அகற்றுவது கஷ்ட சாத்தியம். ஆகவே தினசரி காரியக் கிரமம் ஒன்றை நிர்த்தாரணம் செய்து கொண்டு அதைக் கண்டிப்பாய்ப் பின்பற்றி நடப்பதே மிகப் பயன் தருவதாகும். செய்கடன்களை அவற்றிற் கெனக் குறிக்கப்பட்ட காலங்களிலே செய்தே தீர வேண்டுமென்று தனக்குள் தீர்மானித்துக் கொள்ளவேண்டும். இன்றிரவு எட்டு மணிக்கு ஏதோ ஒரு குறிப்பிட்ட காரியம் நான் செய்ய வேண்டியிருக்கிற தென்று வைத்துக் கொள்வோம். ஆனால் ஏழு மணி முதற் கொண்டே ஒரு நண்பனுடன் வேடிக்கை விநோதங்களிலோ அன்றிப் பாட்டுக் கச்சேரியிலோ-அது பகவத் பஜனையா யிருந்தாலும் சரியே-மெய்ம்மறந்து ஈடுபட்டிருந்து விட்டேனேயானால், எட்டு மணிக்குச் செய்ய வேண்டிய காரியத்தைச் செய்ய முடியாமற் போய் விடும். இதைக் காட்டிலும் யதேச்சாப் பிரவிர்த்திக்கு வன்மை யளிப்பது வேறொன்றில்லை. பகவந் நாம

ஸங்கீர்த்தனத்தில் மெய்ம் மறந்து ஈடுபட்டிருக்கும் பொருட்டுக் கூட ஒருவன் செய் கடனை மறப்பது விரும்பத்தக்கதன்று. "பகவந் நாம ஸங்கீர்த்தனத்தைப் பார்க்கிலும் நீ சொல்லும் செய்கட னாற்றல் அவ்வளவு முக்கியமாய்ப் போய்விட்டதா?" என்று எவரேனும் கேட்பரேல், அதற்குப் பிரதியுத்தரமாக, "செய் கடன் ஆற்றுதல் கூட பகவந் மகிமையைப் பிரசாரம் செய்வது தானே? கிரியை அல்லது கர்மம் என்பதும் பகவத் உபாஸனையின் நாமாந்தர மல்லவா?" என்று திருப்பிக் கேட்பேன். செய்கட னாற்றுதலை (கர்த்தவ்ய கர்ம சாதனத்தை)க் காட்டிலும் பகவந் நாம ஸங்கீர்த்தனம் எவ்வாற்றாலும் சிறந்ததாக மாட்டாது. பகவந் நாம ஸங்கீர்த்தனத்தால் எய்தும் பயனெல்லாங்கூடி, அது இருதயத்தை உற்சாகத்தால் பூரிக்கச் செய்து பக்தி பாரவசியத்தைக் கிளப்பி நம் செய் கடன்களைத் திறம்பட ஆற்றுவதற்கு நம்மைத் தகுதியுள்ளவர்களாக்கிவிடும் உதவியேயாம். ஆனால் ஸ்ரீ சைதந்ய ஸ்வாமியைப் போல் நாம் ஸங்கீர்த்தன மொன்றையே தம் வாழ்க்கையின் பரம கர்த்தவ்யமாகக் கொண்டிருப்பவர்களின் விஷயம் சுதந்தர மானது. நம்முடைய நாட்டில் பிரஸித்தி பெற்ற ஒரு பகவத் பக்தனைத் தரிசிக்க ஒரு நாள் பிற்பகலில் ஒருவர் சென்றிருந்தார். அவ்விருவரும பகவத் விஷயமாய் ஸம்பாஷிக்கத் தொடங்கி அதிலேயே வெறி கொண்ட உள்ளத்தினராய் முழுகி யிருந்தனர். இவ்வளவில் மாலை வேளையாய் விட்டது. உயிரைப் பரவசப் படுத்தும் அத் திவ்ய ஸம்பாஷணையிலே இரவு வெகு நேரம் வரையில் ஈடுபட்டிருக்க வேண்டு மென்பது அவர்களுடைய கோரிக்கை. ஆனால் தரிசிக்க வந்தவர் தவிர்க்க வொண்ணாத ஒரு கடமையை நிறைவேற்றும் பொருட்டு அப்பொழுது விடை பெற்றுச் செல்ல வேண்டி வந்தது. அவர் தமக்குச் சிறிதும் இஷ்ட மில்லாவிடினும் வேறு வழியில்லாமல் ஸம்பாஷணையின் மத்யில் அந்த பகவத் பக்தனைத் தமக்குச் செல்ல அநுமதியளிக்கும்படி கேட்டுக் கொண்டார். அப் பெரியாருக்கும் அவரை விட்டுப் பிரிய மனம் வரவில்லை. ஆனபோதிலும் கடமையின் முக்கியத் தன்மையை உணர்ந்த அவர்—"நீர் கடமையை நிறைவேற்றும் பொருட்டு இந்த வெறியை விட்டுப் போகத் துணிந்

த்தைப் பற்றி எனக்கு அளவற்ற சந்தோஷம் உண்டாகிறது,'' என்று சொல்லி அவரை விடைகொடுத் தனுப்பினர்.

தினசரி காரியக் கட்டளை ஒன்றை வகுத்துக் கொண்டு அதை உறுதியுடன் பின்பற்றி ஒழுகியவர்களுக்குள்ளே பெஞ்ஜமீன் ப்ராங்க்லின் என்பவர் பேரொளி வீசும் உதாரணமாய்த் திகழ்கிருர். அவர் தமது வாழ்க்கைச் சரிதத்தில் சேர்த்திருக்கிற அக் காரியக் கட்டளை பெரிதும் அறிவுச் சுடர் கொளுத்தத் தக்கதா யிருப்பதால், அதை இங்கே எடுத்துக் காட்டுவது பொருந்தும்.

ப்ராங்க்லினுடைய தினசரிக் கட்டளை

காலை. கேள்வி:—

இன்று நான் என்ன நற் கருமம் செய்வேன்?

5, 6, 7 மணி நேரங்களில், துயி லெழுதல், காலைக் கடன் தீர்த்தல், பகவத் பிரார்த்தனை, செய்ய வேண்டிய காரியங்களை நிர்ணயித்தல், படிப்பு, காலைப் போஜனம்.

8, 9, 10, 11 மணி நேரங்களில், தொழில்.

நண்பகல.

12, 1 மணி நேரங்களில், படிப்பு, வரவு செலவு கணக்குப் பார்த்தல், மத்தியான போஜனம்.

பிற்பகல்.

2, 3, 4, 5 மணி நேரங்களில், தொழில்.

மாலை. கேள்வி:—

இன்று நான் என்ன நற் கருமம் செய்தேன்?

வஸ்துக்களை அவ்வவற்றின் உரிய விடங்களில் வைத்தல், இராத்திரி போஜனம், சங்கீதம், வேடிக்கை, விநோதம், அல்லது ஸம்பாஷணை, அன்றைய காரியங்கள் ஸம்பந்தமாய் ஆத்ம பரீக்ஷை.

இரவு.

10, 11, 12, 1, 2, 3, 4 மணி நேரங்களில், நித்திரை.

இந்தக் காரியக் கிரமத்தை அநுஸரித்து நம்மில் ஒவ்வொருவரும் தம் தம் வாழ்க்கை நிலைமைக்கும் சூழ் நிலைகளுக்கும் தக்கவாறு ஒரு தினசரிக் கட்டளையை வகுத்துக் கொண்டு அதன்படி ஒழுக முயல வேண்டும். உறுதிப் பாட்டுடன் இதைச் செய்து வந்தால், யதேச்சாப் பிரவிர்த்தி அகன்றுபோம்.

2. பகவத் பக்தி கைகூடுவதற்கு இன்றியமையாத குண நலங்கள் அமையப் பெறும் வழியில் பெருந் தடையா யிருப்பது யதேச்சாப் பிரவிர்த்தியேயாம். நாம் இக் கெட்ட வழக்கத்துக்கு அடிமைகளா யிருப்பதனாலேயே, குறித்த குண நலன் ஒவ்வொன்றையும் காரியாநுஷ்டா னத்தில் சாதிப்பதில் எவ்வளவு தூரம் சித்தி யடைந்தோம் என்று தினந்தோறும் ஆத்ம பரீக்ஷை வாயிலாக நிச்சயித் தறிந்து கொள்ளும் முயற்சி யற்றவர்களா யிருக்கிறோம். ப்ராங்க்லின் சில குண நலங்களைக் கோவைப்படுத்தி, வாரத்தின் ஒவ்வொரு நாளிலும் யாதொரு குறித்த குண நலனைச் சாதிப்பதில் எவ்வளவு தூரம் சித்தி உண்டாயிற்று அல்லது தவறு நேர்ந்தது என்பதை அறிந்து கொள்ளும் பொருட்டு ஒரு சமத்காரமான முறையைக் கைக்கொண் டார். அம் முறை யாவரும் பின்பற்றத் தக்கது. அதன் வாயிலாக யதேச்சாப் பிரவிர்த்தியை அகற்றிச் சித்தத் தைச் சுகுணங்களால் அலங்கரித்து வைத்துக் கொள்ள வழி ஏற்படும். அவர் பதின்மூன்று குண நலங்களைத் தெரிந்தெடுத்து, அவற்றில் ஒவ்வொன்றையும் பயின்று சாதிக்கும் பொருட்டு ஒவ்வொரு வாரத்தை ஏற்படுத்திக் கொண்டார். ஒரு குறிப்பிட்ட குண நலத்திற்கென ஏற்படுத்திய வாரத்திலே அக் குறிப்பிட்ட குண நலத்தி லேயே விசேஷ கவனம் செலுத்தினர். ஆயினும் மற்றக் குணங்களின் விஷயத்தில் அசட்டையாய் இருக்கவில்லை. ஒரு சின்ன 'நோட்டு'ப் புஸ்தகத்தில் அக் குண நலங்களில் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு பக்கமாக வகுத்து, ஒவ் வொரு பக்கத்திலும வாரத்தின் ஒவ்வொரு நாளுக்கும் ஒன்று வீதம் எழு பத்திகள் இருக்குமாறு சிவப்பு மையி னால் கோடுகள் இழுத்தார். ஒவ்வொரு பத்தியிலும் அவ்வக் கிழமைப் பெயர்களின் குறிப்பெழுத்துக்களை

எழுதி, அப் பத்திகளுக்குக் குறுக்கே பதின்மூன்று சிவப்புக் கோடுகளிட்டு, ஒவ்வொரு கோட்டின் தொடக்கத்திலும் மேற்கூறிய குண நலம் ஒவ்வொன்றின் பெயரையும் பொறித்தார். எந்த வாரத்துக்குரிய பக்கத்தின் தலைப்பில் எந்த குண நலத்தின் பெயர் தடித்த எழுத்துக்களால் வரையப் பட்டிருக்குமோ, அந்த வாரத்தில் அந்தக் குண நலத்தைச் சிறப்பாய்ப் பயில்வார். மாலை வேளையில் ஆத்ம பரீக்ஷை செய்து எந்த தினத்தில் எந்தக் குண நலனை முற்றிலும் காக்க முடியவில்லையோ, அத் தினத்துக்குரிய பத்தியில் அக் குண நலத்தின் எதிரே ஒரு சிறிய கறுப்புப் புள்ளியிடுவார்.

3. ஒரு கட்டுப்பாட்டுக்கும் அடங்காமல் வாழ்வதே யதேச்சாப் பிரவிர்த்திக்கு முக்கிய காரணமாகும். நேர் வழியில் நடத்துகிறவனும், தவறினால் சிக்ஷிப்பவனுமாகிய தலைவன் எவனுக்கில்லையோ, அவனே பெரிதும் யதேச்சாப் பிரவிர்த்தி யுடையவனா யிருப்பான். ஆகையால் பக்தியுடன் போற்றுதற்குரிய ஒரு பெரியாரது ஆணைப்படி நடப்பது யதேச்சாப் பிரவிர்த்தியை அழிப்பதற்குச் சிறந்த வழியாகும். படையாள், படைத்தலைவனது கட்டளைக்கு முற்றிலும் அடங்கி மயிரிழையும் பிறழாது ஒழுகுவதே போல், ஒரு தக்க பெரியாரது ஏவலுக்குக் கட்டுப்பட்டு, எப்பொழுதும் அவரது ஆணைப்படி செய் கடன்களை ஆற்றி வந்தால் யதேச்சாப் பிரவிர்த்தி நீங்கும். மனம் போன போக்கெல்லாம் போவதாகிய எவ்வகை நடவடிக்கையையும் அடக்க வேண்டுவது அத்தியாவசியகமென்க.

4. திராடக சாதனமும், எனவே தினந்தோறும் இமையா நாட்டத்துடன் ஒரே திசையில் நெடு நேரம் வரையில் பார்வையை நிறுத்துவதும், பிராணாயாமமும் பயின்றால், மனத்தின் யதேச்சாப் பிரவிர்த்தி குன்றும். எந்த எந்த உபாயங்களால் ஏகாக்ரத் தன்மை வளர்ச்சியடையுமோ, அவை அனைத்தும் யதேச்சாப் பிரவிர்த்தியை ஒழிக்க வல்லனவே யாகும்.

5. இந்த ஸௌர ஜகத்து, எனவே சூரியனும் அதைச் சுற்றிச் சுழன்று வரும் கிரஹங்களும் சேர்ந்த

பிரபஞ்சம், விதி நியமங்களுக் கடங்கி மனோஹரமான ஐக்கமத்தியத்துடன் நடை பெற்றுவரும் அழகைக் கருதுங் கள். நம்மைச் சூழ்ந்துள்ள இவ்வகிலப் பிரபஞ்சமும் எவ்வளவு ஒழுங்காயும் முறையோடும் நடந்து வருகிற தென்பதையும் நோக்குங்கள். சூரியன் தினந்தோறும் குறித்த நேரத்திலே உதயமாகிக் குறித்த நேரத்திலே அஸ்தமிக்கிறது. சந்திரனுடைய பதினாறு கலைகளும் ஒரு நியதிக் கடங்கி வளர்ந்தும் தேய்ந்தும் வருகின்றன. மற்றும் கிரஹ நக்ஷத்திரங்கள் மாருத சில நியமங்களுக் குட்பட்டு எப்போதும் தவருது சஞ்சரிக்கின்றன. தீ எரிவதும், காற்று வீசுவதும், மேகங்கள் மிதப்பதும், பருவ காலங்கள் முறை தவருது மாறி மாறி வருவதும் ஆகிய அனைத்துமே மாற்ற வொண்ணுத சில நியமங்களுக் கடங்கி நடைபெறுகின்றன. இப்படிப் பிரபஞ்சத்திலுள்ள மற்றெல்லாப் பொருள்களும் ஏதோ ஒரு நியதிக் கடங்கி நடக்கையில், மனிதன் மட்டும் அதை நிக்கிரஹித்து மீகாமனில்லா மரக்கலம் போல மனம் போன போக்கில் அலைந்து வாழ்க்கையை வீணுக்கிக் கொள்வ தென்னே? சற்று நுட்பமாய் நோக்கினுல், இந்த பிரஹ்மாண்டம் அனைத்தும் ஒரு மாற்றெருணுத் தெய்வ நியதியால் இயக்கப் பட்டு ஓய்வின்றித் தொழில் புரிந்து வருவதை உணரலாம். அந்த நியதிக்குத் தலை வணங்கித் தன் வாழ்க்கையை ஒழுங்கு பெற நடத்துபவனே பாக்கியவான். அவனுக்கே ஆயுள் வளர வளர ஆனந்தாநுபவமும் வளர்ந்துவரும். இனி அந் நியதியின் உண்மையைக் காண மாட்டாத குருடனுய், மஹா சமுத்திரத்தின் அலைகளால் மொத்துறும் மரக்கட்டையே போல் வாழ்க்கையை மனம் போன வழியிலெல்லாம் செலுத்தி வீணுக்குகிறவனே பாக்கிய மற்றவனே. வயதாக ஆக, அவனது பிற்கால வாழ்க்கை இருள் சூழ்ந்த துக்கமயமா யிருக்கும். நம்பிக்கை யிழந்து நடு நடுங்கி ஏக்கமுறுவதே அவன் கதியாகும். ஆகவே, மனம்போன போக்கெல்லாம் போவதாகிய யதேச்சாப் பிரவிர்த்தியினின்றும் விலகி, வாழ்க்கையின் உண்மையான உறுதிப் பொருளை நாடி யடைய முயல் வதே நம்மனேர் அனைவருக்கும் உரிய குறிக்கோளா யிருக்க வேண்டும்.

8. உலகவிஷயக் கவலை

உலக விஷயமான கவலைகளால் அநவரதமும் வருந்துகிறவர்களுக்கு பக்தி சாதனம் எளிதன்று. ஆகையால் அக் கவலைகளின் வசத்திலிருந்து முற்றிலும் விடுபட்டிருப்பது அத்தியாவசியகமாகும்.

1. நம்முடைய குறைகளைப் பற்றிய மிகைப்பட்ட உணர்ச்சியே பெரும் பான்மையான கவலைகளுக்குக் காரணம். ஊரார் நம்மைப் பழித்துப் பேசுவார்களே யென்ற லோக சிந்தையின் பயமும் சில சமயங்களில் காரணமாகலாம். மனிதனுடைய உண்மையான குறைகள் மிகச்சிலவே யென்றும்,—நாமே கற்பித்துக் கொண்டனவாகிய குறைகளே நம்மைத் துயரத்தில் ஆழ்த்திப் பலகாலும் நம்முடைய சர்வநாசத்துக்கு ஹேதுக்களாகின்றன வென்றும் நான் ஏற்கனவே சொல்லி யிருக்கிறேன். இந் நிலவுலகில் மனிதனுக்கு இன்றியமையாதவை யென்று சொல்லக்கூடிய பதார்த்தங்களின் சங்கியை மிகச் சொற்பம் என்பதை நாம் மறந்துவிடுகின்றோம். "இந்த வஸ்து இல்லாமல் நான் உலகத்தில் எப்படி காலந் தள்ளுவேன்? அந்தப் பொருள் இல்லாமல் சமூகத்தார் நடுவில் நான் எப்படி நடமாடுவேன்?" என்று இத்தகைய கவலைகளாலேயே நம் வாணாளின் பெரும்பகுதி வீணாய்க் கழிகிறது. அப்படிக்கின்றி அன்றன்றைய தினம் ஜீவனம் ஏதோ ஒரு விதமாய் நடந்து போவதைக் கருதி அடுத்த நாளைக்காகக் கவலைப்படாது, உயிர் வாழ்க்கைக்கு அவசியமானவற்றை அளித்துக் காபாற்றுவது அவன் பாரமென்று ஆண்டவனிடத்தில் தன்னை ஒப்படைத்து விட்டு, அந்த பாவனையுடனேயே உலகத்தில் வாழ வேண்டுமென்றும், கற்பனையான குறைகளை ஏற்படுத்திக் கொண்டு அவற்றைத் தீர்த்துக் கொள்வதற்காகத் தவிப்பது பேதைமையென்றும் உறுதியாய் உணர்ந்து ஒழுகுபவனது உள்ளத்தின் உபசாந்தியை உலக விஷயமான கவலைகள் ஒருகாலும் குலைக்க வல்லன வாகா. கற்பிதமான—செயற்கையான—குறைகளே நம்மவரை வாட்டும் கொடிய

வியாதியாகும். நமது நாட்டில் ஆயிரக் கணக்கானவர் தம்மனைவியரை என்னென்ன விதமாய் ஸ்வர்ண ரத்நா பரணங்களால் அலங்கரிக்கலா மென்றே, மாதா பிதாக் களின் சிராத்தங்களை முன்னிட்டுச் சக்திக்கு மிஞ்சிச் செலவழிக்கும் பொருட்டு எவ்வெவ் வகைகளில் பொருள் சேர்க்கலா மென்றே ஓயாமல் எண்ண மிட்டுத் தவித்துக் கொண்டிருப்பதைக் காணலாம். இவர்களுடைய நிலைமை பரிதாபகர மானது.

2. நற்சிந்தைகளில் மனம் முழுகி யிருந்தால், உலக விஷயக் கவலைகள் உண்டாவதற்கு இடமிராது. சாது சங்கமும், பகவத் விஷய சர்ச்சை அல்லது வித்தியா விஷயாலோசனமும், குற்ற மற்ற வேடிக்கை விநோதங்களும் அக் கவலைகளை ஓட்டிவிடும். ராஜநாராயண வஸு மஹாசயர்* இயற்றிய "அக்காலமும் இக்காலமும்" என்கிற நூலிலே கூறப்பட்ட காட்டாள் ராமநாதன் கதையை உங்களில் பலர் படித்திருக்கலாம். போக போக்கியங்களை அறியாதவனாய் இருந்தபடியால், இந்தப் பிராஹ்மணனுடைய பெயருக்கு முன் 'காட்டாள்' என்கிற அடைமொழி சேர்க்கப்பட்டது. நியாய சாஸ்திர† ஆராய்ச்சியிலேயே அவன் ஆழ்ந்திருந்த படியால், உலக விசாரங்கள் அவனது இருதயத்தில் புக இடமில்லாமற் போயிற்று. உலக வாழ்க்கையில் குறையென்பது இன்னதென்றே அவன் அறியாதவனாய் மிக்க வறுமையில் வாழ்ந்து வந்தான். அவனைப்போல் அவ்வூரில் கஷ்டப்படுகிறவர் எவருமில்லை யென்று அண்டை அயலார் பேசிக்கொண்டனர். நவத் துவீபத்து வேந்தனாகிய கிருஷ்ண சந்திர ராயன்‡

---

* கல்கத்தா ஆதி பிராஹ்ம ஸமாஜத்துக்குப் பல வருஷ காலம் தலைவராய் இருந்தவர். வங்க மொழியில் பல நூல்கள் இயற்றியவர்; ஹிந்து காலேஜில் படித்துத் தேறிப் பிரக்யாதி பெற்றவர்களில் ஒருவராய்ப் பல்கலைப் புலமைக்கும் தீவிர பக்திக்கும் எல்லோராலும் போற்றப்பட்டவர். பிறந்தது, 1826ஆ ஸெப்டம்பர்மீ, இறந்தது 1899ஆ ஸெப்டம்பர் மீ.

† தரிசனங்களில் ஒன்று; தருக்க நூலை விஷயமாகக் கொண்டது.

‡ கி. பி. பதினெட்டாம் நூற்றாண்டில் இருந்தவன். அருங்கலைகளைப் பெரிதும் ஆதரித்த இவனது அரண்மனையிலே சிறந்த வங்க மஹா கவிகள் சிலர் மிளிர்ந்தனர்.

ஒருகால் அவனுடைய வறுமையைத் தீர்க்கக் கருதி அவனுடைய வீட்டுக்குச் சென்று, "ஸ்வாமிகளுக்கு ஏதாகிலும் அநுபபத்தி உண்டா?" என்று கேட்டான். 'அநுபபத்தி' என்பதற்கு ஸாதாரணப் பேச்சு வழக்கில் 'குறை' என்று அர்த்தம். ஆனல் நியாய சாஸ்திர வழக்கிலே, எவ்வகைச் சித்தாந்தமும் ஏற்படாத விஷயம் 'அநுபபத்தி' எனப்படும். ஆகையால் ராமநாதன் தன்னை அரசன் நியாயசாஸ்திர சம்பந்தமாகவே கேட்கிருனென்று நினைத்து "ஒன்றுமில்லை, எனக்குக் கிஞ்சித்தும் அநுபபத்தி தோன்றவில்லை" என்ருன். அதன்மேல் அரசன் இன்னும் தெளிவாய்த் தன் கருத்தைத் தெரிவிக்க வேண்டி, "தேவரீருக்கு அஸங்கதி ஏதாகிலும் உண்டா?" என்று கேட்டான். நியாய சாஸ்திரத்தில் 'அஸங்கதி' என்ற வார்த்தைக்கு 'அஸமந்வயம்' எனவே 'இயைபின்மை' என்று பொருளாதலால், உடனே அப் பண்டிதன், "இல்லை, எனக்குக் கிஞ்சித்தும் அஸங்கதி என்பது கிடையாது. எல்லாவற்றையும் ஸமந்வயப் படுத்த இயைத்துப் பொருள் கொள்ள—நான் வல்லவன்" என்ருன். அரசன் பாடு கஷ்டமாய் விட்டது. நியாய சாஸ்திரத்தைத் தவிர்த்துச் சிந்திக்கத் தக்க வேறெவ் விஷயமும் ராமநாதன் மனத்தில் புகாதென்று அரசன் கண்டு, வெட்ட வெளிச்சமான வார்த்தைகளால், "பண்டிதரே! குடும்ப விஷயத்தில் உமக்கு ஒன்றும் கஷ்டமில்லையா?" என்று கேட்க, ராமநாதன், "இல்லை, ஒரு கஷ்டமும் கிடையாது. எனக்குக் கொஞ்சம் பூஸ்திதி உண்டு; அதில் விளையும் தானியம் என் காலக்ஷேபத்துக்கு யதேஷ்டம். தவிர, இதோ எதிரில் தெரிகிறதே, இந்தப் புளிய மரத்தின் இலைகளைக் கொண்டு என் அகமுடையாள் குழம்பும் ரஸமும் பண்ணிப் போடுகிருள். அதோடு அன்னத்தைக் கலந்து புஜிப்பது எனக்குப் பிரஹ்மானந்தமா யிருக்கிறது. எனக்கு ஒரு கஷ்டமாவது இருப்பதாகத் தோன்றவில்லை," என்ருன். இப்படிப்பட்ட திருப்தியை அடைய விரும்பாதார் எவரே இருப்பர்? ராமநாத பண்டிதனைப்போல் ஏதாகிலும் நல் விஷயத்தில் ஆழ்ந்திருப்பவரின் சித்தத்தில் உலக விஷயக் கவலைகள் எப்படி அரசு செலுத்தக் கூடும்?

3. நாம் பார்வையைக் கீழே செலுத்தி நம்மிலும் குறைந்த நிலைமையிலுள்ளவர் எத்தனையோ பேர் இருப்பதைக் கண்டால் மனதுக்குச் சமாதானம் உண்டாகி, நம் நிலைமையிலேயே திருப்தி யடைந்திருப்பதற்கான வழியும் தெளிவாய்த் தோன்றும். 'ஸத்பாவ சதகம்' என்னும் நூலில் ஆசிரியர் ஸ்ரீயத கிருஷ்ண சந்திர மஜூம்தார் இது விஷயமாய்க் கூறும் கவிகள் எந்நாளும் போற்றத் தக்கன. அவற்றின் கருத்து வருமாறு:—

"ஒரு சமயம் எனக்குப் பாதரட்சைகள் இல்லாமையால் மிக்க வருத்தமுற்றேன். அவ் வருத்தத்தால் வெதும்பிய மனதுடன் மெல்ல மெல்ல நடந்து கோவிலுக்கு ஸ்வாமி தரிசனம் செய்யப் போனேன். அங்கே கால்களை இழந்த ஒருவனைக் காணவும் என் செருப்பில்லா வருத்தம் பறந்தது. பிறருடைய குறைகளைப் பற்றிச் சிந்திப்போமாயின் நம்முடைய குறைகள் நம்மை எவ்வளவு நேரம் வருத்த முடியும்? "ஐயோ, இதென்ன பயங்கரமான கானகத்துக்கு வந்துவிட்டேன்! மையிருட்டில் வழிதுறை ஒன்றும் தெரியவில்லையே. குளிரோ பொறுக்க முடியவில்லை, வடவட வென்று உடம்பை நடுக்குகிறது," என்று நடுக் காட்டில் நள்ளிரவில் வழி தப்பிப்போன வழிப்போக்கன் ஒருவன் புலம்பிக்கொண்டிருந்தான். இவ்வாறு அவன் தனக்குற்ற கதியை நொந்து கதறிக் கொண்டிருக்கையில், யாரோ ஒருவன் அவனை இடி முழக்கம் போன்ற கனத்த குரலில் விளித்து "வழிப்போக்கனே, அழாதே; இப்படி வந்து என் அவஸ்தையைப் பார். நீ குளிரால் மிகவும் நடுங்குவது உண்மையே; ஆயினும் கட்டித்தரையிலேயே இருக்கிறாய். நானோ இங்கே கிணற்றில் விழுந்து சுவரிலுள்ள வளையங்களை இரு கையாலும் பிடித்துக்கொண்டு எதோ ஒருவிதமாய் நீரில் என்னைத் தாங்கிக் கொண்டிருக்கிறேன். உடம்பு முழுதும் கழுத்தளவு தண்ணீரில் மூழ்கிக் கிடக்கிறது. தலையை மட்டும் முழுகிப் போக வொட்டாமல் நீர்மேல் நிமிர வைத்திருக்க மிகப் பாடுபட்டுக் கொண்டிருக்கிறேன். என்னைப்போல் நீ கிணற்றில் விழாமலிருப்பதைப் பற்றி ஆண்டவனிடம் நன்றி பாராட்டு" என்று கூறினான்.

நம்மைவிட மேல் நிலையில் உள்ளவர்களின் பொறுப்புக்களும், ஆபத்து நேருமோ வென்று அஞ்சும்படியான அவசரங்களும் எவ்வளவு அதிகமென்பதை ஆலோசித்துப் பார்க்கினும், நமது தாழ் நிலையைக் குறித்துண்டாகும் துக்கமும் தாபமும் குறையும்.

4. உலகக் கவலைகளால் பிடிக்கப்பட்டிருப்பவர்கள் ஒரு போதும் தனிமையான இடங்களில் வசித்தல் கூடாது. அப்படி வசித்தால் கவலைகள் அதிகமாகும். சாதுக்களாய் சந்துஷ்ட சித்தராய் உள்ள பெரியோரின் சங்கத்தில் எவ்வளவு அதிகமாய்க் காலங் கழிக்கிறோமோ அவ்வளவும் நமக்கு உபகாரமாகும். நாளைக்கு உண்ண வழியற்றவர்களாயிருந்தும், எப்போதும் மலர்ந்த நகை முகத்துடன் விளங்கும் உத்தமர்கள் இவ்வுலகத்தில் இராமலில்லை. அப்படிப்பட்டவர்களின் உதாஹரணம் உலகக் கவலைகளை வெல்வதில் நமக்குப் பெரிதும் உதவி புரியும்.

5. உலகக் கவலைகளின் விஷயமாய் இயேசு கிறிஸ்து பிரான் தம் சிஷ்யர்களுக்குச் செய்த உபதேசத்தை விடச் சிறந்தது வேறெதுவும் இல்லை. அது பின்வருமாறு:—

"என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம் என்று உங்கள் உயிருக்காகவும், என்னத்தை உடுப்போம் என்று உங்கள் உடலுக்காகவும் கவலைப்படாதிருங்கள். உணவைப் பார்க்கிலும் உயிரும், உடையைப் பார்க்கிலும் உடலும் மேம்பட்டவை யல்லவா?

"வானகத்துப் பறவைகளை உற்று நோக்குங்கள்; அவை விதைப்பது மில்லை, அறுப்பது மில்லை, களஞ்சியங்களில் சேர்த்து வைப்பதுமில்லை. அவைகளையும் உங்கள் வானகத் தந்தை உண்பிக்கிறுரே. அவைகளைப் பார்க்கிலும் நீங்கள் மேம்பட்டவர்க ளல்லவா?

"உங்களில் எவனே கவலை கொள்வதனுல் தன் உயரத்தோடு ஒரு முழத்தைக் கூட்ட வல்லான்?

"உடைக்காகவும் நீங்கள் கவலைப்படுவ தென்னே? நிலத் தாமரைகள் எப்படி வளருகின்றன வென்று கருதிப் பாருங்கள்; அவை உழைப்பது மில்லை; நூற்பது மில்லை,

அப்படி யிருந்தும், மஹாஐசுவரிய ஸம்பந்நனுகிய சிலேமான் சார்வ பௌமனுமே அவற்றில் ஒன்றைப் போலாகிலும் உடுத்திருந்த தில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

"அற்ப விசுவாசிகளே, இன்றைக்கிருந்த நாளைக்கு அடுக்களையில் போடப்படும் வயற்புல்லை ஆண்டவன் இவ்வாறு உடுத்துவித்தால், உங்களை இன்னும் மேலாக உடுத்துவிக்க மாட்டாரா?

"ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று கவலைப்படா திருங்கள்.

"ஏனெனில், இவையெல்லாம் உங்களுக்கு வேண்டியவை யென்று உங்கள் வானகத் தந்தை அறிந்திருக்கிருர்.

"நீங்கள் முதற்கண் ஆண்டவனுடைய அரசையும்; அவனுடைய அற நீர்மையையும் நாடுங்கள்; அப்பொழுது இவ்வெல்லாப் பொருள்களும் கூட உங்களுக்கு அளிக்கப் படும்.

"ஆகையால் நாளைக்காகக் கவலைப்படாதிருங்கள் நாளையத் தினக் காரியம் தானே நடக்கும். அந்தந்த நாளுக்கு அதனதன் பாடே போதுமானது."

9. லௌகிக தந்திரம்

லௌகிக தந்திரத்தினால் தூண்டப்பட்டவன் ஆண்டவனிடம் சமயோசிதமாய் நடந்து தன்னலம் பாராட்டுவதில் முனைந்து நிற்பான். லௌகிக தந்திரம் ஒரு வகை மனக் கள்ளமாம். அது நம் உள்ளத்தை ஆண்டவன் முற்றிலும் ஆள்வதற்கு ஒருப்படுவதில்லை. லௌகிக தந்திரத்தைக் கைக்கொள்வோன் நேர்மையாகவோ நேர்மையின்றியோ உலக ஸம்பந்தமான தன் சுய காரியங்களனைத்தையும் சற்றும் விட்டுக் கொடாமல் சாதித்துக் கொண்டு உலகத்தார்முன் தன்னைச் சாது சிரேஷ்டன் என்று காட்டிக் கொண்டு பிரதிஷ்டையடையவும் எல்லா வகையாலும் முயல்வான். தன்னுடைய தந்திரங்களைக் கண்டு பிடிக்க ஆண்டவனுக்குத் திறமையில்லை யென்பது அவனுடைய எண்ணம் போலும். 'உள்ளொன்று வைத்துப் புறமொன்று' பேசும் மனக் கள்ளம், சிற்றறிவினராகிய மக்களிடத்துமே எப்போதும் பலிப்பதில்லையென்றால், பேரறிவுடைய ஆண்டவனிடத்தில் அஃது எவ்வாறு செல்லும்? தெய்வத்தையும் 'மம்மனை' (ஐசுவரியத்தை)யும் ஒருங்கே திருப்தி செய்யப் பார்க்கும் மேதாவி மூர்க்க சிகாமணியே ஆவான். ஆண்டவனுக்குத் தொண்டு செய்து கொண்டே உலகத்தில் தனக்கேற்பட்டுள்ள கடமைகளையும் ஒருவன் செலுத்தக் கூடுமென்பது முற்றிலும் உண்மையே. ஆனால் இருதயத்தின் ஒரு பாகத்தை ஆண்டவனுக்கும் மற்றப் பாகத்தை விஷய போகத்துக்கும் (மம்மனுக்கும்) பங்கு போடுவதென்னும் வியவஹாரம் பேதைமையேயாகும்.

ஒரு வங்க கவி அடியிற் கண்டவாறு பொருள்படப் பாடியிருக்கிறார்:—

"முழு மனத்துடன் அன்பு செய்தாலன்றி நான் திருப்தியடையேன். உலக போகத்தின் உச்சிஷ்டமான (உண்டு மிகுந்த எச்சில்) அன்பை எனக்கு அளிக்க வேண்டாம்.

நிறுத்துக் கணக்கிட்டு அன்பு செய்கிறவன் ஒருகாலும் அன்பனைக் கருதப்படமாட்டான். அவன் உலகத்துப் பண்டங்களை விற்கும் வணிகனே யாவான்; உலகத்திலேயே அழுந்தியிருப்பான்."

சிலர் செல்வம் ஈட்டும் காரியத்தை முன்னிட்டுத் தாம் எவ்வளவு பாபம் செய்துவந்தபோதிலும், எப்போதாவது பரோபகாரமும் செய்து புண்யம் சம்பாதித்துவிட்டால், இரண்டையும் கணக்கிட்டுப் பார்க்குமளவில் புண்யமே மிகுந்திருக்குமாதலால், அதன் பயனைத் தமக்குக் கடைசியில் பரமபதம் செல்ல அதிகாரம் ஏற்பட்டுவிடும் என்று எண்ணி மனப்பால் குடித்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களை நோக்கி, 40 சேர் பாலில் 5 சேர் கோமூத்திரத்தை வார்த்துவிட்டு, இரண்டையும் கணக்கிட்டுக் கோமூத்திரத்தைக் கழித்து இதோ 35 சேர் சுத்தமான பால் இந்தப் பாத்திரத்தில் இருக்கிறதென்று சொல்ல வல்லீரோ? என்று கேட்பேன். அதே நியாயத்தை அநுசரித்து, நீர் நிறைந்த ஒரு பாத்திரத்தின் வாயைக் கெட்டியாய்க் குச்சிட் டடைத்து விட்டு, அப்பாத்திரத்தின் அடியில் ஓட்டை இருந்தாலும் பரவாயில்லை, ஒரு துளி நீர்கூடச் சிந்தாதென்றும் சொல்லலாமே! இந்திரிய நிக்கிரஹத்தின் சம்பந்தமாய் மநு சொல்லியிருப்பது இங்கே நினைவு கூரத் தக்கது. அஃது அறத்துப் பாலைச் சேர்ந்த சகல விஷயங்களுக்கும் பொருந்தும் :—

"நீர் நிறைந்த பாத்திரத்தில் ஒரே ஓட்டை இருப்பினும் அதன் வழியே எல்லா நீரும் ஒழுகிப் போய்விடும். அது போலவே, இந்திரிய சமுதாயத்திலே ஓர் இந்திரியம் பிறழ்ந்தாலும், அதனல் அறிவவ்வளவும் அழியும்."

ஆண்டவனுடைய அரசியலிலே அறவொழுக்கத்தில் சகட்டு மேனிக்குக் கணக்குப் போட்டால் செல்லாது. சீமையில் ஓர் ஆங்கிலேயன் சகட்டு மேனிக்குத் கருமம் ஆசரித்து வந்தான். திரவியம் சம்பாதிக்கும் விஷயத்தில் புரட்டும் பித்தலாட்டமுமான வழிகளைக் கைக்கொள்ள சிறிதும் அஞ்சாது பலவிதமான பாவச் செயல்களைச் செய்வான். என்றாலும், ஆதி வாரம் தோறும் தவருது பிரார்த்தனலயத்துக்கு-சர்ச்சுக்கு-ப் போய் ஏழை எளிய

வர்களுக்கு ஏராளமாய்ப் பொருள் கொடுத்து உதவி செய்வான். அதைப்பற்றித் தன் நண்பர்களிடம் இவ்வாறு சொல்லிக்கொள்வான் :—''குடும்ப போஷணத்துக்காக பாபஞ் செய்ய வேண்டி வந்தாலும், ஆதிவாரம் தோறும் தவருமல் சர்ச்சுக்குப்போய் ஜபம் செய்து ஏழைகளுக்குப் பிச்சை கொடுத்து வருகிறேன். ஆகையால் மொத்தத்தில் என் பாவ மீட்சியைப்பற்றி எனக்குப் பயமில்லை. சராசரியில் என் மார்க்க ஒழுக்கம் சரியாகவே இருக்கிறது. கணக்கிட்டுக் கழித்துப் பார்த்தால் புண்ணியமே மேலோங்கி யிருக்கும். அதன் வன்மையாலே நான் இரட்சிப்பு அடைவது நிச்சயம்.'' இவன் ஒருகால் கால்நடைகளின் மேய்ச்சல் நிலத்தை வேலியிட்டடைக்க வேண்டி ஒரு ஸ்கொத்லந்து நாட்டுக் கந்திராக்தரை அமர்த்தினன். அந்தக் கந்திராக்தர் கூடிய விரைவில் வேலையை முடித்து ஒரு நாள் அவ் ஆங்கிலேயனிடம் வந்து, ''ஐயா, வேலி போட்டாய்விட்டது; எனக்குச் சேர வேண்டிய காசைக் கொடுங்கள்'' என்று கேட்டான். ''வேலை எப்படி முடிந்திருக்கிறது?'' என்று கேட்டான் எஜமானன். ''சகட்டு மேனிக்கு நன்ருகவே இருக்கிறது'' என்ருன் கந்திராக்தர். எஜமானன் இதன் கருத்தை அறிந்து கொள்ள முடியாமல், '' அப்படியானல் இருவரும் போய்ப் பார்த்து வருவோம், வாரும்,'' என்று கந்திராக்தருடன் அவ்விடத்துக்குச் சென்ருன். சென்று பார்க்கையில், உள்ளபடியே நிலத்தைச் சுற்றி வேலி அடைத்திருந்ததாயினும், இங்கு மங்கும் பெரிய இடைவெளிகள் இருப்பதைக் கண்டு ஆச்சரியமடைந்து, கந்திராக்தரைப் பார்த்து, ''இது என்ன வேலியடைப்பு ஐயா? நீர் விட்டிருக்கிற இடைவெளிகளின் வழியாகக் கால்நடைகள் வெளியே ஓடிவிடுமே,'' என்ருன். அதற்குப் பிரதியுத்தரமாகக் கந்திராக்தர்—''அவை எப்படி ஓட முடியும்? நன்ருய்ப் பாருங்கள். அங்கங்கே இடைவெளிகள் இருப்பது வாஸ்தவமே. ஆனல் அவ்விடைவெளிகளின் இரு பக்கங்களிலும வேலியை இரு மடங்கு மும்மடங்கு அடர்த்தியாக அடைத்திருக்கிறேன். சகட்டிலே சரியாகவே இருக்கிறது. இந்த இடை வெளிகளுக்கு அவற்றின் இரு புறங்களிலுமுள்ள அதிகப்படியான

அடைப்பு ஈடு செய்யாதா? சராசரி கணக்கிட்டால் சரியாய்ப் போய்விடும்,'' என்று சொல்லவும், இருவருக்கும் இதைப்பற்றிச் சற்று தர்க்கம் நடந்தது. கடைசியில் சுந்திராக்தர் இவ்வாறு சொல்லலானார்—“ஐயா, நீங்கள் சொல்வதை நான் ஒப்புக் கொள்கிறேன். இடைவெளிகள் விட்டு இரு புறத்திலும் நாலு மடங்கு அடர்த்தியாய் வேலியடைத்தாலும் பயனில்லை. ஆனால் நீங்கள் சகட்டில் தருமம் ஆசரிப்பதாகக் கேள்வியுற்றபோது, நானும் சகட்டிலே உங்களுக்கு வேலியடைக்கலாமென்று நினைத்து அப்படியே செய்தேன். நீங்கள் உங்கள் தர்மாசரணத்திலுள்ள இடைவெளிகளை மூடிவிட்டால், நானும் உங்கள் வேலியில் காணப்படும் இடைவெளிகளை அடைத்துவிடுகிறேன்.'' இதைக் கேட்டதும் ஆங்கிலேயனுக்கு நல்லபுத்தி வந்தது. அதன் பிறகு தர்மாசரணத்தில் லௌகிக தந்திரத்தை உபயோகிக்க அவன் ஒருகாலும் முயலவில்லை. ஆகவே தர்ம மார்க்கத்தில் ஒருவரும் சகட்டிலே நற்காரியங்களைச் செய்ய நினையாதிருப்பாராக. தர்மமும் அதர்மமும் ஒன்றற்கொன்று ஈடாய்விடுமென்று நினைத்துப் பசுவைக் கொன்று செருப்புத் தானம் செய்வதில் பயனொன்றுமில்லை.

லௌகிக தந்திரத்துக்குத் தாஸராகிய சிலர் சமயோசிதமாய் இருபொருள் தருமாறு பேசுவது - இரட்டுறமொழிதல்-தோஷமென்றெனக் கருதுகின்றனர். ஒரு பையன் பள்ளிகூடத்துக்குப் போவது மட்டு முண்டேயொழியப் பாடம் கேட்பதில்லை; அதாவது, பாடஞ்சொல்லத் தொடங்கும் முன்னரே பள்ளிக்கூடக் கட்டிடத்திற்குப் போய் வீட்டுக்கு வந்துவிடுவான். வீட்டிலுள்ள பெரியோர் அவனை, “அடே, பள்ளிக்கூடத்துக்கு போனாயா?'' என்று கேட்கும்போது, அவன், ''போனேன்,'' என்று மறுமொழி கூறுவானேயாகில், அதைப்பற்றி நீங்கள் என்ன நினைப்பீர்கள்? அந்தப் பையன்மேல் குறைகூற உடம்படாத ஒரு சாரார் உளரென்பது எனக்குத் தெரியும். ஆனால் ஆண்டவன் நாம் பிரயோகிக்கும் வார்த்தைகளைக் கவனிப்பதில்லை. எந்தக் கருத்துடன் அவ்வார்த்தைகளை நாம் பிரயோகிக்கிறோமோ

அதையே கவனிக்கிறார். "இரட்டுற மொழிதல் பொய்க்குச் சிற்றப்பன் பிள்ளை," என்றும் "பாதியுண்மையாகிய பொய்யைப் பார்க்கிலும் கொடும் பாதகமான பொய் பிறிதொன்றில்லை," என்றும் ஆங்கிலத்திலுள்ள பழமொழிகள் இக் கருத்தை நன்கு விளக்கும்.

லௌகிக தந்திரத்தின் உயிர் நிலை கணக்கிட்டுப் பார்ப்பதில் இருக்கிறது. செல்வம், மானம், புகழ், பிரதாபம் முதலியவை நிலை நிற்பதற்கோ அல்லது பெருகுவதற்கோ சம்பந்தப்பட்ட விஷயங்களைக் கணக்கிடுவதிலேயே உலகப் பற்றுள்ளவன் கண்ணுங் கருத்துமாயிருப்பன். இந்தத் தொழிலில் அமர்ந்தவனாய் அவன் ஆண்டவனை அடியோடு மறந்துவிடுகிறான். உலகப்பற்று அற்றவனோ ஆண்டவன்மீது லட்சியத்தை நிறுத்தி உலக காரியங்களைக் கவனிப்பான். இது விஷயமாய் ராம கிருஷ்ண பரமஹம்ஸர் இவ்வாறு கூறுவது வழக்கம்:— "அப்பா, உலகத்தில் ஜனங்கள் தங்கள் சொந்தக் காரியங்களை நிர்வகிப்பதற்காக நம்பிக்கையுள்ள 'ஏஜண்டு'களுக்கு 'முக்தியார் நாமா' என்னும் அதிகாரப் பத்திரம் எழுதிக் கொடுத்து விடுகிறார்களே, அப்படியே நீயும் ஆண்டவனுக்கு ஓர் அதிகாரப்பத்திரம் அளித்துவிட்டு நிச் சிந்தையாய் என் காலம் கழிக்கலாகாது? இவ்வாறு வாழ்வதுதான் ஆதர்சமான உலக வாழ்க்கை. இத்தகைய வாழ்வு வாழ்வானுக்குச் செல்வம மானம் புகழ் இவையெல்லாம் குறைவின்றித் தாமே வந்துசேரும். லௌகிக தந்திர புத்தியுடன் செல்வம் மானம் முதலியவற்றைக் கணக்கிட்டுக் கொண்டிருப்பவனுடைய ஆசை ஈடேறுவதில்லை; கணக்கிடும் சிரமம்தான் மிச்சம்; அவனுடைய இருதயத்தில் சுகமும் சாந்தியும் குடிகொள்ளா. இதைப்பற்றி ஸ்ரீ பரம ஹம்ஸ தேவர் ஓர் அழகிய திருஷ்டாந்தம் கூறுவர். அதாவது:— ஒரு மாந்தோப்புக்கு இருவர் சென்றனர். மா மரங்களின் கிளைகள் கனிந்த தீங்கனிகளின் பாரத்தால் சாய்ந்திருந்தன. அவரில் ஒருவன் இந்தத் தோப்பு நிலம் எவ்வளவு பரப்புடையது, இதில் எத்தனை மரங்கள் இருக்கும், மரத்துக்கு எத்தனை கிளைகள் இருக்கும், கிளைக்கு எத்தனை கனிகள் இருக்கும்? என்று கணக்கிடத் தொடங்கினான்.

மற்றவனோ மரத்துக்கு மரம் சென்று கனிகளைப் பறித்துக் காலதாமத மின்றிப் பிரஹ்மானந்தமாய்ப் புசித்தான். இவ்வளவில் தோப்பில் அவர்கள் நுழைந்து உலாவுவதற்காக அளிக்கப்பட்டிருந்த நேரம் கழிந்துவிட்டபடியால், தோப்புக்குடையவன் வந்து அவர்களை வெளியேறும்படி சொன்னான். பழம் தின்று கொண்டிருந்தவன் வயிறு புடைக்கப் புசித்துப் பூரித்திருந்தமையால், தோப்பை விட்டுப் போகச் சித்தமாயிருந்தான். அவன் தோழன் பாடுதான் திண்டாட்டமாய் விட்டது. அவனுடைய கணக்கு இன்னும் முடியாமையால் அவன் வெளியேறத் தயாராயில்லை. ஆகவே தோப்புக் குடையவனுடன் சண்டை யிட்டு முடிவில் அர்த்த சந்திர பிரயோகத்தின் மேல் தோப்பைவிட்டு வெளியேற வேண்டியதாயிற்று. ஐயோ! இதுவே லௌகிக தந்திர மேதாவிகளின் தவிர்க்க வொண்ணாத கதியாய் முடிகிறது. அவர்கள் இவ்வாறே கணக்கிட்டுக் காலத்தைக் கழிப்பார்கள். இந்தக் கணக்கு முடிவதற்குள், அவர்கள் இவ் வுலகத்தை விட்டுப் போக ஆயத்தமா யிராத சமயத்தில் யமபுரத்திலிருந்து சீட்டு வந்துவிடுகிறது. அப்பொழுது ஆ! கெட்டேன்! ஆ! கெட்டேன்! என்று நெடுமூச்செறிந்து கதறுவதைவிட அவர்கள் என்ன செய்ய முடியும்! இத்தகையோர் தங்களை மஹா சமர்த்தரென்று எண்ணிக்கொண்டு பெருமை பேசுவர். கடைசியில் பார்க்கப்போனால் இவர்களைப்போல் பேதைகள் எவருமில்லை யென்றே ஏற்படும். தன்னயம் சுருங்கவும், மனக் கள்ளம் மாயவும், குடிலத் தன்மை அகலவும், உள்ளம் நேர்மையுறவும், சமர்த்து விருப்பம் சிதையவும் வேண்டித் தக்க உபாயங்களை அவலம்பித்தால் லௌகிக தந்திர புத்தி ஒழியும். அவ்வுபாயங் களாவன:—

1. உள்ளத்தை நேர்மைகொண்டதாகவும், நிஷ்கபடமாயும், நிச் சிந்தை யாகவும் வைத்துக்கொள்வதற்கு முக்கிய உபாயங்களில் ஒன்று, பாலருடன் தாராளமாய்ச் சேர்ந்து பழகுவ தாகும். குடிலரும் விஷயலோலரு மானவரின் கூட்டுறவைத் துறந்து மாசற்ற மனமுடைய சிறு பிள்ளைகளுடன் மேன் மேலும் பழகப் பழக, லௌகிக தந்திரப்பற்று அருகிப் போம். பணிவுடன் நினைவு கூரற்

குரிய புக மூடம்பினரான புண்ணிய புருஷரெல்லாம் சிறு பிள்ளைகளுடன் அளவளாவிப் பழகியிருக்கிறார்கள். "சிறு குழந்தைகளை என்னிடம் வர விடுங்கள், ஸ்வர்க்க ராஜ்யம் அவர்களுடையதே" என்று இயேசு கிறிஸ்து பிரான் மொழிந்த இனிய வார்த்தைகள் நம்மெல்லோருக்கும் தெரியுமே. பரமஹம்ஸ திரிலிங்க ஸ்வாமிகள் சிறு பிள்ளைகளைப் பெரிதும் நேசித்து அடிக்கடி அவர்களுடன் கூடி விளையாடுவார். அவரிடம் ஒரு சின்ன வண்டி இருந்தது. அதில் அவர் சில சமயம் உட்கார்ந்துகொள்ள, அதைச் சிறுபிள்ளை வந்திழுக்கும். சில சமயம் சிறு பிள்ளைகளை அவ் வண்டியில் ஏற்றித் தாமே அதை இழுப்பர். யோகிகள் எப்போதும் சிறு பிள்ளைகளுடன் கூடி அவர்களுடைய மாசற்ற இயற்கையைக் கிரகிப்பர். ஸ்ரீ ராமகிருஷ்ண தேவருடன் பழகியவர்களுக்கெல்லாம் அவர் எவ்வளவு குழந்தைத் தன்மைகொண்ட ஒழுக்க முள்ளவரா யிருந்தாரென்பது தெரியும். அவர் தம் மனத்திற் படுவதை அவ்வப்பொழுதே வெளியிடுவார். உலகத்துக் கஞ்சி ஒன்றையும் ஒளிக்கமாட்டார். போலி வெட்கத்தினாலோ லோகோபவாதத்துக் கஞ்சியோ நாம் பலகாலும் பயின்றுவரும் படிற்றொழுக்கம் அவரிடம் எள்ளளவும் இருந்ததில்லை. பரமசிவன் ஞானஸங்கலினி தந்திரத்தில் இவ்வாறு கூறுகின்றார்:—

> "கவலைகளினின்று நீங்கிய குழந்தைத் தன்மை கொண்ட மனப்பான்மை உண்டாகு மிடத்தே யோகம் பரிபக்குவ நிலையுறும்."

2. திறந்த மனத்துடன் நண்பர்களுடன் கலந்து உரையாடுவதால் லௌகிக தந்திர இயற்கை அருகும்.

3. அழகிய இயற்கைக் காட்சிகளைக் காண்பதும், உள்ளத்தைக் கவரும் தூய்மை கொண்ட இன்னிசைப் பாட்டுக்களைக் கேட்டலும் முதலாகிய உள்ளத்துக்குத் தெளிவையும் விரிவையும் அளிக்கும் சாதனங்களெல்லாம் இவ் விஷயத்தில் மிகப் பயன்படும். வெண்ணிலவைக் கண்ணுறுவதும், மலர்ச் சோலையில் உலாவுவதும், ஆற்றினூடே செல்லுதலும், மலை யுச்சிக்கேறிச் செல்வதும்

உள்ளத்தை விரிவாக்கி நேர்மையோ டிருக்கச் செய்வ தற்குச் சிறந்த உபகரணங்களாம்.

4. இவ்வுலகத்திலே மக்களுட் தலைசிறந்தவராகிய மஹாநுபாவர்களின் சரித்திர வரலாறுகளை ஆராய்ந்து பார்க்குமளவில், அவர்கள் தன்னலமற்ற உதார சுபாவமுடையவர்களாயும் நேர்மையாளர்களாயும் இருந்தமையாலேயே கடவுளர்க்கு நிகராய்ப் பணிந்து போற்றத் தக்க லோக மான்யர்களாய்த் திகழ்ந்தார்களென்று தெரியவரும். அன்னார் சாமானிய மனிதரைப்போல் லௌகிகமான சுய லாபத்திலேயே கருத்துடையவர்களாய் இருந்திருந்தால், உலகம் நெடுநாளுக்கு முன்னமே அவர்களை மறந்து போய்விட்டிருக்கும் என்பது திண்ணம். அவர்களது ஒழுக்கத்தை நாம் எவ்வளவுக் கெவ்வளவு ஆராய்ந்தறிகிறோமோ, அவ்வளவுக்கவ்வளவு லௌகிக தந்திர புத்தியில் நமக்கு வெறுப்புண்டாகும்.

5. பிறர் என்ன சொல்லித் தூற்றுவரோ என்ற அச்சமே நம்மைப் பலகாலும் லௌகிக தந்திரத்தைப் பின்பற்றும்படி தூண்டிவிடுகிறது. சமூகத்தில் பிரக்யாதி யடையவேண்டுமென்கிற பேரவாவே லௌகிக தந்திரத்தை முக்கியமாய் வளர்த்து வருகிறது. ஆகவே லோக நிந்தை யச்சத்தை முற்றிலும் புறக்கணித்து விட்டு மனச்சான்று அறிவுறுத்தும் வழி நின்று ஒழுகி வருவோமாயின் லௌகிக தந்திரம் அடியோடு அழிந்துபோவதுடன் காலக்கிரமத்தில் மேம்பாடும் நல்லிசையும் தாமாய் வந்து வாய்க்கும்.

10. வாயாடித்தனம்

வாயாடித் தனத்தினால் மன அலைப்பு — சித்த சாஞ்சல்யம் - உண்டாகும். ஆகையால் யோகிகள் மௌனவிரதம் அநுஷ்டித்து வருகிறார்கள். ஓயாமல் வளவளவென்று பேசிக் கொண்டிருப்பதனால் மனோபலம் குன்றும், உணர்ச்சிகளின் ஆழமும் குறைந்துபோம். தான் அன்புடன் போற்றிப் பாராட்டும் பொருளைப் பலர் காணுமாறு பஹிரங்கப்படுத்த எவனும் விரும்பான்; எல்லாவற்றிலும் இனிமையானதை அந்தரங்கமாய் இருதயத்துக்குள்ளே மறைத்து வைத்துக் கொள்ளவே விரும்புவான்.

"இருதயத்தின் ஆழ்ந்த அடித்தலத்தில் ஏகாந்தமாய் ஒளிர்கின்ற மாணிக்க மணியைக் கடைத்தெருவில் விற்பனைக்குக் கொண்டுவர எவனே விரும்புவன்?"

இக்காரணத்தினாலேயே குருவினால் உபதேசிக்கப்பட்ட மந்திரத்தை வெளிப்படுத்தக்கூடாதென்று நிஷேதம் ஏற்பட்டிருக்கிறது. பிதாகொராஸ் என்னும் கிரேக்க தத்துவஞானி வாக்ஸம்யமத்தின் — நாவடக்கத்தின் — அத்தியந்த ஆவச்யகத்தைச் சிறப்பாய் உணர்ந்திருந்தமையாலேயே, முற்றிலும் மூன்று வருஷம் மௌன விரதம் பயிலாத எவரையும் தமக்குச் சிஷ்யராக ஏற்றுக் கொள்ள முடியாதென்று விதி ஏற்படுத்தியிருந்தார்.

நாவடக்கமின்றி பக்தனாக முடியாது. பக்த லக்ஷணங்களைச் சொல்லி வருகையில் ஸ்ரீ கிருஷ்ணன் பகவத்கீதை பன்னிரண்டாம் அத்யாயத்தில், 'மௌனியாயுள்ளவன் எனக்கு இனியவன்,' என்கிறார். அந்த சுலோகம் வருமாறு:—

'துல்ய நிந்தா ஸ்துதிர், மௌநீ,
ஸந்துஷ்டோ யேந கேந சித்,
அநிகேத:, ஸ்த்திரமதிர், ப்ஹக்திமாந்
மே ப்ரியோ நர:.'

"இகழ்ச்சி புகழ்ச்சிகளை நிகராகக் கொண்டு மௌனியாய், எதுவரினும் அதில் மகிழ்ச்சி யுறுவானாய், நிலையான இருப்பிடமற்றவனாய், நிலைத்த புத்தியுடையானாய் உள்ள பக்தன் எனக்கு இனியவன்."

வாயாடி மட்டு மரியாதை யின்றி எல்லாவற்றிலும் வாய் வைத்து இடர்ப்பாட்டுக்கு உள்ளாவான். ஆகையால் நாவடக்கம் இன்றியமையாததாம். "நா வாகிய ஊற்றை அடைத்து விட்டால், இருதய ஊற்று திறக்கும்," என்று ஒரு முஸ்லிம் சாதகன் கூறுவதுண்டு.

1. வாயாடி யானவன் நாவை அடக்கும் பொருட்டு மௌன விரதம் பூணவேண்டும். விசேஷ அவசரம் இருந்தாலன்றி, வாரத்தில் ஒருநாளாவது பேசுவதை முற்றிலும் தவிர்ப்பதென்று ஒரு நியமம் வைத்துக்கொள்வது நலம்.

2. வாயாடி யானவன் பெரும்பொழுது ஏகாந்தத்தில் தனியே இருக்க முயலவேண்டும். இவ்வாறு சில நாள் தனித்திருக்கப் பயின்றால் வாயாடும் வழக்கம் குறையும்.

3. பெஞ்ஜமின் பிராங்கிளின் சில குறிப்பிட்ட குண நலன்களைப் பயிலவேண்டி ஒரு பட்டிகை ஏற்படுத்திக் கொண்டு, இன்ன நாளில் இன்ன குண நலனை எவ்வளவு மட்டும் பயில முடிந்ததென்பதை அறியும் பொருட்டு கைக்கொண்ட முறைகளை முன்னரே கூறியிருக்கிறேன். அம்முறைகளைக் கைக்கொண்டு நடந்து வந்தால் மிகுந்த நன்மை உண்டாகும்.

11. குதர்க்க விருப்பம்

எவ்வகையான சித்தாந்தத்துக்கும் வரமுடியாத விஷயங்களைக் கொண்டாவது நேர்மையை விடுத்தாவது தர்க்கித்தல் குதர்க்கம் எனப்படும். குதர்க்கமானது பக்தி நெறிக்கு மிகவும் பிரதிகூலமானதாம். குதர்க்கத்தினால் அகக் குழைவு குலையும்; அறிவு அலைவுறும். உள்ளத்தை நேர்மையாகவும் புத்தியை ஸ்திரமாகவும் வைத்துக் கொள்ள விரும்புகிறவன் ஒருகாலும் குதர்க்கத்தில் இறங்குவது கூடாது. வெறும் வாதத்தினால் ஈசுவர ஞானத்தை அடைய முயலும் தார்க்கிகனுக்கும் அன்பின் வழிநின்று அவ்வறிவை அடைய முயலும் பக்தனுக்கும் உள்ள வேற்றுமையை ராமாநந்த ராய் என்னும் மஹாபக்தன் இவ்வாறு விளக்கியிருக்கிறார்।—

அரஸஜ்ஞ காக சூஷே ஜ்ஞாந
நிம்ப ப்ஹலே,
ரஸஜ்ஞ கோகில க்ஹாய்
ப்ரேமாம்ர முகுலே;
அப்ஹாகியா ஜ்ஞாநீ ஆஸ்வாதயே
சுஷ்சஜ்ஞாந,
க்ரிஷ்ண ப்ரேமாம்ரித பாந கரே
ப்ஹாக்யவாந்।

—சைதந்ய சரிதாமிர்தம்.

“சுவையறிவற்ற காக்கை வேப்பங் கனியைக் கொத்தும்; சுவையறிவுடைய குயிலோ மாம்பூக்களை உண்ணும்; துர்ப்பாக்கியனாகிய ஞானி வறட்டு ஞானத்தைச் சுவைப்பான்; பாக்கியவானாகிய பக்தனே கிருஷ்ண ப்ரேமாமிர்தத்தைப் பருகுவன்.”

மற்றொரு வைஷ்ணவ கவி கூறுவதுபோல் உள்ளபடியே, “கிருஷ்ணன் பக்திக்கு வயப்பட்டவன்; தர்க்கத்துக்கு வெகு தூரமானவன்” தர்க்க வாதங்களால் ஒருவராலும் ஆண்டவனை உணர்ந்து அநுபவிக்க இயலாது.

ஏனெனில் அவன் "யதோ வாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மநஸா ஸஹ" என்றபடி வாக்குக்கும் மனத்துக்கும் எட்டாதவன்.

"அஸ்தீதி ப்ருவதோ' ந்யத்ர
கத்ஹம் தத் உபலப்ஹயதே ?"

"அப்பரம்பொருள் உளது என்று உரைப்பதன்றி வேறெவ்வகையில் உணரலாகும்?" என்று கடவல்லி சுருதி முறையிடுகின்றது. நமது மனத்துக்கு எட்டலாகாத விஷயங்களைப்பற்றி வீண் தர்க்கம் செய்து செய்து சிலர் வெறியராகி யிருக்கின்றனர். ஆங்கில கவிசேகரனாகிய மில்டன் இத்தகைய விஷயங்களைப்பற்றித் தர்க்கிப்பது மிக அஸங்கதம என்பதை நிரூபிக்க வேண்டிச் சயித்தானுடைய அநுசரர்களைத் தொன்மைக்கு நெய் ஆதாரமா, நெய்க்குத் தொன்மை ஆதாரமா வென்று 'மயிர் பிளக்கும்' வாதங்களில் ஈடுபட்டுள்ள குதார்க்கிகர் என்று வர்ணித்திருக்கிறான். அன்னார் 'in wandering mazes lost." எனவே, தர்க்க வியூஹத்திற் சிக்கிக் கொண்டு சுழன்று சுழன்று புத்தியைக் கெடுத்துக் கொள்ளுகின்றனர் என்று அம மஹாகவி கூறுகின்றான். நாரதரும் பக்தி ஸூத்திரத்திலே—

"வாதோ நாவலம்ப்ய:"

எனவே 'வீண்வாதத்தில் இறங்குதல் கூடாது,' என்கிறார். நம்மில் பலருக்கு வாதத் தினவு பெரிதும் பித்துக் கொள்ளுகிறது. அத் தினவு தீரச் சொறிவதாகிய குதர்க்கம் செய்யாமலிருக்க அவர்களால் முடிகிறதில்லை. கல்கத்தாவிலுள்ள மாணவர் விடுதிகளிலே இந் நோய் மிக மும்முரமாய்க் கூத்தாடுகிறது. இந்நோய் வாய்ப்பட்ட பிள்ளைகள் குதர்க்கம் நடப்பதற்கு ஆஸ்பதமாயிருக்கும் இடங்களை உடனே விட்டு விலகவேண்டும். சங்கீதத்தினால், சங்கீர்த்தனத்தினால், பக்தி நூல்களை ஓதுவதனால், சத்விஷயாலாபத்தினால் இருதயம் ஸரளத்தன்மையுறும்; அதனால் குதர்க்க விருப்பம் குறையும். ஆகையால் குதர்க்கப் பிரியர்கள் சங்கீதம் முதலியவற்றால் இருதயத்தை ஸரளமாக்கிக் கொள்ள முயலவேண்டும்.

12. சமயாசார ஆடம்பரம்

நம்மைப் பற்றி இருக்கும் பிரதான ரோகங்களில் சமயாசாரா ஆடம்பாமும் ஒன்ரும். பஹிரங்கமாய் நம் சமயாசாரத்தை ஒன்றுக்குப் பத்தாய் மிகைப்படுத்திக் காட்ட நாம் எப்போதும் கவலை கொண்டு பெருமுயற்சி செய்கிரும். தம்மை பக்தரென்றும் சாது புருஷரென்றும் தார்மிகரென்றும் பிறர் கருத வேண்டுமென்ற பேரவா நம்முள் பலரிடம் பற்றியெரிகிறது. இதனுல் வெளிவேஷம் பூண்ட சமய வொழுக்கத்தில் விருப்பம் மேலிட்டு அந்தரங்கமான உண்மைச் சமய உணர்ச்சி கொஞ்ச நஞ்சம் இருப்பதுவும் படிப்படியாய்க் குன்றி விடுவதன்றிப் பல வகையான மனோ விகாரங்களும் தோன்ரு நிற்கும். இக் கபடத்தன்மைக்கு மருந்து கபடத் தன்மையேயாகும். பிரஹ்ம ஸமாஜப் பிரமுகர்களில் ஒருவரும் நவவிதானப் பிரவர்த்தகருமாகிய ஆசாரிய கேசவ சந்திர சேநன் என்னும் பெரியார் பிரஹ்மோபாஸநர்களை நோக்கி இது விஷயமாய் ஓர் இனிய உபதேசம் புரிந்திருக்கிருர். அவர் அவர்களை விளித்துக் கூறியதாவது:—இந்நிலவுலகில் சில கபடிகளாகிய தூர்த்தர்களின் உள்ளம் இருண்டிருக்கலாம்; ஆனுல் அவர்கள் சாது வேஷம் பூண்டு வெளித் தோற்றத்தில் ஒளியோடு திகழ்வர். பிரஹ்மோபாஸகர்களே! உங்களுடைய உள்ளம் ஒளியோடு திகழட்டும், புறக்கோலம் இருண்டு தோன்றட்டும். உங்களுடைய உள்ளங்களிலே ஆண்டவனது அன்பாகிய அமுதத்தை மறைத்து வைத்துக் கொள்ளுங்கள்......ஹே பிரஹ்ம சாதகர்களே! ஆத்ம சுத்தியின் பொருட்டும சித்த சுத்தியின் பொருட்டும் நீங்கள் உபவாசம் அநுஷ்டித்தால், நீங்கள் பட்டினி கிடப்பதைப் பிறர்க்கு உணர்த்தக்கூடிய புறக்குறிகள் உங்கள் முகத்தில் தோன்ருதிருக்க வேண்டிய அளவு மட்டும் போதியதான சொற்ப உணவு உட்

கொள்வது நலம்......பிறர் முன் உங்களைச் சாதுக்களென்று அறிவித்துக் கொள்ள ஒருகாலும் முயலாதேயுங்கள். ஒருவனிடம் ஒரு சிறிது தர்மசீலத்தின் தோற்றத்தைக் கண்ட மாத்திரத்தில், அவனைக் கௌதம புத்தனைப்போன்ற தியாக மூர்த்தியென்றும், இயேசு கிரிஸ்துவைப்போன்ற பதித பாந்தவனென்றும், ஸ்ரீகிருஷ்ண சைதந்யனைப்போன்ற மஹா பக்தனென்றும் ஜனங்கள் எண்ணி விடுவார்கள். ஒருவனது உள்ளத்தில் வைராக்கியமென்பது மருந்துக்குக்கூடக் கிடையாமலிருந்தும், அவனது இடுப்பில் ஒரு சிறிய காவித்துணியைக் கண்டுவிட்டால் ஜனங்கள் அவனை முற்றும் துறந்த முனிவனென மதித்து, அவனது பாததூளியைச் சென்னிமேற் கொள்ள முற்படுவர். ஏனெனில் அஞ்சு பைசாவுக்கு வழியில்லாதவனை லக்ஷாதிபதியென்று பேசுவது உலக இயற்கையாயிருக்கிறது. ஆகையால் உலகத்தாரின் புகழ்ச்சி மகிழ்ச்சிகளை நீங்கள் சற்றும் பொருட் படுத்தக் கூடாது. தர்ம சம்ரக்ஷணத்தின் பொருட்டு நீங்கள் எவ்வளவோ கஷ்டங்களை அநுபவித்திருந்தபோதிலும், அவற்றை வீடு வீடாய்ப் பறை சாற்றித் திரிய வேண்டாம். உபவாஸமிருந்தால் நீங்கள் உபவஸிக்கிற செய்தி பிறருக்குத் தெரியாதிருக்கும்படி வீட்டுக்குள்ளேயே இருங்கள்.........ஒரு நாள் ஸ்வயம்பாகம் செய்து, நாமே சமையல் செய்து உண்கின்றோம். அல்லது ஒரு நாள் ஓர் இனிய கனியைத் தின்னாமல் இருந்து விடுகிறோம். அடுத்த நாளே அச் செய்தி பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டு எங்கும் பரவி விடுகிறது. உடனே எல்லோரும், ஆஹா, என்ன இவர் தம் வைராக்கியம்! ஆண்டவனிடத்து இவருக்கு என்னே ஆழ்ந்த காதல்! என்றும், இன்னும் பலவாறாகவும் புகழ்ந்து கொண்டாடத் தொடங்கி விடுவார்கள். ஆகவே, மெய்க் கடவுளின் அடியார்களே, ஜாக்கிரதை, இத்தகைய பொய்ப் புகழ்ச்சிகளால் மோசம் போகாதீர்கள். இத்தகைய வார்த்தைகளைக் கேட்கும்பொழுதே செவிகளை மூடிக் கொள்ளுங்கள்.........நீங்கள் புண்ணிய சீலங்களைப் பயிலும்போதே, உங்களை மறைத்துக் கொள்ளுங்கள். எவ்வகை வெளி ஆடம்பரத்தினாலும் உலகத்தாரின் புகழ்ச்சியையோ உவகையையோ அடைய ஒருகாலும் விருப்பங்

கொள்ள வேண்டாம்......நீங்கள் உங்கள் தர்ம சீலத்தை மக்களின் முன் பறை சாற்றிக்கொள்ள முயலுமிடத்தே, உங்களுக்குள்ளும் உலகத்துக்கும் கெடுதியே விளையும்." இயேசு கிறிஸ்துவும் இவ்வகைக் கபடத் தன்மையைத் தம் சிஷ்யர்களுக்குக் கற்பித்தார். பிறர் எவருக்கும் தெரியாத வண்ணம் தானம், ஈசுவரப் பிரார்த்தனை, உபவாஸம் இவற்றைச் செய்யும்படி அவர் உபதேசித்தார். எவரும் தாம் அருமையாய்ப் பொன்னேபோல் பாராட்டும் பொருளைப் பலர் காணும்படி கடைத்தெருவில் பரப்பி வைக்கமாட்டார்களென்று நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். பகவானிடத்தில் பாரமார்த்திகமான பக்தியுடையவன் பக்தி பக்தி என்று பறையறைந்து தன்னைப் பரம பக்தனென்று பலருக்கும் முன்னே ஒருகாலும் பஹிரங்கப்படுத்திக் கொள்ளமாட்டான். ஆனால் அந்த பக்தியானது அவனுடைய சிந்தையிலும் சொல்லிலும் செய்கையிலும் தானாகவே பிரகாசிக்கும். நெருப்பை எப்படி மூடி வைக்க முடியாதோ, அப்படியே பக்தியையும் மூடிவைக்க முடியாது. பக்தனை அவன் கண்களைக் கொண்டே தெரிந்து கொள்ளலாம். அவனை இவ்வாறு எளிதில் கண்டு பிடித்துவிடலாமாயினும், நம்மைப்போல் அவன் வலுவில் தன்னை பக்தனென்று காட்டிக் கொள்ள முயலான். தம்மை ஜனங்கள் எங்கே தெரிந்து கொண்டு விடுகிறார்களோ என்ற அச்சத்தினாலேயேபோலும் பெரும்பான்மையரான சாதுக்களும் சந்நியாசிகளும் ஒரே இடத்தில் மூன்று ராத்திரிக்குமேல் தங்கி யிருப்பதில்லை. ஒருகால் இந்த பாரிஸால் பட்டணத்துக்கு ஒரு சாது வந்திருந்தார். அவர் கொஞ்ச நாள் ஆற்றங்கரையில் தங்கியிருந்த வரையில், அவரைச் சாதுவென்று ஒருவரும் தெரிந்து கொள்ளவில்லை. பிறகு அவர் ஊருக்குள் நுழைந்து ஒவ்வொரு வீட்டின் எதிரிலும் நின்று பகவந் நாம சங்கீர்த்தனம் செய்யத் தொடங்கினார். அதைக் கண்ட சிறு பிள்ளைகள் அவரை ஒரு பைத்தியக்காரனென்று நினைத்து, அவர் பின்னே ஹை ஹை என்று கூப்பாடிட்டுக் கொண்டு திரியலானார்கள். கடைசியில் அவருடைய மகிமையை நாங்கள் அறிந்து கொண்டு அவரை எல்லோரும் பக்தி சிரத்தையுடன் உபசரிக்கத்

தொடங்கினேம். இதை அவர் கண்டபொழுது, இனி இந்த ஊரில் தங்கியிருத்தல் கூடாதென்று இரண்டுநாள் கழித்து வேற்றூருக்குச் செல்லப் புறப்பட்டுவிட்டார். ஏன் இவ்வூரை விட்டுப் போகிறீர் என்று அவரை ஒருவன் கேட்டதற்கு, இவ்வூர் எனக்கு அதிக உஷ்ணமா யிருக்கிறது. இதைத் தாங்க என்னல் முடியவில்லையென்று சொன்னர். எனவே ஊரார் அவர் பெருமையை உணர்ந்து எங்கும் அவரைப் பாராட்டி அதிகமாய்ப் பேசத்தொடங்கிவிடவே, இனி இங்கிருத்தல் நமது பார மார்த்திக க்ஷேமத்துக்குப் பொருந்தாதென்று அவருக்குத் தோன்றிவிட்டது. உண்மைச் சாதுக்கள் தம்மை எளிதில் வெளிப்படுத்திக் கொள்ள விரும்புவதில்லை. 'குறைகுடம் கூத்தாடும்' என்ற பழமொழியின்படி உள்ளுக்குள்ளே லொட லொட்டையாய் இருப்பவரே ஆடம்பரம் பண்ணிக்கொண்டு திரிவர். அறவொழுக்கத் தில் வீண் ஆடம்பரம் செய்வது பொருள் நிறைவற்ற வெறுமையான உள்ளத்தையே உணர்த்துவதாகும்.

அகாத்ஹ ஜல சஞ்சாரி
விகாரீ நைவ ரோஹித:,
கண்டுஷ ஜல மாத்ரேண
சப்ஹரி ப்ரஹர்ப் ஹராயதே."

"ஆழமான நீரில் வாழும் ரோஹிதம் என்னும் மீன் தன் உடலை ஒருகாலும் ஆடம்பரமாய்க் காட்டிக்கொள்வ தில்லை. சபரி என்னும் சிறு மீனே சேரங்கை நீரிலும் பர பரப்பாய்த் துள்ளியெழும்."

அத்தகைய ஆழ்ந்த நீரில் வாழ்ந்த ஒரு மீனின் கதை யைச் சொல்லுகிறேன், கேளுங்கள்.

இராணி அஹல்யா பாயின் பெயரை எல்லோரும் கேட்டிருப்பீர்களே. அவளுடைய புருஷனுகிய ஹோல் கார் ராஜகுமாரன் ஒருகாலும் ராமநாம சங்கீர்த்தனம் செய்யாதவனும். அஹல்யையோ பரம பக்தை; தன் புருஷன் ராம நாம சங்கீர்த்தனம் செய்யாததைப் பற்றி அவள் வருந்தினவளாய்த் தன் இஷ்ட தெய்வத்தின் பெயரை ஒரு தரமாகிலும் உச்சரிக்கும்படி அவனைப் பல

முறைகள் கெஞ்சி வேண்டிக் கொள்ளலானாள். என்ன சொல்லியும் புருஷன் கேட்கவில்லை. ஆகையால் தன் புருஷனுக்கு நற் புத்தி யளிக்கும்படி அவள் ஸ்ரீராம பிரானை அல்லும் பகலும் பிரார்த்தித்து வந்தாள். இப்படி யிருக்கையில் ஒரு நாள் காலையில் அஹல்யா பாய் ஆநந்த பரவசையாகி அரண்மனைத் திவானை அழைத்து, "எனக்கு இன்று அளவற்ற ஆனந்தம் உண்டாயிருக்கிறது காரணம இன்னதென்று சொல்லமாட்டேன். நகர முழுவதும் ஆனந்தோத்ஸவம் கொண்டாட வேண்டும். ஆயிரக் கணக்கான பிராஹ்மணர்களுக்கு அன்னமிட வேண்டும். பல்லாயிரம் ஏழை எளியவர்களுக்குத் தான தர்மம் செய்ய வேண்டும். எங்கும் வாத்திய கோஷம் முழங்க வேண்டும். இதற்கெல்லாம் காரணம் ஒன்றும் கேட்காமலே, நான் இடும் கட்டளையை நிறைவேற்றும்," என்று ஆக்ஞாபித்தாள். திவானும் அக்கட்டளையை ஏற்றுத் தக்க ஏற்பாடுகள் செய்யவே, நகரமெங்கணும் ஒரே ஆனந்த கோலாஹலமாய்விட்டது. இது இராணியின் கட்டளை யென்று எல்லோரும் சொல்லிக் கொண்டார்களேயன்றி இவ்வளவு ஆனந்தக் கொண்டாட்டத்துக்கும் காரணம் இன்னதென்று ஒருவருக்கும் தெரியவில்லை. அரசிளங் குமரன் இதை யெல்லாம் கண்டு பிரமித்துப் போனான். எவ்வளவு முயன்று விசாரித்தும், காரணம் இன்ன இன்னதென்று அவனுக்குத் தெரிந்து கொள்ள முடியவில்லை. யாரைக் கேட்டாலும், 'ராணியின் கட்டளை' என்கிறார்களே யன்றி, காரணம் கூற ஒருவராலும் ஆகவில்லை. கடைசியில் அவன் அஹல்யாபாயிடம் சென்று கேட்டான். அவள் ஒன்றும் பேசவில்லை. அதனால் அரசிளங் குமரன் மிக வருந்தித் தன்மேல் அதிருப்தியாயிருப்பதைக் கண்டு அவள், "நாதா, இன்று எனக்கு உண்டாயிருக்கும் உள்ளப் பூரிப்பை என்னென்று சொல்லுவேன்? இன்று நான் நெடுநாளாய்க் கோரி வந்தது நிறைவேறி விட்டது. இத்தனை நாளாக எந்த நாமத்தைச் சொல்லும்படி தங்களைப் பல்லாயிரம் முறை பிரார்த்தித்தேனோ, நான் எத்தனையோ தரம் காலில் விழுந்து கெஞ்சிக் கேட்டுக் கொண்டும் எதைத் தாங்கள் சொல்ல இசையவில்லையோ, அந்தத் திருநாமத்தை, இம்

மண்ணுலகத்திலே எனக்கு அமிர்தத்தைக் காட்டிலும் இன்சுவை மிக்க அந்தத் திவ்ய நாமத்தை, என் உயிரினும் அருமையான உயர்நலம் அளிக்கும் அவ் வொப்புயர்வற்ற உத்தம நாமத்தைத் தாங்கள் நேற்றிரவு சொப்பனத்தில் பல தடவை உச்சரித்தீர்கள். இன்றெனக்கு நற்பொழுது புலர்ந்தது. இன்றே என் வாழ்வு விழுப்பமுற்றது. என் மனோரதம் பலித்துவிட்டது. ஆகையினாலேயே இவ் வாரந்தத் திருவிழா நிகழ்கின்றது," என்றாள். அரசிளங் குமரன் சற்று நேரம் இமையா நாட்டத்துடன் அசை வற்று நின்று "எந்த நாமம்? எந்த நாமத்தை நான் உச்சரித்துவிட்டேன்?" என்று அஹல்யையை ஆத்திரத் துடன் கேட்டான். "ராம நாமம்" என்றாள் அஹல்யை —அதைக் கேட்டதும் அரசிளங் குமரன்—"ஆ! இத்நே ரோஜ் ஜிஸ் த்ஹந் கோதில்கே பீச் ச்ஹிபாயே ரக்ஹா த்ஹா, வஹீ த்ஹந் மேரா நிகல் ஆயா!" எனவே—"ஆ! இத்தனை நாளாக எந்தச் செல்வத்தை உள்ளத்திடையே மறைத்து வைத்திருந்தேனோ, அந்த என் செல்வம் வெளிப் பட்டு விட்டதே!" என்று வியப்புடன் ஓலமிட்டான். அந்த க்ஷணமே நிலத்தில் விழுந்து உயிர் நீத்தான். அப் பொழுது அஹல்யாபாய் ஊமைபோல் உரையற்று ஸ்தம்பித்து நின்றுவிட்டாள். அப்பொழுதுதான் அவளுக் குத் தன் கணவன் ஸாமாந்ய மனிதன் அல்லவென்று விளங்கிற்று. மானிட வடிவம் தாங்கியிருந்த அத்தகைய தெய்வத்தின் திருவடித் தொண்டு புரியப் பெற்றதனால் தான் ஜந்ம ஸாபல்யம் அடைந்ததாக உணர்ந்து மகிழ்ந் தாள் அந்தப் பரம பக்தை.

ஸ்ரீராம கிருஷ்ண பரம ஹம்ஸர் அடியில் வருமாறு பொருள்படப் பாடியிருக்கிறார்.

> "அருட் சக்தி வடிவினளாகிய சியாம சுந்தரியாம் அன்னையைப் பெருநிதியம்போல் ஆதரவுடன் உன் உள்ளத் தில் வைத்துப் போற்றுவாய், நெஞ்சே, நீயும் நானுமன்றி மற்றெவரும் அவளைக் காணவொட்டாமற் பாதுகாத்துக் கொள்."

ஹபீஸ் என்னும் பாரசீக கவி கூறுகிறார்:—

> "உன் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட மெழுகுப் பாவை நிகர்த்த அத் திவ்ய மோஹனாங்கியுடன் நிர்ஜனமான

ஏகாந்த ஸ்தலத்துக்குச் சென்று சுகமாய் உட்கார்ந்து கொண்டு உன் ஆசை தீர அவளிடமிருந்து புதுப்புது முத்தங் களைப் பெற்றுக்கொண்டிரு.''

கடைத் தெருவில் தன் பக்தி நெறியைப் பறை சாற்ற பக்தன் ஒருகாலும் விரும்பமாட்டான். அவன் உலகத் தின் சந்தை யிரைச்சல் கேட்காத பரம ஏகாந்தப் பிரதேச மாகிய இருதயத்தின் ஆழ்ந்த அடித்தலத்திலே, தன்னை நாடிய தன் உயிர் நாதனை உடன் வீற்றிருக்கச் செய்து உள்ளம் பூரித்து இவ்வாறு முறையிடுவான்.

"ஆண்டவனே, நின்னை அல்லும் பகலும், சதாகாலமும் என் நெஞ்சிடை ஒருவர் கண்ணிலும் படாமல் ரகசியமாய் வைத்துப் போற்றப் பெரிதும் விழைகின்றேன்.''

சமயாடம்பரம் கூடாதென்றதனாலேயே சமயத்தைப் பற்றிய எவ்வகைப் பேச்சும் நிகழ்த்தக்கூடாதென்று நீங்கள் எண்ணிவிடலாகாது. மேற்கூறிய அஹல்யா பாயின் கணவனைப்போல் பக்திச் சுவை நிறையப் பெறுத உள்ளமுடையவர்கள் பரஸ்பரம் சமய விஷயமாய்ப் பேசிக் கொள்ளாவிட்டால், சமயப் பற்றைக் காத்துக் கொள்வது அரிதல்லவா? பக்தியற்ற எம்போலியரின் உள்ளத்தில் பக்தியை நிலைப்பிக்க வேண்டிச் சமய விஷய மான சம்பாஷணை அத்தியாவசியமாகும். ஆனால் ஆடம் பரத்தின் பொருட்டும் புறத்தே காட்டிக் கொள்ளும் பொருட்டும், சமயப் பிரசங்கமாவது சமயாநுஷ்டானமாவது செய்வது கூடாதென்னும் விஷயத்தில் ஜாக்கிரதையா யிருக்க வேண்டும். இனி, மெய்யடியாராய் உள்ளவர்களுக்கும் பிறரது உள்ளங்களில் பக்தி தோன்றுமாறு சமய விஷயங்களைப் பற்றிப் பேசுவது உற்ற கடனாம். அவர்கள் வாய் திறந்து பேசாவிடினும், தமது குறிப்பாலும் கண் பார்வையினாலுமே பக்தியைப் பிரசாரம் செய்யா நிற்பர். அஹல்யாபாய் கூர்ந்த உள்நோக்குடையவளாய் இருந்திருப்பின், தன் பதி பரம பக்தன் என்பதை அறிந்துகொண்டே யிருப்பள்.

13. லோக பயம்

இவ் அத்யாயத்தை முடிக்கு முன் இன்னொரு தடையைக் குறித்துப் பேசவேண்டியிருக்கிறது. பக்தி மார்க்கத்தில் விசேஷ பிரதிபந்தமாயிருப்பது லோக பயமாம். நாம் பல சமயங்களில் லோக நிந்தைக்கு அஞ்சி நற்காரியங்களைச் செய்யாமல் இருந்துவிடுகிறோம்; அது மட்டுமின்றி மனிதத் தன்மையையுமே இழந்துவிடுகிறோம். லோகநிந்தைக்கு அஞ்சுகிறவன் எவ்வளவு மதிகேடனாகக் கூடுமென்பதை விளக்க ஒரு திருஷ்டாந்தம் கூறுகிறேன்:-

வங்க நாட்டின் ஒரு முக்கிய பட்டணத்திலே ஒரு வாத்தியார் இருந்தார். இந்த கனவானுக்குத் தன்னைப் பற்றி ஜனங்கள் என்ன நினைத்துக் கொள்ளுகிறார்களோ வென்ற பயம் பலமாயிருந்தது. ஒரு நாள் அவர் தன் வீட்டுக் கிணற்றிலிருந்து தண்ணீர் சேந்திக் கொண்டிருக்கையில் சில நண்பர்கள் அவரைக் காணவந்தார்கள். அவர்கள் அருகில் வந்து; "வாத்தியாரே, என்ன செய்கிறீர்?" என்று கேட்கவும், வாத்தியார் தனக்கு வேலைக்காரர்கள் இல்லாமையைப் பற்றி அவர்கள் என்ன எண்ணிக்கொள்வார்களோ என்று வெட்கித் தாம்பையும் தோண்டியையும் மெல்லக் கிணற்றில் விட்டுவிட்டு, "அப்படி ஒன்றுமில்லை; கிணற்றின் ஆழம் எவ்வளவென்று பார்த்துக் கொண்டிருக்கிறேன்," என்று விடை யுரைத்தார்! பாவம். இந்த கனவான் லோக நிந்தை யச்சத்தினால் தோண்டியை இழந்தார். நம்மிற் பலர் இந்த வாத்தியாரைப் போலவே இருக்கிறோம். நாம் பல தடவைகளிலும் லோகநிந்தைக்கு அஞ்சி இம்மையிலும் மறுமையிலும் பெரு நிதியமான பரமார்த்தத்தைப் பாதாளத்தில் எறிந்துவிட்டு வறியராகிறோம். எம்பெருமானுடைய திருநாமத்தைச் சொல்லிச் சிறிது நேரமாயினும் சிந்திக்கவோ ஏகாந்தத்திலிருந்து அவனைத் தியானிக்கவோ விருப்பம் உண்டாகும்பொழுதே அப்படிச் செய்வதைக் கண்டு பிறர் பரிஹஸிப்பார்களோ

அலைக்கழிப்பார்களோ என்று ஐயங் கொண்டு, அம் முயற்சியை அடியோடு விட்டுவிடுகிறோம்.

நேர்மையோடு நடக்கிறவன் இவ்வுலகில் பலகாலும் பழிப்புக்காளாகவும், பலவகைத் துன்பங்களுக்கு உட்படவும் வேண்டி வருகிறது. எனக்குத் தெரிந்த ஓர் இளைஞன் சர்க்கார் உத்தியோகத்துக்கு அபேக்ஷகனயிருந்தான். அவனுக்கு எவ்வளவு வயதாயிற்றென்று கேட்கப்பட்ட பொழுது, இருபத்தைந்து வயதுக்கு மேற்பட்டவர்கள் சர்க்கார் உத்தியோகத்தில் அமரத் தகுதி பெற்றவராகாரென்று அவனுக்குத் தெரிந்திருந்தும், தன் உண்மையான வயது இருபத்தாறென்று சொன்னன். தன் வயதைப் பொய்யாகக் குறைத்துக் கூறுவது எவ்வளவோ எளிதாயிருக்க; அதைவிடுத்து இப்படி உண்மையான வாக்கு மூலங் கொடுத்ததைப்பற்றி அவனை முட்டாளென்றும், பிழைக்கத் தெரியாதவனென்றும் என் நண்பரிற் பலர் பேசலாயினர். மனிதனைவிடக் கடவுளை அதிகமாய் அஞ்சுகிறவனுக்கு நமக்குள்ளே முட்டாள் பைத்தியக்காரன் என்ற பட்டங்களே பெரும்பாலும் அளிக்கப்படுகின்றன. அவனும் பேசாமல் அவற்றைப் பொறுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. அநியாயத்தை, அக்கிரமத்தை, துராசாரத்தைக் கடிந்து சீர்திருத்தும் பணியை மேற்கொண்ட உலகத்து உத்தமப் பெரியாரின் வாழ்க்கை வரலாறுகளை ஆராய்ந்து பார்த்தால், அவர்கள் எவ்வளவு துன்பங்களைச் சகிக்க நேர்ந்ததென்பது விளங்கும். இயேசுநாதர் பாவத்தை எதிர்த்துப் பரமபிதாவின் அருள் வழிகளைப் பிரசாரம் செய்ததற்காகச் சிலுவையில் அறைந்து கொல்லப்பட்டார். மஹாபக்தனுகிய ஸ்ரீசைதந்ய ஸ்வாமியைப் புரட்டனென்றும் பாஷண்டனென்றும் தூற்றுவோர் இன்றைக்கும் நம்முள் இருக்கிருர்கள். தம் மக்களை அறநெறியினின்றும் பிறழச் செய்ய வழி தேடும் பெற்ருேரையும் சிற்சில சமயங்களில் பார்க்கிருேம். இதைவிட வருந்தத் தக்கது வேருென்றுண்டோ?

ஆனல், யார் எவ்வளவு எதிர்த்தபோதிலும், மெய்யடியார்கள் ஆண்டவன் திருவடிகளில் கொண்டுள்ள மிகுந்த நம்பிக்கையினின்றும் என்றும் அசையமாட்டார்கள்.

அறத்தை நிலைநிறுத்தும் திருப்பணியில் தீயோரின் கொடுமைகளுக்காளாகித் தம் உயிரையும் பலிகொடுத்து இப்பூகலத்தைப் புனிதமாக்கிய பெரியார் ஆயிரக்கணக்காய் உளர். அவர்களை நினைவுகூர்ந்தாலுமே வாழ்க்கை தூய்மையடையும். அன்னாரின் அடிச்சுவடுகளைப் பின்பற்ற வேண்டி உயிரையும் விடத்தகுமே; லோக நிந்தையால் வரும் துன்பம் ஒரு பொருட்டா? ராமப்ரஸாத சேநன் இவ்வாறு பாடியிருக்கிறார்:—

ஜய காலீ ஜய காலீ போலோ
லோக போலே போல்பே பாகல் ஹோ' லோ''

''வெல்க காளி வெல்க காளி என்றுரை.
வெறியனென்று மனிதர் கூறின், கூறுக.''

இதுவே பக்தர்களின் உண்மையியல்பு. உலகத்தாரின் பழிப்புரையை நாம் ஏன் அஞ்ச வேண்டும்? அதனால் பிராண பயம் இல்லையே? அன்னாரின் தீப நாவை அஞ்சி உத்தம புருஷார்த்தத்தை இழப்போமா? ஆண்டவனுடைய தோழமையின்பத்தை நுகர விரும்புகிறவன் மனிதர் என்ன சொல்வார்களோவென்று ஏன் கவலவேண்டும்? ஒரு பக்தன் பரமானந்த மேலீட்டினால் இவ்வாறு கூறுகின்றான்:—

''உனக்கும் எனக்கும் காதல் இசைந்து விட்டது. அதைக் கண்டு ஜகத்தார் வீண் பழி தூற்றுகிறார்கள். அவர்கள் வாயில் வந்தபடி உளறிக் கொட்டட்டும். ஆனால் நீயும் நானும் களிப்புடன் சரியான காரியத்தையே செய்து வருகிறோம். நாம் ஒருவரோடொருவர் காதற் பாசத்தினால் கட்டுண்டிருப்பது நலமே தருவதாம். யார் எதை வேண்டுமானாலும் சொல்லிக் கொள்ளட்டும்; அது நமக்கு வரவு செலவில்லை!

ராதை* தனக்குக் கண்ணனிடமிருந்த அந்யோந்ய பாவத்தைக் குறித்துத் தன்னுடைய நாத்தனார் பெருங்

---

* ராதை கண்ணனுக்கு வதுவை செய்யப்பட்ட மனைவியல்ல, அவள் அவனுடைய பந்து ஒருவனுடைய மனைவியாயிருந்தும். பிந்திய வைஷ்ணவ நூல்களிலே கண்ணனது காந்தாமணியாகவே பேசப்படுகிறாள். கண்ணன் திருமாலின் அவதாரம்; திருமாலின் பத்தினியாகிய திருமகளின் அவதாரம் ராதை என்பது அந்நூல்களின் கொள்கை.

கிளர்ச்சி செய்ததைப் பொறுக்கமாட்டாமல் ஒரு நாள் இவ்வாறு துணிந்து கூறலானாள் :—

"அக்கா, கிருஷ்ணனுடைய காதற் கடலில் ராதை ஆழ அமிழ்ந்து விட்டாளென்று உனக்கிஷ்டமானால் ஊரெங்கும் போய்ப் பறைசாற்று."

இத்தன்மையாகவே பக்தி நெறியில் முன் செல்ல வேண்டும். அப்படிச் செல்வோனை உலகத்தார் பைத்தியக்காரன், மூடன், தன்னலம்விரும்பியென்று சொன்னாலும், அவன்மீது மண்ணை வாரித் தூற்றினாலும், அவனை வேறெவ்விதமான வாதைக்குட்படுத்தினாலும், அவன் சற்றும் பின் வாங்காமல் உறுதிப்பாட்டுடன் இருக்க வேண்டும்.

1. லோக நிந்தையை அஞ்சுவதனால் நமக்கே உண்டாகும் பெருந் தீங்கையும் நம்மால் சமூகத்துக்கு உண்டாகும் கேட்டையும் குறித்துச் சிந்திக்க வேண்டும். ஜில்லா கோர்ட்டில் குமாஸ்தாவாய் இருக்கிற ஒருவனுக்கு மாதச் சம்பளம் ரூ. 20. அவன் தானே கடைக்குப் போய்த் தன் வீட்டுக்கு வேண்டிய காய்கறிகளை வாங்கி வருவது பிறர் பார்வையில் தனது அந்தஸ்துக்குக் குறைவாகுமென்றும், ஒரு வேலைக்காரனை வைத்துக் கொள்ளாமற் சாயாதென்றும் நினைத்துக்கொண்டு மாதம் நாலு ரூபாய் சம்பளத்துக்கு ஒரு வேலைக்காரனை வைத்துக் கொள்ளுகிறான். சம்பளத்தைத் தவிர அவனுடைய சாப்பாட்டுக்காக இன்னொரு நாலு ரூபாய் பிடிக்கும். ஆகவே சேவகன்பொருட்டு இந்த உத்தியோகஸ்தன் மாதம் ஒன்றுக்கு எட்டு ரூபாய் செலவழித்து விட்டால், அவன் சம்பளத்தில் பாக்கியிருக்கும் 12 ரூ. அவனுடைய குடும்ப போஷணத்துக்குப் பற்றாது. ஆகையால் தன்னிடம கச்சேரி வேலையாய் வரும் கட்சிக்காரரிடம் இடது கையை நீட்ட வேண்டி வருகிறது. அப்படி நீட்டி வாங்குவதைச் சில சமயம் தேடு கட்டணம் என்கிறான், இடைக்கிடையே தாக்கல் கட்டணம் என்கிறான், எப்போதாவது இனும் என்கிறான், எட்டிலே பத்திலே 'மாமூல்' 'மரியாதை' என்கிற கௌரவ நாமகரணமும் அதற்கு உண்டாய் விடுகிறது. 'லஞ்சம்' வாங்குவோரில் பலர்

இவ்வாறு சொல்லிக் கொள்வது சர்வ சகஜமாயிருக்கிறது. எப்படியெனில்—"ஐயா, நான் என்ன செய்வேன்? கௌரவமான குடும்பத்தில் பிறந்து, வேலைக்காரன் செய்ய வேண்டிய வேலையை நானே எப்படிச் செய்து கொள்ளக் கூடும்? வேலைக்காரரை வைத்துக் கொள்ளாவிட்டால், பத்துப்பேர் என்ன சொல்லமாட்டார்கள்? எனக்கு வரும் சம்பளமோ தெரிந்தே இருக்கிறது? சமையலுக்கு ஒரு பிராஹ்மணனையும் மற்றச் சில்லரைவேலைகளுக்கு ஒரு வேலையாளையும் வைத்துக் கொள்ள வேண்டுமானால், என் குடும்பத்தை நடத்த இந்தச் சொற்ப சம்பளம் எப்படிப் பற்றும்? மேல் வரும்படிக்குக் கையை நீட்டாவிட்டால் விதியில்லை. என்ன செய்கிறது?" என்கிறார்கள். 'கௌரவ' வம்சத்திற் பிறந்த இந்த கனவான்கள் 'பத்துப் பேர் என்ன சொல்ல மாட்டார்கள்?' என்று நினைத்துத் தருமத்தைக் கை விடுகிறார்களே, இவர்கள் எவ்வளவு புத்திசாலிகள்!

அடிக்கடி நாம் லோக பயத்தினால் குற்சிதமான கேளிக்கைகளில் கலக்க வேண்டி வருகிறது. "இன்று ஒரு சுற்றத்தான் வீட்டில் தாசிக் கச்சேரி நடக்கப் போகிறது. இவ்வகை ஆட்டங்களுக்குப் போகக்கூடா தென்று நான் இரண்டு மூன்று தடவை பிரசங்கம் பண்ணி யிருக்கிறேன். ஆனால் இப்பொழுது என்ன செய்கிறது? அழைப்புப் பத்திரிகை வந்திருக்கிறது, போகாவிட்டால் ஊரார் என்ன சொல்வார்களோ? விசேஷித்து, அவ்வுற வினனும் வருந்துவானே. ஆகையால் போகத்தான் வேணும்," என்றிப்படி யோசித்து நாம் பல காலும் தீய காரியங்களில் சம்பந்தப்பட்டு மதியைக் கெடுத்துக் கொள்ளுகிறோம். ஒருவன் பால்ய விவாகத்துக்குப் பரம வைரியாய் உள்ளவன். ஆனால் ஊரார் என்ன சொல்வார் களோ என்றஞ்சித் தன் மக்களின் பிற்கால நலத்தைக் கருதாமல் இளம்பிராயத்திலேயே அவர்களுக்குக் கலியா ணஞ் செய்வித்துப் பெருந் தீங்கிழைக்கிறான். இவ்வாறு லோக பயத்தினால் தமக்கும் பிறருக்கும் கேடு சூழும் செய்கைக்கு எடுத்துக் காட்டுக்கள் பலவற்றைப் பெருக் கிக்கொண்டே போகலாம்.

2. பெரியார்களின் வாழ்க்கை வரலாறுகளை ஆராய்ந்து பார்க்குமிடத்தே, அவர்கள் உண்மையெனக் கொண்டதை உறுதியாய்க் கடைப்பிடித்து எப்போதும் நடந்திருக்கிறார்களென்றும், பிறர் என்ன நினைக்கக்கூடும் என்பதை ஒருகாலும் எள்ளளவேனும் கருதவில்லையென்றும் உணரலாகும். இவ்வுணர்ச்சி எவ்வளவுக் கெவ்வளவு நம் உள்ளத்தில நிலை கொள்ளுகிறதோ, அவ்வளவுக் கவ்வளவு உலக நிந்தையச்சம் குறையும். அறத்தின் பொருட்டும் வாய்மையின் பொருட்டும் அப் பெரியார்கள் காட்டிய வெல்லற்கரிய திண்மைத் தழலின் ஒரு பொறியையேனும் ஒருவன் பற்றுவானாயின், அது அவனுக்குள்ள உலக நிந்தையச்சத்தை நீறாக்கி விடும்.

3. இன்னொரு விஷயத்தையும் உள்ளத்தில் வைத்துக் கொண்டால் உலக நிந்தையச்சம் பெரும்பாலும் குறையும். இவ்வுலகில் ஒரு நல்ல காரியத்துக்கு முதலில் பரம விரோதிகளாயிருந்தவர்களே இறுதியில் அதற்கு அத்தியந்த உபகாரிகளாய் மாறி விட்டதற்கு எண்ணிறந்த உதாரணங்கள் இருக்கின்றன. அறமும் வாய்மையும் எப்பொழுதாகிலும் வெற்றி அடைவது திண்ணம்: ஒரு சில நல்லோரைப் பழியாமல் நீர் அருந்துவதில்லையென்றிருந்தவர் பலர் காலக்கிரமத்தில் அன்னாரை நெஞ்சாரவியந்து கொண்டாடும் அன்பர்களாய் மாறியதை நான் கண்டிருக்கிறேன். பல சவுல்கள்* இவ்வுலகில் 'பவுல்'

---

* சவுல் என்பவன் யூத ஜாதியிற் பிறந்து யூதவேத பாரகனாகிக் கிறிஸ்துவின் காலத்திற்குப் பின் அவருடைய அடியார்களுக்குப் பரம விரோதியாயிருந்தவன், அவன் இயேசுவின் சிஷரைப் பயமுறுத்திக் கொலை செய்யும்படி சீறி யூதரின் பிரதான ஆசாரியரிடம் சென்று கிறிஸ்துவின் தொண்டரான ஆடவரையாகிலும் மாதரையாகிலும் தான் கண்டு பிடித்தால் அவரைக் கட்டி எருஸலத்துக்குக் கொண்டு வரும்படி தமஸ் நகரிலுள்ள ஜபாலயங்களுக்கு நிருபங்கள் கேட்டு வாங்கிக் கொண்டு, அவ்வூருக்குப் பிரயாணமாய்ப் போய்த் தமஸ்குவை அணுகியபோது, சடுதியில் வானத்திலிருந்து ஓர் ஒளி அவனைச் சுற்றிப் பிரகாசிக்க அவன் தரையில் விழுந்தானென்றும், அவனுக்கு அப்பொழுது கிறிஸ்து பிரத்தியக்ஷமாகி அவன் மனத்தைத் திருப்பினாரென்றும், அது முதல் அவன் பவுல் என்னும் பெயர் பூண்டு கிறிஸ்துவினிடம் அத்தியந்த பக்தி விசுவாசம் உடையவனாய் யூதரல்லாத ஜனங்களுக்குள் கிறிஸ்து மதத்தை மிகப் பாடுபட்டுப் பிரசாரம் செய்தானென்றும் கிறிஸ்தவ புராணமாகிய புதிய ஏற்பாட்டில் அடங்கிய 'அப்போஸ்தலர் நடபடிகள்' என்னும் பகுதி கூறும்.

களாகி யிருக்கின்றனர். பல சத்துரு—உமர்களும் † மித்திர-உயர்களாகி யிருக்கின்றனர். ஒரோவோர் விஷயத்தில் அல்லது ஒரோ வோர் பெரியாரிடம் தந்தை வாளையுருவி வன்மம் சாதித்து வந்திருக்க, மைந்தன் அதே விஷயத்தில் அப்பெரியாருக்கே வன்றொண்டனாகி விசேஷ கைங்கரியம் புரிந்திருக்கிறான். இவ்வுலகத்தில் எந்தச் சீர்திருத்த இயக்கத்தின் வரலாற்றை ஆராய்ந்து நோக்கினும், இத்தகைய தந்தையரையும் மைந்தரையும் நூற்றுக்கணக்காய்ப் பார்க்கலாம். ஆகவே நாம் மேற்கொள்ளும் கருமம் அறவழிச் செயலாயிருந்தால், அதைப் பழிப்பவரோ அல்லது அன்னாரதுமக்களோ என்றாகிலும் ஒரு நாள் அக் கருமத்தை ஆதரித்தே தீர்வார்கள் என்ற திட நம்பிக்கையுடையவன் எவனும் தொடக்கத்தில் விரோதிகள் உண்டாவதைக்

---

† உமர் என்பவன் அழகும் ஆண்மையும் வாய்ந்த 26 வயதுள்ள வாலிபன்; இஸ்லாம் மார்க்கத்தின் மீது பகைமை பாராட்டி, முகம்மது நபியையும் மக்கமா நகரில் அவருக்கு ஆதியில் சிஷ்யரானவர்களையும் கடுமையோடும் வெஞ்சினத்தோடும் துன்புறுத்தி வந்தான். ஒருகால் அவன் தன் சகோதரியாகிய பாத்திமா என்பவளின் விட்டுக்குள் நுழைகையில், இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவியிருந்த பாத்திமாவும் அவளது புருஷனும் குர்ஆன் ஓதுவது செவியில் விழவும், அவன் மூர்க்கத்தனமாய்த் தன் தங்கை புருஷன்மேல் பாய்ந்து அவனை உதைத்தான், பாத்திமா குறுக்கிடவும், அவளுக்கும் அடி விழுந்தது. தன் சகோதரியின் முகத்திலிருந்து இரத்தம் சிந்துவதைக் காணப் பொறாதவனாய், அவர்கள் படித்துக் கொண்டிருந்ததென்ன பார்ப்போம் என்று கேட்டான் உமர், அவர்கள் குர்ஆனைக் கொண்டு வந்து காட்டவும், சற்று முன் பாத்திமாவுக்குப் படித்துக் காட்டப் பட்ட வாக்கியத்தை அவன் படித்து உள்ளமுருகி உடனே தன்னை மகம்மது நபியின் முன் கொண்டு போக வேண்டுமென்று கேட்டுக் கொள்ள, அவனை அப்படியே கொண்டுபோய் விட்டபோது அந்தக் கணமே அவன் இஸ்லாம் மார்க்கத்தை ஏற்றுக் கொண்டான். இது நிகழ்ந்தது கி. பி. 615-616-ம் ஆண்டில், அது முதல் அவன் முகம்மது நபிக்கு வலது கையைப்போல் பேருதவி புரிந்து வரவே மக்கமா நகரில் இஸ்லாம் மார்க்கத்தைப் பஹிரங்கமாயும் நிர்ப்பயமாயும் பற்றுவது சகஜமாயிற்று. நபிகள் நாயகத்துக்குப் பின்னரும் அவன் ஜீவித்திருந்து அபூபக்கருக்குப் பிறகு கிலாபத்துப் பதவியேற்று இஸ்லாம் பிரசாரத்தில் தன் அஞ்சா நெஞ்சத்தின் இலச்சினையைப் பொறித்துப் புகழுடம்பெய்தினான்.

-கண்டு தான் எடுத்த கருமத்தை ஒருகாலும் கைவிட மாட்டான்.

இவ் வையகத்திலே எவருமே நம்பக்ஷத்தை ஆதரிக்க வில்லையென்று வைத்துக் கொள்வோம். அதனுல் என்ன நேர்ந்துவிடும்? சத்தியமாயும் தர்மமாயும் இருப்ப தெதுவோ-அஃது ஆண்டவனுடைய திருவுள்ளத்துக்கு உகப்பான தென்பதில் எவ்வகை ஐயமும் இல்லை. தராசின் ஒரு தட்டில் ஆண்டவனும் மற்றதில் அனைத்துலகும் இருப் பதாக வைத்துக் கொள்ளுங்கள். எந்தப் பக்கம் பாரத் தால் தாழும்? எந்தப் பக்கம் லேசாய் மேலெழும்? நீங்கள் எந்தப் பக்கம் செல்வீர்கள் ?

பக்தி வளர்ச்சிக்கு முக்கியமான தடைகளை எடுத் துரைத்து, அவற்றை நீக்குவதற்கேற்ற வழிகளையும் கூடிய மட்டில் விளக்கிக் காட்டினேன். இவ்வழிகளுக்குள்ளே மனதினுல் ஆகவேண்டிய காரியங்களே மிக அதிகமென் பதை நீங்களெல்லோரும் கவனித்திருப்பீர்கள். கெட்ட எண்ணங்களை நல்லெண்ணங்களாலும், கெட்ட உணர்வு களை நல்லுணர்வுகளாலும் நசிக்கப்பண்ணவேண்டும். மனமே எல்லாப் பாவங்களும் உற்பத்தியாகுமிடம். அவற்றை ஒழிக்குந் திறனும மனத்துக்கே உண்டு. யோகவாசிஷ்டத்தில் வஸிஷ்ட முனிவர் ஸ்ரீராமச்சந்திர னுக்கு மனத்தைக்கொண்டே மனத்தை அடக்கவேண் டிய வழியை உபதேசிக்கையில் இவ்வாறு கூறுகின்றார்:

"மனத்தைத் திண்மையோடு அடக்கும் திறன் வாய்ந் தது மனமேயாகும். ஓ ராகவ, அரசனல்லாத எவனே பிற அரசர்களை வெல்லக் கூடியவனுவான்?"

கீழ்நோக்கிச் செல்லும் மனச்சார்புகளை மனத்தினு லேயே மேல் நோக்கிச் செல்லும்படிச் செய்யவேண்டும். பஹிர்முகப்பட்டு இன்ப நுகர்ச்சியை நாடும் இந்திரிய விருத்திகளை நற்சிந்தையால் அந்தர்முகமாகச் செலுத்தி னுல்தான் பக்தி நெறியில் எதிர்ப்படும தடைகளைத் தகர்த் தெறியலாகும். இதைப்பற்றி தக்ஷ முனிவர் இவ்வாறு கூறுகிறார்:

"பஹிர்முகப் பிரவிருத்தியுள்ள இந்திரியங்களை அந்தர் முகமாய் மனத்திற் பொருந்தும்படி திருப்பி, அம் மனத்தை

யும் ஆத்மாவினிற் பொருந்தும்படி செலுத்தவேண்டும். இவ்வாறு பஹிர்முகமான சகல இந்திரியப் பிரவிருத்திகளினின்றும் விடுபட்ட ஆத்மாவினைப் பிரஹ்மத்தில் நிறுத்தவேண்டும். இதுவே தியானமும், இதுவே ஞானமும் ஆம். மற்றவையெல்லாம் வெறும் நூற் பெருக்கமேயாகும்.''

பகவத்கீதையில் கண்ணன் அர்ஜுனனுக்கு இவ்வாறு உபதேசிக்கிறார்.

"ஆமை தன் அவயவங்களை இழுத்துக்கொள்வதுபோல் எப்புறத்தும் விஷய பதார்த்தங்களினின்று புலன்களை ஒருவன் மீட்க வல்லானாயின், அவன் அறிவே நிலைகொண்டது.' பக. 2-ம் அத். 58-ம் சுலோகம்.

இதிலிருந்து ஒரு வேலையும் செய்யாது சும்மா இருக்கவேண்டுமென்று எவரும் எண்ணிக்கொள்ளலாகாது. இந்திரிய விருத்திகளை அந்தர்முகமாக்கிச் செய்கடன்களை அகத்தே உறையும் ஆண்டவனுக்குத் தொண்டெனக் கருதிச்செய்து வரவேண்டும்.

"செய்கைகளையெல்லாம் பிரஹ்மத்தில் சார்த்திவிட்டுப் பற்றுதலை நீக்கி எவன் தொழில் செய்கிறானோ, அவன் நீரில் தாமரை இலைபோல் பாபத்தால் தீண்டப் பெறுவதில்லை.'' பக. 5-ம் அத். 10-ம் சுலோகம்.

மேற் கூறிய உபாயங்களால் தடைகளை அகற்றிக்கொண்டால், எனவே சமதமாதி ஸாதன ஸம்பத்தை ஒருவன் கைவரப் பெற்றால், சாந்தனாகவும் ஜிதேந்திரியனாகவும் ஆகலாம். சாந்தனாகாவிட்டால், தாஸ்யம் (தொண்டு), ஸக்யம் (தோழமை) முதலிய பக்திரஸங்களுக்கு உரிமை பெறுவது முடியாது.

இப் பகுதியை முடிக்குமுன் இன்னொரு செய்தி சொல்லவேண்டுவது இன்றியமையாததாகும். கீழே குறிப்பிட்ட தீக் குணங்கள் சிலவேளைகளில் மாறுவேடம் பூண்டு தோன்றும். பாபமானது அடிக்கடி புண்ணியத்தின் கோலம் தாங்கிவரும். சைத்தான் பட்டுமடி உடுத்துத் திருநீறு திருக்கண் மணி மாலை அல்லது திருநாமம் திருத்துழாய் மணி மாலை அணிந்து பரம சாம்பவனைப் போலவும் பரம பாகவதனைப் போலவும் திருக்கோலம் புனைந்து வந்து நம் செவியில் தீய உபதேசங்களை ஓதும். தன் காரியத்தைச் சாதித்துக்கொள்ள சாஸ்திர வசனங்

களைப் பிரமாணமாய் எடுத்துக் கூறும். இவ்வாறு தீ நெறியில் செல்லுமாறு வஞ்சிக்கப்படாம லிருக்கும்படி நாம் எப்போதும் மிக விழிப்பாய் இருக்கவேண்டும். எவனாவது தவறான காரியமோ அல்லது பாவச் செய்கையோ செய்துவிட்டு அதற்காகச் சிறிதும் அநுதாபப் படாதிருந்தால், அதைப்பற்றிக் கடிந்துரைப்பதோ அம் மனிதனைத் தண்டிப்பதோ அவசியம் செய்யவேண்டு மென்று உங்கள் மனத்தில் தோன்றுமல்லவா? ஆனால் அப்பொழுது மற்றொருவன் வந்து, இவனை மன்னித்துச் சும்மா விட்டுவிடுங்கள். இப்படிப்பட்ட காரியங்கள் இவ் வுலகில் நாளும் எத்தனையோ நடந்துகொண்டே யிருக் கின்றன. இவற்றைப்பற்றி யெல்லாம் கோபித்துக் கொள்வதென்றால் கட்டுமா? சற்றுப் பொறுத்துக்கொள் ளுங்கள் என்று சொல்லுகிறான். அப்படிச் சொல்லுகிற வன் தான் உள்ளபடியே அருட்பணி புரிவதாக மயக்க வுணர்ச்சி கொண்டிருக்கக் கூடுமாயினும் இவ்விஷயத்தில் பொறுமை காட்டும்படி உபதேசிப்பதனால் பாவம் செய் பவனே ஆவானல்லவா? பொறுமை என்னும் புண்ணிய வேடத்தைப் பூண்ட பாவமே அவனைப் பிடித்தாட்டுகிறது. ஒருவன் சோற்றுக்கில்லாமல் சங்கடப்படுகிறா னென்று வைத்துக்கொள்ளுங்கள். அவனுக்குத் திரவிய சகாயம் செய்தால், அதை அவன் வீண் செலவு செய்வது நிச்சயம். அப்படிப்பட்டவனுக்கு இரங்கி உதவி செய்வீர்களே யாயின், பாவம் புண்ணிய வேடம் புனைந்து உங்களை ஏமாற்றியதாக எண்ணவேண்டும். பல தடவைகளிலும் நாம் காமக் குரோதங்களுக்கு வசப்பட்டு ஆகாத காரி யங்களைச் செய்துவிட்டுப் பிறகு மனத்தைச் சமாதானப் படுத்திக்கொள்ளும் பொருட்டு, இந்த சந்தர்ப்பத்தில் இப் படிச் செய்ததே உத்தமம், இப்படிச் செய்யாவிட்டால், நம் கடமைகளைச் செலுத்துவதில் தவறு ஏற்பட்டிருக்கும் என்று நினைத்துக்கொள்ளுகிறோம். இங்கும் பாவமானது புண்ணியத்தின் உருவம் தாங்கி அவ் வுருவத்தில் நம்மிடம் அறிமுகம் செய்துகொள்ள முயல்கின்றது. கள்ள வேடம் கொண்ட பாவத்தின் சம்பந்தமாய் இத்தகைய எடுத்துக் காட்டுக்கள் பலவற்றைப் பெருக்கிக்கொண்டே போக லாம். ஆகையால் பாவமானது எவ்வகையிலும் சூழ்ச்சி

செய்து உள்ளே நுழைந்து இருதயத்தைக் கெடுக்காமல் இருக்கும் பொருட்டு அவ்விருதயத்தின் எல்லாப் பக்கங் களிலும் மூலை முடுக்குகளிலும் மிக்க விழிப்பும் விவேகமு முடைய காவலாளர்களை நிறுத்தி வைக்கவேண்டும்.

நான்காம் அத்யாயம் முற்றிற்று.

பக்தி நெறிக்குத் துணைக்கருவிகள்

பக்திப் பேறு பெறுவதற்குக் கைக்கொள்ளவேண்டிய முயற்சிகளை இனி ஆராய்வோம். ஏற்கெனவே பக்தி உதயமாகப் பெற்றவருக்குப் புறத்துணைகளால் என்ன பயன்?

"தென்றல் வீசும் சுகம் அநுபவிப்பவர்க்கு விசிறியால் ஆக வேண்டியதென்ன?"

உள்ளூரில் பக்தி உதயமாகப் பெறுதவர் முதலில் ஆர்த்த (துன்புற்ற) பக்தராகவோ, ஜிஜ்ஞாஸு* (அறிய விரும்பும்) பக்தராகவோ அல்லது அர்த்தார்த்தி* (பயனை வேண்டும்) பக்தராகவே ஆவதற்கு முயலவேண்டும். "மஹா பாதகி நாம்'த்வார்த்ரதே", எனவே, மஹா பாதகருக்குக் கூட ஆர்த்தபக்தியில் அதிகாரம் உண்டென்று சாண்டில்யர் கூறுகிறார். இவ்வாறு பக்தியின் தாழ்ந்த படியில் தொடங்கினால், பிறகு மேல் நிலைக்கு உயரலாம். ஆனால் முதலிலேயே ராகாத்மிகா பக்தி* அல்லது அஹைதுகீ* பக்தி உள்ளுயிரில் முளையெடுக்கப் பெற்றவர்களே பாக்கியவான்கள்.

'ஆர்த்த பக்தனாகவோ, ஜிஜ்ஞாஸு பக்தனாகவோ, அர்த்தார்த்தி பக்தனாகவோ ஆவதற்கு இனி முயற்சி என்ன வேண்டியிருக்கிறது? ஆபத்தில் விழுந்து விட்டாலே, நாம் ஆர்த்த பக்தராகலாம். எதையும் வேண்டும் என்னும் விருப்பம் உள்ளுயிரில் இயற்கையாகவே இருப்பதால், ஜிஜ்ஞாஸு பக்தராகலாம்;' என்று சிலர் தர்க்கிக்கக் கூடும். ஆனால் எப்பொழுதும் ஆபத்துக்குட் பட்டிருக்கிறோமென்று உணர்வோர் எத்தனை பேர்? நாம் பவ ரோகத்தினால் பீடிக்கப்பட்டுப் பாவச்சேற்றில் அழுந்தியிருக்கிறோமென்பதை எப்

---

* இந்த பரிபாஷைச் சொற்களின் விளக்கத்தை முதல் அத்யாயத்தில் 18-ம், 17-ம் பக்கங்களில் காண்க.

போதும் அறிகிறோமா? அறிந்தால் இந்த நிலைமையில் இருப்போமா? வாழ்க்கையைப் புனிதமாக்கவல்ல அந்த ஜிஜ்ஞாஸ விஷய விசார விருப்பம் நம் உள்ளுயிரில் எங்காவது இருக்கிறதா? நமக்குள் யாரே பகவத் தத்துவத்தை அறிய ஆவல் கொண்டிருப்பவர்? எவ்வளவு பணம் சம்பாதித்தோம் என்றும், நம் மனைவி மக்கள் எப்படி இருக்கிறார்களென்றும் இத்தகைய கேள்விகள் கேட்க நாம் எவ்வளவு சித்தமா யிருக்கிறோமோ அவ்வளவு, ஆண்டவன் இயல்பு எத்தகையது? நமக்கும் அவனுக்கும் உள்ள தொடர்பு யாது? நாம் உய்யும் வழி யாது? என்ற இத்தகைய கேள்விகள் நம்முள் எத்தனைபேர் உள்ளங்களில் பிறக்கின்றன?

அர்த்தார்த்தி பக்தராகவேனும், அதாவது பயன் வேண்டி பக்தி செய்வோராக வேனும் நாம் இருக்க முடிகிறதா? உண்மையான அர்த்தம் பயன் இன்னதென்பதை உணர்ந்து அதை எப்போதும் நாடி நிற்கிறோமா? நாம் செய்யும் பிரார்த்தனை யெல்லாம்,

புத்ரம் தேஹி, த்ஹநம் தேஹி,
ப்ஹாக்யம் ப்ஹகவதி தேஹிமே,

எனவே, சேயைத் தா, செல்வம் தா, சீரைத் தா எனக்கு, இறைவி, என்று முறையிடும் வாய்ப்பாடாகவே இருக்கிறது. இந்த 'தேஹி' பிரார்த்தனையை யாவது முழு மனதுடன் செய்கிறோமா? எம்பெருமான் நம்முடைய பிரார்த்தனைகளுக்குச் செவி சாய்ப்பான் என்ற திட நம்பிக்கை நமக் குண்டா? இங்கு கூறிய வகைகளில் எவ் வகையான பக்தனாக வேண்டு மானாலும்,

ஆத்ம சிந்தனை

என்னும் உபாயத்தைப் பிரதானமாகக் கைக் கொள்ள வேண்டும்.

(௫) தினந்தோறும் நம்மை நாமே பரீக்ஷை செய்து கொண்டு, நாம் காலத்தை எப்படி கழிக்கிறோம், எத்தனை நற் செய்கைகள் செய்கிறோம், தீயவை எத்தனை செய்கிறோம், பாவத்துடன் நிகழ்த்தும் போராட்டத்தில் எவ்வளவு கார்யசித்தி யடைந்தோம் என்று ஆராய்ந்து

பார்ப்போமாயின், நம் சரீரம் நடுக்குற்று நாம் எவ்வளவு ஆபத்தான நிலையில் இருக்கிறோமென்பதை முற்றிலும் உணர்வோம். நம்மைப் போல் இவ்வுலக சிருஷ்டியிலே துர்த்தசையிலுள்ளவர்களையும் மஹா மூர்க்கரையும் மற்றெவ்வுயிர் வர்க்கத்திலும் காண முடியாது. நெருப்பில் விழுந்தால் மரிப்பது திண்ணம் என்று அறிந்தும் எந்த ஜீவனாவது மனிதனைப் போல் தீக்கிரையாகுமா?

"விட்டிற் பூச்சி எரிந்து போவதால் உண்டாகும் மரண வேதனை இன்னதென்றறியாமல், விளக்குத் தீயில் விழுகின்றது. மீனும் தான் விழுங்கப்போகும் இறைச்சித் துண்டில் மிருத்யு மறைந்திருக்கிறதென்பதையறியாமல் அதை விழுங்கி விடுகிறது. ஆனால் நாம் போக விஷயங்கள் ஆபத்து நிறைந்தவை யென்றும், அவற்றை அனுபவித்தால் சர்வ நாசம் உண்டாகுமென்றும் அறிந்தும் அவற்றை விட்டு விடுகின்றோமில்லை. ஆஹா! மோஹத்துக்குள்ள அற்புத மகிமைதான் என்னே!"—சாந்தி சதகம்.

இவ்விஷய சுகபோகங்களை அனுபவித்து அனுபவித்து நாம் எவ்வித துர்க்கதிக்கு வந்திருக்கிறோமென்பதைச் சற்றேனும் சிந்தித்துப் பார்க்கிறோமா? எவ்வளவு உயர்ந்த உரிமைகளுக்கு அதிகாரிகளாய் ஜன்மமெடுத்தோம்! இப்பொழுது எவ்வளவு இழிந்த நிலைமைக்கு வந்திருக்கிறோம்! நம்முடைய இழிவுக்கு ஒருமுடிவுமுண்டோ? ஐயோ! இந் நிலையில்லாத இந்திரிய சுகபோகமானது நம்மை சர்வ நாசத்தில் அமிமிழ்த்தி விடுகிறதே! அதிலும நாம் எத்தனை இந்திரியங்களைத் திருப்தி செய்விக்க வேண்டியிருக்கிறது! மெய், வாய், கண், மூக்குச், செவிகள் என்னும் இவ்வைம்பொறிகளுள் நாம் திருப்தி செய்விக்கப் பெரிதும் முயன்று பாடுபடாத ஒரு பொறிதானும் இல்லையே! இம் முயற்சியின் பயன் எப்படி ஆக வேண்டியதோ அப்படியே யிருக்கிறது.

"குரங்க மாதங்க பதங்க ப்ஹ்ரிங்க
மீநா ஹதா: பஞ்சப்ஹிரேவ பஞ்ச.
ஏக: ப்ரமாதி, ஸகத்ஹம்ந ஹந்யதே,
ய: ஸேவதேபஞ்சப்ஹிரேவபஞ்ச?"

“மான், யானை, விட்டில், வண்டு, மீன்-இவ்வைந்தில் ஒவ்வொன்றும் பஞ்சேந்திரியங்களில் ஒவ்வொன்றுக்குத் தொண்டு புரிந்து உயிரை இழக்கின்றது. தனித்து ஓர் இந்திரியத்துக்கு மட்டும் தொண்டு புரிவதனாலேயே இவ்வளவு அனர்த்தம் விளையுமாயின், ஏக காலத்தில் பஞ்சேந்திரியங்களனைத்தையும் உவப்பிக்கிறவன் எப்படிச் சாவாமலிருக்கக்கூடும்?

மான் வேடனது வேய்ங்குழலோசையில் மயக்கமுற்றுத் தன் செவிகளை உகப்பிக்கும்பொருட்டு மோசம் போகிறது; செவிப்புலனது வேட்கையைத் தீர்ப்பதில் அறிவழிந்து குழியில் விழுந்து தன் அழிவைத் தேடிக்கொள்ளுகிறது. யானை பிடிப்பவர்கள் நாட்டிற் பழக்கிய யானையைத் தம்முடன் அழைத்துக் கொண்டுபோக, அந்நாட்டு யானையின் மெய்தீண்டுதலை விரும்பிக் காட்டு யானை கிடந்தலைகிறது. அது மெய்த் தீண்டலின் சுகானுபவத்தில் வைத்த ஆசையால் வெறிகொண்டு, அந்நாட்டு யானையின் பக்கல் வந்து துதிக்கையோடு துதிக்கை சேர்த்து விளையாடத் தொடங்கிக் கடைசியில் என்றென்றைக்குமே சிறைப்பட்டதாகிக் குற்றுயிராய் விடுகிறது. விட்டில் தீக்கொழுந்தின் அழகைக் கண்டு மையலாகி அதில் விழுந்து உயிரை விடுகிறது. கட்புலனது வேட்கையைத் தீர்த்துக்கொள்ளப் போய் அடைந்த லாபம் இதுவே! வண்டானது தாமரை மலரின் நறுமணத்தால் ஈர்க்கப்பட்டு, அதன் இதழ்களிலேயே அமிழ்ந்து போகிறது; மாலை நேரமானவுடனே சிறகுகள் சுருங்கிப் போக, வெளியில் வரமுடியாமல், மறுநாள் விடியுமுன்னே வண்டு மரித்துப் போய்விடுகிறது. இவ்வண்டின் மரணத்துக்குக் காரணமாயிருந்தது நாசியே யாகும். இனி நாவின் போக விருப்பத்தினால் மீனனது தூண்டிலில் இடப்பட்ட இரையை விழுங்கி எவ்வளவோ வேதனைக்குட்பட்டு ஆவியையிழக்கிறது. இவ்வாறு மான் செவியாலும், யானை மெய்யினாலும், விட்டில் கண்ணினாலும், வண்டு மூக்கினாலும், மீன் நாவினாலும் வஞ்சிக்கப்பட்டு நாசமடைகின்றன. ஒவ்வோர் இந்திரியத்தினாலும் இந்த ஜந்துக்களுக்கு இந்தக்கதி சம்பவிக்குமானால், “ஸ கத்ஹம் ந ஹந்யதேய: ஸேவதே பஞ்சப்ஹிரேவ பஞ்ச?” ஐம்

புலன்களையும் சேர்த்து முற்றிலும் திருப்தி செய்வித்து இன்பம் நுகர்கின்றவர்களின் கதி என்னவாகும் என்பதைச் சற்றுக் கவனித்துப் பாருங்கள்.

இந்திரியங்களின் போக விருப்பமாகிய தீயை விறகிட்டு வளர்த்து நம்முடைய எல்லா உடைமையையும் பறிகொடுத்துவிட்டுத் தவிக்கிறோம். இவ்விந்திரியங்களில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பக்கத்திலிருந்து திருடனைப் போல் நம்முடைய முழுச் செல்வத்தையும் கொள்ளையடித்துக்கொண்டு போகிறது. இவை நம்மை எவ்வளவு துர்க்கதிக்குக் கொண்டுவந்து விட்டனவென்பதை ஆத்ம சிந்தனையால் முற்றிலும் உணர்கிறவனே கண்ணீர் மல்க, இவ்வாறு கசிந்துருகுவான் :—

"ஹே அச்சுதா, இதோ பார், எவ்வளவு கிடைத்தாலும் திருப்தி யடையாத இந்த நாக்கு சுவைக்காக ஒரு பக்கத்தில் என்னைப் பிடித்திழுக்கிறது; ஜநநேந்திரியம் இன்னொரு பக்கத்தில் இழுக்கிறது; வயிறு மற்றொரு பக்கத்திலும், காது மூக்கு கண்கள் இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு பக்கத்திலும் இழுக்கின்றன. ஒருவன் பல மனைவியரை மணஞ்செய்துகொண்டால், அம்மனைவியர் அவனைப் பல பக்கங்களிலும் இழுத்து அலைக்கழிப்பதேபோல், இவ்விந்திரிய விருத்திகள் என்னைப் பலவிதத்திலும் ஹிம்ஸிக்கின்றன."

ராமப்ரஸாத ஸேநன் இவ் அவஸ்தையைக் கருத்தில் வைத்தே ஒரு வங்காளிப் பாட்டில் இவ்வாறு பொருள்படப் பாடியிருக்கிறார் :—

"ஐந்து இந்திரியங்களும் வெவ்வேறு வகையான ஐந்து விஷயங்களை விரும்புகின்றன. இவைகளை வைத்துக்கொண்டு நான் எப்படிக் குடித்தனம் பண்ணுவேன்?"

இவ் அவஸ்தையை உணர்ந்து, இதனின்றும் விடுதலையடையும் பொருட்டு, எம்பெருமானை இடைவிடாமற் கூவியழைக்கிறவனே உண்மையான ஆர்த்த (துன்புற்ற) பக்தனாவான்.

ஜிஜ்ஞாஸு பக்தனாவதற்கும் பிரதான உபாயம் ஆத்ம சிந்தனையேயாகும். ஏகாந்தமான ஓரிடத்தில் இருந்து தன்னைப்பற்றியே சிறிது சிந்தித்தால், இவற்றைப்போன்ற கேள்விகள் தோன்றும்—"நான் யார்? எங்கிருந்து வந்தேன்? எதற்காக வந்தேன்? என்னை அனுப்பியது யார்?

அவன் எத்தகையவன்? அவனோடு எனக்குள்ள ஸம்பந்தம் எப்படிப்பட்டது? இந்தப் பிதாவும் மாதர்வும் எனக்கு யாவர்? அவர்கள் என் இவ்வளவு அருமையாய் என்பால் அன்பு பாராட்டுகிறுர்கள்? இவ் வுலகில் இத்தனை சிநேகிதர்களை எனக்களித்தது யார்? நெருப்பு நமக்கு வெப்பத்தைத் தருவதெப்படி? காற்று நம் உடம்புக்குக் குளிர்ந்திருப்பதேன்? நீர் நம் தாகத்தைத் தீர்ப்பதேன்?'' இப்படிப்பட்ட நூற்றுக்கணக்கான கேள்விகள் கிளம்பி மனத்தைத் தததுவ விசார வழியில் கொண்டு செலுத்தும். சற்று சிந்தித்துப் பார்த்தால், ஓர் அன்புருவாகிய சக்தி இவ்வகில ஜகத்திலும் நிறைந்து தொழில் புரிவதைத் தெளிவாய் உணரலாம். இச்சக்தியை உணரப் பெற்றதும், அதைப்பற்றி எவ்வளவுக் கெவ்வளவு சிந்தை செய்கிறுமோ, அவ்வளவுக் கவ்வளவு அன்பால் ஈர்க்கப்படுவோம். இதுவே பக்தியில் கொண்டுபோய் விடும்.

அர்த்தார்த்தி (பயனை விரும்பும்) பக்தனுவதற்கும் ஆத்ம சிந்தையே பிரதான உபாயமாம். ஆத்ம சிந்தை வாயிலாக, ''நமக்குள்ள குறைகள் எவை? நமக்கு என்ன தேவை?'' என்பனவற்றை நிர்ணயிக்கவேண்டும. இவ்வாறு நம் குறைகளும் வேட்கைகளும் இன்னவை யென்று நிர்ணயிக்கப்பட்டால், அவற்றைத் தீர்ப்பவன் ஒருவனே யன்றி வேறில்லை யென்றும், அவனொருவனிடமே நமக்கு வேண்டியதை யெல்லாம் மனம் விட்டுக் கேட்கத் தகுமென்றும் ஒரு சல்லிக் காசுமுதல் சாசுவத முக்தி வரையில் நமக்கு வேண்டியதை யெல்லாம் சொல்லிக்கொள்வதற்கு அவ் வொருவனை யின்றி வேறெவரு மில்லை யென்றும் காண்போம். அப்பொழுது அவ்வொருவனிடமே அனைத்தையும் விண்ணப்பித்துக்கொள்ளும் பழக்கம் உண்டாகும். அதுவே பக்தி நெறிக்கு முதற்படியாகும்.

கீழ்க் கூறியபடி பக்தி செய்யும் ஆர்த்த பக்தர்களும் அர்த்தார்த்தி பக்தர்களுமன்றி அவர்களுக்குள்ளே கள்ளர், துஷ்ட மிருகங்கள், நோய்கள் முதலிய சாமானிய விபத்துக்களின் பயத்தினுல் ஆர்த்த பக்தாகின்றவர்களும், சாமானிய விஷய சுக சம்பந்தமாய் அர்த்தார்த்தி பக்தா

கின்றவர்களும்கூட எம்பெருமானை மனப் பூர்வமாய்ப் பிரார்த்திக்கத் தொடங்குவார்களாயின், அவர்களுடைய பிரார்த்தனைகள் ஈடேறி வருவதையாவது விரைவில் காணப் பெறுவர்கள். அல்லது அவர்கள் பிரார்த்திக்கத் தொடங்கின விஷயங்கள் பயனற்றவையாக இப்பொழுது தோன்றுவதையாவது ஏற்கனவே உணரத் தொடங்கி யிருப்பார்கள். கெட்ட எண்ணத்துடன் தெய்வ வழிபாடு செய்யும் தாமஸ பக்தன்கூட ஏகாக்ர சித்தத்துடன் எம் பெருமானைப் பிரார்த்திக்கத் தொடங்கினுல், அவனுள்ளத் திலும் இதே பாவனை குடிகொள்ளும். எவன் எந்த எண் ணத்துடன் பிரார்த்தித்தாலும், அப பிரார்த்தனை முழு மன துடன் செய்யப்பட்டால், பக்தி நெறி திரந்து தோன்றும். கொடிய பாதகனும் உள்ள முருகிப் பிரார்த்திப்பானுயின்,

"க்ஷிப்ரம் ப்ஹவதி த்ஹர்மாத்மா
சச்வத் சாந்திம் நிகச்ச்ஹதி"

அதாவது, மிக விரைவில் தர்மாத்மாவாகி நித்யானந்த மெய்துவான். ஒரு விவேகி போக விருப்பத்துடனுவது மோக்ஷ விருப்பததுடனுவது வேறெந்த விருப்பத்துடனு வது கண்ணனைப் பிரார்த்தித்து அழைக்கத் தொடங்கினு லும் இறுதியில் அவன் கண்ணனுடைய திருவடிகளையே அடைவானென்று ஸ்ரீ சைதந்ய மஹாபிரபு ஸநாதநனுக்கு உபதேசித்திருக்கிருர். எப்படியெனில்:

"வேறு விருப்பத்துடன் ஒருவன் கிருஷ்ணனைப் பஜித் தால், அவன் கேட்காவிட்டாலும், எம்பெருமான் அவனுக் குத் தன் திருவடிகளை அளித்தருள்வான். "என்னைப் பூஜித்து, அமிர்தத்தை விடுத்து விஷத்தை விரும்புவதுபோல், விஷய சுகங்களை வேண்டுகிற இவன் மூழுமூடன். ஆனல் விவேகியாகிய நான் இவனுக்கு விஷய சுகங்களை ஏன் அளிக்கவேண்டும்? என் சரணரவிந்தத்தையே அளித்து விஷய சுக போகங்களை மறக்கச் செய்வேன் என்பான் ஸ்ரீகிருஷ்ணன்.

"ஸ்வயம் வித்ஹத்தே
ப்ஹஜதாம் அநிச்ச்ஹதாம்
இச்ஹா பித்ஹாநம்
நிஜபாத பல்லவம்."

"தன்னுடைய திருவடிகளை விரும்பாதவர்க்கும் எல்லா இச்சைகளையும் போக்கும் அத் திருவடிகளையே அவன் அளிப்பான்" என்று ஸ்ரீமத் பாகவதம் கூறுகின்றது.

அன்றியும் சைதந்ய சரிதாமிர்தம் கூறுவதாவது,

"ஒருவன் முதலில் ஏதோ ஒரு கோரிக்கையை முன்னிட்டு ஸ்ரீ கிருஷ்ணனைப் பூஜிக்கத் தொடங்கினான். முடிவில் தான் தேடக் கருதிய பொருளை விட்டுவிட்டு அவனுடைய தொண்டனாகிவிடுகிறான்."

துருவன் ராஜ ஸிம்ஹாஸனத்தைப் பெற விரும்பி எம்பெருமானை நோக்கித் தவஞ் செய்யத் தொடங்கினானாயினும், ஸ்ரீ மஹா விஷ்ணுவினது பிரேமையின் சுவை கண்ட பிறகு, எல்லா இச்சைகளையும் விடுத்து, அவனுடைய தொண்டனாயிருக்க வேண்டுமென்னும் வேட்கையே அவனுக்கு மேலிட்டது.

எம்பெருமானைப் பிரார்த்திக்கப் பிரார்த்திக்க ஒரு வகை உணர்ச்சி உண்டாகும். அவ்வுணர்ச்சி முதிர்ந்த மாத்திரையில ஆராதனம் தொடங்கும். முதலில் தன்னயத்தின் பொருட்டே பிரார்த்தனை செய்யப் படுவதன்றி வேறில்லை. எம்பெருமானை நோக்கிப் பிரார்த்தித்து வர வர, ஒருசிறிது அநுராகத்தின் உணர்ச்சி உண்டாகும். அஃதுண்டாகி வளர வளர, அவனைத் துதிக்கவும் அவனுடைய மகிமையைப் பாடவும் மிகுந்த அவா உண்டாகும. அவனுடைய ஸ்துதி கீர்த்தனங்களைக் கேட்குமளவில் உயிரில் ஆனந்தக் களிப்பு உண்டாகும. உள்ளம அவனுடைய மகிமையை மேனமேலும் முழக்க ஆவல்கொள்ளும். இவ் ஆவல் வளர வளர, அவனுடைய மகிமையும் ஸ்வரூபமும் படிப் படியாய்ப் புலர்ந்து வரும். அப்பொழுது உள்ளம் ஆனந்தத்தால் பூரித்து அவனுக்கு 'ஜய ஜய' போற்றி இசைக்கும். அன்புணர்சசி இன்னும் ஆழ்ந்து முதிர்ச்சி யடையுங்கால், ஸ்துதியும் மஹிமா வர்ணனமும ஸ்வரூப கீர்த்தனமும முதலியவை வெறும் புறப் பொருள்கள என்றுணரப்படும். அப்பொழுது எல்லா விருப்பங்களையும் ஒழித்து உரையற்று அருகிருந்து அவனது அழகிய திருமுகமண்டலத்தையே பார்த்துக் கொண்டிருக்க வேண்டுமென்னும் ஒரே விருப்பம்மட்டும் தங்கி நிற்கும். இதையே தியான மென்பர். தியான

மென்பது மௌனமுற்று ஸ்வரூப சிந்தனை செய்வதேயாம். இந்த நிலையிலே,

"உள்ளக் கோயிலில் உலக நலத்துக்கெல்லாம் நிலய மாகிய சத்திய சிவ சுந்தர சொரூபம் அரசு வீற்றிருக்கிறது. அதன் திருவடிகளில் பயபக்தியுடன் பரவசமாகிச் சரணடை யக் கடவாய்."

அன்பு இன்னும் தீவிரமாய் முதிர்ச்சி யடையும் பொழுது சமாதி அல்லது லயம் என்னும் நிலை தோன்றும். இனி அவனது அருகே இருப்பதென்பதும் ஒழிந்து, இடை விடாத தியானத்தில் ஈடுபட்டு உயிர் பித்துற்றுப் பரவச மாகி விளக்குத் தீயில் குதிக்கும் விட்டிலேபோல், அத் திவ்ய மங்கள சொரூபத்தின் பேரொளிப் பிழம்பில் விழுந்து லயமாய் விடுகிறது. 'நீ, நான்' என்னும் பேத வுணர்ச்சியானது தியானம் உள்ளவரையில் மட்டுமே நிகழும். சமாதி அல்லது மனோலயத்தில் நான் என்ற உணர்ச்சி ஒழிந்து 'நீ' என்ற உணர்ச்சி மட்டுமே எஞ்சி நிற்கும். எனவே, "நான்" என்னும் தற்போத வுணர்சசி "நீ" என்னும் பரதத்துவ சொரூபத்தில் அமிழ்ந்துபோய் விடுகிறது.

சைதந்ய ஸ்வாமி உபதேசித்த பஞ்ச சாதனங்கள்.

சைதந்ய ஸ்வாமி ஸநாதனனுக்கு பக்தி சாதனத்தை அறி வுறுத்துகையில் இவ்வாறு உபதேசித்தார்:

"ஸத் ஸங்கம், கிருஷ்ண ஸேவை, பாகவத பாராயணம், ஹரி நாம கீர்த்தனம், பிருந்தாவன வாஸம் இவை ஐந்தும் பிரதான சாதனங்களாம். இவற்றுள் ஒன்றேனும் சொற்ப மாக ஆசரிக்கப்பட்டால், விவேகியின் உள்ளத்தில் ஸ்ரீ கிருஷ்ண ப்ரேமையை உதிக்கச் செய்யும்."—சைதந்ய சரிதாமிர்தம்.

ஸ்ரீ ரூபகோஸ்வாமியும் பக்திரஸாமிர்த ஸிந்துவில் இக் கருத்தை வற்புறுத்தியிருர்.

1. ஸத் ஸங்கம்.

துஸ்ஸங்கம், அதாவது, தீயோர் உறவு எப்படி பக்தி நெறிக்குத்தடை செய்யுமோ, அப்படியே ஸத் ஸங்கம் நல்லோர் உறவு அந்நெறிக்குத் துணை புரியும். பக்தி நூல் கள் ஒரு பக்கம் அஸத் ஸங்கத்தைப்பற்றி இவ்வாறு கடிந்துரைக்கின்றன.

"தியாரோடும் காமாதுரரோடும் ஒருகாலும் சகவாசம் செய்யக்கூடாது. அப்படிச் செய்கிறவன், குருடனைப் பின் தொடர்ந்து செல்கிறவன் இருளில் வீழ்வது போலவே, இருள் நிறைந்த நரகில் விழுந்திடுவன்.

"துஷ்ட சகவாசத்தினுல் சத்தியம் (வாய்மை) சௌசம் (தூய்மை) தயை, மௌனம், அறிவு, நாணம், புகழ், பொறுமை, சமம், தமம், ஐசுவரியம் இவை யாவும் அழியும்.

"இந்திரியங்களை அடக்காதவர்கள், மூடர்கள், தேகமே ஆத்மா வென்னும் நோக்குடையவர்கள், சாதுக்களல்லாதார், மாதரால் ஆட்டிவைக்கப்படும் மான்பாவை போன்றவர்—இவர்களுடனும் சகவாசம் செய்யக்கூடாது.

"பழுக்கக் காய்ச்சின இருப்புக் கூட்டிலாவது வாழலாமே யன்றி பகவத் சிந்தையற்றவர்களுடன் கூடி வாழ்வது கூடாது."

இவ்வாறு அஸத் ஸங்கத்தைக் கடிந்துரைத்த பக்தி நூல்களே ஸத் ஸங்கத்தின் மகிமையையும், பக்தி கைகூடுவதற்கு அது பயன்படுவதையும் இன்னொரு பக்கம் பறை சாற்றுகின்றன. எப்படியெனில் "பக்தியானது பகவத் பக்தர்களின் சகவாசத்தால் உண்டாகிறது."

"சூரியன் தன் கிரணங்களால் புறவுலகத்தின் இருளைப் போக்குகிறுன். ஸத் புருஷர்களோ தங்கள் நல்லுபதேசமாகிய பேரொளியால் அகவிருளை முற்றிலும் அகற்றி விடுகிறுர்கள்."

ஸ்ரீ கிருஷ்ணன் இவ்வாறு அருளிச் செய்கிறுன்:

"சாதுக்களின் குழாத்தில் என்னுடைய சக்தி ஸம்பந்தமாய் உள்ளத்துக்கும் செவிக்கும் இன்பம் அளிக்கும் நல்லுரைகள் நிகழா நிற்கும். அந் நல்லுரைகளைக் கேட்பதனுல் முக்தி நெறியில் படிப்படியாய் நம்பிக்கையும், விழைவும், உறுதியான பற்றும் உண்டாகும்."

பிரஹ்லாதன் இவ்வாறு கூறுகின்றுன்.

"விஷயாபிமானமற்ற சாதுக்களின் பாததூளியினுல் அபிஷேகிக்கப் பெறுத வரையில், உலகப் பற்றுக்களை யெல்லாம் அழிக்கும் ஆறறல் வாய்ந்த எம்பெருமானுடைய திருவடிகளை இவர்களுடைய உள்ளம் நாடாது,"

ஆனுல் சாதுக்கள் இன்னவர் என்று அறிந்து கொள்வ தெப்படி யென்றுல், அவர்களின் லக்ஷணத்தை ஸ்ரீ கிருஷ்ணன் இவ்வாறு அருளிச் செய்கிறுன்.

"சாதுக்கள் எதிலும் விருப்பமற்றவர், என்னிடத்தே அழுந்திய சித்தமுடையவர், வணங்கிய தன்மையர், அனைத்துயிரின் கண்ணும் சம நோக்குடையவர், பற்றற்றவர், அஹங்கார மற்றவர், துயரத்தைப் பொறுப்பவர், செந்தண்மை பூண்டவர், உடம்புடை உயிரனைத்திற்கும் நண்பர், பகைவ ரற்றவர், அமைதி யுடையவர், நல்லொழுக்க முடையவர்."

இத்தகைய ஆதர்ச புருஷர் எங்கே கிடைப்பரென்று சிலர் கேட்கலாம். கிடைப்ப தருமையே யாயினும், முயன்று தேடினல், இக்குணங்களைத் தம் வாழ்க்கையில் சிறப்பாய் வளர்த்த சில மஹான்களாவது அகப்படுவர். ஸ்ரீ ராம கிருஷ்ண பரமஹம்ச ரென்ன, நவத் வீபத்துச் சைதந்ய தாஸ பாவாஜி யென்ன, இவர்களது தரிசனம் பலருக்கு மிக எளிதில் கிடைக்கக் கூடியதே. ஆகையால் இக்காலத்திற்கூட சாதுக்களைக் காண்பது துர்லபமென்று நான் நினைக்கவில்லை. ஆனல் அத்தகைய பெரியோரின் திருவடிகளைத் தரிசிக்க வேண்டு மென்கிற இச்சை மட்டும் நமக்குள் மிக அருமை யென்பதை ஒப்புக் கொள்ளு கிறேன். காஜிபுரத்திலுள்ள பஹாடி பாவாவையும், காசியிலுள்ள பாஸ்கரானந்த ஸ்வாமியையும் தரிசிப்பது மிகக் கஷ்டமான காரியமன்று. அன்றியும் சாதுக்கள் சாதாரணமாய் நாடெங்கும் சஞ்சரிக்கிருர்கள். ஆகவே அவர்களைத் தரிசிக்கவேண்டு மென்னும் அவாவுள்ளவர்கள் வேண்டும்போது எளிதில் தரிசிக்கலாம்.

ஆதர்ச சாதுக்கள் ஏராளமாய் அகப்படா விட்டாலும், கீழ்க்கூறிய குணநலன்களை ஒருவாறு பயின்றவர் பலரைக் காணக்கூடும். இக் குணங்கள் எவர்களுடைய வாழ்க்கையில் எவ்வளவுக்கு விளக்க முற்றிருக்கின்றனவோ, அவ்வளவுக்கு அவர்களை சாதுக்களென்று பாவிக்கலாம். இத்தகைய சாதுக்களின் சங்கத்தை மேவினலுமே அத்யாத்ம மார்க்கத்தில் வெகுதூரம் முன்னேற்றம் அடையலாம். எம்பெருமானைக் குறித்து மன மார மொழிகின்றவர் யாவராயிருந்தாலும், அவருடைய திருவடிப் பொடியைச் சென்னிமேற் கொள்வது நமது கடனும். இத்தகையாரின் அருகில் இருத்தல் நமக்கு நல

மளிக்கு மென்பது திண்ணம். "நல்லாரோடிணங்கி யிருப்பதுவும் நன்று."

சாது சங்கத்தினல் எய்தலாகும் பெருநலத்துக்கு ஜகாஇமாதாஇ * என்பவர்வள் பாவ வாழ்க்கையினின்று உயர்வுற்ற வரலாறே சிறந்த சான்றும். நாரத சாது சங்கத்தினல் புத்துயிர் பேறு பெற்றுர். அவர் ஓர் அடிமைப் பெண்ணின் மகனய்ப் பிறந்தவர். அவரை அவருடைய எஜமானன் சாதுக்களுக்கும் பணிவிடை செய்யும் வேலையில் அமர்த்திபிருந்தான். சாது ஸேவையினல் உண்டாகும் பலனை அவர் வியாஸ முனிவருக்கு இவ்வாறு எடுத்துரைக்கிறுர்:—

"நான் அவ் அந்தணரின் அநுமதி பெற்று அவர்களுடைய எச்சிலுணவை உண்டுவந்தேன். அதனல் என் தீவினைகள் தொலைந்தன. இவ்வாறு செய்யச்செய்ய என் உள்ளம் தூய்மையடையவும், அவர்கள் புரிந்துவந்த பத்வத் பஜன வடிவ தருமத்திலே எனக்கு அபிருசி உண்டாயிற்று. "அவர்கள் தினந்தோறும் கானம் செய்து கொண்டிருந்த கண்ணனைப் பற்றிய மனோஹரமான கதைகளை அன்னவரது அநுக்கிரகத்தால் கேட்கும் பாக்கியம் பெற்றேன். அவற்றைச் சிரத்தையுடன் கேட்கக் கேட்க, எம்பெருமானிடம் எனக்குச் சுவை உண்டாயிற்று."

"இவ்வாறு சரத் காலத்திலும் மழைகாலத்திலும் அப் பெரியோர்களாகிய முனிவர்களால் ஸங்கீர்த்தனம் செய்யப் பட்ட ஸ்ரீ ஹரியின் மாசற்ற புகழைக் காலையிலும் நண்பகலிலும் மாலையிலும் கேட்டுக்கொண்டு வந்ததினல், என் உளளத்தில் ராஜஸ தாமஸ குணங்களை நசிப்பிக்கும் பக்தி உதயமாயிற்று."

ஹரிதாஸ யவனன் † என்னும் மஹா பக்தன் வங்க நாட்டிலுள்ள 'பேநாபோல்' வனத்தில் பக்திசாதனம் செய்துகொண்டிருந்த காலத்தில் அவனுடைய வைராக்கிய நிஷ்டையைக் குலைப்பதற்காக ராமச்சந்திரகான் என்

* முதலில் பரம துஷ்டரா யிருந்து, பிறகு ஸ்ரீ சைதந்ய ஸ்வாமியின் உபதேசத்தால் பாகவத கோஷ்டியிற் சேர்ந்து உயர்ந்தவர்கள். இவர்களின் வரலாற்று விவரத்தை ரக்தாக்ஷி ஹு ஐப்பசி 28உ 46-ம் இலக்கம் லோகோபகாரி 2-ம் பக்கம் 1, 2-ம் பத்திகளிற் காண்க.

† ஸ்ரீ சைதந்ய ஸ்வாமியின் பரம சிஷ்யரின் ஒருவன்; இஸ்லாம் மார்க்கத்திலிருந்து வைஷ்ணவ தர்மத்திற் புகுந்ததாகக் கூறுவர்.

பவன் ஒரு வேசையை ஏவினன். வேசை அவ்வனத் துக்குச் சென்று ஹரிதாஸனை மயக்கும் கருத்துடன் அவனுடைய வாயிலில் உட்கார்ந்திருக்க, அவன் பகவத் நாம ஸங்கீர்த்தனம் செய்துகொண்டிருந்தான். அவனுடைய நாமஜபம் முடிந்தவுடனே உள்ளே நுழைந்து அவனைக் கெடுத்துவிடலா மென்று எண்ணி யிருந்தாள் வேசை. ஹரிதாஸனோ நாம ஸங்கீர்த்தனம் செய்துகொண்டே இரவு முழுதும் கழித்தான். முதல் இரவு இப்படிக் கழிந்தது. வேசை இரண்டாம் இரவும் வந்தாள். இவ் விரவும் நாம ஸங்கீர்த்தனத்திலேயே கழிந்தது. அவள் மூன்றும் இரவும்வந்தாள். அவ்விரவும் நாம ஸங்கீர்த்தனத்திலேயே கழிந்தது. மூன்றும் இரவும் கழிந்து, பொழுது புலர்வதற்கு முன்னமே ஹரிநாம சிரவணத்தால் வேசையின் உள்ளம் முற்றிலும் மாறி, அவள் ஹரிதாஸனுடைய தாளிணையில் விழுந்து, கண்ணீர் ஆருயப் பெருக, விம்மி விம்மிக் கலுழ்ந்து 'நான் மாபாவி, என் பாவங்களுக்குக் கணக்கில்லை. அடியாளைக் கருணை கூர்ந்து காத்தருளவேண்டும்,' என்று இறைஞ்சினள். அன்று காலையிலே அச்சுப முகூர்த்தத்திலே அவ் வேசையின் வாழ்க்கையில் சாது சங்கத்தின் மகிமை முழங்கியது, தீண்டத் தகாதவளும், நல்லோரால் கடிந்திகழப்படுவதற் குரியவளுமாகிய அக் குலம் பொல்லாள் அது முதல்

> "பரம வைஷ்ணவி யாயினள்; மஹா பக்தை யென்று அவளது பெயர் எங்கும் பிரஸித்தமாயிற்று. அவளைத் தரிசிக்கும் பொருட்டு உத்தமோத்தம வைஷ்ணவர்களும் அவள் இருப்பிடத்துக்கு வந்தார்கள்."

சாது சங்கத்தின் மகிமையை மெய்ப்பிக்க நானே பிரத்தியக்ஷ சாக்ஷியா யிருக்கிறேன். பரமஹம்ஸ ராம கிருஷ்ண தேவரின ஸ்ரீ பாதரேணு ஸ்பரிசத்தால் தம் பாவ வாழ்க்கையில் நிகழ்வுற்ற அத்தியாத்ம விழிப்புக்குப் பலர் தடையின்றிச் சான்று கூறுவர்.

சாதுக்களின் தரிசனம் கிடைக்காதபொழுது, நண்பர்கள் ஓரிடத்தில் ஒன்றுகூடி பகவத் விஷய விசாரமும், பகவந் நாம ஸங்கீர்த்தனமும், பகவத் குண கானமும் புரி

தல்வேண்டும். இவ்வாறு செய்வதும் சாது சங்கத்துக்குத் துல்யமாம். இதனால் வாழ்க்கையானது பக்தி நெறியில் ஓங்கி வளரும்.

2. கிருஷ்ண ஸேவை

கிருஷ்ண ஸேவை என்னும் வார்த்தை விரிந்த பொருளுடையதாகும். ஸ்ரீ சைதந்யர் வேரூரிடத்தில் பக்தியின் ஐந்து முக்கிய சாதனங்களை வகுத்துரைக்கும்போது, கிருஷ்ண ஸேவை என்பதற்குப் பதிலாக "ஸ்ரீ மூர்த்தி ஸேவை" என்று பிரயோகிக்கிறார். ஸ்ரீ மூர்த்தி ஸேவையென்றது எம்பெருமானது திவ்ய மங்கள விக்ரஹ வழிபாட்டை திவ்யமங்கள விக்ரஹ மூர்த்தி உபாசனை மூலம் வழிபட்டால் உள்ளபடியே பக்தி உதயமாகுமென்பதற்குப் பல திருஷ்டாந்தங்கள் கூறலாம். ஸ்ரீ மூர்த்தி யென்று கிருஷ்ண மூர்த்தியையே உண்மையில குறிக்கொண்டு ஸ்ரீசைதந்யர் சொல்லியிருந்த போதிலும், ஆண்டவனை எந்த உருவமாகப் பாவித்து உபாஸித்தாலும், முடிவில் பக்திப் பேறு பெறலாம். ராம ப்ரஸாதர், ராஜா ராம கிருஷ்ணர், ராம கிருஷ்ண பரம ஹம்ஸர் முதலியோர் காளிதேவிக்கு ஸேவை புரிந்தார்கள். பரமஹம்ஸ தேவனார் காளிதேவியின் பூஜை வாயிலாகவே பக்தி வைராக்யப் பெற்றார். அவர் பக்தியின் முதிர்ந்த நிலையை அடைந்த பொழுது, தேவிக்கு நறுமணம் கமழும் பூமாலை சாத்துவார். சில சமயம் தாமரை மலர்களை அல்லது வில்வ தளங்களையும் செம்பருத்திப் பூக்களையும், தேவியின் திருவடித் தாமரைகளில் சமர்ப்பித்து ஆனந்த பரித ராவார். அச் சமயங்களிலே அவர் ராமப்ரஸாதர், கமலாகாந்தர், நரேச சந்திரர் முதலிய சக்தி சாதகர்களின் கீர்த்தனைகளைப் பாடிக் களிப்பார். சில சமயம் கைகளைக் கூப்பிக் கொண்டு, "தாயே, என்பால் கருணை புரிவாய். நீ ராம ப்ரஸாதனுக்கு எவ்வளவு கருணை புரிந்தாய். என்னிடமும் ஏன் அப்படியே கருணை புரியலாகாது தாயே? அம்மே, எனக்குச் சாஸ்திரம் தெரியாது; நான் பண்டிதனில்லை. அம்மே; தாயே, எனக்கு ஒன்றுமே தெரியாது; எதையும் தெரிந்து கொள்ளவும் விருப்பமில்லை. தாயே, நீ எனக்குப் பிரத்தியக்ஷமாகித் திருவருள் புரிவாயா மாட்டையா

சொல்லு; அம்மே, எனக்குப் பிராணன் போகிறது, எனக்குத் தரிசனம தா. அம்மா, நான் அஷ்டமா சித்திகளைக் கோரவில்லை; ஜனங்களுக்குள் கௌரவத்தையும் கோரவில்லை. உலகத்தார் என்னை அறிய வேண்டும்; என்கிற இவ்விதமான ஆசைகள் எனக்கில்லை யம்மா. உன் திருமுக மண்டலத்தின் காட்சி ஒன்றையே நான் கெஞ்சிக் கேட்கிறேனம்மா'' என்று கதறுவார். ஆஹா! இது எவ்வளவு இனிமையாயும் விழுமியதாயும் இருக்கிறது! இடைவிடாது செய்துவந்த காளி பூஜையினால் அவரது வாழ்க்கை ஈடேறியது. நிஷ்காம பக்தியானது கடவுள் நதியாகிய கங்கையின் பிரவாஹம் போல் மிக்க வேகத்துடன் அவரது உள்ளத்தில் பெருகியது.

ராமப்ரஸாதரும் இத்தகைய பக்தியின் பரீவாஹத்தினால் உள்ளம் பூரித்துத் தேவியை நோக்கி இவ்வாறு பாடியிருக்கிறார்:—“அம்மே, நீயும் பைத்தியக்காரி. உன் பதியும் பைத்தியக்காரன். இன்னும் ஒரு பைத்தியக்காரனும் இருக்கிறான். நின் திருவடிகளின பொருட்டுப் பைத்தியம் பிடித்தலையும் ராமப்ரஸாதனே அவன்.''

கிருஷ்ண ஸேவையினால் பக்தி கைவரப் பெற்றதற்கு உத்தம உதாரணமாயிருப்பவர் அம்பரீஷராஜர்.

“அவர் கண்ணனுடைய திருவடித் தாமரைகளைச் சிந்திப்பதில் மனத்தையும், வைகுண்ட நாதனுடைய குணங்களை வர்ணிப்பதில் வாக்குகளையும், ஹரியின் ஆலயத்தைச் சுத்தி செய்வது முதலியவற்றில் கைகளையும், அச்சுதனுடைய ஸத்கதைகளைக் கேட்பதில் செவிகளையும், செலுத்தினார்.

“முகுந்தனுடைய மூர்த்திகள் விளங்கும் ஆலயங்களைத் தரிசிப்பதில் கண்களையும், அவனுடைய அடியார்களின் திருமேனிகளைத் தீண்டுவதில் அங்க ஸங்கத்தையும், அவனுடைய திருவடித் தாமரைகளில் சாத்தப்பட்டு அவற்றில் நறுமணந் தாங்கிய திருத்துழாயை முகர்வதில் மூக்கையும், அவனுக்கு நிவேதித்த அடிசில் முதலியவற்றைச் சுவைப்பதில் நாவையும் செலுத்தினார்.''

“ஹரியின் திவ்ய க்ஷேத்திரங்களில் சஞ்சரிப்பதில் பாதங்களையும், ஹ்ருஷீகேசனுடைய திருவடிகளை வணங்குவதில் தலையையும் செலுத்தினான். அவனுக்குள்ள காம

(போக்கிய) விஷயங்களையும் போக விருப்பற்றவனைப் பகவானுக்குத் தொண்டு செய்யும் பாவனையிலேயே அநுபவித்தான். *உத்தம சுலோகனுகிய எம்பெருமானுடைய அடியார்களைச் சார்ந்திருப்பதனல் உண்டாகும் பக்தியின்பம் பெற வேண்டியே அவன் இவ்வாறு செய்து வந்தான்."

அவர் இவ்வாறு செய்த வரவர

"மாளிகைகளிலும், மனைவியரிலும், மக்களிலும், உறவினரிலும், யானை, அணிதேர், புரவி, ஆட்பெரும் படைகளிலும், அழிவில்லாத ரத்னுபரணங்களிலும், ஆயுத முதலியவற்றிலும் அனந்தமான நிதிகளிலும் பெரிதும் பற்றற்றவனுனன்,"

ஸ்ரீ பாகவதம்.

அவர் இவ்வாறு படிப்படியாய்ப் பிரம பக்தி கைவரப் பெறவும், அவரது உள்ளம் ஸ்ரீ ஹரியின் பாத பத்மங்களில் ஈடுபட்டிருந்தது. எங்கள கிராமத்தில் ராம கிருஷ்ணன் என்கிற † ரஜக விப்ரன் ஒருவன் அவன் தன் வீட்டில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்த ராஜ ராஜேசுவரன் என்னும் திருநாமமுடைய கிருஷ்ண விக்கிரஹத்துக்கு நித்திய பூஜை புரிந்து வந்தான். இந்தப் பூஜையினல் ராமகிருஷ்ணனுக்குக் காலக்கிரமத்தில் பக்தி முதிர்ந்தது. ஒருநாள் பகல் 12 மணிக்கு அவன் வீட்டில் பலபேர் கூடி ஸங்கீர்த்தனம் செய்யும் கோலாஹலத்தொனி என் காதில் விழவும், நான் ராமகிருஷ்ணன் வீட்டில் ஏதோ பெரிய உத்ஸவமாக இருக்கவேண்டுமென்று நினைத்து, விசேஷ மென்னவென்று பார்த்து வரும் பொருட்டு அதிக ஆவலுடன் அவன் வீட்டுக்குச் சென்றேன். அப்பொழுது நான் அங்கே கண்ட காட்சியை என்றும் மறக்க முடியாது. ராமகிருஷ்ணனுடைய பேத்தியாகிய ஒரு சிறுமி ராஜ ராஜேசுவரன் சந்நிதியின் திருமுன்பே வெறுந் தரையில் படுத்துக் கிடக்க, சிலர் அந்தப் பெண்ணைச் சூழ்ந்தும சந்நிதியைச் சுற்றியும் மூச்சைப் பிடித்துக்கொண்டு உரத்த குரலில் ஸங்கீர்த்தனம் பாடிக்கொண்டு வலம் வந்ததைக் கண்

---

*எவனுடைய கதையைக் கேட்பதனுல் பாவம் கெடுமோ, அவன் 'உத்தம சுலோகன்' எனப்படுவான்.

† ரஜகன் வண்ணுன், விப்ரன் பார்ப்பான்; எனவே ரஜகவிப்ரன் வண்ணுருக்குப் புரோகிதனுகிய பார்ப்பான்.

டேன். ராமகிருஷ்ணனுடைய இரு விழிகளினின்றும் கண்ணீர்த் தாரை அருவியாய்ப் பெருகிக்கொண்டிருந்தது. அவன் சில நேரம் அடியார் கூட்டத்துடன் சேர்ந்து பாடிக் கொண்டிருந்தான். சில நேரம் அப் பெண்ணண்டை வந்து, ஸ்வாமிக்கு நிவேதனம் செய்யப்பட்ட பிரஸாதத்திலிருந்து அவளுக்குக் கொஞ்சம் தின்னக் கொடுத்தான். சில நேரம் இமைகொட்டாது எம்பெருமானைப் பார்த்து அஞ்சலி செய்து இவ்வாறு விண்ணப்பித்தான். "என் ஐயனே, இந்தப் பெண்ணை எடுத்துக் கொண்டு போக உனக்குத் திருவுள்ளமானால், இப்பொழுதே கொண்டு போய்விடு. இப்பொழுது இந்த ஸ்தலமே பிருந்தாவனம். இங்கே நின் நாம ஸங்கீர்த்தனம் நடக்கிறது. இவளைக் கொண்டு போகத் திருவுள்ளம் பற்றினால், இந்த ஸங்கீர்த்தனம் முடியு முன்னமே, கொண்டுபோய் விடு, இல்லையேல், காப்பாற்றி யருள்," என்று பிரார்த்தித்தான். அந்தப் பெண்ணுக்கு விஷபேதி வந்திருந்தபடியால் அதை நிறுத்தும் பொருட்டு அவளை ராஜ ராஜேசுவரன் ஸந்நிதியில் கிடத்திப் பிரஸாதம் கொடுத்து இவ்வளவு உருக்கமாய்ப் பஜனை நடப்பதைக் கண்டு நான் வியப்படைந்தேன். ஸங்கீர்த்தனம் முடிந்ததும், பெண்ணை வீட்டுக்குள் கொண்டுபோனார்கள். அன்று மாலையில் ராமகிருஷ்ணன் எங்கள் வீட்டுக்கு வந்து, அந்தப் பெண் முற்றிலும் ஆரோக்கியம் அடைந்துவிட்டதாகச் சொன்னான்.

பூஜை, ஹோமம், ஜபம் முதலியவை ஸாத்வ ஸ்வபாவமுள்ள ஸாதகர்களுக்குப் பக்தி கைகூடுவதற்குச் சிறந்த ஸாதனங்களாம். விக்ரஹங்களில் நம்பிக்கை யற்றவர்களுக்கும் விக்ரஹாராதனத்தை மறுக்கும் மதக்கோட்பாடுடையவர்களுக்கும் பிரகிருதி விலாஸத்தில் கடவுளின் ஸாந்நித்தியத்தை அநுபவித்தலும் பிரகிருதியில் விளங்கும் பரம புருஷனுடைய லீலா விபூதிகளைத் தியானித்துப் போற்றுவதுமே கிருஷ்ண ஸேவை யாகும். பிரபஞ்சத்தைத் தோற்றுவித்த பிரபுவின் அற்புதமான ஆக்கற்றிறனையும், பிரகிருதியில் அவன் அநவரதமும் பிரத்தியக்ஷமா யிருக்கும் விதத்தையும் கண்டு எவரே அப்பரம

புருஷனிடம் வியப்புற்றுப் பரவச மடையாநிருப்பர்? பண்டைக் காலத்து மஹரிஷிகள் பிரகிருதியில் எங்கணும் அவனுடைய சக்தியின் பல்வகை அருள் விளக்கங்கள் நிறைந்திருப்பதைக் கண்டே இந்திரன், வருணன், சூரியன், அக்கினி, ஜலம், முதலிய வெவ்வேறு பெயர் களால் அச் சக்தியை வழிபட்டனர். பிரகிருதியில் விளக்க முறறிருப்பதான இந்தச் சக்தியைக் குறித்த துதி களால் வேதங்கள் நிறைந்திருக்கின்றன. அம் மஹ ரிஷி களைப் பின்பற்றிப் பிரகிருதியின் அகத்தே பகவத் லீலை களைக் காணும் பொருட்டு உள்ளன்புடன் முயல்கின்ற வர்கள் பகவத் பக்தி கைவரப் பெற்றுக் கிருதார்த்த ராவார்களென்பது திண்ணம். மேற்றிசை யுலகின் சாதுக்களுக்குள்ளே உவொர்ட்ஸ்வொர்த் (Words worth) மஹா கவியைப் போல் பிரகிருதியில் பகவானை உணர்ந்தநுபவித்தவர்கள் எனக்குத் தெரிந்த மட்டில் வேறெவரு மில்லை. அவர் பிரகிருதியின் வாயிலாக பக வானுடன் கலந்து ஈடுபட்ட விதத்தை அவர் இயற்றிய 'எக்ஸ்கர்ஷன்' (Excursion) என்னும் சிறு காவியத்தில் தீட்டப்பட்டுள்ள 'பரிவிராஜக'னைப் பற்றிய சுடர் வீசும் சித்திரத்தில் தெளிவுறக் காணலாம். அது வருமாறு:—

He beheld the sun
Rise up, and bathe the world in light! He looked-
Ocean and earth, the solid frame of earth
And ocean's liquid mass, in gladness lay
Beneath him—Far and wide the clouds were touched,
And in their silent faces could he read
Unutterable love. Sound needed none,
Nor any voice of joy; his spirit drank
The spectacle; sensation, soul and form,
All melted into him; they swallowed up
His animal being; in them did he live,
And by them did he live; they were his life,
In such access of mind, in such high hour
Of visitation from the living God,
Thought was not; in enjoyment it expired.

No thanks he breathed, he proffered no request ;
Wrapt into still communion that transcends
The inperfect offices of prayer and praise,
His mind was a thanks-giving to the Power
That made him ; it was blessedness and love.

பரிவிராஜகன் பிராதக்காலத்து அருணரவி, பரிதியின் கதிர்களால் அலம்பப்பெற்ற பிருதிவி, பெருங் கடலின் நீர்த்திரள், பொன்னிறக் கதிர்களால் அழகுற்ற மேக மாலை முதலிய இயற்கையின் மனோஹரக் காட்சிகளைப் பார்த்துப் பார்த்து பகவத் பிரேமையில் மூழ்கிவிடவே, பிரஹ்மானந்தாநுபவத்தால் அவனுடைய சித்த விர்த்திகள் கட்டுண்டு போயின. உவொர்ட்ஸ்வார்த்தின் ஆவியானது இத்தகைய இயற்கைக் காட்சிகளின் சிந்தனையில் ஈடுபட்டுப் பட்டு அந்தப் பெரிய பொருளிலேயே முற்றிலும் லீனமாய் விட்டது.

பகவத் ஸ்வரூபத்தை விசுவ வியாபகமாக உணர்ந்த தனாலேயே பிராசீன ஆரிய ரிஷிகள் பிரகிருதியை பகவானது விராட் ரூபமாகப் பாவனை செய்தார்கள். ஸ்ரீமத் பாகவதத்திலே பகவத் பிராப்தியின் பொருட்டுக் கூறப் பட்ட ஸாதனங்களுக் குள்ளே முக்கியமானது பின் வருமாறு :—

“ஆகாயம், வாயு, அக்கினி, ஜலம், பிரிதிவி, சோதி மண்டலங்கள், பூதங்கள், திசைகள், ஆறுகள் கடல்கள் முதலிய பொருள்கள் அனைத்தையும் ஹரியின் வடிவமென்று கருதி வணங்குக.”

சேதநாசேதந வடிவமான பிரகிருதி யனைத்திலும் ‘தமேவ ப்ஹாந்தம் அநுப்ஹாந்தி ஸர்வம், தஸ்யப்ஹாஸா ஸர்வ மிதம் விப்ஹாதி’. ‘அச்சோதிப் பிழம்பையே சர்வமும் அநுகாரணம செய்கின்றது; அவனுடைய ஒளியினாலேயே இஃதெல்லாம் விளங்குகின்றது,’ (கடோபநிஷத்) என்றும், ‘நீரின் கண் ஹரி, நிலத்தின் கண் ஹரி, இந்துவில் ஹரி, இரவியின் கண் ஹரி, வன்னி தன்னிலும் வளியின்கண்ணும் ஹரி, ஞால மெல்லாம் ஹரி மயமாமே,’ (வங்காளி கீதம்) என்றும் உய்த்துணர்வோமாக.

'ஒரே சூரியன் பல்லாயிரம் கிரணங்களால் வையகத்தையெல்லாம் ஒளிரச் செய்வதே போல், கற்புடைய மனைவியின் அன்பிலும், அன்னையின் அன்பிலும் நின் அன்பே பன்னூறு வகையாய் வெளிப்பட்டு விளங்குகின்றது' என்றும்,

'மேகங்களை ஊடுருவி ஓங்கிய மலைச் சிகரங்களிலும், ஆழ்ந்த நீலக் கடலுக்குள்ளும் எங்கு சென்றாலும், அங்கு நீயே இருக்கிறாய். சூரியனொளியில் நின் பேரொளி திகழ்கின்றது, திங்களில நின் எழில் விளங்குகின்றது, மேகங்களிலும் நின் மாண்பு மிளிர்கின்றது. ஜனங்கள் குழுமியுள்ள நகரந் தன்னிலோ நிர்ஜனமான கானகந் தன்னிலோ எங்கே சென்றிடினும், அங்கெல்லாம் இருப்பது நீயே,' என்றும் பக்தியால் தழுதழுத்த குரலில் ஆண்டவனை அநவரதமும் வழுத்துவவோமாக.

3. பாகவதம்

சமய நூல்களை ஓதுதலும் கேட்டலும் பக்தி வளர்ச்சிக்கு மிக்க பயனளிப்பதாகும். ஆண்டவனுடைய சிறப்புக்களை விதந்து கூறுவனவும், அவனுடைய திருவிளையாடல்களைத் தெரிவிப்பனவும், அவனுடைய ஆற்றலைப் புகழ்ந்துரைப்பனவும், அடியார்களின் வரலாறுகளை வகுத்தோதுவனவுமாகிய நூல்களைப் படிப்பதாலும், கேட்பதாலும், மனம் பக்தி நெறியில் முன்னேறிச் செல்லுவதாகும். ஆகையினாலேயே சைதந்யாழ்வார் ஸ்ரீ பாகவதத்தைப் பிரதான ஸாதனமாகக் கூறியிருக்கிறார். ஜகத்தின் இதிஹாஸமும், விஞ்ஞான நூல் முதலியனவும், எம்பெருமானுடைய லீலைகளையும் மகிமையையும் உணர்த்திப் பக்தியை எழுப்புகின்றமையால் அவற்றையும் பாகவதம் என்ற பெயருக்குள் அடங்குவனவாகவே கொள்ளலாம். மிகக் கியாதியுடன் ஐரோப்பாவில் வாழ்ந்த "காலன்" என்கிற விஞ்ஞான விற்பன்னனுக்கு முதலில் கடவுளிடத்தே நம்பிக்கை இல்லாதிருந்தது. ஆனால் அவன் தேக தத்துவங்களை ஆராய்ந்து, மானுட தேகத்தின் அற்புதமான அமைப்பையும், அவ் வமைப்பின் இரத்த தாதுக்கள், நரம்புகள், என்புகள், பேசிகள் முதலியவை பொருத்தப் பட்டிருக்கும் திறனையும் கண்ட அளவில், அவனுடைய

இருதயம் பகவத் விஷயத்தில் வியப்பால் பூரிக்க, அவன் பக்தனுகி பகவர் மகிமையை வர்ணித்து அழகு மிக்க ஓர் அரிய நூலை இயற்றினன். ஸத் ஸாங்கத்தியம் வாய்க்கப் பெருதவர் பாகவதம் ஓதுதலினுல் அக்குறையை ஒருவாறு தீர்த்துக்கொள்ளலாம்.

4. நாம ஸங்கீர்த்தனம்

நாம ஸங்கீர்த்தனமும், நாம சிரவணமும், நாமஜபமும், பக்தி வளர்ச்சிக்கும், பெரிதும் துணை புரிவனவாம். நாம ஸங்கீர்த்தனத்தின் மகிமையை கௌரங்கரைப் போல் வற்புறுத்தியவர் வேறெவருமில்லை. அவர் அடிக்கடி இவ்வாறு மொழிவர்:—

"ஹரேர் நாம ஹரேர் நாம
ஹரேர் நாமைவ கேவலம்
கலௌ நாஸ்த்யேவ நாஸ்த்யேவ
நாஸ்த்யேவ கதிரந் யத்ஹா:

"ஹரியின் பெயர், ஹரியின் பெயர், ஹரியின் பெயர் ஒன்றே; கலியுகத்தில் அதை யன்றி வேறு கதி இல்லவே யில்லை."

சுபுத்திராயனுக்குப் பாப விமோசன மார்க்கத்தை உபதேசிக்கையில் அவர் இவ்வாறு கூறினர்:

ஒரு முறை நாமோச்சாரணம் செய்தாலுமே உன் பாவ மனைத்தும் தொலையும். இரண்டா முறை உச்சரித்தால், கண்ணன் கழலிணையை நண்ணுவாய்."

சைதந்ய சிஷ்யரில் ஒருவராகிய ஹரிதாஸ தாகூர் சில பண்டிதருடன் நாம மகிமையைப்பற்றிப் பேசுகையில் இவ்வாறு கூறினர்:—

"நாம ஸ்மரணத்தினுல் பாப க்ஷயம் உண்டாகு மென்று சிலரும், மோக்ஷப் பிராப்தி உண்டாகுமென்று சிலரும் கூறுவர். ஹரிதாஸர் கூறுவதென்ன வெனிலோ—'அவ் விரண்டு மல்ல; நாம ஸ்மரணத்தினுல் உண்டாகும் பலன் கண்ணன் திருநாமத்தை ஓதிய அளவில் அவன் கழலிணையில் காதல் பிறக்கும். முத்தியும், பாவ நீக்கமும் உப பலனேயாம். இதற்கு எடுத்துக் காட்டு, சூரியோதயமானவுடனே பூமியிலுள்ள சகல பதார்த்தங்களையும் காணப் பெறுகின்றோம். இருள் தானுகவே மறைந்துவிடுகிறது."—(சைதந்ய சரிதாமிர்தம்.)

ஸ்ரீமத் பாகவதம் பதினோராம் ஸ்காந்தத்தில் ரிஷபன் மைந்தனாகிய கவி யென்பான் ஜனகராஜனை நோக்கிச் சொல்லுகின்றான் :—

"பகவந் நாம ஸங்கீர்த்தனத்தை விரதமாகக் கொண்டவன், தனக்குப் பிரியமான நாம கீர்த்தனம் புரியப் புரிய, அவனுடைய இருதயத்தில் எம்பெருமானிடத்தில் காதல் உண்டாகிறது; உள்ளம் உருகுகின்றது. உருகவே, அவன் ஒருகால் உரத்துச் சிரிப்பன். ஒருகால் அழுவன். ஒருகால், உள்ளம் வருந்திக் கூக்குரலிடுவன். ஒருகால் பாடுவன். பின்னும் ஒருகால் பித்தனைப்போல் உலக நடைக்குப் புறம்பானவனாய்க் கூத்தாடுவன்."

நாம ஸங்கீர்த்தனம் செய்யப் படிப்படியாய்ப் பிரேமை வளரும். பிரேமை வளரப் பாவம் அழியும்.

"யாதொரு நாமம் ஒரு முறை உதித்த மாத்திரையில் சகல லோகத்தின் அகில பாபத்தையும் ஒழித்திடுமோ, பாவமாகிய இருட் கடலைக் கடப்பதற்கு நாமாவைப் போன்ற, ஜகத்துக்கு மங்களகரமான அந்த ஹரி நாமம் வெல்க."

"உள்ளக் கண்ணாடியைத் துடைத்து நிர்மல மாக்குவதாய், விஷய வாஸனையாகிற பெருங் காட்டுத் தீயை அவிப்பதாய், அல்லிப் பூவை அலரச் செய்யும் வெண் ணிலவைப் போல் நம்மிடத்துள்ள நலத்தை மலரச் செய்வதாய், அந்தப்புரத்தில் வசிக்கும் புது மணப் பெண்ணைப்போல் இருதயத்தின் இரகசியப் பிரதேசத்தில் உறையும் பிரஹ்ம வித்யையின் உயிராய், பேரின்பக் கடலைப் பொங்கச் செய்வதாய், சொல்லுக்குச் சொல் அமுதத்தின் இன்சுவை கொண்டதாய், ஆத்மாவை ஆனந்தக் களிப்பில் மூழ்க வைத்துப் பரவசப் படுத்துவதாய்ச் சிறந்து விளங்குகின்ற ஸ்ரீ கிருஷ்ண ஸங்கீர்த்தனம்."—(பத்யாவளி.)

பிரதிதினமும் ஒரு குறித்த நேரத்தில் இஷ்ட மித்திரர்கள் ஒன்றாய்க் கூடி நாம ஸங்கீர்த்தனம் செய்வதைப் போல ஆனந்தகரமானது வேறொன்றில்லை. உள்ளபடியே அப்பொழுது ஆனந்த வெள்ளம் பொங்கி வழியும். உள்ளத்தில் சாந்தி உண்டாகும். விஷய வாஸனைகள் அந்தச் சமயத்துக்கு மட்டுமாவது மறைந்து போம். இந் நாம ஸங்கீர்த்தனத்தைத் தவறாது செய்துவந்தால், மக்கள்

கிருதார்த்தராகிப் பரம புருஷார்த்தத்தை எய்துவது திண்ணம்.

நாம ஸங்கீர்த்தனம் செய்யவேண்டிய பத்ததியைப் பற்றிக் கௌரங்கர் தம் சிஷ்பருக்கு இவ்வாறு போதித்திருக்கிறுர்.

"புல்லேயும் பார்க்கத் தாழ்மை பூண்டவனுய், மரத்தையும் பார்க்கப் பொறுமை வாய்ந்தவனுய், பிறரிட மிருந்து பெருமையை விரும்பாமல் எல்லோரையும் பெருமைப்படுத்திக்கொண்டு சதா காலமும் ஹரிநாம ஸங்கீர்த்தனம் செய்யக்கடவாய்."

நாம ஸங்கீர்த்தன காலத்தில் அந்தந்த நாமங்களால் உணர்த்தப்படும் பகவத் குண விசேஷங்களைப்பற்றிச் சிந்திக்கவேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் அந்த நாம ஸங்கீர்த்தனத்தினுல் யாதொரு பயனும் விளையாது. கேவலம் வேடிக்கையின் பொருட்டுச் செய்யும் நாம ஸங்கீர்த்தனம் வியர்த்தமேயாகும்.

நாம ஜபம் செய்யுமிடத்தே, அந்நாமத்தின் அர்த்த விசேஷத்தையும் சக்தியையும் நன்கு உணரவேண்டும். மந்திர ரூபமாய் ஜபிக்கும் நாமத்தின் பொருளையும், ஆற்றலையும் அறிந்துகொள்ள வேண்டுவது அத்தியாவசியம் என்பதை அடியிற்கண்ட சுலோகம் அறிவுறுத்துகின்றது :—

"மந்த்ரார்த்தம் மந்த்ர சைதந்யம்
யோ ந ஜாநாதி ஸாத்ஹக:
சதல க்ஷப்ரஜப்தே'பி தஸ்ய
மந்த்ரோ ந ஸித்த்ஹயதி"

(மஹா நிர்வாண தந்த்ரம்.)

"மந்திரார்த்தத்தையும் மந்திர சக்தியையும் உணராத சாதகன் நூறு லக்ஷம் உரு ஜபித்தாலும், அவனுக்கு மந்திர சித்தி உண்டாகாது."

தக்க குருவினிடம் நாம ஜப தீக்ஷை பெறுவது ஞான நெறியில் மேலேறுவதற்குப் பெருந் துணையாகும். யதார்த்த உத்தம குருவினுல் உபதேசிக்கப் பெறுகிறவன்

உள்ளபடியே பாக்கியவானுவான். அத்தகைய தக்க குரு கிடைக்காதபக்ஷத்தில், தன் மனதுக்கு உகந்த நாமத்தைச் சிரத்தையுடன் ஜபித்து வரவேண்டும், சிரத்தையுடையவர்களுக்கு எம்பெருமான் தக்க குருவை உரியகாலத்தில் கிடைக்கப் பண்ணுவான்.

ஜபம் செய்யவேண்டிய விதத்தைக் குறித்து மஹரிஷிகள் இவ்வாறு உபதேசித்திருக்கிருர்கள்.

"ப்ரணவோ த்ஹநு: சரோ
ஹ்யாத்மா ப்ரஹ்ம தல்லக்ஷ்ய முச்யதே:
அப்ரமத்தேந வேத்த்ஹவ்யம்
சரவத் தந்மயோ ப்ஹவேத்."

(முண்டகோபநிஷத்து)

"பிரணவமாகிய ஓங்காரத்தை வில்லாகவும், ஆன்மாவை அம்பாகவும், பிரஹ்மத்தை இலட்சியமாகவும் பாவித்து ஸ்திரமும் அமைதி கொண்டதுமான மனத்துடன் அந்த இலட்சியத்தை அடிக்கவேண்டும். அம்பானது அதனல் அடிக்கப்பட்ட பொருளில் தன்யமாய்ப் பொருத்துவதே போல், ஆன்மாவும் பிரஹ்மத்தில் தன்யமாய் விடும்."

சாஞ்சல்யமற்ற மனத்துடன் பிரணவ ஜபம் செய்து வந்தால் ஆத்மா பிரஹ்மத்தில் கலந்துபோம். என்றபடி ஜபத்தின் மான்மியத்தைப் பற்றி மநு இவ்வாறு கூறுகிருர்.

"தர்ச பௌர்ணமாஸாதி விதியஜ்ஞங்களையும் விட மந்திரத்தை உரக்கச் சொல்லிச் செய்யும ஜபம் பத்து மடங்கு சிறந்தது. அருகிலிருப்பவர்க்குக் கேட்காமல் மெல்லிய குரலில் செய்யப்படும் உபாம்சு ஜபம் நூறு மடங்கு சிறந்தது. மானஸ ஜபம், அதாவது மனத்துக்குள்ளேயே செய்யும் ஜபம் ஆயிர மடங்கு சிறந்ததாம்."

"அந்தணன் வேள்வி முதலிய கருமங்களைச் செய்தாலும் செய்யாவிட்டாலும், ஜபத்தினலேயே சித்தியடைவான் என்பதில் சந்தேக மில்லை. செந்தண்மை பூண்டொழுகுபவனே (மைத்ர:) அந்தணன் எனப்படுவான்."

ஜபத்துக்குரிய சிறந்த பொழுதகள் மூன்ரும். அவையாவன:—

1. பிராஹ்ம முஹூர்த்தம் அல்லது பிரஹ்மத்துக்குரிய புண்ணியகாலம்; அதாவது கிழக்கு வெளுக்க ஒரு ஹோரை முந்திய பொழுதாம். ஸாதகர் இக்காலத்தையே பெரிதும் விரும்புவர். இத்த முஹூர்த்தத்தில் காலைக் காற்று ஆண்டவனது ஸந்நிதானத்திலிருந்து அடியார்களுக்கு வானுலகச் செய்திகளைக் கொண்டு வருகின்றதென்றும், அடியார்களிடமிருந்து ஆண்டவன் திருமுன்பே செய்திகளைக் கொண்டு போகின்றதென்றும் முஸ்லிம் ஸாதக கவிகள் கூறுகின்றார்கள்.

2. பிரதோஷம் அல்லது அந்திப் பொழுது.

3. அர்த்த ராத்திரி அல்லது நள்ளிரவு.

ஜபம் செய்வதற்கேற்ற உத்தம ஸ்தானங்கள் அடியிற் கூறப்படுகின்றன:—

'புண்ணிய க்ஷேத்திரம், ஆற்றங்கரை, குகை, மலையுச்சி, தீர்த்தஸ்தானங்கள், புனிதவனம் ஏகாந்தமான உபவனம், வில்வமரத்தடி, மலையின் தாழ்வரை, தேவாலயம், கடற்கரை, சொந்த வீடு —இவை மந்திர ஜபம் செய்யும் ஸாதகருக்குப் பிரசஸ்தமான இடங்களாம். அல்லது எவ்விடத்தில் சித்தசாமதானம் உண்டாகக் கூடுமோ, அவ்விடத்தில் இருந்து சாதனம் செய்யலாம்.''— (குலார்ணவ தந்திரம்.)

மிலேச்சர் அதாவது தர்மத் துவேஷிகள், தீயவொழுக்க முடையோர், கொடிய விலங்குகள், அல்லது பாம்புகள் உள்ள இடங்களில் ஜபம் செய்யக் கூடாதென்று குலார்ணவ தந்திரம் நிஷேதிக்கிறது. இந்த நிஷேதத்திற்குக் காரணம் எல்லோருக்கும் ஸ்பஷ்டமாய்த் தெரிந்ததேயாம்.

முழு மனதுடன் ஜபத்தைத் தவறாது செய்து வருவதால் உண்டாகும் பலனைக் கபீர் (கபீர்) தம் வாழ்க்கையில் அநுபவ ஸித்தமாக உணர்ந்தவர். அதை அவர் இவ்வாறு வியந்து கூறுகிறார்:—

"கபீரன் 'நீ' 'நீ' என்று சொல்லிக் கொண்டே 'நீ' யாய்விட்டான்; 'என்' னிடத்தில் இல்லை. நின் திருநாமத்

தின்மகிமையே மகிமை. நான் பார்க்குமிட மெங்கனும் 'நீ'யே இருக்கிருய்."

"கவீரன் 'நீ' என்று சொல்லிக் கொண்டே 'நீயே' யாகி நின்னில் கலந்து போய்விட்டான். நீயும் நானும் ஒன்ருகக் கலந்து போய்விட்ட படியால் இப்பொழுது என் மனம் உன்னை விட்டுப் பிரியேன் என்கிறது."

ஜபத்தினுல் ஸாதகன் பெறும் தூய நிலை இதுவே யாகும். அவன் தற்போதத்தைப் பரம்பொருளில் லயிக்கப் பெற்று, எங்கும் அவனையன்றி வேருென்றையும் காணுதவனுகிருன். அகில ஜகத்தும் அவனுக்குப் பரமேசுவர மயமாகவே விளங்குகிறது.

5. தீர்த்த யாத்திரை, க்ஷேத்திர வாஸம்.

தீர்த்த யாத்திரை அல்லது க்ஷேத்திர வாஸம் செய்வதினுல் பக்தி யுணர்ச்சி எழுச்சி பெறும். தீர்த்தங்கள் அல்லது புண்ய க்ஷேத்திரங்களுக்குத் தூய்மை எவ்வாறு சித்திக்கிறதெனில், காசிகாண்டம் இவ்வாறு கூறுகின்றது:

"பூமியின் ஏதொரு அற்புத மான்மியத்தாலும், ஜலத்தின் ஏதொரு அற்புத பிரபாவத்தாலும், முனிவர் மேவுமிடமாயிருப்பதினுலும், தீர்த்தங்களுக்குத் தூய்மை உண்டாகின்றது."

ஜ்வாலமுகி தீர்த்தத்தில் மலையினின்று குபீரென்று பளிச்சிட்டெழும் தீக்கொழுந்து (அக்னிஜ்வாலை) களையும், சீதா குண்டத்து வெந்நீரூற்றுக்களையும், கேதாரநாத க்ஷேத்திர 'மஞ்சுவாம்' மலைச்சிகரங்களையும், ஹரித்துவாரத்துக் கவினுறு கங்கை நீரோட்டத்தையும் காணுங்கால், எவர்க்கே பக்திரஸத்தால் உள்ளமுருகாது? அன்றியும் பிருந்தாவனத்தில் கண்ணனை நினைத்தும், நவத்துவீபத்தில் கௌராங்கனுரது திருத் தொண்டுகளை எண்ணியும், புத்த கயையில் போதிமரத்தடியில் உட்கார்ந்தும், அயோத்தியில் ராமபிரானது கீர்த்திக் குறிகளைக் கண்டும் எவருடைய இருதயங்களிலே தூய வுணர்ச்சிகள் தோன்ருமலிருக்க முடியும்? இனி வெறும் தூய வுணர்ச்சிகளைப் பற்றி மட்டுமே பேசுவானேன்? இந்தப்புண்ணிய க்ஷேத்திரங்களிலும் தீர்த்தங்களிலும் மஹா புருஷர்களின் ஸாங்கத்தியத்தினுல்

அநுக்கிரஹம் பெற்றுக் கிருதார்த்தரானவர்களை நினைத்தாலும் பக்தி அரும்புமே.

ஆத்ம நிவேதனம்

பகவானை அடைவதற்குச் சிறந்த வழி ஒன்று ஸ்ரீமத் பாகவதத்தில் இவ்வாறு விவரிக்கப் படுகிறது :—

"மெய்யினால், மொழியினால், மனத்தினால், இந்திரியங்களாலாவது, புத்தியால், ஆத்மாவாலாவது, பிரகிருதியின் சுபாவத்தினாலாவது ஒருவன் எவ்வெக் காரியத்தைச் செய்கிறானோ, அதையெல்லாம் பரம் பொருளாகிய நாராயணனுக்கே என்று சமர்ப்பிக்கவேண்டும்."

ஸ்ரீகிருஷ்ணன் அர்ஜுனனுக்குக் கீதையிலே இவ்வாறு உபதேசிக்கிறான் :—

"நீ எதைச் செய்தாலும், உண்டாலும், எதை ஹோமம் செய்தாலும், கொடுத்தாலும், எத்தவம் கிடந்தாலும், குந்தியின் மைந்த அதை எனக்கு அர்ப்பணம் செய்."

செய்கை, மொழி, சிந்தை முதலிய அனைத்தையும் ஆண்டவனுக்கு அர்ப்பணம் செய்ய முயல்கின்றவனுடைய இருதயம் தூயதாகவும் பக்தி நிரம்பியதாகவும் இருக்கும். எதைச் செய்தாலும், பேசினாலும், கருதினாலும், அஃதெல்லாம், அவன் பொருட்டேயென்றும், அவனுக்கு உரிமையாக்காமல் எவ்வினையும் செய்வதில்லையென்றும், எப்பேச்சும் பேசுவதில்லையென்றும், எக்கருத்துக்கும் மனத்தில் இடங்கொடுப்பதில்லையென்றும் இத்தகைய எண்ணம் ஒரு முறை உள்ளத்தில் உரத்துடன் ஊன்றிவிட்டதானால், அப்பொழுது தனக்குத் தானாகவே சித்தம் பக்தி ரஸத்தால் நிரம்பிவிடும். சகல விஷயங்களிலும் அவனையே ஸ்மரித்துக் கொண்டிருந்தால், ஒருவன் அவன்பால் ஈர்க்கப்படாமல் இருக்க முடியாது.

பக்தி நெறிக்குப் பிரதானமாய்த் துணை புரியும் சில சாதனங்களை இதுவரையில் விளக்கிக் கூறினேன். இப்பொழுது எம்பெருமான் கண்ணன் உத்தவருக்கு பக்தி கைகூடும் பொருட்டுச் செய்த உபதேசத்தை எடுத்துக் காட்டிவிட்டு இப் பகுதியை முடிக்கிறேன்.

"என்னைப் பற்றிய அமிர்த துல்லியமான வரலாறுகளில் சிரத்தையும், ஸர்வதா என்னுடைய நாமகீர்த்தனமும், என்னைப் பூஜிப்பதில் நிஷ்டையும், என்னைத் துதிகளால் வழுத்துவதும், என் கைங்கரியத்தில் ஆதாரமும், சர்வாங்கங்களாலும் என்னைப் பணிவதும், என் அடியார்களைச் சிறப்பாய் மதிப்பதும், எல்லா உயிர்களிலும் என்னைக் காண்டலும், என் பொருட்டே அங்கங்களைத் தொழிற்படுத்துவதும், என் குணங்களைக் கொண்டாடி உரையாடுவதும், என்பால் மனத்தை அர்ப்பிப்பதும், எல்லா விருப்பங்களையும் விலக்குவதும், பொருளையும் போகத்தையும் சுகத்தையும் தவிர்வதும், என்பொருட்டே வேள்வி, ஈகை, ஹோமம், ஜபம், விரதம், தவம் இவற்றைச் செய்தலுமாக இவ்வண்ணம் என்னிடம் ஆத்ம நிவேதனம் செய்து கொள்கிறவர்களுக்கு இவ்வனைத்தறங்களாலும் என்பால் பக்தி ஜநிக்கும். அத்தகையோருக்கு இனிப் பெறவேண்டிய பொருள் வேறெது எஞ்சியிருக்கிறது?''

ஏகாக்கிரத்துவ சாதனம்

சகல விதமான சாதனங்களுக்கும் ஏகாக்கிரகத்துவம் (ஒரு முனைப்பாடு) இன்றியமையாததாம். ஏகாக்கிரத்தன்மையின்றி, எவ்வகைச் சாதனத்தாலும் காரிய சித்தி உண்டாகாது. சித்த விக்ஷேபம் (மனத்தின் அலைவு) பக்திக்குப் பெரிய இடையூறாகும். அது நம் எண்ணத்தை வேறு வழியில் திருப்பி ஆத்ம சிந்தனையைத் தடுக்கும். இதை நம்மில் அநேகர் அநுபவத்தில் கண்டிக்கிறோம். ஒரு சாது மஹா புருஷனிடம் சென்று அவருடைய உபதேசத்தைக் கேட்கிறோம். அப்பொழுது அற்பமான வீட்டுக் கவலைகள் மனத்தில் புகுந்து அதை அலைக்கவும், சாதுவின் உபதேசமொழிகள் காற்றில் பறந்து போய்விடுகின்றன; நாம் ஸம்ஸார சிந்தையில் மூழ்கி விடுகிறோம். நம் எல்லோருக்கும் இத்தகைய அநுபவங்கள் நாடோறும் நிகழ்கின்றன. நாம் ஜபம் செய்ய ஆரம்பிக்கிறோம்; ஜபமாலை கையில் சுழலுகிறது; நாவும் வழக்கம்போல் அசைந்து கொண்டேயிருக்கிறது; மனமோ,—சில குடியானவர்களிடமிருந்து குடிவாரம் வசூல் பண்ணிக்கொண்டிருக்கிறது! நாம் ஒரு பஜனைக் கூட்டத்தில் கலந்து கொள்ளுகிறோம்; நாம ஸங்கீர்த்தனப் பிரவாஹம் கரைபுரண்டோடு

கிறது; அடியார்கள் மெய்ம் மறந்து பக்திரஸத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள்; நம்முடைய மனமோ,—ஏதோ ஒரு வியாஜ்ஜியத்துக்காக ஆதாரங்களைத் தேடிக் கொண்டிருக்கிறது. பிருந்தாவன க்ஷேத்திரத்தில் கோவிந்த பெருமானுடைய ஆலயத்தில் பிரதோஷகால பூஜையில் மங்களாரதி மஹா வைபவமாய் நடப்பதைக் தரிசிக்கிறோம்; பக்தி மேலீட்டினால் ஆடிப் பாடி அகங் குழைகின்றோம்—இதனிடையில் நம் மனம் இக்காட்சியை விட்டகன்று நம் வீட்டுக் கொல்லையிலுள்ள கிணற்றைப் பழுது பார்ப்பதற்கு வேண்டிய காரியங்களை வேகமாய் ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறது! படுக்கப் போகுமுன் பகவானை ஒருமுறை ஸ்மரிக்கிறோம்; பகவான் காட்சி யளிக்கிறான். ஆனால் நாம் எங்கே இருக்கிறோம்? ஒரு வேளை அப்பொழுது ஒரு புளிய மரத்தின் உரிமையைப் பற்றி உடன் பங்குக்காரருடன் கடுஞ் சொற்-போர் தொடுத்துக் கொண்டிருப்போம்! இவ்வாறு அலையும் மனமானது நாம் ஆத்யான்மிக மார்க்கத்தில் முன்னேறுவதற்குப் பெருந் தடையாய் நிற்கிறது.

பக்தி சாதனத்தின் பொருட்டுக் கீழே கூறிவந்த முறைகளை உறுதியுடன் பயின்று வந்தால், இத்தடைகள் அநேகமாய் நீங்கும். மஹரிஷி பதஞ்சலியார் சித்த விக்ஷேபத்தை-மன அலைவை—நீக்குவதற்கு எட்டுப் பிரதான மார்க்கங்களைக் கூறுகிறார்:—

(1) "அத் தடைகளை விலக்கும் பொருட்டு ஒரே தத்துவத்தைப்பற்றிச் சிந்திக்குமாறு மனத்தைப் பயிற்ற வேண்டும்."

தினந்தோறும் இடைவிடாமல் ஒரே விஷயத்தில் மனத்தை நிறுத்தப் பழக்கி வந்தால், ஏகாக்கிரத் தன்மை ஏற்படும்; அதனால் சித்த விக்ஷேபம் தணியும்.

(2) "சுகித்திருப்பவரிடம் ஆசூயை யின்றி நட்பு (மைத்ரி) பாராட்டுதலும், துக்கிப்பவரிடம் அலட்சியமின்றிக் கருணை காட்டுவதும், புண்யாத்மாக்களிடம் பகைமையின்றி உவகை யுடைமையும், அல்லாதாரிடம் உவகை யாவது, பகைமை யாவது கொள்ளாமல் உபேக்ஷையா யிருப்பதும் சாதனம் செய்துவந்தால், மனமலர்ச்சி யுண்டாம், அதனால் சித்த விக்ஷேபம் அகலும்."

ராகம் துவேஷம் முதலிய உணர்ச்சிகள் சித்த விக்ஷேபத்தை உண்டாக்குகின்றன. மைத்திரி கருணை முதலியவற்றால் ராகத் துவேஷாதிகளை வேருடன் கல்லுமிடத்தே மன மலர்ச்சி உண்டாம். மன மலர்ச்சியால் ஏகாக்ர சித்தம் ஏற்படும்.

(3) "நுரையீரலிலிருந்து காற்றைச் சற்று நேரத்துக்கு வெளிப்படுத்துவதனாலும், மூச்சை நிறுத்திவைத்துக் கொள்ளுவதனாலும் (ஏகாக்கிரத் தன்மை உண்டாகும்.)

இதுதான் பிராணாயாமம் என்று சொல்லப்படுவது. ஸமஸ்த இந்திரிய விருத்திகளும் பிராண வாயுவின் விருத்தியை ஆதாரமாகக் கொண்டிருப்பதாலும், மனமும் பிராணனும் தத்தம் வியாபாரங்களில் பரஸ்பர சம்பந்த முடையவைகளா யிருப்பதாலும், ஸமஸ்த இந்திரிய விருத்திகளையும் அடக்குவது வாயிலாகப் பிராண வாயுவை அடக்குமிடத்தே, மனத்துக்கு ஏகாக்கிரத் தன்மை உண்டாகும். பிராணாயாமப் பயிற்சியைத் தக்க குருவினிடமே உபதேசிககப் பெற வேண்டும். குருவின்றிப் பயின்றால் கேடு விளையக் கூடும்.

(4) "இந்திரிய விஷயங்களினின்று உண்டாகும் உணர்ச்சியும் சித்தத்தை நிலைகொள்ளச் செய்வதற்குக் காரண மாகலாம்."

இதன் கருத்தாவது:—மூக்கு நுனியில் சித்தத்தைத் தாரணை செய்யுமிடத்தே, திவ்ய கந்தத்தின் உணர்ச்சியும், நாவின் நுனியில் சுவை யுணர்ச்சியும், அண்ணத்தின் நுனியில் உருவ உணர்ச்சியும், நாவின் நடுவில் பரிச வுணர்ச்சியும், நாவின் அடியில் ஓசை யுணர்ச்சியும் யோகிக்குப் பிராணாயாம காலத்தில் நிகழும். இவ்வாறு உணர்ச்சிகள் நிகழும்போது, சித்தம் ஏகாக்கிரத் தன்மை அடையும். யோகப் பயிற்சி யுடையார்க்கே இதன் பொருள் விளங்கும்.

(5) "சித்தமானது முற்றிலும் சோகமற்றதாய் சாத்துவிகத் தன்மை கொண்டு ஜோதி மயமாய் விளங்கும் காலையில் ஸ்திரமா யிருக்கும்."

எவன் தூய்மைகொண்ட சாத்துவிகத் தன்மை பயின்று ராஜஸத் தன்மையை அகற்ற வல்லவனாகி, எக்

காரணம் பற்றியும் சோக முறுமலிருக்கிறுனே, அவனது மனம் குழப்ப மடையாது.

(6) "விஷய பதார்த்தங்களின் பொருட்டு உண்டாகும் ஆவலனைத்தும் அகன்றுவிடும்போதும், சித்தம் ஸ்திர மாகும்."

விஷய வாஸனையைத் துறந்தோரின் சித்தத்தைக் குறித்துச் சிந்தனை செய்தாலும் ஏகாக்கிரத் தன்மை உண்டாகும். சாதுக்களின் குழப்பமற்ற சித்தமானது எவனுடைய சிந்தைக்கு விஷயமாகிறதோ, அவன் தவருமல் அந்தச் சிந்தையினுல் குழப்பத்தினின்றும் விடுதலையடைகிறுன்.

(7) "சொப்பனம் அல்லது நித்திரையின் நினைவு அல்லது உணர்வு சித்தம் ஸ்திரமாயிருப்பதற்குத் துணை புரியும்."

இன்பம் வாய்ந்த யாதொரு சொப்பனத்தைப் பற்றி நினைப்பதனுலும், சுகமாய் நித்திரை செய்தேன், சற்றேனும் மன அமைதி குலையவில்லை என்று அடிக்கடி சிந்திப்பதனுலும் சித்தம் உறுதிப்படும்.

(8) "தனக்குப் பிரியமான சாதனத்தின் வழியும் அது கைகூடும்."

எதில் உள்ளத்துக்கு உவகை உண்டாகிறதோ, அப் பொருளைத் தியானம் செய்வதனுல், சித்தம் ஏகாக்கிரமாகும். புறத்தில் திங்கள் முதலியவற்றையும் அகத்தில் நாடிசக்கரம் முதலியவற்றையும் முறைப்படி தியானித்துக் கொண்டுவந்தால் சித்தம் உறுதிப்படும். நமக்கு உவப்பைத் தரும் பொருளைப்பற்றிச் சிந்திக்கும் பொழுது, உள்ளத்தில் இன்பம் பொங்குகிறது. அச் சிந்தையை விட்டுவிட மனம் வருவதில்லை. அப் பொருளை அவ்வாறே இடைவிடாது தியானித்து வந்தால், ஏகாக்கிரத்தன்மை வளரும். ஆனுல் காமாதுரமான ஆகர்ஷணத்தை விளைக்கும் பொருள்களுக்கு இடங் கொடுக்கக்கூடாது. அவற்றின் தியானம் மனத்தைச் சஞ்சலப் படுத்துமேயன்றித் திடப்படுத்தாது.

நிர்மலமான நேயத்துக் குரிய பொருளைப்பற்றிச் சிந்திப்பது வாயிலாக ஏகாக்கிரத் தன்மை சாதிக்கப்படும். இது விஷயமாய் ஓர் இனிய கதை உண்டு. ஒரு பிராஹ்ம

சாரி வேதாத்தியயனஞ் செய்யும் பொருட்டு ஒரு குரு வினிடம் சென்முன். அந்தப் பிரஹ்மசாரியின் மனம் வேத மோதும் சமயத்தில் ஸ்திரமாய் நிற்காமல் இங்கு மங்கும் அலைவதைக் குரு கவனித்தார். அவனை நோக்கி, உன் மனம் நிலைகொள்ளாமல் அலைவதேன்? என்று கேட்க, பிரஹ்மசாரி எனக்கு அத்தியந்தம் பிரியமான எருமை ஒன்றுண்டு. நான் வேத மோத உட்காரும் போதெல்லாம் அவ் வெருமையின் நினைவு வருகிறபடியால் என் மனத்தை ஸ்திரமாய் வைத்துக்கொள்ள முடியவில்லை என்முன். அப் படியானுல் வேத பாடத்தைக் கொஞ்சகாலத்துக்கு நிறுத்திவைத்து, உனக்குப் பிரியமான எருமையைப் பற் றியே சிந்தித்துக்கொண்டிரு, என்று குரு ஆஜ்ஞாபித் தார். அப்படியே பிரஹ்மசாரி ஏகாந்தத்தில் இருந்து எருமையைப் பற்றிச் சிந்தனை செய்யத் தொடங்கினுன். சிறிது காலம் சென்றபின் குரு ஒரு நாள் ஒரு சிறு கத வுள்ள அறையில் இருந்து கொண்டு கதவுக்கு அந்தண்டை இருந்த பிரஹ்மசாரியை விளித்து, முன் போலவே வந்து வேதாத்தியயனம் தொடங்கும்படிச் சொன்னுர். பிரஹ்ம சாரி வரவும், அவனுக்கு இன்னும் சித்தம் ஸ்திரமாய் இல் லாமையைக் கண்டு, குரு அவனை மீண்டும் எருமைத் தியா னம் செய்யுமாறு பணித்தார், பிரஹ்மசாரி மீண்டும் தனக் குப் பிரியமான எருமையின் தியானத்தில் அமர்ந்தான். பின்னும் சிலநாள் கழிந்தபின், குரு அதே அறையில் இருந்துகொண்டு, அதன் கதவின் அப்புறத்தில் இருந்த பிரஹ்மசாரியை வந்து வேத பாடம் தொடங்கும்படி அழைத்தார். இம் முறை பிரஹ்மசாரி, நான் தேவரீரிடம் எப்படி வருவேன்? என் கொம்புகள் இந்தக் குறுகிய வாசற்படியில் நுழையாவே என்முன். எனவே, இப் பொழுது பையன் எருமைத் தியானத்தில் தற்போதமிழந்து பூர்ண ஸமாதி யடைந்து விட்டானென்றும், ஆகவே அவனுக்கு மனம் ஸ்திரமாய் விட்டதென்றும் குரு அறிந்து, வா வா, உன் கொம்புகள் முட்டிக்கொள்ளாத படி நான் பார்த்துக் கொள்ளுகிறேன் என்முர். பிரஹ்ம சாரி உடனே வந்து, வேத பாடம் கேட்கத் தொடங்கி னுன். அவனுக்குப் பிரியமான எருமையின் இடையருத தியானத்தினுல், அவனுக்கு ஏகாக்கிரத்துவ சாதனத்தில்

நற்பயிற்சி உண்டாய் விட்டபடியால், அவன் மிகச் சொற்ப காலத்துக்குள்ளாகவே வேத வித்தியா விசாரதனாய் விளங்கலானான்.

திராடக சாதனம் அல்லது யாதேனும் ஒரு பொருளின் மீது பார்வையை ஸ்திரமாய் நிறுத்துதல் சித்தத்தை அசைவற வைத்துக் கொள்வதற்கு ஒரு பிரதான உபாயமாகும்.

முடிவில் பக்திப் பயிற்சியைப் பற்றி ஓர் எச்சரிக்கை செய்வது அவசியமாகும். சாதனையின் பொருட்டுக் கீழே கூறப்பட்ட முறைகளைத் திறம்படப் பயின்றவளவிலேயே ஆண்டவனைப் பிரத்தியக்ஷமாய்க் காணும் உரிமை தமக்கு சித்தித்து விட்டதென்றாவது, எந்த சாதகனும் தன் சொந்த சக்தியினாலேயே ஆண்டவனை வசமாக்கிக் கொள்ளக் கூடுமென்றாவது எவரும் நினைத்துவிட வொண்ணாது. ஆண்டவனை அடைய மனிதன் செய்யும் முயற்சி எவ்வளவு பெரிதாயிருந்தாலும், சற்றும் பற்றாததாகவே யிருக்கும்; ஏனெனில் அவனது எத்துணை அதிகமான ஆற்றலும் மிகக் குறுகிய வரம்புக் குட்பட்டதேயாம். அற்ப சக்தியுடைய மனிதன் தன் அற்ப சக்தியைக் கொண்டு அநந்த சக்தியுடைய ஆண்டவனைத் தனக்கு வசிய மாக்கிக் கொள்ள முடியுமா? ஆனாலும் மெய்யன்பு செய்யும் தன் அடியவர்க்குப் பக்தாவீ (பக்தவத்ஸலன்) ஆகிய எம்பெருமான் தானாகவே தன்னை ஈடுபடுத்திக் கொள்வதாகிய இவ்வொன்றே நமக்கு உய்யும் வழியாய் நின்றுதவுகின்றது. கண்ணனுடைய அன்னையாகிய யசோதை ஒருநாள் அவ்விஷமம் செய்யும் சிறு பிள்ளையைக் கயிற்றினால் கட்டமுயன்றாள். அப்படி முயலுகையில் அந்தக் கயிறு இரண்டு விரற்கடை குறைவாக இருந்தது. அப்போது யசோதை வேறு கயிற்றைச் சேர்த்து அதில் முடிந்தாள். அதுவும் இரண்டு விரற்கடை குறைவாகத் தோற்றியது. இப்படியே தன் வீட்டிலுள்ள கயிறுகளையெல்லாம் சேர்த்து முடித்துக் கட்ட முயன்றும் கயிறுகள் எட்டவில்லை, இன்னும் இரண்டு விரற்கடை குறையாகவே இருந்தன. இதைக கண்டு யசோதை அடங்காத ஆச்சரிய முற்றனள். அப்பொழுது,—

"ஸ்வமாது: ஸ்வின்நகா த்ராய்யா
விஸ்ரஸ்த கபரஸ்ரஜ:
த்ரிஷ்ட்வா பரிச்ரமம் க்ரிஷ்ண:
க்ரிபயா ஸீத் ஸ்வபந்த்ஹநே:"

ஸ்ரீ பாகவதம்.

"கண்ணன் தன் அன்னையின் திருமேனி சிரமத்தினல் வேர்த்தும் கூந்தலில் முடிந்த பூமாலை அவிழ்ந்து விழுவதாயும் இருப்பதைக் கண்டு தானே கட்டுண்டிருக்க இணங்கியருளினன்."

"ஏவம் ஸந்தர்சிதாஹ்யங்க
ஹரிணு ப்ஹ்ரித்ய வச்யதா:
ஸ்வ வசேநாபி க்ரிஷ்ணேந
யஸ்யேதம் ஸேச்வரம் வசே:"

"இந்தப் பிரஹ்மாண்டமும் பிரஹ்மாண்டாதிபதியும் தனக்கு அதினமாயும், தான் எவர்க்கும் அதினமல்லாதவனுயும், இருந்தும், தான் எப்போதும் தன் அடியவர்க்கு அதினமாயிருப்பவன் என்பதை இதனல் கண்ணன் காட்டினன்."

அவனை எவரும் கேவலம் சாதனைகளாலும் தம் சுய ஆற்றலாலுமே வசமாக்கிக் கொள்ள வல்லவராகார். ஆனல் எவர் அவனுக்கே அடியார் ஆகிருரோ, அவருக்கே அவன் அடியானுவான். அவனை நான் சாதனை வழியாலும், என் ஆற்றலாலும் வசமாக்கிக்கொள்வேன் என்று நினைக்கிறவன் முற்றிலும் மருள் கொடவனேண்யாவன். தன்னுடைய முயற்சிகள் புல்லினும் புன்மையானவை என்ற பாவனையை சாதனம் செய்து, அவனது திருவருளாலன்றி வெறும் சாதனையால் அவனை அடைய முடியாதென்று நம்பித் தாழ்மையோடு தொண்டாற்றுகின்றவனே அவனை அடைவன். அவனுடைய சாதனைத் திறத்துக்கு எம்பெருமானும் ஈடுபட்டு அருள் புரிவான்.

ஐந்தாம் அத்யாயம் முற்றிற்று

பக்தியின் படிகளும் பக்தனின் லக்ஷணங்களும்

ஆண்டவனுடைய அருளால் அவனது ஸாக்ஷாத்காரத்தை எதிர்ப்பாராத விதமாய்ப் பெற்று உய்ந்தவர்களின் விஷயம் சிறப்பு வகையானது. அத்தகைய பாக்கியவான்கள் எத்தனை பேர் இருப்பரென்று சொல்ல இயலாது. நம்மைப்போன்ற சாமானிய ஜனங்கள் பக்தி கைவரப் பெறுவதற்குப் பல சாதனங்கள் அநுஷ்டித்தாக வேண்டும். பக்தி விதையை ஊன்றுவதற்குரிய நிலத்தை எவ்வாறு பண்படுத்த வேண்டுமென்பதைக் குறித்து ஏற்கெனவே ஆராய்ந்தோம். இப்பொழுது பக்தி எவ்வாறு பரிபக்குவ மாகிறதென்பதைக் குறித்தும், பக்தனுடைய வாழ்க்கையில் படிப்படியாய் என்னென்ன லக்ஷணங்கள் வெளிபடுகின்றன என்பதைக் குறித்தும் அறிந்து கொள்ள முயல்வோம்.

ஸ்ரீமத் பாகவதத்தின் பதினோராம் அத்தியாயத்திலே விதேஹ ராஜனாகிய நிமியின் கேள்விக்கு விடை கூறும் முகத்தால் ரிஷபன் மைந்தனாகிய ஹரி என்னும் பரம பாகவதன் ஹரிபக்தர்களை உத்தம மத்திம அதமரென மூவகையாக வகுத்து, அவர்களின் இலக்கணங்களை இவ்வாறு விளங்குகிறார்:—

க. அதம பக்த லக்ஷணம்

"ஹரியை அர்ச்சையில் (விக்கிரஹத்தில்) மாத்திரம் சிரத்தையுடன் பூஜித்து ஹரி பக்தரையும் அந்நியரையும் பூஜியாதவன் பிராகிருத பக்தன் எனப்படுவான்."

எனவே, அவனது இருதயத்தில் பக்தி இப்பொழுது தான் தொடங்கி யிருக்கிறது; நாளாவர்த்தியில் அவன் உத்தம பக்தனுவான் என்றபடி. விக்கிரஹாராதனம் செய்யாதவருக்குள்ளே சுவர்கள் ஆண்டவனிடம் சிறிது சிரத்தையும், அவனுடைய நாம ஸ்மரணத்திலும் உபாஸனையிலும் மட்டும் சிறிது பிரவிருத்தியும் உடையவர்களாயிருந்

தும், அவனுடைய அடியாரிடத்திலாவது ஏனையோரிடத்திலாவது விசேஷ சிரத்தை பாராட்டாதவராய் இருக்கிறார்களோ, அவர்களும் இவ்வகுப்பில் சேர்ந்த அதம பக்தர்களேயாவார்கள்.

இவ் வகுப்பைச் சேர்ந்தவர்கள் தன்னலம் சாதித்துக் கொள்ளும் பொருட்டுத் தீவினை புரிய வேண்டி வரும் போதெல்லாம், அதற்குச் சிறிதும் பின் வாங்க மாட்டார்கள். ஒருகால் அவர்கள் நெஞ்சத்தில் சிறிது வருத்தம் உண்டாக்கக் கூடுமாயினும், அவர்களுக்கு இன்னமும் மன்னுயிரிடத்தே அன்பென்பது அருமபவில்லை. அவர்கள் நெஞ்சத்தில் அகங்காரமே நிறைந்திருக்கும்; பகைவர் மீது பழிவாங்க வேண்டும் என்னும் எண்ணம் சிறப்பாய்க் குடிகொண்டிருக்கும்; வெகுளி, அவா, மயக்கம் இவையெல்லாம் கொஞ்சங்கூடக் குறைவில்லாமலிருக்கும். ஆண்டவனிடம் சிரத்தை மட்டும் ஒரு சிறிதுண்டு. இவர்களது நெஞ்சமாகிய நிலம் ஒரு சிற்றளவுக்கு மட்டுமே பண்படுத்தப் பட்டிருக்கிறது. அவ்வளவேயன்றி அதிகமொன்று மில்லை.

உ. மத்திம பக்த லக்ஷணம்

> "ஆண்டவனிடத்தே அன்பும், அடியார்களிடத்தே நட்பும், பாமரரிடத்தே கருணையும், பகைவரிடத்தே உபேக்ஷையும் உடையவன் மத்திம பக்தனாவன்."

இந்த நிலையில் இருதயமாகிய நிலம் முன்னிலும் அதிகமாய்ப் பண்படுத்தப் பெற்றிருக்கிறது. முன் ஆண்டவனிடத்தே வெறும் சிரத்தையாயிருந்தது இப்பொழுது அன்பாய் முதிர்ந்திருக்கிறது. அடியாரிடத்தே முன் இல்லாதிருந்த நேயம் இப்பொழுது தோன்றியிருக்கிறது. சாது சங்கத்தில் உள்ளங்கொண்ட ஆவல் ஏற்பட்டிருக்கிறது. பாமரர்மாட்டு இருந்த பகைமை போய், இப்பொழுது இரக்கம் பிறந்திருக்கிறது. பகைவரிடம் முன் கொண்டிருந்த வஞ்சினமும் பழிவாங்கும் குணமும் இப்பொழுது மென்மையுற்று அன்னார் நடத்தையில் உபேக்ஷையாக மாறி விட்டன. ஆனால் அனைவரையும் சமதிருஷ்டியுடன் நோக்கும் பண்பு இன்னமும் படிய

வில்லை. பக்தி வெள்ளம் இருதயத்தில் கரைபுரண்டு எல்லா வற்றையும் இன்னும் ஏகாகாரமாக்கிவிடவில்லை.

௩. உத்தம பக்த லக்ஷணம்

"ஆத்ம விஷயத்தில் தான், பிறர் என்ற வேற்றுமை பாராட்டாதவனாய், பொருள் விஷயத்தில் தனது, பிறரது என்னும் பேத வுணர்ச்சி யற்றவனாய், எனவே, தன் பொருளை ஒருவிதமாகவும் பிறர் பொருளை ஒருவிதமாகவும் நோக்காதவனாய், எல்லா உயிர்களிடத்தும் சம புத்தி யுடையவனாய், புலன்களையும் மனத்தையும் அடக்கியிருப்பவன் பாகவதோத்தமன் ஆவன்.

"எல்லா உயிர்களிலும் ஆண்டவனுடைய நிரதிசய ஐசுவரிய விளக்கத்தைக் கண்டு, எல்லாப் பொருள்களையும் ஆண்டவன் அதிஷ்டித்திருப்பதை உணர்கின்றவன் பாகவதோத்தமன் ஆவன்.

"இந்திரியங்களால் விஷயங்களைக் கிரஹித்த போதிலும், இவ் வுலகத்தை விஷ்ணுவின் மாயை யென உணர்ந்து காய்தலும் உவத்தலும் அகற்றியிருப்பவன் பாகவதோத்தமன் ஆவன்.

"தேகத்தையும் இந்திரியங்களையும் பிராணனையும், மனோ புத்திகளையும் முறையே பாதியா நின்ற பிறப் பிறப்புக்கள், பசி தாகங்கள், அச்சம், துன்பம் முதலியவற்றை உலக வாழ்வின் தவிர்க்க வொண்ணாத தன்மைகள் எனக்கொண்டு ஹரி நாம ஸ்மரணத்தினால் அவைகளால் மயங்கா திருப்பவன் பாகவதருள் தலை சிறந்தவன் ஆவன்.

"உலகப்பற்றுடன் கூடிய வினையின் விதைகள் தன் மனத்தில் மூளை யெடுக்க இடங்கொடாது. வாசுதேவன் ஒருவனையே தஞ்சமாக அடைந்திருப்பவன் பாகவதருள் உத்தமன்.

"எவனுக்குப் பிறப்பு, தொழில், வர்ணம், ஆச்சிரமம், ஜாதி இவைகளால் இந்தத் தேகத்தில் ஆத்ம புத்தி, அதாவது நான் என்கிற அஹங்கார பாவனை உண்டாவதில்லையோ அவனே ஹரிக்குப் பிரியமானவன்.

"அரைக் கணநேர மாயினும் அரைநிமிஷமாயினும் எம் பெருமானது திருவடித் தாமரைகளி னின்றும் மனத்தை அகற்றினால் மூவுலகங்களின் முழுச் செல்வத்துக்கும் உரிமை

பெறுவதாயிருப்பினும் எவன் எம்பொருமானது திருவடியிணையைத் தவிர்த்து இவ்வுலகத்தில் வேறெதையும் ஸாரமென்று கருதாதவனாய், ஆண்டவனிடத்தே மனத்தைச் செலுத்திய தேவர் முதலானவர்களாலும் தேடத் தகுந்த துர்லபனாகிய அவ் எம்பெருமானது சரணாரவிந்தங்களினின்று அரை இமைப் பொழுதேனும் மனத்தை அசையவொட்டாது வைத்திருக்கிறானோ அவனே பக்தருட் சிறந்தவன்,

"எம்பெருமானது பேராற்றல் படைத்த திருவடி விரல்களின் ரத்தினம் போன்ற நகங்களின் குளிர்ந்த நிலவினால் காமம் முதலிய தாபங்கள் நீங்கப்பெற்ற பக்தர்களின் நெஞ்சத்தில் மீண்டும் விஷய வாசனை எப்படித் தோன்றக் கூடும்? இரவில் சந்திரன் உதித்த மாத்திரத்தில் சூரியனுடைய வெப்பம் எவரையேனும் வருத்த இயலுமோ?

"எவனுடைய திருநாமத்தை அறியாமற் சொல்லினும் எல்லாப் பாவங்களும் அழிந்துபோமோ, அத்தகைய ஹரி, இருதயத்தை விட்டு எப்பொதும் அகலாதிருக்குமாறு அவனது பாத பத்மங்களை அன்புக் கயிற்றால் பிணித்துப் பற்றிக் கொள்ளுகிறவன் பாகவதருள் தலையானவன் எனப்படுவான்."

பகவத் கீதையில் எம்பெருமான் பக்த லக்ஷணங்களை அர்ஜுனனுக்கு இவ்வாறு அருளிச் செய்கிறார் :—

"எவ் வுயிரையும் பகைத்தலின்றி, அவற்றிடம் நட்பும் கருணையும் உடையவனாய், யானென்பதும் எனதென்பதும் நீங்கி, இன்பத்தையும் துன்பத்தையும் நிகராகக் கொண்டு பொறுமையுடையவனாய்,

"எப்போதும் மகிழ்ச்சி யுடையவனாய்த் தன்னைக் கட்டித் திடநிச்சயமுடையவனாய், என்னிடத்தே மனத்தையும் மதியையும் அர்ப்பணஞ் செய்து என் தொண்டனாகிய யோகி எனக் கினியவன்.

"எவனை உலகத்தார் வெறுப்பதில்லையோ, களியாலும் அச்சத்தாலும் சினத்தாலும் வினையும் கொதிப்புக்களினின்றும் எவன் விடுபட்டானோ அவனே எனக்கு இனியவன்,

"எதையும் எதிர் பார்த்தலின்றித் தூயோனாய்த் திறமுடையோனாய்ப், பற்றுதலற்றவனாய்க் கவலை நீங்கினவனாய்

எல்லா ஆடம்பரங்களேயும் துறந்து என்னிடம் பக்தி செய்வோனே எனக் கினியவன்,

"களித்தலும் பகைத்தலும், துன்பப் படுதலும், அவாவுறுதலுமின்றி நன்மையையும் துறந்த தொண்டனே எனக் கினியவன்.

"பகைவரிடத்திலும் நண்பரிடத்திலும், மானத்திலும் அவமானத்திலும், குளிரிலும் வெப்பத்திலும், இன்பத்திலும் துன்பத்திலும் சமப்பட்டான் பற்று விட்டான்.

"புகழையும் இகழையும் நிகராகக் கொண்ட மௌனி வரினும் அதில் மகிழ்ச்சி யுறுவான், குறி யற்றான், ஸ்திர புத்தியுடையான், இத்தகைய பக்தன் எனக்கினியவன்."

"இந்தத் தர்ம ரூபமான அமிர்தத்தை யான் சொல்லிய படி வழிபடுவோர் நம்பிக்கை யுடையோர், என்னை முழுமுதலாகக்கொண்டோர், அத்தகைய பக்தர் எனக்கு மிகவும் இனியவர்." (12-ம்அத் 13-20-ம் சுலோ. பாரதியார் மொழி பெயர்ப்பு.)

உத்தம பக்த லக்ஷணத்தை ஸ்ரீமத் பாகவதத்திலே ஸ்ரீ கிருஷ்ணன் உத்தவருக்கு இவ்வாறு உபதேசிக் கிறார்:—

"சாதுக்களாய், தீரராய் என்னொருவனிடத்தே அன்பு செலுத்தும் பக்தர், மறு பிறப்பில்லாத கைவல்யத்தையே நான் அளிப்பினும், ஏற்கார்."

20-ம் அத். 35-ம் சுலோ.

என்னிடத்தே மனத்தை அர்ப்பித்தவன் என்னை யன்றி நான்முகன் பதத்தையும் விரும்பான், இந்திரன் பதத்தையும் இச்சியான்; வையகம் முழுமைக்கும் இறைவனா யிருக்கும் நிலையையையும் விரும்பான், பாதலத்துக்குப் பதியாயிருக்கும் பதவியையும் வேண்டான், யோகசித்திகளையும் விரும்பான், மோக்ஷத்தையும் விரும்பான், மற்றெதனையுமே விரும்பான். ஷை 14-ம் சுலோ.

இச் சந்தர்ப்பத்தில் ஒரு விஷயம் கவனிக்க வேண்டுவது அவசியம். உத்தம பக்த னுவதற்கு உலகத்தைத் துறக்க வேண்டுமென்று எங்கும் சொல்லப்பட வில்லை. இது பற்றிச் சொல்லி யிருப்பதெல்லாம் இவ்வளவே யாகும், அஃதாவது, உத்தம பக்தரானவர் ஒருகாலும்

விஷய வாஸனைகளுக்குத் தம் உள்ளத்தில் இடங்கொடார்; உலகக் கவர்ச்சிகளால் ஒருகாலும் மயக்குறார்; அவர்களுக்கு நண்பர் பகைவரும், மானவமானங்களும், இகழ்ச்சி புகழ்ச்சிகளும் ஒரே நிகர்.

பகவத் கீதையிலே ஸ்ரீ கிருஷ்ணன் அர்ஜுனனுக்கு உலகத்தைத் துறக்குமாறு உபதேசிக்கவில்லை; மற்று உலகத்தைத் துறக்கக் கூடாதென்றே வற்புறுத்தியிருக்கிறார். ஆயின் விஷய வாஸனை நீக்கிய மனத்துடன் சத்ரு மித்திரையும், நிந்தை ஸ்துதிகளையும், மானவமானங்களையும் சமமாகக் கருதி உலகக் கடமைகளைச் செலுத்த வேண்டுமென்று பகவான் அடிக்கடி வற்புறுத்தியிருக்கிறார். துரியோதனன்மீது படை தாங்கிப் போர் புரியுமாறு ஸ்ரீ கிருஷ்ணன் அர்ஜுனனுக்கு உபதேசித்தது தர்ம ஸம்ரக்ஷணார்த்தமே பொருட்டன்று. தர்ம ஸம்ரக்ஷணத்தின் பொருட்டு, அநியாயத்தையும் அதர்மத்தையும் அடக்க அடிக்கடி ஆயுதம் எடுக்கவேண்டி வரும். ஆனால் அத்தகைய சமயங்களில் துவேஷம், ஹிம்சை, குரோதம் இவைகளுக்கு இடங்கொடாமல், சித்தத்தைத் தூய்மையாய் வைத்துக்கொள்வதில் விழிப்பாய் இருக்கவேண்டும்.

இனிப் பிராகிருத பக்தன், எனவே கீழ் நிலையிலுள்ள பக்தன் எவ்வாறு உத்தம பக்தன் ஆகலாம் என்னும் விஷயத்தை ஆராய்வோம். பகவத் கீதையில் பகவான் "மிகத் தீய ஒழுக்க முடையோனும் வேறு விஷயங்களில் புத்தி செலுத்தாது என்னையே வழிபடத்தொடங்குவானாயின் விரைவில் அவன் தர்மாத்மாவாகி நித்திய சாந்தி எய்துவான்," என்று சொல்லியிருப்பதை ஏற்கனவே எடுத்துக் காட்டியிருக்கிறேன். ஸ்ரீமத் பாகவத்திலும் எம்பெருமான் உத்தவனை நோக்கி,

"என்னுடைய பக்தன் புலன்களை வெல்லாதவனாய் விஷயங்களால் பாதிக்கப்பட்ட போதிலும் என்னிடத்தே வைத்துள்ள பாரமார்த்திக பக்தி விசேஷத்தால் பெரும்பாலும் உலக போகங்களால் வழி தப்பிப் போகமாட்டான்.

"ஓ உத்தவா, உக்கிரமாய்க் கொழுந்து விட்டெரியும் நெருப்பானது விறகுகளைச் சாம்பராக்கி விடுவதுபோல் என்

விஷயமான பக்தியானது பாவங்களை முற்றிலும் அழித்து விடும்'' (கக-ம் ஸ்கந்தம், கச-ம் அத், 18, 19-ம் சுலோ)

பகவத் பக்தி வளர வளரத் தூய்மையும் ஓங்கி வளரும். அன்பானது அன்பு செய்யப்படுகிறவர்களை அநுகரணம் செய்ய வேண்டுமென்னும் விருப்பத்தைத் தோற்றுவிக்கிறது. ஆகவே பகவானிடம் பக்திகொண்ட நெஞ்சத்திலே பகவத் ஸ்வரூபம் படிப்படியாய் விளங்கா நிற்கும். அதுவே மேன்மேலும் மதுரத்திலிருந்து மதுர தரமாய் முதிர்ந்து நிற்கும். பகவான் சுத்தம் அபாப வித்தம் என்ற உபநிஷத் வாக்கியத்தின்படி தூய்மை யுடையவனும் பாப ரஹிதனும் இருக்கிறான். அத்தகைய தூய வடிவத்தை இனிது (மதுரம்) என்று உணர்ந்து அன்பு செய்யத் தொடங்கினவன் தன்னைப் பாபத்தால் கறைப்படுத்திக்கொள்ள விரும்புவானோ? தனக்கு இனிதென்று தோன்றும் பொருளின் குணாதிசயங்களை அடைய விரும்புவது மனித சுபாவம். ஆகையால் பகவத்பக்தி எவ்வளவுக்கெவ்வளவு வளர்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு பகவத் குணங்களை எய்த வேண்டிய விருப்பமும் அவசியம் வளரும். இனி இந்நெறியில் மேன்மேலும் முன்னேறிச் சென்றால், அம்மேலான குணங்களை அநுகரணம் செய்ய வேண்டுமென்னும் அவா தீவிரமாய் வளரும். முடிவில் தீய இயல்புகளும் ஒழிந்து போம். ஆனந்த சொரூபமாயும் இன்ப வடிவாயும் உள்ள ஆண்டவனை அன்பு செய்யத் தொடங்கிய க்ஷணத்திலேயே உள்ளத்தில் இன்ப வெள்ளம் பொங்கியெழ, அவ் வின்பத்துக்கு மாறாகிய தீய வியல்புகளும் உலக விச்சைகளும் மிகக் கைப்பாய்க் தோற்றுகின்றன. எனவே அவற்றில் செல்ல மனம் விரும்புவதில்லை. பக்தி எவ்வளவுக்கு வளர்ச்சி அடைகிறதோ அவ்வளவுக்குப் பாப நாசம் அவசியம் நிகழ்ந்தே தீரும்.

கீதையிலே பகவான் அர்ஜுனனுக்கு உபதேசிக்கிறார் :—

"இந்த முக்குண மயமாகிய என் தேவ மாயை கடத்தற்கரியது. என்னையே எவர் தஞ்சமடைகிறார்களோ, அவர்களே இம் மாயையைக் கடக்கிறார்கள்."

ஸ்ரீ சைதந்ய ஸ்வாமி இதன் கிரமத்தை ஸாதனனுக்கு இவ்வாறு உணர்த்தியிருக்கிறார் :—

"செல்வத்தினால் இன்ப நுகர்ச்சி விளைகிறது. இன்ப நுகர்ச்சியால் துக்கம் தானாகவே ஓடி ஒளிக்கிறது. அவ்வாறே பக்தியி லிருந்து கிருஷ்ணப் பிரேமையிலிருந்து கிருஷ்ணனிடத்தே சுவை யுண்டாக, பவ பந்தங்கள் அழிவடைகின்றன."—சைதந்ய சரிதாமிர்தம்.

ஹரிபக்தியானது இருதயத்தில் அவித்தையை வேரோடு அழிக்கத்தக்க ஒரு சக்தி விசேஷத்தை எழுப்பி விடுகிறது.

"காட்டுத் தீயானது பாம்பைச் சுட்டுச் சாம்பராக்கி விடுவது போல், தனக்கு மிக்க தொன்றில்லாத ஹரி பக்தியானது உயர் நலம் வாய்ந்த வித்யா சக்திகளை எழுப்பி அவித்தையை விரைவில் எரித்து விடுகிறது."—பத்ம புராணம்.

இவ்வாறு அவித்தை அகலும் அளவுக்கு எம்பெருமானது திருவடிகளில் நிஷ்டை உண்டாகும். அந்த நிஷ்டை வளரும் அளவுக்கு எம்பெருமானைப் பற்றிய சிரவண கீர்த்தன மனனங்களில் ருசி பிறக்கும். அந்த ருசி மிஞ்சுகிற அளவுக்கு ஆஸக்தி (பற்று) உண்டாகும்; அவ்வாஸக்தியிலிருந்து பாவகமும், பாவகத்திலிருந்து பிரேமையும் தோன்றும்.

ஸ்ரீ ருப கோஸ்வாமி தாம் இயற்றிய பக்திரஸாமிர்த ஸிந்து என்னும் நூலில் இவ்வாறு கூறுகிறார்:—

"முதலில் சிரத்தை உண்டாகும், அதிலிருந்து சாது சங்கம்; அதன் மேல் (பிராகிருத பக்தர் செய்யும்) பஜனை. அதிலிருந்து அனர்த்த நிவிருத்தி, எனவே பாவம் அல்லது அவித்தையின் அழிவு. அதனின்றும் நிஷ்டை, எனவே, எம் பெருமானுடைய திருவடிகளில் சித்தத்தின் ஒருமைப் பாடு, அதனின்றும் எம் பெருமானுடை மதுர பாவத்தின் விசேஷத் தோற்றமும் சிரவண கீர்த்தன மனனாதிகளில் ருசியும் உண்டாகும்; அந்த ருசியினின்றும் பாவகமும், பாவகத்தினின்று பிரேமையும் உதிக்கும். இதுவே சாதகர்களின் பிரேமோதயத்தில் காணப்படும் கிரமமாம்."

"பிரேமையின் முதல் நிலை பாவகம் எனப்படும்."
பாவகம் என்பது யாது?

" சுத்த ஸத்துவ குணங்களினால் ஆத்மாவை அணி செய்வதாய், தூய சுவைகளை உண்டாக்கி இருதயத்தை நிர்மலமாக்குவதாய், பிரேமையாகிய பகலவன் கதிர்க்கு நிகராய் விளங்குவது எதுவோ அது பாவகம் எனப்படும்."

பாவகத்தின் முளை எவனுடைய இருதயத்தில் தோன்றி யிருக்கிறதோ, அவனை இன்னின்ன அறிகுறிகளால் அறிந்து கொள்ளலாம் என்பதை ஸ்ரீ ரூபகோஸ்வாமி இவ்வாறு வகுத்துரைக்கிறார் :—

"க்ஷாந்தி, அவ்யர்த்த காலத்துவம், விரக்தி, மானசூந்யத்துவம், ஆசாபந்தம், ஸமுத்கண்டை, நாமகானத்தில் ஸதா ருசி, பகவத்குணாநு ஸந்தானத்தில் ஆஸக்தி, அவன் எழுந்தருளி யிருக்கும் ஸ்தலங்களில் பிரீதி முதலியவை பாவகம் முளையெடுக்கப் பெற்றவர்களின் ஸ்வரூப லக்ஷணங்களாம்."

1. க்ஷாந்தி :—கலக்கத்துக்கு ஹேதுக்களாகிய பிணி, துயரம், விபத்து முதலியவை தோன்றி யிருக்கையிலும் மனங் கலங்காமலிருக்கும் நீர்மையே க்ஷாந்தி—பொறை—எனப்படும்.

2. அவ்யர்த்த காலத்துவம்:— எப்போதும் பகவர் நாமத்தை ஸ்மரித்துக்கொண்டு, மனனம் முதலியவை செய்து கொண்டிருத்தல் அவ்யர்த்த காலத்துவம்—வீண் காலம் கழியாமை—எனப்படும். பகவானை விடுத்துக் கழிக்கும் காலம் வீணாகும். ஆகவே பாவகம் தோன்றப் பெற்றவன் எந்த வினை புரிந்தாலும், உண்ணல், உலாவல் முதலிய எல்லா வகை உலகத் தொழில்களிலும் எக்காலமும் எம்பெருமானையே உள்ளத்திற் கொண்டிருப்பானாதலால், அவனுடைய காலம் எதுவும் வீணாய்க் கழியாது.

3. விரக்தி:—புலன்களால் நுகரப்படுவதற்குரிய விஷயங்களில் உண்டாகும் அரோசகம் (வெறுப்பு) விரக்தி எனப்படும்.

பாவகம் தோன்றப் பெற்றவர்களின் சித்தத்தில் போக விருப்பம் இருக்க முடியாது. அவர்கள் ஆண்டவனுடைய அடியார்கள் என்ற தன்மையில் கடமைப்பட்டிருக்கிற அளவுக்கே இந்திரிய விஷயபோகங்களை நுகர்வர்.

4. மான சூந்யத்துவம்:—என்பது வீண் பெருமை பாராட்டாமையாம்.

5. ஆசாபந்தம்:—நான் எம்பெருமானை நிச்சயமாய் அடைவேன் என்னும் திட நம்பிக்கை யுடைமை ஆசாபந்தம் எனப்படும்.

6. ஸமுத்கண்டை:—தன் மனோரதம் சித்திக்க வேண்டுமென்று பேராவல் கொண்டிருத்தல் ஸமுத்கண்டை எனப்படும்.

7. நாம கானத்தில் ஸதா ருசி:—என்பது எம்பெருமானுடைய குண கீர்த்தனத்தில் எப்போதும் வேட்கை யுடைமையாம்.

8. அவன் எழுந்தருளியிருக்கும் ஸ்தலங்களில் பிரீதி:—எம்பெருமான் எங்கும் வியாபித்திருப்பதால் எல்லா ஸ்தானங்களும் அவன் எழுந்தருளி யிருக்கும் ஸ்தலங்களேயாம். முதலில் பக்தர்களுக்குப் புண்ணிய க்ஷேத்திரங்களிலேயே பிரீதி உண்டாகும்; பிறகு எம்பெருமானுடைய சர்வ வியாபகத்துவம் நன்கு உணரப்படும் பொழுது, சகல ஸ்தலங்களும் அவன் வீற்றிருக்கும் இடங்களே என்னும் கருத்துத் தோன்றும். அதிலிருந்து முடிவில் விசுவமயப் பிரீதி வளரும்.

பாவகம் முளையெடுக்கப் பெற்ற இருதயத்தை யுடைய பாக்கியவான் கீழ்க் கூறப்பட்ட குணங்கள் வாய்ந்து விளங்குவன். அவனுக்கு எம்பெருமானுடைய ஸ்மரண கீர்த்தன மனனாதிகளில்,

> "ஸாத்விகா: ஸ்வல்ப மாத்ரா:
> ஸ்யுரத்ராச்ரு புலகாதய:"

விழிநீர், மயிர்ச்சிலிர்ப்பு முதலிய ஸாத்துவிக மெய்ப்பாடுகள் சிறிது மட்டில் உண்டாகும்.

சாத்துவிக பாவங்கள் எண்வகைப்படும். அவை ஸ்தம்பம், ஸ்வேதம், ரோமாஞ்சம், ஸ்வரபேதம், கம்பம், வைவர்ண்யம், அச்ரு, பிரளயம் என்பவையாம்.

ஸ்தம்பம் என்பது ஸ்தம்பித்தல் அல்லது விறைத்தலாம். மகிழ்ச்சி, அச்சம், வியப்பு, துயரம், வெகுளி,

இவற்றிலிருந்து ஸ்தம்பம் உண்டாகிறது. ஸ்தம்பித்துப் போகும்போது, பேசும் ஆற்றல் இராது, சரீரம் அசைவற்றுப் போம், புறப்புலன்களின் தொழில் தகையப்படும். மகிழ்ச்சி, அச்சம், வியப்பு முதலியவை பல காரணங்களால் நிகழலாம். இரண்டொரு திருஷ்டாந்தம் தருகிறேன். எம்பெருமானுடைய இனிமையைக் கருதுமிடத்தே மகிழ்ச்சி உண்டாகலாம். இவ்வளவு முயன்றும் எம்பெருமானது காட்சி கிடைக்காதோ என்ற எண்ணத்தினல் அச்சம் விளையலாம். படைப்பில் காணப்படும் அவனது திருவருள் விலாஸத்தைக் கண்டு வியப்புத் தோன்றலாம். அவனது பிரிவைப்பற்றி நினைத்தலால் துயரம் உண்டாகலாம். அவனை நிந்திப்பவர்மீது வெகுளி எழலாம். அல்லது எத்துணையோ முயன்று ஓலமிட்டு இன்னும் அருள்புரியவில்லையே என்று ஸாக்ஷாத் பகவான் மீதே வெகுளி பிறக்கலாம்.

ஸ்வேதம் என்பது வேர்த்தலாம். மகிழ்ச்சி, அச்சம், வெகுளி, இவற்றால் உடலில் உண்டாகும் புழுக்கத்துக்கு ஸ்வேதம் அல்லது வியர்வை, வேர்வை என்று பெயர்.

ரோமாஞ்சம். என்பது மயிர்ச்சிலிர்ப்பாம், வியப்பு, மகிழ்ச்சி, உற்சாகம், அச்சம் முதலியவற்றால் ரோமாஞ்சம் அல்லது மயிர்ச்சிலிர்ப்பு உண்டாகும்.

ஸ்வர பேதம். துயரம், வியப்பு, வெகுளி, மகிழ்ச்சி, அச்சம் இவற்றால் உண்டாகும் விகிருத ஸ்வரம் ஸ்வர பேதம் எனப்படும். இதினின்றும் உரை தடுமாறும்.

கம்பம். என்பது நடுக்கமாம். அச்சம், வெகுளி, மகிழ்ச்சி முதலியவைகளால் அஃதுண்டாகும். அதிலிருந்து உடல் வலிப்பு உண்டாகும்.

வைவர்ண்யம். என்பது நிற வேறுபாடாம். துயரம், வெகுளி, அச்சம் முதலியவற்றால் உண்டாகும் வர்ண விகாரம் வைவர்ண்யம் அல்லது நிற வேறுபாடு எனப்படும். இதிலிருந்து வர வர உடம்பு மெலிவுற்று இரத்தஞ் சுண்டிப்போம்.

அச்ரு. என்னும் விழி நீராவது மகிழ்ச்சி, வெகுளி, துயரம் முதலியவற்றால் கண்ணினின்று பெருகும் நீராம்.

மகிழ்ச்சியால் உண்டாகும் விழிநீர் குளிர்ந்தும், மற்ற இரண்டினாலும் உண்டாகும் விழிநீர் சூடாயும் இருக்கும். எல்லாவகை விழிநீராலும் கண்கள் அலைப்புண்டு சிவந்து தப்புரவாகும்.

பிரளயம் என்பது ஒடுக்கமாம். சுகத்தினாலாவது துக்கத்தினாலாவது புலன்களின் தொழிலும் அறிவும் ஒழிந்தொடுங்குதல் பிரளயம் அல்லது ஒடுக்கம் எனப் படும். நிலத்தில் விழுதல் முதலிய செய்கைகள் இந்த நிலையில் நிகழ்வதாகச் சொல்லப்படுகின்றன.

இக்கூறிய எண்வகை சாத்துவிக பாவங்கள் அனைத்தும் பகவானிடத்தே பாவகம் அப்பொழுதே அரும்பப் பெற்ற நெஞ்சத்தினரிடம் முற்றிலும் தோன்றா. அவற்றில் சில மட்டும் சிறிது சிறிதாக நிகழும். அவற்றின் வளர்ச்சியில் நான்கு படிகள் இருப்பதாக ஸ்ரீ ரூபகோஸ்வாமி கூறுகிறார்:

> "இந்த சாத்துவிக பாவகங்கள் மேன்மேலும் வளரா நின்று, 1. தூமாயிதம், 2. ஜ்வலிதம், 3. திப்தம், 4. உத்திப்தம் என நால்வகை நிலைகளை அடையும்."
>
> —பக்திரஸாமிர்த ஸிந்து.

1. தூமாயிதம் (புகையுடையது) இந்தத் தன்மையில் ஒன்று அல்லது இரண்டு பாவகங்கள் மாத்திரம் மிகச் சொற்பமாய் விளங்கும். வேண்டுமானால் அவற்றை மறைக்கக்கூடும். உதாரணம்:—

> "முரன் என்னும் அரக்கனது வைரியாகிய ஸ்ரீ ஹரியின் பாவத்தை அகற்றும் புகழைக் கேட்கக்கேட்க, வேள்வி செய்யும் அப்புரோகிதனுடைய கண் மடல்கள் விழிநீரால் சிறிது நனைந்தன, கபோலங்கள் சிவந்தன, மூக்குவேர்த்தது."

2. ஜ்வலிதம் (தழற்சியுடையது) இரண்டு மூன்று சாத்துவிக பாவகங்கள் ஏககாலத்தில் விளக்க முற்று, மிக்க கஷ்டத்துடன், மறைக்கக் கூடியவைகளாயிருந்தால், அந்த நிலை ஜ்வலிதம் அல்லது தழற்சி நிலையாகும். உதாரணம்:—

> "ஏ சகி, தூரத்திலுள்ள மலைக் குகைகளிலிருந்து அவனது குழலோசை வரும்போது, நான் எவ்வளவு முயன்று

கண்ணீரைத் தடுத்துத் தழுதழுத்த உரைகளை மறைத்தும், உடல் நடுக்கத்தை மட்டும் நிறுத்த இயலவில்லை. அதிலிருந்து இவ்வித நயங்களை அறிவதில் திறன் வாய்ந்த என் உறவினர் கண்ணனிடம் எனக்குக் காதல் உண்டாயிருக்கிறதென்று ஐயங்கொள்ளலாயினர்.''

3. தீப்தம் (திகழ்ச்சியுடையது) விருத்தி யடைந்த மூன்று, நான்கு, அல்லது ஐந்து சாத்துவிக பாவகங்கள் ஒரே சமயத்தில் விளக்கமுற்று அவற்றை அடக்கும் சக்தி சிறிதும் இல்லாதிருந்தால், அந்த நிலையைத் 'தீப்தம்' அல்லது 'திகழ்ச்சி யுடையது' என்பர் அறிஞர். உதாரணம் :—

''நாரத முனிவர் தம் எதிரிலிருந்த ஸ்ரீ கிருஷ்ணனைத் தரிசித்த அளவில் பெரிதும் பரவசமெய்தி, உடல் நடுக்குற்று, வீணையை மீட்ட ஆற்றலற்றவராயினார்; தொண்டை அடைத்துக்கொண்டு உரை தழுதழுத்தலால் துதிசெய்யக் கூடாதவராயினார்; கண்ணார நீர் மல்கலால் தரிசனமும் செய்ய வலியற்றவராயினார்.

4. உத்தீப்தம் (உயர் திகழ்ச்சி யுடையது) ஐந்தாறு சாத்துவிக பாவகங்கள் ஒரே காலத்தில் விளங்கிப் பரமோத்கர்ஷ நிலையை அடைந்தால், அந்நிலை 'உத்தீப்தம்' அல்லது 'உயர் திகழ்ச்சி' நிலை எனப்படும்.

சைதந்ய மஹாப்ரபு என்னும் கௌராங்க ஸ்வாமி பூரி க்ஷேத்திரத்தில் ஜகந்நாதனுடைய திருத்தேர் முன்பு கூத்தாடியபொழுது அவருக்குற்ற நிலை ஈண்டு கவனிக்கற்பாலது :—

'' அந்த உத்தண்ட நிர்த்தத்தில் ப்ரபுவின் திருமேனியில் அற்புதமான மாறுதல் உண்டாகின்றது. எண்வகை சாத்துவிக பாவங்களும் ஏககாலத்தில் உண்டாகின்றன. மயிர்சிலிர்க்கிறது. தசைகள் துள்ளுகின்றன. முட்கள் அடர்ந்த வன்னி மரத்தைப்போல் அவர் நிற்கிறார். பற்கள் விழுந்துவிடுமோவென ஐயம் விளைப்பனபோல் உக்கிரமாய் ஆடுகின்றன. உடல் முழுதும் வேர்க்கிறது; அதோடு இரத்தமும் மயிர்க்கால்களினின்று கசிகின்றது. இதனால் அருகிருப்போரின் ஆடைகளும் நனைகின்றன. மிகக் கஷ்டத்துடன் 'ஜகந்நாதன்' என்னும் திருநாமத்தின் முதல் இரண்டெழுத்துக்களை ஜஜ கக ஜஜ என்று தழுதழுத்துத் தடுமாறி உச்சரிக்கிறார். ஜலயந்திர

தாரைபோல் கண்ணீர் விரைந்து பெருகுகிறது. அந்நீர்ப் பெருக்கு அருகிலுள்ள அனைவரின் ஆடைகளையும் நனைத்து விடுகிறது. அவரது திருமேனியின் ஒளி ஒருவேளை உதய ரவியைப்போல் பொன்மயமாய் மிளிர்கிறது; ஒருவேளை மல்லிகைப்பூவை யொத்து மென்மையும் எழிலும் வாய்ந்து பொலிகின்றது. ஒரு பொழுது பிரபு அசைவற்று நிற்கிறார்; மற்றொரு பொழுது தரைமிசை விழுந்து புரள்கிறார்; பிறிதொரு நேரம் உலர்ந்த கட்டையைப் போல் உடல் விறைத்துப் போகிறது.

கீழ்க்கூறிய எட்டு பாவகங்களும் ஒன்றாய்த் திரண்டு தோன்றும் இறுதி நிலையை இந்த வருணனை உணர்த்துகின்றது.

இருதயம் பிரேமையில் அமிழும்போதே இத்தகைய பாவகம் மிளிர்கின்றது. பாவகத்தின் முளை மட்டும் தோன்றுங்காலையில் இந்த சாத்துவிக பாவங்களின் மிகச் சொற்பமான தோற்றமே உண்டாகும். எனவே தூமாயிதம் என்னும் புகைவாய்ந்த நிலை உதயமாகும். பாவகம் திண்மையுற்றுப் பிரேமையாய்ப் பரிணமிக்கும்போது, சாத்துவிக பாவகங்கள் மேன்மேலும் ஓங்கி ஜ்வலித, தீப்தி, உத்தீப்தங்கள் எனப்பட்ட தழற்சி, திகழ்ச்சி, உயர் திகழ்ச்சி நிலைகளை யடைகின்றன.

பாவகத்தினின்றே பிரேமை உதிக்கின்றது. பாவக இயக்கம் பிரேமையில் பரிணமிக்கும் கிரமம் இதனால் கூறப்பட்டது.

ஆறாம் அத்யாயம் முற்றிற்று.

பிரேமை

"அந்தக்கரணத்தை முற்றிலும் நிர்மலப்படுத்தித் தன்னுரிமையோடு பாராட்டும் ஆர்வம் மேலிட்டதாய் அத்தியந்தமாகிய தீவிரத் தன்மைவாய்ந்து விளங்கும் மனவெழுச்சி எதுவோ, அதுவே 'பிரேமை' என்று அறிஞரால் உரைக்கப்படும்," என்று பக்திரஸாமிருத ஸிந்து கூறுகின்றது.

"வேறு எப்பொருளிலும் விழைவின்று விஷ்ணு (எங்கும் நிறைந்த இறைவன்) ஒருவனிடத்தே கொள்ளும் பிரேமையோடு கூடிய விழைவே பக்தி எனப்படுமென்று பீஷ்மர், பிரஹ்லாதர், உத்தவர், நாரதர் முதலியோர் மொழிவர்," என்று நாரத பாஞ்ராத்திரம் கூறுகின்றது.

"ஸா கஸ்மை சித் பரம ப்ரேமரூபா"

"யாரிடத்திலே யாயினும் வைக்கும் ஆழ்ந்த அன்பு வடிவமானஉணர்ச்சியே அது."

என்று நாரதரும்,

"ஸா பராநுரக்திர் ஈச்வரே"

"இறைவனிடத்துக் கரைகடந்த காதலுடைமையே அது,"

என்று சாண்டில்யரும் தம் தம் ஸூத்திரங்களிலே பக்திக்கு இலக்கணங் கூறியிருப்பது உங்களுக்கு நினைவிலிருக்கும்.

அன்பு நெறியில் ஒழுகும் பாகவதோத்தமர்களாகிய பக்த சிரேஷ்டர்களின் இருதயம் எவ்வாறு நிர்மலமாகிறதென்பதும், அவர்களின் சீலம் எந்த எந்த லக்ஷணங்களால் அறியப்படுகிறதென்பதும், எல்லா உயிர்களிடத்தும் அவர்கள் எவ்வகை உணர்வு கொண்டிருப்பர் என்பதும், நிமி என்னும் வேந்தனுக்கு ரிஷபன் மைந்தனாகிய ஹரி

என்பவர் ஸ்ரீமத் பாகவதத்தில் கூறிய வாக்கியங்களி னின்றும், அர்ஜுனனுக்கு ஸ்ரீ கிருஷ்ணன் பகவத்கீதை யிற் பகர்ந்த உரைகளிலிருந்தும் இதுவரையில் எடுத்துக் காட்டப்பட்டன. இனி ஆண்டவனுடன் அவனது அடியார்களுக்குள்ள தொடர்புகளைக் குறித்து பக்தி நூல்களிலிருந்து விவரிப்பேன்.

பாவகம் திட்பமுற்றுப் பிரேமையாய்ப் பரிணமிக்கு மிடத்தே பகவானுடைய ஸ்மரண மனன கீர்த்தனாதிகளின் வாயிலாக சாத்துவிக பாவங்கள் முறையே ஜ்வலித, தீப்த, உத்தீப்தங்கள் என்னப்பட்ட அழற்சி, திகழ்ச்சி, உயர் திகழ்ச்சி நிலைகளை அடைகின்றன வென்று சென்ற அத்யாயத்தில் கூறினேன். இந்த நிலைகளை மனத்தில் வைத்துக்கொண்டே சாண்டில்ய மஹரிஷின் தாம் இயற் றிய பக்தி மீமாம்ஸையிலே அடியில் வருமாறு கூறியிருக் கிறார்:—

“ தத் பரிசுத்த் ஹிச்ச கம்ய
லோகவல் லிங்கேப் ஹ்ய: ''

“உலகத்திலே ஒருவன் இன்னொருவனைப் பற்றிக்கொண் டிருக்கும் உணர்ச்சிகளை அவன் அம் மற்றவனைப் பற்றிப் பேசுங்கால் வெளியிடும் மெய்ப்பாடுகளிலிருந்து நாம் எப்படி அறிந்து கொள்ளுகிறோமோ, அப்படியே பகவானிடத்தே பக் தனுக்குள்ள அன்பின் தூய்மையை, பகவானைப் பற்றிப் பேசும்போது அவனிடத்தே வெளிப்பட்டுத் தோன்றும் விழி நீர் மயிர்ச்சிலிர்ப்பு முதலிய மெய்ப்பாடுகளிலிருந்து அறிய லாகும்.''

பகவானிடத்தே பக்தனுக்குள்ள அநுராகத்தைப் பரீக்ஷித்தறியும் பொருட்டுச் சாண்டில்யர் சில லக்ஷணங் களை குறிப்பிடுகிறார்.
அவையாவன:—

“ஸம்மான, பஹுமான, ப்ரீதி, விரஹ, இதர விசி கித்ஸா, மஹிமக்ஹ்யாதி ததர்த்ஹ ப்ராணஸத்ஹாந, ததீ யதா, ஸர்வதத்ப்ஹாவ, அப்ராதிகூல்யாதீநிச ஸ்மரணே ப்ஹ்யோ பாஹுல்யாத்”

“நன்மதிப்பு, பெருமதிப்பு, பிரீதி, பிரிவாற்றாமை, கடவுளை யன்றி வேறு பொருளுண்மையைக் கவனியாதிருத்தல், அவ

னது மகிமையைக் கொண்டாடுதல், அவன் பொருட்டே உயிர் வாழ்தல், எல்லாம் அவனுடைமையே எனப் பாவித்தல், எல்லாம் அவன் மயமென உணர்தல், பகவத் ஸங்கல்பத்துக்கு அமைந்திருத்தல் முதலிய பல லக்ஷணங்கள் இதிஹாஸ புராணங்களிலே விரிவாக ஓதப்பட்டுள்ளன."

சாண்டில்ய பக்தி ஸூத்திரங்களுக்குப் பேருரை (பாஷ்யம்) வகுத்த ஸ்வப்நேச்வரனார் முற்கூறிய லக்ஷணங்களில் ஒவ்வொன்றுக்கும் இவ்வாறு திருஷ்டாந்தம் கூறியிருக்கிறார்.

அர்ஜுனனது நன் மதிப்பு
(ஸம்மானம்)

'ஸ்ரீ கிருஷ்ணன் எழுந்தருளி வரும்போதெல்லாம் தர்மாத்மாவாகிய அர்ஜுனன், தான் எந்நிலையில் இருந்தபோதிலும், அவர் திருமுன்பே பக்தியோடும் பிரேமையோடும் எழுந்து நிற்கத் தவறுவதில்லை.'—மஹாபாரதம், துரோண பர்வம்.

இக்ஷ்வாகுவின் பெரு மதிப்பு
(பஹுமானம்)

'பகவானிடத்தில் அவ்வரசன் (இக்ஷ்வாகு) கொண்டிருந்த அன்பினால், அவனது பெயருக்கும், அவனை நிகர்த்த மான்களிடத்தும், தாமரையிடத்தும், அவனது நிறம் தாங்கிய மேகங்களிடத்தும் பெருமதிப்பு காட்டினான்.'—நரசிங்க புராணம்.

விதுரனுடைய பிரீதி

"தாமரைக் கண்ணா, நின் வருகையினால் எனக்குண்டாகும் பிரீதியை என்னென் றுரைப்பேன்? உடம்போடு கூடிய அனைவர்க்கும் நீ அந்தராத்மா (உள்ளுயிர்) ஆகையால், அனைத்தையும் அறிவாயே.

—மஹாபாரதம், உத்தியோக பர்வம்.

விதுரன் தன் இருதயத்தில் பொங்கியெழும் ஆனந்தத்தை அடக்கக்கூடாதவனாய் இவ்வாறு மொழிந்தான்.

கோபிகைகளின் பிரிவாற்றாமை
(விரஹம்)

"பெரியோர் முன்பேசும் ஆற்றல் நமக்கில்லை. நாம் என்ன சொல்லமுடியும்? விரஹத் தீயினால் வெந்திருக்கிற நமக்கு அவர்கள் என்ன செய்ய வல்லார்? —விஷ்ணு புராணம்.

உபமந்யுவின் "வேறு பொருள் கவனியாமை"
(இதர விசிகித்ஸை)

"சங்கரனது ஆணையால் நான் புழுவாகவோ விட்டிற் பூச்சியாகவோ ஆயினும் ஆவேனே யன்றி, ஓ இந்திரா, நீ மூவுலகை அளித்தாலும் வேண்டேன்."

—மஹாபாரதம், அநுசாஸநிக பர்வம்.

யமன் பகவந் மஹிமையைக் கொண்டாடுதல்
(மஹிமக்கியாதி)

"நரகத்தில் வருந்தும் ஒரு பாபியை நோக்கி, யமன் 'கிலேசத்தைப் போக்கும் கேசவனை நீ ஆராதிக்கவில்லையோ?' என்று கேட்டான்."—நரசிங்க புராணம்.

அன்றியும்:

"யமன் பாசத்தைக் கையில் வைத்திருக்கும் தன் தூதனைப் பார்த்ததும், அவன் செவியில், 'மதுஸூதனனைச் சரணடைந்தவர்களைத் தொடாமல் விட்டுவிடு. நான் பிற மனிதருக்குப் பிரபுவே யன்றி வைஷ்ணவருக்குப்* பிரபு அல்லேன்,' என்று கூறினன்."

—விஷ்ணு புராணம்.

ஹனுமான் 'அவன் பொருட்டே உயிர் வாழ்ந்தமை'
(ததர்த்தப் பிராணஸ்தானம்.)

"நினது தூய்மை வாய்ந்த சரிதை உலகத்தில் வழங்கி வருகிற வரைக்கும், நானும் நின் ஆணையைக் காத்து இப்புவியில் வாழ்ந்திருப்பேன்."

—இராமாயணம்.

இஃது இராமனை நோக்கி அனுமான் கூறியது.

உபரிசரவஸு "எல்லாம் அவனுடைமையே என்று பாவித்தமை"
(ததீயதை)

'தன்னுடைய அரசு, செல்வம், மனைவி, ஊர்தி (வாஹனம்) முதலிய அனைத்தும் ஆண்டவனுடையதே என்று அவன் (உபரிசரவஸு) எப்பொழுதும் கருதுகிறான்.'

—மஹாபாரதம், சாந்திபர்வம்.

---

*இதற்கு 'எங்கும் நிறைந்த பரமாத்மாவின் அடியார்களுக்கு' என்று பொருள் கொள்க.

பிரஹ்லாதன் 'எல்லாம் அவன் வயமே என உணர்ந்தமை'
(ஸர்வ தத்பாவம்)

'ஆண்டவன் எல்லா உயிர்களிலும் விளங்குவோன் என அறிந்து, அறிஞர் எல்லா உயிர்களிடத்தும் மாருத அன்பு பாராட்ட வேண்டியவராவார் என்பது பிரஹ்லாதன் வாக்கு.

—விஷ்ணு புராணம்.

பீஷ்மர் 'பகவத் ஸங்கல்பத்துக்கு அமைந்திருத்தல்'
(அப்ராதி கூல்யம்)

[எம்பெருமான் எது செய்யினும், அதுவே நன்று; அதையே நாம் ஏற்றுக் கொள்ளவேண்டும்' என்றிருத்தல்' அப்ராதிகூல்யமாம்.']

கண்ணன் பீஷ்மரை ஒழிக்கத் திருவாழி ஏந்தித் தாவி வர இருக்கையில், பீஷ்மர் கூறியது:—

'வருக, வருக; தேவர் தம் தலைவ, உலகுறைவிடமே, வில்லும் கதையும், வாளும் தரித்தோய், நினக்கு வணக்கம். உலகநாதனே, இந்தக் கடும்போரில் என்னைத் தேரினின்று வலிந்து வீழ்த்துவாய்.' —ம. பா. பீஷ்மபருவம்.

"உலக மோகினியும் விரி குழலாளும் ஆகிய என் அன்னை கரிய நிறமுடையாள்; ஆகையால் நான் கருநிறத்தில் அன்புடையேன்."

என்னும் ராமப் பிரஸாதன் பாட்டும்,

"வானில் புது முகிலைக் காணுந்தோறும் என் கண்களிலிருந்து இடைவிடாது நீர் பெருகுகிறது."

என்று கருமுகில் வண்ணனும் ராமபிரானைக் கருத்திற் கொண்டு குகன் கூறிய வாக்கியமும், 'பஹுமான'த்துக்கு (பெரு மதிப்புக்கு)ச் சிறந்த எடுத்துக் காட்டுகளாம்.

ராமப் பிரஸாதன் பாடிய மற்ருெரு பாட்டு வருமாறு:—

'ஆனந்த ரூப மயிலாகிய அன்னை என் உள்ளத்தில் என்றும் திருவிளையாடல் புரிகின்ருள். நான் என் நிலையில் இருப்பினும், அவளது திருநாமத்தை என்றும் மறவேன். என் இருகண்களையும் மூடியவுடனே, கபாலமாலை அணியும் அத்-

தேவியை என்னுள்ளே காண்கின்றேன். அப்பொழுது என் உலக ஞானமெல்லாம் அழிந்துபோகிறது. எல்லோரும் என்னைப் பித்தன் என்கிறார்கள். அவர்களுக் கிஷ்டமானதை அவர்கள் சொல்லட்டும். இறுதியில் அந்தப் பித்தேறிய பிராட்டியை நான் எய்தினல் போதும்.

இதுவே உண்மையான "பிரீதி" எனப்படுவது.

விதுரனுடைய மனைவி ஒரு நாள் நீராடிக்கொண்டிருக்கும்போது, ஸ்ரீ கிருஷ்ணன், 'விதுரா, விதுரா,' என்று அழைத்துக்கொண்டே அவன் வீட்டு வாயிலை வந்தடைந்தான். விதுரன் மனையாள் கண்ணனது மென் தீங்குரலைக் கேட்டதும், அன்பினல் அவசமாகி, ஆடைகட்ட மறந்து முற்றிலும் அம்மணமான கோலத்துடன் ஓடிவந்து ஸ்ரீ கிருஷணன் முன் நின்றாள். உடனே கண்ணபிரான் தன் உத்தரீயத்தை அவள்மீது எறியவும், அவள் அவ்வாடையைச் சுற்றிக்கொண்டு கண்ணனைக் கரம் பற்றி மனைக்குள்ளே அழைத்துச் சென்றாள். சென்றவள் பின் என்ன செய்யவேண்டுவ தென்பதை அறியாதவளாய், அவ்வளவு ஆனந்த பரவச முற்றிருந்தாள். மிக வறுமையான நிலைமையில் இருந்த அவள் கண்ணனுக்கு உண்ண யாது அளிக்கவல்லாள்? அதுகுறித்து அவள பெரிதும் கவலையுற்றுக் கடைசியில் நறுமணம் ஊட்டிய நன்னீரும் சில வாழைக் கனிகளும் கொண்டுவந்தாள். வந்தவள் ஆனந்த மேலீட்டினல் தன்னை மறந்தவளாய் அக் கனிகளை உரித்து எம்பெருமானுக்கு அளிக்கையில், சில சமயம் பழத்துக்குப் பதிலாகத் தோலைத் தருவாளாயினள். கண்ணனே தனக்கு அடியார்கள் நஞ்சை அளிப்பினும் உவந்துண்ணும் கருணாநிதி யாகையால், அடியாளாகிய விதுரபத்தினி வழங்கிய பழம் தோல் இரண்டும் அவனுக்கு அமுதத்திலும் இனியனவா யிருந்தன. அவ்விரண்டையும் அவன் முகமலர்ச்சியுடன் உண்டான். ராஜசபைக்குச் சென்றிருந்த விதுரன் வீட்டுக்குத் திரும்பி வந்து, தன் மனைவி செய்துகொண்டிருந்ததைக் கண்டதும் வியப்புற்று அவளது செய்கையைக் கடிந்துரைக்கலுற்றான். அப்பொழுதுதான் அவள் தெளிந்து, தான் செய்த காரியத்துக்காகப் பெரிதும் வெள்கினள்.

'பிரீதி'க்கு இதனிலும் சிறந்த திருஷ்டாந்தம் இருக்க முடியுமா?

'விரஹ'த்துக்கு ஒளிபொருந்திய உதாரணமாய்த் திகழ்பவர் ஸ்ரீ சைதந்ய மஹாப் பிரபு.* அவருடைய விரஹ சம்பந்தமாய் வைஷ்ணவக் கவிகளின் கிருதிகளிலிருந்து சில மேற்கோள்களை எடுத்துக் காட்டுகிறேன்.

விரஹத்தின் ஆரம்ப தசையைப்பற்றி கோவிந்த தாஸ கவி கூறுவதாவது:—

"கௌரங்கனர் குனிந்த தலையுடனும் நீர்ததும்பும் கண்களுடனும் தரையில் எழுதிக் கொண்டிருப்பதென்னே? அவரது பொன்னர் மேனி வெளுத்துப் போயிருக்கிறது. இரவெல்லாம் கண்விழித்த வண்ணமாய் இமைப் பொழுதேனும் தூங்கி யறியார். தன்னைத் தொடுபவர்களின் முகங்களை அன்புநீர் சொரியும் கண்களால் நோக்கிய வண்ணமாய் இருக்கிறார். மீளமீள முகத்தைக் கைத்தலத்தில் வைத்து நெடுமூச்செறிகிறார். சகல நர நாரியரையும் உய்வித்த லக்ஷணங்கள் இவையே. எளியனேன் கோவிந்த தாஸன் ஒருவனே இவற்றின் பயனை இழந்தவன்."

விரஹபாவத்தின் ஆழ்ந்த நிலையில்

"பொன்னன கௌரசந்திரனர் மார்பில் அடித்துக் கொள்ளுகிறார்: விம்மி விம்மி, நாதா நாதவென்று ஓலமிடுகிறார்; நெடிதுயிர்த்துக் கண்ணீர் மல்கக் கதாதரன் முகத்தை நோக்குகிறார்; வேர்வையால் உடல் நனையக் கண்கொட்டாமல் உயரப் பார்க்கிறார். விரஹத்தீயினால் அவர் நெஞ்சம் வெந்தபோதிலும், தேகம் மட்டும் சாம்பலாய்விடவில்லை. என்ன செய்வது? எங்கு போவது? எவரும் எதும் சொல்லார். 'கோரா இந்நிலைக்குவரக் காரணம் என்னவோ, நான் என்னென்று சொல்லுவேன்,' என்கிறான் ஹரிதாஸன். 'ராதையின் காதலே இதையெல்லாம் செய்தது; கோரா எப்பொழுதும் அந்தக் காதலிலேயே அமிழ்ந்திருக்கிறார்,' என்கிறான் ஞானதாஸன்."

---

*'சைதந்யர்' என்ற பெயருக்குப் பிரதிபதமாக 'கௌரங்கன்' 'கௌரஹரி' யென்றும், சுருக்கமாக 'கோரா','கௌரன்' என்றும் வழங்கும்.

விரஹத்தில் உன்மத்தம்.—

"ஐயோ என் இளங்கௌரான்! அவருக்கு இரவென்றும் பகலென்றும் தெரியவில்லை. காரணமின்றி நகைக்கிறார். என் ஐயன் பாவகத்தில் ஆழ்ந்த அவசமாயிருக்கிறார். திடீரென்று உச்சஸ்வரத்தில் பாடத்தலைபட்டு என் உயிர்நாதன் எங்கே என்று கதறுகிறார். உடனே அவர் உடம்பெல்லாம் குளிர்கொண்டதுபோல் நடுக்கமுறுகிறது. அடுத்த க்ஷணத்தில் கைகளை உயர்த்திக் குதிப்பதும், சுற்றி சுற்றி ஆடுவதும், குணுகுணுப்பதும், பிதற்றுவதுமா யிருக்கிறார். திரும்பவும் கண்களை மூடிக்கொண்டு, நாதா நாதா வென்று கதறுகிறார். மறுபடியும் ஓவென்று உரத்துப் புலம்புகிறார். ராதையின் காதலே என் கௌரஹரியை இந்நிலைக்குக் கொண்டுவந்துவிட்டது என்று அடியேன் நரஹரிதாஸன் கூறுகிறேன். கலியுகத்தில் மக்களை உய்விக்கவேண்டிய என் ஐயன் இத்தகைய பாவகத்துடன் அவதரித்தார். ஏழையேன் மட்டும் முக்தியை இழந்ததென்னே!"

விரஹத்தின் பத்தாம் நிலை—

"என் கௌராங்க சுந்தரன். அவரது தங்கத் திருமேனி புழுதியில் படிந்து புரள்கிறது. அவர் மூர்ச்சை அடைகிறார், கொஞ்ச நேரம் தேகத்தில் மூச்சில்லாமல் இருக்கிறது. தொண்டர் குழாம் நாற்புறமும் சூழ்ந்து அழுகிறது. மாதர் ஆடவர் அனைவரும் அவரைப் பார்த்து விம்மிவிம்மி அழுகிறார்கள், விலங்குகளும் பறவைகளும் அழுகின்றன. எவ்வளவு அழுதும் ஆறுதல் உண்டாகக் காணோம்."

கவீர (கபீர்) தாஸன் விரஹத்தின் அருமையை நன்குணர்ந்தே அடியில் கண்ட கருத்துடைய ஹிந்திப் பாடலைப் பாடியிருக்கிறார்—

"விரஹமில்லாத உடல் பயனற்றது. விரஹமே என் சுல்தான். அஃதில்லாத இருதயம் மயானத்துக்கு நிகர்."

அன்றியும்,

"நகைத்து நகைத்து நம்பெருமானை அடைய முடியாது. அவனை அடைகிறவன் கண்ணீர் விட்டழுதே அடைகிறான்.

சிரிப்பினாலும் விளையாட்டினாலும் அவனை அடைவதானால், இதுவரையில் ஏனவே அடையாமல் விடுவான்?''

'இதர விசிகித்ஸை' எனவே ஆண்டவனைத் தவிர பிறபொருள்களை லட்சியம் பண்ணாம விருப்பதைப் பற்றித் துளசிதாஸன் கூறியிருப்பதைக் கேளுங்கள்—.

"மேகங்கள் குமுறிக் கர்ஜிக்கின்றன; ஆலங்கட்டிகளைப் பொழிகின்றன; பேரிடி வீழ்த்துகின்றன. ஆயினும் சாதகப் புள் மேகங்களைவிட்டு வேறு எதனிடமாவது தண்ணீரை யாசிக்கிறதா?''

ஆண்டவன் எவ்வளவு கஷ்டத்தைக் கொடுத்த போதிலும், அடியவர் அவனை யன்றி வேறெவரையும் பார்க்கவும் செய்யார்.

ராமப்பிரஸாத ராய் இக் கருத்தைக் கொண்டே இவ்வாறு கூறியிருக்கிறார்—

"அன்னை மஹேசுவரி இவ்வுலகத்தின் இறைவியா யிருக்கையில், நான் யாரை அஞ்சவேண்டும்? என் ஆனந்தத் தாயின் நேரான ஆட்சிக்குட்பட்டு நான் நித்யானந்தத்தில் வாழ்கிறேன்.''

ஆண்டவன் ஒருவனையே லட்சியத்தில் இருத்துவதும், மற்றதை யெல்லாம் உபேக்ஷை செய்வதும், அஞ்சா நெஞ்சத்துடன் வாழ்வதுமே 'இதர விசிகித்ஸை'யின் லக்ஷணமாம்.

'மஹிமக்கியாதி' அல்லது ஆண்டவனுடைய மகிமையைக் கொண்டாடுதல் என்பதைப் பற்றி முன் குறிப்பிட்ட சாண்டில்ய சூத்திரங்களின் உரையில் கூறியதைக் காட்டிலும் அதிகமான உதாரணங்கள் எடுத்துக் காட்டுவது அனாவசியமென்று கருதுகிறேன்.

'ததீயதை' அல்லது எல்லாம் அவன் உடைமையே என்று கருதுதலைப் பற்றி ஓர் வங்காளிப் பாட்டில் அழகாய் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. அதன் கருத்தாவது—

"நாமெல்லோரும் பொம்மைக் கூத்தில் காட்டப்படும் பாவைகளை ஒத்திருக்கிறோம். அவனுடைய உகப்பின் பொருட்டு அவன் ஆட்டுகிறபடியே நாம் ஆடுகிறோம். அவன் சாகச்செய்யும்போது சாகிறோம்; அவன் பிழைப்பிக்கும்போது பிழைக்கிறோம். அவன் போடும் தாளத்துக் கொத்து ஆடுகிறோம், பாடுகிறோம். நன்மை தீமைகளை அவனே அறிவன். அவன் எதை நன்மை என்கிறானோ, அதுவே நலமுடையது. நம் இச்சை ஒன்றுமில்லை. நமது களிப்புக் கெல்லாம் ஆதாரமா யிருப்பது அவனது சக்தியே. நம்மிற் சிலர் வெல்கிறோம். சிலர் தோற்கிறோம். நாம் அனைவரும் ஒரே சங்கிலியில் இணைக்கப்பட்டிருக்கிறோம். நமது கதியை இயக்குவிப்பவன் அவனே, உட்காரென்றால் உட்காருகிறோம், நில் என்றால் நிற்கிறோம், படு என்றால் படுக்கிறோம், ஓடென்றால் ஓடுகிறோம் அவன் சொக்கட்டான் ஆடுவோன், நாம் அவன் உருட்டும் பாச்சிகைகள்."

"ததர்த்த ப்ராணஸ்தானம்" அல்லது 'அவன் பொருட்டே உயிர் வாழ்தல்,' 'ஸர்வதத்பாவம்,' அல்லது 'எல்லாப் பொருளிலும் அவனையே காணுதல்' என்னும் லக்ஷணங்களை ராமப்ரஸாத ராய் ஒரு பாட்டில் மிக அழகாய் அடியிற் கண்டவாறு விளக்கியிருக்கிறார்—

"சயனிப்பதை சாஷ்டாங்க நமஸ்கார மென்று கருது, நித்திரை செய்வதை அன்னையின் தியான மென்று நினை, ஊரைச்சுற்றி நடப்பதை ஜகதம்பிகை பிரதக்ஷிணம் என்று பாவித்துக் கொள். செவியிற் படுவதெல்லாம் தேவியின் மந்திரமே. காளி அக்ஷரமாலையின் (நெடுங்கணக்கின்) ஐம்பதெழுத்து வடிவமாயிருக்கிறாள்; அவற்றில் ஒவ்வோர் எழுத்தும் அவளது திருநாமத்தையே ஸங்கேதமாய் உணர்த்தி நிற்கிறது. ஜகத்திலுள்ள அகில வஸ்துக்களிலும் அகிலாண்ட நாயகி அந்தர்யாமியாய் விளங்குகிறாளென்று ராமப்ரஸாதன் மகிழ்ச்சியுடன் முழக்குகிறான். உண்ணுவதும் அவளுடைய தேஜோமய வடிவமாகிய வேள்வித் தீயில் நெய்யை அவியாகச் சொரிதலேயாம்."

இக்கருத்தை ராமப்ரஸாத ராயின் இன்னொரு பாட்டும் வெளியிடுகின்றது.

"கருணைக் கடலாகிய காளியின்பால் அன்பினால் உள்ளம் உருகாவிடில், இந்த உடலால் என்ன பயன்? இந்த நாவு காளியின் பெயரை உரையாவிடில், அதைச் சுடவேண்டும். அவளுடைய திருவுருவைக் காணாத கண்கள் பாவக் கண்களே. காளியின் திருவடிகளில் ஆழாத நெஞ்சம் புன்னெஞ்சமேயாம். அவளது நாமத்தைக் கண்ணீர் ஊற்றெடுக்கக் கேளாத செவிகள் செவிடாய்விடக் கடவன. சந்தனம், ஜபாகுஸுமம், வில்வதளம் இவற்றால் அஞ்சலியை நிரப்பாது வயிற்றை நிரப்புவதற்குமட்டும் உதவும் கைகளால் ஆகும் பயனென்ன? காளியின் ஆலயத்துக்குக் கனிவுடன் செல்லாத கால்கள் இரவும் பகலும் நடந்துபோதல் வீணே."

'அப்ராதிகூல்யம்' அல்லது 'பகவத் ஸங்கல்பத்துக்கு அமைந்திருத்தல்' என்பது—'நீ செய்வது யாதாயினும் அதுவே எனக்கு நலம் செய்வது,' என்று அமைந்திருக்கும் மனப்பான்மையாம். "நின் திருவுள்ளம் நிறைவேறுக"—என்றார் இயேசுபிரான். பூதத் தொண்டனாகிய யோபு (Job) இப் புவியில் தனக்கிருந்த மக்கள், உற்றார், உறவினர் முதலிய சகலரையும் இழந்தும்,

"நீ என்னைக் கொன்றாலும் உன்னையே நான் விசுவஸிப்பேன்," என்றான்.

அடியிற் காட்டிய கருத்தமைந்த வங்காளிப் பாட்டு'அப்ராதி கூல்ய'த்தின் மூல மந்திர மாகும்.

"இறைவா, நீ எனக்கு எந்த நிலையை அருளினும், அதுவே எனக்குப் பெரும்பேறு; ஆகையால் உன்னை நான் என்றும் மறவா திருப்பேனாக."

மெய்ப் பக்தனது மற்றுமொரு லக்ஷண மாவது—

"அகப் புறத் தொழில்கள் அனைத்தையும் அவனுக்கே அர்ப்பித்து விட்டுக் காமம் குரோதம் அபிமானம் முதலியவற்றை யெல்லாம் அவன் மீதே செலுத்துவது."

—நாரத பக்தி ஸூத்ரம்.

பக்தன் ஆத்மவஸ்துவிலேயேகிரீடிப்பவன், ஆத்ம வஸ்துவிலேயே ரமிப்பவன். அவன் ஆண்டவனைத் தன் நாயகியாய்ப் பாவித்துத் தழுவிக் கொள்ளு கிறான், முத்தமிடுகிறான், மார்புறப் புல்லி அல்லும் பக லும் நெடும் பொழுது கழிக்கிறான். அவனை விட்டுப் பிரிந்தால், பித்தெய்துகிறான்; கூடுதல் நேர்ந்தழி, தன் ஆண்டவனாகிய ஆருயிர் காதலியுடன் ஏகாந் தத்தில காமுகனைப் போல் 'கிமபி கிமபி ஜல்பத:' என்றபடி பேசாத பேச்செல்லாம் பிதற்றிப் பிதற் றிக் காலங் கழிக்கிறான். கௌராங்கப் பிரபுவின் வாழ்க்கை இதற்குச் சான்று அளிக்கிறது. ஹாபிஜ் என்ற பாரஸிகக் கவியும் இவ் வின்பச் சுவையை நுகர்ந்த ரஸிகனேயாம்.

பிரேமை இருக்கும் இடத்திலே சினமும் பெருமை யுணர்ச்சியும் கூடவே யிருக்கும். கௌராங்கனர் பலகாலும் இவ் வுணர்ச்சிகளை வெளியிட்டிருக்கிறார். ராமப்பிரஸாதராய் தம் பெருமைக்குச் சிறுமை நேர்ந் ததைப் பொறுக்க மாட்டாது அது காரணமாகப் பொங்கிய சினத்துடன் இவ்வாறு பொருள் படும்படி பாடுகின்றார்—

"உன்னை இனி ஒருகாலும் தாயே தாயே என்று அழையேன். எவ்வளவு வேதனை நீ எனக்கு இழைத் துக் கொண்டிருக்கிறாய்? அம்மா அம்மா வென்று உன்னைப் பன்முறை அழைத்தேனே. உனக்குக் கண் குருடாய் விட்டதோ? காதுதான் செவிடாய் விட் டதோ? மகன் இவ்வளவு துயருறுவதாயின், தாய் பிழைத் திருப்பதில் என்ன பயன்? நான் இல்லறத் தோனாய் இருந்தேன்; என்னை வீடு வாசலற்றுத் திரி யும் ஆண்டி யாக்கினாய். இதைக் காட்டிலும் மிகுந்த துன்பம் இன்னும் என்ன செய்ய வல்லாய்? இதனி லும் மிகுதியாய் எனக்கு நேரிடக் கூடிய துன்பம் வீடு வீடாய்ச் சென்று பிச்சை யெடுப்பதை யன்றி வேறொன்று மில்லையே? தாய் செத்துப் போய்விட் டால், பிள்ளை பிழைக்காதா? உன் மகனிடமே நீ பலகமை பாராட்டுவது உன் தாய்த் தன்மைக்கு

அடுக்குமோ? என்று நான்—ராமப்பிரானாதன்—கேட்கிறேன். மீண்டும் கர்ப்பவாஸ வேதனையை விதிப்பதைவிட அதிகமான தீங்கு என்ன செய்ய வல்லாய்?''

பெருமைக்கு நேர்ந்த குறைவை முன்னிட்டெழுந்த இத்தகைய ரோஷத்துக்கு உலகத்தின் சமய இலக்கிய முழுதிலும் ஒப்புமை காண்பதரிதென்றே நினைக்கிறேன், இவ்வளவு பெருமை பாராட்டுவது பக்தன் ஒருவனுக்கே தகும்.

மெய்த் தொண்டர்களின் லக்ஷணத்தை விளக்குகையில் கௌராங்கனர் ரூபகோஸ்வாமிக்கு உணர்த்தியருளிய தாவது—

பக்தர்களின் தாரதம்யத்துக்கேற்றபடி பக்தி ரஸம் சாந்தி, தாஸ்யம், ஸக்கியம், வாத்ஸல்யம், மாதுர்யம் என ஐவகைப்படும்.

க. சாந்தி (அமைதி).

ஒருவன் சாந்தன் அல்லது அமைதி யுடையோன் ஆகாதவரையில், பக்தி ஆரம்பமாகாது. சாந்தி ரஸம் பக்தியின் முதற் படியாம். ஈசுவர நிஷ்டையும் உலக இச்சைகளை நீத்தலும் சாந்தி ரஸத்தின் இரு குணங்களாகும். இவ்விரு குணங்களிலுமே பக்தி நிலைபெற்றிருப்பது. ஆகாசத்தின் குணமாகிய சப்தத் தொகுதியானது பஞ்சபூத மனைத்திலும் இருப்பதுபோல், சாந்தி ரஸத்தின் இவ்விரு குணங்களும் தாஸ்யம், ஸக்கியம், வாத்ஸல்யம், மாதுர்யம் என்னும் ஏனைய ரஸங்க ளனைத்திலும் இருக்கும். சாந்தி ரஸத்தில் பகவத் பிரீதி என்பது உண்டாவதில்லை; கேவலம ஈசுவர ஸ்வரூப ஞானம் மாத்திரமே, அதாவது பரப்பிரஹ்மம், பரமாத்மா என்ற பகவத்குண விசேஷங்களின் தத்துவ ஞானம் மட்டுமே உண்டாகும்.

உ. தாஸ்யம் (அடிமைத்திறம்).

தாஸ்ய ரஸம் பக்தனுடைய உள்ளத்தில் பகவத் பிரீதியைத் தோற்றுவிக்கிறது. அப்பொழுது கடவுள் ஆண்டான், தான் அடிமை என்ற உணர்ச்சி ஏற்படவும், பக்தன் அவனிடத்தே மிகுதியான வணக்கமும் பக்தி

ரத்தையும் காட்டித் தன்னை அவனுடைய அடியா னென்று சொல்லிக்கொள்வதில் பேரானந்த முறுவான். ஒரு சிறந்த சேவகன் தன் பிரபுவுக்கு உள்ளன்புடன் ஊழியம் செய்வது போலவே, பக்தனும் பகவானை அந்த ரங்க சக்தியோடு கூடிய சேவையினாலும் கைங்கரியத்தி னாலும் உகப்பிப்பதில் ஈடுபட்டிருப்பான். தாஸ்ய ஸாநு பவம செய்பவனுக்குக் கிருஷ்ண சேவையைத் தவிர்த்து வேறெதுவும் பிடியாது. அவன் பகவானிடத்தில் எதை யும் பெற விரும்பான்.

பிரஹ்லாதனது சேவையால் மனமுவந்து பக வான் அவனுக்கு வரமளிக்க வேண்டி இவ்வாறு கூறினார்:—

"பிரஹ்லாத, பெருந்தகாய், உனக்கு மங்களம் உண்டாகுக; அசுரருட் சிறந்தோனே, உன்னிடம பிரீதியடைந்தேன், உனக் கிஷ்டமான வரத்தைக் கேள். நான் மக்களின் வேட்கையை நிறைவேற்று கிறவனன்றோ?"

அதற்குப் பிரஹ்லாதன் கூறிய விடையாவது—

இயற்கையிலேயே வேட்கைகளில் அழுந்தியுள்ள என்னை அவ் வரங்களை அளிப்பதாகச் சொல்லிச் சோதிக்க வேண்டாம். நான் அவ் வேட்கைகளில் அழுந்தி யிருத்தலை அஞ்சியே அவற்றினின்றும் விடு தலையடைய வேண்டி நின்னைச் சரணடைந்தேன். ஐயனே, ஒருவேளை தொண்டனுக்குரிய லக்ஷணங்கள் என்னிடத்தில் உளவா இல்லையா வென்று ஆராய்ந் தறிவதற்காக ஸம்ஸாரத்துக்கு மூல காரணமும், இரு தய முடிச்சுப்போல் பந்திப்பதுமான வேட்கைகளில் என்னை ஏவிப் பார்க்கிறாய்போலும். இல்லாவிடில், ஓ அகில குருவே, கருணாநிதியாகிய நின்னிடம் இத் தகைய செய்கை நிகழாதே. பார்வை குன்றிய வனுக்கு நள்ளிருளில் கரை காட்டுவோன் நீ ஒரு வனே யன்றோ? நின்னிடம் வரங்களை விருப்புகிறவன் ஒருகாலும் நினக்குத் தொண்டனாகான்; அவன் (தன் தொண்டுக்குப் பிரதி பலனாக ஏதாகிலும் பெற விரும்

யும்) வணிகனே யாவன். குண நலன்களில் அன்பு பாராட்டுவோனும் வேட்கைகளில் பற்றில்லாத வனுமே முறையே தலைவனும் தொண்டனு மாவர். தலைவனிடத்தில் நலங்களைப் பெற விரும்பித் தொண்டு புரிகிறவன் உண்மைத் தொண்டனல்லன்; தொண் டன் மீது தலைமை செலுத்த ஆசைப்பட்டு அவ னுடைய விருப்பங்களை நிறைவேற்றி வைப்பவனும் உண்மைத் தலைவனல்லன். நானோ எத்தகைய பயனை யும் விரும்பாது நின்னை வழிபடும் அடியான். நீயும் தன்னல மற்ற தலைவன். ஆகையால் உலக இயலில் அரசனுக்கும் ஊழியனுக்கும் உள்ளது போன்ற தன் னலச் சார்பினல் நாம் அடையக் கூடிய பயன் ஒன்று மில்லை. வரந் தருவாருட் சிறந்தோய், எனக்கிஷ்ட மான வரங்களைத் தர நீ அவ்வளவு ஆவல் கொண்டி ருந்தால், எவ்வகை வேட்கையும் என் உள்ளத்தில் அரும்பா திருத்தலாகிய வரத்தை நின்னிடம் கேட்டுக் கொள்ளுகிறேன். வேட்கை உண்டாகுமிடத்தே புலன் கள், மனம், பிராணன், ஆன்மா, தருமம், தைரியம், மதி, நாணம், திரு, நினைவு, வாய்மை— இவை அனைத் தும் அழிவடைகின்றன. கமலக் கண்ணு, மக்கள் தம் உள்ளத்து வேட்கைகளை விட்டு விடும்போதே நின் தெய்வ சம்பத்துக்கு உரியவராகின்றனர்.''

வங்கநாட்டு இருபத்துநான்கு—பர்கானு என் னும் ஜில்லாவில் ஒருவன் கலெக்டர் ஆபீஸில் பேஷ்கார் உத்தியோகத்தில் அமர்ந்திருந்தானும். அவன் தெய்வ பக்தி யுள்ளவ னுகலால், ஒவ்வொரு நாளும் காலையில் எழுந்தது முதல் ஸ்நானம், ஜபம், தபம், பூஜை இவை முடிவதற்கு வெகு நேரம் செல்லும். அதனுல் அவன் ஆபீசுக்குப் பன்னிரண்டு மணிக்கு முன் செல்ல முடி யாது. சரியாய்ப் பதினென்று மணிக்கு ஆபீசுக்கு வர வேண்டுமென்று கலெக்டர் துரை முதலில் அவனை எச்சரித்தார். அது பயன் படவில்லை. ஆகவே துரை கடைசியில் அவனை வேலையிலிருந்து தள்ளி விட வேண்டிய தாயிற்று. அதன்மேல் அவ வெளிய பேஷ்கார் தன் ஊருக்குத் திரும்பிப்

போகாமல், காளிகட்டத்தில் கங்கைக் கரையில் காளி கோவிலின் அருகே ஒரு சிறு குடிசை கட்டி அதில் இருந்து கொண்டு அறவழியில் ஒழுகத் தொடங்கி ஏடோறும் பிச்சை யெடுத்துண்டு, இரவும் பகலும் காளியின் கைங்கரியத்தில் ஈடுபட்டிருந்தான். இவ்வாறு மிகக் கஷ்டத்துடன் ஜீவித்து வந்த அவனது நிலைமையைக் கண்டு, சில நண்பர்கள் இரக்கம் கொண்டு, அச்செய்தியைக் கலெக்டருக்குத் தெரிவித்து அவனை மீண்டும் வேலையில் எடுத்துக் கொள்ளும்படி வேண்டிக் கொண்டார்கள். கலெக்டர் ஒருநாள் அவனுடைய குடிசைக்குச் சென்று அவனுடைய நலிவுற்ற நிலையை நேரிற்கண்டு மிகவும் வருந்தி, அந்த க்ஷணமே அவனை நோக்கி—"உன்னுடைய உத்யோகத்தை உனக்குத் திருப்பிக் கொடுக்கிறேன். உன் நித்திய பூஜையை முடித்துக் கொண்டு உன் சௌகரியப்படி எந்த நேரத்திலாவது ஆபீசுக்கு வரலாம்," என்ருர். அதற்குப் பேஷ்கார் "நான் தங்களுக்கு என்றென்றும் நன்றியுள்ளவனுயிருப்பேன். தங்கள் கருணையை என்றும் மறவேன். ஆனுல் தாங்கள் என்னை மன்னிக்க வேண்டும். இப்பொழுது நான் அமர்ந்திருக்கிற உத்யோகத்தில் இரந்துண்ணவேண்டி யிருந்தாலும், இதை விட்டுவிட்டு வேறு எவரிடத்தும் ஊழியம் செய்ய எனக்கு மனம் வரவில்லை. இந்தக் கஷ்ட நிலைமையில் நான் அநுபவிக்கும் ஆனந்தம் துரையவர்கள் கச்சேரியில் ஆயிரம் ரூபாய் கிடைப்பதா யிருந்தாலும் உண்டாகாது. எஞ்சியுள்ள என் வாழ்நாளைக் காளி கங்கா தேவிகளின் சேவையில் கழிக்குமாறு என்னை ஆசீர்வதியுங்கள்," என்ருன். அப்பால அவன் பேஷ்கார் உத்யோகத்தை ஏற்றுக் கொள்ளவேயில்லை. பக்தியின் தாஸ்ய ரஸத்துக்கு இவன் ஒரு சிறந்த இலக்கியம்.

சக்கியம் (தோழமை)

ஸக்கிய ரஸத்தில் கௌரவம், மரியாதை இவை அபாவமாகி, பக்தன் பகவானை நண்பனுகக் கருதி அவனிடம் சம்பூர்ண விசுவாஸம் கொண்டு, அவன் கழுத்தில் கை-

போட்டுத் தழுவிக் கொள்ளுகிறான். இதில் வழக்கம் போல் விவாதங்கள், பிணக்குகள், வேடிக்கை விளையாட்டு முதலியவைகளும் விளைவதுண்டு. பக்தன் நட்புரிமை பாராட்டி, "எம்பெருமான் தோளில் ஏறிக்கொள்ளுகிறான், எம்பெருமானையும் தன் தோளில் ஏற்றிக் கொண்டு சவாரி செய்விக்கிறான், தன்னுடன் வேடிக்கைச் சண்டைக்கு வரும்படி அவனை அறைகூவி அழைக்கிறான். அவனுக்கு வேண்டிய உபசாரங்களைச் செய்து, தானும் அவனிடத்தி லிருந்து அத்தகைய உபசாரங்களைப் பெற்றுக் கொள் கிறான்." பக்தனுக்கு பாகவானை யன்றி அதிகப் பிரியமான பொருள் வேறொன்று இருக்க முடியாதென்பதே ஸக்கிய ரஸத்தின் பிரதான லக்ஷணமாம். ஸ்ரீராமனுடைய நண்பனா கிய குகன் என்னும் கிராதர் வேந்தன் இவ்வாறு கூறி யிருக்கிறான்:—

" ந்ஹி ராமாத் ப்ரியதரோ
மமாஸ்தி ப்ஹுவி கச்சந"

—இராமாயணம்.

"இப்புவியில் எனக்கு இராமனிலும் பிரியமான வன் ஒருவனுமில்லை."

ஸக்கிய ரஸத்தில் குகனும் அர்ஜுனனும் பக்த னுடைய நிலையையும், ஸ்ரீராமனும் கிருஷ்ணனும் பகவா னுடைய நிலையையும் உணர்த்தாகிற்பர். ஸ்ரீதாமன் என்னும் இடைச் சிறுவன் ஸக்கிய ரஸத்தில் ஈடுபட்டின்புறும் பக் தர்களின் மனோபாவத்தைத் தன் அத்யந்தப் பிரிய சகா வாகிய ஸ்ரீகிருஷ்ணனுக்கு இவ்வாறு உணர்த்தினான்—

"ஏ கன்னெஞ்சனே, நீ எம்மைத் திடீரென்று யமுனை யாற்றங் கரையில் விடுத்துச் சென்ற தென்னே? நல்ல வேளையாய் உன்னை மீண்டும் காணப்பெற்றோம். இப்பொழுது வந்து உன் தொழர் களை இறுகத் தழுவி மகிழ்விப்பாய். உன்னிடம் சத் தியமாய்ச் சொல்லுகிறோம். உன்னைச் சற்று நேரம் பாராதிருக்க நேர்ந்தாலும், பசுக்களென்ன, எங்கள் இருப்பென்ன, மாட்டுக்கொட்டில்களென்ன, எங் கள் கோரிக்கைகளென்ன, இவை யெல்லாம் கணப் பொழுதில் தலைகீழாய் விடுகின்றன."

பிரேமையில் இவ்வாறே கெழ்ந்து தீரும். பக்தி ரசாமிருதசிந்து வில் ஸ்ரீ கிருஷ்ணனுடைய பிரிய சகாக்களின் செய்கைகளை ஸ்ரீ ரூபகோஸ்வாமி இவ்வாறு வர்ணித்திருக்கிறார்:—

"சண்டையில் கண்ணனைத் தோற்கடிப்பது, அவனுடைய ஆடையைப் பிடித்திழுப்பது, அவன் கைகளிலிருந்து மலர்களைப் பறித்து அவற்றால் தம்மை அலங்கரித்துக் கொள்வது, ஒருவரை ஒருவர் கை பிடித்திழுப்பது முதலிய பிறவும் அவனுடைய அன்பார்ந்த தோழர்களின் செய்கைகளாகும்."

இருதயத்தின் அடியிலிருந்து எவன் இவ்வாறு எம்பெருமானுடன், களியாட்டயரக் கூடியவனோ அவனே ஸக்கிய ரஸத்தின் தோழமைச் சுவையின் இனிமையைத் துய்த்தவனாவான்.

'வெற்றி பெறுவது நீயோ நானோ பார்ப்போம்' என்று வீரம்பேசி பக்தன் பிரேம யுத்தத்துக்கு முற்பட்டு நின்று, பகவானைத் தோற்கடித்து பக்தியால் அவனைக் கட்டிச் சிறைப் படுத்துகிறான்.

ராமப்பிரசாத ராய் காளி அன்னையை அடியிற் கண்டபடி சிறைப்படுத்தினான்.

"உன்திருநாமத்தைக் கேட்பது என் செவிக்கணி. அந்த நாமத்தைக் கீர்த்திப்பது என் கழுத்துக் கணி. பிரேம மணியை என் மாலையாகப் பெற்றிருக்கும் போது, வேறு அணிகளால் எனக்கு யாது பயன்?"

பக்தன் பகவானையே தனக்கு எல்லா வகையிலும் அணியாகப் பண்ணிக் கொள்ளுகிறான்.

அந்தகனாகிய வில்வமங்களனென்பான் * பிருந்தாவனம் செல்லும் பாதையில் நடந்து போய்க் கொண்டிருந்தான். அவனுக்கு ஸ்ரீ கிருஷ்ணன் சிறு பிள்ளைக் கோலத்

---

* வில்வமங்களன் முதலில் மிக்க காமாதுரனாயிருந்து, பிறகு கிருஷ்ண பக்தியில் ஈடுபட்டு உத்தம பக்தனாய் மாறினதாக வைஷ்ணவ நூல்கள் கூறும். "கிருஷ்ண கர்ணாமிர்தம்" என்னும் ஸ்தோத்திர பிரபந்தத்தை வடமொழியில் இயற்றியவர் இவரே போலும்,

தில் தோன்றி, வழி காட்டிக் கொண்டே வந்தான். கண்ணனது வரமும் அபயமும் அளிப்பதும் மங்கள வடிவமுடையதும் இனிமை வாய்ந்ததுமான திருக்கரத்தை ஒரு முறையாகிலும் தொட்டுவிட வேண்டுமென்னும் வலிய ஆசை வில்வ மங்களனை வாட்டிக் கொண்டிருந்தது. அவன் எப்படியோ அந்தக் கையைப் பிடித்துவிடுகிறான். உடனே கண்ணன் அவன் கையைப் பலாத்காரமாய் உதறித் தள்ளிவிட்டுப் போகிறான்.

அப்பொழுது பக்தன் வில்வ மங்களன் கூறுவதாவது:—

"ஹஸ்தா வாக்ஷிப்ய நிர்யாஸி
பலாத் கிருஷ்ண கிம் அத்ப்ஹுதம்
ஹ்ரியாத் யதி நிர்யாஸி
பௌருஷம் கணயாமிதே."

"கிருஷ்ணா, வலிமை கொண்டு கையை உதறித் தள்ளிவிட்டுப் போவதில் என்ன ஆச்சரியம்? என் இருதயத்திலிருந்து செல்ல வல்லையானால் உன் ஆண்மையை மெச்சுவேன்."

இது பக்தியின் மூன்றுவது பிரகாரமாகிய தோழமைத் திறத்துக்கு மிக இனிய உதாரணமாம்.

வாத்ஸல்யம் (மக்களிடத் தன்பு)

'வாத்ஸல்ய ரஸ'த்தில் எம்பெருமான் பக்தனது செல்வக் குழந்தை வடிவமான பாலகோபாலனுக பாவிக்கப் படுகிறான். பக்தர் அவனைப் புத்திர பாவனையில் மடியிலிருத்தி அன்பு பாராட்டிச் சீராட்டுகின்றார். பக்தியின் இந்த பாவனையைக் கிரஹிப்பது மிகக் கஷ்டம். வாத்ஸல்ய ரஸத்துக்கு உதாரணமாக ஒரு வங்கமொழிக் கீர்த்தனத்தின் கருத்தை ஈண்டு கூறுகிறேன்—

"ஆயர்பாடியின் அரசனே, கேளாய். இன்று சொப்பனத்தில் கோபாலன் என் முன் தோன்றினனே. ஆ! அவன் எங்கே போய் ஒளித்துக் கொண்டான்? அந்தத் துடுக்குச் சிறு பயல், திங்களைப் போல் திகழும் திருமுகமும் நீர் ததும்பும் கண்களு

முடைய கோபாலன் என் சேலையின் தலைப்பைப் பிடித்திழுத்து 'அம்மா, வெண்ணெய் தா, வெண்ணெய் தா,' என்று அழுதான். அவன் உடம்பில் படிந்திருந்த தூசியைத் தட்டிவிட்டு இடுப்பில் எடுத்து வைத்துக்கொண்டு, சேலையின் தலைப்பினால் அவன் முகத்தைத் துடைத்தேன். அப்பொழுது என் இருதய சந்திரனாகிய அச் செல்வக்குட்டி வானிலுள்ள சந்தமாமா வேண்டுமென்று அழுதான். கோடி கோடிசந்திரரையும் பார்க்க மிக்க எழில் வாய்ந்த முகத்தையுடைய கோபாலன் இந்தச் சந்திரனுக்காக ஏன் அழவேண்டும்? 'சந்திர ரெல்லோர்க்குள்ளும் நிஷ்களங்க சந்திரனாகிய உன் பாதங்களின் கீழ் எத்தனையோ சந்திரர் விழுந்து புரள்கிறார்களே!' என்றேன். நீலமேகத்தின் காந்தி பெற்ற அவனுடைய மேனி தூசினால் அழுக்கடைந்திருந்தது. 'அம்மா, வெண்ணெய் தா' என்று கேட்ட அந்தக் குரல் எவ்வளவு இனிமையாயிருந்தது! குழந்தை, 'வெண்ணெய், வெண்ணெய்' என்று அவ்வளவு அழுதும், 'அப்பாலே போ' என்று சொன்னேனே பாவியேன். ஐயோ! இப்போ எனக்கு ஒழியாது, போ போ' என்று சொல்லி அவனை அகற்றிவிட்டேனே!''

இந்த கானத்திலுள்ளே வாத்ஸல்ய ரஸத்தின் அமுத வெள்ளம் அலைவீசிப் புரள்கின்றது. வாத்ஸல்ய ரஸத்தின் இந்த மோஹன சங்கீதத்துக்கு நிகராக இன்னொன்று கிடைத்தல் அரிது. அன்னை யசோதையின் முலைகளிலிருந்து அன்புப்பால் வெள்ளமிட்டு வருகிறது. அவ்வன்பின் மிகுதியைத் தாளமாட்டாது அவளுடைய உயிர் தத்தளிக்கிறது. கோபாலனுடைய வடிவம் அவளது உள்ளத்தில் மின்னற்கொடிபோல் பளிச்சிடுகிறது கோபாலனைப் புறக்கணித்து விட்டதை எண்ணி எண்ணி அவளுக்கு இன்று பிச்சேறிவிட்டது. கோபாலனது பிரிவாற்றாமையாகிய தீ அவள் உள்ளத்தினுள்ளே தகதகவென்று பற்றி யெரிகின்றது.

இந்தக் கீர்த்தனத்தின் ஆத்தியாத்மிகக் கருத்து மிக மிக இனிமையானது. எம்பெருமான் குழந்தை வடிவத்

தில் பக்தனிடம் போந்து பிரேம பிக்ஷை கேட்கிறன். பக்தன் அவனிடம் சற்று ஆதரம் காட்டிப் பிறகு பராமுகமாய் இருந்துவிடுகிறன். பகவான் ஆசாபங்கமுற்று மறையவும், பக்தன் பிரிவாற்ருமையால் உயிர் வெதும்பித் தவித்துத் தத்தளிக்கிறன்.

> "இன்றுகனவில்கண்ட கோபாலன் எங்கேயோ ஒளிந்து கொண்டானே!" என்றுமுறை யிடுகிருள் யசோதை தன் பதியினிடம். இவ்வாறே பகவான் பக்தன் முன் மின்னற் கொடிபோல் தோன்றி மறைந்துவிடுகிறன். அவன் பக்தனுடன் ஸர்வதா கண்ணும்பூச்சி யாடும் வழக்கமுடையவன்.
>
> "நான் இங்கே இருக்கிறேன். உன்னல் ஆகுமானல் என்னைப் பிடி,' என்று சொல்லிக்கொண்டு நீ எங்கே ஒளிந்து கொள்ளுகிருய்? உன்னைக் கண்டு பிடிக்க என்னலாகவில்லை. நான் தேடித் தேடி அலுத்துவிடும் போது, நீ என் உள்ளத்தி லிருந்து கொண்டே 'கூ' என்று கத்துகிருய்."
>
> (வங்காளிக் கீர்த்தனம்.)

சபல சித்தனுகிய கோபால பாலகன் அன்னை யசோதையின் முந்தானையைப் பிடித்துக்கொண்டு வெண்ணெய் தரும்படி இரந்தழுகிறன். அதுபோல் பகவான் பக்தரிடம் பிரேம நவநீதத்தை எப்பொழுதும் யாசித்த வண்ணமா யிருக்கிறன். யசோதை கோபாலனுடைய உடம்பில் படிந்திருந்த தூசியைத் தட்டிவிட்டு இடுப்பில் எடுத்துக் கொள்ளுகிருள். அதுபோல் பகவானைக் கோபாலனுக பாவித்து பக்தன் வஸ்திரத்தில் எடுத்து வைத்துக்கொள்ளுகிறன். சேலைத் தலைப்பினுல் அவன் முகத்தைத் துடைத்தேன், என்கிருள் யசோதை. அதுபோல பக்தன் அவனை ஆதரவுடன் சீராட்டுகிறன். அப்பொழுது என் இருதய சந்திரனுகிய அச்செல்வக் குட்டி வானிலுள்ள சந்தமாமா வேண்டுமென்று அழுதான். அதுபோல் பகவான் பக்தரின் அன்புக்காகப் பித்துபிடித் தலைகிறன். சந்திரனே அமுதவூற்று; பக்தரின் அன்பும் அன்னதேயாம். பகவானே ஒரு சந்திரன். மற்ருெரு சந்திரன் பக்தனும் அவ-

னது அன்புமாம். எவன் களங்கமற்ற பிரேம சசியோ, எத்தனை கோடி கோடி சந்திரர் ஒன்ருய்த் திரண்டாலும் எவனுக்கு நிகரில்லையோ, எவன் அனந்தப் பிரேம பாரா வாரமோ, எவனுடைய அடியிணையில் எத்தனை பக்த சந்திரர் விழுந்து கிடக்கிருர்களோ, (இதை யாரே அறிவர்?) அவன் ஏன சந்தமாமா, சந்தமாமா, அதாவது, என் பக்தன் எங்கே? என் பக்தன் எங்கே? என்று கதறிக் கொண்டிருக்கவேண்டும்? பிரேம ஜலதியானது 'இன்னும் பிரேமை வேண்டும்' என்று கம்பீரமான தாங்க நாதத்தை எழுப்பிக் கொந்தளித்துக் கொண்டிருக்கிறது. பகவான் பக்தரின் பிரேமைக்காக எப்போதும் ஆவலாயிருக்கிருன்.

கோபாலன் பிரேமையைப் பெருவிடில் புழுதியில் விழுந்து புரள்கிருன். அவன் பக்தரின் அன்பைப் பெறும் பொருட்டு எவ்வளவோ ஆத்திரப்படுகிருன். அந்த ஆத்திரத்தை எவரே அறியவல்லார்? பிரேமையின் பொருட்டு அவனுடைய நீலவண்ணத் திருமேனி புழுதியிலே புரண்டலைகிறது.

'குழந்தை வெண்ணெய் வெண்ணெய் என்று அவ்வளவு அழுதும்' என்பது பக்தர் பரவும் பாலகோபாலன் இடைவிடாமல் பிரேம நவநீதத்துக்காக அழுதுகொண்டிருப்பதை உணர்த்துகிறது. அப்பாலே போவென்று சொன்னேனே, பாவியேன் என்பதனுல், பக்தன் எம்பெருமானைப் புறக்கணிப்பது குறிக்கப்படுகிறது. அதன் மேல், ஐயோ என்ன செய்துவிட்டேன்! ஐயோ என்ன செய்துவிட்டேன்? என்று உள்ளம் உருகுகின்றது போ போ என்று சொல்லி அவனை அகற்றிவிட்டேனே! என்பது வேதனையினுல் உயிர் நிலைகொள்ளாமல், ஐயோ, ஐயோ இவ்வளவு அருமையான செல்வத்தை அகற்றி எறிந்து விட்டேனே! உள்ளத்தைச் செம்பொன்னுய் உருக்கும் பரிசமணியும், அகத்துக்கு அமைதி யளிக்கும் அருஞ்செல்வமும் கருதியவற்றைக் கொடுக்கும் கற்பகத் தருவும், புவிமிசை வாழ்வின் பொன்ருத் துணையும் ஆகிய எவனுடைய வாயிலில் நாம் அனைவரும் இரந்து நிற்க வேண்டியவரோ, அவனே பிரேம பிக்ஷை வேண்டி என்

னிடம் வந்து நிற்கையில், அவனை அலட்சியமாய் அகற்றி விட்டேனே! என் கதி என்னாகுமோ? என் கதி என்னாகுமோ? அவனை மார்போடணைத்து என் முழுச் செல்வத்தையும் அவனுக்கு நான் அர்ப்பியாமற் போனதேனோ என்று தவிப்பதைக் காட்டுகிறது. பக்தன் பகவானைப் புறக்கணிக்கும் போதெல்லாம் அவனது இருதயத்தில் இத்தகைய சிந்தை வெள்ளமே பெருகிக் கொண்டிருக்கும்.

மாதுர்யம் (இன்பச் சுவை)

இனி பக்தனுக்கும் பகவானுக்கும் இடையே உள்ள நாயக நாயகி பாவத்தின் மாதுர்யத்தை என்னென்றுரைப்பது! உயிரில் மதுர ரஸம் பாயுங்கால், எப்படித் தலைவியானவள் தலைவனை யன்றிப் பிறரை அறியாளோ, அப்படியே பக்தனும் பகவானைத் தவிரப் பிறிதொன்றையும் கருதான். அப்பொழுது பக்தன் பகவானுக்குச் சம்பூர்ணமாய் ஆத்ம ஸமர்ப்பணம் பண்ணி இப்படி உரைப்பான்

"உன் அழகை நினைக்குமளவில் என் கண்களில் நீர் ததும்புகிறது. உன் குண நலத்தைக் கருதுமளவில், அதில் என் உள்ளம் அவசமாய் ஆழ்கின்றது. என் அங்கம் ஒவ்வொன்றும் உன் ஒவ்வொரு அங்கத்தையும் அவாவுகின்றது. என் ஸ்வரூபம் முழுவதும் உன் முழு ஸ்வரூபத்தையும் நாடிக் காதல் கூர்கின்றது."

இதைப் பார்க்கிலும் உயர்வு வாய்ந்த நிலைமையைப் பாவித்துக்கொள்ளல் அரிது. இந்நிலையில் ஸதிபதிகளுக்குள்ளதாகும் சம்பந்தமே பக்தனுக்கும் பகவானுக்கும் நிகழும். ஸ்ரீ சைதந்யனர் இந்தப் பாவகத்திலேயே தோய்ந்திருந்தார். ராதைக்கும் கிருஷ்ணனுக்கும் என்ன சம்பந்தமோ ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்கும் என்ன சம்பந்தமோ அந்த சப்பந்தமே சைதந்யனர்க்கும் பகவானுக்கும் உள்ளதாகும்.

பக்தனுடைய இருதயம் இந்தப் பாவக மலரின் நறுமணம் கமழப் பெறுங்கால், உன்னதமாகிய, அதி உன்னதமாகிய, அத்யந்த உன்னதமாகிய பிரதேசத்திலே காம விகாரப் பேயின் பார்வையினின்றும் கோடி காவதச்-

சேய்மைக் கப்பால் எவ்விடத்தில் இரவு இல்லையோ, எவ்விடத்தில் தூய்மையின் மாசற்ற ஒளியினுல் எல்லாத் திசைகளும் ஒளிர்கின்றனவோ, எதனுடைய வாசாமகோசரமான மோஹன மாதுர்யத்தைக் கற்பனையால் பாவித்துக் கொள்ளவும் பாப பிசாசத்தினுல் முடியாதோ, அந்தத் திவ்யத் தெளி விசும்பாகிய திருநாட்டின் இன்பப் பொழில்களிலுள்ள மிகமிக ஏகாந்தமான இடத்திலே பக்தன்

"தன் அருமைக் கண்மணியின் முகத்தைப் பார்த்து ஆனந்த பரவசத்தினுல் உன்மத்தனுகிருன்."

அன்றியும்,

"அவர்கள் தம் காதலைக் குறித்து ஒருவரோடொருவர் பேசிக் கொள்கின்றனர். ஒரு கணம் பிணங்குகின்றனர், ஒரு கணம் ஒன்ருய்க் கலந்து ஒருவரை யொருவர் தழுவி முத்தமிட்டு வாயாரப் புகழ்ந்து கொண்டாடுகின்றனர். ஒருவரை ஒருவர் பார்த்துப் பார்த்துக் கண்ணீர் பெருக்குகின்றனர்."

இவ் ஆத்யாத்மிக ஸரஸ கேளியின் கருத்தை உணர்ந்துய்யும் பாக்கியம் பெற்றவர் மிகச் சிலரினும் சிலரேயாவர்.

இம் மாதுர்ய ரஸத்தில் அமிழ்ந்தமிழ்ந்து கௌராங்கனர் புரி யென்னும் ஶ்ரீ ஸ்ரீ க்ஷேத்திரத்தில் ஜகந்நாதப் பெருமானைத் தரிசித்தவளவில்

"எவன் பொருட்டு நான் காதற்றீயினுல் வெந்து வருந்தினேனே, அந்த என் ஆத்ம நாதனை இறுதியில் கண்டடையும பேறு பெற்றேன்.

என்று பாடினர்.

கௌராங்கனரது இந்தக் காதல் தீயில் நாம் அனைவரும் வெந்துய்யுமாறு ஆண்டவன் அருள் புரிவானுக. பைசாசிகக்காதல் என்றென்றைக்கும் இவ்வையகத்தினின்றும் அகன்ருெழிவதாக. சிற்றின்ப நாற்றமற்ற தூய்மை வாய்ந்த காதற்றீ அனைவருடைய உள்ளத்திலும் கொழுந்து விட்டெரியக் கடவதாக!

மதுர ரஸத்தில் மூழ்கிப் போய்விட்டவனுக்குப் புறத்தனவாகிய (பாஹ்யங்களான) அறங்களும் வினைகளும் உளவாகா. அவன் வேதவிதிகளுக்குப் புறம்பானவன். ஆதலினாலன்றோ பரமனுக்கே பித்தனாகிய ஹாபெஜ் என்னும் பாரஸிக ஞானி சாஸ்திரத்தில் விதிக்கப்பட்ட சடங்குகளை யெல்லாம் தியாஜித்து விட்டான். வங்க மொழிப் பனுவலொன்று கூறும் வண்ணம்

"எவனுடைய உள்ளத்திலே அன்புருவாகிய ஆண்டவன் மிளிர்கின்றானோ, அவனுக்குச் சாதனங்களாலும் பூசனைகளாலும், ஜபமாலைகளாலும் யாது பயன்?

அன்பெனும் கள் அருந்தி வெறியுற்றவன் நாணத்தையும் அச்சத்தையும் விடுத்து ஜாதி குலாபிமானங்களை என்றென்றைக்கும் கடலின் அடித்தலத்தில் கரைத்துவிடுகிறான். அவன் ஆனந்தக் களிப்பு மேலீட்டினால் முகமலர்ந்து பிரேமையின் மகிமையைப் பாடிக்கொண்டிருப்பான்.

"வில்வ மங்களம்"* என்னும் நாடகத்தில் வரும் 'பாகலினி' (வெறி பிடித்தவள்) என்னும் பாத்திரம் இந்த மதுர ரஸத்துக்கு இலக்கியமாய் விளங்கும் அபூர்வ சித்திரமாவள். ஆண்டவனுடைய அழைப்பு அவளை எப்படி நெக்குருகப் பண்ணுகிறது பாருங்கள்.

"அதோ அம்மோஹனரூபனுடைய குழலோசை வருவதைக் கேள். ஆ! அது என்னை எப்படி மயக்கி விடுகிறது! தனியனாய அவன் கதம்ப மரத்தடியில் என்பொருட்டுக் காத்திருந்து வேய்ங்குழலூதிக் காதலொழுகும் கண்ணோக்குகளால் வழி பார்த்துக் கொண்டிருக்கிறான். என்மீது கொண்ட காதலால் பித்தேறிக் குழலூதும் வாயிலாக என்னை மீண்டும் மீண்டும் அழைக்கிறான். நான் போகாவிடில், கண்ணீர் பெருக்கிக்கொண்டு மனம் புண்ணாகித் திரும்பிச் செல்வான்."

---

*இது கிரிச்சந்திர கோஷ் வங்க மொழியில் இயற்றிய நாடகங்களில் ஒன்று. வில்வமங்களன் இதன் கதா நாயகன்.

இக் குழலோசையை உள்ளுயிருக்குள்ளே கேட்பவன் மெய்ம்மறந்து பரவசமெய்தினேன் ஆவன். திருவாய்ப் பாடியில் கண்ணன்பால் கோபிகைகள் கொண்ட காம விகாரமற்ற பிரேமையானது மதுர ரஸத்துக்குச் சிறந்த திருஷ்டாந்தமாம். அவர்களுடைய விரஹோன்மத்தம் (பிரிவாற்றுமையால் உண்டான பித்து) ஒரு சைதந்யருரிடத்தன்றிப் பிறரிடம் காண வியலாது. கண்ணன் ராஸக் கிரீடையாகிய குரவைக் கூத்தின் நடுவில் திடீரென மறைந்து விட்டான். கண்ணும்பூச்சி விளையாட்டில் பகவான் கைதேர்ந்தவன் என்று முன்னமே சொல்லியிருக்கிறேன். கோபிகைகள் கண்ணனைக் காணுது உன்மத்தராகி வனமெங்கணும் அவனைத் தேடித் திரியலாயினர்; விருக்ஷங்களையும் சேதனப் பொருள்களென் றெண்ணி இவ்வாறு விளித்து வினவலுற்றனர்.

"ஏ அரச மரமே, இச்சி மரமே, ஆல மரமே, அன்பு தோய்ந்த புன்முறுவற் பார்வைகளால் எங்கள் உள்ளங்களைக் கவர்ந்து நந்தகோபன் மகன் இவ்வழியாய்ப் போனதைக் கண்டீர்களா?

ஏ குரவகமே, அசோக மரமே, நாக மரமே, புந்நாக மரமே, சண்பக தருவே, ரோஷக்காரிகளான மடந்தையரின் செருக்கை மாய்ப்பதான புன்னகை புரியும் பலராமன் தம்பி எங்கு சென்றுன்?

கோவிந்தனுடைய கழலிணையில் ஆர்வங் கொண்ட கவின் பெறும் குணம் வாய்ந்த திருத்துழாயே, வண்டுகள் மொய்த்திருக்கும் உன்னை உன் பாலுள்ள அன்பால் மாலையாக அணிந்த அச்சுதனைக் கண்டாயா? ஏ மாலதியே, மல்லிகையே, ஜாதி மல்லிகையே, எங்கள் மாதவன் கர ஸ்பரிசத்தால் உங்கள் உள்ளங்களைக் களிப்பித்துக் கொண்டு இவ்வழியே சென்றுனு? ஏ மா மரமே, ஏ பிரியாலு, ஏ பலா மரமே, ஏ கோவிதார தருவே, எலுமிச்ச மரமே, வில்வ மரமே, மகிழ மரமே, தேமா மரமே, கடம்ப மரமே, நீப மரமே, பிறருக்குத் தொண்டு புரியப் பிறந்து யமுனை யாற்றங்கரையில் வளர்ந்திருக்கிற மற்ற மரங்களே, காதற் பிரிவால் வருந்தும் தூர்ப்பாக்

கியம் பெற்ற எங்களுக்குக் கண்ணன் போன வழி யைக் காட்டித் துணைபுரியுங்கள்.''

—ஸ்ரீ பாகவதம்; தசமஸ்கந்தம்.

உள்ளத்தை உருக்கும் இவ்விரஹ கீதத்துக்கு நிகராக வேறொன்றைக் கௌராங்கருடைய வாழ்க்கையிலன்றி இவ்வுலகில் வேறெங்கு காணலாம்? கோவிந்தனைக் கூடிப் பிரிந்து வருந்திய கோபிகைகளைப் போலவே

"கௌராங்கர் விரஹ தாபத்தால் கலங்கிக் காதல் வெறிகொண்டு அலைகிறார். அவர் வேடிக்கை விநோதங்களை விட்டொழித்ததைப் பற்றி நினைக்க என் நெஞ்சம் புண்ணாகிறது. சேதனமோ அசேத னமோ எவ்வெப் பொருள் எதிர்ப்பட்டாலும் அதை யெல்லாம் என் காதலன்—ஆயர்பாடியின் ஆனந்தக் களிப்பு—எங்குற்றான் என்று கேட்கிறார். புழுதியில் விழுந்து புரள்கிறார். ஒரு பொழுது எழுந்தோடுகிறார். ஒரு நேரம் இந்தக் காட்சியைக் காணுமளவில் ராதா மோஹன கவியின் நெஞ்சம் பிளந்து போகிறது. இதனிலும் சாவதே மேல்.''

கௌராங்க பிரபு விரஹவேதனையால் தவிக்கிறார். ஒவ் வொரு சமயம் கண்ணனைக் குரூரனென்றும் இரக்க மற்றவனென்றும் விளித்துரைக்கிறார். ஒரு சமயம் தன் னைக் கண்ணன் சரியாக மதிக்கவில்லை யென்று ரோஷங் கொண்டு, இனி அவன் பெயரையும் ஸ்மரிப்பதில்லை யென்று திடசங்கல்பம் செய்துகொள்ளுகிறார். ஆனால் அவரது உள்ளத்தின் எழுச்சியை அடக்கிவைக்க முடிய வில்லை. அஃது எம்பெருமானுக்கே பித்தாகிறது. ஆதலால் கண்ணனது திருநாமத்தை எடாமல் அவனோடு இடை விடாமற் கூடி மகிழும் கோபியரின் பெயரை ஓதுகிறார். பேர்த்தும், சிலசமயம் உள்ளத்தின் தீவிர எழுச்சியால் எல்லாவற்றையும் மறந்து, எனக்குக் காட்சியளி, காட்சி யளி என்று கதறுகிறார்.

"அவரது உள்ளத்தில் துயரமும், ஏக்கமும், வியாகுல மும், பதைபதைப்பும், ஆவலும், ஆனந்தக் களிப்பும் ஆகிய பல்வேறு உணர்ச்சிகள் எழுச்சியுற்று ஒன்றையொன்று

மேற்கொள்ளப் போராடுகின்றன. இவை யனைத்தற்கும் காரணமாயிருப்பது காதல் வெறியே. அவரது உடல் முழுவதும் கருப்பந் தோட்டத்தைப்போல் இருக்கிறது. மேற்கூறிய உணர்ச்சிகள் அத்தோட்டத்தைத் தலைத் துத் தவம்ஸம் செய்கின்றன. அவரது திருமேனி ஆனந்த பரவசத்திய மேலீட்டைத் தாங்கமாட்டாமல் தத்தளித் துக் குழைய, என்பு நெக்குருக, உரோமம் சிலிர்ப்ப, இரு விழி நீர் முத்திறைப்பப் படபடென நெஞ்சம் பதைத்து உள் நடுக்குற, மடலவிழு மலரனைய கைவிரித்துக் கூப்பிப் பகவானை இவ்வாறு கூவி யழைத்துக் கதறுகிறார்—

'ஹே தேவ, ஹே தயித, ஹே புவனைக பந்த்ஹோ
ஹே க்ரிஷ்ண, ஹே சபல ஹே கருணைக ஸிந்த்ஹோ,
ஹே நாத்ஹ. ஹே ரமண, ஹே நயநாப்ஹிராம,
ஹா! ஹா! கதா நு ப்ஹவிதாஸி பதம் த்ரிசோர்மே?'

"இறைவனே, இன்னுயிர்க் காதலனே, உலகுக் கெல்லாம் ஒரே உறவானவனே, கண்ணா, சபலசித்த முள்ளவனே, கருணைக் கடலே, காத்தல் புரிபவனே, களிப்பருள்வோனே, கண்ணுக்கினியவனே, ஐயகோ! எனக்கு நீ காட்சியளிப்ப தெக்காலம்?"

ஈண்டு பக்தன் பகவானை ஒருகணம் சபலசித்த முடை யவனென்றும் உடனே கருணைக் கடலென்றும் விளிக் கிறான். காதலன் உரையாடல் இத்தகையதேயாம். அவ னுடைய வாக்கியங்களில் எரிச்சலும், இறுமாப்பும், சுடு மொழியும், புகழ்ச்சியும், இகழ்ச்சியும் மாறி மாறி வரி னும், இம் முரண்பாடு உணர்ச்சிகளை யெல்லாம் கடந்து அசலமாய், ஒப்பற்றதாய், ஸ்திரமாய் உள்ள ஓர் உணர்ச்சி இன்ப துன்பங்களின் கலப்பால் அத்தியந்த மனோஹர மாய், இருதயத்தின் அடித்தலத்தில் வானவில்லைப் போல் மிளிர்கின்றது. பக்தன் கற்புடைய மாதின் காதற் கழுத் தணி பூண்டவனாய் இவ்வாறு கூறுகின்றான்—

"ஆச்லிஷ்ய வா பாதரதாம் பினஷ்டுமாம்,
அதர்சநாத் மர்மஹதாம் கரோது வா
யத்ஹா தத்ஹா வா விதத்ஹாது லம்படோ;
மத்ப்ராண நாத்ஹஸ்து ஸ ஏவ நாபர:.

"அவனுடைய பாதத்தில் பற்று வைத்துள்ள என்னை அவன் மார்புறப் புல்லியழுத்தினும், காட்சி யளியாமல் என் உள்ளத்தைப் புண்ணாக்கினும், அந்த தூர்த்தன் எது செய்யினுமே, என் ஆருயிர்ச் செல்வன் அவனே யன்றி வேறெவனு மல்லன்.''

இதில் வெகுளி காரணமாகத் தலைவி தலைவனைத் தூர்த்தன் என்கிறாள்.

"மேரே தோ கிரித்ஹாரீ கோபால, தூஸரா ந கோ ஈ"

"என்னுடைய பதி குன்றெடுத்த கோபாலனே யன்றி வேறொருவனு மல்லன்"

என்றாள் மீராபாயி என்னும் பக்தை. இஃது எம்பெருமானிடம் பூர்ண ஆத்ம சமர்ப்பணத்துக்குத் திருஷ்டாந்தமாம்.

இந்நிலையில் பிரிவானது விஷ ஜ்வாலையைப்போல் வேதனையையும், கூடுதலானது தீராத வேட்கையையும் உண்டாக்குகின்றன. விரஹத்தில் விஷ ஜ்வாலை வீசிய போதிலும் உள்ளுக்குள்ளே வற்றாத அமுத வூற்று சுரந்து கொண்டிருக்கிறது.

"தெய்விகக் காதலாகிய கிருஷ்ணப் பிரேமையின் வழிகள் விசித்திரமானவை. இக்காதலின் சுவை, சுடச் சுடக் காய்ச்சிய கருப்பஞ் சாற்றின் சுவைக்கு ஒப்பானது. வாய்க்குச் சுட்டாலும் அதை ஒருவரும் விட்டுவிடுவ தில்லை. அமுதமும் நஞ்சும் கலந்துள்ள இப் பிரேமையின் வன்மையைச் சுவைத் தனுபவித்தவனே அறிவான்.''—சைதந்ய சந்திரோதயம்.

கூடுதலில் பக்தன் இவ்வாறு வியந்துரைக்கிறான்—

"நான் பிறந்தது முதல் அவனது பேரழகைப் பார்த்துக்கொண்டே இருக்கிறேன்; எனினும் என் கண்கள் இன்னும் திருப்தி யடையவில்லை, அனந்த யுகங்களாக அவனை என் மார்போடணைத்து வைத்திருந்தும், இன்னும் என் நெஞ்சத்தின் கலி தீரவில்லை. அவனுடைய தேன் மொழிகளை அடிக்கடியும் கேட்டும், அவற்றில் ஒரு சொல்லாவது என் செவிகளைத் தாக்கிய பாடில்லை. நாங்கள் இருவரும் கூடி எத்

தனேயோ இரவுகளேக் கழித்திருந்தும், அவனது பிரே மையை நான் இன்னும் அறிந்து கொள்ளக் கூட வில்லே.''

—சைதந்ய சந்திரோதயம்.

இஃதெல்லாம் சாதாரண புத்திக்கு எளிதில் விளங் குவதன்று. இந்த நிலேயில் இருதயத்தில் எழும் உணர்ச் சியை நாம் எப்படி அறியவல்லோம்? பக்தனது மார்பகத் தைப் பிளந்து இருதயத்தினுள்ளே இருதய வல்லபனைப் புகுத்தி வைத்தாலும் விடாய் ஆருது. எம்பெருமானுடன் மார்போடு மார்பும் முகத்தோடு முகமுமாய் இருப்பதென் ருல் என்ன வென்பதை நாம் சற்றேனும் அறிந்து கொள் வது கூடுமா? ஆனல் எவனுடைய தோழமையைப் பற்றி "ஸ்வாது அஸ்ய ஸக்ஹ்யம்'' "இவனுடைய நேயம் இன்சுவை வாய்ந்தது,'' என்றும, "ரஸோ வைஸ:'' "சுவை வடிவினன் அவன்'' என்றும் மறை முறையிடு கின்றதோ, எவன் விஷயமாய் லீலா சுகர்

"மத்ஹுரம் மத்ஹுரம் வபுர்
அஸ்ய விப்ஹோர்,
மத்ஹுரம் மத்ஹுரம்
வதநம் மத்ஹுரம்
மத்ஹு கந்த்ஹி ம்ரிது ஸ்மிதம்
ஏதத், அஹோ!
மத்ஹுரம்! மத்ஹுரம்!
மத்ஹுரம்! மத்ஹுரம்!''

"இனிதே இனிதிவ் வெம்பிரான் மேனி,
இனிதே இனியவித் திருமுகம் இனிதே,
தேன் மனம் கமழும் புன்முறுவலும்,
இனிதே! இனிதே! இனிதே! இனிதே!''

—கிருஷ்ண கர்ணமிருதம்

என்று புகழ்ந்து பாடினனே, எவன் இனிமையினும் இனிமை வாய்ந்தவனே, அழகினும் அழகு வாய்ந்தவனே, எவனுடைய சக்தி ஸ்வரூபமாகிய தேவியின் மகிமை யைப் பற்றிக் கூறுகையில், 'சண்டீஸ்தவ'மானது:—

ஸெளம்யா ஸெளம்யதரா அசேஷ
ஸெளம்யே ப்ஹ்யஸ்த்வதி ஸுந்தரீ'

"எழில் வாய்ந்தவள்,
எழிலினும் எழில் வாய்ந்தவள்,
எழில் வாய்ந்தவை யனைத்தினும்
மிக்க எழில் வாய்ந்தவள்."

என்று கொண்டாடுகிறதோ, அவளை மார்புறக் கட்டி யணைத்து வைத்தனுபவிக்கிறவனுடைய இன்பத்துக்கு எல்லை இல்லை. அவன் வாழி, அவனுடைய மரபு வாழி, அவன் வதியும் நாடும் வாழியே.

இம்மையில் பக்தியின் முடிவான எல்லை நிலம் இதுவே. அதற் கப்பால் உள்ள தெதுவோ யாரே இயம்ப வல்லார்?

ஏழாம் அத்யாயம் முற்றிற்று

முடிவுரை.

பக்தி என்னும் பரிசவேதியின் தீண்டுதலால் தங்கமாய் மாறி விட்டவனுக்கு கிகரான பாக்கியசாலி எவனே உளன்? அவனது அடிப் பொடியைக் தொடும் பேறு பெற்ருல், நாமும் அப் பரிசவேதிக்கு உரிமை பெற்றவ ராகிப் பசும் பொன்னுய்த் திகழ்வோம். பகவானே பக்தரின் அடிமையா யிருக்கிருன். ஸ்ரீமத் பாகவதத்திலே பகவான் இவ்வாறு அருளிச் செய்கிருன்:—

(நவமஸ்கந்தம், 4-ம் அத், 63 முதல் 68 வரையில் உள்ள சுலோகங்கள்.)

"வேதியனே, நான் என் பக்தர்களுக்கு முற்றிலும்வயப்பட்டவ ஞதலால், தன் வயத்தனல்லன்போலிருக்கிறேன். எனக்கு என் பக்தரிடமுள்ள பேரன்பு பற்றி, அவர்கள் என் இருதயத்தை விழுங்கி விட்டிருக்கிருர்கள். ஆதலால் என் இருதயத்தின் மீது எனக்குச் சற்றும அதிகார மில்லை."

"அந்தணனே, என்னையே பரமகதியாய்க் கொண்டிருக்கும் மெய்யடியார்களின் பொருட்டன்றித் திருமாமகளையும் (மாபெரு கிதியத்தையும்) பாராட்டேன்; என்னைத்தானும் ஒரு பொருளாக மதியேன்."

எம்பெருமானது இருதயத்தின் மீது அவ்வளவு அதிகாரம் ஏற்பட்டு விடுகிறது பக்தர்களுக்கு!

"மனைவி, மக்கள், ஆப்தர், இல்லம், உயிர், செல்வம், இம்மை, மறுமையாகியவற்றில் பற்று நீங்கி என்னை அடைக்கலம் புகுந்திருப்பவர்களை நான் எவ்வாறு கைவிடுவேன்?"

"கற்புடைய மாதர் நல்லொழுக்கமுடைய கணவரை வசமாக்கிக் கொள்வதுபோல், சமதர்சிகளும் என்பால் சித்தத்தைச் செலுத்தியவருமான சாதுக்கள் என்னை முற்றிலும் வசப்படுத்திக் கொள்ளுகிருர்கள்."

"அவர்கள் எனக்குக் கைங்கரியம் புரிவதில் சந்துஷ்டி யடைந்து, அக் கைங்கரியத்தால் பெறலாகும் ஸாலோக்யாதி நால் வகை முக்திகளையுமே விரும்ப மாட்டாரெனில் காலத்தால் அழியும் தன்மை கொண்ட ஏனைய பொருள்களைப் பற்றிப் பேசுவானேன்?

"சாதுக்கள் எனக்கு இருதயமா யிருப்பவர், நான் அவர்களுக்கு இருதயமா யிருப்பவன். என்னை யன்றிமற்றெதையும் அவர் அறியார்; நானும் அவர்களையன்றிப் பிறிதொன்றையும் அறியேன்."

எம் பெருமானுடன் இத்தகைய சம்பந்தத்தைப் பெற்று, அவனை பலிச் சக்கரவர்த்தியைப் போல் பிரமே பாசத்தால் தம் இருதய வாசலில் கட்டி வைத்திருப்பவரைப் பார்க்கிலும் சிறந்தவர் யார், உயர்ந்தவர் யார், பாக்கியசாலிகள் யார்? இத்தகைய பக்தன் ஒருவன் கிடைப்பினுமே,

"மோதந்தி பிதரோ ந்ரித்யந்தி தேவதா:
ஸநாத்ஹா சேயம் ப்ரித்ஹிவி ப்ஹவதி."

"பித்ருக்கள் மகிழ்வர், தேவர் கூத்தாடுவர், இவ் வையகமும் தலைவனோடு கூடியதாகும்."—நாரத பக்தி சூத்திரம்.

அவன் அடிவைக்கும் நிலம் தங்கமாகும், அவன் தொடுவ தெல்லாம் வயிரமாய் மாறும். அவன் பார்வை விழும் திக்கு துருவ லோகத்தின் சோபை பெற்றுப் பூர்ண சந்திர ஜோதியுடன் திகழும். அவனுடைய அங்க சலனங்களால் நாற்றிசையும் ஸ்வர்க்க லோக பரிமளம் வீசும். அவனது வாக்கியம் ஒவ்வொன்றும் ஆகாய கங்கையின் நீர்ப் பெருக்குப் பாரெங்கும் பாயும். அவனுடைய சிந்தை ஒவ்வொன்றும் துயருழக்கும் இத்தரணியின் மீது அன்பு மலர் மழை பொழியும். வையகத்தே அவன் பெயரைக் கேட்ட வளவில், ஆனந்த கோலாஹலம் ஆர்த்தெழும், விசும்பில் அவனுடைய விஜய துந்துபி யொலி முழங்கும். மக்கள் உலகில் மன்னர் மன்னரின் பொற் கிரீடம் அவனது அடியிணையில் புரளும், அமரருலகில் அவன் பக்கல்

அமர்ந்திருக்கும் பேறு பெறுதலே பரம பாக்கிய மென்று புத்தேளிர் கருதுவர். ஆதலால் நாமனைவரும் ஒன்று சேர்ந்து பகவானும் பக்தரும் கலந்திருக்கும் திருக் கோலத்தை ஞால மெங்கணும் முழங்குவோம், வாரீர். எம் பெருமான், தேவரும் காணற்கரிய அத்தகைய திரு வோலக்கத்தின் உள்ளங்கவர்க் காட்சியைக் காட்டி எம்மை மயக்கி ஆட்கொள்வானாக. அந்த மன மோஹன மூர்த்தி தான் அடியார் திருக்கூட்டத்துடன் எமது சித்த பீடமிசை எழுந்தருளி வீற்றிருப்பானாக. நாம் வையகமும் வானகமும் நடுக்குறுமாறு ஒரு முறை ஹரிநாம ஸ்மரணம் செய்து,

"ஜயதி ஜயதி ஜகத் மங்களம் ஹரேர் நாம!
ஜயதி ஜயதி ஜகத் மங்களம் ஹரேர் நாம!"

எனவே,

ஞாலத்துக்கு நல மளிக்கும் ஹரி நாமம் வெல்க!
ஞாலத்துக்கு நலமளிக்கும் ஹரி நாமம் வெல்க!"

என்று மங்களா சாஸனம் பண்ணி மனமார வாழ்த்துவோமாக.

ஸ்ரீ கிருஷ்ணார்ப்பணம் அஸ்து.

முற்றிற்று

சக்தி பிரஸ் லிமிடெட், (சாந்தி பிரஸில்) அச்சிடப்பெற்றது.

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
3	28	நோ ராகவும்	நோராகவும்
10	2	அமர ரேற	அமரரேறே
13	25-26	பக்தாவாஞ்சா. கல்பதரு	பக்தவாஞ்சாகல்பதரு
15	5	ப்ஹத்தி ஸூத்ஹோதபம்	பக்திஸூதோதயம்
16	29	சொன்னபடி,	சொன்னபடி.
17	17	அறி	நீ பிரமாணம் செய்.
20	2	பதினுருவது	பதினோராவது
20	6	நாதிஸக்கோ	நாதி ஸக்தோ,
20	7	ஷித்த்ஹித.	ஷித்த்ஹித :
21	21	ஜநநீ,	ஜநநி,
21	25	க்ஹநாவாத்	க்ஹநரவாத்
21	27	கம்பாமி	கம் யாமி
22	22	ப்ரித்யு	ம்ரித்யு
23	14	ஆநிங்ஷ்ய —	ஆநிந்த்ய—
24	11	பஞ்சவடியில்	மதங்காசிரமத்தில்
25	33	பொன்னுண்டையை	பொன்னுருண்டையை
42	2	ஜீவந்தனுயிருக்கிருன்.	ஜீவவானுயிருக்கிருன்.
43	2	முமுதும்	முழுதும்
45	24	வ்ரிணுதே	விவ்ரிணுதே
48	34	இவைக ளெல்லா வற்றுக்கும் சர்வநாசம்.	-சர்வநாசம், இவைக ளெல்லாவற்றுக்கும்.
49	8	பும்ஸ	பும்ஸஸ்
49	21	காரியக்களை	காரியங்களை
54	23	பச்யாம	பச்யேம
54	24	ஸ்த்ஹி ரொ	ஸ்த்ஹி ரை :
55	15	ப்ரிகபா	ம்ரிகயா
55	26	ஈர்ஷாஸூபா	ஈர்ஷாஸூயா
56	30	பராமலும்,	பாராமலும்,
57	18	பாப புண்யர்,	பாப புண்யைர்,
58	6	காயம	காயம்
60	22	யஸ்ப	யஸ்ய
60	27	கனிக்கிருய்,	களிக்கிருய்,
62	14	அவ்வளவுக் கல்வளவு	அவ்வளவுக்கவ்வளவு
62	26	சொல்லலூற்ருர்.	சொல்லலுற்ருர்.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
64	7	வார்த்து,	பார்த்து,
64	33	பெய்து	செய்து
65	21	சரிதங்களை	சரிதங்களை
69	29	க்ஷயர ரத்தம்	க்ஷயார்த்தம்.
70	15	ஸாதாரணோபாயங்கள் :	(எடுத்துவிடவும்)
72	12	யச்சைவாந்த்ர	யச்சைவாந்தர
75	3	மேலிந்து	மெலிந்து
79	3	ராஜஸஸ்யேஷ்ட	ராஜஸஸ்யேஷ்டா :
79	18	அடக்குவதற்கு	வளர்ப்பதற்கு
81	26	இத்த	இந்த
83	3	சுகப்ஹே	சுசுப்ஹே
84	30	தகுயாங்	தத்யாங்
84	30	கிஞ்சித	கிஞ்சித்
88	5	இராமபிராள்	இராமபிரான்
91	13	லோக	மோஹ
93	3	களிபிக்கின்றது.	களிப்பிக்கின்றது.
94	1	மூவர்	(எடுத்துவிடவும்.)
94	2	மோஹினிகள்	மோஹினிகள் மூவர்
94	22	என்வபனே	என்பவனே
94	32	பஷிகள்	பக்ஷிகள்
95	23	க்ரித்ரிம	க்ரித்ரிம :
95	24	அஷ்டாவர்க	அஷ்டாவக்ர
97	19	ஜங்மகி	ஜங்மநி
97	32	ஹ்ரிச்ச்ஹயாத்	ஹ்ரிச்ச்ஹயாங்
102	12	யென்றும்	யென்னும்
112	35	143-ம் சுலோ.	163-ம் சுலோ.
113	8	ஓடிப்பேோம்.	ஓடிப்போம்.
117	1	காணிபான்	காண்பான்
118	30	லோபம்	3 லோபம்
123	22	லோபம் (பேராசை)	(எடுத்துவிடவும்)
131	1	நான்காம் அத்யாயம்	(எடுத்துவிடவும்)
131	2	மோஹப்	4. மோஹம்
132	16	ஆகதே	ஆகவே
132	33	மோஹித்தை	மோஹத்தை
136	22	வியபார	வியாபார

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
137	35	உறவியினரா	உறவினரா
138	25	கிள்றன.	கின்றன.
142	1	ஐந்தாம் அத்யாயம்	(எடுத்துவிடவும்)
142	2	மதம்	**5. மதம்**
142	3	தன்னே	1. தன்னே
148	17	பெயகைக்	பெயரைக்
148	24	காணு	காணு
149	1	உன்னலா	உன்னுலா
159	26	சமயங்வளிலும்	சமயங்களிலும்
162	11	வேண்டுமெனல்	வேண்டுமானல்
163	17	பெ,,ருந்துவா ?	பொருந்துமா ?
164	2	இரார்.	இரார்.
165	19	உண்டாகமலிரு	உண்டாகாமலிரு
168	8	அவனுத்கு	அவனுக்கு
169	14	குற்றறங்களே	குற்றங்களே
172	27	முயல்வான் ?	முயல்வான்.
179	25	காபாற்றுவது	காப்பாற்றுவது
181	10	அநுபபக்தி	அநுபபத்தி
182	6	ஸ்ரீயத	ஸ்ரீயுத
184	15	நீர்மை	நேர்மை
186	27	அறிவவ்வவளவும்	அறிவவ்வளவும்
187	11	கரல்	கால்
187	31	நன்ருப்	நன்ருய்ப்
188	23	தோஷமென்றென	தோஷமன்றென
188	34	கரயோகிக்கும்	பிரயோகிக்கும்
188	35	பிருத்துடன்	கருத்துடன்
193	4	ஒயாமல்	ஓயாமல்
196	1–2	சுப்ராப்ய	அப்ராப்ய
198	7	ஐனங்கள்	ஜனங்கள்
201	22	இன்ன	(எடுத்துவிடவும்)
202	13	அரகிளங்குமரன்	அரசிளங்குமரன்
207	5	போப்ய்	போய்ப்
215	13	த்வார்த்ரதே	த்வார்த்தே
216	31	(க)	(எடுத்துவிடவும்)
217	25	அமிமிழ்த்தி	அமிழ்த்தி

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
226	4	என்பவர்வள்	என்பவர்கள்
226	5	நாரத	நாரதர்
226	15	பத்வத்	பகவத்
230	12	பிரம	பிரேம
233	2	transccnds	transcends
233	3	inperfect	imperfect
238	8	த்ஹது :	த்ஹறு :
238	19	மனைத்துடன்	மனத்துடன்
238	31	(மைந்ர :)	(மைத்ர :)
239	2	சிழக்கு	கிழக்கு
239	4	இத்த்	இந்த
242	17	ஏகாக்கிரந்துவ	ஏகாக்கிரத்துவ
243	29	ஆசூயை	அசூயை
247	31	தோற்டுயது	தோற்றியது
247	35	முற்றனர்.	முற்றனள்.
248	24	கொடவனேண்	கொண்டவனே
248	25	தன்னுடடைய	தன்னுடைய
250	1	அவனுனையை	அவனுடைய
251	26	மூளை	முளை
252	21	பத்த	பக்த
254	9	மித்திரையும்	மித்திரரையும்
254	25	நிந்திய	நித்திய
255	30	பபவான்	பகவான்
258	29	பாவங்கள்	பாவகங்கள்
262	13	பிரேமைபில்	பிரேமையில்
263	7	விழைவின்று	விழைவின்றி
271	2	எனவே	எவனே
278	32	சக்கியம்	௩. சக்கியம்
279	29	தொழர்	தோழர்
281	13	ஹரியாத்	ஹ்ரிதயாத்
281	21	வாத்ஸல்யம்	௪. வாத்ஸல்யம்
285	8	மாதுர்யம்	௫. மாதுர்யம்
287	31	சொல்வான்.	செல்வான்.

ஸம்ஸ்க்ருத அநுபந்தம்

இந்தப் புஸ்தகத்தில் எடுத்துக் காட்டியுள்ள
வடமொழி ஶ்லோகங்கள்.

பக்கம்

3. त्रयी साङ्ख्यं योगः पशुपतिमतं वैष्णवमिति
प्रभिन्ने प्रस्थाने परमिदमदः पथ्यमिति च ।
रुचीनां वैचित्र्यादृजुकुटिलनानापथजुषां
नृणामेको गम्यस्त्वमसि पयसामर्णव इव ॥

शिवमहिम्नस्तवः–७.

8. इष्टे स्वारसिको रागः परमाविष्टता भवेत् ।
तन्मयी या भवेद्भक्तिः सात्र रागात्मिकोदिता ॥

भक्तिरसामृतसिन्धुः ।

9. न पारमेष्ठ्यं न महेन्द्रधिष्ण्यं
न सार्वभौमं न रसाधिपत्यम् ।
न योगसिद्धीरपुनर्भवं वा
मय्यर्पितात्मेच्छति मद्विनाऽन्यत् ॥

भागवतम् स्कन्धः–११, अ–१४, श्लो–१४.

10. यदि भवति मुकुन्दे भक्तिरानन्दसान्द्रा
विलुठति चरणाब्जे मोक्षसाम्राज्यलक्ष्मीः ।

रामप्रसादः ।

பக்கம்

12 वैधभक्त्यधिकारी तु भावाविर्भावनावधि ।
तत्र शास्त्रं तथा तर्कमनुकूलमपेक्षते ॥

भक्तिरसामृतसिन्धुः ।

14. स्थानाभिलाषी तपसि स्थितोऽहं
त्वां प्राप्तवान् देव मुनीन्द्रगुह्यम् ।
काचं विचिन्वन्समवाप्य रत्नं
स्वामिन् कृतार्थोऽस्मि वरं न याचे ॥

भक्तिसुधोदयः ।

15. मातः किं वरमपरं याचे सर्वं संपादितमिति सत्यम् ।
यत्त्वच्चरणाम्बुजमतिगुह्यं दृष्टं विधिहरमुरहरजुष्टम् ॥

सर्वानन्दतरङ्गिणी ।

16. गौणी त्रिधा । गुणभेदात् । आर्तादिभेदाद्वा ॥

भक्तिसूत्रम् ।

17. अपि चेत्सुदुराचारो भजते मामनन्यभाक् ।
साधुरेव स मन्तव्यः सम्यग्व्यवसितो हि सः ॥
क्षिप्रं भवति धर्मात्मा शश्वच्छान्तिं निगच्छति ।
कौन्तेय प्रतिजानीहि न मे भक्तः प्रणश्यति ॥

भगवद्गीता ९-३०,३१.

20. यदृच्छया मत्कथादौ जातश्रद्धस्तु यः पुमान् ।
न निर्विण्णो नातिसक्तो भक्तियोगोऽस्य सिद्धिदः ॥

भागवतम् स्क-११, अ-२०, श्लो-८.

பக்கம்

21. शिशौ नासीद्वाक्यं जननि तव मन्त्रं प्रजपितुं
किशोरे विद्यायां विषमविषये तिष्ठति मनः ।
इदानीं भीतोऽहं महिषगळघण्टाघनरवा-
न्निरालम्बो लम्बोदरजननि कं यामि शरणम् ॥

लम्बोदरजननीस्तवः–१.

22 युवैव धर्मशीलः स्यादनित्यं खलु जीवितम् ।
को हि जानाति कस्याद्य मृत्युकालो भविष्यति ॥

महाभारतम् शान्तिपर्व १७५–१६.

कौमार आचरेत्प्राज्ञो धर्मान्भागवतानिह ।
दुर्लभं मानुषं जन्म तदप्यध्रुवमर्थदम् ॥

भागवतम् ७–६–१.

23. आनिन्द्ययोन्यधिक्रियते ॥ शाण्डिल्यसूत्रम् २–७८.

24. भक्तिरष्टविधा ह्येषा यस्मिन् म्लेच्छेऽपि वर्तते ।
स विप्रेन्द्रो मुनिः श्रीमान् स यतिः स च पण्डितः ॥

गरुडपुराणम् १–२३१–९.

25. अभ्यर्थितस्तदा तस्मै स्थानानि कलये ददौ ।
द्यूतं पानं स्त्रियः सूना यत्राधर्मश्चतुर्विधः ॥
पुनश्च याचमानाय जातरूपमदात् प्रभुः ।
ततोऽनृतं मदं कामं रजो वैरं च पञ्चमम् ॥

भागवतम् १–१७–३८, ३९.

பக்கம்

27. व्याधस्याचरणं ध्रुवस्य च वयो विद्या गजेन्द्रस्य का
कुब्जायाः किमु नाम रूपमधिकं किं तत्सुदाम्नो धनम् ।
वंशः को विदुरस्य यादवपतेरुग्रस्य किं पौरुषं
भक्त्या तुष्यति केवलं न च गुणैर्भक्तिप्रियो माधवः ॥

30. नास्ति तेषु जातिविद्यारूपकुलधनक्रियादिभेदः ।
नारदभक्तिसूत्रम्–७२.

32. पुङ्खानुपुङ्खविषयानुपसेवमानो
धीरो न मुञ्चति मुकुन्दपदारविन्दम् ।
संगीतवाद्यगतितानवशं गतापि
मौलिस्थकुम्भपरिरक्षणधीर्नटीव ॥

33. अनन्तं बत मे वित्तं यस्य मे नास्ति किंचन ।
मिथिलायां प्रदीप्तायां न मे दह्यति किंचन ॥
महाभारतम् शान्ति० १७८–२.

दुःखेष्वनुद्विग्नमनाः सुखेषु विगतस्पृहः ॥
भगवद्गीता २–५६.

38. महत्कृपया वा भगवत्कृपालेशाद्वा ।
नारदभक्तिसूत्रम् ।

45. नायमात्मा प्रवचनेन लभ्यो न मेधया न बहुना श्रुतेन ।
यमेवैष वृणुते तेन लभ्यस्तस्यैष आत्मा विवृणुते तनूं स्वाम् ॥
कठोपनिषत् २–२३.

பக்கம்

46. दुःसङ्गः सर्वथैव त्याज्यः ।

नारदभक्तिसूत्रम्–४३.

48. कामक्रोधमोहस्मृतिभ्रंशबुद्धिनाशसर्वनाशकारणत्वात् ।

नारदभक्तिसूत्रम्–४४.

49. ध्यायतो विषयान् पुंसः सङ्गस्तेषूपजायते ।
सङ्गात् संजायते कामः कामात् क्रोधोऽभिजायते ॥

भगवद्गीता २–६२.

50. क्रोधाद्भवति संमोहः संमोहात्स्मृतिविभ्रमः ।
स्मृतिभ्रंशाद्बुद्धिनाशो बुद्धिनाशात्प्रणश्यति ॥

भगवद्गीता २–६३.

51. तरङ्गायिता अपीमे सङ्गात्समुद्रायन्ते ।

नारदभक्तिसूत्रम्–४५.

विकारहेतौ सति विक्रियन्ते
येषां न चेतांसि त एव धीराः ॥ कुमारसंभवम् १–५९.

52. स्त्रीधनिनास्तिकवैरिचरित्रं न श्रवणीयम् ॥

नारदभक्तिसूत्रम्–६३.

54. ओं भद्रं कर्णेभिः श‍ृणुयाम देवाः
भद्रं पश्येमाक्षभिर्यजत्राः ।
स्थिरैरङ्गैस्तुष्टुवांसस्तनूभिः
व्यशेम देवहितं यदायुः ॥

பக்கம்

55. मृगयाक्षो दिवास्वप्नः परीवादः स्त्रियो मदः ।
तौर्यत्रिकं वृथाट्या च कामजो दशको गणः ॥

मनुसंहिता ७-४७.

पैशुन्यं साहसं क्रोध ईर्ष्यासूयार्थदूषणम् ।
वाग्दण्डजं च पारुष्यं क्रोधजोऽपि गणोऽष्टकः ॥

मनुसंहिता ७-४८.

56. न खल्वप्यरसज्ञस्य कामः कचन जायते ।
संस्पर्शाद्दर्शनाद्वापि श्रवणाद्वापि जायते ॥
अप्राशनमसंस्पर्शमसंदर्शनमेव च ।
पुरुषस्यैष नियमो मन्ये श्रेयो न संशयः ॥

महाभारतम् शान्ति० १८०-३०, ३३.

57. त्रिभिर्वर्षैस्त्रिभिर्मासैस्त्रिभिः पक्षैस्त्रिभिर्दिनैः ।
अत्युत्कटैः पापपुण्यैरिहैव फलमश्नुते ॥

हितोपदेशः ।

58. मरणं बिन्दुपातेन, जीवनं बिन्दुधारणात् ।

शिवसंहिता ।

59. दुर्भिक्षादेव दुर्भिक्षं क्लेशात्क्लेशं भयाद्भयम् ।
मृतेभ्यः प्रमृतं यान्ति दरिद्राः पापकारिणः ॥
उत्सवादुत्सवं यान्ति स्वर्गात्स्वर्गं सुखात्सुखम् ।
श्रद्धानाश्च दान्ताश्च धनाढ्याः शुभकारिणः ॥

महाभारतम् शान्ति० १८१-३, ४.

பக்கம்

60. वयमिह परितुष्टा वल्कलैस्त्वं दुकूलैः
सम इह परितोषो निर्विशेषो विशेषः ।
स तु भवतु दरिद्रो यस्य तृष्णा विशाला
मनसि च परितुष्टे कोऽर्थवान् को दरिद्रः ॥

भर्तृहरि वैराग्यशतकम् ५३.

61. न जातु कामः कामानामुपभोगेन शाम्यति ।
हविषा कृष्णवर्त्मेव भूय एवाभिवर्धते ॥

मनुसंहिता २–९४.

64. मेरुः पर्वतराज स्थानतु चलेत् सर्वं जगन्नो भवेत्
सर्वं तारकसङ्घ भूमि प्रपतेत् सज्योतिषेन्द्रो नभात् ।
सर्वे सत्वकरेय एकमतयः शुष्येन्महासागरो
नत्वेव द्रुमराजमूलोपगतश्चाल्येत अस्मद्विधः ॥

ललितविस्तरं–२१.

65. सर्वेयं त्रिसाहस्रमेदिनी मारैः प्रपूर्णा भवेत्
सर्वेषां यथ मेरू पर्वतवरः पाणीषू खड्गो भवेत् ।
ते मह्यं न समर्थ लोम चलितुं प्रागेव मां घातितुं
कुर्याच्चापि हि विग्रहे स्म वर्मितेन दृढम् ॥

ललितविस्तरं–२१.

72. एकोऽहमस्मीति च मन्यसे त्वं
न हृच्छयं वेत्सि मुनिं पुराणम् ।

பக்கம்

योो वेदिता कर्मणः पापकस्य
तस्यान्तिके त्वं वृजिनं करोषि ॥
मन्यते पापकं कृत्वा न कश्चिद्वेत्ति मामिति ।
विदन्ति चैनं देवाश्च यश्चैवान्तरपूरुषः ॥

महाभारतम् आदि० ७४-२८,२९.

75. मरणं विन्दुपातेन जीवनं विन्दुधारणात् ।

शिवसंहिता ४-६०.

ब्रह्मचर्यप्रतिष्ठायां वीर्यलाभः । पतञ्जलियोगसूत्रम् २-३८.

76. न तपस्तप इत्याहुर्ब्रह्मचर्यं तपोत्तमम् ।
ऊर्ध्वरेता भवेद्यस्तु स देवो न तु मानुषः ॥

ज्ञानसंकलनीतन्त्रम् ।

78. काम एष क्रोध एष रजोगुणसमुद्भवः ।

भगवद्गीता ३-३७.

79. कट्वम्ललवणात्युष्णतीक्ष्णरूक्षविदाहिनः ।
आहारा राजसस्येष्टा दुःखशोकामयप्रदाः ॥

भगवद्गीता १७-९.

सैन्धवं कदली धात्री पनसाम्रहरीतकी ।
गोक्षीरं गोघृतं चैव धान्यमुद्गतिला यवाः ॥

81. अनातुरः स्वानि खानि न स्पृशेदनिमित्ततः ।
रोमाणि च रहस्यानि सर्वाण्येव विवर्जयेत् ॥

मनुसंहिता ४-१४४.

83. स्वविवेकघनाभ्यासवशादात्मोदयेन सा ।
शुशुभे शोभना पुष्पलतेवाभिनवोद्गता ॥
योगवासिष्ठम् निर्वाणप्रकरणं ७९-९.

84. आसुप्तेरामृतेः कालं नयेद्वेदान्तचिन्तया ।
दद्यान्नावसरं कंचित्कामादीनां मनागपि ॥
पञ्चदशीप्रकरणम् ।

87. अमेध्यपूर्णे कृमिजालसंकुले स्वभावदुर्गन्धविनिन्दितान्तरे ।
कलेबरे मूत्रपुरीषपूरिते रमन्ति मूढा विरमन्ति पण्डिताः ॥
योगोपनिषत् ।

88. त्वङ्मांसरक्तबाष्पाम्बु पृथक् कृत्वा विलोचनम् ।
समालोकय रम्यं चेत् किं वृथा परिमुह्यसि ॥
योगवासिष्ठम् वैराग्यप्रकरणं २१-२.

इतो मांसमितो रक्तं इतोऽस्थीनीति वासरैः ।
ब्रह्मन् कतिपयैरेव याति स्त्रीविषचारुता ॥
योगवासिष्ठम् वैराग्यप्रकरणं २१-२५.

व्रणमुखमिव देहं पूतिचर्मावनद्धं
कृमिकुलशतपूर्णं मूत्रविष्ठानुलेपम् ।
विगतबहुळरूपं सर्वभोगाधिवासं
ध्रुवमरणनिमित्तं किंतु मोहप्रसक्त्या ॥
इदमेव क्षयद्वारं न पश्यसि कदाचन ।
क्षीयन्ते यत्र सर्वाणि यौवनानि धनानि च ॥
योगोपनिषत् ।

பக்கம்

90-91. कैतद्वक्त्रारविन्दं क तदधरमधु कायतास्ते कटाक्षाः
कालापाः कोमळास्ते क च मदनधनुर्भङ्गुरो भ्रूविलासः ।
इत्थं खट्वाङ्गकोटौ प्रकटितदशनं मञ्जुगुञ्जत्समीरं
रागान्धानामिवोच्चैरुपहसति महामोहजालं कपालम् ॥

शिल्हणमिश्रस्य शान्तिशतकम्–२९.

93. तदेव रम्यं रुचिरं नवं नवं
तदेव शश्वन्मनसो महोत्सवम् ।
तदेव शोकार्णवशोषणं नृणां
यदुत्तमश्लोकयशोऽनुगीयते ॥

भागवतम् १२–१२–५०.

95. क निरोधो विमूढस्य यो निर्बन्धं करोति वै ।
स्वारामस्यैव धीरस्य सर्वदासावकृत्रिमः ॥

अष्टावक्रगीता ।

97. हन्तास्मिन् जन्मनि भवान्न मां द्रष्टुमिहार्हति ।
अविपक्वकषायाणां दुर्दर्शोऽहं कुयोगिनाम् ॥

भागवतम् १–६–२२.

सकृद्यद्दर्शितं रूपमेतत्कामाय तेऽनघ ।
मत्कामः शनकैः साधुः सर्वान्मुञ्चति हृच्छयान् ॥

भागवतम् १–६–२३.

100. एवं बृहद्व्रतधरो ब्राह्मणोऽग्निरिव ज्वलन् ।
मद्भक्तस्तीव्रतपसा दग्धकर्माशयोऽमलः ॥

பக்கம்

अथानन्तरमावेक्ष्यन् यथाजिज्ञासितागमः ।
गुरवे दक्षिणां दत्त्वा स्नायाद्गुर्वनुमोदितः ॥
गृहं वनं वोपविशेत् प्रव्रजेद्वा द्विजोत्तमः ।
आश्रमादाश्रमं गच्छेन्नान्यथा मत्परश्चरेत् ॥
गृहार्थी सदृशीं भार्यामुद्वहेदजुगुप्सिताम् ॥
भागवतम् स्क-११ अ-१७ श्लो ३६-३९.

101. अपत्योत्पादनार्थं च तीव्रं नियममास्थितः ।
कालेे नियमिताहारो ब्रह्मचारी जितेन्द्रियः ॥
महाभारतम् वन० २९२-८.

103. क्रोधमूलो विनाशो हि प्रजानामिह दृश्यते ।
क्रुद्धः पापं नरः कुर्यात् क्रुद्धो हन्याद्गुरूनपि ॥
क्रुद्धः परुषया वाचा श्रेयसोऽप्यवमन्यते ।
वाच्यावाच्ये हि कुपितो न प्रजानाति कर्हिचित् ॥
नाकार्यमस्ति क्रुद्धस्य नावाच्यं विद्यते तथा ।
हिंस्यात्क्रोधादवध्यांस्तु वध्यान् संपूजयेत च ॥
आत्मानमपि च क्रुद्धः प्रेरयेद्यमसादनम् ।
क्रुद्धो हि कार्यं सुश्रोणि न यथावत्प्रपश्यति ॥
न कार्यं न च मर्यादां नरः क्रुद्धोऽनुपश्यति ॥
महाभारतम् वन० २९-३-६,१८.

105. रोहते सायकैर्विद्धं वनं परशुना हतम् ।
वाचा दुरुक्तया विद्धं न संरोहति वाक्क्षतम् ॥
महाभारतम् उद्योग० ३४-७८.

பக்கம்

105. तेजस्वीति यमाहुर्वै पण्डिता दीर्घदर्शिनः ।
न क्रोधोऽभ्यन्तरस्तस्य भवतीति विनिश्चितम् ॥
महाभारतम् वन० २९-१६,१७.

112. सुखं ह्यवमतः शेते सुखं च प्रतिबुध्यते ।
सुखं चरति लोकेऽस्मिन्नवमन्ता विनश्यति ॥
मनुसंहिता २-१६३.

113. लोभात् क्रोधः प्रभवति परदोषैरुदीर्यते ।
क्षमया तिष्ठते राजन् क्षमया विनिवर्तते ॥
महाभारतम् शान्ति० १६३-७,८.

परासूया क्रोधलोभावन्तरा प्रतिमुच्यते ।
दयया सर्वभूतानां निर्वेदाद्विनिवर्तते ॥
अवद्यदर्शनादेति तत्त्वज्ञानाच्च धीमताम् ॥
महाभारतम् शान्ति० १६३-९.

114. प्रतिकर्तुं न शक्ता ये बलस्थायापकारिणे ।
असूया जायते तीव्रा कारुण्याद्विनिवर्तते ॥
महाभारतम् शान्ति० १६३-१९.

115. विद्धो धर्मो ह्यधर्मेण सभां यत्रोपपद्यते ।
न चास्य शल्यं कृन्तन्ति विद्वांसस्तु सभासदः ॥
अर्धं हरति वै श्रेष्ठः पादो भवति कर्तृषु ।
पादश्चैव सभासत्सु ये न निन्दन्ति निन्दितम् ॥

பக்கம்

अनेना भवति श्रेष्ठो मुच्यन्ते च सभासदः ।
एनो गच्छति कर्तारं निन्दार्हो यत्र निन्द्यते ॥

महाभारतं सभा० ६८–७७, ७८, ७९.

116. मृदुना दारुणं हन्ति मृदुना हन्त्यदारुणम् ।
नासाध्यं मृदुना किंचित्तस्मात्तीव्रतरं मृदु ॥

महाभारतम् वन० २८–३१.

117. साधोः प्रकोपितस्यापि मनो नायाति विक्रियाम् ।
न हि तापयितुं शक्यं सागराम्भस्तृणोल्कया ॥

हितोपदेशः मित्रलाभः–८७.

119. अज्ञानप्रभवो लोभो भूतानां दृश्यते सदा ।
अस्थिरत्वं च भोगानां दृष्ट्वा ज्ञात्वा निवर्तते ॥

महाभारतम् शान्ति० १६३–२०.

120. श्वस्त्वया सुखसंवित्तिः स्मरणीयाधुनातनी ।
इति स्वप्नोपमान् मत्वा कामान् मागास्तदङ्गताम् ॥

भारवि किरातार्जुनीयम् ११–३४.

121. श्रद्धेया विप्रलब्धारः प्रिया विप्रियकारिणः ।
सुदुस्त्यजास्त्यजन्तोऽपि कामाः कष्टा हि शत्रवः ॥

भारवि किरातार्जुनीयम् ११–३५.

लोभात् क्रोधः प्रभवति लोभात् कामः प्रजायते ।
लोभान्मोहश्च नाशश्च लोभः पापस्य कारणम् ॥

हितोपदेशः ।

பக்கம்

121. लोभः प्रज्ञानमाहन्ति प्रज्ञा हन्ति हता ह्रियम् ।
ह्रीर्हता बाधते धर्मं धर्मो हन्ति हतः श्रियम् ॥
महाभारतम् उद्योग० ८१–१८.

लोभेन बुद्धिश्चलति लोभो जनयते तृषाम् ।
तृष्णार्तो दुःखमाप्नोति परत्रेह च मानवः ॥
हितोपदेशः ।

122–3. यथाकामं यथोत्साहं यथाकालमरिन्दम ।
सेविता विषयाः पुत्र यौवनेन मया तव ॥
न जातु कामः कामानामुपभोगेन शाम्यति ।
हविषा कृष्णवर्त्मेव भूय एवाभिवर्धते ॥
यः पृथिव्यां व्रीहियवं हिरण्यं पशवः स्त्रियः ।
एकस्यापि न पर्याप्तं तस्मात्तृष्णां परित्यजेत् ॥
या दुस्त्यजा दुर्मतिभिर्या न जीर्यति जीर्यतः ।
योऽसौ प्राणान्तिको रोगस्तां तृष्णां त्यजतः सुखम् ॥
पूर्णं वर्षसहस्रं मे विषयासक्तचेतसः ।
तथाप्यनुदिनं तृष्णा ममैतेष्वभिजायते ॥
तस्मादेनामहं त्यक्त्वा ब्रह्मण्याधाय मानसम् ।
निर्द्वन्द्वो निर्ममो भूत्वा चरिष्यामि मृगैः सह ॥
भागवतम् ९–१९.

123. आपूर्यमाणमचलप्रतिष्ठं
समुद्रमापः प्रविशन्ति यद्वत् ।

பக்கம்

तद्वत् कामा यं प्रविशन्ति सर्वे
स शान्तिमाप्नोति न कामकामी ॥ भगवद्गीता २-७०.

यतो यतो निश्चलति मनश्चञ्चलमस्थिरम् ।
ततस्ततो नियम्यैतदात्मन्येव वशं नयेत् ॥
भगवद्गीता ६-२६.

124. मनागभ्युदितैवेच्छा छेत्तव्यानर्थकारिणी ।
असंवेदनशस्त्रेण विषस्येवाङ्कुरावली ॥
योगवासिष्ठम् निर्वाण० ७७-८१.

प्रत्याहारबडिशेन इच्छामत्स्यीं नियच्छत ॥
योगवासिष्ठम् निर्वाण० ७७-८३.

128. भूः पर्यङ्को निजभुजलता कन्दुकः खं वितानं
दीपश्चन्द्रो विरतिवनितालब्धसंगप्रमोदः ।
दिक्कान्ताभिः पवनचमरैर्वीज्यमानः समन्तात्
भिक्षुः शेते नृप इव भुवि त्यक्तसर्वस्पृहोऽपि ॥
वैराग्यशतकम् ८५.

129. स्वच्छन्दवनजातेन शाकेनापि प्रपूर्यते ।
अस्य दग्धोदरस्यार्थे कः कुर्यात्पातकं महत् ॥
हितोपदेशः ।

130. संतोषामृततृप्तानां यत्सुखं शान्तचेतसाम् ।
कुतस्तद्धनलुब्धानामितश्चेतश्च धावताम् ॥ हितोपदेशः ।

பக்கம்

131-2. मम पिता मम माता ममेयं गृहिणी गृहम् ।
एवंविधं ममत्वं यत् स मोह इति कीर्तितः ॥

पद्मपुराणम् ।

133. कृशोऽतिदुःखो बद्धोऽहं हस्तपादादिमानहम् ।
इति भावानुरूपेण व्यवहारेण बध्यते ॥
नाहं दुःखी न मे देहो बन्धः कस्मान्मयि स्थितः ।
इति भावानुरूपेण व्यवहारेण मुच्यते ॥
नाहं मांसं न चास्थीनि देहादन्यः परो ह्यहम् ।
इति निश्चयवानन्तः क्षीणाविद्यो विमुच्यते ॥
कल्पितैवमविद्येयमनात्मन्यात्मभावनात् ।
पुरुषेणाप्रबुद्धेन न प्रबुद्धेन राघव ॥

योगवासिष्ठम् उत्पत्ति० १३—५८-६१

133. का तव कान्ता कस्ते पुत्रः संसारोऽयमतीव विचित्रः ।
कस्य त्वं वा कुत आयातस्तत्त्वं चिन्तय तदिदं भ्रातः ॥

श्रीशङ्कराचार्यस्य मोहमुद्गरः ।

133-5. इमां सप्तपदां ज्ञानभूमिमाकर्णयानघ ।
नानया ज्ञातया भूयो मोहपङ्के निमज्जति ॥
ज्ञानभूमिः शुभेच्छाख्या प्रथमा समुदाहृता ।
विचारणा द्वितीया स्यात्तृतीया तनुमानसा ॥
सत्तापत्तिश्चतुर्थी स्यात्ततोऽसंसक्तिनामिका ।
पदार्थभावनी षष्ठी सप्तमी तुर्यगा गतिः ॥

பக்கம்

स्थितः किं मूढ एवास्मि योक्ष्येऽहं शास्त्रसज्जनैः ।
वैराग्यपूर्वमिच्छेति शुभेच्छेत्युच्यते बुधैः ॥
शास्त्रसज्जनसंपर्कैर्वैराग्याभ्यासपूर्वकम् ।
सदाचारप्रवृत्ता या प्रोच्यते सा विचारणा ॥
विचारणाशुभेच्छाभ्यामिन्द्रियार्थेष्वरक्तता ।
यत्र सा तनुताभावात् प्रोच्यते तनुमानसा ॥
भूमिकात्रितयाभ्यासाच्चित्येऽर्थे विरतेर्वशात् ।
सत्तात्मनि स्थिते शुद्धे सत्तापत्तिरुदाहृता ॥
दशाचतुष्टयाभ्यासादसंसर्गफलाय यः ।
रूढसत्वचमत्कारः प्रोक्ताऽसंसक्तिनामिका ॥
भूमिकापञ्चकाभ्यासात्स्वात्मारामतया भृशम् ।
आभ्यन्तराणां बाह्यानां पदार्थानामभावनात् ॥
परं प्रयुक्तेन चिरं प्रयत्नेन विबोधनम् ।
पदार्थभावना नाम षष्ठी संजायते गतिः ॥
भूमिषट्कचिराभ्यासाद्भेदस्यानुपलम्भतः ।
यत् स्वाभाविकनिष्ठत्वं सा ज्ञेया तुर्यगा गतिः ॥
ये हि राम महाभागाः सप्तमीं भूमिमागताः ।
आत्मारामा महात्मानस्ते महत्पदमागताः ॥

योगवासिष्ठम् उत्पत्ति० ११८.

135. संकल्पसंक्षयवशाद्गलिते तु चित्ते
संसारमोहमिहिका गलिता भवन्ति ।

பக்கம்

दृष्टं विभाति शरदीव खमागतायां
चिन्मात्रमेकमजमाद्यमनन्तमन्तः ॥ योगवासिष्ठम् ।

136. सक्ताः कर्मण्यविद्वांसो यथा कुर्वन्ति भारत ।
कुर्याद्विद्वांस्तथाऽसक्तश्चिकीर्षुर्लोकसंग्रहम् ॥
भगवद्गीता ३-२५.

अन्तः संत्यक्तसर्वाशो वीतरागो विवासनः ।
बहिः सर्वसमाचारो लोके विहर राघव ॥
योगवासिष्ठम् उपशम० १२-५२.

बहिः कृत्रिमसंरम्भो हृदि संरम्भवर्जितः ।
कर्ता बहिरकर्तान्तर्लोके विहर राघव ॥
योगवासिष्ठम् उपशम० २१-५५.

त्यक्ताहंकृतिराश्वस्तमतिराकाशशोभनः ।
अगृहीतकलङ्काङ्को लोके विहर राघव ॥
योगवासिष्ठम् उपशम० २१-५६.

अयं बन्धुरयं नेति गणना क्षुद्रचेतसाम् ।
उदारचरितानां तु वसुधैव कुटुम्बकम् ॥ हितोपदेशः ।

147. श्रोत्रस्य श्रोत्रं मनसो मनो यद्वाचो ह वाचं
स उ प्राणस्य प्राणश्चक्षुषश्चक्षुः ॥ केनोपनिषत् १-२.

को ह्येवान्यात् कः प्राण्यात्,
यदेष आकाश आनन्दो न स्यात् ॥
तैत्तिरीयोपनिषत् २-७-२.

பக்கம்

152. मदोऽष्टादशदोषः स स्यात्पुरा योऽप्रकीर्तितः ।
लोकद्वेष्यं प्रातिकूल्यमभ्यसूया मृषावचः ॥
कामक्रोधौ पारतन्त्र्यं परिवादोऽथ पैशुनम् ।
अर्थहानिर्विवादश्च मात्सर्यं प्राणिपीडनम् ॥
ईर्षा मोहोऽतिवादश्च संज्ञानाशोऽभ्यसूयिता ।
तस्मात्प्राज्ञो न माद्येत सदा ह्येतद्विगर्हितम् ॥

महाभारतम् उद्योग० अ० ५५, श्लो० ९–११.

155. आत्मनः सदृशं प्राज्ञं नैषोऽमन्यत कंचन ।
तेन दोषेण पतितस्तस्मादेव नृपात्मजः ॥

महाभारतम् महाप्रास्थानिक० २.

रूपेण मत्समो नास्ति कश्चिदित्यस्य दर्शनम् ।
अधिकश्चाहमेवैक इत्यस्य मनसि स्थितम् ।
नकुलः पतितस्तस्मादागच्छ त्वं वृकोदर ॥

महाभारतं महाप्रास्थानिक० २.

156. एकाह्ना निर्दहेयं वै शत्रूनित्यर्जुनोऽब्रवीत् ।
न च तत्कृतवानेष शूरमानी ततोऽपतत् ॥
अवमेने धनुर्ग्राहानेष सर्वांश्च फाल्गुनः ।
तथा चैतन्न तु तथा कर्तव्यं भूतिमिच्छता ॥
अतिभुक्तं च भवता प्राणेन तु विकत्थसे ।
अनवेक्ष्य परं पार्थ तेनासि पतितः क्षितौ ॥

महाभारतं महाप्रास्थानिक० २.

பக்கம்

186. इन्द्रियाणां तु सर्वेषां यद्येकं क्षरतीन्द्रियम् ।
तेनास्य क्षरति प्रज्ञा दृतेः पात्रादिवोदकम् ॥
मनुसंहिता २-९९.

191. बालभावस्तथाभावनिश्चिन्तो योग उच्यते ।
ज्ञानसंकलनीतन्त्रम् ।

193. तुल्यनिन्दास्तुतिर्मौनी संतुष्टो येन केनचित् ।
अनिकेतः स्थिरमतिः भक्तिमान् मे प्रियो नरः ॥
भगवद्गीता १२-१९.

196. यतो वाचो निवर्तन्ते अप्राप्य मनसा सह ।
तैत्तिरीयोपनिषत् ।

अस्तीति ब्रुवतोऽन्यत्र कथं तदुपलभ्यते ।
कठोपनिषत् २-१२.

वादो नावलम्ब्यः । नारदभक्तिसूत्रम्-७४.

200. अगाधजलसंचारी विकारी नैव रोहितः ।
गण्डूषजलमात्रेण शफरी फरफरायते ॥

211. मन एव समर्थः स्यान्मनसो दृढनिग्रहे ।
अराजा कः समर्थः स्यात् राज्ञो राघव निग्रहे ॥
योगवासिष्ठम्० उत्पत्ति० १३-३४.

211-2. मनस्येवेन्द्रियाण्यत्र मनश्चात्मनि योजयेत् ।
सर्वभावविनिर्मुक्तं क्षेत्रज्ञं ब्रह्मणि न्यसेत् ॥

பக்கம்

बहिर्मुखानि सर्वाणि कृत्वा चाभिमुखानि वै ।
एतद्ध्यानं तथा ज्ञानं शेषस्तु ग्रन्थविस्तरः ॥

दक्षः ७-२०,२१.

212. यदा संहरते चायं कूर्मोऽङ्गानीव सर्वशः ।
इन्द्रियाणीन्द्रियार्थेभ्यस्तस्य प्रज्ञा प्रतिष्ठिता ॥

भगवद्गीता २-५८.

ब्रह्मण्याधाय कर्माणि सङ्गं त्यक्त्वा करोति यः ।
लिप्यते न स पापेन पद्मपत्रमिवाम्भसा ॥

भगवद्गीता ५-१०.

215. तालवृन्तेन किं कार्यं लब्धे मलयमारुते।
महापातकिनां त्वार्तौ । शाण्डिल्यभक्तिसूत्रम् ।

216. पुत्रं देहि धनं देहि भाग्यं भगवतीह मे ॥

217. अजानन् दाहार्तिं विशति शलभो दीपदहनं
न मीनोऽपि ज्ञात्वावृतबडिशमश्नाति पिशितम् ।
विजानन्तोऽप्येतान् वयमिह विपज्जालजटिलान्
न मुञ्चामः कामानहह ! गहनो मोहमहिमा ॥

शान्तिशतकम्-७.

कुरङ्गमातङ्गपतङ्गभृङ्गमीना हताः पञ्चभिरेव पञ्च ।
एकः प्रमादी स कथं न हन्यते यः सेवते पञ्चभिरेव पञ्च ॥

218. स कथं न हन्यते यः सेवते पञ्चभिरेव पञ्च ।

பக்கம்

221. क्षिप्रं भवति धर्मात्मा शश्वच्छान्तिं निगच्छति ।

भगवद्गीता ९-३१.

स्वयं विधत्ते भजतामनिच्छता-
मिच्छापिधानं निजपादपल्लवम् ॥

भागवतम् ५-१९-२७.

224. सङ्गं न कुर्यादसतां शिश्नोदरतृषां क्वचित् ।
तस्यानुगस्तमस्यन्धे पतत्यन्धानुगोऽन्धवत् ॥

भागवतम् ११-२६-३.

सत्यं शौचं दया मौनं बुद्धिर्ह्रीः श्रीर्यशः क्षमा ।
शमो दमो भगश्चेति यत्सङ्गाद्याति संक्षयम् ॥
तेष्वशान्तेषु मूढेषु खण्डितात्मस्वसाधुषु ।
सङ्गं न कुर्याच्छोच्येषु योषित्क्रीडामृगेषु च ॥

भागवतम् ३-३१-३३,३४.

वरं हुतवहज्वालापिञ्जरान्तर्व्यवस्थितिः ।
न शौरिचिन्ताविमुखजनसंवासवैशसम् ॥

कात्यायनसंहिता ।

भक्तिस्तु भगवद्भक्तसङ्गेन परिजायते ॥

बृहन्नारदीयपुराणम् ४-३३.

रविश्च रश्मिजालेन दिवा हन्ति वहिस्तमः ।
सन्तः सूक्तिमरीच्योघैश्चान्तर्ध्वान्तं हि सर्वदा ॥

बृहन्नारदीयपुराणम् ४-३७.

பக்கம்

सतां प्रसङ्गान्मम वीर्यसंविदो
भवन्ति हृत्कर्णरसायनाः कथाः ।
तज्जोषणादाश्वपवर्गवर्त्मनि
श्रद्धा रतिर्भक्तिरनुक्रमिष्यति ॥

भागवतम् ३-२५-२५.

नैषां मतिस्तावदुरुक्रमाङ्घ्रिं
स्पृशत्यनर्थापगमो यदर्थः ।
महीयसां पादरजोऽभिषेकं
निष्किंचनानां न वृणीत यावत् ॥

भागवतम् ७-५-३२.

225. सन्तोऽनपेक्षा मच्चित्ताः प्रणताः समदर्शनाः ।
निर्ममा निरहंकारा निर्द्वन्द्वा निष्परिग्रहाः ॥

भागवतम् ११-२६-२७.

तितिक्षवः कारुणिकाः सुहृदः सर्वदेहिनाम् ।
अजातशत्रवः शान्ताः साधवः साधुभूषणाः ॥

भागवतं ३-२५-२१.

226. उच्छिष्टलेपाननुमोदितो द्विजैः
सकृत्स्म भुञ्जे तदपास्तकिल्बिषः ।
एवं प्रवृत्तस्य विशुद्धचेतसः
तद्धर्म एवात्मरुचिः प्रजायते ॥

பக்கம்

तत्रान्वहं कृष्णकथाः प्रगायता-
मनुग्रहेणाश्रृणवं मनोहराः ।
ताः श्रद्धया मेऽनुपदं विश्रृण्वतः
प्रियश्रवस्यङ्ग ममाभवद्रुचिः ॥
इत्थं शरत्प्रावृषिकावृतू हरेः
विश्रृण्वतो मेऽनुसवं यशोऽमलम् ।
संकीर्त्यमानं मुनिभिर्महात्मभिः
भक्तिः प्रवृत्तात्मरजस्तमोऽपहा ॥

भागवतम् १-५-२५,२६,२८.

229-30. स वै मनः कृष्णपदारविन्दयोः
वचांसि वैकुण्ठगुणानुवर्णने ।
करौ हरेर्मन्दिरमार्जनादिषु
श्रुतिं चकाराच्युतसत्कथोदये ॥
मुकुन्दलिङ्गालयदर्शने दृशौ
तद्भृत्यगात्रस्पर्शेऽङ्गसङ्गम् ।
घ्राणं च तत्पादसरोजसौरभे
श्रीमत्तुलस्यां रसनां तदर्पिते ॥
पादौ हरेः क्षेत्रपदानुसर्पणे
शिरो हृषीकेशपदाभिवन्दने ।
कामं च दास्ये न तु कामकाम्यया
यथोत्तमश्लोकजनाश्रया रतिः ॥

பக்கம்

गृहेषु दारेषु सुतेषु बन्धुषु
द्विपोत्तमस्यन्दनवाजिपत्तिषु ।
अक्षय्यरत्नाभरणायुधादि-
ष्वनन्तकोशेष्वकरोदसन्मतिम् ॥
भागवतम् ९-४ श्लो० १८-२०, २७.

233. खं वायुमग्निं सलिलं महीं च
ज्योतींषि सत्वानि दिशो द्रुमादीन् ।
सरित्समुद्रांश्च हरेः शरीरं
यत्किंच भूतं प्रणमेदनन्यः ॥ भागवतम् ११-२-४८.

तमेव भान्तमनुभाति सर्वं
तस्य भासा सर्वमिदं विभाति ॥ कठोपनिषत् ५-१५.

235. हरेर्नाम हरेर्नाम हरेर्नामैव केवलम् ।
कलौ नास्त्येव नास्त्येव नास्त्येव गतिरन्यथा ॥ गौरङ्गः ।

236. एवंव्रतः स्वप्रियनामकीर्त्या
जातानुरागो द्रुतचित्त उच्चैः ।
हसत्यथो रोदिति रौति गाय-
त्युन्मादवन्नृत्यति लोकबाह्यः ॥ भागवतम् ११-२-४०.

अंहः संहरेदखिलं सकृदुदयादेव सकललोकस्य ।
तरणिरिव तिमिरजलधेर्जयति जगन्मङ्गलं हरेर्नाम ॥
पद्यावलिः ।

பக்கம்

चेतोदर्पणमार्जनं भवमहादावाग्निनिर्वापणं
श्रेयःकैरवचन्द्रिकावितरणं विद्यावधूजीवनम् ।
आनन्दाम्बुधिवर्धनं प्रतिपदं पूर्णामृतास्वादनं
सर्वात्मस्नपनं परं विजयते श्रीकृष्णसंकीर्तनम् ।।

पद्यावलिः ।

237. तृणादपि सुनीचेन तरोरपि सहिष्णुना ।
अमानिना मानदेन कीर्तनीयः सदा हरिः ।। गौरङ्गः ।

मन्त्रार्थं मन्त्रचैतन्यं यो न जानाति साधकः ।
शतलक्षप्रजप्तोऽपि तस्य मन्त्रो न सिध्यति ।।

महानिर्वाणतन्त्रम् उल्लासः ३, सूत्रं ३१.

238. प्रणवो धनुः शरो ह्यात्मा ब्रह्म तल्लक्ष्यमुच्यते ।
अप्रमत्तेन वेद्धव्यं शरवत्तन्मयो भवेत् ।।

मुण्डकोपनिषत् २-४.

विधियज्ञाज्जपयज्ञो विशिष्टो दशभिर्गुणैः ।
उपांशुः स्याच्छतगुणः साहस्रो मानसः स्मृतः ।।
जप्येनैव तु संसिध्येत् ब्राह्मणो नात्र संशयः ।
कुर्यादन्यन्न वा कुर्यान्मैत्रो ब्राह्मण उच्यते ।।

मनुसंहिता २-८५, ८७.

239. पुण्यक्षेत्रं नदीतीरं गुहा पर्वतमस्तकम् ।
तीर्थप्रदेशाः सिन्धूनां संगमः पावनं वनम् ।।

பக்கம்

उद्यानानि विविक्तानि बिल्वमूलं तटं गिरेः ।
देवतायतनं कूलं समुद्रस्य निजं गृहम् ॥
साधनेषु प्रशस्तानि स्थानान्येतानि मन्त्रिणाम् ।
अथवा निवसेत्तत्र यत्र चित्तं प्रसीदति ॥

कुलार्णवतन्त्रम् ।

240. प्रभावादद्भुताद्भूमेः सलिलस्य च तेजसा ।
परिग्रहान्मुनीनां च तीर्थानां पुण्यता स्मृता ॥

काशीखण्डम् ।

241. कायेन वाचा मनसेन्द्रियैर्वा
बुद्ध्यात्मना वा प्रकृतेः स्वभावात् ।
करोमि यद्यत्सकलं परस्मै
नारायणायेति समर्पये तत् ॥ भागवतम् ११-२-३६.

यत्करोषि यदश्नासि यज्जुहोषि ददासि यत् ।
यत्तपस्यसि कौन्तेय तत्कुरुष्व मदर्पणम् ॥

भगवद्गीता ९-२७.

242. श्रद्धामृतकथायां मे शश्वन्मदनुकीर्तनम् ।
परनिष्ठा च पूजायां स्तुतिभिः स्तवनं मम ॥
आदरः परिचर्यायां सर्वाङ्गैरभिवन्दनम् ।
मद्भक्तपूजाभ्यधिका सर्वभूतेषु मन्मतिः ॥
मदर्थेष्वङ्गचेष्टा च वचसा मद्गुणेरणम् ।
मय्यर्पणं च मनसः सर्वकामविवर्जनम् ॥

பக்கம்

मदर्थेऽर्थपरित्यागो भोगस्य च सुखस्य च ।
इष्टं दत्तं हुतं जप्तं मदर्थं यद्व्रतं तपः ॥
एवं धर्मैर्मनुष्याणामुद्धवात्मनिवेदिनाम् ।
मयि संजायते भक्तिः कोऽन्योऽर्थोऽस्यावशिष्यते ॥
भागवतम् स्क० ११, अ० १९, श्लो० २०-२४.

243. तत्प्रतिषेधार्थमेकतत्त्वाभ्यासः ।
मैत्रीकरुणामुदितोपेक्षाणां सुखदुःख-
पुण्यापुण्यविषयाणां भावनातश्चित्तप्रसादनम् ।
पतञ्जलि योगसूत्रं पाद १, सू ३२,३३.

244. प्रच्छर्दनविधारणाभ्यां वा प्राणस्य ।
विषयवती वा प्रवृत्तिरुत्पन्ना स्थितिनिबन्धनी ।
विशोका वा ज्योतिष्मती ।
पतञ्जलि योगसूत्रं १-३४,३५,३६.

245. वीतरागविषयं वा चित्तम् ।
स्वप्ननिद्राज्ञानावलम्बनं वा ।
यथाभिमतध्यानाद्वा । पतञ्जलि योगसूत्रम् १-३७,३८,३९.

248. स्वमातुः स्विन्नगात्राया विस्रस्तकबरस्रजः ।
दृष्ट्वा परिश्रमं कृष्णः कृपयासीत्स्वबन्धने ॥
एवं संदर्शिता ह्यङ्ग हरिणा भक्तवश्यता ।
स्ववशेनापि कृष्णेन यस्येदं सेश्वरं वशे ॥
भागवतम् १०-९-१८,१९.

பக்கம்

249. अर्चायामेव हरये पूजां यः श्रद्धयेहते ।
न तद्भक्तेषु चान्येषु स भक्तः प्राकृतः स्मृतः ॥

भागवतम् ११-२-४७.

250. ईश्वरे तदधीनेषु बालिशेषु द्विषत्सु च ।
प्रेममैत्रीकृपोपेक्षा यः करोति स मध्यमः ॥

भागवतं ११-२-४६.

251. न यस्य स्वः पर इति वित्तेष्वात्मनि वा भिदा ।
सर्वभूतसमः शान्तः स वै भागवतोत्तमः ॥

सर्वभूतेषु यः पश्येद्भगवद्भावमात्मनः ।
भूतानि भगवत्यात्मन्येष भागवतोत्तमः ॥

गृहीत्वापीन्द्रियैरर्थान् यो न द्वेष्टि न हृष्यति ।
विष्णोर्मायामिदं पश्यन् स वै भागवतोत्तमः ॥

देहेन्द्रियप्राणमनोधियां यो
जन्माप्ययक्षुद्भयतर्षकृच्छ्रैः ।
संसारधर्मैरविमुह्यमानः
स्मृत्या हरेर्भागवतप्रधानः ॥

न कामकर्मबीजानां यस्य चेतसि संभवः ।
वासुदेवैकनिलयः स वै भागवतोत्तमः ॥

न यस्य जन्मकर्मभ्यां न वर्णाश्रमजातिभिः ।
सज्जतेऽस्मिन्नहंभावो देहे वै स हरेः प्रियः ॥

பக்கம்

त्रिभुवनविभवहेतवेऽप्यकुण्ठ-
स्मृतिरजितात्मसुरादिभिर्विमृग्यात् ।
न चलति भगवत्पदारविन्दा-
ल्लवनिमिषार्धमपि यः स वैष्णवाग्र्यः ॥
भागवतम् ११-२-५२, ५४, ४८, ४९, ५०, ५१, ५३.

252. भगवत उरुविक्रमाङ्घ्रिशाखा-
नखमणिचन्द्रिकया निरस्ततापे ।
हृदि कथमुपसीदतां पुनः स
प्रभवति चन्द्र इवोदितेऽर्कतापः ॥

विसृजति हृदयं न यस्य साक्षात्
हरिरवशाभिहितोऽप्यघौघनाशः ।
प्रणयरशनया धृताङ्घ्रिपद्मः
स भवति भागवतप्रधान उक्तः ॥
भागवतम् ११-२-५४, ५५.

अद्वेष्टा सर्वभूतानां मैत्रः करुण एव च ।
निर्ममो निरहंकारः समदुःखसुखः क्षमी ॥
संतुष्टः सततं योगी यतात्मा दृढनिश्चयः ।
मय्यर्पितमनोबुद्धिर्यो मद्भक्तः स मे प्रियः ॥
यस्मान्नोद्विजते लोको लोकान्नोद्विजते च यः ।
हर्षामर्षभयोद्वेगैर्मुक्तो यः स च मे प्रियः ॥

பக்கம்

अनपेक्षः शुचिर्दक्ष उदासीनो गतव्यथः ।
सर्वारम्भपरित्यागी यो मद्भक्तः स मे प्रियः ॥
यो न हृष्यति न द्वेष्टि न शोचति न काङ्क्षति ।
शुभाशुभपरित्यागी भक्तिमान् यः स मे प्रियः ॥
समः शत्रौ च मित्रे च तथा मानावमानयोः ।
शीतोष्णसुखदुःखेषु समः सङ्गविवर्जितः ॥

भगवद्गीता अ० १२ श्लो० १३-१८.

253. तुल्यनिन्दास्तुतिर्मौनी संतुष्टो येनकेनचित् ।
अनिकेतः स्थिरमतिर्भक्तिमान् मे प्रियो नरः ॥
ये तु धर्मामृतमिदं यथोक्तं पर्युपासते ।
श्रद्धधाना मत्परमा भक्तास्तेऽतीव मे प्रियाः ॥

भगवद्गीता १२-१९,२०.

न किंचित् साधवो धीरा भक्ता ह्येकान्तिनो मम ।
वाञ्छन्त्यपि मया दत्तं कैवल्यमपुनर्भवम् ॥

भागवतम् ११-२०-३४.

254. बाध्यमानोऽपि मद्भक्तो विषयैरजितेन्द्रियः ।
प्रायः प्रगल्भया भक्त्या विषयैर्नाभिभूयते ॥
यथाग्निः सुसमृद्धार्चिः करोत्येधांसि भस्मसात् ।
तथा मद्विषया भक्तिरुद्धवैनांसि कृत्स्नशः ॥

भागवतम् ११-१४-१८,१९.

பக்கம்

255. दैवी ह्येषा गुणमयी मम माया दुरत्यया ।
मामेव ये प्रपद्यन्ते मायामेतां तरन्ति ते ॥

भगवद्गीता ७-१४.

256. कृतानुयात्रा विद्याभिर्हरिभक्तिरनुत्तमा ।
अविद्यां निर्दहत्याशु दावज्वालेव पन्नगीम् ॥

पद्मपुराणम् ।

आदौ श्रद्धा ततः साधुसङ्गोऽथ भजनक्रिया ।
ततोऽनर्थनिवृत्तिः स्यात् ततो निष्ठारुचिस्ततः ॥
अथासक्तिस्ततो भावस्ततः प्रेमाभ्युदञ्चति ।
साधकानामयं प्रेम्णः प्रादुर्भावे भवेत्क्रमः ॥
प्रेम्णस्तु प्रथमावस्था भाव इत्यभिधीयते ।

भक्तिरसामृतसिन्धुः ।

257. शुद्धसत्त्वविशेषात्मा प्रेम सूर्यांशुसाम्यभाक् ।
रुचिभिश्चित्तमासृण्यकृदसौ भाव उच्यते ॥

भक्तिरसामृतसिन्धुः ।

260. आकर्णयन्नघहरां मुरवैरिकीर्तिं
पक्ष्माग्रमिश्रविरलाश्रुरभूत् पुरोधाः ।
यष्टा दरोच्छ्वसितलोमकपोलमीषत्
प्रस्विन्ननासिकमुवाह मुखारविन्दम् ॥
निरुद्धं वाष्पाम्भः कथमपि मया गद्गदगिरो
ह्रिया सद्यो गूढाः सखि विघटितो वेपथुरपि ।

பக்கம்

गिरिद्रोण्यां वेणौ ध्वनति निपुणैरिङ्गितनये
तथाप्यूहांचक्रे मम मनसि रागः परिजनैः ॥
भक्तिरसामृतसिन्धुः ।

261. न शक्तिमुपवीणने चिरमधत्त कम्पाकुलो
न गद्गदनिरुद्धवाक् प्रभुरभूदुपश्लोकने ।
क्षमोऽजनि न वीक्षणे विगळदश्रुपूरः पुरो
मधुद्विषि परिस्फुरत्यवशमूर्तिरासीन्मुनिः ॥
भक्तिरसामृतसिन्धुः ।

263. अनन्यममता विष्णौ ममता प्रेमसङ्गता ।
भक्तिरित्युच्यते भीष्मप्रह्लादोद्धवनारदैः ॥
नारदपाञ्चरात्रम् ।

सा कस्मैचित् परमप्रेमरूपा । नारदभक्तिसूत्रम् ।

सा परानुरक्तिरीश्वरे । शाण्डिल्यसूत्रम् ।

264. तत्परिशुद्धिश्च गम्या लोकवल्लिङ्गेभ्यः । शाण्डिल्यसूत्रम् ।

संमानबहुमानप्रीतिविरहेतरविचिकित्सामहिमख्याति-
तदर्थप्राणस्थानतदीयतासर्वतद्भावाप्रातिकूल्यादीनि च
स्मरणेभ्यो बाहुल्यात् ॥ शाण्डिल्यसूत्रम् २-४४.

265. प्रत्युत्थानं तु कृष्णस्य सर्वावस्थो धनञ्जयः ।
न लङ्घयति धर्मात्मा भक्त्या प्रेम्णा च सर्वदा ॥
महाभारतम् द्रोण० ७८-३.

பக்கம்

पक्षपातेन तन्नाम्नि मृगे पद्मे च तादृशि ।
बभार मेघे तद्वर्णे बहुमानमतिं नृपः ॥

नृसिंहपुराणम् २५-२२.

या प्रीतिः पुण्डरीकाक्ष तवागमनकारणात् ।
सा किमाख्यायते तुभ्यमन्तरात्मासि देहिनाम् ॥

महाभारतम् उद्योग० ९०-२४.

गुरूणामग्रतो वक्तुं किं ब्रवीमि न नः क्षमम् ।
गुरवः किं करिष्यन्ति दग्धानां विरहाग्निना ॥

विष्णुपुराणम् ५-१८.

266. अपि कीटः पतङ्गो वा भवेयं शङ्कराज्ञया ।
न तु शक्र त्वया दत्तं त्रैलोक्यमपि कामये ॥

महाभारतम् आनुशा० १४-१८६.

नरके पच्यमानस्तु यमेन परिभाषितः ।
किं त्वया नार्चितो देवः केशवः क्लेशनाशनः ॥

नृसिंहपुराणम् ८-२१.

स पुरुषमभिवीक्ष्य पाशहस्तं
वदति यमः किल तस्य कर्णमूले ।
परिहर मधुसूदनप्रपन्नान्
प्रभुरहमन्यनृणां न वैष्णवानाम् ॥

विष्णुपुराणम् ३-७.

यावत्तव कथा लोके विचरिष्यति पावनी ।
तावत्स्थास्यामि मेदिन्यां तवाज्ञामनुपालयन् ॥

रामायणम् उत्तर० १०८-३६.

आत्मराज्यं धनं चैव कलत्रं वाहनं तथा ।
एतद्भागवतं सर्वमिति तत् प्रेक्षते सदा ॥

महाभारतम् शान्ति० ३३५-२४.

267. एवं सर्वेषु भूतेषु भक्तिरव्यभिचारिणी ।
कर्तव्या पण्डितैर्ज्ञात्वा सर्वभूतमयं हरिम् ॥

विष्णुपुराणम् १-१९.

एह्येहि देवेश जगन्निवास
नमोऽस्तु ते शार्ङ्गगदासिपाणे ।
प्रसह्य मां पातय लोकनाथ
रथादुदग्रादद्भुतशौर्यसङ्ख्ये ॥

महाभारतम् भीष्म० ५९-९६.

273. तदर्पिताखिलाचारः सन् कामक्रोधाभिमानादिकं
तस्मिन्नेव करणीयम् तस्मिन्नेव करणीयम् ॥

नारदभक्तिसूत्रम् ६५.

276. प्रह्लाद भद्र भद्रं ते प्रीतोऽहं तेऽसुरोत्तम ।
वरं वृणीष्वाभिमतं कामपूरोऽस्म्यहं नृणाम् ॥

भागवतम् ७-९-५२.

பக்கம்

276-77. मा मां प्रलोभयोत्पत्त्यासक्तं कामेषु तैर्वरैः ।
तत्सङ्गभीतो निर्विण्णो मुमुक्षुस्त्वामुपाश्रितः ॥

भृत्यलक्षणजिज्ञासुर्भक्तं कामेष्वचोदयत् ।
भवान् संसारबीजेषु हृदयग्रन्थिषु प्रभो ॥

नान्यथा तेऽखिलगुरो घटेत करुणात्मनः ।
यस्तु आशिष आशास्ते न स भृत्यः स वै वणिक् ॥

आशासानो न वै भृत्यः स्वामिन्याशिष आत्मनः ।
न स्वामी भृत्यतः स्वाम्यमिच्छन् यो राति चाशिषः ॥

अहं त्वकामस्त्वद्भक्तस्त्वं च स्वाम्यनपाश्रयः ।
नास्त्यथेहावयोरर्थो राजसेवकयोरिव ॥

यदि रासीश मे कामान्वरांस्त्वं वरदर्षभ ।
कामानां हृद्यसंरोहं भवतस्तु वृणे वरम् ॥

इन्द्रियाणि मनः प्राण आत्मा धर्मो धृतिर्मतिः ।
ह्रीः श्रीस्तेजः स्मृतिः सत्यं यस्य नश्यन्ति जन्मना ॥

विमुञ्चति यदा कामान्मानवो मनसि स्थितान् ।
तर्ह्येव पुण्डरीकाक्ष भगवत्त्वाय कल्पते ॥

भागवतम् ७-१० श्लो० २-१०.

279. नहि रामात्प्रियतरो ममास्ति भुवि कश्चन ॥

रामायणम्-गुहः ।

பக்கம்

त्वं नः प्रोज्झ्य कठोरयामुनतटे कस्मादकस्माद्गतो
दिष्ट्या दृष्टिमितोऽसि हन्त निबिडाश्लेषैः सखीन्प्रीणय ।
ब्रूमः सत्यमदर्शने तव मनाक् का धेनवः के वयं
किं गोष्ठं किमभीष्टमित्यचरितः सर्वं विपर्यस्यति ॥

भक्तिरसामृतसिन्धुः ।

280. निर्जितीकरणं युद्धे वस्त्रे धृत्वास्य कर्षणम् ।
पुष्पाद्याच्छेदनं हस्तात् कृष्णेन स्वप्रसाधनम् ।
हस्ताहस्तिप्रसङ्गाद्याः प्रोक्ताः प्रियसखक्रियाः ॥

श्रीरूपगोस्वामी ।

281. हस्तावाक्षिप्य निर्यासि वलात्कृष्ण किमद्भुतम् ।
हृदयाद्यदि निर्यासि पौरुषं गणयामि ते ॥

बिल्वमङ्गळः ।

288. दृष्टो वः कच्चिदश्वत्थ प्लक्ष न्यग्रोध नो मनः ।
नन्दसूनुर्गतो हृत्वा प्रेमहासावलोकनैः ॥

कच्चित् कुरबकाशोकनागपुन्नागचम्पकाः ।
रामानुजो मानिनीनां गतो दर्पहरस्मितः ॥

कच्चित्तुलसि कल्याणि गोविन्दचरणप्रिये ।
सह त्वाऽलिकुलैर्बिभ्रद्दृष्टस्तेऽतिप्रियोऽच्युतः ॥

मालत्यदर्शि वः कच्चित् मल्लिके जातियूथिके ।
प्रीतिं वा जनयन् यातः करस्पर्शेन माधवः ॥

பக்கம்

चूतप्रियालपनसासनकोविदार-
जम्बीरबिल्ववकुलाम्रकदम्बनीपाः ।
येऽन्ये परार्थभवका यमुनोपकूलाः
शंसन्तु कृष्णपदवीं रहितात्मनां नः ॥

भागवतम् १०-३०-श्लो ५-९.

290. हे देव हे दयित हे भुवनैकबन्धो
हे कृष्ण हे चपल हे करुणैकसिन्धो ।
हे नाथ हे रमण हे नयनाभिराम
हा हा कदानुभवितासि पदं दृशोर्मे ॥

कृष्णकर्णामृतं ४०.

आश्लिष्य वा पादरतां पिनष्टु मा-
मदर्शनान्मर्महतां करोतु वा ।
यथा तथा वा विदधातु लम्पटो
मत्प्राणनाथस्तु स एव नापरः ॥

292. मधुरं मधुरं वपुरस्य विभोर्मधुरं मधुरं वदनं मधुरम् ।
मधुगन्धि मृदुस्मितमेतदहो मधुरं मधुरं मधुरं मधुरम् ॥

कृष्णकर्णामृतम् ९२.

सौम्या सौम्यतराशेषसौम्येभ्यस्त्वतिसुन्दरी ।

चण्डी ।

294. अहं भक्तपराधीनो ह्यस्वतन्त्र इव द्विज ।
साधुभिर्ग्रस्तहृदयो भक्तैर्भक्तजनप्रियः ॥

नाहमात्मानमाशंसे मद्भक्तैः साधुभिर्विना ।
श्रियं चात्यन्तिकीं ब्रह्मन् येषां गतिरहं परा ॥
ये दारागारपुत्राप्तान् प्राणान् वित्तमिदं परम् ।
हित्वा मां शरणं याताः कथं तांस्त्यक्तुमुत्सहे ॥
मयि निर्बद्धहृदयाः साधवः समदर्शनाः ।
वशीकुर्वन्ति मां भक्त्या सत्स्त्रियः सत्पतिं यथा ॥
मत्सेवया प्रतीतं च सालोक्यादिचतुष्टयम् ।
नेच्छन्ति सेवया पूर्णाः कुतोऽन्यत्कालविद्रुतम् ॥
साधवो हृदयं मह्यं साधूनां हृदयं त्वहम् ।
मदन्यत्ते न जानन्ति नाहं तेभ्यो मनागपि ॥

भागवतम् ९-६ श्लो० ५१-५६.

295. मोदन्ति पितरो नृत्यन्ति देवताः
सनाथा चेयं भूर्भवति ॥

नारदभक्तिसूत्रम् ७१.

जयति जयति जगन्मङ्गलं हरेर्नाम ।
जयति जयति जगन्मङ्गलं हरेर्नाम ॥

श्रीबालमनोरमाप्रेस्, मैलापूर्, मद्रास्.